கொலோசெயர், 2

ஓவன் டி. ஆல்பிரிட்

9. கிறிஸ்துவின் நிறைவு குறித்த பவுலின் படம், 2 (2:10-15)
10. தலையைப் பற்றிக் கொண்டிருத்தல் (2:16-23)
11. கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவன், 1 (3:1-4)
12. கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவன், 2 (3:5-14)
13. கிறிஸ்துவுக்கு பதில்செயல் (3:15-17)
14. உறவுமுறைகளில் பொறுப்புகள் (3:18-4:1)
15. புத்திமதிகள் (4:2-6)
16. அறிவுரைகளும் பாராட்டுகளும் (4:7-9)
17. வாழ்த்துக்களும் சிறப்புரைகளும் (4:10-18)

9

கிறிஸ்துவின் நிறைவு குறித்த பவுலின் படம், 2

(2:10-15)

கிறிஸ்துவுக்குள் பரிபூரணம் (2:10, 11)

[10]மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். [11]அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்து விட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்.

"மேலும் சகலதுரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள்" (2:10அ)

தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் இயேசுவுக்குள் சரீரப்பிரகாரமாய் வாசமாயிருக்கிறது எனும் அடிப்படையின் உண்மையால், தெய்வீக அதிகாரத்தை அவர் கொண்டிருக்கிறார். இந்த அதிகாரம் அவருக்கு இப்பொழுது இருக்கிறது, எதிர்காலத்தில் அல்ல. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத்தேயு 28:18). தேவனுடைய வலது கரத்துக்கு அவர் உயர்த்தப்பட்ட போது அவர் இதைப் பெற்றுக்கொண்டார் (எபேசியர் 1:20-23; 1 பேதுரு 3:22). சகல வஸ்துக்களும் சக ஜீவன்களும், பிதா ஒருவரைத் தவிர, அனைத்தும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறது (1 கொரிந்தியர் 15:27; 1 பேதுரு 3:22).

"தலைவராயிருத்தல்" என்பது (kephalē)[1] கட்டுப்பாட்டையும் முதன்மைத்துவத்தையும் கொண்டிருத்தலைக் குறிக்கிறது. கிறிஸ்து ***சலக துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிறார்*** *என்று சொல்லுவதன் பொருள் வானமும் பூமியுமாகிய, சலக பிரபஞ்சத்திலும் சகல அதிகாரத்துக்கும் மேற்பட்டவராய் சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டு இருக்கிறது. இந்தக் காரணத்தால், கொலோசெயர்கள், மற்ற ஜனங்களுக்கு பயப்படவோ இயேசுவுக்கும் அவருடைய போதனைக்கும் எதிராகச் செயல்படும் அதிகாரிகளுக்கு கீழ்ப்படிந்திருக்கவோ வேண்டுவதில்லை.*

தற்காலத்தில், இயேசுவே இப்பிரபஞ்சத்தின் முழு அதிகாரம் பெற்றவராயிருக்கிறார் (மத்தேயு 28:18), அவர் பூமிக்கு வருவதற்குமுன் பிதாவோடு தமக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்தை அவர் பெற்றிருந்தார் (யோவான் 17:5). மறுபடியும் அவர் வரும் பொழுது, அவருடைய முழு ஆளுகையும் முடிவுறும் (1 கொரிந்தியர் 15:24).

ராஜ்யத்தை மறுபடியும் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுத்து, அவருடன் கீழ்ப்படிதலோடு ஆளுகை செய்வார் (1 கொரிந்தியர் 15:28). இயேசு பூமியிலே உலகப்பிரகாரமான ஆளுகையை எதிர்காலத்தில் செய்யப் போகிறார் என்ற உபதேசம் 1 கொரிந்தியர் 15:24-28ற்கும் வேறு பல திருமறை வசனப்பகுதிகளுக்கும் முரண்பாடாய்க் காணுகிறது.

இயேசு இப்பொழுது சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் மேலாக இன்றும் ஆளுகை செய்கிறார். அவருடைய ராஜ்யம் இன்றும் நிலைத்திருக்கிறது, மேலும் கிறிஸ்தவர்கள் அனைவரும் அவருடைய பிரஜைகளாயிருக்கின்றனர் (எபேசியர் 2:19; கொலோசெயர் 1:13). அவருடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படிகிறவர்கள் பரிபூரணமாக்கப்படுகிறார்கள்.

"அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (2:10ஆ)

பரிபூரணம் *என்பது peplērōmenoi. என்பதன் மொழியாக்கம். இது ஒரு முழுமை பெற்ற எச்சவினைச் சொல்லாகையால், கிறிஸ்தவர்கள் பரிபூரணமாக்கப்பட்டிருக்கிறார்கள், இயேசுவுக்குள் தொடர்ந்து பரிபூரணமாக்கப்படுவார்கள் என்பது இதன் பொருள். வசனம் 9ல் பேசப்படுகிற பரிபூரணம் (நிறைவு) என்பதன் அதே பொருளுடைய வார்த்தையிலிருந்து தீர்க்கதரிசனம் "நிறைவேறுதலைக்" குறிக்கிறது ஆகிலும் இங்கே கொலோசெயரில் அவர்களிலிருந்த அநேகத் தேவைகளில் எதுவும் குறைவு பட்டுப் போகாது என்று இங்கே பொருள்படுகிறது. இயேசுவுக்குள் "பரீபூரணம்" வாசமாயிருப்பதன் மூலம் - முழுமையிருப்பதன் மூலம் - தேவனுடைய தெய்வீக சுபாவத்தைக் கொண்டு அவர் தம்மை பின்பற்றுவோரை முழுமைப்படுத்த அல்லது "நிறைவுள்ளவர்களாக்க" அவரால் கூடும், "அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம்" (யோவான் 1:16).*

அவருக்குள் *எனும் சொற்றொடர் கிறிஸ்தவர்களுக்குத் தேவையான ஆவிக்குரிய உறவு முறைக்குரிய நிறைவைக் குறிக்கிறது. தேவனோடு கூட இருக்க வேண்டிய உறவுமுறைக்கு தேவையான அனைத்தும் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு மாத்திரம் தேவனிடத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் அவருக்குள் இருக்கிறது (எபேசியர் 1:3). இந்த ஆசீர்வாதங்களில் மீட்பு, ஆக்கினைத்தீர்ப்பு இல்லாமை, தேவனின் அன்பு, பரிசுத்தமாக்கப்படுதல், கிருபை, புது சிருஷ்டியாகுதல், ஒப்புரவாகுதல், தேவனுடைய நீதி, அவருடைய இரத்தத்தினால் வரும் பலன், பாவமன்னிப்பு, இரட்சிப்பு மற்றும் நித்திய ஜீவன் ஆகியனவற்றையும் உள்ளடக்கியுள்ளது![2] கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள் மட்டுமே அவருக்குள் இருக்கிறார்கள் (ரோமர் 6:3; கலாத்தியர் 3:27).*

கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கிறவர்கள் "கிறிஸ்துவைச் சேராதவர்களும் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியர்களும், நம்பிக்கை இல்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருக்கிறார்கள்" (எபேசியர் 2:12). இயேசுவுக்குப் புறம்பே, மக்கள் நிறைவற்றர்களும் "தூரத்தில்" இருப்பவர்களுமாயிருந்தார்கள்; "அவருக்குள்," அந்த நிலைமை மாறுகிறது. "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்கு

கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" (எபேசியர் 2:13).

"கிறிஸ்துவுக்குள்" இருப்பவர்கள் இயேசுவுக்குள் கனி கொடாமலும் நிலைத்திராமலும் போனால், அவர்கள் வெளியே எறியுண்டு, வெட்டுண்டு, எரிக்கப்படுவார்கள் (யோவான் 15:2, 6). ஒரு கிறிஸ்தவன் இயேசுவிடமிருந்து பிரிக்கப்பட்டால், அவன் தேவனுடைய ஈவாகிய நித்திய ஜீவனை இழந்து போவான். கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஒவ்வொருவரும் பரிபூரணப்படுத்தப்படுகிறார்கள், ஆகிலும் அவராலேயன்றி ஒருவன் ஒன்றையும் செய்யக் கூடாது (யோவான் 14:5ஆ). கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்க, ஒருவர் அவருடைய கற்பனைகளை கைக்கொள்ள வேண்டும் (1 யோவான் 2:3-5).

ஆவிக்குரிய ஜீவியத்தைக் கொண்டிருக்கவும் தேவனுக்கு ஏற்ற சேவையைச் செய்யவும் ஒரு நபருக்குத் தேவையான அனைத்தையும் இயேசு அளிக்கிறார். வித்தியாசமான ஒரு போதகரையோ (அவருடைய) போதனைகளேயோ அடிப்படையாகக் கொண்டு அதன் மேல் கட்டுபவன் தவறான அஸ்திபாரத்தைப் போடுகிறான். இயேசுவே ஒரே உண்மையான அஸ்திபாரம் (1 கொரிந்தியர் 3:11). அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார், பிதாவினிடத்திற்குச் செல்ல ஒரே வழியாவார் (யோவான் 14:6). இரட்சிப்பு வேறொரு நாமத்தில் இல்லை (நடபடிகள் 4:12).

இயேசு அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக வெளிப்படுத்திய புதிய உடன்படிக்கையின் சகல சத்தியத்தையும் புதிய ஏற்பாடு தன்னகத்தே கொண்டிருக்கிறது (யோவான் 16:13; எபேசியர் 3:5). தாம் சொன்ன வசனங்கள் ஒழிந்து போவதில்லை என்று இயேசு சொன்னார் (மத்தேயு 24:35). தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்று பேதுரு குறிப்பிட்டார் (1 பேதுரு 1:23, 25). அவை ஒரே மாதிரியாக, - மாற்றம் பெறாதவைகளாக, எவ்விதத்திலும் குறைக்கப்படாமலும் கூட்டப்படாமலும் நிலைத்திருக்கிறது. தேவனுடைய வெளிப்பாடுகள் முழுமையானவைகளாக இருப்பதால் அவைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களையும் முழுமையாக்குகிறது. முதல் நூற்றாண்டில் முழுமை பெற்ற தேவ வசனங்களே நாம் தேவனுக்கு ஊழியஞ்செய்யத் தேவையான எல்லாவற்றிற்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2 தீமோத்தேயு 3:16, 17).

இயேசு கிறிஸ்துவின் சபை என்று தங்களை அழைத்துக்கொள்ளும் கடைசிகால பரிசுத்தவான்கள் (மார்மன் சபையார்) தங்கள் எழுத்துக்களில் திருமறையின் நிறைவுத்தன்மையை மறுதலிக்கின்றனர். இப்படியாக அவர்கள் இயேசுவின் போதனையின் முழுமையையும் புறந்தள்ளுகின்றனர். உதாரணமாக, மார்மன் கூட்டத்தாரின் புத்தகத்தில், "ஆகையால், உங்களிடத்தில் திருமறை இருந்தாலும், அது என்னுடைய சகல வார்த்தைகளையும் கொண்டுள்ளது என்று எண்ணவேண்டுவதில்லை; அதே வேளையில் கூடுதலாக எழுத செய்ய நான் ஏவவில்லை என்றும் நீங்கள் எண்ணவேண்டுவதில்லை" என்று சொல்லுகிறது (2 Nephi 29:10) இயேசுவின் போதனைக்கு முரணானது இது.

முகமதுவும் கூடுதல் சத்தியத்தைக் கொண்டு வரவில்லை. தேற்றரவாளனாகிய, பரிசுத்த ஆவியை அப்போஸ்தலருக்கு

அனுப்பப்போவதாக இயேசு வாக்களித்தார். முகமது நபிகளுக்கு ஏறத்தாழ ஆறு நூறு ஆண்டுகளுக்கு முன் அவர்கள் வாழ்ந்தார்கள். முகமது நபிகள் குரான் மூலம் போதித்தவை அதற்கு முன்பு வெளிப்படுத்தப்படாத சத்தியம் எதையும் கொண்டிருக்கவில்லை. மனித வர்க்கத்துக்கு தேவன் கொடுத்த சகல சத்தியமும் திருமறையில் இருக்கிறது.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் முழுமைபெற்றிருக்கிறபடியால் வேறொரு கொள்கைகளுக்கோ, மனித உபதேசங்களுக்கோ, சீர்திருத்தங்களுக்கோ, கடைசி நாட்கள் பரிசுத்தவான்களின் வெளிப்பாடுகள் என்றழைத்துக்கொள்ளும் உபதேசங்களுக்கோ தேவன் தாமே இஸ்ரவேலருக்குக் கொடுத்த நியாயப்பிரமாணத்துக்குக் கூட நாம் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை. அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட இயேசுவின் சத்திய வசனங்கள் ஒழிந்து போகவில்லை, புதிய ஏற்பாடு தேவனுடைய சகல வெளிப்பாட்டையும் தன்னுள் கொண்டுள்ளது. அவை இந்த கடைசி நாட்களில் வாழ்வோருக்கென இயேசு மூலமாய் அவரால் கொடுக்கப்பட்டவை (எபிரெயர் 1:1, 2). புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற வசனங்கள் மட்டுமே, அதற்குப் பின்பு எழுதப்பட்ட எந்த புத்தகளுமல்ல, கிறிஸ்துவின் யுகத்தில் வாழ்கிறவர்களுக்கு நியாயத்தீர்ப்புக்கான அடிப்படை ஆதார வசனங்கள் (யோவான் 12:48).

"அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும், விருத்தசேதனத்தினாலே மாம்சத்துத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்து விட்டதினால்" (2:11அ)

கிரேக்கப் பெயர்ச்சொல்லாகிய apekdusis ***(களைந்துவிட்டதினால்*** *என்று மொழிபெயர்க்கப்பட்டது) இந்த இடத்தில் மட்டுமே காணப்படுகிறது. இந்த வார்த்தையின் வினைச்சொல்பகுதி, பவுலால் மட்டுமே பயன்படுத்தப்பட்டவேறொரு பகுதி, "உரிந்து கொண்டு" (2:15), மற்றும் "களைந்து போடுதல்" (3:9) என்று மொழிபெயர்க்கப்பட்டது. இது "கடந்த வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவருவதைக் குறிக்கும் ஏற்புடைமையல்லாத வஸ்திரங்களை களைவது போல், அதாவது ஒரு உருவகமாக உடைகள் களையப்படுவது போல் அல்லது வஸ்திரங்களை கழற்றுவது போல்" என்று ஆலோசனையாகச் சொல்லப்பட்டது.[3] கிறிஸ்துவின் விருத்தசேதனம் களையப்படுதலை, "மாம்ச சரீத்தின்" பகுதியை அப்புறப்படுத்துதலை, மாமிச உணர்ச்சி போன்ற, ஜனங்களைக் கட்டுப்படுத்தி பாவஞ்செய்யப் பண்ணுகிற சோதனையில் நடத்தும் காரியத்தை உட்படுத்தியது.*

KJV மொழிபெயர்ப்பு மற்றும் NKJV ஆகிய இரண்டுமே, "பாவ சரீரத்தின் மாம்சம்" என்றே மொழிபெயர்த்துள்ளது, ஆனால் பின்னதாக செய்யப்பட்ட வேறெந்த மொழிபெயர்ப்பிலும் கொடுக்கப்படவில்லை. NKJV சில அச்சுகளில் கீழ்க்குறிப்பில் "பாவம்" எனும் சொற்றொடர் சில மூலப் பிரதிகளில் காணப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

சரீரம் *(sōma) உடலாகிய மாம்ச சரீரத்தைக் குறிப்பதில்லை, ஏனெனில் மாம்ச சரீரம் ஞானஸ்நானத்தில் களைந்து போடப்படுவதில்லை. இங்கு குறிப்பிடப்படுகிற காரியத்தில் "சரீரம்" என்பது ரோமர் 6:6ல் குறிப்பிடப்படுகிறபடி ஒரு பொருளாக ("பாவ சரீரம்") மற்றும் 7:24ல் ("மரண சரீரம்," வாசம் பண்ணுகிற நிலையில்) பேசப்படுகிறது.*

கொலோசெயர் 2:17ல் இதே பொருளில்தான் பேசப்படுகிறது. ஒரு பொருளாக, மாம்ச உணர்ச்சியாயிருக்கிற பகுதி விருத்த சேதனம் பண்ணப்பட்டதாக பவுல் நமக்குப் போதிக்கிறார். இன்னொரு வார்த்தையில் சொன்னால், ***கிறிஸ்துவின் விருத்தசேதனத்தால்*** *கொலோசெயரின் உலகப்பிரகாரமான உணர்வுகள் களையப்பட்டன.*

மாம்சம் *(sarx) புதிய ஏற்பாட்டில் வித்தியாசப்பட்ட முறைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (காண்க "மேலும் கற்றுக்கொள்ள: 'மாம்சம்' என்பது [Sarx] 'பாவசுபாவத்தைக்' குறிக்கிறதா?") இந்த வார்த்தை சில வேளைகளில் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது கடினம். "மாம்சம்" என்று சாரக்ஸ் எனும் வார்த்தைக்குப் பயன்படுத்தப்படுவது, இப்படித்தான் அநேக மொழிபெர்ப்புகளில் சொல்லப்படுகிறது,*[4] *"பாவசுபாவம் என்று குறிப்பிடுவதைக் காட்டிலும் சிறிது தவறாக வழிகாட்டுகிறது"* (NIV) *இந்த வசனப் பகுதியிலும் வேறு இடங்களிலும் (*"NIV *வேதாகமத்தில் Sarx* ['*மாம்சம்*']*" என்று தலைப்பிடப்பட்டுள்ள பக்கத்தில் காணும் பட்டியலைக் காண்க). வசனப்பகுதியைப் பொறுத்து வாசகர் அதன் அர்த்தத்தைத் தீர்மானித்துக் கொள்ளலாம். இந்த வார்த்தை பின் வருமாறு பொருள்படலாம் ...*

1. *மாம்சம், ஒரு சரீரத்தின் மாம்சம் (சதை) (லூக்கா 24:39; 1 கொரிந்தியர் 15:39).*
2. *ஒருவரின் சரீரம் (நடபடிகள் 2:31), இது சரீரபெலவீனத்தையும் குறிக்கக்கூடும் (மத்தேயு 26:41).*
3. *மனித வர்க்கம் எனும் பொதுவான வார்த்தை, மனுஷர்கள் (மத்தேயு 16:17; லூக்கா 3:6; யோவான் 17:2; நடபடிகள் 2:17).*
4. *மாம்சப்படியான அவதாரம் எடுத்து வருதல் (ரோமர் 1:3; 11:14; நடபடிகள் 2:30; கலாத்தியர் 4:23).*
5. *மனித சரீரத்தின் வரையறைக்கு உட்பட்ட, ஜீவியம் (ரோமர் 8:3).*
6. *உலகப் பிரகாரமான நிலையைச் சார்ந்த கொள்கைகள் (1 கொரிந்தியர் 1:26).*
7. *மனித வர்க்கத்துடன் இணைந்த மாமிச உணர்வுகள் (ரோமர் 7:5).*

பழைய மனுஷன் மாமிச உணர்வுகளுக்கு சமமாக ஒரு நபர் (ரோமர் 6:6; கொலோசெயர் 3:9ஆ) கிறிஸ்துவுக்குள் புதிதாக்கப்படுவதற்கு முந்திய நிலை (2 கொரிந்தியர் 5:17). முந்தின காலத்தில், கொலோசெயர்கள் தங்களுடைய மனதில் தங்களுடைய துன்மார்க்கக் கிரியைகளினாலே தேவனுக்கு சத்துருக்களாயிருந்தனர் (கொலோசெயர் 1:21). எபேசியர்களைப் போல அவர்கள் இருதயக் கடினத்தினிமித்தம் அறியாதவர்களாயிருந்தனர் (காண்க எபேசியர் 4:18). அவர்களுடைய துன்மார்க்கமே அவர்களுடைய மனதின் நிலைமைக்கு காரணமாயிருந்தது; அவர்கள் தங்கள் பிறப்பிலிருந்தே தீமையானவர்களாகவோ, தங்களுடைய சுயவிருப்பம் பாவசுபாவத்தால் கட்டுப்பட்டதாகவோ இருக்க வில்லை.

கிறிஸ்துவின் விருத்தசேதனம் "பாவ சுபாவத்தை" களைந்து போட்டிருக்குமேயாகில், பிறகு இந்த ஞானஸ்நானத்தைப் பெற்றவர்கள் இனியும் பாவ சுபாவத்தையுடையவர்களாகவோ பாவம் செய்யக் கூடியவர்களாக இருக்க மாட்டார்கள். ஆதாமும் ஏவாளும் விலக்கப்பட்ட

கனியை புசித்தபின் அவர்களுடைய சுபாவம் பாவமுள்ளதாக மாறியிருக்கக் கூடுமானானால், பிறகு அந்த சுபாவம் களையப்படும்போது ஆதாம் ஏவாள் கனியை புசிப்பதற்கு முன்பிருந்த அதே கபடு சூது இல்லாதிருந்த சுபாவம் ஜனங்களுக்கும் வரவேண்டும். அவர்கள் தங்கள் நிர்வாணத்தை உணர்ந்திருக்க மாட்டார்கள், அவர்களுக்கு வெட்கம் இருந்திருக்காது. (காண்க "மேலும் கற்றுக்கொள்ள: நமக்குள் பாவசுபாவம் (இயல்பாக) இருக்கிறதா?")

வசனங்கள் 11லிருந்து 13 வரை மாம்சத்துக்கும் ஆவிக்குமுரிய வித்தியாசம் இரண்டாம் முறை ஒப்பிடப்படுகிறது அது இயேசு சிலுவையில் அறையப்பட்டபின் அவரது புதிய வாழ்வுக்கும் கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றபின் அவர்களுடைய புதிய வாழ்க்கைக்குமுள்ள வித்தியாசத்தை விளக்குகிறது. இயேசு மரித்தபின், அவர் அடக்கம் பண்ணப்பட்டு புதிதான சரீரவாழ்க்கைக்கு எழுப்பப்பட்டார். ஞானஸ்நானத்தை ஒரு நபர் பெறும்போது பாவத்தில் மரித்து இருந்த அவர் தண்ணீரில் அடக்கம் பண்ணி புதிய ஜீவனுள்ளவராய் எழுப்பப்படுகிறார்.

ஞானஸ்நானத்தை ஏதோ எளிமையான மற்றொரு சடங்காச்சாரமாக விருத்த சேதனத்துக்கு ஒப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நியாயப்பிரமாணத்தின் கீழ் விருத்தசேதனம் பெற்றவர்கள் அப்படி அவர்கள் விருத்தசேதனம் பெற்றபோது அவர்களிடத்தில் எவ்வித உள்ளான ஜீவியத்தில் மாற்றம் எதுவும் நிகழவேண்டும் என்று கோரப்படவில்லை. மற்றொருவரின் பரிசுத்தமாக்கும் இரத்தத்தில் விசுவாசம் வைக்க வேண்டுமென்றோ, ஒரு வாழ்க்கை மாற்றம் ஏற்பட வேண்டுமென்றோ கோரப்படவில்லை, நிச்சயமாக, பவுல் அதற்கு ஒப்பான ஒரு வெறுமையான சடங்காச்சாரத்தை கொலோசெயர்கள் மேல் சுமத்திதிணிக்கவில்லை, "ஞாஸ்நானம் விசுவாசத்தின் (சமய) சடங்காக கருதப்பட்டாலும், *ஒருபோதும்,* அதின் உபதேசத்தாலும் கருத்தாலும், அதின் பொருளிலிருந்து தொடர்பற்றதாகாது … , அதின் செயல் உண்மையான பொருள் முன்னதாக இல்லாமலேயே நடப்பிக்கப்படும் என்பது போல."[5]

கொலோசெயர்கள் ஆவிக்குரிய விருத்தசேதனத்தைப் பெற்று ஆவிக்குரிய ஜீவனுள்ளவர்களாக அவர்கள், தேவனுடைய கிரியைகளின் மேலுள்ள விசுவாசத்தின் மூலம், ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுக்குள் பிரவேசித்தார்கள். H. C. G. Moule அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் விருத்தசேதனம் பண்ணப்பட்டபோது சரியாக கவனித்து, "*விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்கள்,* 'கிறிஸ்துவுக்குள்ளானது' சிறப்பானது. அவர்கள் ஏற்கனவே தெய்வீக மெய்மை *உடையவர்களாயிருந்தனர்,*"[6] என்று சொன்னார்.

வேறிடங்களில், பவுல் கிறிஸ்துவின் விருத்தசேதனம் கொலோசெயரின் மாம்சத்திலிருந்த கடந்தகால பாவங்களை களைந்து போட்டது. என்று சுட்டிக்காட்டுகிறார். பாவங்கள் ஞானஸ்நானத்திலே களையப்பட்டாலும், ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள் பாவச்செயல்களை நிறுத்த வேண்டும் (கொலோசெயர் 3:8, 9; 2 கொரிந்தியர் 7:1).

கொலோசெயர்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டபோது, தேவன் தங்களை ஜீவனுள்ளவர்களாக்குகிறார் என்பதையும் அவர்களுடைய ஆவிக்குரிய மீறுதல்களை களைந்து போட்டு ஆவிக்குரிய விருத்தசேதனத்தை

நடப்பிக்கிறார் என்பதிலும் இருந்த உண்மையில், அவர் செய்தவைகளில் நம்பிக்கை வைத்தனர்.

விருப்பப்பட்ட முடிவை தேவன் கொண்டு வருகிறார் என்பதில் தங்கள் விசுவாசத்தை சகோதரசகோதரிகள் வைக்காமல் போனால் அந்த விசுவாசம் மதிப்பற்றதாகி விடும். இந்த முடிவுகள் மாம்ச உணர்வுகள் ஆவிக்குரிய விருத்த சேதனத்தால் களையப்படுவதையும், இயேசுவுடனான புதிய ஜீவனைப்பெற ஏதுவாக்கும் உயிர்த்தெழுதலையும், மற்றும் பாவமன்னிப்பையும் உட்படுத்தியவைகள்.

யூதருடைய விருத்தசேதனம் மாமிச சரீரத்தில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே களைந்து போட்டது, ஆனால் கிறிஸ்துவின் விருத்தசேதனமோ பாவம் நிறைந்த முழு மனுஷனையும் உட்படுத்துகிறது. அதின் பாதிப்பு சரீரப்பிரகாரமான செயலை மாத்திரம் கொண்டுவருவதில்லை; மாறாக அது இருதயத்திலிருந்து கீழ்ப்படிகிற ஆவிக்குரிய தொடர்பை மாமிச செயலுடன் தொடர்புபடுத்துகிறது (ரோமர் 6:17, 18). அது இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனம் (ரோமர் 2:28, 29). மாமிச சரீரத்திலிருந்து ஒருவர் விடுபடும்போது, பழைய மனுஷனானது, புதிய நபராக மாறும்படிக்கு ஒப்புக் கொடுக்கும் போது, கிறிஸ்துவின் விருத்தசேதனம் இடம் பெறுகிறது (ரோமர் 6:6). தேவனே ஆவிக்குரிய விருத்தசேதனத்தை நடப்பிக்கிறார் (கொலோசெயர் 2:12).

தேவன் எப்பொழுதுமே இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனத்தை விரும்பினார். மோசே மூலமாக, தேவன் ஜனங்களிடம் தங்கள் இருதயத்தில் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ள பணிந்தார் (உபாகமம் 10:16). எரேமியா அதே கோரிக்கையை இஸ்ரவேலருக்கு முன்பாக வைத்தார் (எரேமியா 4:4; 9:25, 26). இருதயத்தில் விருத்தசேதனம் செய்யப்படாதவர்களை தேவன் ஏற்றுக் கொள்வதில்லை என்று எசேக்கியேல் சொன்னார் (எசேக்கியேல் 44:7, 9).

ஆவிக்குரிய விருத்தசேதனத்தைக் குறித்துப்பேசும் போது பவுல், அதன் விளைவாக வரும், புதிய ஜீவன், பாவமன்னிப்பு, மற்றும் கிறிஸ்தவ சுயாதீனம் ஆகியவைகளை உட்படுத்தும் அநேக ஆசீர்வாதங்களை அவர் பெயரிட்டார்.

“கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்” (2:11ஆ)

வசனம் 10ல் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமாக்கப்பட்டவர்கள் என்று காட்டினபவுல் தொடர்ந்து அவருக்குள் நமக்குக் கிடைக்கிற சில ஆசீர்வாதங்களைக் குறிப்பிட்டார். அதில் முதலாவதாக ***கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தைக்*** *குறிப்பிடுகிறார்.*

தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களில் விருத்தசேதனம் விசேஷித்த அடையாளத்தைப் பெற்றிருந்தது. விருத்தசேதனத்தைப் பெற்றவர்களுக்கே அவர் தம்மை தேவன் என்று குறிப்பிட்டார் (ஆதியாகமம் 17:7-13). விருத்தசேதனம் பெறாத யூதப் பிள்ளைகளுக்கோ விருத்த சேதன மற்ற புறஜாதிகளுக்கோ இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்படவில்லை; அவர்கள் வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கையிலிருந்து அந்நியமாக்கப்பட்டிருந்தார்கள் (எபேசியர் 2:11-13). விருத்தசேதனம் பெற்றிராத எபிரெய ஜனங்கள் யாரும் இருப்பின் அவர்கள் இஸ்ரவேலின்

நடுவிலிருந்து அறுப்புண்டு போவார்கள் என்று சொல்லப்பட்டது (ஆதியாகமம் 17:14). புதிய உடன்படிக்கையின் கீழ் தேவன் ஆவிக்குரிய விருத்தசேதனமாகிய ஞானஸ்நானத்தை பெற்றவர்களுக்கு தேவனாக இருக்கிறார். நாம் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது, நாம் அவருடைய பிள்ளைகளாகவும் ஆபிரகாமுக்கு அவர் கொடுத்த வாக்குத்தத்தத்தின் சுதந்தரராகவும் மாறுகிறோம் (கலாத்தியர் 3:26-29).

வசனங்கள் 11லிருந்து 13வரை மாமிசத்துக்கும் ஆவிக்குமுரிய இரண்டு ஒப்பிடுகளைக் கொண்டுள்ளது. *முதலாவதாக, பவுல் மாமிச மற்றும் ஆவிக்குரிய விருத்தசேதனத்தை ஒப்பிடுகிறார்.*

கிறிஸ்துவுக்குள் இருந்த கொலோசெயர்கள் ஆவிக்குரிய விருத்த சேதனத்தை கிறிஸ்துவின் விருத்தசேதனத்துடன் பெற்றிருந்தனர். அது "கைகளினால் செய்யப்படாத விருத்தசேதனம்." இது மாம்சப்பிரகாரமாக யூதர்களுக்குள் மனித கைகளைக் கொண்டு நடப்பிக்கப்பட்ட விருத்தசேதனத்திற்கு எதிரிடையானதாக இருக்கிறது. இங்கே பவுல் கொலோசெயரில் கிறிஸ்தவர்களானபோது மனிதக் கைகள் ஞானஸ்நானப்படுத்தவில்லை என்ற பொருளில் போதிக்கவில்லை; மாறாக, "மாம்ச சரீரம்" மனித கைகளின்றி களையப்பட்டது" என்று அவர் குறிப்பிடுகிறார். கொலோசெயர்கள் தங்கள் பகுதியில் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டு எழுப்பப்பட்டதினால் தேவன் தமது பகுதியில் மாம்ச சரீரத்தை களைந்து போட்டார். (காண்க 'மேலும் கற்றுக்கொள்ள: 2:11-13ல் சொல்லப்படுகிற ஞானஸ்நானம் முற்றிலும் விருத்தசேதனத்துக்கு ஒப்பானதா?")

கொலோசெயர்கள் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமாக்கப்பட்டிருந்ததால், அந்த நேரத்தில் யூதமுறைப்படியான விருத்தசேதனம் அவசியமற்றதாயிருந்தது. தேவன் இஸ்ரவேலருக்குக் கொடுத்திருந்த நியாயப்பிரமாணம் இனியும் அவர்களுக்கு எதுவும் செய்ய ஏதுமில்லை. பவுல் தமது நிருபத்தில் முன்பே சொன்னதுபோல், இயேசு, தமது ஜீவியத்தாலும் போதனையினாலும், அவர்களுடைய எல்லா தேவைகளையும் அளித்துள்ளார் (1:14; 2:10அ).

யூதமுறையிலான விருத்தசேதனம் நுனித்தோலை அறுத்து மாமிச சரீரத்திலிருந்து களைந்து போடப்படுவதைக் கோரியது, கிறிஸ்துவின் முறையிலான விருத்தசேதனம், ஞானஸ்நானம், பாவத்தின் குற்ற உணர்வை களைந்து போட்டது. "பவுல் இதை (ஆவிக்குரிய விருத்தசேதனத்தை) வலியுறுத்தி, அது தேவனுடைய கிரியை என்றும், அது ஞானஸ்நானத்திலே அனுபவிக்கப்படுகிறது என்றும் குறிப்பிடுகிறார்."[7]

கொலோசெயர்களின் கடந்த காலத்திலிருந்த மூன்று நிலைகளை முன்வைத்து தேவனால் அவைகள் எப்படி சரி செய்யப்பட்டன எனக் காட்டுகிறார்.

நிலை 1 - கொலோசெயர்கள் ஆவிக்குரிய ரீதியில் மாம்ச விருத்த சேதனம் பெற்றிருக்கவில்லை ஆதலால் அவர்களின் பாவத்தினால் மாமிச உணர்வுகளினாலே தீட்டுப்பட்டிருந்தனர்.

சரி செய்யப்படுதல் - ஞானஸ்நானத்திலே அவர்கள் விருத்தசேதனம் பண்ணப்பட்டு அவர்களுடைய மாமிச உணர்வுகள்

களைந்தெறியப்பட்டன.

நிலை 2 - அவர்கள் ஆவியிலே மரித்திருந்தார்கள்.

சரி செய்யப்படுதல் - மாம்ச ரீதியில் அவர்கள் ஞானஸ்நானத்திலே இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் பங்குடையவர்களாய் தேவனுடைய கிரியைகளின் மேலுள்ள விசுவாசத்தின் மூலம் இயேசுவோடு கூட உயிர்ப்பிக்கப்பட்டு புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொண்டனர்.

நிலை 3 - அவர்கள் பாவத்திலே மரித்தவர்களாயிருந்தனர்.

சரி செய்யப்படுதல் - அவர்கள் பிழைத்திருக்கிறவர்களாக அவர்களுடைய சகல மீறுதல்களும் ஞானஸ்நானத்திலே மன்னிக்கப்பட்டவர்களானார்கள்.

கொலோசெயிலிருந்து கிறிஸ்தவர்களின் நிலை (2:11-13)

கடந்தகாலநிலை	நிகழ்ந்த மாற்றம்	விளைவு
ஆவிக்குரிய ரீதியில் விருத்த சேதனத்தை மாம்சத்தில் (மாம்ச உணர்வுகளுக்கென) பெற்றிருக்கவில்லை (வசனம் 13).	மாம்சசரீரத்தை ஒழித்து, கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டு ஞானஸ்நானத்திலே உயிர்த்தெழுந்தனர் (வசனங்கள் 11, 12).	ஆவிக்குரிய ரீதியில் ஞானஸ் நானம் பண்ணப்பட்ட போது மாமிச உணர்வுகள் களைப்பட்டன (வசனம் 11).
ஆவியின் மரித்திருந்தனர் (வசனம் 13).	ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடன் எழுப்பப்பட்டனர் (வசனம் 12).	கிறிஸ்துவுடனே தேவனின் கிரியையில் உள்ள விசுவாசத்தால் எழுப்பப்பட்டனர் (வசனங்கள் 12, 13).
அக்கிரமங்களினால் மரித்தவர்களானார்கள் (வசனம் 13).	ஞானஸ்நானம் பண்ணப்பட்டனர் (வசனம் 11).	சகல அக்கிரமங் களிலிருந்தும் ம ன்னிக்கப் பட்டனர் (வசனம் 13).

கிறிஸ்துவுக்குள் ஜீவனும் மன்னிப்பும் (2:12, 13)

12ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். 13உங்கள் பாவங்களினாலேயும். உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும், மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து.

ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்படும் போது ஆவிக்குரிய விருத்தசேதனம் வருகிறது (2:11-13). எழுத்தாளர் இரண்டு சரீரப்பிரகாரமான செயல்களை ஒப்பிடுகிறார் - விருத்தசேதனம் பண்ணப்படுதலும் தண்ணீரில் முழுக்கப்படுதலும் - அவை ஆவிக்குரிய மெய்மையுடன் கூடிய ஞானஸ்நானத்தைச் சுட்டிக் காட்டுகிறது. ஞானஸ்நானத்திலே ஒருவர் இயேசுவோடு அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவதன் மூலம் அவர் ஜீவனுள்ளவராகிறார். பவுல் விளக்கமளிக்கையில், ஞானஸ்நானத்திலே, ஒருவர் பாவத்தில் மரித்திருக்கையில் அவருடைய பாவம் மன்னிக்கப்பட்டு அதிலிருந்து ஆவிக்குரிய முறையில் ஜீவனை அடைகிறார். இந்த மாற்றங்கள் நிகழ்வதற்கான காலம் ஞானஸ்நானம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. R. C. Lucas *"கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவது என்பது அவருடைய மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் பங்கு பெறுவது என்று பொருள்" என்று எழுதினார்.*[8]

சரீரப் பிரகாரமான செயலாகிய முழுக்குதலின் மெய்ம்மையை அநேக உண்மைகளோடு தொடர்புபடுத்தி பவுல் பேசுகிறார், இதே அணுகுமுறையைத்தான் பவுல் கர்த்தருடைய பந்திக்கும் பயன்படுத்தினார். மாம்சப்பிரகாரமான பொருள்களாகிய அப்பமும் திராட்ச ரசமும் கிறிஸ்துவின் ஆவிக்குரிய ஐக்கியத்துடன் குறிக்கத்தக்கதாக அவருடைய சரீரத்தையும் இயேசுவின் இரத்தத்தையும் தொடர்புபடுத்துகிறது (1 கொரிந்தியர் 10:16). ஞானஸ்நானத்தின் மதிப்பு, அதில் ஆவிக்குரிய மெய்மையும் உள்ளடக்கியதாக இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும், அது பழைய மனுஷனை அடக்கம் பண்ணி, உயிர்த்தெழுந்த புதிய மனுஷனாக்குகிறது. Hay *சொன்னதாவது,*

> *கொலோசெயர்களும் பிற விசுவாசிகளும் ஞானஸ்நானத்திலே களைந்து போடப்படுதலில், உண்மையில் பழைய ஆடைகளை களைந்து விட்டுவிட்டு உருவகமாக, "மாமிச சரீரத்தை" களைந்து விடுவதில் பங்கடைகின்றனர் (2:11), அதாவது அவர்களுடைய "பழைய மனுஷனை" களைந்து போடுகின்றனர் (3:9). பழைய மனுஷனை களைந்து போடுவதால் அவர்கள் மாம்சத்திலிருந்தும் ஆவிகளின் துரைத்தனங்கள் மற்றும் அதிகாரங்களிலிருந்தும் அவர்கள் பாவங்களைச்செய்ய ஏதுவாக கட்டுக்குள்ளாக்கிய அல்லது சோதனைக்குள்ளாக்கிய சக்திகளிலிருந்தும் விடுதலையாக்கப்படுகின்றனர்.*[9]

ஞானஸ்நானத்தில் இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் பங்குடையவர்களாவதால் மாத்திரம் ஏதோ அற்புதமாக மறுமலர்ச்சி ஏற்பட்டு விடுவதில்லை. மனப்பூர்வமான கீழ்ப்படிதல் மூலமே புதிய ஜீவனின் விளைவு வருகிறது (ரோமர் 6:4, 17, 18). ஞானஸ்நானம் பண்ணப்பட்ட ஒருவர் இயேசுவுடனே அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவதன் மூலம் அவரோடேகூட தன்னை அடையாளப்படுத்துகிறார். சரீரம் தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுவதும் தண்ணீரிலிருந்து சரீரம் உயிர்த்தெழுப்பப்படுவதும் சரீரத்தைப் போலவே இருதயமும் உட்படுத்தப் பட வேண்டும். "ஆனால் இந்த அடிப்படைக் கூறு சார்ந்த மறுரூபம் ஏதோ மனித சக்தியாலோ மதிநுட்ப சக்தியாலோ வருவதில்லை. அது இயேசுவை

மரித்தோரிலிருந்து தமது வல்லமையால் எழுப்பினவராகிய தேவன் மேல் வைக்கும் விசுவாசத்தினால் வருகிறது.”[10]

“ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப் பட்டவர்களாகவும்” (2:12அ)

“அவரோடே கூட அடக்கம் பண்ணப்படுதல்” *எனும் வார்த்தை (suntaphentes) ஒரு இறந்த கால முற்று அமைதி வினையெச்சம், இதன் பொருள் பிரதான வினைக்கு முன்பாகவே செயல் முழுமை பெறுதல், இது வசனத்தின் பின்பகுதியில் உயிர்த்தெழுதல் எனும் பதத்தைக் கொண்டுள்ளது. இந்த வார்த்தை காணப்படும் மற்றொரு வசனப்பகுதி ரோமர் 6:4. இது ஒரு தொகுப்பு வினைச்சொல், அதில் sun (“கூட”) மற்றும் thaptō (“அடக்கம்”) ஆகிய வார்த்தைகளின் கூட்டுத் தொகுப்பு. பவுல் அடிக்கடி sun எனும் முன்னிடைச் சொல்லோடு துவங்கி தொகுப்பு வினைச்சொற்களை பயன்படுத்தியிருக்கிறார். வசனங்கள் 12, 13 ஆகிய வசனங்களில் மூன்றுமுறை அப்படிப்பட்ட வார்த்தைகளை பயன்படுத்தியிருக்கிறார்.*[11] ***ஞானஸ்நானத்தில்*** *கொலோசெயர்கள் கூட அடக்கம் பண்ணப்பட்டனர்; ஒன்றாக “அவரோடே கூட” அடக்கம் பண்ணப்பட்டனர்; “அவரோடே கூட” உடன் - எழுப்பப்பட்டனர், ஒன்றாக எழுப்பப்பட்டனர்; இதன் விளைவு, “அவரோடே கூட,” சேர்ந்து “பிழைத்திருக்கிறவர்களாக,” ஒன்றாக பிழைத்திருக்கத் தக்கதாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.*

ஞானஸ்நானம் என்பது ஒரு நபர் தன் சரீரத்தை தண்ணீரில் அடக்கம் பண்ணவும் தண்ணீரிலிருந்து சரீரத்தை எழுப்பவும் மற்றொரு நபரை அனுமதிக்க வேண்டும். இப்படியாக, ஞானஸ்நானத்தைப் பெறுபவர், இயேசுவோடு கூட அவருடைய அடக்கம் பண்ணப்படுதலையும் உயிர்த்தெழுதலையும் பகிர்ந்து கொள்கிறார். இயேசு மனுஷர் கைகளினாலே சிலுவையில் அறையப்பட்டு அடக்கம் பண்ணப்பட்டு தேவனால் உயிர்ப்பிக்கப்பட்டது போலத்தான் இதுவும் (வசனம் 12), ஞானஸ்நானம் பண்ணப்படுகிறவர்கள் மற்றவர்களுடைய செயல்பாட்டுக்குத் தங்களை கீழ்ப்படுத்துகின்றனர். இயேசு தாமே தமக்காக சிலுவையை செய்து கொள்ளவில்லை, தம்மைத்தாமே சிலுவையில் அறைந்து கொள்ளவில்லை, அல்லது தம்மைத்தாமே சிலுவையில் உயர்த்திக்கொள்ளவும் இல்லை. மனித வர்க்கத்தை இரட்சிக்க இயேசுவின் சகிப்புத் தன்மை இதுவாக இருந்தபோதிலும், தம்மைத்தாம் சிலுவையில் அறைந்து கொள்ள அவர் ஏதோன்றையும் செய்யவில்லை. அதே போலத்தான், ஞானஸ்நானம் பெறுபவர் தன்னைத் தான் அடக்கம் பண்ணிக்கொள்ளவோ தன்னையே எழுப்பிக்கொள்ளவோ செய்வதில்லை. இப்படியாக இதைச் சரியாகச் சொன்னால் ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட ஒருவர் எந்த ஒரு கிரியையும் (செயலையும்) செய்வதில்லை (மாற்கு 16:16; 1 பேதுரு, 3:21). “நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்” (தீத்து 3:5; காண்க எபேசியர் 2:8, 9).

ஞானஸ்நானத்தைப் பெறுபவரை மற்றவருடைய கைகள் தண்ணீரில்

அடக்கம் பண்ணி அதிலிருந்து அவரை எழுப்பும்போது இயேசு ஆவிக்குரிய கைகளினால் செய்யப்படாத விருத்தசேதனத்தை நடப்பிக்கிறார்.

> *இப்படியாக ஞானஸ்நானப்படுத்துதல் என்பது யாரோ ஒருவருக்கு செய்விப்பது, நோவா பேழையை உண்டுபண்ணியபோது, கர்த்தர் தண்ணீரினூடே பாதுகாப்பாக கொண்டு வந்தார்; மோசேயும் யோசுவாவும் ஜனங்களை தண்ணீரினூடே வழிநடத்தினர், கிறிஸ்தவ ஞானஸ்நானப்படுத்துதல் என்பது ஏசாயா கூறிய "உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்" என்பதிலிருந்தும், யூத முறைப்படியிலான சடங்காச்சார சுத்திகரிப்புகளிலிருந்தும், கும்ரானின் தூய்மைச் சடங்கு புனிதமாக்குதலிருந்தும், அல்லது யூதமார்க்கத்தானாக்கும்படி கொடுக்கப்பட்ட ஞானஸ்நானத்திலிருந்தும் வித்தியாசப்பட்டது; ஏனெனில், யோவானால் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து (அதை இயேசு கூட பெற்றார்), அது எப்பொழுதும், எங்கும், எல்லாருக்கும், ஏதோ ஒருவகையில் ஒருவரால் மற்றொருவருக்கு நடப்பிக்கப்பட்டது.*[12]

ஞானஸ்நானம் பெறும் நபர் தன்னை இன்னொருவர் கையில் ஒப்புக்கொடுக்கிறார், அவருடைய கரத்திற்கு உள்ளாகும் அவர் தண்ணீருக்குள் தன்னைக் கீழ்ப்படுத்தி வெற்றிகரமாக மேலே மறுபடியும் கொண்டு வர ஒப்புக்கொடுக்கிறார். பாவ மன்னிப்பையும் இரட்சிப்பையும் தான் பெற்றுக் கொள்வார் என்ற அவருடைய விசுவாசம், எப்படியிருப்பினும், தன்னை ஞானஸ்நானப்படுத்துபவர் மீது அல்ல, மாறாக, அவருடைய விசுவாசமெல்லாம் "அவரை மரித்தோரிலிருந்து எழும்பப்பண்ணின, தேவனுடைய செயலின் மேல்தான்" இருக்கிறது (வசனம் 12).

சிலர் இந்த வசனத்தின்படி முழுக்கப்படுதல் பயன்படுத்தப்படவில்லை என்கின்றனர். William Hendriksen தனது எதிர்ப்பை இவ்வாறு முன்வைக்கிறார்:

> *ஞானஸ்நானத்தின் விதம் குறித்து இந்த வசனத்தில் குறிப்பிடப்படாதிருந்தால் இந்த விவாதம் முழுமை பெற்றிராது; முழுக்குதலைக் கொடுப்பவர்கள் தங்களுடைய ஆதாரங்களை இப்படிப்பட்ட வசனப்பகுதிகளில் வைத்திருப்பதால், ஞானஸ்நானம் என்பது முழுக்குதலாக இருந்தால் மட்டுமே மதிப்புடையதாயிருக்கிறது. "ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும்" என்னும் வார்த்தைகளில் தங்கள் பார்வையைச் செலுத்தும் இவர்கள் இதையே தண்ணீரில் முழுக்கப்படுவதற்கு அங்கீகாரமாகக் காண்கின்றனர்; மேலும் "அதிலே … அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" என்னும் வார்த்தைகள் தண்ணீரிலிருந்து எழுந்து வருவதற்கு ஒரு உறுதியான ஆதாரமளிக்கும் வாக்கியம். கிறிஸ்துவுகுள்ளான நமது சகோதரர்களுக்கு அனைத்து அன்போடும் மதிப்போடும் நான் துணிகரமான முயற்சியுடன் சொல்லுகிறேன். எப்படியாயிருப்பினும், ஞானஸ்நானத்தைப் பற்றி பேசும் வசனங்கள் மற்ற பதங்களையும் பயன்படுத்திப் பேசுகின்றன அவை, இப்படிப்பட்ட பகுத்துப்பார்க்கும் தன்மையின் அடிப்படையில்*

முறையான ஞானஸ்நானத்தின் விதத்தைக் குறித்துப் பேசுவதாக குறிப்பிடலாம். *கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்* என்பதன் பொருள் (கொலோசெயர் 2:11, 12; ரோமர் 6:4) ஞானஸ்நானம் என்றாலே முழுக்கப்படுவதால் மட்டுமே கொடுக்கப்படுவது என்பதையும், *கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டோம்* என்பது (ரோமர் 6:6) ஞானஸ்நானம் என்றால் சிலுவையில் அறையப்படுவதனால் கொடுக்கப்படுவது என்பதையும், *அவருடைய சாயலில் இணைக்கப்பட்டிருப்போம்* (ரோமர் 6:5, அமெரிக்கன் மொழிபெயர்ப்பு மற்றும் மூலக்கூறு) என்பது அது இணைக்கப்பட்டவர்களாய் கிறிஸ்துவைத்தரித்துக் கொள்ளுதலை அதாவது அவரில் வாசம் பண்ணுவதை.[13] ஏன் குறிக்காது (கலாத்தியர் 3:27)?

Hendriksen னின் விவாதம் குறைவுள்ளது ஏனெனில் "ஞானஸ்நானம்" *(baptizō)* என்பதன் அடிப்படை அர்த்தம் "முழுக்குதல்." பவுல் உருவகமாக பேசும் ஞானஸ்நானத்திலே இயேசுவோடு அடக்கம் பண்ணப்படுதலையும் உயிர்த்தெழுதலையும் முழுக்குதல்தான் என்பதற்கு வலுவூட்டும் ஆதாரங்கள் மட்டுமே.

அதிகாரத்திலுள்ள அநேகரும், மார்க்க வட்டத்துக்குப்புறம்பேயிருக்கும் நபர்களும், இந்த வார்த்தையின் பொருளுக்கு சாட்சியமளிக்கின்றனர். *The American Heritage Dictionary* சொற்களின் தோற்றம் பற்றிய வரலாற்றில் "ஞானஸ்நானப்படுத்துதல்" "baptize" என்பதற்கு "கிரேக்க *baptein* என்பது, முழுக்க"[14] என்று பொருள்படுத்துகிறது. மற்றொரு சமய (மார்க்க) உபதேசத்தைச் சாராத பிரிவினையற்ற கொள்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட தகவல்: "Fr. Gk. *baptisma*, 'தண்ணீரில் மூழ்கி எடுக்கும் ஒரு செயல்' ... அறிவு சார் அபிவிருத்திக்கு ஞானஸ்நானம் (மூலப்பொருளில்) மூழ்குதலுடன் உட்படுத்தப்பட்ட வார்த்தை என்று மனதில் கொள்ள வேண்டும்."[15] பிற தகவல்கள் சொல்லுவதாவது,

> கிரேக்க வினைச்சொல்லில் "பேப்டைஸ்," என்பதற்கு baptize, என்று baptizein விருந்து உருவாயிற்று, "முழுக்கு," மற்றும் அடிக்கடி அல்லது தீவிரமாக (தண்ணீரில்) மூழ்க்கு, முழுகியெடு" என்று பொருள்.[16]

> பழங்காலங்களில் ஞானஸ்நான தொட்டிகள் மூழ்குவதற்காக கட்டப்பட்டிருந்தன என்பது வழக்கமான செயலாக இருந்ததை காட்டுகிறது.[17]

> ... அப்போஸ்தலன் "அடக்கம் பண்ணப்பட்டோம்" என்னும் சொற்றொடரை அறிமுகப்படுத்தி அது "மரித்தல்" என்பதற்குப் பதிலாக பயன்படுத்தப்பட்டுள்ளது: ஞானஸ்நானத்தை உருவகப்படுத்த ஒத்த ஒரு செயலாக நம்முடைய தற்போதைய அவதூறு காரியமாக (தெளித்தல்) இருப்பது அதைக் காணாமற் போகச் செய்து விட்டது.[18]

> இந்த "அடக்கம் பண்ணப்படுதல்" ஒரு நபர் தண்ணீருக்குள் இறக்கப்படும் போது, நடந்து அவனோ அவளோ தண்ணீரிலிருந்து வெளியே கொண்டுவரப்படும்போது "உயிர்த்தெழுதல்" தொடர்ந்து வருகிறது.[19]

ஞானஸ்நானத்திற்கு முழுநபராகிய, சரீரமும் ஆத்துமாவும் உட்படுத்தப்படுகிறது, ஞானஸ்நானத்தில் இவற்றில் ஒன்றுகூட விலக்கப்படக்கூடாது. ஆத்துமா முழுமையாய் இயேசுவுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு, விசுவாசத்தின் மூலம் பழைய ஜீவன் முடிவடைந்து புதிய ஜீவனுக்குள் பிரவேசிக்கிறது. இப்படியாக ஞானஸ்நானம் பெறுபவர் மரித்தோரிலிருந்து ஆவிக்குரிய வகையில் உயிர்ரோடெழுப்பப்படுகிறார். முழு சரீரமும், தண்ணீருக்குள்ளாக்கப்பட்டு, ஞானஸ்நானத்திலே ஈடுபடுத்தப்படுகிறது. முழு சரீரமும் தண்ணீருக்கு அடியில் முழுக்கப்படுவதால் இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் பங்கடைவது போல ஊற்றுதலிலோ தெளித்தலிலோ செயல்படுத்த இயலாது. இப்படிப்பட்ட நடைமுறைப்படுதலில் முழு மனுஷனும் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தவராகிறார்.

பாவங்கள் மன்னிக்கப்படவும், இரட்சிக்கப்படவும், புதிய ஜீவனைப் பெறவும் ஏதுவாக்கும் ஞானஸ்நானத்திலிருந்து தப்பித்துக் கொள்ளும் பொருட்டு பலதரப்பட்ட தர்க்கங்கள் செய்யப்படுகின்றன. இந்தத் தர்க்கங்களெல்லாம் ஞானஸ்நானத்தின் அவசியத்தை வலியுறுத்துகிற வசனங்களுக்கு முரணான வைகளாகும் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38; 22:16; 1 பேதுரு 3:21). Warren W. Wiersbe குறிப்பிட்டதாவது:

> ... புதிய ஏற்பாட்டில், *ஞானஸ்நானப்படுத்துதல்* எனும் வார்த்தையில் நேரடிப் பொருளும் உருவகப்பொருளுமாகிய இரண்டுமே கானப்படுகிறது, நேரடிப் பொருளில் "மூழ்குதல், அமிழ்த்துதல்," ஆகியன. உருவகப் பொருள் "கூட என்று அடையாளப்படுத்துவது." உதாரணமாக, யூத ஜனங்கள் சிவந்த சமுத்திரத்திற்குள் கடந்து சென்றபோது, அவர்கள் "மோசேயிக்குள்." "ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்" (1 கொரிந்தியர் 10:1, 2). இதிலே தண்ணீர் இடம்பெற வில்லை, ஏனெனில் அவர்கள் உலர்ந்த வெட்டாந்தரை வழியாக நடந்துபோனார்கள், இந்த அநுபவத்தில், அந்த ஜனம் மோசேயோடே கூட அடையாளப்படுத்தப்பட்டனர்.[20]

இந்த வாக்கியத்தில் காணும் தெளிவான பிரச்சனை என்னவெனில் இஸ்ரவேல் ஜனங்கள் ஞானஸ்நானம் பெறும் பொருளாக மோசே இருக்கவில்லை. அவர்கள் சமுத்திரத்தின் வழியே நடந்து போனபோது சமுத்திரத்திற்குள் மூழ்கி, ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, மேகத்துக்குள்ளாக்கப்பட்டு, சமுத்திரத்தை கடந்து போனார்கள் (ஏசாயா 4:5). அவர்கள் உலர்ந்த வெட்டாந்தரை வழியாக கடந்து போன காட்சி, அவர்கள் தண்ணீருக்குள் மூழ்கிச் செல்லவில்லை என்பதைக் குறிப்பிட்டாலும், அவர்கள் ஞானஸ்நானம் பெறவில்லையென்று குறிப்பிட்டு தர்க்கிக்க முடியாவிட்டாலும், மேகத்துக்குள்ளாகவும் சமுத்திரத்திற்குள்ளும் மூழ்கப்பட்டார்கள், அல்லது அவைகளால் சூழப்பட்டார்கள், சமுத்திரம் இரண்டு பக்கங்களிலும் சுவரைப்போல அமைந்திருந்தன; அவர்கள் உள்ளே அமிழ்த்தப்பட்டனர் - ஞானஸ்நானம் பண்ணப்பட்டனர் - இப்படி சமுத்திரத்திற்குள்ளாகவும் மேகத்திற்குள்ளாகவும் ஞானஸ்நானம் பெற்றனர்.

வேறுசிலர் தண்ணீர் ஞானஸ்நானத்தைப் போதிக்க வசனம் 11ஐ

உபயோகிப்பதை எதிர்த்து, கிறிஸ்துவினால் கொடுக்கப்படும் விருத்தசேதனம் என்பதை, "இது அநேகமாக மனமாற்றத்தைக் குறித்த கருத்துக்களைக் கொண்டுள்ளது ('நீங்கள் விருத்தசேதனம் பண்ணப்பட்டீர்கள்,' கடந்த கால முற்று வினை), இருதயத்தில் ஆவியினால் செய்யப்படும் விருத்தசேதனம் … ,"[21] என்கின்றனர். வசனம் 12ல் பேசப்படும் ஞானஸ்நானம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமே என்ற முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது, ஏனெனில் பவுல் "கைகளினால் செய்யப்படாத விருத்த சேதனம்" என்று குறிப்பிட்டுள்ளார் (வசனம் 11), என்கின்றனர்.

கொலோசெபட்டணத்து சபையார் சகல தேசத்தாரும் பெறும்படி கட்டளையிடப்பட்ட ஞானஸ்நானத்தைப் பெற்றனர் (மத்தேயு 28:19; மாற்கு 16:15, 16), அப்போஸ்தலருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு பெற்றுக் கொண்ட அளவிடப்பட்ட பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமல்ல (நடபடிகள் 1:2-5; 2:4) இந்த ஞானஸ்நானம் பின்னர் கொர்நெலியு வீட்டாராலும் பெற்றுக் கொள்ளப்பட்டது (நடபடிகள் 11:15, 16). இயேசுவின் ஆவிக்குரிய, கைகளினால் செய்யப்படாத விருத்தசேதனம் என்பது அவர்களுடைய பாவங்கள் மனித கைகளினால் களையப் (நீக்கப்) படவில்லை தேவனுடைய வல்லமையான செயலினால் நீக்கப்பட்டது என்ற உண்மையைக் குறிப்பிடுகிறது. இந்த நிலை நடத்த இடம் ஞானஸ்நானம். Albrecht Oepke *சரியாக கவனித்து பின்வருமாறு எழுதினார்,*

> *புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படும் ஞானஸ்நானம் சொல்லப்படும் வசனப்பகுதி வேறொன்றைக் குறிப்பிடாத பட்சத்தில் அது தண்ணீர் (முழுக்கு) ஞானஸ்நானத்தையே நினைவுபடுத்த வேண்டும். ஞானஸ்நானம் என்பது அறிவியல் ரீதியாக "தண்ணீரில் ஞானஸ்நானம்" பெறுவதையே பொருள்படுத்தும், ஆதலால் (எப்படி எதைக் கொண்டு) கொடுக்கப்பட்டது என்பதை குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.*[22]

எனவே (நமது ஆராய்ச்சியில் உள்ள) வசனப்பகுதியில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை கோருவது போன்ற குறிப்பு எதுவும் இல்லை, ஆக தண்ணீர் ஞானஸ்நானம்தான் பவுல் தனது மனதில் கொண்டிருக்க வேண்டும் என்ற பரிசீலனைக்கு இதை விட வேண்டும்.

"அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" (2:12ஆ)

ஞானஸ்நானத்திலே கொலோசெயிலிருந்த சகோதரர்கள் இயேசுவோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் ***அவரோடே கூட எழுந்தவர்களாகவுமிருந்தனர்.*** *"அவரோடேகூட எழுந்தவர்களாகவும்" என்ற வார்த்தை (sunēgerthēte, என்பதன்) மொழிபெயர்ப்புச் சொல், இது ஒரு கடந்தகால முற்றுவினை செயல்பாட்டுக் குறிப்பு, ஒரு செயலின் நிறைவை சுட்டிக் காட்டுகிறது. இதே வார்த்தை 3:1லும் எபேசியர் 2:6லும் காணுகிறது. அவருடைய அடக்கம் பண்ணுதலிலும் உயிர்த்தெழுதலிலும் ஞானஸ்நானத்தின் மூலம் பங்கு பெற்ற இந்த சகோதரர்கள், அவர் மூலமாக புதிய ஜீவனைப் பெறுவது மூலமாகவும் பங்கு பெற்றனர்.*

இது அவர்களுடைய ***விசுவாசத்தினால்*** *(pistis) சாத்தியமாயிற்று கொலோசெயரில் "விசுவாசம்" எனும் வார்த்தையை கடைசியாக பயன்படுத்தின இடம் இது. (மேலும் 1:4, 23; 2:5, 7லும் காணப்படுகிறது.) இங்கே குறிப்பிடப்படுகிற விசுவாசம் என்னும் வார்த்தையைக் குறித்த அநேக கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டியுள்ளது.*

(1) ***தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே*** *எனும் சொற்றொடரில், பிஸ்டிஸ் எனும் வார்த்தை "விசுவாசம்" என்பதற்குப் பதிலாக தேவனுடைய செயலின் "உண்மைத்தன்மை" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டுமா? பிஸ்டிஸ் என்ற வார்த்தை ஏறத்தாழ "உண்மையாயிருத்தல்" (விசுவாசமாயிருத்தல்) எனும் பொருளில் ஒருபோதும் மொழிபெயர்க்கப்படவில்லை.* KJV *யில் "விசுவாசம்" என்று 239 முறை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, மேலும் "நிச்சயம்," "மெய்ப்பற்று," மற்றும் "நம்புதல்" ஆகியன தலா ஒருமுறை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது - ஆனால் "உண்மையாயிருத்தல்" எனும் பொருளில் ஒருமுறை கூட மொழிபெயர்க்கப்படவில்லை.* NASB *யில் "விசுவாசம்" என்று 238 முறை சொல்லப்பட்டுள்ளது, "நிரூபணம்" என்று ஒரு முறையும், "உண்மை யாயிருத்தல்" என்று மூன்று முறையும் - மத்தேயு 23:23; ரோமர் 3:3; மற்றும் கலாத்தியர் 5:22 ஆகியவைகளில் காணுகிறது. மத்தேயு 23:23லும் கலாத்தியர் 5:22லும் "விசுவாசம்" என்பதைக் காட்டிலும் "உண்மையாயிருத்தல்" (எனும் பொருளில்) என்பது சிறப்பான மொழிபெயர்ப்பு என பரிசீலிப்பது ஏன்? 2 பேதுரு 1:5ன்படியும் இந்த வசனப்பகுதிகளிலும் "விசுவாசம்" என்பது கிறிஸ்தவ ஒழுக்கமாக பேசப்படவில்லையா?*

இப்பொழுது ரோமர் 3:3ஐப் பார்ப்போம். "சிலர் விசுவாசியாமற்போனாலும் என்ன? அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமோ?" இந்த வசனத்தில் கிரேக்க வார்த்தை நியாயமாய் "உண்மையை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; ஆகிலும், விசுவாசம் என்றே இதன் பொருளாக இங்கே அதிகமாய்ப் பேசப்பட வேண்டும். Barclay M. Newman *மற்றும்* Eugene A. Nida *ஆகியோர், இந்தக் கேள்வியை, "இதினாலென்ன தேவன் மேல்வைக்கும் விசுவாசம் பயனற்றதா? என்று கேட்க சாத்தியமுண்டு, ஆகிலும் இன்றைய எந்த மொழிபெயர்ப்பும் பவுலின் கேள்வியை இப்படியொரு அர்த்தத்தில் எடுத்துக் கொள்வதில்லை" என்று எழுதினர்.[23] ஒருவேளை, நியூமேன் மற்றும் நிடா 1973ல் இதை எழுதியபோது, 1971ல் எழுதப்பட்ட மொழிபெயர்ப்புப் பற்றி பிரசித்தமாக அறியாமலிருந்திருக்கலாம், அதில் ரோமர் 3:3 வருமாறு மொழிபெயர்க்கப்பட்டிருந்தது: "அவர்களுடைய விசுவாசமின்மை தேவன் மேல் வைக்கும் விசுவாசத்தை பயனற்றதாக்கியதா?"* (LB).

ரோமர் 3:3ல் சொல்லப்படுகிற "உண்மை" சிறப்பான மொழிபெயர்ப்பல்ல, எழுவாய் பொருளில் பொதுவாக "... ருடைய விசுவாசம்" என்பது "... ல் விசுவாசம்" என்று மொழிபெயர்க்கப்பட வேண்டும். "இதினாலென்ன தேவன் பேரில் வைக்கும் விசுவாசம் பயனற்றது என்று பொருள்படுமா?" என்பதைக் காட்டிலும் வித்தியாசமான மொழிபெயர்ப்பை எதுவும் கோருவதில்லை. சிலருடைய அவிசுவாசம் தேவன் பேரில் சிலர் கொண்டுள்ள விசுவாசத்தை மதிப்பற்றதாக்குவதில்லை என்று பவுல் சொன்னார்.

பொதுவான விதிப்படி, சம்பந்தப்பட்ட வசனப்பகுதி விதி விலக்காயிராதபட்சத்தில் சாதாரண புழக்கத்திலுள்ள வார்த்தையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். பிஸ்டிஸ் எனும் (மூலபாஷை) வார்த்தையை எந்த வசனப் பகுதியிலும் "விசுவாசம்" என்பதைக் தவிர வேறு வகையில் மொழிபெயர்க்கும்படி கோருவதில்லை. 2:12லும் பிஸ்டிஸ் என்பதை "உண்மையுள்ள" என்று மொழிபெயர்க்கப் பயன்படுத்தக் கோருவதில்லை, ஆகையால், "தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசம்" என்பது நிறுத்தி வைக்கப்பட வேண்டும். சில மொழிபெயர்ப்புகளில் மட்டுமே, அப்படி எதுவும் இருந்தால், பூர்வீக மொழிபெயர்ப்புகளோ அல்லது இன்றைய மொழிபெயர்ப்புகளோ பிஸ்டிஸ் என்று வசனம் 12ல் கூறப்படுவதை "உண்மையை" என்று மொழிபெயர்த்திருக்கின்றன.

(2) இயேசுவின் உயிர்த்தெழுதல் "தேவனுடைய செயலுக்கு" எதிரானதா (ஒன்றை மறுபடியும் மறுபடியும் சொல்லுதல் அல்லது மற்றொன்றை விளக்கப்படுத்துதல்)? அப்படியிருக்குமானால், ஞானஸ்நானம் பெறுபவருக்கு தேவனுடைய வல்லமையின் செயலால் கொடுக்கப்படும் புதிய ஜீவன் மேல் விசுவாசத்தை வைக்காமல், இயேசுவின் உயிர்த்தெழுதலின் மேல் விசுவாசத்தை வைத்தல் என்று பொருள்படும். இதை A. S. Peake *சொன்னதாவது,*

> *...பிற இடங்களில் பிஸ்டிஸ்க்குப் பின்னணியில் ஆறாம் வேற்றுமை உருபு, விசுவாசிக்கிற நபரை அது குறிப்பிடாத பட்சத்தில், அது விசுவாசத்தின் பயனிலையைக் குறிப்பிடுகிறது. ஹாஃப்மேன் t. ener. என்பதை ஆறாம் வேற்றுமைக்கு எதிராகக் காணுகிறார், அதாவது அவர் சொல்லுவதன் பொருள், "தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தை" குறிப்பிடுவதாயிருக்கும், என்பது கேள்விக்கு இடமளிக்காததாயிருக்கும். ஏனெனில் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலை நோக்கிய விசுவாசம் நடத்தப்படும். ஒப்பிடுக ரோமர் 4:24 நம்முடைய சுய வாழ்க்கையிலும் ஆவிக்குரிய அனுபவத்தைக் கொடுப்பதால், அவர் விசேஷமாக சித்தரிக்கப்படுகிறார். ஆகவே நம்முடைய ஞானஸ்நானம் எந்த அடையாளமுமற்றதல்ல, அது உண்மையாக ஆவிக்குரிய அடக்கம் பண்ணப்பட்ட கிறிஸ்துவுடனே கூட உயிர்த்தெழுதலுமாகும்.*[24]

Peake, *குறிப்பிடுகிறபடி, வசனம் 12 "விசுவாசத்தையும்" "தேவனுடைய செயலையும்" ஒன்றாக முன்வைப்பதில்லை. மாறாக, "விசுவாசமானது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழும்பப் பண்ணின தேவனுடைய செயலின் மேல்" வைக்கும் படி வழிநடத்துகிறது. இந்த விசுவாசம் தேவனுடைய செயலின் மேல் வைக்கப்படுகிறது "அவர் கிறிஸ்துவை எழுப்பின செயல் நம்முடைய சொந்த ஆவிக்குரிய அனுபவத்திலும் கிரியை செய்யக் கூடியதாயிருக்கிறது."*

(3) Tēs pisteōs எனும் சொற்றொடர் "... ன் விசுவாசம்" அல்லது "...ல் விசுவாசம்" என்று மொழிபெயர்க்கவேண்டுமா? தாயெர் 2:12 ஐ பயனிலை ஆறாம் வேற்றுமை என சேர்த்துப் பார்த்தார், "ஆறாம் (வேற்றுமை) பயனிலை (ஒன்றில் வைக்கும் விசுவாசம்)."[25]

F. Wilbur Gingrich *மற்றும்* Frederick W. Danker *பவுலின் சொற்றொடரை*

மொழிபெயர்த்து *"தேவன் மேல் வைக்கும் விசுவாசம், நம்பிக்கை, உறுதியான நம்பிக்கை"* என விவரித்தார். பிறகு இக்கருத்து பயன்படுத்தப்பட்டுள்ள வசனப் பகுதிகளைக் சுட்டிக்காட்டிய பின்பு (உதாரணமாக, மாற்கு 11:22), அவைகள் கொலோசெயர் 2:12க்கு இந்த மொழிபெயர்ப்பைக் கொடுத்தன: *"... அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின, தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசம்."*[26] டேன்கர் இதே வசனத்தின் இந்தப்பகுதியை 2000ல் மொழிபெயர்த்தபோது ஒத்த கருத்தாகவே மொழிபெயர்த்தார்.[27]

பெரும்பாலான விளக்கவுரை எழுத்தாளர்கள் *dia tēs pisteōs* என்ற இந்தச் சொற்றொடரை ஆய்வு செய்து, ஒரு பயனிலை ஆறாம் வேற்றுமைச் சொல்லாகவே பார்க்கின்றனர்.[28] இப்படியாக சொற்றொடர் "... ல் இருக்கும் விசுவாசம்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

(4) ஜனங்கள் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது தேவனுடைய செயல்கள் மேல் தங்களுடைய விசுவாசத்தை வைக்கலாமா? ஆம். ஞானஸ்நானம் பண்ணப்படும் ஒருவர் தேவனுடைய வல்லமையான செயல்கள் மேல் விசுவாசத்தை வைக்க வேண்டும் - அந்த வல்லமை இயேசுவை எழுப்பின அதே வல்லமை - அவருக்கு புதிய ஆவிக்குரிய ஜீவியத்தைக் கொடுக்கும். அவர் ஞானஸ்நானம் பண்ணப்படும் போது, அதில் அவர் இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுகிறார், அப்பொழுது அவருக்குப் புதிய ஜீவன் அளிக்கப்படுகிறது. இது ஞானஸ்நானம் பெறுகிற நபர் தேவனுடைய செயலின் மேல் விசுவாசத்தை வைத்து, அவர் தன்னை ஆவிக்குரிய விருத்தசேதனம் செய்து ஆவிக்குரிய முறையில் ஜீவனைப் பெறவும் இது நடப்பிக்க முடியும் என விசுவாசித்தால் மட்டுமே தேவன் இதைச் செய்ய முடியும். அவர் இயேசுவை தமது வல்லமையுள்ள செயலின்படி எழுப்பியதின் அடிப்படையில் உறுதியாக நம்பமுடியும். மார்வின் வின்செண்ட் குறிப்பிடுகையில், " 'தேவனுடைய செயலின் விசுவாசம்' அதாவது, 'தேவன் செயல்படுகிற விசுவாசமல்ல, ஆனால் தேவனுடைய செயலில் உங்களுக்கு இருக்கிற விசுவாசம்' ... கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் நடப்பிக்கப்பட்டது என்றார்."[29]

ஞானஸ்நானம் பண்ணப்படுபவர் NIV, யில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது போல், தேவனுடைய "வல்லமையில்" விசுவாசம் வைப்பது மாத்திரமல்ல, தேவனுடைய "செயலின்" மேலும் *(energeia)* விசுவாசம் வைக்க வேண்டும்.[30] "வல்லமை" என்பதை "அதிகாரம்" எனும் பொருளில் பவுல் பயன்படுத்தியிருந்தால், அவர் அதை கிரேக்க வார்த்தையாகிய *exousia* ("செயல்படும் உரிமை அல்லது அதிகாரம்") அல்லது *dunamis* ("செயல்பட ஏதுவான திராணி அல்லது பலம்") ஆகிய வார்த்தைகளை பயன்படுத்தியிருப்பார். மாறாக, அவர் *energeia,* எனும் வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார், இதன் பொருளை செயலின் வல்லமை. மேலும் இது பெரும்பாலான மொழிபெயர்ப்புகளில் "செயல்கள்" என்றே குறிப்பிடப்படுகிறது. J. இத்தேல் ஜோன்ஸ் குறிப்பிடும்போது, "தேவனுடைய செயலின் மேல் 'விசுவாசத்தின் மூலம்' (RV) அந்தப் பொருளும் மதிப்பும் இந்த சமய சடங்கைக் கொடுக்க முடியும் என்றார்"[31] வில்லியம் பர்கலே இதை இப்படியாக எழுதுகிறார்: "தேவன் தமது வல்லமையின் தாக்கத்தினாலே இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பியிருப்பாரேயானால் தனக்கும் அவர் அப்படிச் செய்வார் என்று ஒருவர்

விசுவாசித்தால் மட்டுமே இது சம்பவிக்கும்.”[32]

Herbert M. Carson *அவர்கள் விளக்கமளிக்கையில்,*

> *கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் தேவனுடைய வல்லமையின் செயல் விளங்கப் பண்ணப்பட்டிருப்பது, விசுவாசியின் நம்பிக்கையின் உறுதி வெளிப்பட காரணமாயிற்று. எனவே விவாதம் இப்படியாகத் தொடர்கிறது: கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற உண்மையை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். இதுவே தேவனுடைய வல்லமை விளங்கப்பண்ணப்பட்டதற்கு அடையாளம், மற்றும் அவருடைய வல்லமையின் மேல் சார்ந்திருத்தல் என்பது கிறிஸ்துவுடனே உயிர்த்தல் என்பது கிறிஸ்துவுடனே உயிர்த்தெழுதலில் ஆவிக்குரிய ஐக்கியம் கொண்டிருப்பது என்ற அறிவை அடைவது.*[33]

பிற விளக்கவுரையாளர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்:

> *கிரைஸோஸ்டம் என்பவர் குறிப்பிடுகிறார்: “தேவன் உங்களை உயிர்த்தெழப்பண்ணுவார் என்று நீங்கள் விசுவாசித்தபடியினால், நீங்கள் எழுப்பப்பட்டீர்கள்” ... அது தேவன் கிறிஸ்துவை எழுப்பினார் என்ற விசுவாசம் மட்டுமல்ல, மாறாக தேவன் மனித தன்மையில் கிரியை செய்கிறார் என்கிற விசுவாசம், அவர் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழும்பப் பண்ணினது போலவே, ஜீவனுக்கென்று (நம்மையும்) எழுப்புகிறார், இதுவே கிறிஸ்துவை எழுப்பியதன் விளைவு.*[34]

> *ஆக கிறிஸ்தவ ஞானஸ்நானம் ஆவிக்குரிய விருத்தசேதனத்திற்கு பதிலாகிறது அது சாதனையாக்கப்பட்ட கிறிஸ்துவின் மீட்பை தனி நபரின் ஏற்புடமையை ஞானஸ்நானம் பெறுகிற நபர் பகுதியில் அறியச் செய்கிறது. இதன் பொருள் என்னவெனில் விசுவாசத்தின் இன்றியமையாத்தன்மை சமயச் சடங்கிற்கு நேரடியாக வழிநடத்துவதில்லை, மாறாக “கிறிஸ்தவ சமயச்சடங்கின்” செயல்களின் மூலம் கிரியை நடப்பிக்கும் தேவனிடத்தில் திருப்பப்படுகின்றனர், இது கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால் வரும் இரட்சிப்பாகிய பலனை அளிக்கத்தக்கத்தாக விசுவாசிகள் அந்த தெய்வீக ஜீவியத்திற்குள் இடம் பெறும்படி, மரித்து பின்பு எழுப்பப்படுகின்றனர், இதிலே பாவம் வெற்றிகொள்ளப்படுகிறது (ரோமர் 6:7, 9-11).*[35]

> *வசனம் 12ன் மையப்பகுதி இப்படியாக விளக்கப்படுத்தப்படுகிறது “நீங்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டபொழுது, தேவன் மறுபடியும் உங்களை ஜீவனுள்ளவர்களாக்கியுள்ளார், அது அவருடைய, வல்லமையின்படியே, அவர் உங்களை எழுப்பி, கிறிஸ்துவின் செயல்களுக்கு ஒப்பாக்கினார். இது தேவனுடைய வல்லமையின் மேல்வைக்கும் உறுதியான நம்பிக்கையின் விளைவாக வருகிறது.”*[36]

> *தேவன் பாரபட்சமின்றி கிரியை நடப்பிக்கிற விசுவாசத்தின் கோரிக்கை எந்த மனுஷராயினும் ஞானஸ்நானம் மட்டுமே என்று காட்டுவது தவறு, அல்லது ஞானஸ்நானத்திலே தேவன் என்ன செய்கிறார் என்று*

புரிந்து கொள்வதும் ஞானஸ்நானத்திற்குப் பின்பு சரியான பொறுப்பை நிறைவேற்ற ஆதாரங்களை எதிர்பார்ப்பதும் தவறு.[37]

எனவே தேவன் உருவகப்படுத்தப்படும் விதம்: ஏனெனில் முக்கூற்று முடிவுபடி, அவர் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்: தேவன் கிறிஸ்துவை எழுப்பினாரா, பிறகு அவர் எனக்கும் புதிய ஜீவனைக் கொடுப்பார் (ஒப்பிடுக எபேசியர் 1:19, 20). "அது தேவனுடைய அப்படிப்பட்ட செயல்கள்" மூலம், துல்லியமாக நிறைவேறுகிறது.[38]

ஞானஸ்நானம் பண்ணப்படும் ஒருவருடைய விசுவாசம் தன்னை ஞானஸ்நானப்படுத்துபவரிலோ, தண்ணீரிலோ, (ஞானஸ்நானமாகியே) செயலிலோ, அல்லது முற்றிலும் இயேசுவின் உயிர்த்தெழுதலில் மட்டுமோ இல்லை, விசுவாசம் தேவனை நோக்கி நடத்தப்பட வேண்டும், புதிய கிறிஸ்தவனின் ஜீவியத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மாற்றங்கள் நடந்தேறும் என்ற உறுதியான நம்பிக்கையை அது கொடுக்கிறது. தேவன் இப்படிச் செய்ய முடியும், செய்வார் என்கிற விசுவாசம் இயேசுவை எழுப்பின செயலின்மேல் அடிப்படையாக அமைந்தது. இப்படிப்பட்ட விசுவாசத்தை ஒருவர் கொண்டிருந்தாலொழிய தேவன் இதை செயல்படுத்துவார் என்று ஒருவர் எதிர்பார்க்க கூடாது.

தேவனுடைய வல்லமையின் செயலின் மேல் உள்ள விசுவாசத்தைக் கொண்டு இயேசுவோடே கூட அடக்கம் பண்ணப்பட்டு எழுப்பப்பட்டிருக்கிறபடியால் அது மூன்று விளைவுகளைக் கொடுக்கிறது; விருத்தசேதனம், புதிய ஜீவன் மற்றும் பாவ மன்னிப்பு. ஞானஸ்நானத்தின்போது, விருத்தசேதனம் பண்ணப்படாதவர்கள் ஆவிக்குரிய விருத்தசேதனத்தையும், பாவத்தில் மரித்திருந்தவர்கள் ஜீவனையும், மீறுதல்களுக்கான மன்னிப்பையும் அடைகிறார்கள். வசனம் 12, 13ல் பவுல் முன்னேற்றச் சிந்தையை முன் வைத்ததாக Eduard Schweizer சரியாகச் சொன்னார், "அவர்கள் ஏற்கனவே பெற்றுள்ள உயிர்த்தெழுதலின் ஜீவன் என்றால் உண்மையில் எதைக் குறிக்கிறது என்பதை பின்வரும் வாக்கியம் விளக்கப்படுத்துகிறது: பாவமன்னிப்பின் அடிப்படையில், விருத்தசேதமின்மை யிலிருந்து விடுதலையாக்கப்பட்டதை சுட்டிக்காட்டுகிறது."[39]

"உங்கள் பாவங்களினாலேயும், மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும்" (2:13அ)

கொலோசெயர்கள் மன்னிக்கப்படுவதற்கு முன், அவர்கள் பாவத்திலே மரித்தவர்களாயிருந்தனர். பவுல் ரோமர்களிடம் "... பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன் ... பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது" (ரோமர் 7:9ஆ, 11), என்று சொன்னார். யாக்கோபு, "பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்" என்று எழுதினார் (யாக்கோபு 1:15ஆ). எல்லா ஜனங்களையும் போல கொலோசெயர்களும், பாவஞ் செய்தமையால் தங்கள் பாவங்களினாலே மரித்தவர்களாயிருந்தார்கள் (ரோமர் 3:23). தங்களுக்கு பாவமன்னிப்பையும் புதிய ஜீவனையும் கொடுப்பார் என்ற தேவனுடைய செயலின் மேல் விசுவாசத்தை வைத்து, ஞானஸ்நானம் பெற்றபோது,

அவர்களுடைய நிலைமை மாறியது.

பவுல் மாம்ச மரணத்தைக் குறித்து இங்கே பேசவில்லை. பாவங்களினாலே ***மரித்தவர்களாயிருந்தீர்கள்****, என்று அவர் சொல்லுவதன் பொருள், கிறிஸ்துவுக்குள்ளான ஜீவனிலிருந்து பிரிக்கப்பட்டார்கள் (எபேசியர் 4:18), இது பாவத்தின் விளைவால் வந்தது. இயேசுவே ஆவிக்குரிய ஜீவியத்தின் ஊற்றாக இருப்பதால் (1 யோவான் 5:12), அவருக்குள் இல்லாதவர்கள் ஆவிக்குரிய ரீதியில் மரித்தவர்களாவர். ஒருவர் கிறிஸ்துவிலுள்ள ஜீவனைப் பெற்றுக் கொள்ள (1 யோவான் 5:11), ஒரு விசுவாசிக்கிற நபர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறவேண்டும் (ரோமர் 6:4; கலாத்தியர் 3:27). வசனம் 12, 13ல் ஒரு நபர் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது ஒரு புதிய ஜீவனுக்குள் பிரவேசிக்கிறார் மற்றும் ஆவிக்குரிய ஜீவனற்ற நிலைமைக்கு தப்புவிக்கப்படுகிறார் என்பது தெளிவாக பவுலால் போதிக்கப்பட்டிருக்கிறது.*

வசனம் 13 kai humas ("உங்கள் ... யும்") என்று தொடங்குகிறது, இது வசனம் 12 உடன் தொடர்பு உடையதாகக் காட்டுவது, சம்மந்தப்பட்டதின் செய்தி தொடர்ச்சிக்கு தனி பத்தி அவசியமில்லை. NIV *மற்றும்* TNIV *மொழிபெயர்ப்பு ஆகியன முறையற்ற ரீதியில் வசனங்கள் 12, 13ஐ வேறுவேறாக பிரித்து வசனம் 12ன் முடிவில் வாக்கியத்தை முற்று பெற்றது போல் காட்டுகிறது. இது ஒரு மொழிபெயர்ப்புச் செய்வோரின் முடிவு; இது கிரேக்க வசனத்தின் அமைப்புப் படியான அடிப்படையைக் கொண்டதல்ல. கிரேக்கப் பிரதியில், வசனம் 12ன் முடிவில் ஒரு கோடும் அதின் மேல் ஒரு புள்ளியும் வைக்கப்பட்டுள்ளது. "காள்புள்ளி, கோட்டிற்கு மேல் காணப்படும் போது ... ஆங்கில காள்புள்ளி மற்றும் அரைப்புள்ளி ஆகியவை ஆங்கிலத்திலிருந்து பயன்படுத்தப்படுபவை."[40]*

வசனங்களைப் பிரித்து புதிய பத்திபோல் காட்டுவது வசனம் 12ன் கருத்துத் தொடர்ச்சியை 13ல் விடுபடுவது போல் தோன்றும், இரண்டு வாக்கியங்களுக்குமிடையே தொடர் இசைவு விடுபடும். பத்தியாகத் தொடங்கிய வசனங்களை வேறு மொழிபெயர்ப்புகள் பிரிப்பதில்லை (காண்க NASB; KJV; NKJV; ASV; RSV; NRSV). NAB *மொழிபெயர்ப்பு இந்த இரண்டு வசனங்களுக்குமிடையே ஒரு பலமான இணைப்பை, "... அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே ... உங்கள் பாவங்களினாலேயும் ... மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து" என்று மொழிபெயர்ப்பில் தொடர்ச்சியை ஏற்படுத்துகிறது.* NASB *வேதாகமத்தில் எவ்வளவாய் வலியுறுத்தக் கூடுமோ அவ்வளவாய்: "... அவரை மரித்தோரிலிருந்து தேவன் எழுப்பினார். உங்கள் பாவங்களினாலே மரித்தவர்களாய் (அப்பொழுது) இருந்தீர்கள்" என்று சொல்லப்படுகிறது.*

"பாவங்களினாலே" என்பதற்கு பலதரப்பட்ட பதங்களை (paraptōmata) இயேசு பயன்படுத்தினார் (மத்தேயு 6:14, 15), பவுலும் பயன்படுத்தியுள்ளார் (ரோமர் 4:25).[41] இந்த வசனப்பகுதிகளில் "தப்பிதங்கள்" எனும் வார்த்தையும் (சில மொழிபெயர்ப்புகளில், "அக்கிரமங்கள்" அல்லது "மீறுதல்கள்") பயன்படுத்தப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டுக்குப் புறம்பே, இந்த வார்த்தை "ஒருவர் தவறாகப் படியெடுத்து வைத்து நடையில் தடுமாற்றமடைதல்" எனும் பொருளில் பயன்படுத்தப்படுகிறது.[42] பவுல் அடிக்கடி "பாவங்கள்" என்று பன்மையில் பயன்படுத்தியுள்ளார்.

உங்கள் என்ற பிரதி பெயர்ச்சொல்லைப் பவுல் பயன்படுத்தி துவங்கிய நிலையில், அதை "... அக்கிரமங்களெல்லாவற்றையும் *உங்களுக்கு* (ஆங்கிலத்தில் *நமக்கு*) மன்னித்து" என்று முடிக்கிறார் (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது). இந்தச்சொற்றொடர் மிக புராதனமான கிரேக்கப் பிரதிகளில் சான்றளிக்கப்படுகிறது. (KJV மற்றும் NKJV மொழிபெயர்ப்புகளில் "உங்களுடைய அக்கிரமங்களெல்லாவற்றையும் மன்னித்து" என்று காணப்படுகிறது.) "நம்முடைய" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதன் மூலம் எழுத்தாளரும் கூட இயேசுவின் அடக்கம் உயிர்த்தெழுதலின் சாயலில் ஞானஸ்நானத்தில் பங்கு பெற்ற போது தனது அக்கிரமங்களும் மன்னிக்கப்பட்டதாக தன்னையும் சேர்த்துக் கொள்கிறார். இயேசு அனனியாவை பவுலிடம் அனுப்பி அவர் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லும்படி செய்தார் (நடபடிகள் 9:6); மேலும் அனனியா, "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று சொன்னான் (நடபடிகள் 22:16). பவுலும் கொலோசெயர்களும் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு புதிய ஜீவனை ஒரே மாதிரியாகப் பெற்றுக் கொண்டார்கள்.

கொலோசெயர்கள் ஞானஸ்நானத்தின் போது இயேசுவிலே பரிபூரணமாக்கப்பட்டிருந்தார்கள் (2:10), அப்பொழுது அவர்கள் ஆவிக்குரிய விருத்தசேதனத்தைப் பெற்று, ஆவிக்குரிய முறையில் பிழைத்திருக்கவும் அவர்களுடைய அக்கிரமங்களெல்லாம் மன்னிக்கப்படவும் செய்யப்பட்டனர். அவர்கள் ஞானஸ்நானம் பெறும்போது தேவன் இதைச் செய்கிறார் என்னும் விசுவாசம் இயேசுவை அவர் வல்லமையால் எழுப்பினார் என்பதன் அடிப்படையில் இருந்தது. இயேசுவின் மரித்த சரீரத்தில் தேவன் புதிய ஜீவனைக் கொடுத்திருக்கக் கூடுமானால், பிறகு அவர் அவர்களையும் ஆவிக்குரிய மரணத்திலிருந்து எடுத்து புதிய ஆவிக்குரிய ஜீவனை அவர்களுக்கும் கொடுக்க முடியும் என்று விசுவாசித்தார்கள். அவருடைய அடக்கம் பண்ணுதலிலும் உயிர்த்தெழுதலிலும் ஞானஸ்நானத்தில் பங்கு பெற்றபோது இதுதான் நடந்தது.

யூதருடைய யூகத்தில், விருத்தசேதனம் பெறாத யூதர்களும் புறஜாதிகளும் தேவனுக்கு அந்நியரும் நம்பிக்கையற்றவர்களுமாயிருந்தனர் என்று கருதப்பட்டனர் (எபேசியர் 2:11, 12). அவர்கள் தேவனுடைய ஜனங்களாக யூதர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கிறிஸ்தவ யுகத்தில், ஆவிக்குரிய முறையில் விருத்தசேதனம் பெறாதவர்கள் தேவனுடைய ஜனங்களாக ஏற்புடையவர்களல்ல. ஆவிக்குரிய விருத்தசேதனமானது ஞானஸ்நானத்தின்போது பெறப்படுவதால் ஞானஸ்நானம்தான் ஒரு நபருடைய ஆவிக்குரிய நிலையை மாற்றுகிறது. விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தின் மூலம், ஒரு நபர் தேவனுடைய பிள்ளையாக மாறுகிறார் (கலாத்தியர் 3:26, 27).

"அவரோடே கூட உயிர்ப்பித்து அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து" (2:13ஆ)

பவுல் கொலோசெயருக்குக் சொன்ன வாக்கியத்தின்படி ஞானஸ்நானத்தின் முறையான மதிப்பீடு அதைப் பெறுபவரின் விசுவாசத்தைச் சார்ந்திருக்கிறது.

இயேசுவை எழுப்பின தேவனுடைய வல்லமையான செயல் தனக்கும் புதிய ஜீவனையும் பாவமன்னிப்பையும் கொடுக்க முடியும் என்று அவர் விசுவாசிக்க வேண்டும். இயேசுவை உயிர்த்தெழப் பண்ணின காரியத்தில் ஆற்றப்பட்ட தேவனுடைய செயல்களின் மேலும் ஞானஸ்நானம் பெறும் நபருக்கு அவர் என்ன செய்யக் கூடும் என்பது பற்றியும் விசுவாசம் இல்லாதபட்சத்தில் மாம்சப் பிரகாரமாக பெறும் ஞானஸ்நானம் வெறுமையானதும், எவ்வித மதிப்புமற்ற சடங்காசாரமாகும். தேவனுடைய செய்கைகளின் மேல் விசுவாசம் வைக்க ஞானஸ்நானம் பெறுபவர் தனது ஞானஸ்நானத்தின்போது தேவன் என்ன செய்கிறார் என்பதை அறிந்திருக்க வேண்டும். இந்த செயல்முறைகளில் தேவன் செய்வது என்ன? அப்போஸ்தலன் விளக்கமளித்துள்ளார், **உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து. அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு (நமக்கு) மன்னிக்கிறார்.** மாமிச இச்சைகளாகிய உணர்ச்சிகளை களைந்து போடுவதன் மூலம் ஞானஸ்நானம் பெறுகிற நபரை விருத்தசேதனம் பண்ணுகிறார், அவனை தேவன் ஆவிக்குரிய வகையில் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்து அவனுடைய பாவங்களை மன்னிக்கிறார்.

கொலோசெயருடைய வாழ்க்கையில் சில முக்கிய மாற்றங்கள், வசனங்கள் 11 லிருந்து 13 வரை சொல்லப்பட்டபடி நிகழ்ந்தன. ("கொலோசெயிலிருந்து கிறிஸ்தவர்களின் நிலை [2:11-13]" எனும் வரைபடத்தை காண்க.) தேவனுடைய வல்லமையான செயலால் உயிர்த்தெழுந்த இயேசு அவர்களுடைய மாம்ச உணர்வுகளை களைந்து போட்டு அவர்களுக்கு ஜீவனைக் கொடுத்து, அவர்களுடைய பாவங்களை மன்னிக்க முடியும் என்ற கொலொசெயர்களின் விசுவாசத்தால் இந்த மாற்றங்கள் நடந்தன.

"அவரோடே கூட உயிர்ப்பித்து" (*sunezōopoiēsen*) என்பது "ஒருவரோடுகூட பிழைத்திருக்கத்தக்க" என்ற வார்த்தையின் பொருள்,[43] இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ள ஒரே புதிய ஏற்பாட்டின் மற்றொரு வசனம் எபேசியர் 2:5ல் காணப்படுகிறது. குறிப்பிடத்தக்க பதமாக பயன்படுத்தப்பட்டுள்ள இந்த வார்த்தை, கடந்த காலத்தில் நடந்து முடிந்த நிகழ்ச்சியை குறிப்பிட்டு பவுல் பேசுகிறார். Peter T. O'Brien பின் வருமாறு எழுதினார்,

> கிறிஸ்துவுடனான கொலோசெயரின் உயிர்த்தெழுதல் *ஏற்கனவே* நிகழ்ந்த ஒன்று: அது கடந்த கால முற்றாக, மனித மீட்புக்காக மனதிட்பத்துடன் மனிதன் தெய்வத்தினுடைய மனதிட்பத்தோடு இணைந்து செயல்படும் தன்மை ("நீங்கள் உயிர்ப்பிக்கப்பட்டீர்கள்"). இது முழுமையாய் உணரப்பட்டது ... ; எதிர் கால அடிப்படைக் கொள்கை அந்த ஜீவன் இப்பொழுது தேவனில் கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கிறது என்று குறிப்பிடப்படுகிறது (3:3, 4), அது மரித்தோரின் உயிர்த்தெழுதல் போன்றதல்ல.[44]

வசனங்கள் 12, 13ல், பவுல் *சன்* (*sun*) என்று துவங்கும் மூன்று தொகுப்பு வினைகளை பயன்படுத்துகிறார் (அதன் பொருள் "கூட" அல்லது "ஒன்றாக"). ஞானஸ்நானத்திலே கொலோசெயர்கள் "அவரோடே கூட" அடக்கம் பண்ணப்பட்டு எழுப்பப்பட்டார்கள். இப்பொழுது நாம் மூன்றாவது *சன்* என்ற வார்த்தைக்கு முன் சேர்க்கை என்ற ரீதியில் வருகிறோம். அது முதல்

இரண்டு வார்த்தைகளின் பிரயோஜனமான விளைவைக் கொண்டுவருவது: அவைகள் "அவரோடே கூட உயிர்ப்பிக்கப்பட்டோம் என்பதையும் உட்படுத்துகிறது." ஏனெனில் மாம்சப் பிரகாரமாக பகிர்ந்து கொள்ளப்பட்ட இயேசுவோடு கூட அடக்கம் பண்ணப்படுதலையும் உயிர்த்தெழுதலையும் ஞானஸ்நானத்திலே பங்கு பெறும் காட்சி, அவர்கள் மேலும் - ஆவிக்குரிய ரீதியில்- ஒரு புதிய ஜீவனையும் அவரோடேகூட பகிர்ந்து கொண்டனர். ஒரு காலத்தில் அவர்கள் ஆவிக்குரிய வகையில் விருத்தசேதனம் பண்ணப்படாமலும், பாவத்திலே மரித்தவர்களாகவும், தேவனிடத்தில் அந்நியமாக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர்; ஞானஸ்நானத்துக்குப் பின்பு, அவர்கள் ஆவிக்குரிய விருத்த சேதனத்தைப் பெற்றவர்களானார்கள், அதன் மூலம் அவர்களுடைய பாவங்கள் களையப்பட்டன. பாவத்தினால் தேவனிடத்தில் பிரிக்கப்பட்டிருந்த அவர்களின் நிலைமுடிவுற்றது. "திருமறைப்பொருளில் சொல்ல வேண்டுமானால், மனுஷருடைய பாவத்தினால் உடைந்து போன தேவனுடைய உறவு முறையை தமக்கும் மனுஷனுக்குமிடையிலே அவருடைய மீட்டமைப்பால் பாவமன்னிப்பு பிரதானமாயிற்று."[45]

உயிர்ப்பிக்கப்படுதல் என்று இங்கே குறிப்பிடப்படுவது எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் எதிர்கால உயிர்த்தெழுதலல்ல, மாறாக இது கொலோசெயர்கள் இயேசுவோடுகூட ஞானஸ்நானத்திலே பகிர்ந்து கொண்ட அனுபவத்தை குறிக்கிறது. கிறிஸ்துவோடு கூட உயிர்ப்பிக்கப்பட, அவர்கள் அவரோடு கூட அடக்கம் பண்ணப்பட்டு எழுப்பப்பட வேண்டியது அவசியமாயிற்று. பிறகு அவர்கள் அவரோடு கூட புதிய ஜீவனை பகிர்ந்து கொள்ள முடியும். முதலில் ஆவிக்குரிய மரணத்தை பாவத்தினிமித்தம் இயேசுவின் மரணத்துடன் அனுபவிக்காமல் ஒருவரும் புதிய ஜீவனைப் பெற இயலாது (ரோமர் 6:3, 4). புதிய ஜீவனைப் பெறுவதற்கு, ஞானஸ்நானம் பண்ணப்பட்ட ஒருவர் இருதய பூர்வமாக கீழ்ப்படிய ஒத்துழைக்கவும், உள்ளான மனுஷனில் சீர்திருத்தப்படவும் வேண்டும் (ரோமர் 6:4, 17, 18). ஒருவர் கிறிஸ்துவுடன் கூட ஞானஸ்நானத்திலே உயிர்ப்பிக்கப்படும் போது, புதிய ஜீவன் ஒரு நிகழ்கால நிஜமானதாகிறது.

வசனம் 13ன் பொருளடக்கத்தில் ஞானஸ்நானம் மற்றும் பாவமன்னிப்பு குறித்து மிக அதிகமாக தொடர்புடையதாக தெளிவாகப் பேசும்போது, சிலர் இந்த இரண்டையும் பிரித்துப் பேசமுயற்சிக்கின்றனர். இந்த முயற்சிகள் நியாயமற்றவை, ஏனெனில் ஞானஸ்நானமும் பாவமன்னிப்பும் பிரிக்க முடியாதவை. இந்தத் தொடர்பு நடபடிகள் 2:38ல் விசேஷமாகக் காணப்படுகிறது, அங்கே ஞானஸ்நானம் "உங்கள் பாவமன்னிப்புக்கென்று" [*"eis"*] சொல்லப்படுகிறது. நடபடிகள் 2:38ல் சொல்லப்படுகிற "... கென்று" *eis* என்பதை "ஏனெனில்" என்று சொல்லி திருப்திப்பட்டுக் கொள்கின்றனர். ஆகிலும் *eis* என்று இங்கே குறிப்பிடப்படும் பதமும் - அதே போல மாற்கு 1:4, லூக்கா 3:3லும் சொல்லப்படும் பதமும் - நோக்கத்தை சுட்டிக்காட்டுகிறது என்று எண்ணற்ற இலக்கணங்களும் அகராதிகளும் உறுதிப்படுத்துகின்றன. சமீபத்தில் வெளியிடப்பட்ட வால்டர் பாயுயரின் லெக்ஸிகன் மிக உயர்வாகப் பேசப்படும் வெளியீடு மறுபதிப்பினைச் செய்த ஃபிரட்ரிக் வில்லியம் டேன்கர் *eis* என்பதை "குறிக்கோள்களின் அடையாளம் என்றும்

உணர்வை பாதிக்கிற/தனிமைப்படுத்துகிற/பொருத்தமான தோற்றம் கொண்ட, ... க்குள், க்கு ... ஆகியவைகளுடன் பாவங்கள் மன்னிக்கப்படலாம் மத்தேயு 26:28; ஒப்பிடுக மாற்கு 1:4; லூக்கா 3:3; நடபடிகள் 2:38" என்று விளக்கப்படுத்துகிறார்.[46]

விளக்கத்தின்படி, கிரேக்க வார்த்தையாகிய *eis* ஞானஸ்நானத்தோடு தொடர்புடைய உட்கருத்தில் பாவமன்னிப்புடன், "ஆதலால்" என்றும், "நோக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றும், அல்லது "பெறும்படி" என்றும் விளக்கமளிக்கப்படுகிறது. இதில் தெளிவான முடிவுரை என்னவெனில் ஜனங்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும், அதினால் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்ப்படும். பிற வசனப்பகுதிகள் இரட்சிப்பைப் பெற ஞானஸ்நானம் அவசியம் என்று போதிக்கின்றன (மாற்கு 16:16; 1 பேதுரு 3:21). ஒரு தேவ தூதன் இயேசு தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றார். "இரட்சிப்பார்" என்பது பாவமன்னிப்பைக் குறிக்கிறது என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டவர்கள் தங்களுடைய பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற்றிருக்கிறார்கள், ஒருவரின் ஞானஸ்நானத்தின் போது சகல பாவங்களும் மன்னிக்கப்படும் என்ற கருத்து புதிய ஏற்பாட்டின் பிற வசனப்பகுதிகளுக்கு முரண்படாமல் பாவம் மன்னிக்கப்பட ஞானஸ்நானம் அவசியம் என்பதைக் காட்டுகிறது.

கொலோசெயரின் **அனைத்து** தப்படிகளும் **மன்னிக்கப்பட்டன.** இயேசு அளிக்கும் பாவ மன்னிப்பு ஏதோ ஒரு பகுதியல்ல ஆனால் முழுமையானது, அவர்கள் செய்த சகல பொல்லாங்கான செயல்களையும் மூடும். இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் மன்னிக்கும் (1 யோவான் 1:7) அது அவருக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு அளிக்கப்படுகிறது (எபிரெயர் 5:9). பெந்தெகோஸ்தே நாளில் இதைத்தான் பேதுரு யூதர்களுக்கு வாக்களித்தார் (நடபடிகள் 2:38) மேலும், கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்துகிறவனும் கொலை செய்கிறவனுமாயிருந்த பவுல், தமஸ்குவுக்குப் போகிற வழியில் வாக்களிக்கப்பட்டார் (நடபடிகள் 22:16). கொலோசெயர்கள் தங்களின் கடந்த கால பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விட்டதால் அவர்கள் நீதியுள்ள வாழ்கையை வாழ வேண்டுமென்பதில் அக்கரையின்றி வாழலாம் என்று பொருளல்ல. ஞானஸ்நானத்திற்குப் பின்பு செய்யும் பாவங்களுக்கு மன்னிப்பைத் தேட வேண்டும்.

புதிய ஜீவனுக்குள் பிரவேசிப்பது இயேசுவுக்காக பரிசுத்தமாய் வாழ்வதே. தேவனுடைய கிருபையின் மூலம் கிறிஸ்தவர்கள் மன்னிக்கப்படக்கூடும் என்பதினாலேயே தொடர்ந்து அவர்கள் பாவத்தில் நிலை நிற்கக் கூடாது (ரோமர் 6:1-6). பாவத்தில் நிலைத்திருப்பவர்கள் கிருபையின் ஆவியை (ஒருவேளை "சுபாவத்தை") நிந்திக்கிறவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களுக்கு காட்டப்படும் கிருபை அவர்கள் பாவஞ்செய்ய ஊக்கமளிப்பதற்கல்ல; அது பாவமற்ற வாழ்க்கையை வாழ முயற்சிப்போருக்கு அளிக்கப்படுகிறது (1 யோவான் 2:1, 2). ஒரு கலைக் கூத்தாடி கயிறின் மேல் நடக்கும் போது அந்தக் கயிற்றுக்குக் கீழே ஒரு பாதுகாப்பு வலையையும் கட்டிவைப்பார். அவர் கீழே விழ விரும்புவதில்லை, ஆனால் ஒருவேளை தவறி கீழே விழுவரானால் தன்னைத் தாங்கிக் கொள்ள அந்த வலை அவருக்குக்

தேவை. அது போலவே, தேவன் கிருபையை பாவமற்ற வாழ்க்கையை வாழ விரும்பும் கிறிஸ்தவர்களுக்கு ஒரு பாதுகாப்பு வலையாக அளிக்கிறார், ஆகிலும் சில வேளைகளில் பாவம் செய்து விடுகின்றனர்.

நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளிலிருந்து கிறிஸ்துவுக்குள்ளாக சுயாதீனம் 2:14)

14நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து.

"நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தை குலைத்து" (2:14அ)

குலைத்து "நடுவிலிராதபடிக்கு எடுத்தது," என்பதை நாம் புரிந்து கொள்ள ஏதுவாக, **எதிரிடையாகவும் விரோதமாகவும் இருந்த கையெழுத்து** எது என்பதை தீர்மானிக்க வேண்டும். *Cheirographon* எனும் வார்த்தை ("கடன் பத்திரம்") என்பது "கையினால் எழுதப்பட்ட பத்திரம், (குறிப்பாக) கடன் வாங்கினதற்கான சான்று, *கணக்கு, கடன் பதிவேடுகள்*" என்றெல்லாம் விளக்கப்படுத்தப்படுகிறது.[47] "கட்டளைகள்" என்பது தொகுப்பேடுகளிலிருந்து வருவது, "ஒரு கை கொள்ளப்பட வேண்டிய சட்டங்களையும் அல்லது விதிகளையும் ... ஒரு கோப்பாக அமைத்த *கட்டளைகள், தீர்மானங்கள், சட்டங்கள்* ஆகியவற்றின் தொகுப்பு."[48]

அநேக விளக்கவுரைகளும் மொழிபெயர்ப்புகளும் "கடன் பத்திரம்" என்பதை "கட்டளைகள்" என்றே குறிப்பிடுவதாக ஒத்துக்கொள்கின்றன. இது சரியென்றால், பிறகு "கடன் பத்திரம்" எனும் வார்த்தை கையெழுத்து வடிவத்தில் காணப்படும் கட்டளைகள் மற்றும் சடங்காச்சாரங்கள் ஆகியவற்றைக் குறிக்கிறது. இந்தக் காரியத்தில், NASB மொழிபெயர்ப்புபடி "கட்டளைகளைக் கொண்ட கடன் பத்திரம்" என்பது சரியாக இருக்கும்.

விளக்கவுரையாளர்கள் இந்த சொற்றொடரை வித்தியாசப்பட்ட வழிகளில் விளக்கம் அளிக்கின்றனர். வேறு பல கோணங்களில் சொல்லப்பட்டாலும், ஐந்து பெரிய விளக்கவுரைகள் காணுகின்றன: (1) பவுல் ஒரு பத்திரத்தைச் சுட்டிக் காட்டி, கொலோசெயரின் பாவக் கடன்களுக்கு எதிராக பதிவு பண்ணுகிறார். (2) குறிப்பிட்டது ஒரு பிராமசரி நோட்டு, பெயரிடப்பட்ட நிபந்தனைகளை கைக் கொள்ளுவதற்கான வாக்குறுதியை கையெழுத்திட்டு ஏற்றுக் கொள்ளுதல். (3) அவர் மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிற கொலோசெயருக்கு "எதிராக நிலைத்திருக்கும் சாட்சியாக கையெழுத்திடப்பட்ட கடன் பத்திரம்" என்று குறிப்பிட்டார்.[49] (4) சீனாய் மலையில் தேவன் இஸ்ரவேருக்குக் கொடுத்த நியாயப்பிரமாணம், அது முடிவுற்றது - அல்லது, உருவகமாக, மரித்தது - சிலுவையிலே ஆணியடிக்கப்பட்டு முடிவு பெற்றது என்று அவர் பொருள்படுத்துகிறார். (5) அவர் இரண்டு வித்தியாசப்பட்ட கருத்துக்களை விவாதிக்கிறார்.

நான்காம் விளக்கவுரையைக் குறித்து, Hendriksen பின் வருமாறு

எழுதினார், "இந்த கையெழுத்து அல்லது கையினால் எழுதப்பட்ட பத்திரம் நியாயப்பிரமாணம் தான் என்பது தெளிவு (ஒப்பிடுக எபேசியர் 2:15)".[50] அவர் விளக்கமளித்தது என்னவெனில், "சிலுவையின் மேல் ஆணியடித்து அழித்தது 'நம் கையெழுத்தைக் கொண்ட கடன் பத்திரம் அல்ல,' மாறாக சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணம் அதன் கோரிக்கைகளோடு இருந்தவைதான்."[51]

கார்ஸன் என்பவரும் அதே முடிவுக்குத் தான் வந்தார்: "இப்படியாக குறிப்பிடப்பட்ட கட்டளைகளோடு கூடிய தேவனுடைய பிரமாணம் நமது கடன்களாக ... தேவனுடைய அறிக்கையாக நிற்கிறது. தேவனுடைய நியாயப்பிரமாணம் நமது குற்றங்களை மாத்திரம் குறிப்பிடுவதில்லை, மாறாக அப்படிப்பட்ட குற்றங்களுக்கான தண்டனையையும் கோரிசத்தமிடுகிறது. எனவே ஒப்பந்தமே நமது எதிரியாயிருந்தது."[52]

பின்வரும் வசனங்களான, 15 லிருந்து 17, பவுல் நியாயப்பிரமாணத்தைப் பற்றி பேசுவதாக சுட்டிக் காட்டுகிறது. "ஆகையால்" என்று குறிப்பிடப்பட்ட 16ம் வசனத்தின் வார்த்தை (oun) 15வது வசனத்தை சுட்டிக் காட்டி, வசனம் 14ல் பவுல் பொருள்படுத்தும் "கட்டளைகளை" விளக்கப்படுத்துகிறார், "கட்டளைகள்" ரத்து செய்யப்பட்டு சிலுவையில் ஆணியடிக்கப்பட்டது. இயேசு அதிகாரங்களையும் துரைத்தனங்களையும் சாடினார். இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு, கொலோசெயர்கள் கையினால் எழுதப்பட்ட கட்டளைகளைக் குறித்து யாரும் தங்களைக் குற்றப்படுத்தக் கூடாதிருந்தார்கள். வசனம் 16ன் படி, இவை போஜனம், பானம், பண்டிகைநாள், மாதப்பிறப்பு, ஓய்வுநாளை ஆசரித்தல் ஆகியவைகளைக் குறித்த ஒழுங்குகள் உட்படுத்தப்பட்டவை, மோசே மூலம் தேவனால் கொடுக்கப்பட்ட பிரமாணம் (அஞ்ஞான சட்டங்களல்ல) அப்படிப்பட்டவைகளை கைக்கொள்ளும் ஒழுங்கு முறைகள் கோரப்பட்டன.[53] வசனம் 17ல் இந்த மதம் சார்ந்த சடங்காச்சாரங்களெல்லாம் வருங்காரியங்களுக்கு நிழலாய் மாத்திரம் இருந்ததாக குறிப்பிடுகிறது. அஞ்ஞான ஆசரிப்புகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கவில்லை, ஆனால் நியாயப்பிரமாணம் எதிர்கால நிஜத்திற்கு நிழலாயிருந்தது (எபிரெயர் 10:1) இதுவே புதிய ஏற்பாட்டு போதனைகளில் காணப்படுகிறது.

அநேக விளக்கவுரையாளர்கள் பவுல் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறித்துப் பேசுவதாக நம்புகின்றனர். நியாயப்பிரமாணம் மோசேயை எழுதும்படி தேவன் கட்டளையிட்ட கையெழுத்துப் பிரமாணம் (யாத்திராகமம் 34:27, 28). எழுதப்பட்ட யாவற்றையும் கைக்கொள்ளும்படி இஸ்ரவேர்கள் எதிர்பார்க்கப்பட்டனர் (உபாகமம் 28:58; 30:10; யோசுவா 1:8). இது பழைய ஏற்பாட்டு கட்டளைகளை மட்டுமே குறிக்கும், ஏனெனில் புதிய ஏற்பாடு அப்பொழுது எழுதப்பட்டிருக்கவில்லை.

நியாயப்பிரமாணம் அதன் கீழ் வாழ்ந்தவர்களுக்கு ஒரு அளவுகோலாக இருந்தது, விருத்தசேதனம் பெற்ற யாவரும் அனைத்துப் பிரமாணங்களையும் கைக் கொள்ளும்படி கடன் பட்டிருந்தனர் (கலாத்தியர் 5:3). "கடன்" என்பது பழைய பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவர்களின் பாவமல்ல. மாறாக, "கடன்" என்பது ஒரு கடமையாக, பழைய உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்தவர்கள்

கடன் சுமை உடையவர்களாய் ஒவ்வொரு கட்டளைக்கும் குறையில்லாமல் கீழ்ப்படியும்படி கோரப்பட்டனர். பழைய பிரமாணத்தின் கீழ் இருந்த அனைவரும் அதை மீறி பாவஞ்செய்தபடியால் அவர்கள் மரணத்துக்குப் பாத்திரரானர்கள் (ரோமர் 6:23; யாக்கோபு 1:13-15). மரணத்திற்குரிய ஊழியமாக (2 கொரிந்தியர் 3:7-9), ஜீவனைக் கொடுக்க வல்லதாக இருந்த போதிலும், பாவத்தினிமித்தம் பிரமாணத்தின் கீழ் இருந்த அனைவரையும் நியாயப்பிரமாணம் ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாக்கியது (ரோமர் 7:9-11). மோசே மூலம் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின் விதிமுறைகளுக்கு, எல்லாரும் ஏகமாய் பாவத்தின் கீழ் அடைக்கப்பட்டனர் (கலாத்தியர் 3:22). "கடன்" என்பது கைக் கொள்ளும்படி தேவனுடைய ஜனங்கள் மீது கடமையாக சுமத்தப்பட்ட நியாயப்பிரமாணத்தின் கட்டளையாயிருந்தது.

"நமக்கு விரோதமாயிருந்தவைகள்" (2:14ஆ)

*நியாயப்பிரமாணம் எந்த வகையில் நமக்கு **விரோதமாயிருந்தது**? "விரோதம்" எனும் வார்த்தை (hupenantios), "கடுமையான எதிர்ப்பு" எனும் பொருளில் இங்கேயும் எபிரெயர் 10:27லும் மட்டுமே காணப்படுகிறது, அது "விரோதிகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டது. நியாயப்பிரமாணம் நல்லதாக இருந்தது (காண்க ரோமர் 7:12); இருப்பினும் மனுக்குலம் பாவமுள்ளதாயிருக்கிறது இதன் காரணமாக, நியாயப்பிரமாணத்தின் நல்ல அளவையானது மனிதனுடைய பாவநிலையை வெளிப்படுத்திற்று (ரோமர் 7:8-11). அதைப் புறந்தள்ளியவர்கள் இரக்கமில்லாமல் மரிக்க வேண்டியிருந்தது (எபிரெயர் 10:28). இது இஸ்ரவேல் தாங்கக் கூடியதற்கும் அதிகமானதாக இருந்தது, ஏனெனில் பிழைற்ற கீழ்ப்படிதல் எதிர்பார்க்கப்பட்டது (யாக்கோபு 2:10). ஆகையால், நியாயப்பிரமாணம் அதன் கீழிருந்தார்களை சாபத்திற்குள்ளாக்கியது (கலாத்தியர் 3:10). பேதுரு எருசலேமிலிருந்த யூத கிறிஸ்தவர்களுக்கு உறுதியளித்து நியாயப்பிரமாணம் "நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக் கூடாதிருந்த நுகத்தடி" என்று சொன்னார் (நடபடிகள் 15:10ஆ). அதினால் நீதிமான்களாக விரும்புகிற யாவரும் கிறிஸ்துவை விட்டு பிரிந்து கிருபையிலிருந்து விழுந்தவர்கள் (கலாத்தியர் 5:4).*

பெரும்பாலான காரியங்களில் நியாயப்பிரமாணத்தை மீறுவதன் தண்டனை மரணம். பத்துக்கட்டளைகளில் ஏழு கட்டளைகள் அவைகளை மீறினோர் மரண ஆக்கினைக்குட்பட வேண்டுமென்று கோரியது. இஸ்ரவேல் ஜனங்கள் வேறே தேவர்களைச் சேவித்தால், அது முதல் மூன்று கட்டளைகளில் விலக்கப்பட்டதாகையால், அவர்கள் சொல்லப்பட வேண்டும் (உபாகமம் 17:2-5). அதே தண்டனை நான்காம் கட்டளையாகிய ஓய்வு நாளில் மீறி வேலை செய்வோருக்குக் கொடுக்கப்பட்டது (யாத்திராகமம் 31:15), அல்லது ஐந்தாம் கட்டளை தங்கள் பெற்றோரைக் கனப்படுத்துவதற்குப் பதில் அவர்களை சபிக்கிறவர்களுக்கும் (யாத்திராகமம் 21:15, 17), அல்லது ஆறாம் கட்டளை கொலை செய்பவர்களுக்கும் (எண்ணாகமம் 35:30, 31). அல்லது ஏழாவது விபச்சாரம் செய்பவர்களுக்கும் அந்தத் தண்டனை அளிக்கப்பட்டது (உபாகமம் 22:22-25).

ஆபிரகாமின் சந்ததிக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட

ஆசீர்வாதங்களைக் கொண்டு வருவதற்குப் பதிலாக (ஆதியாகமம் 22:18; கலாத்தியர் 3:16), நியாயப்பிரமாணம் அதின் கீழ் இருந்தவர்களை சபித்தது (கலாத்தியர் 3:10). "அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேட வேண்டுவதில்லையே" (எபிரெயர் 8:7). நியாயப்பிரமாணம் பயனற்றதும் பெலவீனமுள்ளதுமாயிருந்தது (எபிரெயர் 7:18, 19), என்பதை அது என்ன செய்யவில்லை என்பதிலிருந்து காணமுடியும். அது ஜனங்ளை விடுதலையாக்கக் கூடாதிருந்தது (நடபடிகள் 13:39), நீதிமானாக்க இயலவில்லை (ரோமர் 3:20; கலாத்தியர் 2:16; 3:11), சுதந்தரமளிக்கவில்லை (கலாத்தியர் 3:18; 1 பேதுரு 1:3, 4), ஜீவனை அளிக்கவில்லை (கலாத்தியர் 3:21), ஒருவரையும் நீதிமானாக்கவில்லை (கலாத்தியர் 3:21), கிருபையளிக்க வில்லை (கலாத்தியர் 5:4), ஜனங்களை சுதந்தரவாளிகளாக்கவில்லை (ரோமர் 4:14), பூரணராக்கவில்லை (எபிரெயர் 7:19), பாவங்களை மன்னிக்கவில்லை (எபிரெயர் 10:4), அல்லது இரக்கஞ்செய்யவில்லை (எபிரெயர் 10:28).

"அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து" (2:14இ)

நியாயப்பிரமாணம் அதன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்த போதிலும், அது அதிகமாக எதுவும் செய்யக் கூடாதிருந்தது. இப்படியாக, தேவனுடைய திட்டத்திற்கு ஒப்பாக, பவுல் ***அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து*** *என்று சொல்ல முடிந்தது. "அவர்" என்று (ஆங்கிலத்தில்) குறிப்பிட்டிருப்பது தேவனைப் குறித்துப் பேசுகிறது, எழுதப்பட்ட கட்டளைகளைக் கொண்ட நியாயப்பிரமாணத்தை அவர் சிலுவையின் மூலம் அகற்றுகிற செயலைச் செய்தார். "தேவன்" (வசனம் 12) என்பதுதான் வசனம் 13 லிருந்து 15 வரை "அவர்" என்று குறிப்பிடப்படுகிறது.* KJV, *"அவருடைய சிலுவையின் மேல்" என்று காணப்படுகிறது, அது* (NASB) *"அவர்" "நடுவிலிராதபடிக்கு எடுத்து" என்பது இயேசுவைக் குறிப்பதாக சொல்லப்படுகிறது. எப்படியிருப்பினும், "சிலுவை" என்றே அநேக சமீபத்திய மொழிபெயர்ப்புகளில் காணப்படுகிறது, இது சிறந்த கிரேக்க பிரதியில் "அவருடைய சிலுவை" என்பதற்குப் பதிலான ஆதாரமாயிருக்கிறது.*

J. B. *லைட்ஃபூட் என்பவர் தேவன் என்பதிலிருந்து கிறிஸ்து என்று பவுல் வசனம் 14ல் "அவர்" என்று குறிப்பிட்டு மாற்றி எழுதியுள்ளதாக நம்புகிறார்.*[54] *கார்ஸன் சரியாக இதை மறுத்திருக்கிறார்:*

> *எழுவாய் வார்த்தையை நிச்சயமற்ற அனுமானமாக்கி அப்படிப்பட்ட சமய சந்தர்ப்பத்திற்குரிய வார்த்தையாக மாற்றுவது அந்த எழுவாய் அந்த வசனப்பகுதி முழுவதும் ஒரே மாதிரியாக தொடரும் வரை இலக்கணப்படி எழுவாய் இப்படிப் பயன்படுத்தப்படும். இப்படியாக "தேவன்" என்பது வசனம் 13ல் சொல்லப்பட்டுள்ள எழுவாய் நம்மை கிறிஸ்துவோடு கூட எழுப்பின "தேவனை" குறிக்கிறது என்பது தெளிவாகிறது. ஆகிலும் வசனம் 13ல் பேசப்படுகிற பெயரெச்சம் வசனம் 14ல் குறிப்பிடப்படுகிற இயல்பான எழுவாயைக் கொண்டிருப்பதை ஒத்த வார்த்தையாகக் குறிப்பிடப்படுகிறது. மேலும் எடுத்து என்பதற்கு முன் and எனும்*

வார்த்தை ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ளது, அது *erken*, எனப்படுவது, முந்தின வசனத்துடன் இணைத்து இரண்டு எழுவாய் வார்த்தைகளும் ஒன்றே என்ற முடிவுக்கு கொண்டு செல்லுகிறது.[55]

புதிய ஏற்பாடு முரண்பாடு எதுவுமின்றி நியாயப்பிரமாணம் நடுவிலிராதபடி எடுத்துப் போடப்பட்டது என்று போதிக்கிறது. புறஜாதி கிறிஸ்தவர்கள் மீது நியாயப்பிரமாணத்தைத் திணிக்க முயன்ற சில யூத கிறிஸ்தவர்கள், "அவர்களை விருத்த சேதனம் பண்ணுகிறதும் மோசேயின் நியாயப்பிரமாணத்தை கைக் கொள்ளும் படி அவர்களுக்கு கற்பிக்கிறதும் அவசியம்" என்றார்கள் (நடபடிகள் 15:5). எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் அதற்கு மறுமொழியாக "எங்களால் கட்டளை பெறாதவர்கள்" அந்த சிலர் என்றனர் (நடபடிகள் 15:24). அவர்கள் அப்படிச் சொல்லியதன் பொருள் புறஜாதிக்கிறிஸ்தவர்கள் அவர்களுடைய பிள்ளைகளை விருத்தசேதனம் பண்ணும்படியோ பிரமாணத்தைக் கைக்கொள்ளவோ எந்த ஒரு போதனையும் கொடுக்கவில்லை என்பதே.

கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவர்களல்ல என்று வேறு வசனப்பகுதிகள் போதிக்கின்றன:

- "நீங்கள் நியாயப்பிரமாணத்துக்குக்கீழ்ப் பட்டிராமல்" (ரோமர் 6:14).
- "நாம் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டிராமல்" (ரோமர் 6:15).
- "நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" (ரோமர் 7:4).
- "நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்" (ரோமர் 7:6).
- கற்பலகைகளில் எழுதப்பட்ட உடன்படிக்கை "ஒழிந்துபோகக் கூடியதாயிருந்தது" (2 கொரிந்தியர் 3:7-13).
- "நான் நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவனானேன்" (கலாத்தியர் 2:19).
- நாம் இனியும் உபாத்திக்கு (நியாயப்பிரமாணத்துக்குக்) கீழானவர்களல்லவே (கலாத்தியர் 3:25).
- "நாம் அடிமையானவளுக்கு பிள்ளைகளாயிராமல்" (கலாத்தியர் 4:31, "சீனாய் மலையில்" கொடுக்கப்பட்ட பிரமாணத்தைக் குறிப்பிட்டு பேசுகிறது; வசனம் 24).
- "... (கிறிஸ்து) பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்தார் ..." (எபேசியர் 2:14, 15)
- நியாயப்பிரமாணம் மாற்றப்பட்டது (எபிரெயர் 7:18, 19).
- "அவர் முந்தினதை (உடன்படிக்கையை) பழமையாக்கினார்" (எபிரெயர் 8:13; காண்க வசனம் 7).
- "முதலா (உடன்படிக்கையை) வதை நீக்கிப் போடுகிறார்" (எபிரெயர் 10:9).

பழைய ஏற்பாடு "நடுவிலிராதபடி எடுத்துப் போடப்பட்டதற்கு"ம் அதிகமான பிரமாணத்தைக் கொண்டிருக்கிறது, நியாயப்பிரமாணம் பெரும்பாலும் யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகிய புத்தகங்களில் காணப்படுகின்றன. பழைய ஏற்பாட்டின் எஞ்சிய

புத்தகங்களில் நியாயப்பிரமாணம் அறியப்படுத்தப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணத்தின் புத்தகங்களுக்கப்பால், பழைய ஏற்பாட்டில் வரலாறு சங்கீதங்கள், ஞான மொழிகள், மற்றும் தீர்க்க தரிசனங்கள் ஆகியனவும் அடங்கியுள்ளன. இவைகளில் விலைமதிப்புள்ள போதகங்கள் அடங்கியுள்ளன (ரோமர் 15:4) மற்றும் கிறிஸ்தவர்களுக்கு உதாரணங்கள் உள்ளன (1 கொரிந்தியர் 10:6, 11). கிறிஸ்தவர்கள் பயனடையத்தக்க வகையிலான மூலாதார விஷயங்களை இந்த வசனங்கள், விசேஷமாக யோபின் புத்தகம், சங்கீதங்கள், நீதிமொழிகள் மற்றும் தீர்க்கதரிசனங்கள் தன்னகத்தே கொண்டுள்ளன. இந்த வசனங்கள் கிறிஸ்தவர்களை ஊக்கப்படுத்தவும் போதிக்கவும் அடிக்கடி கோடிட்டு காட்டி பயன்படுத்தப்படுகின்றன, நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனங்கள், மற்றும் சங்கீதங்கள் ஆகியவை இயேசுவே கிறிஸ்து என்று நிரூபிக்கும்படி பயன்படுத்தப்பட்டன (லூக்கா 24:44; நடபடிகள் 28:23), அவைகளில் பெரும்பாலான தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டில் நிறைவேறின (1 பேதுரு 1:10-12). எப்படியிருப்பினும், சட்ட திட்டங்களாகிய நியாயப்பிரமாணத்துடன் அதன் சமய சடங்காச்சாரங்களும் ஆராதனை ஆசரிப்புகளும் அழிக்கப்பட்டன. தீர்க்கதரிசனங்களும் ஒருமுறை நிறைவேறியவுடன், ஒழிந்து போயின (மத்தேயு 5:17, 18).

ஆதிசபை நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி தங்களை ஒப்புக் கொடுக்கவில்லை; மாறாக, அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தரித்திருந்தார்கள் (நடபடிகள் 2:42). பரிசுத்த ஆவியின் மூலம் இயேசு எல்லாவற்றையும் அப்போஸ்தலருக்குப் போதித்து சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தினார் (யோவான் 14:25, 26; 16:12, 13). பின்னதாக அவர் அவர்களுக்கு கட்டளையிட்டு, “நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்” என்று சொன்னார் (மத்தேயு 28:20). நியாயப்பிரமாணத்தையல்ல, இயேசுவின் போதனைகளையே அவரைப் பின்பற்றுவோருக்குப் போதித்து அவர்கள் அதை கைக்கொள்ளும் படி உபதேசம் பண்ண வேண்டும்.

நியாயப்பிரமாணத்தின் பல்வேறுபட்ட நோக்கங்களை கிறிஸ்தவர்கள் கைக் கொள்ளக்கூடும், ஆனால் அதினால் நீதியை அடையவோ நீதிமானாக்கப்படவோ அல்ல (நடபடிகள் 13:39; கலாத்தியர் 2:16, 21). அனனியா என்னும் ஒரு கிறிஸ்தவன், இரட்சிக்கப்படுவதற்கு பவுல் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லும்படி இயேசுவால் அனுப்பப்பட்டிருந்தான் (நடபடிகள் 9:10, 11; 22:12-16), அவன் நல்லவனும் “(நியாயப்பிரமாணத்தின்படி) வேதப்பிரமாணத்தின்படியே பக்தியுள்ளவனுமாயிருந்தான்.” பவுல் தன்னை சுத்திகரித்துக் கொண்டு தேவாலயத்தில் தன்னை வெளிப்படுத்தி அவர் “நியாயப்பிரமாணத்தை கைக்கொண்டு நடக்கிறவராயிருந்தார்” (நடபடிகள் 21:24). எப்படியிருப்பினும், வித்தியாசம் என்னவெனில், புறஜாதி கிறிஸ்தவர்கள் உட்பட, யார் மீதும் நியாயப்பிரமாணம் கைக்கொள்ளப்படும்படி சுமத்தப்படக்கூடாது. இந்தக் காரியம் அப்போஸ்தவர்களும் மூப்பர்களும் எருசலேமில் கூடினபோது தீர்மானிக்கப்பட்டது (நடபடிகள் 15:19, 24).

நியாயப்பிரமாணத்தில் நம்பிக்கையுள்ள அநேகரும் இன்னமும் மத்தேயு 5:17, 18ஐப் பயன்படுத்தி அது ஒழிக்கப்படவில்லையென்று நிரூபிக்க

முயற்சிக்கின்றனர். இந்த வசனப்பகுதியில் இயேசு நியாயப்பிரமாணத்தைக் குறித்து மட்டும் பேசாமல், தீர்க்கதரிசனத்தையும் குறித்துப் பேசுகிறார். அங்கே அவர் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களானாலும் அல்லது தீர்க்கதரிசனங்களில் தம்மைக் குறித்துப் பேசப்பட்ட தீர்க்கதரிசனங்களானாலும் அவை நிறைவேறுவதற்கு முன் அவைகள் அழிந்து போவதில்லை என்றார். இயேசு தம்மைக் குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களெல்லாவற்றையும் நிறைவேற்றின பின்பு, அவைகளை மறுபடியும் நிறைவேற்ற அவர் கடமைப்பட்டவரல்ல; இப்படியாக அவை ஒழிந்து போயின, நிறைவேறிவிட்டன. இயேசு தம்மைக் குறித்துச் சொல்லப்பட்ட அனைத்து தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றினார் (லூக்கா 24:44-48).

இயேசு சொன்னதை பின் வரும் காரியங்கள் விளக்கமளிக்கின்றன. ஒரு மனிதன் சில பொருட்களை ஒரு கடையில் கடனாக வாங்குவதாக வைத்துக் கொள்வோம். தன்னுடைய கடன் 'பில்லை' அவன் திருப்பிச் செலுத்தும்படி வரும்பொழுது, "நான் கடன் 'பில்லை' செலுத்த வந்தேனேயொழிய, அழிக்க வரவில்லை. ஒரு பொருளுக்குரிய பில்லாகிலும் திருப்பிச் செலுத்தப்படாமல் போவதில்லை" என்று சொல்லக்கூடும். அப்படியொரு வாக்கியத்தைச் சொல்லுவதன்மூலம், அந்த பில்லில் காணும் முழுத்தொகையையும் செலுத்த அவன் சபதம் எடுத்துக் கொள்வான். அந்த பில் ஒருமுறை செலுத்தப்பட்ட பின்பு, முன்பிருந்த கடன்களை குறித்து வைத்த பதிவேடுகள் அங்குதானிருக்கும், ஆகிலும் அது இனியும் அமலில் இருக்காது; அது நிறைவு பெற்று விட்டது. அது மீண்டும் செலுத்தப்பட வேண்டிய அவசியமில்லை.

அதே கொள்ளைதான் இயேசுவின் வார்த்தைக்கும் பயன்படுத்தப்படுகிறது. அவரைக் குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களில் அது நியாயப்பிரமாணத்திலிருந்தாலும் தீர்க்கதரிசனத்திலிருந்தாலும் அனைத்தும் நிறைவேறும் வரை ஒழிந்து போவதில்லை. இந்தத் தீர்க்கதரிசனங்கள் ஒருமுறை நிறைவேறி விடுமானால் இனியும் அது அமலில் இருப்பதில்லை. அது ஒரு பதிவேடுவாகத்தான் நிலைத்திருக்கும்; மறுபடி மறுபடியும் அவர் அதை நிறைவேற்ற வேண்டுவதில்லை.

நியாயப்பிரமாணம் ஒழிந்து போயிற்று என்று காட்ட பவுல் மூன்று வாக்கியங்களைச் சொன்னார். அது "குலைத்துப் போடப்பட்டது," "எடுத்துப் போடப்பட்டது," மற்றும் "சிலுவையில் ஆணியடிக்கப் பட்டது." இந்த வார்த்தைகள் யாவும் ஒரே உண்மையைத்தான் சொல்லுகிறது "குலைத்துப் போடப்பட்டது" (*exaleipsas*) என்றால் "அழித்துப் போடப்பட்டது, துடைத்துப் போடப்பட்டது" என்று பொருள், பாயுயர் விளக்கமளிக்கையில், இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பது போல, "களையப்படுதல், அடையாளம் தெரியாமல் *அகற்றப்படுதல், அழித்தல், தடையமில்லாமல் நீக்குதல்*" என்று சொன்னார்.[56] "நடுவிலிராதபடி எடுத்து" (*ērken, airō* என்பதிலிருந்து) என்பதன் பொருள் "அப்புறப்படுத்துதல், அகற்றுதல், அல்லது தூக்கி விடும் யோசனை இல்லாமல் கட்டுப்பாட்டை பற்றுதல்; ... *அழித்தல்* (வசனம் 14ற்கு பயன்படுத்தும் போது) இந்தப் பொருள் கொடுக்கப்படுகிறது."[57] ஆக இதன் அர்த்தம் முற்றிலுமாக அகற்றுதல் என்பது. "சிலுவையில் ஆணியடிக்கப்பட்டு" என்பது நியாயப்பிரமாணம் மரிப்பதை

விளக்கப்படுத்துகிறது, இந்த மூன்று வாக்கியங்களும் நியாயப்பிரமாணம், இனியும் உயிருள்ள பதிவேடு அல்ல, அழிந்துபோன அல்லது புறம்பே வைக்கப்பட்ட ஒன்று என்பதை வலியுறுத்துகின்றன.

வசனம் 14இ யில் "சிலுவையின் மேல் ஆணியடித்து" என்பதை நேரடிப் பொருளில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. நியாயப்பிரமாணம் எழுதப்பட்ட பக்கங்கள் சிலுவையிலே ஆணியடிக்கப்படவில்லை. மாறாக, இது ஒரு உருவகமாக நியாயப்பிரமாணம் நடுவிலிராதபடி எடுத்துப் போடப்படும் *செயல்முறையை* குறிப்பிட்டு அது எடுபட்டுப்போன *நேரத்தையும்* அடையாளப்படுத்துகிறது, இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது, நியாயப்பிரமாணம் மரித்தது, முடிந்தது, அதற்கு மேலும் அது அமலில் இல்லை. அது அப்புறப்படுத்தப்பட்டு அதை நேரத்தில் இயேசுவின் மரணத்தின் மூலம் புதிய உடன்படிக்கை பிரதிஷ்டை பண்ணப்பட்டது (எபிரெயர் 9:16-18; மேலும் காண்க மத்தேயு 26:28). "இரண்டாவதை நிலைநிறுத்த அவர் முதலாவதை நீக்கப் போடுகிறார்" (எபிரெயர் 10:9ஆ).

எபேசியரில் பவுல் இதே கருத்தை ஒரு முகப்படுத்துகிறார். யூதர்களுக்கும் புறஜாதிகளுக்குமிடையேயிருந்த நடுச்சுவரைத் தகர்த்து, "சட்ட திட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை" இயேசு ஒழித்தார், என்று சொன்னார் (எபேசியர் 2:14, 15), "திட்டங்கள்" என்னும் வார்த்தை, கட்டளையென்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையான *dogmata*, என்று கொலோசெயர் 2:14ல் சொல்லப்படுகிறது. பவுலின் பயன்பாடாகப் பேசப்படும் *dogmata*, எபேசியர் மற்றும் கொலோசெயர் இரண்டிலும் அவர் கொடுக்க விரும்பின இரண்டு வசனப்பகுதிகளிலும் ஒரே கருத்திற்கு இது வலுசேர்க்கிறது நியாயப்பிரமாணம் இப்பொழுது மரித்து விட்டது, சிலுவையில் ஆணியடிக்கப்பட்டுவிட்டது, குலைத்துப் போடப்பட்டது, புறம்பே தள்ளி வைக்கப்பட்டது.

இந்த இரண்டு வசனப்பகுதிகளின் ஒற்றுமையை காண்க.

எபேசியர் 2:14, 15	கொலோசெயர் 2:14
"... நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து"	"எதிராக இருந்த கையெழுத்தைக் குலைத்து" ("நடுவிலிராதபடி எடுத்து")
"பகைமையை தம்முடைய மாம்ச சரீரத்தினாலே ஒழித்து"	("சிலுவையிலே ஆணியடித்து")
"சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணம் [*dogmasin*]"	"எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு [*dogmasin*] விரோதமாகவும் இருந்த கையெழுத்து"

(அடைப்புக்குறிகளில் கொடுக்கப்பட்டுள்ள சொற்றொடர்கள் ஒற்றுமையை வலியுறுத்தும் பொருட்டு மறு அமைப்புச் சொல்லாக கொடுக்கப்பட்டுள்ளது.)

"அவருடைய மாம்சத்தில்" என்னும் சொற்றொடர் (எபேசியர் 2:15) "சிலுவையில் ஆணியடிக்கப்பட்டது" என்பதை அடையாளப்படுத்துகிறது (கொலோசெயர் 2:14). அவருடைய சரீரம் சிலுவையில் ஆணியடிக்கப்பட்ட

நிகழ்ச்சி, நியாயப்பிரமாணமும் அவரோடே கூட சிலுவையில் ஆணியடிக்கப்பட்டதைக் காட்டுகிறது. அவர் சிலுவையில் மரித்தபோது பாவத்திற்கு நியாயப்பிரமாணம் கோரிய பலியை அவர் நிறைவு செய்தார். இப்படியாக - "அவருடைய மாம்சத்தில்," என்று சொல்லும்போது - அவர் சிலுவையில் மரித்த போது நியாயம்பிரமாணம் நிறைவேற்றப்பட்டது. குலைத்துப் போடப்பட்டது, மற்றும் ஒழித்துப் போடப்பட்டது, இப்படியாக நியாயப்பிரமாணத்தின் சட்டங்கள் இயேசு சிலுவையில் மரித்தபோது முடிவுக்கு வந்தது.

இந்த வசனங்களில் சொல்லப்பட்டுள்ள பதங்களான "நடுச்சுவரைத் தகர்த்தல்," "அவருடைய சரீரத்தில் ஒழித்து," "குலைத்துப் போட்டு," "நடுவிலிராதபடி எடுத்து," மற்றும் "சிலுவையில் ஆணியடித்து," போன்றவை களெல்லாம் நியாயப்பிரமாணம் புறந்தள்ளப்பட்டது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. கிறிஸ்து மூலமாக, கொலோசெயர்கள் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டனர், தொடர்ந்து விடுதலையாக்கப்பட்ட நிலையில் இருப்பர் என்பதை பவுல் அவர்கள் அறிய வேண்டும் என்று விரும்பினார். அதனால் தான் அவர் அவர்களிடம் கிறிஸ்துவுக்குள் சகல ஞானமும் அறிவுமாகிய பொக்கிஷம் இருக்கிறது என்று சொன்னார் (2:3). அவை நியாயப்பிரமாணத்தில் இல்லை. நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள அவர்கள் கடமைப்பட்டவர்கள் என்ற உணர்வு இல்லாமலேயே இயேசுவைப் பின்பற்ற வேண்டியவர்களாயிருந்தார்கள்.

கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை பெற்றவர்கள் என்ற முடிவுக்கு பவுல் வந்திருந்தபடியால், பிறமனித ஸ்தாபனங்களின் சமய சட்ட திட்டங்கள் எல்லாம் அதிகாரமுடையவைகளல்ல என்று அவர் சொல்ல வேண்டிய அவசியமிருக்கவில்லை. கொலோசெயர்களின் காலத்திலிருந்த எஸ்ஸென்னஸ் அமைப்பினரும் மற்றவர்களும் தங்கள் நாட்களில் விவாகத்தைத் தடைசெய்தும் விலங்குகளின் மாமிசம் உட்பட, சில உணவு வகைகளையும் விலக்கும்படி சமயச் சட்டங்களைக் கொண்டிருந்தனர். மார்க்க ஒழுக்கவிதிகள் எப்படிப்பட்டப் பின்னணியைக் கொண்டிருந்த போதிலும் கிறிஸ்துவிடத்தில் வந்தவர்கள், கொலோசெயர்களின் ஒரே கடமையாகக் கொடுக்கப்பட்ட காரியம் இயேசுவை நோக்கிப் பார்க்க வேண்டும் என்பதுதான். அவர்கள் மனித சமய சடங்குகளுக்கோ அல்லது நியாயப்பிரமாணத்துக்கோ பின்பற்றிப்போக வேண்டிய அவசியமிருக்கவில்லை, ஏனெனில் இயேசு தம்மைப்பின்பற்றுகிறவர்களை அவைகளிலிருந்து விடுதலை ஆக்கியிருந்தார்.

எதிர்ப்புகளை கிறிஸ்து எதிர் பேசுதல் (2:15)

15 துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்.

"துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் (அவர்) உரிந்துகொண்டு" (2:15அ)

*இயேசு "**துரைத்தனங்களையும்** அதிகாரங்களையும்" உரிந்துகொண்டு*

என்பது அநேகமாக பவுலால் அமைக்கப்பட்ட சொற்றொடராக இருந்திருக்கலாம், ஏனெனில் கிரேக்க இலக்கியத்தில் இதுவே முதல் முறையாக இந்த பதம் காணப்படுகிறது. இதனால், இதற்கு ஒத்த பொருளடக்கம் கொண்ட சமகால வேறு வசனப்பகுதி அதன் பொருளைத்தீர்மானிக்க இருக்கவில்லை. அப்போஸ்தலன் இந்த வார்த்தையை எச்சவினையாக, இன்னும் ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தியிருக்கிறார், அது "களைந்து போடுங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (3:9) ஒரு முறை பெயர்ச்சொல்லாக அவர் பயன்படுத்தியுள்ளார் ("களைந்து விடுங்கள்"; 2:11). "உரிந்து கொண்டு" (apekduomai) என்பது "எடுத்து விடுதல்," "அழித்து விடுதல்," என்றெல்லாம் பொருள்படும், அது துணியைக் களைந்து போடுதல் போன்றது. இந்த உள்ளடக்கத்தில், "உரிந்து கொள்ளுதலே" இருப்பினும் சரியான விளக்கமாக இருக்கும், அது பொல்லாத சக்திகள் பெலவீனப்பட்டுப் போகத் தக்கதாக தேவன் இயேசு மூலம் செய்ததை குறிப்பிடுகிறது.

துரைத்தனங்களும் அதிகாரங்களும் *என்பது யார்? அவர்கள் எப்படி உரிந்து போடப்படுகின்றனர்? அவர்களை உரிந்து போடுவது யார்?* H. Dermot McDonald *என்பவர், "கொலோசெயரின் இந்த வசனப்பகுதியை திருமறை சார்ந்த விளக்கமளிப்பது மிகக் கடினம்," என்று சொன்னார்,*[58] *மற்றும் மூன்று கேள்விகள் எழுப்பப்பட்டன. (1) பவுல் ஏன் மத்திய குரலை எழுப்புகிறார் ("உரிந்து கொள்ளுதல்")? மத்தியக்குரல் "என்னை நான் கழுவிக் கொண்டேன்," போன்ற பொருளைக் கொண்டதாக வெளிப்படுத்தப்படுகிறது, அது செயல்வினைக்கு எதிராக சொல்லப்படும் வாக்கியம் "நான் அவனைக் கழுவினேன்." தேவனும் இயேசுவும் தங்களிலிருந்து ஏதோ ஒன்றைக் களைந்து போட்டார்களா அல்லது பிறரை களைந்து போட்டார்களா என்று பொருள்படுகிறதா? (2) தேவனோ அல்லது இயேசுவோ எழுவாயாகச் (இலக்காக) சொல்லப்படுகின்றனரா? (3) எந்தக் துரைத்தனங்களும் அதிகாரங்களும் உரிந்து போடப்பட்டன?*

மெக்டொனால்டு இதைச் சுருக்கி:[59]

1. *கிறிஸ்து வெளிப்படையாக துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் காண்பித்து, தம்மையே உரிந்து கொண்டவராய் தமது சரீரத்தைக் களைய அனுமதித்தார்.*
2. *தம்மிடமிருந்து தமது விரோத பொல்லாத சக்திகளிலிருந்து விடுபட்டு தம்மை உரிந்து கொண்டார், அந்த சக்திகள் இதற்கு முன்பு அவரைச் சூழ்ந்து கொண்டவை, கிறிஸ்து கடைசியில் அவைகளை அப்புறப்படுத்தி நித்தியத்திற்கும் களைந்து போட்டார்.*
3. *தேவன் நம்மிடத்திலிருந்து எதிராயுள்ள விரோதமான பொல்லாத வல்லமைகளை தமது சிலுவையின் மூலம் செயல்படுத்தி களைந்து போட்டார்.*
4. *துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் தாம் முன்பு தமது சித்தத்தை அறியப்பண்ணப்பட்டவைகளாகிய அவைகளை களைந்து போட்டு (காண்க 1 பேதுரு 3:22), தேவன் வெளிப்படையாகக் காண்பித்து, வெற்றிகரமாக, அவர்களை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்தினார்.*

5. முதன்மைப்படுத்திக் கொண்ட பொல்லாத துரைத்தனங்களிலிருந்தும் அதிகாரங்களிலிருந்தும் அவற்றின் மிகப்பயங்கரமான நிலைமையில் தம்மையை கொள்ளையிட விட்டார், அவை தேவனிடத்திலிருந்து மனுஷரை கொள்ளையிட வகைதேடினவை, கிறிஸ்து அவைகளை வெளியரங்கமாக தமது சிலுவையின் வெற்றியால் கோலமாக்கினார்.

சிலர் "உரிந்து கொண்டார்" என்பதை, ஒரு வினை எச்சமாக, மத்திய குரல் கொடுத்து, "ஒருவர் தன்னிடமிருந்து தன்னையே களைந்து போடுதல்" எனும் பொருளைக் கொடுப்பதாக தீர்மானிக்கின்றனர். இந்தக் காரணத்தால், பவுல் குறிப்பிட்ட சிலவற்றை சிலர் இப்படியாக நினைக்கின்றனர், அவை மெக் டொனால்டு விளக்கியபடி மேலே கொடுக்கபட்ட (1) மற்றும் (2) ல் கிறிஸ்து தம்மைத் தாமே தமது சரீரத்திலிருந்து களைந்து, தீமை நிறைந்த விரோத சக்திகளையும், அல்லது தேவ தூதர்களையும் கூட, அவர்களுக்கு மத்தியஸ்தமாயிருந்த நியாயப்பிரமாணத்தையும் சேர்த்து அப்புறப்படுத்தினார் (காண்க நடபடிகள் 7:35; கலாத்தியர் 3:19ஆ; எபிரெயர் 2:2). Clinton E. Arnold *குறிப்பிட்டிருப்பது போல, இதுவே சரியான முடிவுரையாக இருக்க வேண்டும் என்பதில்லை:*

> இதற்குரிய சரியான விளக்கம் என்னவெனில் இங்கே குறிப்பிடப்படுகிற எச்சவினை குறிப்பிடத்தக்க செயல்பாடாகவும், தேவனை எழுவாயாகிய முதன்மையாகவும் தீமையான சக்திகளான துரைத்தனங்ளும் அதிகாரங்களும் பயனிலையாகிய குறிக்கோளாகவும் புரிந்து கொள்ளப்பட வேண்டியவை இது பின்வரும் வெற்றி ஊர்வலத்திற்கு பொருத்தமான உருவகமாகும், இதில் தோல்வி மட்டுமல்ல சத்துருக்களை உரிந்து போடுகிற காரியமுமாகும். இது 3:9ல் பயன்படுத்தப்பட்டுள்ள வினை எச்சத்திற்கு ஒத்துப் போவது … ஒரு செயல்படு வினையாக நன்கு விளக்கமளிக்கப்படுவதுமாகும்: "பழைய மனுஷனை களைந்து போட்டு."[60]

இதிலே செயல்புரியும் ஒரு நபர் தேவனாக இருக்கக் கூடும், ஒரு வேளை பவுல் அதன் எழுவாயை மாற்றினால் மட்டுமே வித்தியாசமாகும். பவுலின் எண்ணத்தை பரிசீலித்து ஆதரிப்பதில், "அவர்" என்ற பிரதி பெயர்ச்சொல் வசனம் 13 லிருந்து 15 வரை சொல்லப்பட்டுள்ளபடி தேவனையே குறிக்கும் (வசனம் 12), "அவரை, அவரோடு" என்பது கிறிஸ்துவைக் குறிக்கும்:

- "*தேவனுடைய* செயலின் மேலுள்ள விசுவாசம்" (வசனம் 12; வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது).
- [அவர் (தேவன்)] "அவரோடே கூட [இயேசுவோடு கூட] உயிர்ப்பித்தார் (வசனம் 13).
- "அதை நடுவிலிராதபடிக்கு [அவர் - தேவன்] எடுத்து" (வசனம் 14ஆ).
- "[அவர் - தேவன்] துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு [அவர் - தேவன்] … [அவர் மூலமாய் - கிறிஸ்து மூலமாய்] சிலுவையின் மேல் வெற்றி சிறந்தார்" (வசனம் 15).

"துரைத்தனங்கள்" என்பது archē *எனும் வார்த்தையிலிருந்து*

மொழிபெயர்க்கப்பட்டது, சில வேளைகளில் "துவக்கம்," "முதன்மை," அல்லது "மூலாதாரம்" என்றெல்லாம் பொருள்படும். "அதிகாரங்கள்" (*exousia*) என்பது அதிகாரத்தைப் பிரயோகிக்கும் உரிமை பெற்றிருத்தல் என்ற ஆலோசனையைக் கொடுக்கிறது (காண்க 1:11அ வில் வரும் விவாதம்). இந்த கிரேக்க வார்த்தைகள் பவுலின் எழுத்துக்களில் வேறுசில இடங்களில் ஒன்றாகக் காணுகின்றன (1 கொரிந்தியர் 15:24; எபேசியர் 1:21; 3:10; 6:12; கொலோசெயர் 1:16; 2:10; தீத்து 3:1). இந்த வசனப்பகுதிகள் எந்த வல்லமைகளையும் அல்லது அதிகாரங்களையும் மனுஷர்களுக்குள்ளே செல்வாக்குப் பெற்றிருக்கிற இவர்களைப் பொருள்படுத்துகிறது. (எபேசியர் 6:12 ஊழல் அரசையும் பொல்லாத அதிகாரங்களையும் உட்படுத்தி பேசுகிறது.) அவைகள் தேவனுக்கு விரோதமாக செயல்படுகிறவர்களாயும், மனித குலத்துக்கு ஆக்கினையைத் தேடுகிறவர்களாகவும், இரட்சிப்புக்கும் இரட்சகருக்கும் விரோதிகளாயுமிருக்கின்றனர். அவர்கள் மூலமாக நியாயப்பிரமாணம் கையளிக்கப்பட்டதால் இதை தேவ தூதர்களாகிய அதிகாரங்கள் என்று மொழிபெயர்ப்போர் (நடபடிகள் 7:38; கலாத்தியர் 3:19) பவுலைக் காட்டிலும் வித்தியாசமான பதங்களை பயன்படுத்துகின்றனர்.

தேவன் இந்த அதிகாரங்களை உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, சிலுவையின் மேல் வெற்றி சிறந்தது குறித்து மற்றொரு பிரச்சனை எழும்புகிறது, இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் இந்த வெற்றி சிறந்தலையும் தோல்வியடையச் செய்தலையும் அவர் சாதித்தார். அப்படிப்பட்ட வெற்றி சிறத்தல் எந்த சக்திகளை மேற்கொண்டதோ அவை நல்ல சக்திகளையோ முரட்டாட்டம் பண்ணாத தேவ தூதர்களையே குறிப்பதாக எவ்வகையிலும் பொருந்தாது.

இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம், தேவன் தமது திட்டத்திற்கு விரோதமாயிருந்த அனைத்து விரோதிகளையும் அவர் தோல்வியுறச் செய்தார். இயேசு உயிர்தெழுந்ததின் மூலமாக, அவர் தம்மை மரணத்துக்குள்ளாக்கிய யூதர்களையும் பிசாசின் வல்லமைகளையும், எதிரிடையாய் இருந்த அனைத்து சக்திகளையும் அவர் வெற்றி சிறந்தார். இயேசு பேதுருவிடம் தம்மைப் பிடிக்க வந்த யூத போர்ச் சேவகர்களுக்கு தன் மீது எதுவும செய்ய பெலனில்லாதவர்கள் என்று தெரிவித்தார் (மத்தேயு 26:53). இயேசு பிலாத்துவிடம் உலகிலேயே மிகப் பலம் வாய்ந்த பேரரசின் அதிகாரங்களுக்குக் கூட தம்மீது அதிகாரமில்லை யோவான் 19:11 என்று சொன்னார். அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலம், மரணம் தன்மேல் எந்த வல்லமையும் கொண்டிருக்கவில்லை என்று காட்டினார் (நடபடிள் 2:24). அவருடைய மரணத்தின் மூலம், பிசாசின் அதிகாரத்தை அவர் அழித்தார் (எபிரெயர் 2:14; மேலும் காண்க 1 கொரிந்தியர் 15:55-57) மேலும் அவனுடைய பொல்லாங்கான தூதர்களும் (மத்தேயு 25:41), பேய்களின் சக்திகளும் கூட அழிக்கப்பட்டன.

இந்த வசனப்பகுதியில் குறிப்பிடப்படுகிற "அதிகாரங்கள்" என்பது பவுல் தன்னுடைய செய்தியில் குறிப்பிட்டபடி, அதே நபர்களிடமிருந்துதான் கொலோசெயர்கள், "இருளின் அதிகாரத்தினின்று [*exousia*, இதே வார்த்தை தான் வசனம் 15ல் "அதிகாரங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டது]" (1:13அ; மேலும் காண்க 22:53) நம்மை விடுதலையாக்கினார் என்றார். இப்படியாக,

இயேசு மூலமாக, தேவன் "துரைத்தனங்களையும்" அல்லது இருளின் "அதிகாரங்கள்" "உரிந்து கொள்ளப்படுதலினால்" கொலோசெயர்கள்களை விடுதலையாக்கினார். இயேசு சிலுவையில் மரித்ததினாலேயும் அவருடைய உயிர்த்தெழுதலினாலும், அவர் வெளியரங்கமான கோலமாக்கி வெற்றி சிறந்தார், அதனாலே சகல எதிரான சக்திகளும் தோற்கடிக்கப்பட்டன (யோவான் 12:31). அவரைப் பின்பற்றி வருவோருக்கும் அவருடைய வெற்றி, வெற்றியைக் கொடுத்தது (1 கொரிந்தியர் 15:57; 2 கொரிந்தியர் 2:14).

சாத்தான் இயேசுவை எதிர்த்து நிற்கும்படி மனிதரைத் தூண்டுகிறான். விதை விதைக்கிறவனுடைய உவமையில், வசனத்தைக் கேட்கிறவர்களுடைய இருதயத்திலிருந்து அவர்கள் கீழ்ப்படியாதிருக்கும்படி சாத்தான் வசனத்தைப் பறித்துக் கொள்கிறான் என்று இயேசு போதித்தார் (மத்தேயு 13:19; மாற்கு 4:15; லூக்கா 8:12). அவன் பேதுருவைத் தூண்டி இயேசுவுக்கு தப்பான வாக்கியத்தைச் சொல்ல வைத்தான் (மத்தேயு 16:22, 23) மேலும் கோதுமையை புடைக்கிறது போல அவரைப்புடைக்க வகை தேடினான் (லூக்கா 22:31) அவன் யூதாஸ்க்குள் நுழைந்து இயேசுவைக் காட்டிக் கொடுக்கும்படி அவன் மூலம் கிரியை செய்தான் (லூக்கா 22:3; யோவான் 13:2, 27). தம்மை எதிர்த்துத் தர்க்கித்த யூதர்களை இயேசு, அவர்களுடைய பிதா பிசாசு என்றும் பிசாசின் இச்சைப்படி செயல்பட்டார்கள் என்றும் சொன்னார் (யோவான் 8:44). அவன் தன்னுடைய இச்சைகளின்படி செய்கிறவர்களை பிடித்து வைத்திருக்கிறான் (2 தீமோத்தேயு 2:26).

"பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" என்று யோவான் எழுதினார் (1 யோவான் 3:8ஆ). இயேசு தமக்கு நெருங்கி வருகிற சிலுவையிலறையப்படுதலும் தொடர்ந்து அவர் உலகத்தின் அதிபதிகளை வெற்றிசிறக்க இருந்ததையும் பார்த்த இயேசு சொன்னார், "இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" (யோவான் 12:31). மற்றொரு இடத்தில் இயேசு சாத்தானை "இவ்வுலகத்தின் அதிபதி" என்று சொன்னார் (யோவான் 16:11; காண்க 14:30). பிசாசின் சகல முயற்சிகளையும் இயேசு முறியடித்து அவனுடைய இச்சைகளை நிறைவேற்ற வகைதேடின உலகத்தின் அதிபதிகளையும் தோல்வியுறச் செய்தார்.

சாத்தான்தான் சகல பேய்களுக்கும், அல்லது பொல்லாத ஆவிகளுக்கும் அதிபதியாயிருக்கிறான் (மத்தேயு 9:34; 12:24; மாற்கு 3:22; லூக்கா 11:15), அவைகள் அவனுடைய "தூதர்கள்," அல்லது "செய்தி கொண்டு வருபவர்கள்" (*angeloi*; மத்தேயு 25:41), அவைகள் மூலம் அவன் கிரியை செய்கிறான். அவன் ஆகாயத்து அதிகாரபிரபு (எபேசியர் 2:2) இவ்வுலகத்தின் அதிபதி அல்லது இப்பிரபஞ்சத்தின் தேவன் (யோவான் 12:31; 2 கொரிந்தியர் 4:4). சாத்தானின் வல்லமைகளை பவுல், "இப்பிரபஞ்சத்தின் லோகாதிபதிகள், வான மண்டல்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் என்று சொன்னார்" (எபேசியர் 6:12ஆ). தேவன் இயேசு கிறிஸ்து மூலமாக வெற்றி கொண்ட "துரைத்தனங்களும் அதிகாரங்களும்" இவைகளே.

இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல், மற்றும் பரமேறிச் சென்றது, அவர் உரிந்து போட்டது - அதாவது எடுத்துப் போட்டது - அவர் மேல் அதிகாரம் காட்டத்துவங்கிய அவைகளின் கட்டுப் பாட்டிலிருந்து

விடுதலையாக்கினவர்கள் மீதும் அதிகாரஞ் செலுத்தின அனைத்தின் மேலும் வெற்றி கொண்டார். இயேசு மூலமாக தேவன் அவைகளின் பெலவீனத்தையும் அவருடைய பெலத்தையும் காண்பித்தார். இதினால், கிறிஸ்தவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கமுடியும். கிறிஸ்து மூலமாக, நாம் சாத்தானின் அதிகாரத்தை வெற்றி கொள்ள முடியும், அனைத்து உலகத்தின் அதிகாரிகளும், பொல்லாதவர்களும் அவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள்.

உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் விசுவாசத்தினால் வருகிறது (1 யோவான் 5:4). கொலோசெயர்கள் பொல்லாத சக்திகள் மேல் வெற்றி கொண்டார்கள், ஏனெனில் தேவனுடைய செயலின் மேல் அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தினால்தான், அவர்கள் தாங்கள் பெற்ற ஞானஸ்நானத்திலே இயேசுவின் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்களாயிருந்தார்கள். அர்னால்டு கவனித்து ஆராய்ந்ததில்:

> *கொலோசெயர்கள் ஏற்கனவே தேவனுடைய வல்லமையின் பயன்களின் மேல் விசுவாசம் வைத்தனர் (Greek energeias tou theou; 2:12) - கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்ப ஏதுவான போதிய வல்லமையின் மேல் - அவர்கள் கிறிஸ்துவில் வைத்த விசுவாசத்தால் இணைக்கப்பட்ட ஆரம்ப கட்டத்தில் இருந்தார்கள். இதன் ஆசிரியர் இப்பொழுது மறைமுகமாக அதே வகையான விசுவாசத்தை தேவனுடைய/கிறிஸ்துவினுடைய வல்லமையில் வைக்கவும் "அதிகாரங்கள்" மேல் வாசகர்கள் நம்பிக்கை வையாமல் அவைகளுக்கு ஒப்புக் கொடுக்காமலும் இருக்க உற்சாகமளிக்கப்படுகின்றனர், அதினால் பலதரப்பட்ட ஆசரிப்புகளுக்கு கீழ்ப்படியாமல் அவர்களின் உள்ள ஸ்தோயிக்க வல்லமையைக்குறித்த பயன் மற்றும் துரைத்தனங்கள் அதிகாரங்கள் மீது நம்பிக்கை வைக்காமலிருக்க ஊக்கமளிக்கப்படுகின்றனர்.*[61]

"வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்" (கொலோசெயர் 2:15ஆ)

தேவன் எதிரிடையாக இருக்கிற அனைத்து சக்திகளையும் வெளியரங்கமான கோலமாக்கி அவைகள் மேல் இயேசு மூலம் வெற்றி சிறந்தார். "கோலமாக்கின"தாலே, என்று சொன்னதன் மூலம் பவுல் துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் இருந்த தன்மையை தேவன் வெளிப்படுத்தி, முற்றிலும் வல்லமையற்ற நிலமையையும் உதவியற்ற நிலமையையும் வெளியரங்கமாக்கினார். இதைச் செய்வதன் மூலம், அவர்களின் பலவீனங்களை வெளியரங்கமான கோலமாக்கி தமது வல்லமையையும் காட்டினார். இயேசுவின் செயலின் மூலம், தேவன் அதிகாரமிக்க சக்தியான சாத்தானுக்கு கீழ்ப்படிந்திருந்தவர்களை அதிகாரமற்றவர்களாக்கினார் - அவைகளை அழிப்பதன் மூலமல்ல, ஆனால் அவைகளை கீழ்ப்படுத்தி வெற்றி கொண்டு கோலமாக்கி அவர்களின் ஸ்திரமற்ற தன்மையை வெளிப்படுத்தினார், தேவனுடைய சர்வவல்லமையின் செயல் இது.

சாத்தான் தொலைநோக்குத் திறன் உடையவனல்ல, அவனுக்கு சேவகம் புரிகிறவர்களாலும் அது கூடாது. கொரிந்தியர்களுக்கு எழுதியபோது, பவுல்

ஞானத்தைக் குறித்து, "அதை இப்பிரபஞ்சத்து பிரபுக்களில் ஒருவனும் அறிய வில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே" (1 கொரிந்தியர் 2:8) என்று சொன்னார். கடந்த காலத்தில் அவர்கள் பலமுள்ளவர்களாக காணப்பட்டார்கள் ஆனால் உலகத்தின் பெலனற்றதும் வெறுமையானதுமான கட்டுப்பாட்டுக்குள் இருப்பதை அவர்கள் வெளிப்படுத்தினார்கள் (கலாத்தியர் 4:9). அவர்கள் தங்கள் தோல்வியை எதிர்பார்த்திருக்க முடியாதிருந்தது, தேவன் அவைகளை வெளிப்படையான கோலமாக்கி வெற்றி சிறந்தார்.

உலகப்பிரகாரமான சக்திகளும் சாத்தானின் அதிகாரங்களும் இயேசு மரித்ததினாலே அவர்கள் தேவனை வெற்றிகொள்ளலாம் என்று நினைத்திருந்தன. அவரை சிலுவையிலே அறையப்பட வைத்ததினால், தாங்கள் ஜெயித்து விட்டதாக நம்பினர். அவர்கள் உயிர்த்தெழுதலை எதிர்பார்க்கவில்லை! அவர்களுடைய சுய கேடுகளான செயல்களால் அவர் அழித்து போகப் பண்ணப்பட்டார்கள்.

அவர் மூலமாய் (en autō) என்பது அநேகமாக "அது" என்று குறிப்பிடப்படுவதைக் காட்டிலும் (KJV; NKJV; TNIV), "சிலுவை" மூலம் என்று சொல்லப்படுவதைக் காட்டிலும் (NIV) இயேசு மூலம் என்று பொருள்படுத்துவதே சரியாக இருக்கும் (RSV; NASB). இந்த மொழிபெயர்ப்புக்களின் அடிக்குறிப்பில் மேற்குறித்த இரண்டு அர்த்தங்களுமே இலக்கண ரீதியாக சாத்தியமே என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதன் உள்ளடக்கம் தான் அதன் அர்த்தத்தை முடிவு செய்யக்கூடும். முந்தின வசனங்களில் (2:9-11, 12, 13). இயேசுவில் மற்றும் இயேசு மூலமாய் எல்லாம் நிறைவேற்றப்படுவதால் அவர் மூலமாய் தேவன் நடப்பிக்கும் தொடர் செயல் இந்த வசனத்துக்குப் பொருத்தமான அர்த்தமாகும்.

வெளியரங்கமான கோலமாக்கி என்பதற்கு *deigmatizō,* எனும் கிரேக்க வார்த்தை, பயன்படுத்தப்பட்டுள்ளது. இது திருமறைச் சாராத இலக்கியங்களில் பொதுப் படையாக அவமதிப்பாகக் கூறப்படுகிறது. இந்த அர்த்தமுடைய வார்த்தை காணப்படுகிற ஒரே புதிய ஏற்பாட்டு வெறோரு வசனப்பகுதி யோசேப்பு மரியாளை அவமானப்படுத்த விரும்பாமல் இரகசிமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான் (மத்தேயு 1:19), என்பதே.

இயேசு சிலுவையின் மேல் மரித்த அந்த காட்சி ஒரு வெளிப்படையான கோலமாக்கப்பட்டு அவதிமதிக்கப்பட்ட போதிலும் (எபிரெயர் 12:2), தோல்வி போல் தோற்றமளித்த செயலையே தேவன் உயிர்த்தெழுதல் மூலம் வெற்றியாக மாற்றினார். மரணம் அவரை கட்டிப்போடக்கூடாதிருந்தது (நடபடிகள் 2:24). இயேசுவை மறுபடியும் உயிர்பெறச் செய்ததினால், தேவன் அவருடைய மரணத்தைத் தூண்டிவிட்ட பொல்லாத சக்திகளின் கையாலாகாத தனத்தை வெளிப்படுத்தினார்.

"வெற்றிசிறத்தல்" எனும் உருவகம் (thriambeuō), 2 கொரிந்தியர் 2:14ல் மட்டுமே குறிப்பிடப்படுகிற மற்றொரு இடம், அது வெற்றிக் கொடி நாட்டும் ரோம படைத்தளபதியின் செயலோடு ஒப்பிடப்படுகிறது.

> ரோம வெற்றியின் பின்னனியிலிருக்கிற படைத்தளபதிகளின் தோற்றத்தை வெளிச்சமிட்டு காட்டி அவர்களின் அதிகாரத்தை வெளிப்படுத்தும்

காட்சியை அடிப்படையாகக் கொண்டு பவுல் கட்டி எழுப்புகிறார். ஒரு படைத்தளபதி யுத்தத்தில் தனது படையை வெற்றிப்பாதையில் நடத்தும் போது, தாயகம் திரும்பும் யுத்த வீரர்கள் தங்கள் வெற்றியை கொண்டாடும்படிக்கு "வெற்றிப்புகழ் ஊர்வலம்" நடத்துவர், வெற்றியை நிலைநாட்டிய படைத்தளபதி தீவிர ஊர்வலத்தை முன் நின்று நடத்தி தனது படை தன்னைத் தொடர தெருக்களினூடே வெற்றிக் கீதங்கள் முழங்க தங்களுடைய வெற்றிக்களிப்பில் ஊர்ந்து செல்வர். தோல்வியுற்ற ராஜாவும் கொள்ளையாடப்பட்ட அவனுடைய பொருட்களோடு தன் படை வீரர்களும் சூழ அந்த ஊர்வலத்தில் கைதிகோலத்தில் எல்லாரும் காணத்தக்க காட்சிப் பொருளாக கொண்டுவரப்படுவார்கள்.[62]

பொல்லாத சக்திகள் தோற்கடிக்கப்பட்ட பின், பவுல் அவர்களை ஒரு வெற்றி கொள்ளப்பட்ட வெளியரங்கமான கோலமாக்கப்பட்ட அவமரியாதையைச் சந்தித்த கூட்டமாக அந்தக் காட்சியை விவரிக்கிறார். வெற்றிகரமான திட்டமிட்ட வெற்றியை அடைந்து விட்ட ரோம படைத்தளபதிகள், தங்களுடைய சிறை பிடிக்கப்பட்ட ராணுவ வீரர்களின் ஆடைகளை உரிந்து தாழ்ச்சியடைந்த கூட்டமாக பொது ஜனங்களுக்கு முன்பாக நெருக்களினூடே கொண்டு போக விடுவார்கள். தோல்வியுற்ற எதிரிப்படையை கண்ணுறும் ஜனங்கள் அவர்களால் தங்களுக்கு இனியொரு பயமுமில்லை என்பதை உணருவார்கள்.

தேவன் இயேசு மூலமாக பொல்லாத சக்திகளை தோல்வியுறச் செய்யும் காட்சி விவரிக்கப்படுகிறது. வெற்றிப் புகழ் ஊர்வலத்தில், வெற்றியாளரான - அவர் - அவர்களை தோற்கடித்த காட்சியை வெளியரங்கமாக்கி காட்டுவார். இந்த உருவகம் நேரடிப் பொருளில் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது, ஏதோ தோற்கடிக்கப்பட்ட அவர்கள் விலங்கிடப்பட்டு தெருக்களினூடே ஒரு பெரிய வெற்றிக் களிப்பு ஊர்வலத்தில் கொண்டு போகப்படுவதல்ல. மாறாக, இந்த உருவகம் தோல்வியுற்று கீழ்ப்படுத்தப்பட்ட பொல்லாத அதிகாரப்பிரபுக்கள் தோலுரித்துக் காட்டப்பட்டனர். "ஆகிலும் இந்தப் பகுதியில் உட்படுத்தப்பட்ட உருவகத்தின் பயன்பாடு, தங்களுடைய மனதிலுள்ளதை வெளிப்படுத்த ஒரு உவமையைக் காட்டி, உதாரணமாக, 'வெற்றி விழா செல்வது போல் மகிழ்வது.' "[63]

எபேசியர் 4:8ல், வித்தியாசப்பட்ட பதங்களை பவுல் பயன்படுத்துவதனால், பொல்லாத சக்திகளின் தோல்வி அதே போன்றது என்று காட்டினார் என்பதுபோல காணுகிறது. கிறிஸ்து தேவனுடைய வலது புறத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சகல அதிகாரங்களும் - நல்லதும் பொல்லாததுமான அனைத்தும் - அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டன (எபேசியர் 1:20-22). பொல்லாத சக்திகளெல்லாம் அவருடைய உயிர்த்தெழுதல் மற்றும் வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுதல் மூலம் வெற்றிகொள்ளப்பட்டன!

மேலும் கற்றுக்கொள்ள

2:11-13ல் சொல்லப்படுகிற ஞானஸ்நானம் முற்றிலும் விருத்தசேதனத்துக்கு ஒப்பானதா?

2:11-13ல் பவுல் ஞானஸ்நானத்தையும் விருத்தசேதனத்தையும்

ஒப்பிட்டபோது, ஞானஸ்நானம் முற்றிலும் விருத்தசேதனத்துக்கு ஒப்பானது என்று சொன்னாரா? இல்லை, ஒரே ஒரு பொருளிலதான் அந்த ஒப்பிடுதலைக் காட்டுகிறார்: மாமிச விருத்தசேதனம் மாம்ச (நுனித்தோலை) துண்டை அப்புறப்படுத்துவது போல, ஆவிக்குரிய விருத்தசேதனம் ஆவியில் தீட்டுப்பட்டதை அப்புறப்படுத்துகிறது. (2:13ஆ, வின் விவாதத்தைக் காண்க.)

இரண்டு செயல்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமை முற்றிலுமாக அவை சமமானவை என்று பொருள் படாது. ஞானஸ்நானம் என்பது விருத்த சேதனத்தை விட வித்தியாசமான நோக்கத்தை நிறைவேற்றுகிறது. விருத்தசேதனம் என்பது யூதர்களின் உடன்படிக்கைக்கு அடையாளம், (அல்லது முத்திரை) அது தேவன் அவர்களுடைய தேவன் என்றும் கானான் தேசத்தை கொடுப்பதாகச் சொன்ன வாக்குத்தத்தையும் நினைவுபடுத்தக் கூடியதாயிருந்தது (ஆதியாகமம் 17:7, 8) ஞானஸ்நானம் ஜனங்களை தேவனுடைய பிள்ளைகளாக்கியது, ஆபிரகாமுடைய ஆவிக்குரிய பிள்ளைகளாக, அதினால் ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட பரலோகத்தை அவர்கள் சுதந்தரித்துகொள்ளச் செய்கிறது (கலாத்தியர் 3:16, 29; 1 பேதுரு 1:3, 4). பழைய ஏற்பாடு பெரும்பாலும் சரீரப்பிரகாரமான நிஜங்களை மட்டுமே செயல்படுத்தியது, புதிய ஏற்பாடு அநேகக் காரியங்களில் ஆவிக்குரிய நிஜங்களை செயலாற்றுகிறது.

கருத்து	பழைய ஏற்பாடு (சரீரப்பிரகார)	புதிய ஏற்பாடு (ஆவிக்குரியது)
1. தேவனுடைய பிள்ளைகளில் ஒருவராக்கப்படும் பிறப்பு:	எபிரெய குடும்பத்தில் மாம்சப் பிறப்பு (லேவியராகமம் 12:1, 2)	ஆவிக்குரிய பிறப்பு, தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தில் **ஞானஸ்நானம்** (யோவான் 3:5)
2. அந்த பிறப்புக்குப் பின்பு அளிக்கப்படுகிற முத்திரை	மனுஷர்களால் செய்யப்படும் விருத்த சேதனமே முத்திரை, அது ஆண் குழந்தை தேவனுடைய குடும்பத்தில் ஒருவனாகக் காட்டப்பட (காண்க ரோமர் 4:11).	தேவனால் கொடுக்கப்படும் பரிசுத்த ஆவியே முத்திரை, அது புதிய கிறிஸ்தவனை தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாக்குகிறது (2 கொரிந்தியர் 1:22).
	அது ஆபிரகாமின் சந்ததிக்கு கொடுக்கப்பட்ட உடன்படிக்கையின் அடையாளம் (ஆதியாகமம் 17:11).	பரிசுத்த ஆவி ஞானஸ்நானத்தின் மூலம் தேவனுடைய பிள்ளைகளாவோருக்குரிய முத்திரை (3:26, 27; 4:6).

இந்த ஒப்பீடு பின்வருவனவற்றை வெளிப்படுத்துகிறது: சரீரப் பிகாரமான பிறப்பை எபிரெயக் குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் அடைந்தனர். விருத்தசேதனம் ஒரு ஆண் குழந்தை தேவனுடைய உடன்படிக்கையின் ஜனங்களின் ஒருவன் என்பதை அடையாளப்படுத்தும்படி நடப்பிக்கப்பட்டது. ஞானஸ்நானம் *ஆவிக்குரிய* பிறப்பில் ஒருவரை தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தில் ஒரு அங்கமாக்குகிறது. கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியினால் முத்திரையிடப்படுகின்றனர் ஏனெனில் அவர்கள் தேவனுடைய

பிள்ளைகளாயிருக்கின்றனர் (கலாத்தியர் 4:6).

சரீரப்பிரகாரமான பிறப்பைத் தொடர்வரும் மனுஷ கைகளினால் செய்யப்பட்ட விருத்த சேதனத்துக்கும், ஞானஸ்நானத்தில் பெற்ற ஆவிக்குரிய பிறப்பைத் தொடர்ந்து தேவனால் கொடுக்கப்பட்ட முத்திரையாகிய பரிசுத்த ஆவிக்கும் இணையானதாக இருக்கிறது. இணைவாகப் பேசப்படுவது ஞானஸ்நானத்திற்கும் விருத்தசேதனத்தும் இடையிலான காரியமல்ல. மாறாக ஒரு இணைவு மாமிச பிறப்புக்கும் ஞானஸ்நானத்துக்குமிடையேயானது, இரண்டாவது இணைவு (ஒப்பீடு) விருத்தசேதனமாகிய முத்திரைக்கும் பரிசுத்த ஆவியானவர் முத்திரிப்பதற்கும் இடையிலானது.

ஞானஸ்நானத்தையும் விருத்த சேதனத்தையும் இணைவாகப் பேசினால், பிறகு விருத்தசேதனம் பெற்றவர்களும் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு சமமாக தேவனுடைய போதனை அமைந்துவிடும், இப்படியாக பின் வரும் செயல்கள் இடம் பெற வேண்டியதாகும்:

1. *ஞானஸ்நானம் ஆண் பிள்ளைகளுக்கு மட்டுமே அவசியமாகிறது (ஆதியாகமம் 17:10).*
2. *ஆண் பிள்ளைகளுக்கு பிறந்த எட்டாம் நாளிலே ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டியதாகும் (ஆதியாகமம் 17:12).*
3. *எதிர்பார்க்கும் ஆசீர்வாதம் கானானாக தான் இருக்கும் (ஆதியாகமம் 17:8), பரலோகமல்ல.*
4. *விளைவு "உடன்படிக்கையின் அடையாளம்," நிரந்தரமானதும் தெளிவாக வெளியில் தோற்றமளிப்பதாகவுமிருக்கும் (ஆதியாகமம் 17:11).*
5. *பணத்திற்கு வாங்கப்பட்ட அடிமைகள் (வேலைக்காரர்கள்) ஞானஸ்நானம் பெறுவது அவசியமாகும், அவர்கள் எப்படிப்பட்ட விசுவாசத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் கொண்டிருந்தாலும் சரி (ஆதியாகமம் 17:13).*
6. *ஞானஸ்நானம் பண்ணப்படாதவர்கள் ஜனத்தின் நடுவிலிராதபடி அறுப்புண்டு போகவேண்டும் (ஆதியாகமம் 17:14).*
7. *குழந்தைப் பிராயத்துக்கு மேலிருக்கிற ஆண்கள் எவ்வித தேவையையும் சந்திக்காமலேயே ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும். ஒரே தேவை அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாகவோ ஒரு யூதனால் கிரயத்துக்கு வாங்கப்பட்ட அடிமையாகவோ இருந்தால் போதும் (ஆதியாகமம் 17:27).*

ஞானஸ்நானம் விருத்தசேதனத்துக்கு ஒத்த அதே கோரிக்கை தேவைகளோடு செயல்படுத்தப்பட வேண்டியதானால் ஞானஸ்நானம் பெறுவோரிடம் திருமறை எதிர்பார்க்கும் தேவைகள் அவசியமற்றதாகி விடும். எப்படியிருப்பினும், இன்று ஞானஸ்நானத்தின் மூலம் அவருடைய பிள்ளைகளாகிறவர்கள் பின்வரும் காரியங்களைச் செய்யும்படி புதிய ஏற்பாடு எதிர்பார்க்கிறது:

1. *தேவனுடைய வசனத்தைக் கேட்க வேண்டும் (நடபடிகள் 2:41; 18:18).*

2. கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் (மாற்கு 16:15, 16; நடபடிகள் 8:12; 18:8).
3. ஞானஸ்நானத்துக்கு முன் மனந்திரும்ப வேண்டும் (நடபடிகள் 2:38).
4. புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி எழுப்பப்பட வேண்டும் (ரோமர் 6:4).

நமக்குள் பாவசுபாவம் (இயல்பாக) இருக்கிறதா?

"பாவசுபாவம்" எனும் கருத்து ஒரு இறையியல் யூகம். அடிப்படையில் மனிதர்கள் ஆதாம் ஏவாளிடமிருந்து கெட்டுப்போன சுபாவத்தை சுதந்தரித்தவர்களாய் பிறக்கிறார்கள் என்பதாகும். அது நன்மை தீமை அறியச் செய்த (விலக்கப்பட்ட) கனியை புசித்ததிலிருந்து வந்த பாவசுபாவம் என்ற அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்பட்ட உபதேசம் (ஆதியாகமம் 3:6). ஆகிலும், திருமறை வசனப்பகுதியில், அவர்களுடைய சுபாவம் கெட்டுப்போனது என்று எந்த ஒரு போதனையுமில்லை. நன்மை தீமை அறியத்தக்க அந்த கனியை புசிக்கும் நாளில் அவர்கள் சாகவே சாவார்கள் என்று தேவன் சொல்லியிருந்தார் (ஆதியாகமம் 2:17) அவர்கள் பிசாசானவனுக்கு ஒப்பாக, எந்த பொல்லாத இயல்பையும் வளர்த்துக் கொள்வார்கள் என்று சொல்லவில்லை.

ஆதாமும் ஏவாளும் சுபாவத்தில் கெட்டவர்களாகவில்லை என்று இரண்டு வேதாகம குறிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. வாக்கியமும் குறிப்பிடப்படவில்லை. (1) *ஆதியாகமம் 3:7-10.* அவர்கள் கனியைப் புசிப்பதற்கு முன் நிர்வாணிகளாயும் வெட்கப்படாதவர்களாயுமிருந்தனர் (ஆதியாகமம் 2:25). அவர்கள் புசித்த பிறகு, அவர்கள் தாங்கள் நிர்வாணிகளாயிருப்பதை அறிந்தார்கள். கெட்டுப்போன சுபாவமுடைய மனுஷர்களைப் போல, தங்களுடைய நிர்வானத்தை வெளியே காட்டிக் கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் வெட்கப்பட்டார்கள். அவர்கள் மறைந்து கொண்டு உடுத்திக்கொள்ள முயற்சித்தார்கள். அவர்களுடைய சுபாவம் கெட்டுப்போனதாக மாறியிருக்குமானால், அவர்களுடைய மனசாட்சி அவர்களை வெட்கப்படுவதற்கு விட்டிருக்காது அல்லது ஆடைகளைத் தேட அனுமதித்திருக்காது. (2) *ஆதியாகமம் 3:22அ.* "இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப் போலானானான்" என்று தேவன் சொன்னார். தேவன் நன்மை தீமைகளை அறிவார் ஆனால் கெட்ட சுபாவம் அவருக்குள் இல்லை, ஆதாமும் ஏவாளும் நன்மை தீமை அறியத்தக்கவர்களான போது, ஒழுக்க ரீதியான காரியங்களை தெரிவு செய்யும் போராட்டம் அவர்களுக்குள் துவங்கியது. கனியை புசித்த அந்த நாளிலே அவர்கள் ஒழுக்க ரீதியான அறியாமையை விட்டு விட்டனர், அறிந்து கொள்ளும் நிலைக்குள் நுழைந்து விட்டனர். அப்பொழுதிலிருந்து, அவர்கள் நன்மைக்கும் தீமைக்கும் இடையே தெரிவு செய்ய வேண்டியவர்களாயினர். ஏறத்தாழ உடனடியாக, ஒரு நல்லொழுக்க தெரிவை செய்தனர், அது தங்களுக்கு ஆடைகளை உண்டு பண்ணி உடுத்திக் கொள்வது, இது அவர்கள் நல்லது செய்யவே விரும்பினர், தீமையையல்ல என்பதை குறிப்பிடுகிறது.

ஆதாமும் ஏவாளும் தீமையானவர்களாய் மாறினார்கள் என்று சொல்லுவதற்குப் பதிலாக நாம் நியாயமாக அவர்கள் ஒரு *நல்ல* சுபாவத்தை

வளர்த்துக் கொண்டார்கள் என்ற முடிவுக்கு வர வேண்டும்; ஏனெனில் அவர்கள் *நன்மையை* அறிந்து கொண்டார்கள் அதே போல *தீமையையும்* அறிந்து கொண்டார்கள் இருப்பினும், விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்ததன் விளைவாக, அவர்களுடைய சந்ததியினர் - அனைத்து ஜனங்களும் - நன்மை தீமை - அறியத்தக்க அறிவை ஒரு குறிப்பிட்ட வயதை அடையும்போது வளர்த்துக்கொள்கிறார்கள் (உபாகமம் 1:39). மாம்ச மரணத்தையும் கூட சந்திக்கிறார்கள். ஆதாம் ஏவாள் பாவத்தின் விளைவை நாம் அனுபவிக்கிறோம், ஆனால் அவர்களுடைய மீறுதல்களை நாம் சுமப்பதில்லை. நமக்கு ஏற்பட்டுள்ள விளைவு நாம் மரிப்போம் (1 கொரிந்தியர் 15:22). மேலும் நாம் தான் நமக்கான ஒழுக்கத் தெரிவை செய்து கொள்ள வேண்டும் (ஏசாயா 7:16).

கொலோசெயர் 2:11ல் குறிப்பிடப்பட்டுள்ள "கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனம்" என்பது பற்றிக்கொண்டுள்ள பாவ சுபாவத்தை அகற்றுவதில்லை ஏனெனில் மனுஷர்கள் அகற்ற ஏதுவான பாவ சுபாவத்தைக் கொண்டிருப்பதில்லை, மாறாக, ஆவிக்குரிய விருத்தசேதனம் என்பது வளர்ந்து விட்ட கெட்டுப்போன செயலையும் மாமிச இச்சைகளுக்குத் தங்களை உட்படுத்திய தன்மையின் ஒட்டுமொத்த உணர்வுகளையும் தவறான ஒழுக்க மற்றும் ஆவிக்குரிய தெரிவுகளினால் செய்த பாவச் செயல்களையும் அகற்றுகிறது.

எல்லாரும் பாவஞ்செய்து, என்பதில் "எல்லாரும்" என்று ரோமர் 3:9, 19, 23ல் சொல்லப்பட்டிருப்பது நாம் விவாதித்துக் கொண்டிருக்கும் கூட்டத்தைச் சேர்ந்த எல்லாரும் என்று புரிந்து கொள்ள வேண்டும், பாவம் செய்யக் கூடிய "எல்லாரும்" பாவஞ்செய்தார்கள் ஆகிலும் பாவஞ்செய்யும் திராணி "எல்லாருக்கும்" இல்லை (யோவான் 9:41). குழந்தைகளும் சில பெரியவர்களும் கூட நல்லது கெட்டது அறிகிற மனோ பெலனில்லாமல் இருக்கிறார்கள். பரலோக ராஜ்யம் சிறுபிள்ளைகளுக்குரியது (மத்தேயு 19:14); இப்படியாக அவர்கள் ராஜ்யத்துக்குள் நுழைய மறுபடியும் பிறக்க வேண்டுவதில்லை (யோவான் 3:5).

தங்கள் வாழ்க்கையில் ஒழுக்கரீதியான வளர்ச்சியைப் பெற்றவர்கள் எல்லாரும் பாவஞ்செய்தவர்களானார்கள் என்று பவுல் எழுதினார் (ரோமர் 3:23) மற்றும் அவர்கள் "கிறிஸ்துவின் விருத்தசேதனம்" தேவையுடையவர்களாயிருக்கின்றனர். "கிறிஸ்துவின் விருத்தசேதனத்திற்குத்" தங்களை ஆவிக்குரிய ரீதியில் உட்படுத்தினவர்கள் புரிந்து கொண்டவர்களாய் இருக்கும் போது மட்டுமே மாம்ச உணர்வுகளும் பாவங்களின் விளைவுகளும் களைந்து போடப்படும்.

ரோமர் 7:18-23 ஐ மனித குலமே பாவசுபாமுள்ளவர்களாக இருப்பதாக போதிப்போர் தவறாக அதை விளக்கமளிக்கின்றனர். பவுல் பாவசுபாவமே தன்னை பாவம் செய்யப் பண்ணியது என்று சொல்லவில்லை. மாறாக, அவர் "ஆதலால் நானல்ல, எனக்குள் இருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது" என்று சொன்னார் (ரோமர் 7:17). இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "அல்ல ... ஆனால்" என்ற கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இந்த கட்டமைப்பு (*mē ... alla* or *ou ... alla*) என்பது புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் காணப்படுகிறது (யோவான் 6:27; 1 தீமோத்தேயு 5:23; 1 பேதுரு 3:3, 4), இதன் வலியுறுத்தல் வாக்கியத்தின் இரண்டாம் பகுதியில் காணப்படுகிறது,

இருப்பினும் முன்பகுதியை தவிர்த்துப் பேசுவதில்லை. பவுல் சொல்லுவதன் பொருள், "நான் தனித்து இதை செய்வதில்லை, ஆனால் எனக்குள் வாசம் பண்ணுகிற பாவமே அப்படிச் செய்கிறது" என்பதாகும்.

எப்படியிருப்பினும், பவுல் தான் பாவஞ்செய்தார் என்பதை ஒப்புக்கொண்டார், ஆனால் பாவஞ்செய்ய அவர் விரும்பவில்லை (ரோமர் 7:15-21). அவரிடத்தில் கெட்டுப்போன சுபாவம் இருந்திருக்குமேயானால், அவர் தீமை செய்ய விரும்பியிருப்பார். அது பாவ சுபாவமல்ல ஆனால் அது அவரைப் பாவஞ்செய்யப்பண்ணுகிற (தூண்டுகிற) *பாவமே*. ஏற்கனவே, ரோமர் 6:16ல், அடிமைப்படுத்தும் பாவத்தைக் குறித்துப் பேசினார், அதேபோல இயேசுவும் (யோவான் 8:34), பேதுருவும் (2 பேதுரு 2:19) பேசினர். எல்லோருமே தங்கள் வாழ்க்கையில் பாவத்தை அனுமதித்து, ஒவ்வொருவரும் பாவத்தோடு போராடிக் கொண்டுள்ளனர் - ஆகிலும் பாவ சுபாவத்தோடல்ல.

"மாம்சம்" என்பது (*Sarx*) "பாவசுபாவத்தைக்" குறிக்கிறதா?

கிரேக்க புதிய ஏற்பாட்டில் *sarx* எனும் பதம் பலதரப்பட்ட வடிவத்தில் 150 முறை காணப்படுகிறது. இவைகளில் பெரும்பாலான வசனப்பகுதிகளில், "பாவசுபாவம்" என்று அது பொருள் படவில்லை. உதாரணமாக, இயேசு *சார்க்ஸானார்*, அதாவது "மாம்சமானார்" (யோவான் 1:14); அவருடைய "மாம்சம்" நமக்கு ஜீவ அப்பம் (யோவான் 6:51), ஜீவனைக் கொண்டிருக்க நாம் அதை (ஆவிக்குரிய வகையில்) உண்ண வேண்டும் (யோவான் 6:53-56; இயேசுவின் "மாம்சம்" அழிவைக் காணவில்லை (நடபடிகள் 2:31). "மாம்சத்தின்" படி அவர் தாவீதின் சந்ததியில் பிறந்தவர் மற்றும் பிதாக்கள் அவருடையவர்கள் (ரோமர் 1:3; 9:5). இயேசு "மாம்சத்தில்" வெளிப்பட்ட தேவன் (1 தீமோத்தேயு 3:16) மேலும் "மாம்சத்திலே" கொலையுண்டார் (1 பேதுரு 3:18). "பாவ சுபாவம்" என்ற அர்த்தம் இந்த வசனப்பகுதிகளுக்கு பொருந்துவதில்லை.

சார்க்ஸ் என்று ஒரு மனிதனுடைய சரீரத்திற்குப் பயன்படுத்தும்போது அவருடைய சரீரம் பரிசுத்தத்திற்கோ அல்லது அசுத்த நோக்கங்களுக்கோ பயன்படுத்தப்படக் கூடும் அதன் பொருள் அவருடைய மாம்சத்தில் உண்டாகும் நன்மை அல்லது தீமையான "மாம்ச உணர்வுகள்." இதன் அர்த்தம் வசனப் பகுதியைப் பொறுத்துக் காணப்படும் (நடபடிகள் 2:26; ரோமர் 8:7). ஜனங்கள் ஒழுக்கரீதியிலான முடிவுகளை சந்திக்கும் போது, அப்படிப்பட்ட உணர்வுகள் தீமையானவைகளாகவே காணப்படும். இப்படியாக இதன் பொருள் பெரும்பாலும் நேர்மறைக்குப் பதில் எதிர் மறையாகவே காணப்படும்.

எந்த ஒரு பிரதான கிரேக்க *lexicon*, பொருளகராதியோ, கலைக் களஞ்சியமோ சார்க்ஸ் என்பதை ஒரு "பாவ சுபாவமாக" விளக்கமாளிப்பதில்லை. பாவசுபாவத்துக்கு அருகான ஒரு குறிப்பான வசனம் என்று சொன்னால் அது ரோமர் 7:5ல் சொல்லப்படுகிற "பாவ இச்சைகள்" (*sarx*). அந்த வசனப்பகுதியிலும் கூட, பவுல் பாவமாம்சம் என்று குறிப்பிடாமல் "பாவ இச்சைகள்" என்றே குறிப்பிட்டுள்ளார் (*pathēmata*). "மாம்சம்," அல்ல "நியாயப்பிரமாணம்" தான் சரீரத்தின் அங்கங்களில் கிரியை செய்து பாவ இச்சைகளை தூண்டுகிறது.

மனிதனுடைய இச்சைகளை *sarx* வுடன் தொடர்புபடுத்தி, lexicons பின்வருமாறு விளக்கமளிக்கிறது: "(மாம்சம்) பாவத்தினால் ஆதிக்கம் பண்ணப்பட்டு மாம்சமானது எங்கிருந்தாலும். சகல வித பாவ வடிவங்களும் அங்கே (அதே போல) பிரசன்னமாகி, *சார்க்ஸிஸ்* எந்த நன்மையும் வாசமாயிருக்க விடுவதில்லை."[64] "பாவமுள்ள சரீரம்" என்று இயன்ற சாத்தியக்கூறான பொருளாக மொழிபெயர்ப்புகள் குறிப்பிடுகின்றன, ஆனால் எந்த இடத்திலும் "பாமமுள்ள சுபாவம்" என்று பயன்படுத்துவதில்லை.

Sarx, என்பதை விவாதித்த Eduard Schweizer அதன் சாராம்ஸமாக எழுதுகிறதாவது, "மாம்சமானது பூமிக்குரிய பிற காரியங்களிலிருந்து வித்தியாசப்படுத்தி பார்க்க முடியாதது மேலும் அது இயற்கையாக (இயல்பிலே) கெட்டதாக விசேஷமாக ஆபத்தானதாக இருக்கிறது. மனிதன் அதன் மீது தன் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும்போதுதான் கெட்டதாக மாறுகிறது, என்றார்."[65]

மெக்டொனால்டு சரியாக கண்ணுற்று கவனித்திருக்கிறார்,

> இருந்தும், "மாம்சம்" - *sarx*, என்பது தேவனுடைய சிருஷ்டியாக மனிதனுடைய பெலவீனத்துக்கு கொடுக்கப்பட்ட பெயரல்ல. மாம்சம் அழிவுள்ளது என்பது உண்மை தான் (1 கொரிந்தியர் 15:53) மற்றும் மரணத்துக்குப் பாத்திரமானது (2 கொரிந்தியர் 10:2). இவைகளுக்கும் மேல், பவுல் இன்னும் அதிகமான ஒழுக்க ரீதியிலான கருத்தாக *sarx*. குறித்து தனது கருத்தைக்கூறுகிறார். இப்படியாக, மாம்சமானது தன்னில்தான் பாவமுள்ளதாக இராவிட்டாலும் மனித இயல்பின் இந்த பகுதி பாவம் தன்னில் கிரியை நடப்பிக்க இடமளிக்கிறது. அது பாவம் தனது செயலைச் செய்ய ஆயத்த அடிப்படையை வழங்குகிறது. *Sarx* தான் மனிதனுக்குள் இருந்து கொண்டு பாவம் செய்கிற எண்ணத்தை ஆழப்பதித்து தன்னை இணைத்துக் கொள்கிறது. எனவே, பவுல் எந்த ஒரு மறைபொருள் தத்துவத்தையும் போதியாத போது அதன் சாரம்ஸம் தீமையான காரியமாக பெரும் வலுவுடன் செயல்படுகிறது. மாம்சம் எங்கோ ஓரிடத்தில் தீமையினால் ஊடுருவி, "மாம்சத்தின் கிரியைகளாக" செயல்படுகிறது (ஒப்பிடுக கலாத்தியர் 5:19; போன்ற வசனங்கள்).[66]

மனித வர்க்கங்களெல்லாம் பெலவீனமுள்ளவர்களும் பாவஞ்செய்ய ஏதுவானவர்களுமாயிருக்கின்றனர், நாம் பாவம் நிறைந்த சுபாவத்தால் தீமைசெய்ய பலவந்தம் பண்ணப்படவில்லை. வெகு காலத்திற்கு முன்பே யோசுவாவைப் போல (யோசுவா 24:15), நாம் யாரைச் சேவிப்போம் என்று *தெரிந்து கொள்வோம்.*

குழந்தைகள் ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டுமா?

கொலோசெயர் 2:11, 12 ஐப் பயன்படுத்தி குழந்தைகள் ஞானஸ்நானம் பண்ணப்பட இதுவே ஆதாரம் என்கின்றனர். William Hendriksen எழுதி, குழந்தைகள் ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும் என்று தான் ஏன் நினைக்கிறார் என்பதை பின்வருமாறு விளக்கப்படுத்துகிறார்.

> நான் இங்கே ஒரு தெளிவான *சம்பந்தத்தைப்* பேசுகிறேன். ஒரு

> சம முரண்பாடு என்னவெனில் நேரடியாகச் செய்யப்படுகிற விருத்தசேதனத்துக்கும். மனித கைகளால் செய்யப்படாத விருத்தசேதனத்துக்குமிடையேயானது, அதாவது விளக்கிச் சொன்னால் (பின்னது) இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனம். எனவே, பின் வரும் வாக்கியம் சரியானது; "ஆதலால், ஞானஸ்நானம் விருத்தசேதனத்தின் இடத்தைப் பெறுகிறது (கொலோசெயர் 2:11-13, பிள்ளைகள் தேவனுடைய ராஜ்யத்தின் சுதந்தரவாளிகளாக அவருடைய உடன் படிக்கையின் பிள்ளைகளாக ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும்" (*Form for the Baptism of Infants in Psalter Hymnal of the Christian Reformed Church*, Grand Rapids, Mich., *1959, பக்கம் 86).* தேவன் ஆபிரகாமிடத்தில் உடன் படிக்கையை ஏற்படுத்தின போது, அவர் குழந்தைகளையும் உட்படுத்தியே பேசினார் (ஆதியாகமம் 17:1-14). இந்த உடன்படிக்கை, அதன் ஆவிக்குரிய ஒப்பீடு புதிய யுகத்திலும் தொடர்கிறது (நடபடிகள் 2:38, 39; ரோமர் 4:9-12; கலாத்தியர் 3:7, 8, 29). ஆகையால் குழந்தைகளெல்லாம் இன்னமும் உட்படுத்தப்படுகின்றனர், மேலும் இன்னமும் அடையாளத்தைப் பெற வேண்டும், அது இந்த யுகத்தில், கொலோசெயர் 2:11, 12ல், ஞானஸ்நானம் என்று பவுல் தெளிவாக்குகிறார்.[67]

நடபடிகள் 2:39ல் சொல்லப்படும் பிள்ளைகள் சிறு குழந்தைகளல்ல ஆனால் சந்ததி. பேதுரு குழந்தைகளை அர்த்தப்படுத்தியிருந்தால், அது *brephos* என்ற ("குழந்தை") பதத்தையோ அல்லது *paidion* ("சிறு குழந்தையையோ") பயன்படுத்தியிருக்க வேண்டும். பேதுரு டெக்னான் (*teknon*) எனும் வார்த்தையைப் பயன்படுத்தினார், அது "சந்ததி" அல்லது "வம்சாவளி" என்று பொருள்படும். பாவமன்னிப்பு மற்றும் பரிசுத்த ஆவியின் வரம் ஆகிய வாக்குத்தத்தங்களெல்லாம் இஸ்ரவேல் ஜனங்களின் சந்ததிக்கு கொடுக்கப்பட்டது. இந்த ஆசீர்வாதங்களெல்லாம் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன் மனந்திரும்புகிறவர்களுக்கு கொடுக்கப்படுகிறது (நடபடிகள் 2:38). பரிசுத்த ஆவி குழந்தைகளுக்கு வாக்களிக்கப்படவில்லை.

கொலோசெயர் 2:11-13 குழந்தைகள் ஞானஸ்நானத்தை ஆதரித்துப் பேசுவதில்லை. மாறாக, இந்த வசனப்பகுதி அவர்களை தவிர்த்துப் பேசுகிறது. மாம்சப்பிரகாரமான சரீர இச்சைகள் ஆவிக்குரிய விருத்த சேதனமாகிய ஞானஸ்நானத்திலே களையப்படுகிறது, ஆனால் பிள்ளைகளுக்கு (குழந்தைகளுக்கு) மாம்ச இச்சைகளும் இராது, அவர்கள் மாம்ச கிரியைகளை நடப்பிக்கவும் முடியாது (கலாத்தியர் 5:19-21). அவர்களுடைய ஆரம்ப காலமாகிய அறியாமையின் காலத்தில் நன்மை தீமை இன்னதென்று அறியார்கள் (உபாகமம் 1:39). இந்த ஒழுக்க ரீதியான பார்வையற்ற தன்மையினால், அவர்களுக்குப் பாவமில்லை (யோவான் 9:41) அவர்களுக்கு பாவம்மன்னிக்கப்பட வேண்டுவதுமில்லை. இந்த காரணத்தினால், அவர்கள் "பாவத்தில் மரித்துப் போவதில்லை." தீமையான இச்சைகளுக்கு உட்படும்போது மட்டுமே பாவத்தில் சாகிறார்கள் (யாக்கோபு 1:13-15). குழந்தை பருவத்தில் அவர்கள் பாவத்தில் மரியாதிருப்பதால், அவர்கள் ஜீவனுடையோராக எழுப்பப்பட வேண்டுவதில்லை (கொலோசெயர் 2:13).

மேலும், அவர்கள் "தேவனுடைய செயல்களின் மேல் விசுவாசம்" வைக்க முடியாது, அது ஞானஸ்நானத்தோடு வருவது (கொலோசெயர் 2:12).

ஞானஸ்நானத்திற்கு உள்ளடக்கப்பட்ட, அதற்கு முன்பு கோரப்படுகிற காரியங்களை பிள்ளைகளால் நிறைவேற்ற முடியாது. ஞானஸ்நானம் பண்ணப்படுகிறவர்களுக்கு முதலாவதாக சுவிசேஷம் போதிக்கப்பட வேண்டும் (மாற்கு 16:15, 16); அது வசனத்தைக் கேட்டு பெற்றுக் கொள்வதற்கும் (நடபடிகள் 2:41; 18:8); விசுவாசிக்கவும் (மாற்கு 16:15, 16; நடபடிகள் 8:12; 18:8); மனந்திரும்பவும் (நடபடிகள் 2:38); மற்றும் இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடவும் தேவை (ரோமர் 10:9, 10; 1 தீமோத்தேயு 6:12).

ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு உதாரணம் ஸ்திரீகளும், புருஷர்களும்தான், குழந்தைகள் அல்ல (நடபடிகள் 8:12). இவர்கள் தான் நல்மனச்சாட்சியோடே தேவனைப் பற்றிக் கொண்டவர்கள் (1 பேதுரு 3:21). குழந்தைகள் இவைகளையெல்லாம் செய்யக் கூடாதாகையால், அவர்கள் ஞானஸ்நானத்திற்குத் தகுதியானவர்களல்ல.

குழந்தை ஞானஸ்நானத்தை நியாயப்படுத்த வாக்குவாதம் செய்ய எடுத்துக் கொள்ளப்படுகிற மற்றொரு வாக்கியம், வீட்டாரோடு ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பது அந்த வீட்டிலிருந்த குழந்தைகளும் தானே ஞானஸ்நானத்தில் உட்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்கின்றனர். இது எல்லா வீட்டாருக்குள்ளும் குழந்தைகள் இருப்பார்கள் என்ற முன் எண்ணம் கொடுப்பதாயிருக்கிறது. வீட்டார்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்ற வார்த்தை உட்படுத்தப்பட்ட வசனப்பகுதிகளில் குழந்தைகள் உட்படுத்தப்படவில்லை.

(1) நடபடிகள் 2:36-41. இஸ்ரவேல் வீட்டார் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற போதிக்கப்பட்டனர். என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள். ஞானஸ்நானம் பெற்றவர்கள் வசனத்தை ஏற்றுக் கொண்டார்கள். குழந்தைகள் இவைகளை நடப்பித்திருக்க முடியாது எனவே அவர்கள் இதிலே இணைக்கப்பட்டிருக்கவும் இயலாது.

(2) நடபடிகள் 10. கொர்நெலியு வீட்டார் தேவனுக்குப் பயந்தவர்களாதலால் பேதுருவின் செய்தியைக் கேட்கும்படி கூடி வந்திருந்தனர். பாவங்கள் மன்னிக்கப்பட, அவர்கள் விசுவாசிக்கும்படி சொல்லப்பட்டனர். அவர்கள் வசனத்தைக் கேட்டு ஏற்றுக் கொண்டார்கள் (நடபடிகள் 11:1). பிறகு அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்று அந்நிய பாஷைகளில் பேசினார்கள். இறுதியாக, அவர்கள் பேதுருவை சில நாள் தங்களோடு தங்கியிருக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். இந்த வாக்கியங்களெல்லாம் குழந்தைகளை உட்படுத்தாது.

(3) நடபடிகள் 16:14, 15. லீதியாளின் வீட்டாரில் அநேகமாக குழந்தைகளை உட்படுத்தவில்லை. லூக்கா இதைக் குறிப்பிடுகையில் "அவளுடைய வீட்டாரனைவரும்," என்று சொல்லுகிறார், அவளும், "எங்களுடைய வீட்டார்" என்று சொல்லாமல் "என் வீட்டிலே" என்று சொன்னாள். அவள் புருஷன் இல்லாதிருந்தாள் என்பதைக் காட்டுகிறது. இருப்பினும், அவளுடைய வீட்டார் என்பது வேலைக்காரர்களையும் அல்லது அடிமைகளையும் உட்படுத்தியிருக்கக் கூடும்.

(4) நடபடிகள் 16:23-34. பவுலும் சீலாவும் பிலிப்பிய சிறைக் காவலனிடம் அவனும் அவனுடைய வீட்டாரும் இரட்சிக்கப்பட விசுவாசிக்க வேண்டும் என்று சொன்னார்கள். பின்பு வீட்டிலிருந்த அனைவருக்கும் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்தார்கள் - இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று இயேசு போதித்தவைகள் உட்பட எல்லாவற்றையும் திட்டமாய் போதித்தார்கள் (மாற்கு 16:15, 16). இதைத் தொடர்ந்து சிறைக்காவலனும் அவனுடைய வீட்டாரும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். பின்பு அவர்கள் சந்தோஷப் பட்டார்கள். பவுல் குழந்தைகளுக்கு கர்த்தருடைய வசனத்தை பிரசங்கித்திருக்கமாட்டார், அவர்களால் விசுவாசித்திருக்கவும் முடியாது - இருந்தும் அவர் "வீட்டிலிருந்த எல்லாருக்கும்" வசனத்தைப் பிரசங்கித்தார்.

(5) நடபடிகள் 18:8. கிறிஸ்பு (பவுல் தானே ஞானஸ்நானப்படுத்தியவர்; 1 கொரிந்தியர் 1:14) கேட்டு கர்த்தரில் தன் வீட்டாரனைவரோடும் விசுவாசம் வைத்தான், குழந்தைகள் விசுவாசிக்கும் திராணியற்றவர்கள்.

(6) 1 கொரிந்தியர் 1:16 பவுல் ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் ஞானஸ்நானம் கொடுத்ததாக எழுதினார். இங்கேயும் குழந்தைகள் உட்படுத்தப்படவில்லை, ஏனெனில் அவருடைய வீட்டார், "பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்களென்றும் அறிந்திருந்திருந்தார்கள்" (1 கொரிந்தியர் 16:15).

ஆதிசபையிலே குழந்தைகள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார் களென்பதற்கான உதாரணம் எதுவுமில்லை. ஞானஸ்நானத்திற்கு முந்தைய தேவைகள் குழந்தைகளுக்கு பொருந்தாதவை, எனவே ஞானஸ்நானம் பெறுவதிலிருந்து அல்லது அதன் தேவையிலிருந்து அவர்களைத் தவிர்க்கிறது.

பயன்பாடு

நமக்குள் கிறிஸ்து

கிறிஸ்தவர்களின் ஜீவியத்தில் கிறிஸ்து ஜீவிப்பதன் முக்கியத்துவம் அவைகளின் உள்ளான உறவுமுறையை ஊடுருவிப் பார்த்தால் காணமுடியும். கிறிஸ்தவர்களாகிய நாம், நம்முடைய மனதால் தேவன் கிறிஸ்து மூலமாக திட்டமிடுவதை அறியமுடியும் (2:2). நாம் கிறிஸ்துவில் நடக்க வேண்டும் (2:6), அவருக்குள் பிழைக்கிறவர்களாக நடந்து கொள்ள வேண்டும் (2:13) மேலும் தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீர முழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக் கொள்ள வேண்டும் (2:19). இயேசுவின் வசனம் நமக்குள்ளே வாசம் பண்ணவேண்டும் (3:16). கிறிஸ்துவிலே நமக்கிருக்கிற உறவுமுறையின் அடிப்படையில் மற்றவர்களோடு நமக்கு இருக்கிற உறவுமுறை அமைய வேண்டும்: மனைவிகள் "கர்த்தருக்கேற்கும்படி" தங்களுடைய புருஷர்களுடன் உறவுமுறையைக் கொண்டிருக்க வேண்டும் (3:18); பிள்ளைகள் தங்களுடைய பெற்றோர்களுக்கு "கர்த்தருக்குப் பிரியமுண்டாகத்தக்க வகையில்" கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (3:20); வேலைக்காரர்கள் "தேவனுக்குப் பயப்படும் பயத்துடன்" தங்கள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (3:22); எஜமான்கள் தங்களுக்குப் "பரலோகத்தில் எஜமான்

இருக்கிறாரென்று அறிந்து" வேலைக்காரர்களை நன்கு நடத்த வேண்டும் (4:1). செய்கிற ஒவ்வொரு ஊழியமும் இருதயப் பூர்வமாய் செய்து, அது கிறிஸ்துவுக்குச் செய்யும் ஊழியமாகக் கருத வேண்டும் (3:23).

மனுஷருடைய உபதேசங்களைப் பின்பற்ற மறுத்தல் (2:8)

இயேசுவே ஞானத்துக்கும் அறிவுக்கும் இயேசுவே மூலகாரணியாயிருக்கிறார் என்று நாம் மனதில் கொள்ள வேண்டும். மனிதனுடைய பாரம்பரியங்கள் கபடமுள்ளவைகள். ஒரு கிறிஸ்தவன் மனித ஞானத்துக்கும் அறிவுக்கும் தன்னைத் திருப்புவானேயானால், அவன் தன் ஆத்துமாவைத்திருப்பிப்படுத்துகிற சுத்தமான தண்ணீரை விடுத்து, மனுஷனுடைய சேறான சிந்தையாகிய அசுத்த (மாசுபட்ட) தண்ணீருக்குத் திரும்புகிறான். தேவன் எரேமியாவிடத்தில் இஸ்ரவேலர்கள் ஜீவியத்தண்ணீர் ஊற்றாகிய தம்மை விட்டுவிட்டு, தண்ணீர் நிற்காத வெடிப்புள்ளத் தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள் என்று சொன்னார் (எரேமியா 2:13).

உபதேசக் கோட்பாடுகள், சட்டங்கள், மற்றும் மனுஷருடைய பாரம் பரியங்களெல்லாம் ஒரு தோட்டத்தில் இருக்கிற முள்ளுகளுக்கும் களைகளுக்கும் ஒப்பானவை. அவைகளை யெடுக்கப்பட்டு நல்லதொரு அறுவடையைக் காண வேண்டும். நல்ல நீருற்றில் கலந்துவிட்ட மாசுபடிந்த நீர் போன்றவை அவை, அல்லது சுகமளிக்கும் மருந்தில் சேர்க்கப்படும் விஷத்தைப் போன்றது. இயேசுவின் சுத்தமான போதனை மட்டுமே கிறிஸ்தவர்களால் ஏற்றுக்கொள்ளாப்பட வேண்டும். அது மட்டுமே இரட்சிக்கும்.

இயேசு முழுமையான தெய்வீகம் உடையவர் (2:9)

பிதாவைக் காட்டிலும் இயேசு குறைவான தன்மையுடையவரல்ல. சகல மனுஷர்களுக்கும் மிக அதிகமான மேன்மையுள்ளவர் அவர். இந்தக் காரணத்தினால், அவருக்கு மிக உயர்ந்த மதிப்பையும் கனத்தையும் காட்ட வேண்டும். அவர் தொழுகைக்குப் பாத்திரமானவர். ஆட்டுக்குட்டியானவராகிய இயேசுவுக்கு முன்பாக, இருபத்தி நான்கு மூப்பர்களும் வணக்கமாய் விழுந்து (வெளிப்படுத்தின விசேஷம் 5:8) சகல பரமசேனைகளோடுங்கூட அவருக்கும் பிதாவுக்கும் தெய்வீகத் கனத்தைச் செலுத்தினார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 5:11-14). தேவதூதர்கள் தொழுது கொள்ளும்படி அறிவுருத்தப்பட்டார்கள் (எபிரெயர் 1:6).

தெய்வமாக, மனுஷீக அளவீட்டுக்கு அவர் உட்பட்டிருக்கவில்லை. அவருக்கு சர்வ வல்லமையும் அதிகாரமும் உண்டு (மத்தேயு 28:18), மற்றும் அவருடைய பிரசன்னம் பிரபஞ்சம் முழுக்க ஊடுருவக் கூடியதாயிருப்பதால் அவரைப் பின்பற்றுகிற எல்லாரோடும் எங்கிருந்தாலும் இருக்க முடியும் (மத்தேயு 28:20; காண்க சங்கீதம் 139:7-12).

இயேசு நம்முடைய தேவைகளுக்கு நிறைவுள்ளவராக (முழுமையாக) இருக்கிறார் (2:10)

நிறைவாயிருக்கிற ஒருவராக, இயேசு நம்முடைய தேவைகள் எல்லாவற்றையும் நமக்கு அளிக்கிறார். இதை சாத்தியமாக்கிய கடைசி

செயல் சிலுவையிலே அவர் மரித்ததுதான், (எபிரெயர் 5:8, 9). அவர் தம் ஜீவியத்தாலும், மரணம், மற்றும் உயிர்த்தெழுதலாலும், எல்லா ஜனங்களுக்கும் தேவையான சாத்தியமான ஆசீர்வாதங்களை அவர் ஏற்படுத்தினார். இவைகள் தேவனோடு ஒப்புரவாகுதலையும் உட்படுத்தியது (2 கொரிந்தியர் 5:18-20; கொலோசெயர் 1:20-22), பாவமன்னிப்பையும் (மத்தேயு 26:28), நீதியையும் (2 கொரிந்தியர் 5:21), அதே போல சரீர மற்றும் ஆவிக்குரிய தேவைகளையும் நிறைவேற்றுகிறார் (பிலிப்பியர் 4:19). கிறிஸ்தவர்கள் மிகுந்த உறுதியான நம்பிக்கையோடு, "கர்த்தர் எனக்கு சகாயர்" என்று சொல்லலாம் (எபிரெயர் 13:6அ). அவர், "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, நான் உன்னைக் கை விடுவதுமில்லை" என்று வாக்களித்திருக்கிறார் (எபிரெயர் 13:5).

தம்மைப் பின்பற்றுவோருக்கு அவர் அக்கறை காட்ட திராணியுள்ள வராகையால், கிறிஸ்தவர்கள் அவருக்குள் பூரணப்படுத்தப்படுகிறார்கள். மக்களுக்கான அவருடைய அக்கறை நிபந்தனையைக் கொண்டது. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுவோருக்கு அவர்களுடைய தேவைகளெல்லாம் சந்திக்கப்படும் என்று இயேசு சொன்னார் (மத்தேயு 6:33). நீதியுள்ள வாழ்க்கையை வாழ்பவர்களுக்கு தேவன் எதையும் நிறுத்தி வைப்பதில்லை (சங்கீதம் 84:11).

இயேசு நமக்கு அளித்துள்ள காரியங்கள் (2:11-13)

கிறிஸ்தவர்கள் அவருக்குள் பூரணப்பட்டவர்களாயிருக்கிறார்கள், ஏனெனில் நம்முடைய தேவைகள் எல்லாவற்றையும் அவர் நமக்கு அளித்திருக்கிறார். நாம் ஆவிக்குரிய விருத்தசேதனத்தையும் புதிய ஜீவனையும், பாவமன்னிப்பையும் பெற சாத்தியமாக்கியிருக்கிறார்.

(1) ஆவிக்குரிய விருத்தசேதனம். எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களானோம் (ரோமர் 3:23), ஆக எல்லாருமே பாவத்தால் கிறிஸ்தவனாவதற்கு முன் தீட்டுப்பட்டவர்களாயிருந்துள்ளோம். ஒருவருடைய கீழ்ப்படிதலுள்ள பதில் செயலின்போது, இயேசு அவரை எல்லா ஆவிக்குரிய மாசுவிலிருந்தும் சுத்திகரிக்கிறார். விருத்த சேதனத்தின் மூலம் மாம்சம் (நுனித்தோல்) அகற்றப்படுவது போல, பாவச் செயல்கள் இனியும் கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு பாகமாக இருப்பதில்லை. அவன் கிறிஸ்தவராகும்போது, ஒரு ஒட்டுமொத்த மாற்றம் இடம் பெறுகிறது; அவன் பாவத்துக்கு ஊழியம் செய்வதை விட்டு இயேசுவுக்கு ஊழியஞ்செய்யும் வாழ்கையைத் துவங்குகிறான்.

(2) புதிய ஜீவன். ஒரு நபர் கிறிஸ்தவனாவதற்கு முன், அவன் ஆவிக்குரிய முறையில் பாவத்தில் மரித்தவனாயிருக்கிறான். தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினால், அவன் ஞானஸ்நானத்தின்போது ஆவிக்குரிய பிரகாரமாக உயிர்ப்பிக்கப்படுகிறான். அவனுடைய கடந்தகால தீய குணாதிசயங்களும் செய்கைகளும் ரு முடிவுக்கு வருகிறது, புதிய ஜீவனும் தொடக்கம் பெறுகிறது (ரோமர் 6:4). இயேசுவுக்கு புதிய ஜீவனை ஒப்புக் கொடுக்கப்பட்டால் மட்டுமே இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் பங்குபெறுகிற விளைவு ஏற்படும். கிறிஸ்தவனாக மாறுகிற ஒருவன் மறுரூபமாக வேண்டியவன் (ரோமர் 12:2). ஒரு அசிங்கமான தோற்றமுடைய கம்பளிபுழு மிக அழகான பட்டுப்பூச்சியாக மாறுவதற்கு ஒப்பானது இந்த

மறுரூபம்.

(3) பாவமன்னிப்பு. ஒரு நபர் புது ஜீவனைப் பெறுகிறபோது, தேவன் அவனுடைய சகல மீறுதல்களையும் மன்னித்து, அவைகளை மறுபடியும் நினைப்பதில்லை (எபிரெயர் 8:12). கடந்த கால பாவத்தினிமித்தம் சுய - ஆக்கினை எண்ணத்தை பாவ மன்னிப்புப் பெற்ற ஒருவனின் இருதயத்தில் இனியும் பாரமாக அமிழ்த்தி. துக்கத்தோடும் செயலற்ற தன்மையோடும் இருக்க ஒட்டாது. அதைப் பவுல் குறிப்பிடுகிறதாவது: "பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறோம்" (பிலிப்பியர் 3:13அ, 14). பாவமன்னிப்பை உணரும் தன்மை ஒருவரை பெரிய ஒப்புக்கொடுத்தலுக்கு உந்துகிறது. தொடர்ந்து பாவமன்னிப்பைப் பெற, ஒரு கிறிஸ்தவன் ஒளியிலே நடக்க வேண்டும் (1 யோவான் 1:7), அவன் மனந்திரும்பி தேவனிடத்தில் தன் பாவங்களை அறிக்கை செய்ய வேண்டும் (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9).

இயேசுவே நமக்கு எல்லாவற்றுக்கும் எல்லாமாக இருக்கிறார். அவர் தெய்வீகம் நிறைந்தவர். நாம் அவருக்குள் பூரணராக்கப்படுகிறோம், ஏனெனில் அவர் நம்முடைய சகல ஆவிக்குரியத் தேவைகளையும் அளிக்கிறார்.

இயேசு நியாயப்பிரமாணம் நடுவிலிராதபடி எடுத்துப்போட்டார் (2:14, 15)

நியாயப்பிரமாணம் பெலவீனமுள்ளதும் நம்முடைய பாவங்களை எடுத்துப்போட திராணியற்றதுமாயிருந்தபடியால் (ரோமர் 8:3; எபிரெயர் 7:18, 19) இயேசு அதை நடுவிலிராதபடி எடுத்துப் போட்டார் (2:14). நியாயப்பிரமாணம் அதை மீறுபவர்கள் மீது சாபத்தைக் கொண்டு வந்தது (கலாத்தியர் 3:10). எல்லாரும் பாவம் செய்தபடியால் எல்லாரும் சபிக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 3:23). நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து கிறிஸ்து நம்மை மீட்டார் (கலாத்தியர் 3:13).

நியாயப்பிரமாணம் இரக்கமற்றதாயிருந்தபடியால் (எபிரெயர் 10:28), புதிய உடன்படிக்கையில் இரக்கம் முன்னளிக்கப்பட்டது (எபிரெயர் 8:12). கிருபை நியாயப்பிரமாணத்தின் மூலம் வரவில்லை (கலாத்தியர் 5:4), ஆனால் இயேசு கிருபையையும் சத்தியத்தையும் கொண்டுவந்தார் (யோவான் 1:14, 16, 17). நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவர்களின் மீது அது மரணத்தைக் கொண்டு வந்தது (2 கொரிந்தியர் 3:7). இயேசு மூலமாக மட்டுமே ஆவிக்குரிய ஜீவியம் உண்டாகும் (யோவான் 14:6; 1 யோவான் 5:11, 12).

நியாயப்பிரமாணத்தின் கீழ் ஜீவிப்பவர்கள் ஆக்கினைத்தீர்ப்புக்குள் இருக்கிறார்கள் (காண்க 2 கொரிந்தியர் 3:9) அவர்களிடத்தில் நீதி வாசமாயிருப்பதில்லை (கலாத்தியர் 2:21; 3:21). இயேசுவுக்குள் இருப்பவர்கள் அவர் மூலமாய் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் (ரோமர் 5:21; 2 கொரிந்தியர் 5:21).

பாவிகளின் பாவத்தால் சாத்தான் அவர்கள் மேல் அதிகாரமுடையவனாயிருக்கிறான் (எபிரெயர் 2:14). பாவமன்னிப்பை அளித்து நியாயப்பிரமாணத்தை எடுத்துப்போட்டதால், இயேசு சாத்தானையும் அவனுடைய பொல்லாத சக்திகளையும் தோல்வியுறச் செய்தார். கிறிஸ்தவர்கள் இயேசு மூலமாக வெற்றி பெறுகின்றனர் (1 கொரிந்தியர் 15:56, 57).

குறிப்புகள்

[1]1 கொரிந்தியர் 11:3; எபேசியர் 1:22; 4:15; 5:23; கொலோசெயர் 1:18. [2]இந்த ஆசீர்வாதங்களெல்லாம் இந்த வசனங்களில் கிரமமாக பெயரிடப்பட்டுள்ளன, ரோமர் 3:24; 8:1, 39; 1 கொரிந்தியர் 1:2, 4 (காண்க 2 தீமோத்தேயு 1:9); 2 கொரிந்தியர் 5:17, 19, 21; எபேசியர் 1:7; 2:13; கொலோசெயர் 1:14; 2 தீமோத்தேயு 2:10; 1 யோவான் 5:11. [3]Ralph P. Martin, *Colossians and Philemon,* New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973), 81. [4]The KJV translates *sarx* as "flesh" 147 times, "carnal" twice, "carnally" once, and "fleshly" once. [5]H. C. G. Moule, *The Epistles to the Colossians and to Philemon,* The Cambridge Bible for Schools and Colleges (Cambridge: University Press, 1893; reprint, 1902), 103. [6]Ibid. [7]Martin, 82. [8]R. C. Lucas, *The Message of Colossians and Philemon: Fullness and Freedom*, The Bible Speaks Today (Downers Grove, Ill.: InterVarsity Press, 1980), 102. [9]David M. Hay, *Colossians*, Abingdon New Testament Commentaries (Nashville: Abingdon Press, 2000), 94–95. [10]Herbert M. Carson, *The Epistle of Paul to the Colossians and Philemon: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 67.

[11]These words are *sunthaptō* ("buried with"; v. 12a); *sunegeirō* ("raised with"; v. 12b); and *suzōopoieō* ("made alive with"; v. 13b). Compare with Rom. 6:5, 8; Phil. 3:10; Col. 3:1; 2 Tim. 2:11. [12]John E. Burkhart, *Worship* (Philadelphia: Westminster Press, 1982), 131. [13]William Hendriksen, *Exposition of Colossians and Philemon*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1964), 117, n. 87. [14]*American Heritage Dictionary*, 3d ed. (2001), s.v. "baptize." [15]Ernest Klein, *A Comprehensive Etymological Dictionary of the English Language* (Amsterdam: Elsevier Publishing Co., 1966), 1:147. [16]Lars Hartman, "Baptism," in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freeman (New York: Doubleday, 1992), 1:583. [17]Massey H. Shepherd, Jr., *Encyclopedia International* (Danbury, Conn.: Lexicon Publications, 1981), 378. [18]J. B. Lightfoot, *Notes on the Epistles of St. Paul: 1 and 2 Thessalonians, 1 Corinthians 1—7, Romans 1—7, Ephesians 1:1–14*, Thornapple Commentaries (London: MacMillan & Co., 1895; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1980), 296. [19]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translators Handbook on Paul's Letters to the Colossians and to Philemon*, Helps for Translators (New York: United Bible Societies, 1977), 57. [20]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary* (Colorado Springs, Colo.: Chariot Victor Publishing, Cook Communications, 1989), 2:127.

[21]James D. G. Dunn, *The Epistles to the Colossians and to Philemon*, The New International Greek Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1996), 156. [22]Albrecht Oepke, *baptō,* in *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Kittel, trans. and ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 1:539. [23]Barclay M. Newman and Eugene A. Nida, *A Translators Handbook on Paul's Letter to the Romans* (New York: United Bible Societies, 1973), 53. [24]A. S. Peake, *Epistle to the Colossians*, The Expositor's Greek Testament, ed. W. Robertson Nicoll (New York: George H. Doran Co., 1897), 526. [25]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament*, trans. and rev. Joseph H. Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 513. [26]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 2d ed., trans. William F. Arndt and F. Wilbur Gingrich, rev. and aug. F. Wilbur Gingrich and Frederick W. Danker (Chicago: University of

Chicago Press, 1979), 663. [27]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 819. [28]See J. B. Lightfoot, *St. Paul's Epistles to the Colossians and to Philemon*, rev. (London: Macmillan & Co., 1916), 185; and Carson, 67. See other passages where the objective genitive appears: *மாற்கு* 11:22; *ரோமர்.* 3:22, 26; *கலாத்தியர்* 2:16, 20; 3:22; *எபேசியர்* 3:12; *பிலிப்பியர்* 1:27; 3:9; 2 *தெசலோனிக்கேயர்* 2:13. [29]Marvin R. Vincent, *Word Studies in the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1946), 3:168. [30]The same word appears in *எபேசியர்* 1:19; 3:7; 4:16; *பிலிப்பியர்* 3:21; *கொலோசெயர்* 1:29; 2 *தெசலோனிக்கேயர்* 2:9, 11.

[31]J. Ithel Jones, *The New Bible Commentary* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 1048. [32]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 140. [33]Herbert M. Carson, *Stand Perfect in Wisdom* (Grand Rapids, Mich.: Baker Book House, 1981), 110. [34]Lewis B. Radford, *The Epistle to the Colossians and the Epistle to Philemon*, Westminster Commentaries (London: Methuen and Co., 1931), 232. [35]Ralph P. Martin, *Colossians: The Church's Lord and the Christian's Liberty* (Exeter, England: Paternoster Press, 1972), 87. [36]Bratcher and Nida, 58. [37]G. R. Beasley-Murray, *Baptism in the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1962), 154. [38]Karl Braune, "The Epistle of Paul to the Colossians," in *A Commentary on the Holy Scriptures: Critical, Doctrinal, and Homiletical, with Special Reference to Ministers and Students*, trans. M. B. Riddle, ed. John Peter Lange (Edinburgh: T. & T. Clark, 1870), 7:46. [39]Eduard Schweizer, *The Letter to the Colossians: A Commentary*, trans. Andrew Chester (Zürich: Benziger Verlag, 1976; reprint, Minneapolis: Augsburg Publishing House, 1982), 146. [40]J. Gresham Machen, *New Testament Greek for Beginners* (Toronto: Collier-Macmillan, 1951), 12.

[41]***காண்க ரோமர் 5:15-18, 20; 11:11, 12; 2 கொரிந்தியர் 5:19; கலாத்தியர் 6:1; எபேசியர் 1:7; 2:1, 5.*** [42]Bauer (2000), 770. [43]Ibid., 954. [44]Peter T. O'Brien, *Colossians, Philemon*, Word Biblical Commentary, vol. 44 (Waco, Tex.: Word Books, 1982), 119. [45]Bratcher and Nida, 60. [46]Bauer (2000), 290. [47]Ibid., 1083. [48]Ibid., 254. [49]E. K. Simpson and F. F. Bruce, *Commentary on the Epistles to the Ephesians and the Colossians*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957), 238. [50]Hendriksen, 120–21.

[51]Ibid., 121, n. 90. [52]Carson, *Colossians,* 69. [53]***காண்க யாத்திராகமம் 43:22-25; லேவியராகமம் 10:9, 11:1-40; எண்ணாகமம் 10:10; 29:6; உபாகமம் 5:12-15; 2 நாளாகமம் 8:13.*** [54]Lightfoot, *Colossians,* 189. [55]Carson, *Colossians,* 69. [56]Bauer (2000), 344. [57]Ibid., 28–29. [58]H. Dermot McDonald, *Commentary on Colossians & Philemon* (Waco, Tex.: Word Books, 1980), 86. [59]Ibid. [60]Clinton E. Arnold, *The Colossian Syncretism* (Grand Rapids, Mich.: Baker Books, 1996), 279.

[61]Ibid., 302. [62]Ibid., 281. [63]Bratcher and Nida, 63. [64]Bauer (2000), 915. [65]Eduard Schweizer, "sarx," in *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Friedrich, trans. and ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 7:135. [66]McDonald, 102. [67]Hendriksen, 116, n. 86.

NIV வேதாகமத்தில் *Sarx* [“மாம்சம்”]

புதிய இன்டர் நேஷனல் மொழிபெயர்ப்பும் (2001 ல் மறுபதிப்பு செய்யப்பட்ட இன்றைக்கான புதிய இன்டர் நேஷனல் மொழிபெயர்ப்பும்), சம்பந்தமில்லாத ரீதியில், “பாவசுபாவம்” எனும் வார்த்தையை இடைச் செருகலாக திருமறை வசனப்பகுதியில் சேர்த்துள்ளது. “மாம்சம்” என்று பொருள்படுத்தப்பட்ட *“சார்க்ஸ்”* எனும் கிரேக்க வார்த்தை, சில வேளைகளில் “பாவசுபாவம்” என்று புதிய இன்டர் நேஷனல் மொழிபெயர்ப்பு போன்ற மொழிபெயர்ப்புகளில் பயன்படுத்தப்பட்டது. மற்ற மொழிபெயர்ப்புகளில் பெரும்பாலும் பயன்படுத்தப்படவில்லை.

புதிய இன்டர்நேஷனல் மொழிபெயர்ப்புகளான NIV மற்றும் TNIV ஆகியவைகள் *சார்க்ஸ்* என்பதை “பாவ சுபாவம்” என்று கொலோசெயரில் இருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது (2:11, 13). அதன் அடிக்குறிப்பில், “அல்லது *மாம்சம்*” என்று கூறப்பட்டது. அவைகளை ஏற்றுக் கொள்ளும் வகையில், கொலோசெயரில் வேறுசில வசனங்களில் குறிப்பாக புதிய இன்டர்நேஷனல் மொழிபெயர்ப்பில் சார்க்ஸ் என்பது வித்தியாசமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: “மாம்ச சரீரம்” physical body *(1:22); “மாம்சம்”* flesh *(1:24); “சரீரத்தில்”* personally *(2:1); “சரீரம்”* body *(2:5); “மாம்ச சிந்தை”* unspiritual mind *(2:18); “சுய (மனித) இஷ்டம்”* human *(2:23); “உலகம்”* earthly *(3:22).* “ஜென்ம சுபாவம்” எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டதாகையால், முறையற்ற ரீதியில் சார்க்ஸ் என்பதை பயன்படுத்தினதுமல்லாமல், மனித சுபாவத்தைக் குறித்து திருமறை பேசும் கருத்தை முரண்பாடாகக் காட்டுகிறது. கீழ்வரும் வசனப்பகுதிகளை ஒப்பீடுக:

		KJV	NASB	NIV
ரோமர்	7:5	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
	7:18	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
	7:25	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
	8:3	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
		"பாவமாம்சம்"	"பாவமாம்சம்"	"பாவமனுஷன்"
		"மாம்சம்"	"மாம்சம்"	"பாவமனுஷன்"
	8:4	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
	8:5	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
		"மாம்சம்"	"மாம்சம்"	"அந்த சுபாவம் விரும்புகிறவைகள்"
	8:7	"மாம்சசிந்தை"	"மாம்சத்தில் வைக்கும் சிந்தை"	"பாவசிந்தை"
	8:8	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
	8:9	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
	8:12	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
		"மாம்சம்"	"மாம்சம்"	("அது")
	8:13	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
	13:14	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
1 கொரிந்தியர்	5:5	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
	5:16	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
	5:17	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
		"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
	5:19	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
	5:24	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
	6:8	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
		"மாம்சம்"	"மாம்சம்"	"அந்தசுபாவம்"
எபேசியர்	2:3	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
		"மாம்சம்"	"மாம்சம்"	("அதின்")
	2:11	"மாம்சம்"	"மாம்சம்"	"பிறப்பின் மூலம்"
		"மாம்சம்"	"மாம்சம்"	"சரீரத்தில்"
கொலோசெயர்	2:11	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
	2:13	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
2 பேதுரு	2:10	"மாம்சம்"	"மாம்சம்"	"பாவசுபாவம்"
	2:18	"மாம்சம்"	"மாம்சசிந்தனை"	"பாவமுள்ள மனுஷசுபாவம்"

10

தலையைப் பற்றிக் கொண்டிருத்தல்

(2:16–23)

நியாயப்பிரமாணத்தின் சட்டதிட்டங்களும் ஒழிக்கப்பட்டு சகல பொல்லாத சக்திகளும் தோற்கடிக்கப்பட்ட நிலையில் (2:8ஈ மற்றும் 10ஆ வில் சொல்லப்பட்ட விவாதத்தைக் காண்க) பவுல் நியாயமான முடிவுரைக்குத் தொடர்கிறார். அவர் கொலோசெயர்களிடம் இந்த திட்டங்களை அவர்கள் பின்பற்ற கடமைப்பட்டவர்களல்லவென்றும் அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்ட மதப் பாரம்பரியங்களைக் கைக்கொள்ளும்படி மற்றவர்களின் வற்புறுத்தலுக்கு கீழ்ப்படிய வேண்டாம் என்றும் சொன்னார்.

நியாயப்பிரமாணத்துக்குப் பதிலாக கிறிஸ்துவைப் பின்பற்றுதல் (2:16, 17)

[16]ஆகையால் போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஒய்வுநாட்களையுங் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. [17]அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது.

"ஆகையால் போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது,
பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையுங் குறித்தாவது,
ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக" (2:16)

துவக்க வார்த்தையாகிய **ஆகையால்** *(oun)* அதற்கு முந்தைய வசனத்தின் முடிவுரைக்கு அடையாளமாகக் காணுகிறது. கொலோசெயர்கள் இயேசுவை நோக்கிப் பார்க்கவும் தேவனை எப்படிப் பிரியப்படுத்த வேண்டுமென்றும் கொலோசெயருக்குச் சொல்லி, மற்றவர்களுடைய நியாயத்தீர்ப்பு எப்படியிருந்தாலும் இயேசுவின் போதனையை இவர்கள் எப்படி கைக்கொள்ள வேண்டுமென்றும் பவுல் சொன்னார்.

ஒருவேளை கொலோசெயில் சிலர், குறிப்பாக யூதமத பின்னணியைக் கொண்டிருந்தவர்கள், கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தை விட்டு மிக அதிகமாகவே விலகிப் போகிறார்கள் என்றும் வேறு பல சமுதாய விதிமுறைகளை மீறுகிறார்களென்றும் நினைத்தார்கள். கொலோசெயர்கள் இனியும் இவைகளுக்குக் கட்டுப்பட்டவர்களல்ல, ஏனெனில் அவர்கள் இப்பொழுது இயேசுவுக்கு மட்டுமே கீழ்ப்படிய வேண்டியவர்கள். மனுஷர்களால் உண்டாக்கப்பட்ட சுய சட்டங்களைப் பின்பற்றாமைக்காக கண்டனம்

பண்ணுகிற சமுதாயத்துக்குக் கீழ்ப்படிவதைவிட இயேசுவுக்குத் தங்களை கீழ்ப்படுத்துவது அவசியம் என்று காட்டுகிறார்.

இதற்கு முந்தைய வாக்கியங்களெல்லாம் வசனம் 16 வரை கொலோசெயர்கள் ஏன் இயேசுவை மட்டும் பின்பற்ற வேண்டுமென்பதற்கு பலமான காரணங்களை அவைகள் கொண்டிருக்கின்றன:

- அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது (2:3).
- தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் அவருக்குள் வாசமாயிருக்கிறது (2:9).
- கொலோசெயர் அவருக்குள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறார்கள் (2:10ஆ).
- சகலதுரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவர் தலைவராயிருக்கிறார் (2:10அ).
- அவர்கள் ஞானஸ்நானத்தின்மூலம் அவரைப்பற்றும் விருத்த சேதனத்தைப் பெற்றார்கள் (2:11, 12).
- ஞானஸ்நானத்தின் மூலம் அவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு அவர்களுடைய அக்கிரமங்களெல்லாம் மன்னிக்கப்பட்டது (2:13).
- அவர் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை குலைத்துப்போட்டு அவைகளை சிலுவையிலே அறைந்தார் (2:14).
- துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு வெளியரங்கமான கோலமாக்கினார் (2:15).

உடனடி வசனப்பகுதி, விசாலமான வசனப்பகுதிக்குப் பதிலாக, பவுலின் முடிவுரைக்கு அடிப்படையாக கொலோசெயர்கள் நியாயப்பிரமாணத்திற்கோ அல்லது தீமையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கிற அதிகாரத்தின் ஆதிக்கத்துக்கோ கீழ்ப்படிந்து விடக்கூடாது என்று குறிப்பிட்டார். 2:14ல் நியாயப்பிரமாணம் எடுபட்டு போயிற்று என்றும் 2:15ல் எதிரிடையாக இருந்த சகல சக்திகளும் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார். இயேசு அவர்களின் அதிகாரத்தை ஏறத்தாழ ஒழித்துப் போட்டுவிட்ட நிலையில் தமது செயலின் மூலம் அவர்களுடைய அதிகாரத்தின் மேல் வெற்றி சிறந்தார், கொலோசெயர்கள் இயேசுவால் கொண்டு வரப்பட்ட ஜெயத்தின் சுதந்திரத்தை அநுபவிக்க வேண்டும்.

முன் நடந்த விவாதங்களை முன்வைத்து, கொலோசெயர்கள் மனித அதிகாரத்தின் மூலம் கொடுக்கப்பட்ட சட்டங்களினால் ஏன் கட்டுப்படக் கூடாது என்பதற்கு மேலும் காரணங்களை பவுல் கொடுத்தார் - அது நியாயப்பிரமாணமாயினும் அல்லது மனித விதிகளானாலும் சரி.

கொலோசெயர்கள் குறிப்பிட்ட போஜனம் மற்றும் பானத்துக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டுவதில்லை. இயேசு தாமே போஜனங்கள் அனைத்தும் பரிசுத்தமானவை என்று போதித்தார் (மாற்கு 7:19). இந்தக் கிறிஸ்தவர்கள் யூதருடைய பண்டிகை நாட்களையோ, யூதர்களின் மாதப்பிறப்புகளையோ கைக்கொள்ள எதிர்பார்க்கப்படவில்லை, அல்லது ஓய்வுநாளில் ஓய்ந்திருக்கும்படி கட்டளையிடப்படவுமில்லை. அவர்கள்

இந்த கட்டளைகளுக்கு விடுதலை பெற்றிருக்கிறார்கள், மேலும் மற்றவர்கள் (இவர்களுடைய) காரியங்களைக் **குற்றப்படுத்தும் நீதிபதிகளாயிருக்க** *விட வேண்டாம் என்றும் கூறப்பட்டனர். "குற்றப்படுத்துதல்" எனும் வினைச்சொல் (krinō), இந்த வசனப்பகுதியிலும் இதற்கு ஒப்பான வேறு வசனப்பகுதிகளிலும் பவுல் பயன்படுத்தியிருக்கிறவிதம், "தயவு தாட்சண்ய மற்ற, கண்டனத்தை" உய்த்து உணரச் செய்கிறதாயிருக்கிறது. அவர் "ஒருவனும் ஒருவனையும் குற்றப்படுத்த வேண்டாம்" என்று எழுதுவதன் மூலம் அவர் வித்தியாசப்பட்ட போஜனங்களை புசிப்பதை குறித்து கிறிஸ்தவர்களுக்கு சுதந்தரத்தை அறிவித்தார் (ரோமர் 14:13அ; காண்க ரோமர் 14:3, 4; 1 கொரிந்தியர் 10:29). மேலும் அவர் "ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்லாத" போஜனங்களைக் குறித்தும் எழுதினார் (1 தீமோத்தேயு 4:3-5).*

இயேசுவின் அதிகாரம் மற்றும் ஊழியத்தின் மூலம், கொலோசெயிலிருந்த சகோதரர்கள் இந்த நியமங்களை கைக்கொள்வதிலிருந்து விடுதலையாகியிருந்தார்கள். இந்தக்காரணத்தினால், ஒருவரும் அவர்களை கடுமையாக குற்றப்படுத்த விடக்கூடாது, அவர்கள் அவைகளை கைக் கொள்ளாததற்காக அவர்களின் தெரிவை கண்டனம் பண்ணி, அல்லது அவர்கள் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்கள் என்று சொல்லி குற்றவாளிகளாகத் தீர்க்க இடமளிக்கக் கூடாது. அவைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமா இல்லையா என்பதைத் தெரிவு செய்ய அவர்கள் உரிமை கொண்டிருந்தனர். அவர்கள் தங்களுடைய சுதந்தரத்தை இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யப்பயன்படுத்துவார்களேயானால் அது மற்றவர்களை பாதிப்படையச் செய்து அல்லது கிறிஸ்தவர்களை வழக்கத்தில்லாமல் போனவைகளை கைக்கொள்ள செய்து ஒரு தவறான காரணத்துக்கு ஆதரிப்பது போன்ற செயல், அது அவர்களுடைய சுதந்தரத்தை கை நழுவிப்போக விடுவது போன்றது, உண்மையில் அது கைக்கொள்ளக் கூடியதல்ல (ரோமர் 14:13-15, 19-21; 1 கொரிந்தியர் 8:8-13). மற்றொரு புறம்பார்த்தால், அவர்கள் கிறிஸ்துவில் தங்களுக்கு இருக்கிற சுதந்தரத்தை மற்றவர்கள் பறித்துக் கொள்ளும்படி புதிய உடன்படிக்கையில் சேர்க்கப்படாதவைகளைக் கைக்கொள்ளும்படி வற்புறுத்த அனுமதிக்கக் கூடாது.

நியாயப்பிரமாணத்தையும் கிறிஸ்துவிடமிருந்து வராத ஆசரிப்புகளையும் அவர்கள் மேல் சுமத்துகிறவர்களை எதிர்த்து எப்படி கிறிஸ்தவர்கள் போராட வேண்டுமென்று பவுல் விளக்கமளித்தார். தீத்துவை விருத்தசேதனம் செய்ய நிர்பந்தித்த யூத கிறிஸ்தவர்களின் கோரிக்கைகளுக்குக் கீழ்ப்படிய அவர் மறுத்தார் (கலாத்தியர் 2:3-5). கொலோசெயிலிருந்த யூத கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தின் வழக்கங்களை கைக்கொள்ளவோ கைக்கொள்ளாமலிருக்கவோ உரிமையுள்ளவர்களாயிருந்தனர், ஆனால் எந்த ஒருவருக்கும் யூத ஆசரிப்பு முறைகளையோ அல்லது மனிதப் பாரம்பரியங்களையோ அவர்கள் மேல் திணிக்க உரிமையில்லை. கிறிஸ்தவர்கள் மனிதனால் - ஏற்படுத்தப்பட்ட விதிமுறைகளுக்குக் கீழ்ப்படியும்படி கோரப்படும்போது, இனியும் அவை ஊறுவிளைவிக்காத சமயத்தடைகளல்ல, மாறாக அவை ஊறுவிளைவிக்கும் கொடுங்கோன்மையானவர்களால் திணிக்கப்பட்ட சட்டங்களாக மாறுகின்றன.

இந்த கலாச்சார விதிகளைக் கைக் கொள்ளும்படி பலவந்தம்

பண்ணப்பட்டாலோ அல்லது கொலோசெயர்கள் கடமைப்பட்டிருந்தாலோ, இயேசு அவர்களை விடுதலையாக்கிய அதே சக்திகளுக்கு கட்டுப்படுத்தப்பட்டவர்களாகி விடுவார்கள். அவர்கள் அவர் வெற்றி சிறந்த தீமையான சக்திகளின்மேல் கிடைத்த பலன்களின் வெற்றியை அறுக்கத் தவறுகிறார்கள்.

பவுல் பட்டியலிட்ட விதிமுறைகள் அநித்தியமானவைகளை மட்டுமே ஆளுபவை. அவை நிழலேயன்றி நிஜமல்ல. அவை பலனற்ற நிழலாகவே நிலைத்திருக்கும், நிஜமானது வரும் பொழுது உண்மையான பொருளாக கிறிஸ்தவர்கள் பின்பற்றிச் செல்ல ஏதுவானவைகளாயிருக்கும்.

பவுல் கொலோசெயர்களை புசிக்கவோ, பானம் பண்ணவோ அல்லது பண்டிகைகளை ஆசரிக்கவோ, மாதப்பிறப்புக்களையும் ஓய்வு நாட்களையும் அனுசரிக்கவோ கூடாது என்று சொல்லவில்லை. மாறாக, அவர் சொன்னதெல்லாம் சகோதரர்கள் இந்த பழக்க வழக்கங்களை ஆசரிக்க கடமைப் பட்டவர்களல்ல என்றும், அவைகளை அவர்கள் கைக்கொள்கிறார்களோ கைக்கொள்ள வில்லையோ என்பது குறித்து யாரும் தங்களைக் கடுமையாக குற்றப்படுத்த அனுமதிக்க வேண்டாம் என்றும் குறிப்பிட்டார். இவைகள் இரட்சிப்புக்குரிய காரியங்களல்ல என்பதால், கொலோசெயர்கள் தங்களுடைய சுயப் பகுத்தறிவின் அடிப்படையில் செயல்பட்டிருக்க வேண்டும். இந்த விஷயங்களில் சுயமாய் தெரிவு செய்து கொள்ள அவர்களுக்கு சுதந்திரம் உண்டு, ஒரு பெலவீனமுள்ள சகோதரனின் விசுவாசத்தை அழிக்காதவரை இதுதான் உண்மை (ரோமர் 14:1-21; 15:1-3; 1 கொரிந்தியர் 8:8-13; 10:23-33; காண்க கலாத்தியர் 4:10). கொலோசெயர்கள் இந்த கட்டுப்பாடுகளுக்கு உட்படுவார்களானால் அது கேலிக்கூத்தாகும், ஏனெனில் இயேசு அவைகளை குலைத்துப் போட்டு அவைகளை வலியுறுத்துபவர்களையும் தோல்வியுறச் செய்தார்.

பவுல் இந்த ஆசரிப்புகளைக் கைக்கொள்வதை உதாரணங்களாகக் குறிப்பிட்டார். கொலோசெயர்கள் மீது கைக்கொள்ளும்படி திணிக்கவகை தேடிய வேறே அனைத்து ஆசரிப்புகளையும் இதிலே சேர்க்கவில்லை. தனது கருத்தை அவர் விளக்கப்படுத்த, பவுல் இஸ்ரவேலர்கள் கைக்கொள்ள வேண்டியிருந்த ஐந்து ஆசரிப்புக்களைக் குறிப்பிட்டு ஆனால் அவைகளை கிறிஸ்தவர்கள் கைக்கொள்ளக் கடமைப்பட்டவர்கள் அல்லவென்றும் குறிப்பிட்டார். பவுல் நியாயப்பிரமாணத்தைக் குறிப்பிட்டுப் பேசுகிறார் என்பதற்கு கூடுதல் பெலமளிக்க அவைகளில் மூன்று ஆசரிப்புகள் - "பண்டிகைகள்," "மாதப்பிறப்புகள்," மற்றும் "ஓய்வு நாட்கள்" - ஆகியவை LXX *(செப்துவஜிந்த்) தில் இதே வரிசையில் சரியாக பெயரிடப்பட்டுள்ளது (ஓசியா 2:11; எசேக்கியேல் 45:17). சாராம்ஸமாக, இதே பட்டியல் பிற இடங்களில், வித்தியாசப்பட்ட வரிசையில் கூறப்படுகிறது (1 நாளாகமம் 23:31; 2 நாளாகமம் 2:4; 31:3), பவுல் குறிப்பிடுகிற ஐந்து ஆசரிப்புகளும் நியாயப்பிரமாணத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.*

வசனம் 16ல் சொல்லப்படும் வரிசையில் இரண்டு பாகங்கள், பின்வரும் பயன்பாட்டின்படி (1) சரீரத்திற்குள் எடுத்துக் கொள்ளப்படுவது என்ன (2) யூதர்கள் கைக்கொண்ட விசேஷித்த பண்டிகைகளும் நாட்களும். இவைகளில் ஒழுக்க சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், ஆவிக்குரிய

முன்னேற்றங்கள், அல்லது கிறிஸ்தவக் தொழுகைகள் ஆகியன சேர்க்கப்படவில்லை, சரீர ஒழுக்கம் மற்றும் உலக வழிபாடுகளைத் தவிர்த்தல் ஆகியவைகளெல்லாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்கு தேவைப்படுபவை (ரோமர் 12:1-3; 1 கொரிந்தியர் 6:19, 20; 2 கொரிந்தியர் 7:1). கவனமான ஒழுக்கமுள்ள வாழ்க்கையை பவுல் ஊக்கமிழக்க வைக்கவில்லை. மாறாக அவர் மற்றவர்கள் கொலோசெயர்கள் மீது திணிக்க வகை தேடும் ஆசரிப்புகள் தேவனோடு அவர்கள் கொண்டுள்ள நட்புறவுக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லை என்பதை அவர்களை அறியச் செய்யவே பவுல் விரும்பினார்.

போஜனம் அல்லது பானம். தேவன் இஸ்ரவேலருக்கு போஜனத்தைக் குறித்த பிரமாணங்களைக் கொடுத்திருந்தார், தேவன் குறிப்பாக இஸ்ரவேலர்கள் என்னத்தைப் புசிக்கலாம் அல்லது புசிக்கக் கூடாது என்று நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருந்தார் (லேவியராகமம் 11:1-47; உபாகமம் 14:3-21). போஜன சம்பந்தப்பட்ட இந்தப் பிரமாணங்களை இயேசு களைந்து போட்டார்: "... புறம்பேயிருந்து மனுஷனுக்குள் போகிறதொன்றும் அவனைத் தீட்டுபடுத்த மாட்டாதென்று நீங்கள் அறிந்து கொள்ளவில்லையா? அது அவனுடைய இருதயத்தில் போகாமல் வயிற்றிலே போகிறது; அதிலிருந்து எல்லா போஜனனங்களின் அசுத்தங்களையும் கழிக்கிற ஆசன வழியாய் நீங்கிப் போகும்" (மாற்கு 7:18ஆ, 19; காண்க நடபடிகள் 10:10-16). இவ்விதமாய் எல்லா உணவுகளும் சுத்தமானவை என்று அறிவித்தார்.

பிற்காலங்களில் ஜனங்கள் விசுவாசத்தை விட்டு விலகும் காலம் வரும் அப்பொழுது தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று கட்டளையிடுவார்கள், அவை கிறிஸ்தவர்கள் பின்பற்ற கடமைப்பட்டவர்களல்ல என்று பவுல் எச்சரித்தார் (1 தீமோத்தேயு 4:1-4). அவர் ரோமருக்கு எழுதிய செய்தியில், கிறிஸ்தவர்கள் புசிக்கும் போஜன விஷயத்தில் சுதந்திரம் பெற்றிருப்பதாகக் கூறினார் (ரோமர் 14:5, 6, 13-15, 20, 21). கிறிஸ்தவர்கள் எவைகளை புசிக்கலாம், எவைகளைப் புசிக்கக்கூடாது என்று வரையறுக்கப்படவில்லை, என்பது ஆதாரப் பூர்வமாகக் காணுகிறது. "தேவனுடைய ராஜ்யம் குடிப்பும் புசிப்பும் அல்ல" (ரோமர் 14:17).

குடித்தலைப் பற்றி நியாயப்பிரமாணத்தில் மிகச் சொற்பமாகவே சொல்லப்பட்டுள்ளது. ஆசாரியர்கள் தேவக் காரியங்களில் (மத சம்பந்தப்பட்ட பணிகளில்) ஈடுபட்டிருக்கும் போது திராட்சை ரசமோ மது பானங்களோ அருந்துவதிலிருந்து விலகியிருக்கும்படி சொல்லப்பட்டார்கள் (லேவியராகமம் 10:9). நசரேய விரதத்தை மேற்கொண்டிருந்தவர்கள் மதுபானமாவது, திராட்ச ரசத்தின் காடியையாவது, திராட்ச ரசத்தினால் செய்யப்பட்ட எந்தப் பொருளையாகிலும் அருந்தாதபடியும் புசிக்காதபடியும் விலகியிருக்க அறிவுறுத்தப்பட்டனர் (எண்ணாகமம் 6:3). மனோவாவின் மனைவி எவ்வித மதுபானத்தையும் அருந்தாதபடிக்கு எச்சரிக்கப்பட்டாள், ஏனெனில் அவள் ஒரு குமாரனாகிய சிம்சோனை பெறவிருந்தாள் (நியாயாதிபதிகள் 13:4, 7, 14). மதுபான மயக்கம் எப்பொழுதும் கண்டிக்கப்பட்டது (நீதிமொழிகள் 20:1; ஏசாயா 5:11; 28:1).

பண்டிகைகள். நியாயப்பிரமாணம் எண்ணற்ற ஆசரிப்புகளையும் பண்டிகைகளையும் அனுசரிப்பதை நிபந்தனைக்குட்படுத்தியிருந்தது (உபாகமம் 16:16; 2 நாளாகமம் 8:13).

(1) புளிப்பில்லாத அப்பப் பண்டிகை (யாத்திராகமம் 23:15; 34:18; லேவியராகமம் 23:6), இது பஸ்காப்பண்டிகை என்றும் அறியப்பட்டிருந்தது (லேவியராகமம் 23:5; உபாகமம் 16:1-6), அது இஸ்ரவேலர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் விடுதலையாக்கியதை நினைவுகூறும் படி ஆசரிக்கப்பட்டது (யாத்திராகமம் 12:24-27). அவர்கள் தங்கள் குடும்பத்தின் முதற்பேறானவர்கள் கொல்லப்படவில்லை என்றும் மாறாக கதவு நிலைகளில் இரத்தம் பூசப்பட்ட இஸ்ரவேலரின் வீடுகளைச் சங்காரத்தூதன் கடந்துபோனதையும் நினைவுகூர வேண்டியவர்களாயிருந்தனர் (யாத்திராகமம் 12:22, 23). இந்தப் பண்டிகையில் புளிப்பில்லாத அப்பமும் புசிக்கும்படி கட்டளையிடப்பட்டது (யாத்திராகமம் 12:14-20; 13:6-8).

(2) வாரங்களின் பண்டிகை (யாத்திராகமம் 34:22; உபாகமம் 16:10), இப்படியாக இது அழைக்கப்பட காரணம் இதன் ஆசாரிப்பு தானியங்களின் முதல் அறுவடையிலிருந்து ஏழுவாரங்கள் எண்ணப்படும்படி கோரப்பட்டது (உபாகமம் 16:9), இது அறுப்பின் பண்டிகை என்றும் அழைக்கப்பட்டது அல்லது முதற்பேறானவைகளின் சேர்ப்புக் கால பண்டிகை எனப்பட்டது (யாத்திராகமம் 23:16; 34:22; எண்ணாகமம் 28:26). புதிய ஏற்பாட்டில் இது “பெந்தெகோஸ்தே” பண்டிகை எனப்பட்டது (நடபடிகள் 2:1), இதன் பொருள் “ஐம்பதின் பண்டிகை” ஏனெனில் பஸ்காவுக்குப்பின்பு ஐம்பது நாள் கழித்து இது அனுசரிக்கப்பட்டது (லேவியராகமம் 23:15, 16).

(3) கூடாரப் பண்டிகைகள் (லேவியராகமம் 23:34; எஸ்றா 3:4), மற்ற மொழிபெயர்ப்புகளில், அது Feast of Tabernacles (KJV; NKJV). *என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இஸ்ரவேலர்கள் நாற்பது வருடம் வனாந்திரத்தில் பயணம் பண்ணிக் கொண்டிருந்த போது மரக்கிளைகளைக் கொண்டு வேயப்பட்ட சாவடிகளில் (கூடாரங்களில்) குடியிருந்தார்கள். பண்டிகையின் போது முதல் நாளிலும் எட்டாம் நாளிலும் ஒருவேலையும் அவர்கள் செய்யலாகாது (லேவியராகமம் 23:39).*

(4) பூரீம் எனும் பண்டிகை எஸ்தர் யூதர்களை முழு அழிவிலிருந்து விடுதலையாக்கின பின்பு துவக்கம் பெற்றது (எஸ்தர் 9:26-28), அது பெர்சியாவின் ராஜாவாகிய, அகாஸ்வேருவின் நாட்களில் தீமையான சூழ்ச்சியுடன் செயல்பட்ட ஆமானின் அழிவுக்குப் பின்பு நிகழ்ந்தது.

யூதர்கள் வேறுபல விசேஷித்த நாட்களையும் அனுசரித்தார்கள், ஏழாம் மாதத்தின் முதல் நாளில் இஸ்ரவேலர் எக்காளம் ஊதி பிராணிகளையும் தானியங்களையும் பலியிட்டனர் (லேவியராகமம் 23:23-25; எண்ணாகமம் 29:1-6). பாவ நிவர்த்திநாள் எனப்பட்டது (லேவியராகமம் 16:3-34; 23:27-32) இன்று “யாம் கிப்பூர்” என்று அழைக்கப்படுகிறது. யூதர்களின் புத்தாண்டு, பின்னர் ரோஸ் ஹசானா எனப்பட்டது, அநேகமாகபாபிலோனிய சிறையிருப்பின் போது ஆசரிக்கப்பட்டிருக்கலாம் (எசேக்கியேல் 45:18; காண்க யாத்திராகமம் 12:2). வருஷத்தின் முதல் மாதம் நிசான் என்று அழைக்கப்பட்டது (எஸ்தர் 3:7).

மாதப்பிறப்பு. *இஸ்ரவேலர்கள் நிலாவை மையமாகக் கொண்ட நாட்காட்டியைக் கொண்டிருந்தனர்; மாதப்பிறப்பு எனும் நாள் மாதத்தின் முதல் நாள் தோறும் கொண்டாடினர், அந்நாளில் அவர்கள் தேவனுக்கு வெகுமதி போல் காணிக்கைகளை படைத்தனர் (எண்ணாகமம்*

10:10; 28:11). அவர்கள் தங்கள் மாதப் பிறப்பைக் கொண்டாடுவதற்கென தெரிந்து கொண்டநாள் இது (சங்கீதம் 81:3; ஏசாயா 1:14; எசேக்கியேல் 46:3; ஓசியா 2:11; ஆமோஸ் 8:5; ஒரு வகையில் 1 சாமுவேல் 20:18; 2 இராஜாக்கள் 4:23ம் சேர்க்கப்படலாம்.

ஓய்வுநாட்கள். *இஸ்ரவேலர்கள் வாரந்தோறும் வாராந்திர ஓய்வுநாளைக் கொண்டாடினர், அது வாரத்தின் முதல் நாளுக்கு முந்திய நாள் (மத்தேயு 28:1; மாற்கு 16:1, 2; லூக்கா 23:56; 24:1; யோவான் 20:1). "ஓய்வுநாள்" என்றால் (வேலை செய்வதை) "நிறுத்துதல், வேலைசெய்வதிலிருந்து விடுபட்டிருத்தல்" என்று பொருள். ஓய்வுநாளில் எந்த வேலையும் செய்ய அனுமதிக்கப்படவில்லை (யாத்திராகமம் 20:8-10; உபாகமம் 5:12-15). ஓய்வுநாள் என்பது தேவனுக்கும் இஸ்ரவேல் என்று பெயர் மாற்றப்பட்ட (ஆதியாகமம் 35:10) யாக்கோபின் சந்ததியாகிய, இஸ்ரவேலருக்கு இடையிலான உடன்படிக்கை (யாத்திராகமம் 31:14-16) தேவன் இஸ்ரவேர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கினதை அவர்கள் நினைவுகூரும் பொருட்டு பிரதிஷ்டை செய்யப் பட்ட நாள் (உபாகமம் 5:12-15) அவர் சிருஷ்டிப்பின்போது ஏழாம் நாளில் ஒய்ந்திருந்தபடியால் அந்த நாளை அவர் தெரிந்து கொண்டார் (யாத்திராகமம் 20:11).*

தேவன் சீனாய் மலையிலே ஓய்வுநாளைக் கொடுத்தார் (யாத்திராகமம் 20:8-10). அந்த நாளில் யாராகிலும் வேலை செய்தால் அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்; இஸ்ரவேலர் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டியவர்களாயிருந்தனர் (யாத்திராகமம் 31:14). தேவன் அதை ஓய்வுக்கென்று பிரித்து வைத்தார், தொழுகைக்கான நாளாக நியமிக்கவில்லை. அவர்களுடைய பாபிலோனிய அடிமைத்தனத்தின் போது, இஸ்ரவேலர்கள் ஜெப ஆலயங்களில் கூடிவந்து ஓய்வுநாட்களில் வேத வாக்கியங்களை வாசித்தனர். அப்பொழுதும் கூட அது தொழுகைக்குரிய நாளாக இருக்கவில்லை, ஆனால் ஓய்ந்திருக்கவும், ஜெபிக்கவும், வசனங்களை வாசிக்கவும் கூடிய ஒரு நேரமாக இருந்தது (காண்க நடபடிகள் 15:21).

வாராந்திர ஓய்வுநாட்களுக்கப்பால், இஸ்ரவேலர்கள் ஒவ்வொரு ஏழாம் ஆண்டும் ஒரு ஓய்வு வருஷமாக அனுசரிக்கும்படி கட்டளையிடப்பட்டனர். ஓய்வு வருஷத்தில் அவர்கள் தங்களுடைய தோட்டத்தை சாகுபடி செய்யக் கூடாது, மாறாக அவைகளையும் ஓய்வாக விடவேண்டும் (யாத்திராகமம் 23:10, 11).

நியாயப்பிரமாணத்தைத் துணிகரமாய் மீறுபவர்கள் ஜனத்தின் நடுவிலிராதபடி அறுப்புண்டு போக வேண்டும் என கட்டளையிடப்பட்டனர் (எண்ணாகமம் 15:30, 31). இதில் நியாயப்பிரமானத்தை அசட்டை பண்ணி, அதில் சொல்லப்பட்ட போஜனம், பானம், பண்டிகைகள், மாதப்பிறப்பு, மற்றும் ஓய்வு நாட்களை முறையாய் கையாளப்படாததும் உட்படுத்தப்பட்டது. எப்படியிருப்பினும், நியாயப்பிரமாணம் புதிய உடன்படிக்கையின் கீழ் வாழும் ஜனங்களைக் கட்டுப்படுத்தாது. இந்தக் காரணத்தால், கிறிஸ்தவர்கள் நியாயந்தீர்த்தல் கூடாது (மத்தேயு 7:1) அல்லது தங்களை மற்றவர்கள் நியாயந்தீர்க்க அனுமதிக்கக் கூடாது, கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்குள் கொண்டிருக்கும் சுயாதீனத்தில் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை வற்புறுத்துவதன் மூலம் தலையிடுவதாகும்.

ஓய்வுநாளைக் கைக்கொள்ளும்படி கிறிஸ்தவர்களுக்கு புதிய ஏற்பாட்டில் கட்டளையிடப்படவில்லை. இது குறிப்பிடத்தக்க காரியம், ஏனெனில், புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கு அநேக உபதேசங்கள் கொடுக்கப்பட்டுள்ளன, அவைகளில் ஒரு மிகச் சிறிய குறிப்பு கூட அவர்களுக்கு ஓய்வுநாளில் ஓய்ந்திருக்கும்படி குறிப்பிடப்படவில்லை. ஏழாம்நாளில் அவர்கள் தங்கள் வேலைகளிலிருந்து விடுபட்டு ஓய்ந்திருக்க வேண்டும் என்பது அவர்களுக்கு அறிமுகமாகாத செயல், அவர்கள் ஓய்வுநாளை கடைபிடிக்கும்படி அவசியமாக்கப்பட்டிருந்தால், ஓய்வுநாளைக் குறித்து சிறப்பு போதனைகள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். முதலாம் உடன்படிக்கை ஒழிக்கப்பட்டு புதிய உடன்படிக்கை இடம்பெற்ற போது (எபிரெயர் 8:13; 10:9) ஓய்வு நாளை ஆசரிக்க வேண்டும் என்ற கட்டளையும் சேர்ந்தே ஒழிந்து போயிற்று.

வசனம் 16 கொலோசெயர்கள் ஓய்வுநாளை ஒரு விசேஷித்த நாளாகக்கருத வேண்டுவதில்லை என்று சொல்லுகிறது. புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த அடையாளமாக எதுவுமில்லை. கர்த்தருடைய நாளாகிய, ஞாயிற்றுக்கிழமைதான், கிறிஸ்து உயிர்த்தெழுந்து மரணத்தை வென்ற நாள். மரணத்தை வெற்றி கொண்ட இந்த நாளில்தான் கிறிஸ்தவர்கள் அவரை நினைவு கூரும்படி கூடிவந்தார்கள் (நடபடிகள் 20:7).

"அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது" (2:17அ)

வசனம் 16ல் பவுல் பெயரிட்டுச் சொன்ன ஆசாரிப்புகளெல்லாம் இரட்சிப்புடனோ அல்லது நீதிமானாக்கப்படுதலோடோ எவ்வித சம்பந்தமும் இல்லை. போஜனம் பற்றிய பிரமாணங்கள் அல்லது விசேஷித்த நாட்களை ஆசரித்தல் போன்றவை எப்படி கொலோசெயரின் ஆவிக்குரிய வாழ்க்கையை மேன்மைப்படுத்தக் கூடும்? இவைகளெல்லாம் உண்மையான போஜனமாகிய கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் வாழ்க்கைக்கு நிழல்களாயிருந்தவை மட்டுமே (யோவான் 6:48). புதிய உடன்படிக்கையோடு நியாயப்பிரமாணத்தை ஒப்பிடும்போது, புதிய உடன்படிக்கை அநேக மேன்மையைக் கொடுத்துள்ளது. ஆவிக்குரிய பரிசுத்தம் (2 கொரிந்தியர் 7:1) என்பது யூதர்களின் உண்ணத்தக்க உணவைக் காட்டிலும் முக்கியமானது. இயேசுவின் பலி பாவத்திலிருந்து நம்மை பரிசுத்தம் பண்ணும் திராணியுள்ளது (மத்தேயு 26:28), ஆனால் நியாயப்பிரமாணத்தின் பலிகளால் ஒன்றுஞ்செய்ய கூடாது (எபிரெயர் 10:4). பரலோகமாகிய நித்திய ஓய்வு கிறிஸ்தவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது (எபிரெயர் 4:9; 1 பேதுரு 1:3, 4). அது ஓய்வுநாளில் கிடைக்கும் ஓய்வைக் காட்டிலும் மிகவும் மேன்மையானது. இயேசு மோசேயைக் காட்டிலும் மேன்மையான சட்டம் கொடுப்பவராக இருக்கிறார், மற்றும் நியாயப்பிரமாணத்தின் கீழ்வந்த ஆசாரியர்களைக் காட்டிலும் இயேசு மேலானவர் (எபிரெயர் 3:3; 7:28).

ஸ்கியா எனும் பதம் ***நிழலுக்குப்*** *பயன்படுத்தப்பட்டுள்ளது, அதன் பொருள் நிஜத்தில் பாதியை மட்டும் வெளிப்படுத்துபவை. அது ஏதோ வேறு ஒன்றின் அடையாளமாக அல்லது படிவமாக மட்டுமே இருக்கும். புதிய உடன்படிக்கையில், இயேசு நியாயப்பிரமாணத்தில் நிழலாயிருந்தவைகளை சத்தியமாக அறிமுகப்படுத்தினார் (எபிரெயர் 10:1-4). உள்ளார்ந்த மதிப்பில்லாத அல்லது தன்னுள் தான் எவ்வித வல்லமையும் இல்லாதவைகளால்*

அப்படி நடந்தது. உதாரணமாக, கால்நடைகளின் பலிகள் கிறிஸ்துவில் காணப்பட்ட நிஜத்தின் முன்னுருவமாகக் காணப்பட்டது (எபிரெயர் 8:5; 10:1-3).

ஒரு நிழலே நிஜமாக இல்லாதது போலவே, அது ஒரு முன் அடையாளமாக மட்டுமே இருக்கிறது, நியாயப்பிரமாணமும் வரவிருந்த நிஜத்துக்கு நிழலாயிருந்தது. மோசே நிழலாகிய (எபிரேயர் 10:1) நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தது போல, இயேசு சத்தியத்தைக் கொண்டு வந்தார் (யோவான் 1:17), நியாயப்பிரமாணம் புதிய உடன்படிக்கையின் நிஜத்தை நிழலோட்டமாய்க் காட்டியது, ஆனாலும் அது பின்னர் இயேசு செய்தது போல முழுமையான சத்தியத்தை வெளிப்படுத்த முடியவில்லை. நியாயப்பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவர்கள் செயல்படுவதை குற்றமாய்த்தீர்க்கிறவர்கள், ஒரு நிழலை அடிப்படையாகக் கொண்டு ஒரு மனுஷனின் தோற்றத்தை நியாயந்தீர்ப்பதற்கு ஒப்பானது. “நிஜம் இங்கே இருக்கிறபடியால், நிழலின் காரியங்கள் நியாயத்தீர்ப்பிற்கான விதிமுறையை ஒன்று சேர்த்து கொடுத்துவிட முடியாது.”[1]

வருங்காரியங்கள் இதற்குப் பின்பு எதிர் காலமல்ல “வரவிருந்த” காரியத்துக்கு நிழலாக இருந்ததைத் தான் இயேசு புதிய உடன்படிக்கையாக அறிமுகப்படுத்தினார் (எபிரெயர் 8:5).

“அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது” (2:17ஆ)

பொருள் என்று இங்கே குறிப்பிடப்படுவது சோமா (*sōma*), என்பதன் மொழியாக்கம், சாதாரணமாக இதன் பொருள் “சரீரம்.” அப்படிப்பட்ட சரீரம் ஒரு நபரைக் குறிப்பதாயிருக்கலாம் (மத்தேயு 5:29), கால்நடைகள் (யாக்கோபு 3:3), செடிகொடுகள் (1 கொரிந்தியர் 15:37), அல்லது ஒரு கூட்டமக்கள் ஆகியவைகளையும் குறிக்கலாம் உதாரணமாக, சபை (ரோமர் 12:5; கொலோசெயர் 1:18). இது ஒரு பிரச்சனையைக் கொண்டு வருகிறது. பவுல் இந்தச் சொற்றொடரை *sōma tou Christou* (“கிறிஸ்துவின் சரீரம்”) என பயன்படுத்தின போது, அவர் (1) இயேசுவின் மாமிச சரீரத்தைக் குறிப்பிட்டாரா (மத்தேயு 26:12), (2) சபையை, அல்லது (3) நிழலாய் முன் அடையாளப்படுத்தப்பட்ட நிஜம் அல்லது பொருள் ஆகியவற்றைக் குறிப்பிட்டாரா? ஒவ்வொரு நிகழ்வின் போதும், “சரீரம்” அல்லது “சரீரங்கள்” என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஒரு இடத்தில் மட்டுமே, “சரீரப்பிரகாரமாக” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (2 கொரிந்தியர் 10:10).[2]

மூன்று மொழிபெயர்ப்புகளில் ஏதாவதொன்று சாத்தியமாகையில், சிறப்பான பிரதிபலிப்பாய்க் காணப்படும் வசனப்பகுதி நியாயப்பிரமாணம் புதிய உடன்படிக்கையின் நிஜத்துக்கு நிழலாயிருந்தது என்பது. ஒருநபர் நியாயப்பிரமாணத்தின் விதிமுறைகளாக வசனம் 16ல் குறிப்பிடப்பட்டுள்ள, “போஜனம் அல்லது மாதப்பிறப்பு, அல்லது ஒரு ஓய்வுநாள்,” ஆகியவை எப்படி இயேசுவின் மாமிச சரீரம் அல்லது சபையைக்குறிப்பிடும் நிழலாக இருந்தது என்பதை விளக்கிச் சொல்வது கடினம். வசனம் 16ல் குறிப்பிடப்படும் ஆசரிப்புக்கள் புதிய உடன்படிக்கையில் நிஜமாக வரவிருந்த பொருளை நிழலாக வெளிப்படுத்தியது என்று சொல்வது சுலபம். மாம்சப் பிரகாரமான

ஆசரிப்புகளாக, அவை புதிய உடன்படிக்கையின் நிஜப்பொருளாக ஆவிக்குரிய ரீதியில் முன் அடையாளமாகக் காட்டியது. நியாயப்பிரமாணம் உண்ணும் உணவுகளில் ஒரு வரையறையைக் கொடுத்தது, புதிய உடன்படிக்கையைப் பொறுத்த மட்டில் அது கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய போஜனத்தைப் பேசுகிறது (1 பேதுரு 2:2). மிருகபலி செலுத்தியதன் மூலம் பண்டிகைகளை ஆசரித்த விதம் உண்மையான பலியாகிய, இயேசுவின் சிலுவை மரணத்தை வாரந்தோறும் நினைவுகூருவதற்கு முன் அடையாளம் (1 கொரிந்தியர் 11:23-25). நியாயப்பிரமாணத்தின் வேறுபல முன்மாதிரிகள் கிறிஸ்தவ செயல் முறைகளுக்கு ஒப்பிடத்தக்கவைகளாக இருந்ததை எண்ணற்ற வசனங்கள் விளக்கமளிக்கின்றன.

கள்ளப் போதகர்கள் நிழலை மாத்திரம் கண்ணுற்று சத்தியத்திற்கு மூலகாரணியாகிய இயேசுவால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை பார்ப்பதில் ஒரு எல்லையை வகுத்துக் கொண்டுள்ளனர் (எபேசியர் 4:21). நிழலின் நோக்கம் நிஜத்தை ஆயத்தப்படுத்துவது (கலாத்தியர் 3:24). நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தவர்கள் தொடர்ந்து இருளில் இருந்தார்கள்: அவர்களுடைய கண்கள் முக்காடிடப்பட்டிருந்தது (2 கொரிந்தியர் 3:14), அது நியாயப்பிரமாணத்தின் நிழலாயிருந்தது. எனவே அவர்கள் உலகத்திற்கு வெளிச்சமானதை அவர்களால் காண இயலவில்லை (யோவான் 8:12).

கிறிஸ்தவர்கள் நிழலில் இல்லாமல், நிறைவேற்றம் நிகழ்ந்து நிஜம் காணப்படுகிற காலக்கட்டத்தில் இருக்கிறார்கள். நியாயப்பிரமாணம் இன்னமும் கிறிஸ்தவ யுகத்தின் பெலனற்ற நிழலாக ஊழியம் செய்கிறது. நியாயப்பிரமாணத்தின் ஒளிமங்கிய குறிப்பின் கீழ் இன்னும் வாழ வகை தேடுவோர் கிறிஸ்தவ ஜீவியத்தின் விளக்கமான அழகையும் பரலோகத்தில் நித்திய ஜீவனையும் தவறவிடுகிறார்கள்.

மனித ஆசரிப்புகளைத் தவிர்த்தல்
(2:18, 19)

[18]கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக்கொள்ளாமல், [19]மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளில் துணிவாய் நுழைந்து, தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப் பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள்.

"கணுக்களாலும் கட்டுக்களாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற" (2:18அ)

பவுல் இரண்டு கிரேக்க நிகழ்கால வினை எச்சத்தைப் பயன்படுத்தினார், முறையே epichorēgoumenon ***(உதவிபெற்று)*** *மற்றும் sumbibazomenon* ***(இணைக்கப்பட்டு)****, என்று சொல்லி கொலோசெயர்கள் தாங்கள் வளர்ந்தேற என்ன செய்ய வேண்டுமென்று அவர்கள் அறிய வேண்டுமென்று விரும்பினார். இரண்டு கிரேக்க வார்த்தைகளும் தொடர் நிகழ்ச்சியை வெளிப்படுத்துகிறது,*

ஆவிக்குரிய சத்துணவு சரீரத்துக்குத் தொடர்ந்து கொடுக்கப்படுமானால் மேலும் இணைக்கப்பட்டிருக்குமானால், அது வளர்ந்தேறும் சரீரமானது அவயமாயிராதபடி, தலையிலிருந்து பிரிக்கப்படுமானால், அது வளர்ச்சியடைய முடியாது. தம்மைப் பின்பற்றுவோர் ஒன்றாயிருக்கவும் (யோவான் 17:20-23) பிரிவினையில்லாதிருக்கவும் (1 கொரிந்தியர் 1:10) இயேசு விரும்புகிறார். தலையாகிய இயேசுவைக் கொண்டு கட்டப்படும் ஐக்கியம், ஒரு உள்ளூர் சபைக்குள் வளர்ச்சியைக் கிளரி விடும், ஆனால் பிரிவினைகள் அதை வெகு விரைவில் அழித்துவிடும். எந்த உள்ளூர் சபையிலும் வளர்ச்சிக்குத் தடையாயிருக்கிற மிகப் பெரிய காரியம் இயேசுவோடு கொண்டிருக்க வேண்டிய நெருக்கமான ஐக்கியத்தில் குறைவு என்பது தான்.

வளர்ந்தேறுகிற (*auxō*)என்றால் சரீரமானது உதவிபெற்று இணைக்கப்பட்டு இருப்பதால், வளர்ந்தேறுகிற செயல் தொடர்கிறது என்று பொருள். பவுல் இங்கே அறிவியல் ரீதியான **கணுக்கள், கட்டுகள்** ஆகியவைகளை வளர்ச்சிக்கு உகந்தவைகளாகக் குறிப்பிடவில்லை. கணுக்கள் சரீரத்தின் இசைவிணக்கத்திற்கும் அசைவுக்கும் உதவுகிறது. கட்டுகள் சரீரத்தை ஒன்றாக இணைத்து கணுக்களும் சரீரத்தின் பிற அங்கங்களும் ஒன்றாக இயங்கச் செய்கிறது. ஒவ்வொன்றும் முக்கியமானது, தலையோடு ஒத்துப்போய், அசைவுகளைக் கொடுக்கவும் போஷாக்கைக் கொடுக்கவும், வளரவும், சரீரத்தின் ஒட்டுமொத்த அக்கறையை ஏற்றுக் கொள்கிறது.

பவுலின் கருத்து என்னவெனில் சரீரம் இசைவாய் இணைக்கப்பட்டு முழுமைக்கும் தேவையான நலன் கருதி உதவுகிறதாயிருக்கிறது என்பதே. தலையுடன் ஒத்துழைத்து, போஷாக்கை சாத்தியப்படுத்தி முழுசரீரத்தின் மீதும் அக்கறை காட்டுகிறது. சரீரத்தின் நலனுக்குகாக ஒவ்வொரு அங்கமும் செயலாற்று வதற்கென கடமைகள் உண்டு. கணுக்களும் கட்டுகளுமில்லாமற் போனால், சரீரம் கழன்று விழுந்து செயல்பட இயலாமல் போகும், தலையில்லாமல், சரீரம் தன் கட்டுப்பாட்டை இழக்கும், வழிகாட்டலும் பராமரிப்பும் இல்லாமல் போகும். சரீர அங்கங்கள் ஒன்றாக வேலை செய்யும் போது மற்றும் தலையோடு ஒத்துழைக்கும் போது, சரீரம் வளர்ந்து நன்கு இயங்கும்.

போஷாக்கு என்பது "கணுக்கள் மற்றும் கட்டுகள் மூலம், ஜீரண உறுப்புக்கள் உணவைச் ஜீரணிக்கச் செய்வது போல இரத்த நாளங்கள் போஷாக்கை சரீரத்தின் பிறபாகங்களுக்கு எடுத்துச் செல்லுவது போல, நடப்பிக்கப்படுவதில்லை. பவுல் சரீரத்தின் இந்த இடங்களைத்தான் ஒப்பிட்டிருக்கிறார் என்று நினைப்பவர்கள் உண்மைக் கருத்தைத் தவற விடுகிறார்கள். முழு சரீரத்தின் நன்மை கருதி அதன் ஒவ்வொரு அவயவமும் பாடுபட வேண்டும் என்று அவர் போதித்தார். இந்த சரியான விளக்கம் போஷாக்கை சரீரம் தாமாக இயங்கி பெற்றுக் கொள்கிறது என்பது பவுலின் நாட்களிலிருந்த மருத்துவ மற்றும் விஞ்ஞான போதனைக்கு மாறுபட்டது.

பவுல் போதிப்பதில் உள்ள உண்மையென்னவெனில் கள்ளப் போதகர்கள் தங்களைத் தலையின் தொடர்பிலிருந்து பிரித்துக் கொண்டார்கள், அது மட்டும்தான் வளர்ச்சிக்கான ஒரே மூலாதாரம். இந்தத் தொடர்பின் பிரிவால் வளர்ச்சி பாதிக்கப்பட்டு அது மரணத்தில் போய் முடியும். சபை இயேசுவைப் பற்றிக் கொண்டிருந்து சரீரத்தின் எல்லா அங்கங்களும் ஆவிக்குரிய

வளர்ச்சியடையும்படி நாடும்போது மட்டுமே ஆவிக்குரிய வளர்ச்சி நடந்தேற வழியுண்டு.

எபேசியர் 4:11-16ல் சபையானது கட்டப்பட்டு சுய வளர்ச்சியை அடையும் பொருட்டு தேவன் சபையிலே குறிப்பிட்ட தலைவர்களை நியமித்தார் என்று பவுல் போதித்தார். தேவன் தாம் வளர்ச்சிக்கான மூலாதாரங்களை அளிக்கிறார்: வசனம் (1 பேதுரு 2:2) மற்றும் ஆவியானவரின் உதவி (எபேசியர் 3:16), போன்றவை. தேவனுடைய உதவியின்றி சரீரம் கனி கொடுக்க மாட்டாது (யோவான் 15:4, 5); மேலும் அங்கங்கள் சரியாக இயங்காவிட்டால், சரீரம் வளர்ச்சியடையாது. சரீரத்தின் நலன் அதன் தலையைச் சார்ந்திருக்கிறது, மேலும் தலையின் விருப்பங்களை நிறைவேற்றுகின்ற கடமை சரீரத்தைச் சார்ந்திருக்கிறது. வளர்ச்சிக்கான மூலாதாரத்தை தேவன் கொடுக்கிறார், பலதரப்பட்ட அங்கங்களுக்கு தேவன் கொடுக்கும் போஷாக்கு போய் சேர்கிறது என்பதை ஒவ்வொரு அங்கத்தினரும் காண்பது அவசியமாயிருக்கிறது. சரீரமானது தேவனோடு ஒத்துழைத்து அவரிடத்திலிருந்து அது வளர ஏதுவானவைகளை பெற்றுக் கொள்ளும்போது மட்டுமே வளர்ச்சி இடம் பெறுகிறது.

தலை, கணுக்கள், கட்டுகள் ஆகியவை நேரடிப் பொருளில் எடுத்துக் கொள்ளப்படாமல் உருவகமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பவுல் உதாரணப்படுத்துவதன் மூலம் சரீரம் - அதன் கணுக்களோடும் கட்டுகளோடும் - என்பது சபை கிறிஸ்துவே அதன் தலையாயிருக்கிறார். சரீரமானது தலையுடன் ஒத்துழைத்து சரீரத்தின் பலனுக்காக சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் தன்தன் பணியைச் செய்வதால்தான் அதிகப்பட்ச வளர்ச்சி சரீரத்துக்கு வருகிறது.

"தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும்" (2:18ஆ)

*கிரேக்க மொழியில், இந்தச் சொற்றொடர்கள் ("அவருக்குள்" என்று துவங்குகிற ex hou, என்பது, **இவரிடத்திலிருந்து** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). வசனம் 18ன் பின் பகுதியில் "தலையை" என்பது மாற்றுச் சொல் (kephalē), கொடுக்கப்பட்டுள்ளது. அவருக்குள் என்பது ஆண் பாலிலும், "தலை" என்பது பெண்பாலிலும் சொல்லப்பட்டுள்ளது. இதனால் சிலர் "தலை" என்பது இயேசுவை குறிப்பதில்லை என்று முடிவுசெய்கின்றனர்.* Schweizer *இந்த மறுப்புக்கு பதிலளித்தார்: "தலை" என்பது கிரேக்க மொழியில் பெண் பாலில் சொல்லப்பட்டிருந்த போதிலும் ஆசிரியர் இதை ஆண்பாலிலேயே குறிப்பிட்டிருப்பதால் கவனம் இதிலேதான் செலுத்தப்படுகிறது.*[3] *மற்ற வசனப் பகுதிகளில் இயேசு சரீரத்துக்குத் "தலையாயிருக்கிறார்" என்று சொல்லப்படுகிறது (1 கொரிந்தியர் 11:3; எபேசியர் 1:22; 4:15; 5:23; கொலோசெயர் 1:18; 2:10).*

*"அவருக்குள்" **முழுசரீரத்தின்** வளர்ச்சிக்குத் தேவையான போஷாக்கு அவரே மூலாதாரமாக அளிக்கிறார் என்பதைக் காட்டுகிறது. "அவருக்குள்" மற்றும் "சரீரமுழுவதும்," என்பதை வலியுறுத்திப் பார்க்க வேண்டும் ஏனெனில் தலையிடமிருந்து சரீரத்தின் சில அங்கத்தினர்கள் மட்டும் வளர்ச்சியைப் பெறுவதில்லை. சரீரமுழுவதிலும் உள்ள அனைத்து அங்கத்தினர்களும் அதன் தலையாயிருக்கிறவருடனும் மற்ற அங்கத்தினர்களுடனும் கொண்டுள்ள*

தொடர்பால் மட்டுமே வளர முடியும்.

சரீரம் இயேசுவோடு கொண்டிருக்கும் தொடர்பு ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அவசியமானது. அவர் ஆவிக்குரிய தேவையுடைய சரீரத்தின் அனைத்து அங்கத்தினர்களுக்கும் உதவி செய்கிறார், அது ஒவ்வொரு அங்கத்தினரும் கொடுக்கும் பயன்கள் மூலம் செயல்படுகிறது. முழு சரீரத்தின் மேலும் அக்கறைகொண்டவர்களாக ஒவ்வொரு அங்கத்தினரும் தன் பகுதியைச் செய்யும்போது சரீரம் மிகச்சிறப்பாக இயங்குகிறது. வேறு இடங்களில் பவுல் மனித சரீரத்தைப் பயன்படுத்தி சபையின் அங்கத்தினர்களுக்கு உதாரணப்படுத்தி பேசுகிறார் (1 கொரிந்தியர் 12:14-26; எபேசியர் 5:15, 16).

"ஆதரிக்கிற தலையைப் பற்றிக்கொள்ளாமல்" (2:18இ)

மாம்ச சிந்தையிலுள்ள பிரச்சனையை குறிப்பிட்டு பவுல் பேசினார்: அவர்கள் அநேக கள்ளப் போதனைகளுக்கு கவனம் செலுத்தி தலையைப் பற்றிக்கொள்ளாதிருந்தார்கள். இயேசுவே கர்த்தரும் வானத்துக்கும் பூமிக்கும் அதிகாரமிக்கவராயும் இருக்கிறார் (மத்தேயு 28:18; எபேசியர் 1:20-23). இது உண்மையாயிருந்தாலும், அவர் தலையாயிருக்கிற சபை மாத்திரம் அவரைத் தலையாக மதிப்பு செலுத்தி அவருக்கு கீழ்ப்படிகிறது (எபேசியர் 5:24). மனித சரீரம் மனித பிரகாரமான தலையுடன் தொடர்புடையதாயிருப்பதுபோலவே, இயேசு தலையாகிய அவர், சபையாகிய சரீரத்துடன், தொடர்புடையவராயிருக்கிறார். தலை தனது சரீரத்தில் உள்ள அக்கறையால், அதுக்காக அது கவனம் செலுத்துகிறது, அதன் செயல்பாடுகளை வழிநடத்துகிறது, மற்றும் அதன் தேவைகளை நிறைவேற்றுகிறது.

பவுல் வெளியில் இருப்பவர்களைக் குறிப்பிடுகிறாரா அல்லது கிறிஸ்தவர்களைக் குறிப்பிட்டு "தலையைப் பற்றிக் கொள்ளாமல்" என்று சொன்னாரா? வெளியாட்களைக் குறிப்பிட்டிருக்கமாட்டார் என்றே தோன்றுகிறது; ஏனெனில் அவர்கள் தலையோடு இணைக்கப்படவேயில்லை, அப்படியிருக்கும்போது தலையைப் பற்றிக் கொள்வதை எப்படி நிறுத்தியிருக்கக் கூடும்? கிறிஸ்தவர்களை அவர் குறிப்பிட்டிருப்பாரானால், யாரோ சிலர் தலையைப் பற்றிக்கொள்வதை விட்டுவிட்டதாக பவுல் குறிப்பிட்டுள்ளார் என்று பொருள். இரண்டாவது சொல்லப்பட்டதே அநேகமாக சரியான பொருளாக இருக்கக் கூடும். நிகழ்கால எச்சவினையுடன் (kratōn) எதிர்மறை வார்த்தையாகிய, "பற்றிக் கொள்ளாமல்" என்பது அவர்கள் இனியும் தங்களுடைய பெருமையினால் தலையைப் பற்றிக் கொள்ள வில்லை என்று பொருள் இயேசுவின் போதனைகளை அவர்கள் பற்றிக்கொள்ளாமல் அவருக்கு உண்மையாயிருப்பதிலிருந்து விலக்கிக் கொண்டனர்.

மிகப்பெரிய முக்கியத்துவமெல்லாம் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவிடன் கொண்டுள்ள தொடர்புதான். ஒருவர் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டிருக்கும் வரை, அவர் ஆவிக்குரிய ரீதியில் வளரமுடியும். இந்த தொடர்புக்கு முறிவு ஏற்படுத்துவார்களானால் அவர்கள் உதிர்ந்துபோய் அக்கினியிலே போடப்படுவார்கள் (யோவான் 15:5, 6).

கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கும் ஒருவர் தலையைப் பற்றிக்கொள்வதை நிறுத்திவிடுவாரானால், அவர் விழுந்து போனவராகிறார். மேலும், ஒருவர்

குழந்தைப்பருவத்திலேயே இருந்து விடுவாரானால், மாம்ச சிந்தையை விட்டு வளராமலேயே இருந்து விடுவாரானால், ஆவிக்குரிய நிஜத்தை அவரால் பற்றிக் கொள்ளக்கூடாது (1 கொரிந்தியர் 2:14-3:3). சபைக்குத் தலையாயிருக்கிற இயேசுவைப் பற்றிக் கொள்ளாதிருக்கிற எந்த ஒருவருக்கும் இது சம்பவிக்கும், இயேசுவோடு உள்ள தொடர்பை தக்க வைத்துக் கொள்ளவும் அவருக்குள் காணும் ஆவிக்குரிய போஷாக்கைப் பெற்றுக் கொள்ளவும் அவரேயே பற்றிக்கொண்டு தொடர்ந்து அவருடைய போதனைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

"மாயமான தாழ்மையிலும், தேவ தூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று" (2:19அ)

ஆற்றல் மிகு வஞ்சகர்கள் கொலோசெயர்களை **மாயமான தாழ்மையிலும் தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும்** விருப்பமுறச்செய்து இயேசுவிடமிருந்து பிரித்து விடக்கூடும். வழக்கமான மொழிபெயர்ப்பில் *thelō*, என்பது "விருப்பமுற்று," என்று மொழிபெயர்க்கப்பட்டது, "அதன் பொருள் சித்தம், தேவையுறு, மற்றும் ஆர்வம்" போன்றவை (காண்க மத்தேயு 1:19; 8:2). இந்த வசனப்பகுதியில், கிரேக்க முன்னிடைச்சொல் *en* ("in"), பயன்படுத்தப்பட்டது, அதைச் சிறப்பான பொருளில் புரிந்து கொள்ள வேண்டுமானால் "ஒன்றில் சந்தோஷப்படுதல்,"[4] அல்லது "ஒன்றில் பிரியப்படுதல்." இந்த வஞ்கர்கள் கள்ளத்தனமான, தாழ்மையான பக்தியுடையவர்களாய்க் காணப்பட்டனர்; அவர்கள் மற்றவர்களுடைய பார்வையிலே மாயமான தாழ்மையைக் காட்டுவதில் விருப்பமுற்றிருந்தனர்.

பின்வரும் சொற்றொடரில் கொலோசெயர்கள் குறிப்பிட்ட சில ஆசரிப்புகளில் விழுந்து விடாதபடிக்கு அதைத் தவிர்க்க பவுல் நான்கு கிரேக்க எச்சவினைகளைப் பயன்படுத்தினார். "மாயமான தாழ்மையிலும் தேவ தூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் *விருப்பமுற்று*" (வசனம் 19அ); (2) "காணாதவைகளில் துணிவாய் *நுழைந்து*" (19இ); (3) "மாம்ச சிந்தையில் வீணாய் *இறுமாப்புக் கொண்டிருக்கிறவன்*" (வசனம் 19ஈ); மற்றும் (4) "தலையைப் *பற்றிக் கொள்ளாதிருக்கிறவன்*" (வசனம் 18இ). (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது.)

Tapeinophrosunē, என்பது மாயமான தாழ்மை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது இங்கேயும் வசனம் 23லும், வழக்கமாக "தாழ்மை" என்று மொழிபெயர்க்கப்பட்டது (நடபடிகள் 20:19; எபேசியர் 4:2; பிலிப்பியர் 2:3). மற்ற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தேவனுக்கு முன்பு தாழ்மையாய் இருப்பது குறித்துப் போதித்தார்கள் (யாக்கோபு 4:10; 1 பேதுரு 5:5, 6). ஆகிலும், இந்த வசனப்பகுதியில், "தேவ தூதர்களுக்குச் செய்யும் ஆராதனையுடன்" இந்த வார்த்தை இணைக்கப்பட்டது, அது "தாழ்மை" என்பதற்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதை விளக்குகிறது. பவுல் இங்கே ஒரு செயற்கைத் தாழ்மையைப் பற்றிப் பேசுகிறார், அதுதான் மாய்மாலம் ("பொய்யான தாழ்மை"). இயேசு தர்மஞ் செய்தல், ஜெபம், மற்றும் மனிதர்கள் காண வேண்டும் என்று உபவாசம் இருந்தவர்களுக்கு எதிராக இதே பிரச்சனையினிமித்தம் பேசியிருப்பார் என்று தோன்றுகிறது

(மத்தேயு 6:1-7, 16-18; காண்க 23:25-28). நீதிமான்களைப் போல நடிப்பதோ அல்லது தாழ்மைப்படுத்திக் கொள்வதாக நடிப்பதோ முற்றிலும் நீதியோ அல்லது தாழ்மையோ அல்ல.

எல்லா மதக் கூட்டங்களிலும் தங்கள் பக்தியிலே பெருமை கொள்ளக் கூடியவர்கள் இருக்கிறார்கள், அதை அவர்கள் பொய்யான தாழ்மையோடே நடப்பிப்பார்கள். இந்த நபர்கள் அவர்கள் ஏதோ உச்சக்கட்ட ஸ்தானத்தை அடைந்து விட்டது போலவும் வழக்கத்துக்கு மாறான மத அனுபவங்களின் மூலம் புனிதத் தன்மையை அடைந்து விட்டது போலவும் அல்லது ஆவிக்குரிய வரங்களைப் பெற்றிருப்பது போலவும் நம்புகின்றனர். அவர்கள் மேட்டிமையினால் தங்களைப் பெரிதாகக் காட்டிக் கொள்கின்றனர், அப்படிப்பட்ட அனுபவங்களினாலே விசேஷித்த ஆவிக்குரிய மனதால் அறியும் திறனை அடைந்து விட்டதாக நினைத்தனர். இந்த முகப்பைக் காண முடியாத ஜனங்கள் இயேசு விடமிருந்து பிரிக்கப்பட்டு கொள்ளை கொண்டுபோகப் படுவார்கள், அவர்கள் தங்களுடைய மாயமான தாழ்மையினால் செயல்படுவார்கள்.

முகத்தோற்றத்தை மாறுப்படுத்திக் கொள்ளும் இவர்கள், தங்களுடைய சரீர அசைவுகளால் வெளிப்படையான பகட்டுடையவர்களாக இருப்பார்கள், அவர்களின் குரலின் தொனியை மாற்றி (இயல்பாகப் பேசாமல்), மனுஷர்களை கவரும் பொருட்டு வழக்கத்துக்கு மாறாக அதிகப்படியான சரீரப்பிரகாரமான வார்த்தைகளை பிரயோகித்து தேவனையல்ல, மனுஷரையே பிரியப்படுத்துவர். அப்படிப்பட்ட வெட்கக் கேடான செயல் பக்தியாய்க் காட்டிக் கொள்ளும் வேஷம் மட்டுமே, அதின் மூலம் அவர்கள் எப்படிப்பட்ட பக்திமான்கள் என்று அடுத்தவர்களுக்குக் காட்டிக் கொள்ளுவதும் அல்லது தொழுகையிலே எவ்வளவாய்த் தங்களை உட்படுத்திக் கொள்கின்றனர் எனக் காட்டவும் அப்படி செயல்படுத்துகின்றனர்.

“தேவ தூதர்களை தொழுதுகொள்வதற்கு” எதிராகவும் பவுல் எச்சரித்தார். தொழுகையின் முறை மாத்திரம் தவறானதல்ல, தொழுகையின் நோக்கமும் சரியாக இல்லாதிருக்கும். கிறிஸ்தவர்கள் தேவனை தவிர்த்து வேறு எதையும் தொழுது தங்களுடைய பந்தயப் பொருளை இழந்து போகக் கூடும். யோவான் பத்முத் தீவில் இருக்கும் போது இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடுகளைத் தனக்கு காண்பித்த தேவ தூதனை தொழுது கொள்ளத் துவங்கினார். தேவதூதன் அந்தத் தொழுகையை ஏற்க மறுத்து தேவனைத்தொழுது கொள்ளும்படி சொன்னான் (வெளிப்படுத்தின விசேஷம் 19:10; 22:8, 9). தேவன் மட்டுமே ஆராதிக்கப் படத்தக்கவர் (உபாகமம் 6:13; மத்தேயு 4:10).

இயேசு தம்மை தொழுதுகொள்ள அனுமதித்தார்.[5] - அது சரிதான், ஏனெனில் அவர் தேவனாக இருக்கிறார் (மத்தேயு 1:23; யோவான் 1:1). மரியாளை ஒரு பெருமதிப்புக்குரியவளாகவோ தொழுகைக்குரியவளாகவோ இயேசு பரிசீலிக்கவில்லை. ஒருமுறை, ஒரு கூட்டத்தின் நடுவில் இருந்த ஒரு ஸ்திரீ மரியாளை கனப்படுத்தும் பொருட்டு அவரைச் சுமந்த கர்ப்பமும் அவர் பாலுண்ட முலைகளும், பாக்கியமுள்ளவைகளென்று சத்தமிட்டுச் சொன்னாள். அவர் மறுமொழியாய், “அப்படியானாலும் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள்” என்றார் (லூக்கா 11:27, 28; காண்க மத்தேயு 12:48-50).

2:18ல் பவுல் தேவதூதர்கள் செய்கிற தொழுகையைக் குறித்துப் பேசுவதாகக் குறிப்பிடுகின்றனர். இதன் பொருள் என்னவெனில் கள்ளப் போதகர்கள் தங்கள் தொழுகை முறையை தேவதூதர்களின் தொழுகையைப்போல செயல்படுத்த வகை தேடுவதாக சொல்லிக் கொள்கின்றனர். இதிலுள்ள பிரச்சனை என்னவென்றால் இந்த விளக்கத்தின்படி தேவதூதர்களின் தொழுகை எப்படியிருக்கும் என்று யாருக்கும் தெரியாது. மேலும், ஜனங்கள் தங்கள் தொழுகையில் தேவ தூதர்களை பின்பற்றுவதற்கான எந்த ஒரு தகவலும் ஆதாரமளிக்கவில்லை.

கொலோசெயர்கள் ஒருவேளை தேவதூதர்களை தொழுது கொள்ளாமலிருந்திருக்கலாம், லிக்கஸ் பள்ளத்தாக்கில் தேவதூதர்களின் தொழுகை நடந்து கொண்டிருந்த போதிலும் அவர்கள் அப்படி தொழுகை செய்யவில்லை, இரேனியு என்பவர், ஆசியாமுனை வழியாக மிக அதிகமாக பயணித்தவர் கி.பி. 182லிருந்து 188ற்கு இடையே சபை தேவதூதர்களை ஆராதிக்கவில்லை என்று எழுதினார்.[6] பின்னர், லவோதிக்கோயாவிலிருந்த சமயத்தலைவர்களின் கூட்டத்தில், 35வது கிறிஸ்தவ சட்டதிட்டக்கூட்டத்தின்போது XXXV (கி.பி. 363) தேவ தூதர்களிடம் சபை வேண்டுதல் செய்ய எந்த உரிமையும் அளிக்கப்படவில்லை என்று தீர்மானித்தனர்.[7] ஆசியா முனையில் கண்டுபிடிக்கப்பட்ட பதிவேட்டில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள்படி, பிரதான தூதனாகிய மிகாவேல் தூதனுடைய தொழுகை அந்த மண்டலத்தில் கி.பி. 739ன் பின்பகுதியில் பரவலாக பரவியிருந்துள்ளது, அவ்வேளையில் சிலுவைப் போரோடு தொடர்புடைய இஸ்லாமிய போராட்ட வெற்றி மிகாவேலுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. பெரும்பாலும் இதற்கான முடிவுரையாகச் சொன்னால், கொலோசெயர்கள் தேவ தூதர்களைத் தொழுது கொள்ள துவங்காதபடி பவுல் எச்சரித்தார்.

"தொழுகை" (*thrēskeia*) என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டதன் பொருள் "மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்திகளை (விசேஷமாக) தொழுது கொள்ளும் ஆராதனை மத சடங்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது."[8] இதே பதம் சமகாலத்து பவுலின் எழுத்துக்களுடன் இயக்கியங்களில் காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை காணப்படுகிற பிற இடங்கள் அது "பக்தி" (அல்லது "மார்க்கம்") என்று குறிப்பிடப்பட்டு யூதர்களின் தொழுகைகளில் இருந்த பாரம்பரியங்களைக் குறிப்பிடுகிறது (நடபடிகள் 26:5), மேலும் தேவனுக்கு செலுத்தும் ஊழியங்களையும் இது உட்படுத்துகிறது (யாக்கோபு 1:26, 27). அது சமய சடங்குகளை கைக்கொள்ளும்படிக்கு செயல்படுத்தும் முறையையும் பொருள்படுத்துகிறது. அஞ்ஞானிகளின் சடங்குகளில் பங்குகொண்டு, தேவதூதர்களுக்கு விசேஷமரியாதை செய்யாதிருக்கும்படி பவுல் கொலோசெயர்களை எச்சரித்தார். மற்றவர்கள் இந்த அனுசரிப்புகளில் ஈடுபட்டிருக்கக் கூடும், ஆகிலும், ஒரு கூட்டத்தாரைப் பின்பற்றி போவதைக் காட்டிலும், கொலோசெயர்கள் இயேசுவுக்கு உண்மையாய்த் தரித்திருப்பது நலமாகக் கண்டது.

கிறிஸ்தவர்கள் சரியான வரை தேவனை, தொழுது கொள்வது மாத்திமல்ல, அவர்கள் தேவனை ஆவியோடும் உண்மையோடுங்கூட இயேசுவால் வெளிப்படுத்தப்பட்டபடி (சத்தியத்தின்படி) தொழுது கொள்ள

வேண்டும் (யோவான் 1:17; 4:23, 24; 8:31, 32). பவுல் கடிந்து கொண்ட தேவ தூதர்களின் ஆராதனை இந்த (மேற்குறித்த) இரண்டு மாதிரிகளில் எதையும் உட்படுத்தவில்லை.

"காணாதவைகளில் துணிவாய் நுழைந்து" (2:19இ)

அடுத்த எச்சரிக்கை ***காணாதவைகளில் துணிவாய் நுழைந்து*** *செயல்படுகிற எந்த போதகருக்கும் சம்பந்தப்படுத்தப்படுகிறது. இந்த சொற்றொடரின் சரியான பொருள் உறுதியாகத் தெரியவில்லை. அது "தான் கண்டிராதவைகளில் தானாக தலையிடுவது" என்று மொழிபெயர்க்கப்பட்டது* (KJV; *காண்க* NKJV);[9] *"தான் காணுபவைகளில் துணிவாய் நிற்பது"* (RSV); *"காணுகிறவைகளில் வாசம் பண்ணுதல்"* (NRSV); *"தான் கண்டவைகளில் பெரிதான விளக்கத்தை அறிந்து கொள்ள முற்படுவது"* (NIV; *காண்க* TNIV); *"தங்களுடைய சொந்த தரிசனங்களில் நுழைய முற்படுவது"* (NEB); *மற்றும் "சில தரிசன உலகில் சஞ்சரிக்க முற்படுவது"* (REB). *பெரும்பாலான மொழிபெயர்ப்பாளர்கள் "அவன் கண்டவைகளில் பிரவேசித்து வாசம் பண்ணுவதையே" குறிப்பிடுகிறார்கள்.*

"துணிவாய் ... நுழைந்து," எனும் வார்த்தை (embateuō) புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணப்படுகிறது, அதன் பொருள் "உள்ளே நுழைதல்." இந்த வார்த்தைக்கு வியாக்கியானமாக பாயுயர் குறிப்பிடுகிறதாவது: "... நுணுக்கமாக விசாரித்து அறிதல், ஒன்றில் [ஒரு பொருள்] நுழைந்து நெருக்கமாக விசாரித்து அறிதல், விவரமாக அறிதல் ... , ஆகவே கொலோசெயர் 2:18ல் [அநேகமாக] ஒருவர் தான் தரிசனத்தில் கண்ட கதையின் மீது குறிப்பிட்ட எல்லை வரைக்கும் போதல் ... இப்படியாக பரலோக செய்தியாளர்களிடம் கொண்டு செல்லும் அணுகுமுறையை நியாயப்படுத்துதல்."[10]

கிளேராஸிலுள்ள அப்பொல்லோவின் ஆலயத்தில் பொறிக்கப்பட்டிருந்த இரண்டாம் நூற்றாண்டில் தேதியிடப்பட்டிருந்த எழுத்துக்களை William M. Ramsay *கண்டுபிடித்தார்.*[11] *அதில் கிரேக்க வார்த்தையான* embateuō, *என்பதும் சேர்க்கப்பட்டிருந்தது, அது மார்க்க அனுபவத்திற்குள் நுழைந்து இரகசிய சமய ஆராதனை செய்ததை குறிப்பிடுவதாயிருந்தது. இதுதான் வசனம் 18இ யின் சரியான அர்த்தமாயிருக்குமானால், பிறகு தரிசனங்களை சமய ஆராதனையின் அனுபவங்களை கைக்கொள்ளும்படி தவறாக நடத்தப்படுவதற்கு எதிராக பவுல் எச்சரித்தார். இது இன்று ஆவிகள் உலகில் தொடர்புடையோராய்ச் சொல்லி தங்களை ஆலோசனை வழங்குவோராய் எண்ணிக்கொண்டு, செத்தவர்களிடம் பேசுவதாகச் சொல்லி, அல்லது வருங்காலத்தை உய்த்து உணரும் திறன் படைத்ததோராய் பேசுபவர்களுக்கு எதிராகவும் இருக்கிறது.*

மீதமுள்ள கேள்விகள் என்னவெனில் "இந்த தரிசனங்கள் எப்படி பெற்றுக்கொள்ளப்பட்டன?" மற்றும் "அவைகளை பெற்றது யார்?" ஒருவேளை பவுல் முன்பு சொல்லப்பட்ட சொற்றொடருடன் தொடர்புபடுத்தி, "தேவ தூதர்களுக்குச் செய்யும்" ஆராதனையை "தரிசனங்களாக" (காணாதவைகள்) என்று சொல்லியிருக்கலாம். அப்படியிருக்குமானால், வஞ்சிக்கிறவர்கள் தாங்கள் தங்களுடைய தரிசனங்களை தேவதூதர்கள் போன்ற வானுலக ஜீவிகளிடமிருந்து பெற்றதாகச் சொல்லிக்கொள்வதின் மேல் கொலோசெயர்

நம்பிக்கையை வைக்காதபடி அவர் எச்சரித்திருக்கலாம். வஞ்சிக்கிறவர்களாகிய இவர்கள் தங்களை ஆவிக்குரிய மேலாளர்களாக பாவித்துக் கொண்டிருந்தனர், ஏனெனில் அவர்கள் தங்களுக்குக் கிடைத்த தரிசனங்களால் பெருமை கொண்டிருந்தனர், ஆகிலும் அவர்கள் தங்களை போலியான தாழ்மையால் மூடிக்கொண்டனர், அப்படிப்பட்ட (மாயமான) தாழ்மையால் மற்றவர்கள் தங்களை ஆச்சரியமாக பார்ப்பார்கள் என்று நினைத்தனர், அவர்கள் மார்க்கரீதியில் மிகவும் ஆழமானபக்தியுள்ளவர்களைப் போல் பார்ப்பார்கள் என்றும் நினைத்தனர்.

அவர்கள் அப்படிப்பட்ட தரிசனங்களைப் பயன்படுத்தி மற்றவர்கள் பார்வையில் மட்டும் உயர்த்தப்படுவதற்காக செயல்படுவதில்லை, மாறாக அவர்கள் தங்களுடைய போதனைக்கு மதிப்பளிக்கும்படியாகவும் அப்படிச் செய்கின்றனர். மற்றவர்களுக்குள் நன்மதிப்பை ஏற்படுத்தும் பொருட்டு தங்களுடைய செய்திகள் தேவனிடத்திலிருந்து வந்ததாகக் கூறினர், அதினால் அவர்கள் மிக மேன்மையான, அதிகாரமிக்க அறிவைப் பெற்றிருப்பதாகக் கூறிக் கொள்கின்றனர். தங்களுடைய தரிசனத்தால் அவர்களை ஊடுருவிப் பார்க்கும் திறனைப் பெற்றிருப்பதாக தங்களையே பெருமைப்படுத்திக் கொண்டனர், அந்த வானுலக ரகசியங்களை மற்றவர்கள் பெற்றிருக்க வில்லை என்றனர்.

பொய்யான தரிசனங்கள் புதிதல்ல. எரேமியா இந்த பொய்யான தீர்க்கதரிசிகளைக் குறித்து தேவனிடத்திலிருந்து வந்த செய்தியாக பதிவு பண்ணியிருக்கிறார்: " ' சொப்பனங்கண்டேன், சொப்பனங் கண்டேன்' என்று என் நாமத்தைச் சொல்லிப் பொய்த்தீர்க்கதரிசனம் உரைக்கிற தீர்க்கதரிசிகள் சொல்லுகிறதைக் கேட்டேன்" (எரேமியா 23:25). அவர்கள் ஏதோ சிலதைக் கண்டதாகச் சொல்லிக் கொண்டாலும் உண்மையில் அவர்கள் எதையும் கண்டதில்லை.

பவுல் கண்ட பரலோகத்தரிசனம் இதிலிருந்து வித்தியாசப்பட்டது. அவர் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டு "வாக்குக்கெட்டாத வார்த்தைகளைக்" கேட்டார், அதை அவர் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள இயலவில்லை, ஏனெனில் அவர் அநேக வெளிப்பாடுகளைப் பெற்றிருந்தார், மேலும் பவுலின் மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது, அதினால் தனது அனுபவத்தைக் குறித்து அளவுக்கதிகமாக பெருமை பாராட்டாதபடிக்கு, அது சாத்தானிடத்திலிருந்து கொடுக்கப்பட்டிருந்தது (2 கொரிந்தியர் 12:1-7). தேவனுடைய செய்தியாளனின் இருதயம் தாழ்மையினால் நிரப்பப்பட்டிருப்பதற்குப் பதிலாக பெருமையால் நிரப்பப்பட்டிருக்கக் கூடாது ஏனென்றால் தேவனே அவன் மூலம் கிரியை செய்கிறார்.

ஒரு கேள்விக்கு அவ்வளவு சுலபமாக பதில் சொல்லிவிடமுடியாது; இந்த கள்ள போதகர்கள் உண்மையாகவே எதையாகிலும தரிசித்திருந்தால், அது பிரம்மையாக இருக்கலாமல்லவா, அல்லது தரிசனங்காணாமலேயே கண்டதாக பொய் சொல்லுகிறார்களா? அவர்கள் தரிசனங்கண்டிருந்தால், அவர்களுடைய அறிக்கையின்படி அவர்கள் கண்டது உண்மையாக இருக்கக் கூடும், ஆனால் அவர்களுடைய நடக்கையில் காண்பிக்கும் விதம் தேவனுடைய வெளிப்பாடாகப் பிரதிபலிப்பதில்லை. தங்களுடைய சொப்பனங்களைத்

தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிற கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்து எரேமியா "இவர்கள் தங்கள் இருதயத்தின் வஞ்சகத்தையே தீர்க்கதரிசனமான சொல்லுகிறார்கள்" என்று சொன்னார் (எரேமியா 23:25, 26).

இவைகளெல்லாம் பிரம்மைகளாகவோ, பொய்யான கண்டுணர்வுகளாகவோ இருக்குமானால், அது அவர்களை பலவந்தமாக உண்மையென உணரவைக்குமானால், பார்க்கிற ஜனங்களுக்கும் அது உண்மைபோல் தோற்றமளிக்கும். எப்படியிருப்பினும், அவைகள், தேவனிடத்திலிருந்து வந்த சத்தியமாக இராது, இந்த நபர்கள் தரிசனங்களைக் கண்டதாக பொய்சொல்லுவார்களானால், பிறகு அவர்கள் அவைகளை தேவனிடத்திலிருந்து வந்த உண்மையான செய்தி என விளக்கமளிப்பர், அதன் மூலம் தங்களை உயர்த்திக்கொண்டு தங்களைப் பின்பற்றுவோரை கவர்ச்சிக்கும்படி அப்படிச் செய்கின்றனர். அது உண்மையோ பொய்யோ, யூகிக்கப்பட்ட தரிசனங்கள் தேவனிடத்திலிருந்து வருபவையல்ல. இந்தப் போதனைகளுக்கு தேவன் மூலாதாரம் அல்ல, மேலும் கொலோசெயர்கள் அவைகளால் தவறாக நடத்தப்பட்டுவிடக் கூடாது.

அடுத்தடுத்து வந்த நூற்றாண்டுகளில் தங்களுடைய கற்பனைதரிசனங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய சமயங்களைக் கூட ஸ்தாபித்துள்ளனர்: முகம்மது நபிகள்; மார்மன் சபையை ஸ்தாபித்த ஜோசப் ஸ்மித்; ஏழாம் நாள் ஆசரிப்புக் கூட்டத்தை ஸ்தாபித்த Ellen G. White, அம்மையார்; இப்படி இன்னும் அநேகர் அவர்களுடைய தரிசனங்களில் சிலர் தேவனுடனோ இயேசுவுடனே அல்லது தேவ தூதர்களுடனோ பேசினதாகக் கூறுவர் இயேசு எல்லாருக்கும் பின்பு "கடைசியாக" தனக்குத் தரிசனமானதாக பவுல் உறுதிப்படச் சொல்வதால், இயேசுவின் உண்மையான தோற்றம் (காட்சி) இனியும் இடம் பெறுவதில்லை[12] (1 கொரிந்தியர் 15:8). அவர் மறுபடியும் வரும் கடைசி நாள் வரைக்கும் அப்படி நடக்கப் போவதில்லை.

ஜோசியம் சொல்லுகிறவர்களும் அந்தரங்க சமயங்களிலுள்ள வேறு சிலரும் தங்களுக்கும் உலகவழக்கிற்கு அப்பாற்பட்ட தரிசனம் கிடைப்பதாக கூறுகின்றனர். கிறிஸ்தவர்கள் அனைத்துப்போதனைகளையும் புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ள சத்தியத்தின் அடிப்படையில் சோதித்தறிய வேண்டும் (காண்க 1 யோவான் 4:1, 6). இப்படிச் செய்வதால் நாம் தரிசனங்கள் மற்றும் வெளிப்பாடுகள் என்றழைக்கப்படுகிறவைகளினாலே கொள்ளை போவதை தவிர்க்கக்கூடும். ஒரு போதகன் சத்தியத்தை போதிக்கிறானா அல்லது தவறைப் போதிக்கிறானா என அறிந்து கொள்ளக் கூடும்.

"தன் மாம்ச சிந்தையில் வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும்" (2:19இ)

சில கள்ளப் போதகர்கள் மாயமான தாழ்மையில் பாசாங்கு செய்து கொண்டிருக்கும் போது, வேறு சிலர் **இறுமாப்பு** (*phusioō*) கொண்டவர்களாய், போலியான தற்பெருமை கொண்டவர்களாயிருந்தனர். நிகழ்கால கிரேக்க பெயர் எச்சவினையில் இது ஒரு தொடர் நிலையாகக் குறிப்பிடப்படுகிறது, அவர்கள் பெருமையையே தங்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். பெருமை கொண்டவர்கள் இறுமாப்பினால் நிரப்பப்பட்டிருப்பதால் தங்களையே குறித்து அப்படியொரு உயர்ந்த எண்ணம் கொள்ளத்

தேவையில்லை. பிற இடங்களில், பவுல் போலியான தற்பெருமை எனும் பொருளில் கொரிந்தியர்களுக்கு எழுதும்போது மட்டுமே பயன்படுத்துகிறார். (காண்க 1 கொரிந்தியர் 4:6, 18, 19; 5:2; 8:1; 13:4.) "அறிவு இறுமாப்பை [*phusioi*, பெருமையில் மேட்டிமை] கொண்டு வரும் ஆனால் அன்பு பக்தி விருத்தியை உண்டாக்கும்" (1 கொரிந்தியர் 8:1ஆ).

தரிசனங்கண்டோம் என்று சொல்லித் திரிவோர் ஆதாரமற்ற மதிப்பையும் கௌவரத்தையும் கொண்டுள்ளனர், அதினால் இயேசுவின் போதனைக்கு மேல் அவர்களுடைய போதனைகளை ஏற்றுக் கொள்ளச் செய்கின்றனர். இயேசு புறம் தள்ளப்பட்டு கள்ளப்போதகர்களின் போதனையைப் பின்பற்றிப்போவதைக் குறித்து அக்கறையில் அதற்கு எதிராக பவுல் எச்சரிப்பின் குரலெழுப்பினார். கொலோசெயர்களை ஊக்கப்படுத்துவதற்குப் பதிலாக, இந்த தரிசனங்கள் அவர்களைத் தரித்திராக்கும். கள்ளப் போதகர்கள் உண்மையான ஞானம் அறிவு ஆகிய பொக்கிஷங்களின் மூலாதாரத்திலிருந்து அவர்களை அப்புறப்படுத்துவதையே மனதில் கொண்டிருந்தனர் (2:3) மேலும் மனிதக் கண்டு பிடிப்புகளின் பிரயோஜனமற்ற கருத்துக்களுக்கு நடத்துவர். உண்மையான ஆவிக்குரிய வளர்ச்சி மனிதனுடைய மனதின்படி கண்டுபிடிக்கப்பட்ட வழிகளில் வருவதில்லை. இயேசுவிடமிருந்து மட்டுமே வருவதால் அவர்கள் நஷ்டத்தை சந்திக்க வேண்டியதாகும் (எரேமியா 10:23).

இந்த வசனத்திலுள்ள முரண்பாடே இதற்கு சாட்சி. மாய்மாலமாக சுய தாழ்மையை வெளிக்காட்டிக் கொண்டிருந்த ஜனங்கள் உள்ளுக்குள்ளாக மனமேட்டிமையைக் கொண்டிருந்ததற்கு எதிராக பவுல் எச்சரிக்கிறார். அவர்கள் பொய்யான தரிசனத்தைக் கொண்டிருந்தபடியால் அவர்களுடைய மனதில் இருந்த இறுமாப்பு அப்படியொரு மனமேட்டிமையைக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இது அவர்களை கண்டுபிடிக்க இயலாத சுய-மதிப்பீட்டை செய்யவும் அநியாயமான பெருமை கொள்ளவும் செய்தது.

இன்னொரு புறம் பார்த்தால், கிறிஸ்தவர்கள், இயேசு மூலம் அவர்கள் பெற்றுக் கொண்டதில் உறுதியான நம்பிக்கைப் பெற்றுக் கொள்ள இயலும். பவுல் எழுதினதாவது,

> மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல், தேவனுடைய கிருபையினால் நாங்கள் உலகத்திலேயும், விசேஷமாக உங்களிடத்திலேயும், கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோமென்று, எங்கள் மனது எங்களுக்குச் சொல்லுஞ்சாட்சியே எங்கள் புகழ்ச்சியாயிருக்கிறது (2 கொரிந்தியர் 1:12).

கிறிஸ்தவர்கள் வெட்கப்படாதிருந்து, இயேசு தம்மைப்பின்பற்றி வருவோருக்கு ஒழுங்கு செய்துள்ள வாழ்க்கையைக் குறித்து பெருமை கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட பெருமை நியாயப்படுத்தப்பட வேண்டிய ஒன்று, ஏனெனில் அது ஒரு தனி நபரின் சுய சாதனையாகவும் திறமையாகவும் கொள்ளாமல் இயேசுவின் ஊழியத்தின் மேலும் தேவனுடைய கிருபையின் மேலும் வைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவைப் பின்பற்றிபோவோர் "எவனானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமலிருக்கும்படி" அறிவுறுத்தப்பட்டனர் (ரோமர் 12:3ஆ).

ஆவிக்குரிய மனமுடைய கிறிஸ்தவர்கள் அர்த்தமற்ற பெருமைக்கு

நீங்கலாயிருக்க வேண்டும். மாம்சத்திற்குரிய மனமுடையவர்களின் குணாதிசயம் Eduard Schweizer சரியாக மாம்சத்தைப் போல தீமையானது எதுவுமில்லை என்றார்.[13] மனித மாம்சம் தன்னில் தான் நல்லதுமில்லை தீமையுமில்லாதது. கொலோசெயிலிருந்தவர்கள் தேவ வெளிப்படுத்தலைச் சார்ந்திராமல் மனித ஞானத்தை மட்டுமே சார்ந்திருந்தனர் என்பதால் அவர்களுடைய பிரச்சனைகளை பவுல் எழுதினார். கொரிந்தியர்களுக்கு அவர் எழுதின நிருபத்தில், பயனற்ற மனித ஞானத்தின் மூலம் தேவனுடைய மனதை அறியத்தக்க திராணியைப் பெறுவதைக் குறித்து காட்டுகிறார் (1 கொரிந்தியர் 1:20, 21), அவருடைய விசேஷித்த வெளிப்படுத்தல் மூலமாக மட்டுமே தேவனுடைய மனதை அறிய முடியும் (1 கொரிந்தியர் 2:10-16).

மாம்ச சிந்தையினாலே *(ho nous tēs sarkos autou* நேரடிப் பொருளில், "அவனுடைய மாம்சத்தின் சிந்தையினால்") என்பது ஆங்கில வேத மொழிபெயர்ப்புக்களான NASB, KJV, மற்றும் NKJV ஆகியவைகளில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சொற்றொடர் "புலன் உணர்வு சார்ந்த மனம்" (RSV), "மனுஷீக சிந்தனை" (NRSV), "உலகப்பிரகாரமான சிந்தனைகள்" (NEB), மற்றும் "ஆவிக்குரியத்தன்மையற்ற மனம்" (NIV; காண்க TNIV) என்றெல்லாம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பவுல் தெய்வீக வெளிப்படுத்தலுக்கு எதிராக உலகப்பிரகாரமான சிந்தையால் கண்டுபிடிக்கப்பட்ட மதங்களை அர்த்தப்படுத்தினார். தேவனுடைய வசனத்தின் மேல் இல்லாமல், மனித யூகங்களால் உலகக் கண்ணோட்டத்தை தீர்மானிக்கும், மனித புத்திக் கூர்மையை சார்ந்திருப்பவர்களைப் பற்றி அவர் நினைத்துக் கொண்டிருந்தார். தேவனுடைய வசனமாகிய வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்ட உள்நோக்கைக் காணமல், சிலர் தங்கள் சொந்த கருத்தை சார்ந்திருப்பதற்கு அறிவுக்கடுத்த தற்பெருமையே காரணமாக இருக்கிறது.

"உங்கள் பந்தயப் பொருளை நீங்கள் இழந்து போகும்படி ஒருவனும் உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்" 2:19அ)

பவுல் கொலோசெயர்களிடம் "ஒருவனும் நயவசனிப்பினாலே அவர்களை வஞ்சியாதபடிக்கும்" (2:4), "கொள்ளை கொண்டு போகாதபடிக்கும்" (2:8), "ஒருவனும் குற்றப்படுத்தாதபடிக்கும்" (2:16) எச்சரிக்கையாயிருக்கும்படி சொன்னார். பின்பு அவர், **ஒருவனும் உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்** என்று சொன்னார் ... இது தொடர்ந்து செயல்படும்படிக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கட்டளை இயேசுவால் அளிக்கப்பட்ட நன்மைகளை கள்ளப்போதனைகள் தொடர்ந்து கொள்ளையிட விடாதபடி அப்போஸ்தலன் சகோதரர்களுக்கு கட்டளையிட்டார்.

இயேசு கொண்டு வந்த நிஜங்களிலிருந்து கொலோசெயர்கள் மயக்கப்பட்டு இழுப்புண்டு போக ஏதுவாக, கள்ளப்போதகர்கள் "வஞ்சித்து" அவர்கள் தங்கள் **பந்தயப் பொருளை** இழந்துபோகச் செய்யக்கூடும். "வஞ்சித்தல்" *(katabrabeuō)* எனும் வார்த்தை புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணுகிறது. ஆகையால், இந்த வினைச் சொல்லின் பொதுவான பயன்பாடு அந்த நேரத்திலிருந்த பிற இலக்கியங்களில் காணப்பட்டிருக்க

வேண்டும். எதிர்மறைப் பொருளில், "எதிராகத் தீர்மானம் எடுத்தல்" என்று அது சொல்லப்படுகிறது, ஒருவர் தனக்கான வெகுமதியைப் பெறாதபடி விளையாட்டுப் போட்டியின் நடுவர் விலக்கிவைப்பது போன்றது. பவுல் அநேகமாக கிரேக்க விளையாட்டுப் போட்டிகளுடன் ஒப்பிட்டு பேசியிருக்கக் கூடும். ஓட்டப்பந்தயவீரர் ஒருவர் ஒரு பந்தயத்தில் வெற்றிபெற்றும் நியாயமற்ற நடுவரால் தகுதியிழப்பைப் பெறவும் அல்லது தான் ஜெயிப்பதற்கு ஏதுவான பிரயாசங்களை எடுத்தும் தான் போட்டியில் பங்கேற்க சட்ட ரீதியான தகுதி பெற்றிருக்க வில்லை என்று கண்டு பிடிக்கக்கூடும். இதில் எந்த ஒன்றாலும், அவர் பந்தயப்பொருளை பெற இயலாமல் போகக் கூடும்.

பவுல் சகோதரர்களை எச்சரித்து மாயையான தாழ்மையினால் இயேசுவை விட்டு அவர்கள் கொள்ளை கொண்டு போகப்படாதபடி எச்சரித்தார். அவர்கள் இயேசுவுக்குப் பதிலாக தேவ தூதர்களை தொழுதுகொள்ள துவங்கினால், அவர்களுடைய பந்தயப்பொருள் கொள்ளை போகக் கூடும். இந்தப் "பந்தயப் பொருள்" இரட்சிப்பையும், பரலோகத்திலுள்ள நித்திய ஜீவனையும், கிறிஸ்துவுக்குள் காணும் ஆவிக்குரிய ஜீவியத்தையும் உட்படுத்தியது. "ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு" எனும் சொல் வசனம் 16க்கு ஒத்தது. கொலோசெயர்கள் இயேசுவை விட்டு *யாராலும்* அல்லது *யாரிடத்திலும்* போய்விடக் கூடாது என்று விரும்பினார். அவர்கள் ஏற்கனவே நிஜமாகிய சத்தியத்தை, பெற்றுக் கொண்டு இருப்பதால் அவர்கள் கள்ளப் போதகர்களைப் பின்பற்றியோ அல்லது நிஜத்தின் பிரயோஜனமற்ற நிழலாலோ கொள்ளை போய்விடக் கூடாது. அப்படி இதை அவர்கள் அனுமதிப்பார்களானால் சத்தியத்தின் இடத்தில் கள்ளப் போதகத்துக்கும் பொருளுக்குப் பதில் நிழலுக்கும் இடமளித்ததாகி விடும். இப்படியாக அவர்கள் நிஜத்தை விட்டு கொள்ளை போனவர்களாவார்கள்.

பவுலின் அறிவுரைகள் எல்லா ஜனங்களுக்கும் சுய தெரிவு செய்யும் உரிமையுண்டு என்றும் அவர்கள் தேவனுடைய கரங்களில் பிணையமாக்கப்பட்டவர்களல்ல. என்றும் சுட்டிக் காட்டுகின்றன. அப்படியில்லாதிருந்தால், அவருடைய எச்சரிக்கை மதிப்பற்றதாகி விடும். அவர்கள் தங்கள் பந்தையப்பொருளை இழந்து விடாதபடி கொடுக்கப்பட்ட எச்சரிக்கையின் மூலம், அவர்களுக்கு தெரிவு செய்து கொள்ளும் சந்தர்ப்பம் உண்டு என்பதை காட்டினார். கள்ளப் போதகர்கள் தங்களை மேற்கொள்ள அனுமதிப்பதோ அனுமதிக்காமலிருக்கவோ உரிமையுண்டு.

அவர்கள் இயேசுவிடமிருந்து பிரிக்கப்பட்டு வேறு உபதேசங்களுக்கோ ஆசரிப்புகளுக்கோ கொள்ளையாய் கொண்டு போகாதபடிக்கு பவுல் ஆறு எதிர்மறை எச்சரிப்பு வாக்கியங்களைக் குறிப்பிட்டார். அதில் நான்கு எச்சரிப்புகள் 2:18, 19ல் கொடுக்கப்பட்டுள்ளன, பிறகு "நம்மோடு அழிந்து போகும் பொருள்களைக்" குறித்துப் பேசுகிறார் (2:22), மேலும் "சரீர ஒடுக்கம் ... மாம்சத்தை பேணுவதற்கு" மட்டும் உதவும் காரியங்களைப் பேசுகிறார் (2:23).

நேர்மறைப் பகுதியில் பல்வேறு வார்த்தைகளால், பவுல் சகோதரர்கள் இயேசுவைப் பின் பற்றவும் அவருக்கு உண்மையாய்த் தரித்திருக்கவேண்டிய அவசியத்தையும் குறிப்பிடுகிறார்:

- *"இருளின் அதிகாரத்தினின்று அவர் நம்மை விடுதலையாக்கினார்" (1:13).*
- *"அவர் தேவனுடைய தற்சுரூபமாயிருக்கிறார்" (1:15அ).*
- *"சகல சிருஷ்டிப்புக்கும் அவர் முந்தின பேறுமானவர்" (1:15ஆ).*
- *"சகலமும் அவரால் சிருஷ்டிக்கப்பட்டன" (1:16).*
- *"அவர் எல்லாவற்றுக்கும் முந்தினவர்" (1:17அ).*
- *"எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது" (1:17ஆ).*
- *"அவரே ... சரீரத்துக்குத் தலையாயிருக்கிறார்" (1:18அ).*
- *"அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (1:18இ).*
- *"எல்லாவற்றிலும் முதல்வராயிருப்பார்" (1:18ஆ).*
- *"சகல பரிபூரணமும் அவருக்குள் (வாசமா) யிருக்கிறது" (1:19).*
- *"அவர் உங்களை ஒப்புரவாக்கியிருக்கிறார்" (1:20).*
- *"அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லம் அடங்கியிருக்கிறது" (2:3).*
- *"தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் அவருக்குள் வாசமாயிருக்கிறது" (2:9).*
- *"அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறர்கள்" (2:10).*
- *"விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்" (2:11).*
- *"... கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து" (2:14).*
- *"துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டார்" (2:15).*
- *"நீங்கள் கிறிஸ்துவுடனே கூட மரித்தீர்கள்" (2:20).*

கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தல் (2:20-23)

[20]நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் போல, [21]மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? [22]இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்து போகுமே. [23]இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றிய ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றுக்கும் பிரயோஜனப்படாது.

வசனம் 18, 19ல் பவுல் கள்ளப்போதகங்கள் கொலோசெயர்களை கிறிஸ்துவினிடமிருந்து பிரித்து விடக்கூடும் என்று வலியுறுத்தினார். சகோதரர்கள் அப்படி நடக்க விடாமல் இருக்க எச்சரிப்பதற்கு முன், கிறிஸ்துவின் மேன்மையையும் அதிகாரத்தையும் உறுதிப்படுத்தி அவர், தேவனுடைய தற்சுரூபமும், சிருஷ்டிகரும், சபை உட்பட எல்லாவற்றிற்கும் தலையாயிருக்கிறார், தேவனோடு ஒப்புரவாக்குதலுக்கு

அடிப்படையாயுமிருக்கிறார் என்றார் (1:15-20). அவருக்குள் ஞானம் அறிவு ஆகிய அனைத்தும் அடங்கியிருக்கிறது, தேவத்துவத்தின் பரிபூரணம் வாசமாயிருக்கிறது, பரிபூரணமாக்கப்படுவதற்குரிய வாய்ப்பும் அவருக்குள் நிறைவாயிருக்கிறது. கொலோசெயிலிருந்த கிறிஸ்தவர்கள் தங்களுடைய பாவ இச்சைகளை களைந்து போட்டுள்ளனர் மற்றும் அவர்களுடைய சகல பாவங்களும் அவருக்குள் மன்னிக்கப்பட்டன (2:3-13).

இக்காரணங்களால் கொலோசெயர்கள் இயேசுவிலே நிலைத்திருந்து அவரை மாத்திரம் பின்பற்றவும் வேண்டியவர்களாயிருந்தனர். கள்ள உபதேசங்களை தவிர்க்க வேறு காரணங்களையும் பவுல் கொடுத்தார்:

(1) நியாயப்பிரமாணம் நடுவிலிராதபடிக்கு எடுக்கப்பட்டு சிலுவையிலே ஆணியடிக்கப்பட்டிருந்தது (2:14). அது விடுதலையைக் கொடுக்கவில்லை, மாறாக அதன் கீழிருந்தவர்களை அடிமைத்தனத்துக்குள்ளாக்கியது. அது ஜீவனைக் கொடுக்கமுடியவில்லை, மாறாக மரணத்தைக் கொண்டு வந்தது.

(2) யூத மத தொழுகையானாலும், அஞ்ஞான மதத் தொழுகையானாலும், விடுதலையையோ ஆவிக்குரிய வளர்ச்சியையோ கொடுக்க இயலவில்லை. அவைகளில் ஈடுபட்டிருந்தவர்களை அது அடிமையாகமாத்திரம் செய்தது (2:8). அப்படிப்பட்ட ஆசரிப்புளைச் செய்தவர்களை அது அவர்களுடைய பந்தயப்பொருளை இழக்கச் செய்தது.

இந்த உண்மைகள் வசனம் 20-23ல் பவுல் தனது போதனையைக் கொடுக்க பின்னணியைக் கொடுத்து ஏதுவாக்கியது. இங்கே, சரீர இச்சைகளைக் கட்டுப்படுத்த உலகம் கொடுக்கும் விதிமுறைக்கட்டுப்பாடுகள் மாம்சம் விரும்பும் சுதந்தரத்தை கொடுக்க இயலவில்லை என்பதை வலியுறுத்துகிறார். மாறாக, உலகத்தின் கொள்கைகள் அவைகளை அடிமைகளாக மட்டுமே வைத்தது. கொலோசெயர்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தவர்களாயிருந்தனர். பவுல் ஒப்பிடும் சட்டங்கள் உண்மையான மதிப்பில்லாதவை ஏனெனில் அவை அழியும் தன்மையுடையவை.

கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டிருந்தால் அதுவே உண்மையான சுதந்திரமும் சுயக்கட்டுப்பாட்டையும் அளிக்கும் வழி, அது ஆவிக்குரிய வளர்ச்சியை அடையவும், கிறிஸ்தவ சுயாதீனத்தை பெறவும், பரலோகத்தில் வாசம் பண்ணும் சிலாக்கியத்தைப் பெறவும் செய்யும். ஜீவியத்திற்கான வேறு எந்த அணுகுமுறையும் இயேசு அருளிச் செய்கிறதை கொடுக்க முடியாது.

"நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால்" (2:20அ)

கொலோசெயர் கிறிஸ்துவுடனே கூட மரித்திருந்தார்கள். பழைய வாழ்வுமுறை முடிவுக்கு வந்திருக்க வேண்டும், அதினால் அவர்களுடைய புதிய வாழ்வு முறை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கக் கூடும். ஒரு உருவகப் பொருளில், அவர்கள் அவருடைய மரணத்தையும் அவருடைய மரணத்தின் நோக்கத்தையும் பகிர்ந்து கொண்டனர் - அது பாவத்திலிருந்து விடுதலை. அவர்கள் பாவம் நிறைந்த உலகக் காரியங்களிலிருந்து தப்பித்துக் கொண்டிருக்க வேண்டும், ஆகையால் உலகத்துக்காக வாழாமல் இயேசுவுக்காக வாழ வேண்டும்.

ரோமர் 6:3ல் பவுல் ஞானஸ்நானத்தை கிறிஸ்துவின் மரணத்துடன் இணைத்து, ஞானஸ்நானம் ஜனங்களை இயேசுவின் மரணத்துக்குள்ளாக்குகிறது என்று எழுதினார். அவரே தொடர்ந்து, "ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் ... நாம் இனி பாவத்துக்கு ஊழியஞ்செய்யாத படிக்கு, ... அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" என்று சொன்னார் (ரோமர் 6:4-6). அதே கருத்தை வெளிப்படுத்தும்படி தான் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டதாகக் குறிப்பிட்டார் (கலாத்தியர் 2:20). இது மிகப் பெரிதாக அவருடைய வாழ்க்கையை பாதித்தது, ஏனெனில் அவர், "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று எழுதினார். "மரித்தார்கள்" என்று கொலோசெயர் 2:20ல் குறிப்பிடும் பதம் இறந்த காலமுற்று வினையாக மொழிபெயர்க்கப்பட்டது. அதன் குறிப்பு கிறிஸ்துவுடனே கூட அனுபவப்பட்ட மரணம் முற்றுப் பெற்றதாக கடைசியானதாகக் காட்டுகிறது. கலாத்தியர் 2:20ல் பவுல் ஒரு எச்ச வினை வடிவமாக்கப் பயன்படுத்துகிறார் அதன் பொருள் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டார், மேலும் தொடர்ந்து கிறிஸ்துவுடனே கூட அறையப்பட்ட நிலையிலேயே தரித்திருப்பார் என்பதாகும்.

கிறிஸ்தவர்கள் இனியும் பாவத்துக்கு அடிமைகளாயிருக்கக்கூடாது என்று பவுல் போதித்தார் (ரோமர் 6:1-7). ஞானஸ்நானத்திலே இயேசுவின் மரணத்தைப் பகிர்ந்து கொண்டவர்கள், பாவத்துக்கு மரித்தவர்களாவார்கள், கொலோசெயர்கள் பாவத்தின் ஆதிக்கத்திலிருந்து ஒரு புதிய வகை வாழ்க்கையை வாழ ஏதுவாக விடுதலையாக்கப்பட்டார்கள். வசனம் 20ல் அவர்களுக்கு பவுல் நினைப்பூட்டி கிறிஸ்துவுடனே கூட அவர்கள் மரித்தது **உலகத்தின் வழிபாடுகளுக்கு** *மரித்ததாக முடிவு செய்ய வேண்டும் என்றார்.*

உலகத்தின் சட்டங்களில் ஜீவன் காணப்படுவதில்லை. கொலோசெயர்கள் உலகத்தின் வழிபாடுகளுக்காக மரித்ததன் மூலம் கொலோசெயர்கள் அவைகளுக்குத் தப்பித்துக் கொண்டார்கள். அவர்களுடைய முந்தின வாழ்க்கையிலே, அவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஜீவனுக்கு மரித்திருந்து, உலகத்துக்குப் பிழைத்திருந்தார்கள்; அவர்களின் தற்போதைய வாழ்க்கையில், அவர்கள் உலகத்துக்கு மரித்து ஆனால் கிறிஸ்துவுக்குப் பிழைத்திருக்கிறார்கள். அவர்கள் உலகத்தின் கட்டங்களுக்கு மரித்தவர்களானார்கள், எனவே இனியும் அவைகளால் அவர்கள் வாழ்வதில்லை.

(மரித்தது உண்டா) **னால்** *என்பதன் பயன்பாடு அவர்களுடைய கிறிஸ்துவுடனான மரணத்தை சந்தேகப்படுவதல்ல: "'நீங்கள் மரித்தது உண்டா ... னால்'* (RSV), *என்பது கிரேக்க மொழியில் ஒரு நிபந்தனை எழுவாய் பயனிலை உருபு, அது சொல்லணி இலக்கண வகையைச் சார்ந்தது, எனவே எந்த சந்தேகத்தையும் அது எழுப்புவதில்லை; ஒரு உண்மையைக் குறிப்பிடுவதற்காக சொல்லும் விதம் இது, அதிலிருந்து குறிப்பிட்ட முடிவுக்கு வரக் கூடும்."*[14]

அவர்கள் "கிறிஸ்துவுடனே கூட," மரித்திருந்தாலும் மரியாதிருந்தாலும் அது குறித்து கேள்வி எழுப்புவற்குப் பதிலாக, கிறிஸ்துவின் மரணத்தில் பங்குடையவர்களாகும் போது ஏற்படும் விளைவை பவுல் காட்டுகிறது, ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டு எழுப்பப்

பட்டபோது அவர்களுடைய வாழ்க்கையின் அணுகுமுறையில் ஒரு மாற்றம் இடம்பெற வேண்டும் (வசனம் 12). அதன் விளைவு தான் "உலகத்தின் வழிபாடுகளுக்காக" மரித்தல், அது கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வை தொடரச் செய்யவேண்டும்.

"உலகத்தின் வழிபாடுகள்" (stoicheiōn tou kosmou) இனியும் கொலோசெயர்களை கட்டுப்படுத்துவதில்லை என்று அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென பவுல் விரும்பினார் (காண்க 2:8ஈ பகுதியின் விவாதம்). கிறிஸ்துவின் மரணம் மற்றும் அடக்கம் பண்ணப்படுதலில் பங்கேற்றபோது கொலோசெயர்கள் அந்த வழிபாடுகளுக்கு மரித்திருந்தார்கள். உலகத் தத்துவங்களுக்கு மரித்தவர்களாதலால், இந்த சகோதரர்கள் அவர்கள் இயேசுவோடு கொண்டிருக்கும் நட்புறவில் அவர்களால் பயனடையக்கூடும் என்பது போல் இனியும் அவைகளுக்குத் தங்களை ஒப்புக் கொடுக்கக் கூடாது.

"இன்னும் உலக வழக்கத்தின்படி ஜீவிக்கிறவர்கள் போல ... என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன?" (2:20ஆ, 21இ)

அப்போஸ்தலர்களைக்குறித்து இயேசு குறிப்பிடுகையில் "நீங்கள் உலகத்தாராயிராத படியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும்" என்றார் (யோவான் 15:19ஆ). பிதாவிடத்தில் தமது ஜெபத்தின்போது, அவர், "இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள் ..." என்றும் (யோவான் 17:11ஆ); "... அவர்களும் உலகத்தார்களல்ல" என்றும் சொன்னார் (யோவான் 17:14, 16). உலகத்தில் வாழ்ந்து கொண்டே உலகத்துக்கு ஒத்த வேஷம் தரிக்காமல் வாழ்வது தான் கிறிஸ்தவனின் இலக்கு (ரோமர் 12:2).

நாம் உலகத்தின் பாவத்துக்கு உட்படுத்தும் சோதனைகளோடுகூட, இந்த உலகத்தில் வாழ்கிறோம், ஆகிலும் அதிலே பங்குடையவர்களல்ல என்பதை நாம் உணர வேண்டும். நாம் ***உலகத்தில் வாழ்வதிலிருந்து*** *தப்பித்துக் கொள்ள இயலாமற்போனாலும், நாம் உலகத்தை நமது வாழ்க்கையிலிருந்து அப்புறப்படுத்த முடியும். உலகத்தில் நாம் "வாழ்ந்து" (zōntes, "தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் போது") உலகத்தைக் கட்டுப்படுத்தும் அதே கொள்கைகளால் நடத்தப்பட்டு விடக் கூடாது.*

பவுல் "உலகத்தை" (kosmos) ஒரு பூகோள ரீதியான பகுதியாக 1:6ல் சொல்லுகிறார். இந்த வசனப்பகுதியில் பவுல் அதே வார்த்தையை பயன்படுத்தி கொலோசெயர்கள் வாழ்ந்து கொண்டிருந்த சமுதாயத்தை பொருள்படுத்தினார்.

நீங்கள் ***கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன*** *எனும் சொற்றொடர் dogmatizesthe ஒரு தனி கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். இந்த வினைச்சொல் dogmata, வின் ஒத்த பண்புடைய பெயர்ச்சொல் ("கட்டளைகள்" என்று) 2:14ல் சொல்லப்படுகிறது. இந்த இரண்டு வார்த்தைகளும் ஒரே மூல காரணியின் மேல் கட்டப்பட்டிருந்த போதிலும், வசனம் 20ஆவில் குறிப்பிடுகிற அதே கட்டளைகளல்ல. 2:14ல் பவுல் தேவன் மோசே மூலம் கொடுத்த நியாயப்பிரமாண சட்டதிட்டங்களைக் குறிப்பிடுகிறார். வசனம் 20ஆவில் கட்டளைகளையோ அல்லது உலகத்தாரின் மனதில் தோன்றின கட்டளைகளேயோ குறிப்பிடுகிறார்.*

தேவனுடைய பிரமாணத்தை விட்டுப் பின் வாங்கிப் போவோர்

சுதந்திரம் (அல்லது சுயாதீனம்) எனும் பெயரில் இப்படிச் செய்வதுண்டு; அவருடைய பிரமாணங்களெல்லாம் கெடுபிடியானவை என்று நினைக்கின்றனர். சுயாதீனத்திற்கான விதிகள் என்று அவர்கள் நினைப்பவை உண்மையான சுயாதீனத்தைக் கொண்டு வருவதில்லை; மாறாக உண்மையில் அது அவர்களை அடிமைப்படுத்துகிறது (2 பேதுரு 2:19; மேலும் காண்க யோவான் 8:34; ரோமர் 6:16). சந்தோஷத்திற்கு நல்ல சட்டங்கள் அவசியமானவை. சட்டங்களே இல்லாமற்போனால் அது ஆவிக்குரிய மற்றும் மாமிசப்பிரகாரமான அடிமைத்தனத்தைக் கொண்டு வரும். போக்குவரத்துச் சட்டமில்லாத ஒரு பெரிய நகரத்ினூடே வண்டி ஓட்ட முயற்சிப்பது எப்படியிருக்கும் என கற்பனை பண்ணிப் பாருங்கள். விபத்துக்கள் தவிர்க்க இயலாததாகி, போக்குவரத்து ஸ்தம்பித்து நிற்கும். இயேசுவின் உபதேசங்கள் மட்டுமே நம்மை உலக இச்சைகளிலிருந்து நாம் மேற்கொள்ளச் செய்யும் பாவத்தை ஜெயிக்கவும் ஆவிக்குரிய சுயாதீனத்தை பெறவும் செய்யும்.

“மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து” (2:21அ)

இந்தச் சொற்றொடரில் பவுல் முன்பு குறிப்பிட்ட கட்டளைகளின்படி நடவாதிருக்க இரண்டாவது காரணம் கொடுக்கப்படுகிறது: அப்படிப்பட்ட கட்டளைகள் மனுஷர்களிடமிருந்து தோன்றி அவர்களுடைய மூலாதாரம் மனுஷர்களாக இருந்தபடியால் அவை கட்டுப்படுத்துவதில்லை. ***மனுஷருடைய கற்பனைகள் மற்றும் போதனைகள்*** *என்னும் சொற்றொடர் திருமறையில் சொல்லப்பட்டுள்ள மற்றவார்த்தைகளுக்கு ஒப்பானவைகள்தான். மத்தேயு 15:9 மற்றும் மாற்கு 7:7 ஆகிய வசனங்களில், இயேசு ஏசாயா 29:13ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தை, தேவனுடைய கற்பனைகளோடு தங்களின் சொந்தக் கட்டளைகளையும் பாரம்பரியங்களையும் சேர்த்துக் கொண்ட யூதர்களுக்குப் பயன்படுத்துகிறார். தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதை விட, தங்களுடைய சுய பாரம்பரியங்களைப் பின்பற்ற ஏதுவாக அவைகளைப் புறந்தள்ளினார்கள், என்று சொன்னார் (மாற்கு 7:8). இந்த வகையில், அவர்கள் தேவனுடைய கற்பனைகளை அவமாக்கிப் போட்டனர் (மாற்கு 7:13).*

இங்கே பவுல் சில யூதர்களின் நம்பிக்கையான தன்னிலே துறந்து உடல்வருத்தி மெய்ஞானமடையும் நம்பிக்கையையோ அல்லது விவாகம் செய்யாதிருக்கவும், மிகவும் கடினமான உணவு சட்டங்களையும் கொண்டிருந்த எஸ்ஸென்னஸ் என்பவர்களின் வாழ்வு முறையையும் பவுல் குறிப்பிட்டிருக்கலாம் என சிலர் நம்புகின்றனர், இந்த இரண்டு கூட்டமும் தங்களைப் பின்பற்றுவோரும் இப்படிப்பட்ட உணவுக் கட்டுப்பாட்டை கடைபிடிக்கும்படி வலியுறுத்தப்பட்டனர். இருப்பினும், யாருக்கும் உறுதியாகத் தெரியவில்லை.

“மனுஷருடைய” என்று குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தை anthrōpoi, என்பதன் பொருள் “மனித வர்க்கம்,” இது ஆண் பெண் இருசாரரையும் உட்படுத்தியது. கிரேக்க வார்த்தையில் anēr என்பது ஒரு ஆண் அல்லது ஒரு புருஷனுக்கு மட்டுமே குறிப்பிடப்படுகிறது, அது கொலோசெயரில் இரண்டு முறை காணப்படுகிறது, இரண்டு முறையும் “புருஷர்கள்”

என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (3:18, 19). மனுஷக் கற்பனைகளும் போதனைகளும் ஆண்கள் பெண்கள் ஆகிய இருசாராருடைய செல்வாக்கின் விளைவே. கிறிஸ்தவர்கள் வாழவேண்டிய அளவுகோல் சமுதாயமல்ல, நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுபவர் ஒருவரே, இயேசு (யாக்கோபு 4:12), அவருக்கு வானத்திலும் பூமியிலும் சர்வ அதிகாரம் உள்ளது (மத்தேயு 28:18). மேலும் அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு நித்திய இரட்சிப்பை அளிக்கிறார் (எபிரெயர் 5:9).

கொலோசெயருக்கு பவுல் கொடுத்த உபதேசம் இன்றைக்கும் பயன்பாடுள்ளது. தேவனைத் தொழுது கொள்வதிலும் அவருக்குச் சேவை செய்வதிலும் தாங்கள் தெரிவு செய்து கொள்ளும் எதையும் எல்லாவற்றையும் நுழைப்பவர்களைக்குறித்து கிறிஸ்தவர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். பிதாவானவர் "ஆவியோடும் உண்மையோடும்" தொழுது கொள்ளப்படத் தக்கவர் என்று இயேசு சொன்னார் (யோவான் 4:23, 24). அவர் அப்போஸ்தலர்களுக்கு உபதேசம் பண்ணி தமக்கு சீஷராக்கப்படுகிறவர்கள் தாம் கட்டளையிட்ட யாவையும் "கைக் கொள்ளும்படி" போதிக்க வேண்டும் என்று சொன்னார் (மத்தேயு 28:20). ஆதிசபை "அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தரித்திருந்தது" (நடபடிகள் 2:42).

அதிகாரம் 2 கிறிஸ்தவர்கள் இயேசுவைப் பின்பற்ற வேண்டும் - அவரை மட்டுமே என்று வலியுறுத்துகிறது. சலக அறிவு ஞானம் என்கிற பொக்கிஷங்களெல்லாம் அவருக்குள் அடங்கியிருக்கிறது (வசனம் 3). கிறிஸ்தவர்களாகிய நாம், அவருக்குள் நடக்க வேண்டியவர்கள் (வசனம் 6) மற்றும் அவரில் கட்டப்பட வேண்டியவர்கள் (வசனம் 7); நாம் மனித பாரம்பரியங்களையோ உலகத்தின் வழிபாடுகளையோ பின்பற்ற வேண்டியவர்களல்ல (வசனம் 8). எடுத்துப்போடப்பட்ட கட்டளைகளை பின்பற்றும்படி யாரும் நம்மைக் குற்றப்படுத்த இடம் கொடுக்கக் கூடாது (வசனங்கள் 14, 15). நாம் இயேசுவைப் பற்றிக் கொள்ளாமல் கள்ள (பொய்யான) தொழுகையைப் பின்பற்றி வஞ்சிக்கப்படாதிருக்க வேண்டியவர்கள் (வசனம் 18), மேலும் நாம் மனுஷருடைய கற்பனைகளையும் போதனைகளையும் பின்பற்றிச் செல்லாமல் நம்மை விலக்கிக் கொள்ள வேண்டும் (வசனம் 22).

" 'தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே' என்கிற கட்டளைகளுக்கு" (2:21ஆ)

அவர்கள் எதிர்கொண்ட அடிமைத்தனத்துக்கு ஏதுவான சில சட்டங்கள் யாவை? பவுல் இந்த உதாரணங்களைக் கொடுத்தார்: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே இந்த கட்டளைகளெல்லாம் (ஆங்கிலத்தில்) இறங்கு விசையில் கொடுக்கப்பட்டுள்ளது; "தீண்டாதே" என்பது பலமான வார்த்தை "ருசிபாராதே" என்பதைத் தொடர்ந்து "தொடாதே" எனும் வார்த்தையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு எளிமையான தொடுதல் ருசிபார்ப்பதிலும், அல்லது தீண்டுதல் என்பது தொடுவதிலும் உட்படாது. கொலோசெயர்களுக்குப் பரிச்சயமான கட்டளைகள்தான் தொடுதலையும், ருசிபார்த்தலையும், அல்லது தீண்டுதலையும் விலக்கின.

கள்ளப்போதகர்கள் "செய்யாதே" என்பதன் கட்டளைகளின் பட்டியலை

கொண்டிருந்தனர். இது இயேசு தமது போதனையில் கொண்டிருந்த அணுகுமுறையல்ல. எதிர்மறையாக பட்டியிலிடப்பட்ட காரியங்களைத் தவிர்ப்பதால் நேர்மறை வாழ்வுக்கு அவை அவசியமாகிவிடாது. நேர்மறைக் காரியங்களை அதிக முக்கியப்படுத்தி செயல் பட்டால் எதிர்மறைக்காரியங்கள் தானாக சிறப்பாக தவிர்க்கப்பட்டு விடும் (ரோமர் 13:8-11); எப்படியாயினும், கிறிஸ்தவத்தில் "செய்யாதே" என்ற கொள்கைகளையும் அதேபோல "செய்யுங்கள்" எனும் கொள்கைகளையும் கொண்டுள்ளனர்.

புதிய ஏற்பாட்டை ஜாக்கிரதையாக படித்தால் இயேசு, "செய்யாதே" என்பதை அடிக்கடி சொல்லியிருக்கிறார் என்பதைக் காட்டும் மலைப் பிரசங்கத்தில் (மத்தேயு 5-7), அவர் சொன்னதாவது,

- "சத்தியம் பண்ணாதிருங்கள்" (மத்தேயு 5:34).
- "உன் வலது கை செய்கிறதை இடது கை அறியாதிருக்கக்கடவது" (6:3).
- "வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்" (6:7).
- "அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்" (6:8).
- "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்" (6:19).
- "கவலைப்படாதிருங்கள்" (6:25; காண்க வசனங்கள் 31, 34).
- "மற்றவர்களை குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" (7:1).
- "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதிருங்கள்" (7:6).

பிரசங்கத்தில் சொல்லப்பட்ட மற்ற வாக்கியங்கள் தவறானவைகளை எதிர்த்து எச்சரிப்பவை. என்னசெய்ய வேண்டும் என்று சொல்லும் நேர்மறை போதனை முக்கியமானது. ஆனால் ஒரு ஆசான் என்ன செய்யக் கூடாது என்று ஜனங்களுக்குச் சொல்லுவதும் அவசியம்.

பவுல் சில கட்டளைகளைக் குறிப்பிட்டு அவைகளில் தவிர்க்கப்பட வேண்டியவைகளையும் மேற்கோள் இட்டுக் காட்டினார். ஒருவகையில் கொலோசெயருக்கு பரிச்சயமான கட்டளைகளையே பவுல் இங்கு பட்டியலிட்டார். சமுதாயத்தில் போதிக்கப்படுகிற அனைத்து கட்டளைகளையும் பட்டியலிடுவது அவருடைய நோக்கமல்ல, மாறாக அவருடைய மனதில் நின்ற சில கட்டளைகளை ஒரு மாதிரிக்காகக் கொடுப்பதுதான். H. C. G. Moule பின்வரும் சட்டங்களை பரிசீலித்து, "மோசேயின் நியாயப்பிரமாணத்தின் … தடைச்சட்டங்கள், பரிசேயப் பள்ளிகளால் விரிவுபடுத்தியும் மிகைப்படுத்தியும் காட்டப்பட்டது"[15] என்றார். அதிகப்பட்சமாக, அவைகள் மனுஷகற்பனைகளை மட்டுமே கொண்டிருந்தவை, சிலர் அதை நியாயப்பிரமாணத்துக்கு ஒப்பிட்டிருக்கலாம். குறிப்பிடப்பட்ட இந்த விதிமுறைகள் தேவபக்தியை உண்டுபண்ணும் பொருட்டு அளவுக்கதிகமான கண்டிப்புகள் சிலவேளைகளில் கொடுமையாகவும் கூட சரீர செயல்களை நடப்பிக்கவும் கண்டுபிடிக்கப்பட்டவை Moule மேலும் எழுதினார்,

> அவைகளில் எதுவாகிலும் மோசேயின் பிரமாணத்துக்குரியவைகளாக இருந்திருக்குமானால், இதுவரை பவுல் அவைகளின் தெய்வீக அதிகாரங்களை முழுமையாக *அவைகளின் சொந்தக் காலத்தில்*

> அவைகளின் சொந்த நோக்கங்களை உணர்ந்திருப்பார், ஆனால் அந்தக் காலம் முடிவுற்றது, நோக்கம் கிறிஸ்துவுக்குள் நிறைவேறியது. அவைகளை இப்போது அமல்படுத்த தேவனுடைய பிரகடனத்துக்கும் மனுஷருடைய நடுவர் தீர்ப்பு பயன்பாட்டுக்கும் விட்டு விடுவோம்.[16]

பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்களை கிறிஸ்தவ யுகத்தில் ஜனங்கள் மீது சுமத்துகிறவர் யாராயினும் அவர்கள் மனுஷ அதிகாரத்தின்படி செய்கிறார்களேயன்றி, தேவனுடைய அதிகாரத்தின்படியல்ல.

மனுஷருடைய கற்பனைகள் என்பது மனிதவர்க்கத்தின் ஆரம்ப சமுதாயச் சட்டங்களை பவுல் குறிப்பிட்டதாக சிலர் நினைக்கின்றனர். ஆகிலும், இது அவருடைய போதனையாக இருந்திருக்காது, ஏனெனில் கிறிஸ்தவர்கள் அரசு சட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டியவர்கள். "எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் …" (ரோமர் 13:1-4; காண்க தீத்து 3:1); "நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள்" (1 பேதுரு 2:13அ). பவுலால் இங்கே குறிப்பிடப்படுவது போன்ற கட்டளைகள் அரசு சம்பந்தப்பட்ட கட்டளைகள் அல்ல, மாறாக, எவ்வித ஒழுக்க சம்பந்தப்பட்ட காரியங்களுக்கும் ஒவ்வாத பக்திசம்பந்தப்படாத சிறிய அற்பமான கற்பனைகள் அவை.

பவுல் குறிப்பிட்ட மூன்று தடைகளுக்கும் இடையே வித்தியாசம் கண்டுபிடிப்பது சுலபமல்ல. அவர் மாம்சப்பிரகாரமான கட்டுப்பாட்டைக் குறித்தே எழுதினார், நித்தியத்திற்கடுத்த காரியங்களையோ, காணக் கூடாத, ஆவிக்குரிய ரீதியிலான இடத்தைப்பற்றியோ எழுதவில்லை (2 கொரிந்தியர் 4:18). இப்பொழுது சர்ச்சையில் உள்ள கட்டளைகளோ அழிவுள்ளதான காரியங்களுக்கடுத்தவைகளும், மாமிச உலகம், போன்றவற்றை கட்டுப்படுத்துபவை, இவற்றிலே இயல்பான ஆவிக்குரியவைகளை உருவாக்கும் தன்மை எதுவுமில்லை.

(1) "தொடாதே" (*thinganō*), இது "தீண்டாதே" என்ற அர்த்தத்துக்கு ஒப்பானது, உலகப்பிரகாரமான எழுத்துக்களில் இது ஒழுக்கரீதியான உய்த்து உணர்தலைக் கொண்டது. எபிரெயர் 11:28ல் இதே வார்த்தை அழித்தலைக் குறிக்கும், மற்றும் எபிரெயர் 12:20ல் இது தேவன் நியாயப்பிரமானத்தை சீனாய்மலையில் கொடுத்தபோது ஒரு மிருகமாவது மலையைத் தொட்டால் சம்பவிப்பதைக் குறிக்கும். 2:21ல் பவுல் கொடுக்கிற அர்த்தம் இந்த ஜீவியத்தில் அழிந்து போகக் கூடியவைகளாயிருக்கும் உலகப் பொருட்களிலிருந்து விலகியிருத்தலைக் குறிக்கிறது என்பதாகும்.

(2) "ருசிபாராதே" (*geuō*), நேரடிப் பொருளில், "வாயினால் ருசிபார்க்கிற ஏதோ ஒன்று," அது போஜனமாகவோ அல்லது பானமாகவோ இருக்கலாம் (மத்தேயு 27:34; லூக்கா 14:24). உருவகமாக, இதன் பொருள் ஏதோ ஒன்றை "அநுபவித்தல்" (எபிரெயர் 6:4, 5; 1 பேதுரு 2:3) அது மரணம் போன்றதையும் குறிக்கும் (மத்தேயு 16:28; யோவான் 8:52; எபிரெயர் 2:9).

(3) "தீண்டாதே" (*hapsē*, என்பது *haptō* விலிருந்து வந்தது) இதன் பொருள் "பாலுறவு கொள்வது" எனலாம், அது ஒரு பெண்ணைத் தொடும் சம்பவத்தைக்குறிக்க பயன்படுத்தப்படுவது (1 கொரிந்தியர் 7:1). பெரும்பாலும், அடிக்கடிப் பயன்படுத்த இந்த வார்த்தையின் பொருள் "தொடுதல்" (மத்தேயு

8:3, 15) அல்லது "இசைந்திருத்தல்" (யோவான் 20:17), மேலும் சிலவேளைகளில் "பங்கு பெறுதல்" அல்லது "தீண்டுதல்," என்று இந்த வசனத்தில் வந்திருப்பது போன்றது, பாலுறவு மற்றும் உணவையும் இது உட்படுத்தினது. பவுல் தீர்க்க தரிசனமாக ஜனங்கள் போஜன பதார்த்தங்களையும் விவாகத்தையும் விட்டு விலகியிருக்கும்படி கட்டளையிடப்படுவார்கள் என்றார் (1 தீமோத்தேயு 4:3). சிலர் *hapse* எனும் வார்த்தையை பவுல் பயன்படுத்தியிருப்பதால் பாலுறவைத்தான் குறிப்பிட்டார் என்ற முடிவுக்கு வருகின்றனர். இங்கே சொல்லப்படும் வார்த்தையின் பொருள் மிகவும் பொதுப்படையானது, அது பாலுறவுக்குறித்தும் பேசுகிறது எனலாம்.

O'Brien, *hapsē* எனும் "தீண்டாதே" என்ற வார்த்தை பாலுறவுக்கு மட்டும் குறிப்பிடக் கூடியதல்ல என்பதற்கு மூன்று காரணங்களை முன்வைக்கிறார்:

> முதலாவதாக, இந்த நிருபத்தில் வேறெந்த இடத்திலும் ஒரு லேசான குறிப்பு கூட பாலுறவு தடையாக குறிப்பிடப்படவில்லை (1 தீமோத்தேயு 4:3ல் குறிப்பிடப்படும் கள்ளப் போதகர்கள் விவாகத்தை தடைசெய்கிறார்கள் ஆகிலும் அங்கே "விவாகம்" பண்ணாதிருக்கும் கட்டளை கொடுக்கப்பட்டது). இரண்டாவதாக, கிரேக்க வார்த்தையாகிய, ["தீண்டுதல்"], என்பது இந்த உய்த்து உணருதல் அடிப்படையில் எழுவாய் வினைச்சொல். இதன் பொருளை ["தீண்டுதல்"] என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது (ஒப்பிடுக ஆதியாகமம் 20:4, 6; நீதிமொழிகள் 6:29; 1 கொரிந்தியர் 7:1). இந்த வினைச்சொல் தன்னில்தானே ஒரு பரந்த பொருளைக் குறிக்கும். மூன்றாவதாக, உடனடித் தொடர்ச்சியாக வரும் வார்த்தை (வசனம் 22, "இவைகளையெல்லாம் அநுபவிக்கிறதினாலே அழிந்து போகுமே" என்பது) உலகப் பொருள்களாகிய போஜனம், மற்றும் பானத்தை மனதில் கொண்டுபேசப்பட்டது: வசனம் 22அ பாலுறவு காரியத்தைக் குறித்து பேசப்படுவதற்கு பொருந்தாதது.[17]

சரீரப் புறக்கணிப்பும் தவறான முறையில் பயன்படுத்துதலும் பரிசுத்தத்தை கொடுத்தோ அல்லது ஆத்துமா பலவீனத்தை சுகப்படுத்திவிடவோ முடியும். இந்த திறமை உள்ளுக்குள் தோன்றி சரீரத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. சரீரத்தின் மூலம் சோதனைகள் வந்தபோதிலும், சரீரமே தீமையின் பிறப்பிடமாக ஆகிவிடாது.

"இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்து போகுமே" (2:22)

இது இங்கே சரியாக மொழிபெயர்க்கப்பட்டிருப்பதால், இது அடைப்புக்குறிக்குள் வருகிற ஒரு வாக்கியம்; மற்றபடி, இந்தச் சொற்றொடரை மட்டும் வைத்து விளக்கமளிப்பது கடினமானது. பவுல் அநித்தியமான, உலகப் பிரகாரமான, தொடக்கூடியதாயிருக்கிற, மற்றும் ருசிபார்க்கிற காரியங்களைக் குறித்து எழுதுகிறார், இவைகளெல்லாம் பயன்பாட்டிற்குப்பின் அழிவுறும், ஆனால் ஆவிக்குரியக் காரியங்கள் ஒருபோதும் அழிவுறுவதில்லை. (1 யோவான் 2:15-17), வசனங்கள் 22, 23ல், பவுல் வசனம் 21ல் குறிப்பிட்டு 22ல் விளக்கமளித்துள்ளபடி மூன்று காரணங்களினால் அந்தக் கட்டளைகளை கைக்கொள்ள வேண்டுவதில்லை என்று குறிப்பிட்டார்.

முதலாவதாக, இந்தக் கட்டளைகள் நித்தியத்திற்குத் தொடர்புடையவைகளல்ல, மாறாக உலகத்தின் அநித்தியமான பொருள்கள், அழிவுக்குரியவைகள், பயன்பாட்டிற்குப் பின்பு இனியும் பயனற்றுப் போகிறவைகளுமாயிருக்கிறது, அப்படிப்பட்ட கட்டளைகளை கைக் கொள்கிறவர்கள் அவைகளில் நித்தியத்திற்குரிய மதிப்பு என்ன இருக்கிறது என்று புரிந்து கொள்ளாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் ஜீவியத்திற்கு அவசியமானவைகளைக் குறித்து தவறான புரிந்து கொள்ளுதலில் இருக்கிறார்கள். அவர்கள் நீடிய மதிப்புடைய காரியங்களெல்லாம் அநித்தியமானவைகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன, என்றும் மற்றும் நித்தியத்தின் கண்ணோக்கில் மதிப்பற்றவை என்றும் கொலோசெயர்கள் நினைக்கும்படி வழிநடத்துவார்கள்.

இங்கே குறிப்பிடப்படுகிற அப்போஸ்தலனின் அணுகுமுறை யூதர்கள் கைக்கொண்ட மனுஷக் கற்பனைகளை இயேசு கண்டித்து உணர்த்தினவைகளோடு ஒத்துப்போகக் கூடியவைகளாயிருக்கின்றன. அவர்களுடைய பாரம்பரியத்திலிருந்த மத சார்புடைய பொருட்கள் தேவனுடைய கற்பனைகளை மீறுபவைகளாயிருந்தன (மாற்கு 7:7, 8). அவர்களுடைய பாரம்பரியத்தில் சுத்திகரிப்புச் சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்களும் போஜனப் பதார்த்தங்களுக்கு விலகியிருப்பதும் உட்பட்டிருந்தன, அவைகளை அவர்கள் கைக்கொண்டு மற்றவர்கள் மீது சுமத்தினார்கள். அதினால் அவைகளைக் கைக் கொள்ளுகிறவர்களின் பக்திவிருத்தியை தாங்கள் அதிகரிக்கச் செய்வதாக எண்ணிக் கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட மாம்ச தடைகள் பக்தி விருத்தியோடு சம்பந்தப்படாதவை என்று இயேசு வெளிப்படுத்தினார்:

> *நீங்களும் இவ்வளவு உணர்வில்லாதவர்களா? புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்த மாட்டாதென்று நீங்கள் அறிந்து கொள்ள வில்லையா? அது அவன் இருதயத்தில் போகாமல் வயிற்றிலே போகிறது; அதிலிருந்து … நீங்கிப்போகும். மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் (மாற்கு 7:18ஆ-20).*

மற்றொரு இடத்தில் பவுல், தேவனுடைய ராஜ்யம் ஆவிக்குரியது, அது "புசிப்பும் குடிப்புமல்ல" என்று வலியுறுத்தினார் (ரோமர் 14:17). தேவன் வயிற்றையும் போஜனத்தையும் "அழியப்பண்ணுவார்" (1 கொரிந்தியர் 6:13).

இந்த வசனப்பகுதியில் உடல்வருத்தி தன்னிலை மறுத்து முடிவான அருள் நிலையடைவதாக எண்ணுவோரின் கூற்றுக்குப் பதிலளிக்கும்படி அவர் தன்னைத்தான் வெறுத்தலைத் தனக்காக செய்வதில் எவ்வித ஆவிக்குரிய மதிப்பும் இல்லை என்பதை வலியுறுத்தினார். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களின் மேல் கட்டப்பட்டது; இந்த ஜீவியத்தின் அழிவுக்கேதுவான காரியங்களினால் ஆவிக்குரிய தன்மையை உண்டாக்கக்கூடும் என்று எண்ணுகிற மனுஷருடைய சட்டதிட்டங்களை அது சார்ந்திருப்பதில்லை. மாம்ச வாழ்க்கைக்கு சில பொருட்கள் அவசியமானவைகள்தான்; ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கையில் தேவ பக்தியை உண்டு பண்ணுகிற விஷயத்தில் இவைகளின் பங்கு மிகவும்

அற்பமானவை. சரீரப்பிரகாரமான கவனத்தோடு வாழும் வாழ்க்கை ஆவிக்குரிய தன்மைகளுக்கு இடையூறானது. "இரண்டு எஜமான்களுக்கு ஒருவனும் ஊழியஞ்செய்யக் கூடாது" என்று இயேசு சொன்னார் (மத்தேயு 6:24அ).

"இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும்" (2:23அ)

பவுல் இங்கே மனுஷனுடைய சுய - கட்டாயத்தின் பேரில் சுமத்தப்படுகிற மூன்று ஆசாரங்களைக் குறிப்பிடுகிறார்: (1) **சுய இஷ்ட ஆராதனை,** (2) **சுயமாயமான தாழ்மை,** (3) **சரீர ஒடுக்கம்.** "சுய இஷ்ட ஆராதனை" (*ethelothrēskia*) TEV எனும் ஆங்கில வேதாகமத்தில் "தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; Schweizer என்பவரால் பரிந்துரைக்கப்படும் மொழிபெயர்ப்பும் இதுவே.[18] சிலர் இதை வசனம் 19ல் சொல்லப்படுகிற, தேவ தூதர்களுக்குச் செய்யும் ஆராதனையைக் குறிப்பதாக நினைக்கின்றனர். இந்த வார்த்தையின் துவக்கம் தெரியவில்லை, மேலும் பவுல் இவ்வார்த்தையை பயன்படுத்துவதற்கு முன் இலக்கியங்கள் எதிலும் இவ்வார்த்தை காணப்படவில்லை. ஆகையால், அவர் சுயமாகப் பயன்படுத்தின வார்த்தையாக இதை நம்புகின்றனர். புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே இந்த வார்த்தைக் காணப்படுவதால், பிற பதிவேடுகளில் இதன் பயன் என்ன என்று அர்த்தத்தைக் தீர்மானிக்கும் பொருட்டு இதை பரிசீலிக்க வேண்டும். இது ஒரு தொகுப்பு வார்த்தை, அதில் *thrēskeia,* என்பது ஒரு பெயர்ச்சொல்லாக, "பக்தி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (யாக்கோபு 1:26, 27). அதை தொழுகைக்கு பயன்படுத்தும் போது, *ethelothrēskia* என்பதை மார்க்கரீதியான சேவைகளைச் செய்யும் மனுஷர்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெறும் தகுதி சிறப்பாகச் சொல்லப்படுகிறது, இது நேர்மையான தொழுகையை தாழ்மையுடன் சமர்ப்பிப்பதற்கு முரணானது.

இரண்டு வசனப் பகுதிகளிலும் குறிப்பிடப்பட்டதன் பொருள் தன்னைத் தான் வெறுத்து உடன் தொடரும் மிகக் கண்டிப்புடன் உபவாசம் இருப்பதை உட்படுத்தியது. O'Brien ஆலோசனையாக, "தன்னிலை வெறுத்து உடல் வருத்தும் இது போன்ற செயல் ஒருவகையான தாழ்மைபோல் காட்டும் தந்திரம் இதின் மூலம் வானுலக இரகசியங்களின் தரிசனங்களைப் பெறுவதற்கான செயலூக்கமானது,"[19] என்றார். ஒருவகையில் சில ஜனங்கள் சரீர ஒழுக்கத்தை கடைப்பிடிக்கிற ஒரு நபர் தான் மிகப் பெரிதான பக்திமானாக நம்பினார்கள்.

சரீரத்துக்குக் கொடுக்கப்படும் "கடுமையான" வைத்தியம் (*apheidia,* சரீரத்தைத் "தாராளமாகப்" பயன்படுத்துவது) குறித்தும் அந்த உடல் வருத்துவோர் மிக அதிகமான பரிந்துரை செய்கின்றனர், மார்க்கரீதியான உள்ளார்வம் மற்றும் அர்ப்பம் மிகக் கடினமான சரீர ஒழுக்கங்கள் மூலம் அடையமுடியும் என்று யூகித்தார்கள். சரீரம் என்பது ஆத்துமாவை அடைத்து வைக்கும் சிறைபோன்றது, அதன் வருத்தம் ஒரு பாரமாக சகித்துக் கொண்டிருக்கிறது என்று நினைக்கப்பட்டது. ஆத்துமாவும் சரீரமும் ஒன்றொடொன்று முரண்பட்டவைகள். சரீரத்தை கடுமையாக வருத்துவதன் மூலமாக, சரீரத்தின் வருத்தங்களையும் சோர்வுகளையும் நீக்கி அதன்

ஆசையிலிருந்து ஆத்துமா விடுதலையாகிறது என்று நினைத்தனர். இதைப் பவுல் தீமோத்தேயுக்கு எழுதின நிருபத்தில் "விவாகம் பண்ணாதிருக்கவும் போஜனப்பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்ற" கருத்தை ஆதரிப்போருக்கு இக்கருத்தைக் குறிப்பிட்டார் (1 தீமோத்தேயு 4:3).

பாகால் தீர்க்கதரிசிகளான விக்கிரக பூசாரிகள் தங்கள் சரீரங்களைக் கீறிக் கொண்டு பாகாலின் கவனத்தை ஈர்க்கவும் தங்களுக்கு செவி கொடுத்து தங்களுடைய கோரிக்கைகளுக்கு உதவும்படியாகச் செய்ய முடியும் என்றும் நினைத்தார்கள் (1 இராஜாக்கள் 18:26-28). இன்று சில மதங்களில், சரீரப்பிரகாரமாக வருத்திக்கொள்வதால் கவர்ச்சியை ஏற்படுத்தி, பலி செலுத்துதல் மூலம் தேவபக்தியை ஆதாயப்படுத்திக் கொள்வது போலவும், ஆசீர்வாதங்களையும் தேவனோடு நல்ல நிலையில் இருப்பது போலவும் செயல்படுகின்றனர்.

கண்டிப்பான முறையில் சரீர ஒடுக்கத்தைக் கடைபிடிப்போர் கூடுதல் ஆசரிப்புகள் மூலம் தேவனுடைய தயவையும் அநுக்கிரகத்தையும் பெற ஏதுவான கோரிக்கைகளை நிறைவேற்றி நல்லெண்ணங்களை வளர்த்துக் கொள்வதாகக் கருதுகின்றனர். உச்சக்கட்ட பரிசுத்தத்தை அடைவதற்குப் பதில், இப்படிப்பட்ட அணுகுமுறைகள் மேட்டிமைக்கும் பெருமைக்கும் மட்டுமே இட்டுச் செல்கிறது. மனித சிந்தனைகளைப் பின்பற்றுவதால், இந்த சட்டதிட்டங்களை மிக வெற்றிகரமாக செயல்படுத்தும் ஒரு நபர் "உம்மைக் காட்டிலும் புனிதமானவன்" என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்கிறான்.

"(சரீர ஒடுக்கத்தையும் பற்றி) ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும்" (2:23அ)

சிலர் இந்த வாக்கியத்தை மறுகட்டமைப்புச் செய்து, இடைஞ்சலான விளக்கங்களைக் கொடுக்க வகைதேடுகின்றனர்; ஆனால் NASB எனும் மொழிபெயர்ப்பு (ஆங்கிலத்தில்) சிறப்பான மொழிபெயர்ப்பைக் கொடுக்கிறது.

பவுல் அனைத்து ஏற்றுக்கொள்ளப்படாத கட்டளைகளையும் பட்டியலிட முற்படவில்லை என்பது, உறுதியாகத் தெரிகிறது. ஞான **மென்கிற** *என்ற வார்த்தைக்கு மவுலி சரியாகக் கவனம் செலுத்தியிருக்கிறார், "மிகத் துல்லியமாக, வார்த்தை சகித்துக் கொள்ளக் கூடுமானால், அது (ஒத்ததாக) ஒப்பான காரியங்களாக சொல்லப்படுகிறது; வசனம் 21க்கும் அதற்கு மேலும் சொல்லப்பட்டவைகளும் ஒரே கொள்கையைத்தான் எதிர்பார்க்கின்றன."[20] குறிப்பிடப்பட்ட பட்டியல்கள் கிறிஸ்தவர்கள் பின்பற்றும்படி கொடுக்கப்பட்டவைகளல்ல. பிற இடங்களில், பவுல் மாம்சத்தின் ஏற்புடைய தற்ற செயல்களைக் குறிப்பிட்டு, பின்பு இது "போன்றவைகள்" என்று சேர்த்தார் (கலாத்தியர் 5:21), அதன் பொருள் கொடுக்கப்பட்ட பட்டியல் முழுமை பெறவில்லை என்பதையும் ஆனால் மாம்சத்தின் பிற கிரியைகளையும் அளவு கோலாக சேர்த்துக் கொள்ளலாம் என்பதே.*

பேர் கொண்டிருந்தாலும் என்பது logos என்பதிலிருந்து வந்த வார்த்தை இது, இயல்பாக இதை "வார்த்தை" என்றே மொழிபெயர்க்கப்படும். இங்கே, குறிப்பிடப்படும் கருத்து ஒரு "விளக்கமளித்தல்," "பிரதிநிதித்துவம்,"

அல்லது "தோற்றம்" ஞானத்தைப் போல் காணப்பட்டாலும் உண்மையில் அது *நிஜத்துக்கு* முரணானது, உலகத்தின் பார்வையில், மனுஷர்களால் கண்டு பிடிக்கப்பட்ட கட்டளைகள் ஞானமுள்ளவைகளாகத் தோன்றலாம், ஏனெனில் அவைகள் ஆவிக்குரியத் தன்மையை ஏற்படுத்தத் தேவையானவற்றை உருவாக்க வல்லது என்பது போல் தோன்றும். இருப்பினும், சுய வெறுப்பு அப்படிப்பட்டத் தீமைகளை விலக்கிப் போட போதுமான விருத்தி செய்யவும் உறுதியளிப்பதில்லை. ஒரு நபர் கெட்ட காரியங்களைச் செய்யாமல் ஒதுங்கி இருப்பதினாலேயே அவர் நேர்மறைக் காரியங்களைச் செய்கிறார் என்று பொருளல்ல, சரியான வாழ்வை அது உட்படுத்தியிருப்பதாகக் கொள்ள இயலாது. அவர் ஒருவேளை திருடாதவராக, பொய் சொல்லாதவராக, விபச்சாரம் செய்யாதவராக, அல்லது கொலைபாதகனாக இல்லாதிருக்கலாம் - ஆனாலும் அவர் தன்னுடைய அயலானுக்கு உதவி செய்பவராகவோ தேவனிடத்தில் நெருங்கின உறவுமுறையை வளர்த்துக் கொள்பவராகவே பொருள் படாது. தேவ பக்தியை தன்னில் அதிகப்படுத்திக்கொள்ள, சரீர நடத்தையைக் கட்டுப்படுத்துகிற எண்ணிக்கையுள்ள சட்டங்களைக் கொண்டு வருவதைக் காட்டிலும் அதிகமானது தேவைப்படுகிறது.

சட்டங்கள் சமுதாயத்தைக் கட்டுப்படுத்தக் கூடுமானால், பிறகு காவல் படைகளோ சமுதாய முயற்சிகளோ தேவையற்றவை. ஒரு சமுதாயத்துக்கு சீர்கேடு விளைவிக்கிற சகல சூழ்நிலைகளையும் இயன்ற வரை கட்டுப்படுத்தி தீங்கான சமுதாயத்தை திருத்த ஏதுவான கட்டளைகளைக் கொண்ட பிரமாணம் தேவை; அப்பொழுது எவ்வித கிரிமினல் குற்றங்களும் இடம் பெறாது. பிரமாணங்கள் தேவைதான், ஆகிலும் பிரமாணத்துக்கப்பால் சுயக்கட்டுப்பாட்டை கொண்டு வருவதும், சமுதாயத்தில் அமைதியையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதுமே மிக அத்தியாவசியமானது.

"இவைகள் (இந்தக் காரியங்கள்) மாம்சத்தைப் பேணுகிறதற்கேயொழிய மற்றொன்றுக்கும் பிரயோஜனப் படாது" *(2:23இ)*

இந்தக் சொற்றொடர் திருமறை நிபுணர்களால் மூன்று வித்தியாசப்பட்ட வழிகளில் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது.

(1) இந்த சட்டங்களெல்லாம், மாம்ச இச்சைகளை நிறைவேற்றுவதற்கு மட்டுமே யொழிய வேறு எவ்வித மதிப்பையும் உடையதல்ல. இந்த விளக்கம் **மாம்ச விருப்பங்களை** கண்ணுற்று மாமிசம் திருப்திபட ஏதுவானவைகளைச் செய்ய முற்படுவதைக் குறிப்பிடுகிறது. இந்த கருத்தின்படி, இந்த சட்டங்களெல்லாம் மாம்ச ஆசைகளை அனுபவிக்கத் தேவையானவற்றை அளிக்க திராணியில்லாதவை என்று பவுல் சொன்னதாகப் பொருள்படும்.

(2) இந்தக் கட்டளைகளை பின்பற்றுவது மாம்ச திருப்தியைக் கொடுக்கிறது ஆகிலும் அவைகளை கைக் கொள்பவர்களை அதிக ஆவிக்குரியத்தன்மையைப் பெற ஊக்குவிப்பதில்லை. இந்தக் கண்ணோட்டம் *pros* ("எதிர்ப்பு") எனும் வார்த்தையைக் கொடுக்கத் தக்கதாக மிகவும் அடிக்கடி பயன்படுத்தும் பொருள் "க்கு," O'Brien அளித்த விளக்கமாவது,

> குறிக்கோளும் இலக்கும் அவர்களுடைய பிரயாசத்தின் எதிர்ப்புகள் - கடுமையான ஆசரிப்புக்களை கைக் கொள்வது

> துரைத்தனத்துக்கும் அதிகாரங்களுக்கும் கனத்தையும் மதிப்பையும் செலுத்துவது - ஆகியவைகளே திருப்தியளிப்பன. ஆனால் அப்படிதிருப்திப்படுத்தப்பட்டவைகளெல்லாம் ("மாம்சம் மட்டுமே") அவர்களுடைய சக்திமிக்க பக்திக்குரிய காரியங்களெல்லாம் மாம்சத்தை ஒரு பரிசோதனையில் வைக்க வில்லை. அதற்கு எதிரானதாக அவை இருந்தன. மனுஷர்களால் உருவாக்கப்பட்ட கற்பனைகளெல்லாம் உண்மையில் தீய வழிகளுக்கு துணைபோகும் மாம்ச செயல்களே.[21]

இந்தக் கோணத்தை ஆதரிக்கவும் எதிர்க்கவும் (*pros* "க்கு") இந்தச் சொற்றொடர்கள் KJV யில் உள்ளபடி மொழியாக்க விளக்கம் அளிக்கலாம்: "எந்த ஒரு கனத்திலும் மாம்சத்தை திருப்திபடுத்த இயலாது." RSV எனும் மொழிபெயர்ப்பில் மாம்ச விருப்பங்களை நிறைவேற்றுவதில் எவ்வித மதிப்புமில்லை, என்று மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும், அப்பக்கத்தின் அடிக்குறிப்பில் "மாம்ச இச்சைகளை (விருப்பங்களை) மாத்திரம் நிறைவேற்றுவதில், எந்த மதிப்பும் இல்லை" என்று சொல்லப்படுகிறது. இதுவே பவுல் கொடுக்கும் அர்த்தமாக இருக்கலாம்.

(3) இந்தக் கட்டளைகள் சரீர இச்சைகளை கட்டுப்படுத்துவதில் எவ்வித மதிப்பும் உடையவைகளல்ல. மனுஷ கற்பனைகள் சரீர ஒடுக்கத்துக்குரிய கோரிக்கைகளை கடுமையாக முன் வைக்கிறது, ஆனால் அவை மாம்ச விருப்பங்களை தடுத்து நிறுத்துவதில்லை. பவுல் குறிப்பிட்ட மனுஷருடைய கட்டளைகள், சுய இஷ்ட ஆராதனை, மாயமான தாழ்மை, சரீர ஒடுக்கம் ஆகிய இவைகளெல்லாம், சரீர விருப்பங்களையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்துவதற்கு எந்த ஒரு உதவியும் செய்வதில்லை, NASB யும் சமீப காலத்து அநேக மொழிபெயர்ப்புகளில் சொல்லப்படுவது போல, பொருள்படுத்தியிருக்கிறது.

மேற்குறித்தவைகளில் முதல் விளக்கம் புறந்தள்ளப்பட வேண்டியது ஏனெனில் "சரீர ஒடுக்கம்" என்பது அதன் முந்தை வசனத்தின் அடிப்படையில் பார்த்தால் சரீர திருப்தியைப் பற்றி பேசுவதாகத் தெரியவில்லை. பவுல் சரீரத்தை மாத்திரம் குறிப்பிட்டு பேசுவதில்லை, மாம்சத்தின் இச்சைகளையும் குறித்தே பேசுகிறார் - மனித சிந்தனைகளின் அடிப்படையிலிருந்து ஆசைகள் உருவாகின்றன. இரண்டாவது விளக்கம் சில வகைகளில், அது பவுல் கொடுக்கும் அர்த்தமாயிருக்க வாய்ப்பில்லை. மூன்றாவது விளக்கம் அந்த வசனப்பகுதிக்கு பொருத்தமானதாயிருக்கிறது.

Plēsmonē ("சரீரத்தைப்பேணுதல்") எனும் பதம் புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது, LXXல் இருபத்தி எட்டுமுறை காணப்படுகிறது. இதன் பொருள் "மனநிறைவு" அல்லது "திருப்தி" என்று பொருள் படத்தக்க வகையில் "நிறைவு" என்று சொல்லப்படுகிறது. மேலும், முழுமையான ஈடுபாடு கொண்டு சரீர ஒடுக்கத்தில் செயல்படுவதையும் பொருள்படுத்தலாம்.

வசனம் 20ஆவில், சொல்லப்படுகிற கட்டளைகள் சரீரத்தைப் பேணுதலைத் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. பவுல் போதிப்பதெல்லாம் மாம்ச விருப்பங்களைக் கட்டுப்படுத்தும் திராணி சுய இஷ்ட ஆராதனையிலோ, சுய மாயமான தாழ்மையிலோ, சரீர ஒடுக்கத்தையோ அடிப்படையாகக் கொண்டு

வருவதில்லை. பரிசுத்தம், தூய்மை, மற்றும் தேவனோடு நெருங்கியிருத்தல் ஆகியவைகளெல்லாம் சரீரத்தை கடுமையாக ஒடுக்குவதன் மூலமாகவோ அல்லது சரீர இச்சைகளை நிறைவேற்றும்படி ஒப்புக் கொடுத்தலிலோ வருவதில்லை.

சரீர ஒழுக்கம் அற்பப் பிரயோஜனமுள்ளது, தேவபக்தியோ எல்லாவற்றிற்கும் பிரயோஜனமுள்ளது (1 தீமோத்தேயு 4:8). தேவ பக்தியுள்ள வாழ்க்கை ஆவியின் கனியிலிருந்து வருகிறது (கலாத்தியர் 5:22, 23), இவைகள் மூலம் கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய பெலனை அடைகிறார்கள் (எபேசியர் 3:16) மேலும் உலகத்தை ஜெயிக்கும் வல்லமையும் கிடைக்கிறது (1 யோவான் 4:4). தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய மாம்ச ஆசைகளை கட்டுப்படுத்த ஒரு குறிப்பிட்ட கட்டளைகளுக்கு மேலான காரியங்கள் தேவையுடையோராய் இருக்கின்றனர். “மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்” (ரோமர் 8:13).

கிறிஸ்தவர்கள் புதிதான ஆவியுள்ளவர்களாக ஊழியம் செய்கிறார்கள் (அல்லது “ஆவியானவராலே”), எழுத்தின்படியல்ல (ரோமர் 2:29; 7:6; 2 கொரிந்தியர் 3:6). நியாயப்பிரமாணம், அதன் சட்டதிட்டங்களுடன் சரீர இச்சைகளை கட்டுப்படுத்த போதுமானதாக இருக்கவில்லை (ரோமர் 8:3). மாறாக, அது மாம்ச இச்சைகளை தூண்டிவிடக்கூடியதாயிருக்கிறது (ரோமர் 7:8). மாம்ச விருப்பங்களைக் கொண்டிருப்பவர்கள் தங்கள் இச்சைகளைக் கட்டுப்படுத்த இயலாதவர்களாயிருக்கிறார்கள் (ரோமர் 8:7). மனுஷருடைய கட்டளைகளெல்லாம் இருதயங்களை கட்டுப்படுத்தவோ ஆவியானவரால் மாற்றம் பெறுவதற்கோ மேற் கொள்ளப்படவோ போதுமானவைகளல்ல. ஆவிக்குரிய காரியங்களால் ஆவியை போஷிப்பதாலும், ஆவியைத்துக்கப்படுத்தாமல் இருப்பதாலும், அது ஆவிக்குரிய வளர்ச்சியை நடப்பிக்கிறது (1 பேதுரு 2:2).

சரீரத்தைக் கடுமையாக ஒடுக்குவதாலும் தனிமைப்படுத்திக் கொள்வதினாலும் அவை பரிசுத்தத்திற்கு அஸ்திபாரமாகிவிடாது; தேவபக்தியை விஸ்தரிக்க இவை போதுமானவை அல்ல. உபவாசம் இருப்பது தற்காலிகமாக சமுதாயத்திலிருந்து ஒதுங்கியிருக்கச் செய்ய உதவிகரமாயிருக்கலாம், ஒருவருடைய வாழ்க்கையிலிருக்கும் தீமைகளை அகற்ற பிரயாசப்படுவது இன்றியமையாதது, ஆகிலும் அதைக் காட்டிலும் மிக முக்கியமானது ஆவிக்குரிய காரியங்களால் அவரை நிரப்புவதுதான். எந்த ஒருவருடைய வாழ்க்கையும் வெறுமையாகிவிடக்கூடாது. இயேசுவைக் கொண்டு ஒருவருடைய வாழ்க்கையை நிரப்புவதால் தீமை அகற்றப்படும்.

இயேசு கொலோசெயர்களை நியாயப்பிரமாணத்திலிருந்தும் பாவத்தின் குற்ற உணர்விலிருந்தும் தண்டனையிலிருந்தும் விடுதலையாக்கினார், ஞானஸ்நானத்தில் அவர்கள் அவரோடே கூடமரித்ததின்மூலம் சகல மதச்சார சடங்குகளுக்கும் உலகத்தின் தத்துவங்களுக்கும் மரித்தவர்களானார்கள் எனவே பவுல் அவர்கள் விடுதலை பெற்ற சகல காரியங்களுக்கும் மறுபடியும் திரும்பிப் போவதை பவுல் விரும்பவில்லை. அப்படி அவர்கள் செய்திருந்தால், அவர்களுடைய வாழ்க்கையில் இயேசுவுக்கு இடமிருந்திருக்க மாட்டாது.

தங்கள் சுய மையம் வைத்து தங்கள் சுய கட்டளைகளாலும்

மனித கோட்பாடுகளாலும் வாழ்வைக் கட்டியெழுப்ப முனைவோர் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்பவர்களாகவும் சுய கர்வத்தால் நிரப்பப்பட்டவர்களாகவுமிருக்கின்றனர். கொலோசெயர்கள் உலகத்தின் வழிபாடுகளை விட்டும் ஒழுக்க வீனங்களிலிருந்தும், தேவ பக்தியற்றவைகளிலிருந்தும் விலகியிருக்க வேண்டியவர்கள். 3ம் அதிகாரத்தில் உலகக் காரியங்களை களைந்து போடவும் இயேசுவில் காணும் உன்னத வாழ்வின் வழிகளைப் பின்பற்றவும், இயேசுவின் தன்மையில் காணும் குணாதிசயங்களைத் தரித்துக்கொள்ளவும் பவுல் சொல்லும் புத்திமதிகளைக் காணப்போகிறோம். அவரே கிறிஸ்தவர்களின் பூமிக்குரிய வாழ்வில் பரிபூரண ஜீவனையும் வரப்போகிறமறுமை வாழ்வில் பரலோக வீட்டின் ஒரே நம்பிக்கையாயுமிருக்கிறார்.

மேலும் கற்றுக்கொள்ள

"தொழுகை"

பல்வேறு கிரேக்க வார்த்தைகள் "தொழுகை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது;

1. *thrēskeia* - ஒரு பக்திக்குரிய ஆசரிப்பு (யாக்கோபு 1:26, 27).
2. *proskuneō* - "தொழுகையில் பணிந்து கொள்ளுதல்" (மத்தேயு 4:10; லூக்கா 4:8).
3. *latreuō* - "ஆராதனை செய்தல்" (மத்தேயு 4:10; லூக்கா 4:8).
4. *eusebeō* - "கனத்தையும் ஆழமான மரியாதையையும் செலுத்துதல்" (நடபடிகள் 17:23).
5. *therapeuō* - "பணிவிடையும் ஊழியமும் செய்தல்" (நடபடிகள் 17:25). புதிய ஏற்பாட்டில், பெரும்பாலும் இந்த வார்த்தையின் பொருள் "குணப்படுத்துதல்" மீட்கப்படுதல் (மத்தேயு 4:24; 8:7).
6. *sebazomai* - "தொழுகை" (ஆராதனை) (ரோமர் 1:25, புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டும் சொல்லப்பட்டுள்ளது).
7. *sebō* - "தொழுகையில் கைக்கொள்ளும் சடங்காச்சாரம்" (மத்தேயு 15:9; நடபடிகள் 18:13).

மேலே பட்டியலிடப்பட்ட கிரேக்க வார்த்தைகளில், "தொழுகையை" அர்த்தப்படுத்தும் மிக அருகான வார்த்தை *proskuneō,* இதன் நேரடிப்பொருள் "ஒன்றின் பொருட்டு முத்தமிடுதல்." இது உய்த்து உணருதலில் தன்னைக் காட்டிலும் உயர்ந்த சக்தியை போற்றி பணிந்து குனிந்து வணங்குதலைக் காட்டுகிறது (யோவான் 4:24). *Latreuō,* என்பது ஒரு விசாலமான தொழுகையைக் காட்டிலும் மேலான பொருளில் பேசுகிறது, பணிந்து குனிந்து கொள்ளுதலுடன் நிற்பதில்லை. அது, தேவனுக்கானாலும் (லூக்கா 1:74) அல்லது தேவனல்லாத ஏதோ சிலவற்றிற்கானாலும் (நடபடிகள் 7:42; ரோமர் 1:25), அல்லது பொதுவான ஒரு தொழுகையையே குறிப்பிடும்படி, ஏதோ ஒரு தொழுகையையே குறிப்பிடும்படி, ஏதோ ஒரு தெய்வம் என்று கருதப்படுவதை சேவிப்பதை விளக்கப்படுத்துகிறது (எபிரெயர் 8:5; 13:10).

கிறிஸ்தவர்கள் செய்கிற எல்லாமே "தொழுகை" ஆகாது, ஏனெனில்

எல்லா செயல்களும் தேவனைப் போற்றி புகழ்பவையல்ல. சகல proskuneō வும் "ஆவியோடும் உண்மையோடும்" தொழுது கொள்வதாக இருக்க வேண்டும் (யோவான் 4:23, 24); ஆகையால், அது தேவனால் வரையறுக்கப்பட்ட அளவீட்டிற்குள் இருக்க வேண்டும். Latreuō, எனும் பதத்தை கிறிஸ்தவர்களுக்கு பயன்படுத்தும்போது, வாழ்க்கையில் சம்பந்தப்படுத்தும் எந்த செயலும் இயேசுவை சேவிப்பதாக இருப்பதை உட்படுத்தியது. ஆனாலும் அப்படிப்பட்ட எல்லா செயல்களுமே தேவனை நோக்கி போற்றிப் புகழும் தொழுகையாக இருப்பதில்லை. ஒரு கிறிஸ்தவன் தன் சரீரத்தையும் அதன் செய்கைகளையும் முறையாகப் பயன்படுத்தும் போது, அவன் தேவனை சேவிக்கிறான் அப்படிப்பட்ட சேவித்தலை செய்யும்படி தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார், ஆனாலும் அவை அனைத்துமே தேவனைத் தொழது கொள்ளுதலுக்குள் கொண்டு வரக் கூடாது. சரியான எந்தக் செயலைச் செய்தாலும், அது அவருக்குச் செய்யும் சேவை; இருப்பினும், தொழுகையில் பயன்படுத்தும்படி இயேசு வெளிப்படுத்தினவைகளுக்கப்பால், எதைச் செய்தாலும் அது தொழுகைக்குரிய செயலல்ல.

பயன்பாடு

தலையைப் பற்றிக் கொண்டிருத்தல்

நாம் கட்டிஎழுப்ப அஸ்திபாரமாக இயேசுவைக் குறிப்பிட்டபின் (காண்க 1 கொரிந்தியர் 3:10), பவுல் ஆரோக்கியமான எச்சரிக்கைகளை கொடுக்கத்துவங்கி எல்லாவற்றிற்கும் முந்தினவராகிய இயேசுவை விட்டு வழுவிப் போவதைக் குறித்துப் பேசினார், அவர் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரும், எல்லாவற்றிற்கும் தலையாகவுமிருக்கிறார். ஒருவனும் நயவசனப்பினாலே கொலோசெயர்களை வஞ்சியாதபடிக்கு அவர் தொடர்ந்து வரும் வசனங்களில் எச்சரித்தார் (2:4), தத்துவங்களாலே (லௌகீக ஞானத்தாலோ), மாயமான தந்திரத்தினாலே, அல்லது உலகத்தின் வழிபாடுகளாலோ (2:8) அப்படி மோசம் போக்கப்படக்கூடும் என்றார். வசனம் 2:16-23ல் யூதர்களின் ஆசரிப்புகளைக் குறித்து எச்சரித்தார் (2:16), மாயமான தாழ்மை (2:18, 23), தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனை (2:18), தலையைப் பற்றிக்கொள்ளத் தவறுவது (2:19), உலகத்தாரின் கற்பனைகள் (2:20), மற்றும் சுய இஷ்ட ஆராதனை ஆகியவைகளுக்கும் (2:23) எதிராக எச்சரித்தார்.

யூத ஆசரிப்புகள். நியாயப்பிரமாணத்தின் ஆசரிப்புகள் ஆகியன சிலுவையிலறையப்பட்டன (2:14), அவை கிறிஸ்தவர்களையும் நியாயப்பிரமாணத்தினின்று விடுதலையாக்கியிருக்கிறது (கலாத்தியர் 5:1). இந்த உண்மை மிக விவரமாக ரோமரிலும், கலாத்தியரிலும், மற்றும் எபிரெயரிலும் பேசப்படுகிறது. ரோமரில், பவுல் நியாயப்பிரமாணத்தைக் குறித்து பின்வருமாறு போதித்தார்:

1. *நியாயப்பிரணமாணத்தினாலே எந்த மனுஷனும் … நீதிமானாகிறதில்லை (ரோமர் 3:20).*
2. *நியாயப்பிரமாணம் தேவ நீதியை வெளியாக்குவதில்லை (3:21).*
3. *சுதந்தரித்தல் விசுவாசத்தினால் வரும் நீதியில் உண்டாயிருக்கிறது (4:13).*

4. நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்கள் சுதந்தரவாளிகளாவதில்லை (4:14).
5. நியாயப்பிரமாணம் கோபாக்கினையைக் கொண்டு வருகிறது (4:15).
6. நாம் நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானோம் (7:4).
7. நாம் நியாயப்பிரமாணத்தின்று விடுதலை பெற்றிருக்கிறோம் (7:6).
8. கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (10:4).

கலாத்தியரில், பவுல் நியாயப்பிரமாணத்தால் நீதிமானாக முற்பட்ட சிலரைக் குறித்து அக்கரை காட்டினார் (கலாத்தியர் 1:6, 7). இந்த நிருபத்தில் அவர் போதித்ததாவது:

1. ஒருவன் நியாயப்பிரமாணத்தினால் நீதிமானாகிறதில்லை (2:16).
2. அவர், பவுல், நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவரானார் (2:19).
3. நீதியானது நியாயப்பிரமாணத்தினால் வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே (2:21).
4. நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரர் யாவரும் சாபத்துக்குட்பட்டிருக்கிறார்கள் (3:10).
5. கிறிஸ்து வரும்வரை நியாயப்பிரமாணம் அமலில் இருந்தது (3:19ஆ).
6. விசுவாசம் வந்தபின்பு நாம், உபாத்திக்கு, நியாயப்பிரமாணத்திற்கு கீழானவர்களல்ல (3:25).
7. நியாயப்பிரமாணத்தின் முகவர் போலிருந்த, அடிமைப் பெண்ணுக்கு நாம் பிள்ளைகளல்ல (4:31).

எபிரேயர் புத்தகத்தின் நோக்கம் இயேசுவோடு சம்பந்தப்பட்ட காரியங்களெல்லாம் முதல் உடன்படிக்கையின் கீழ் இருந்தவைகளுக்கு மேலானவைகள் என்று காட்டுவதுதான். அவை, தேவதூதர்கள் மூலமாய் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட அந்த தூதர்களுக்கும் (1:4; 2:2); நியாயப்பிரமாணம் கையளிக்கப்பட்ட மோசேயிக்கும் (3:3); நியாயப்பிரமாணத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆசாரியர்களுக்கும் (7:11, 12); நியாயப்பிரமாண உடன்படிக்கைகளுக்கும் வாக்குத்தத்தங்களுக்கும் (7:22; 8:6); ஆசாரிப்புக் கூடாரத்துக்கும் (9:11) மேலானவைகள், மேலானவைகளை இயேசு கொண்டு வந்ததினால், மோசேயின் நியாயப்பிரமாணம் முடிவுக்கு வந்தது.

1. நியாயப்பிரமாணம் மாற்றப்பட்டது (7:12).
2. நியாயப்பிரமாணம் தள்ளிவைக்கப்பட்டது (7:18, 19).
3. நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை பழமையாகிப் போனது (8:13).
4. இரண்டாதை நிலை நிறுத்த இயேசு முதலாவதை நீக்கிப் போட்டார் (10:9).

நியாயப்பிரமாணம் தள்ளப்பட்டு, நடுவிலிராதபடி எடுத்து, சிலுவையில் ஆணியடிக்கப்பட்டதினாலே, நாம் நியாயப்பிரமாணத்தின் சட்டத்திட்டங்களைக் கடைப்பிடிக்காவிட்டால் மற்றவர்கள் நம்மைக் கண்டனம் பண்ணவோ, குற்றப்படுத்தவோ இடமளிக்கக் கூடாது

(கொலோசெயர் 2:14-16). இந்த ஆசரிப்புகளெல்லாம் கிறிஸ்துவின் உபதேசமாகிய நிஜத்தின் வருகைக்கு முன் நிழலாய் மாத்திரம் இருந்தவைகள் அவை (கொலோசெயர் 2:17; எபிரெயர் 10:1).

வஞ்சிக்கப்படுவதைத் தவிருங்கள். உலகத்தின் புதுமையான ஆசரிப்புகளெல்லாம் கிறிஸ்தவ உபதேசங்களை வெகுவாய் பாதித்தன. இயேசு கேட்பவைகளுக்கு உண்மையான காரியங்களிலிருந்து ஜனங்கள் திசை திருப்பப்படுகின்றனர். அவைகளில் சுய - வெறுப்பு, மாயமான தாழ்மை போன்ற ஆசரிப்புக்களை மடலாய சட்டமாக உட்படுத்துகின்றனர். தேவதூதர்களுக்கடுத்த உபதேசங்களை தலைகீழாக மாற்றி அவர்களை கனப்படுத்தவும் மதிக்கவும் வேண்டுமென்று காட்டப்படுகிறது. சிலர் தேவ தூதர்கள் தங்கள் முன் தோன்றியதாகவும் செய்தியளித்ததாகவும் கூறுகின்றனர். அவர்களில் ஜோசப் ஸ்மித் போன்றவர்கள் மோரோனி எனும் ஒரு தூதன் தனக்குமுன் தோன்றி அப்படிச் செய்ததாகக் கூறுகின்றனர். இப்படிப்பட்ட தரிசனங்களைப் பெற்றதாக கூறுவோரில் கத்தோலிக்க சபையாரும் வேறு சிலரும் அடக்கம்.

இப்படிப்பட்ட உரிமை பாராட்டும் நபர்களால் நாம் கொள்ளை கொண்டு போகப்பட்டு விடக்கூடாது, விசேஷமாக அப்படிப் போதிக்கும்போது அந்த உபதேசத்தைக் கொண்டு வருவோர் திருமறையின் தெளிவான உபதேசங்களுக்குத் தங்களை தெளிவாக முரண்பாடுள்ளவர்களாய்க் காட்டுகின்றனர். வேறே சுவிசேஷத்தைப் போதிக்கிறவர்கள், அவர்கள் அப்போஸ்தலர்களாயிருந்தாலும், தேவதூதர்களாயிருந்தாலும், வேறுயாராக இருந்தாலும், பரலோகத்தின் சாபங்களுக்கு உட்பட்டவர்கள் (கலாத்தியர் 1:8, 9).

தலையைப் பற்றிக்கொள்ளாமல். புதிய ஏற்பாட்டின் பல்வேறு வசனப் பகுதிகளில், இயேசு தலையானவர் என்று பிரகனப்படுத்தப்படுகின்றார்: அவர் புருஷர்களுக்குத் தலையாயிருக்கிறார் (1 கொரிந்தியர் 11:3), சபைக்கும் (எபேசியர் 1:22; 5:23), சரீரத்துக்கும் (கொலோசெயர் 1:18), சகலதுரைத்தனத்துக்கும் அதிகாரங்களுக்கும் (கொலோசெயர் 2:10), தலையாயிருக்கிறார். வேறே வசனப்பகுதிகளில், அவர் தலையாக இருப்பதை எளிமையாக குறிப்பிடுகிறது (எபேசியர் 4:15; கொலோசெயர் 2:19).

இயேசு அவருடைய சபையாகிய, ஆவிக்குரிய சரீரத்திற்கு தலையாயிருக்கிறார். நாம் அவரையே பற்றிக் கொண்டிருக்கும் பரியந்தம் வஞ்சிக்கப்பட்டு போவதில்லை. அவருடைய சத்தியத்தை விட்டு மனுஷருடைய போதனைகளைப் பற்றிக் கொண்டிருப்போமானால் அநேக நூதனமான (அந்நிய) போதனைகளிலும் ஆசரிப்புக்களிலும் நடத்தப்படுவோம்.

இயேசுவைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அவர் நம்மை விட்டு விலகுவதுமில்லை, நம்மைக் கைவிடுவதுமில்லை, மாறாக நாம் தொடர்ந்து அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளும் பரியந்தம் அவரும் தொடர்ந்து நம்மில் அன்புகூருவார் (யோவான் 15:9, 10). நாம் அவரைப் பற்றிக் கொண்டிருக்கும் வரை அவர் நம்மைப் பற்றிக் கொண்டிருப்பார்.

இயேசு நல்ல மேய்ப்பனாய் இருக்கிறார் (யோவான் 10:11; 1 பேதுரு 5:4). நாம் அவருடைய ஆடுகளாயிருந்தால், அவருடைய சத்தத்தைக் கேட்டு,

அவரைப் பின்பற்றுவோம். நாம் அந்நியர்களைப் பின்பற்ற மாட்டோம் (யோவான் 10:2-5). அவரைப் பின்பற்றுவதால், நாம் ஒருபோதும் சிதறடிக்கப்படுவதில்லை. பின்பற்றிப்போக நமக்கு ஒரே ஒரு மேய்ப்பனும் அங்கம் வகிக்க ஒரே ஒரு மந்தையும் நமக்கு உண்டு (யோவான் 10:16).

ஒரு வகையில், மேய்ப்பன் ஆடுகளுக்குத் தலையாயிருக்கிறான் அவைகள் தங்களுக்கு முன்பாகப் போய் தங்களை வழிநடத்தக் கூடிய ஒரு மேய்ப்பனை எதிர்பார்க்கின்றன, அவர்தான் அவைகளை நடத்துபவரும், தலையாயுமிருக்கிறார், அவைகள் அவருடைய சத்தத்தை அறிந்திருக்கிறபடியால் அவரைப் பின்பற்றுகின்றன. இப்படித்தான் இயேசு தமது மந்தையை வழிநடத்துகிறார் (யோவான் 10:27).

நாம் இயேசுவை சபைக்குத் தலையாக மதிக்க வேண்டும். அதற்கு பூமிக்குரிய தலைவர் இல்லை, பரலோகத்தில் மட்டுமே தலை உண்டு. எந்த ஒரு தனிமனிதனும் அல்லது ஒரு கூட்ட மனுஷர்களும் சபைக்குத் தலையாயிருக்க விழைவோர் இயேசுவுக்குப் போட்டியாக செயல்படுகிறவர்களாயிருக்கிறார்கள். அவரே ஒரே மேய்ப்பனும் சபைக்குத் தலையுமாயிருக்கிறார். நாம் அவரை நம்முடைய ஆவிக்குரியத் தலையாக பற்றிக் கொண்டு அவரிடத்திலிருந்து வராத உபதேசங்களில் நடத்தப்படாதிருக்க வேண்டும்.

உலகத்தாரின் கற்பனைகள். ஞானஸ்நானத்திலே நாம் உலகத்தின் கற்பனைகளுக்காக கிறிஸ்துவோடுகூட மரிக்க வேண்டியவர்கள், அவை இயேசுவால் கொடுக்கப்பட்ட வரையறையல்ல. மார்க்கங்கள் இரண்டு எல்லைகளை உட்படுத்துகின்றன: தேவன் கொடுக்காத கட்டளைகளை ஏற்படுத்துவது மற்றும் தேவன் கொடுத்த கட்டளைகளை புறந்தள்ளுவது. இவை இரண்டுமே தவறானவை. 2:16-23ல் பவுல் மனுஷருடைய கற்பனைகளைக் குறித்து எச்சரிக்கிறார்.

நாம் இயேசுவின் போதனையை பின்பற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம் (மத்தேயு 28:20), உலகத்தின் கட்டளைகளையல்ல. இவைகள் நாம் தேவனோடு நட்புறவு கொள்ள ஏதுவான மதிப்புள்ளதாய் நமக்கு உதவக் கூடும், ஆனாலும் அவை நம்மை அவருக்கு அருகில் கொண்டுவந்து சேர்க்கும் மதிப்பில்லாதது. ஏனெனில் மார்க்க ஆசரிப்புகள் நமக்கு பொருத்தமானவைகளாகவும் நாம் அவைகளை பயன்படுத்தும் ஞானத்தைப் பெற்றிருந்த போதிலும் அவை தேவனுடைய ஞானத்தை அடிப்படையாகக் கொண்டவையல்ல.

சுய இஷ்ட ஆராதனை. சில மதசார்புடையவர்கள் நீதியானது உபாவாசமிருப்பதாலும், பிரம்மச்சாரியத்தைக் கைக்கொள்வதாலும், திருமணம் பண்ணிய பிறகும் பாலுறவு விஷயத்தில் விரதம் இருப்பதன் மூலமும், சுயக் கட்டுப்பாட்டின் மூலம் மேற்கொள்ளும் சரீர ஒடுக்கத்தால் வரும் என்று போதிக்கின்றனர். இவைகளில் எதுவுமே அவைகளுக்குள் தேவபக்தியை உருவாக்க உதவாது.

இயேசுவின் போதனையை அடிப்படையாகக் கொண்டு அனைத்து மதக் கோட்பாடுகளையும் மதிப்பீடு செய்ய வேண்டியவர்கள் நாம், எல்லா விஷயங்களிலும் நாம் கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு யூத ஆசரிப்புகள் மூலமோ, மனுஷருடைய பக்தியினாலோ, அல்லது சிந்தனையினாலே நாம் அலைக்கழிக்கப்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

கிறிஸ்து கிறிஸ்தவர்களை நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கியுள்ளார் (2:16, 17)

கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தின் விதி முறைகளாகிய சட்டத்திட்டங்களிலிருந்து விடுதலையாக்கப்பட்டுள்ளனர். போஜனம், ஆசரிப்புகள், மற்றும ஓய்வுநாள் பிரமாணங்கள் நமக்கு பொருந்துபவையல்ல, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை ஒழித்தமைக்காக நாம் இயேசு கிறிஸ்துவுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும் (எபேசியர் 2:14, 15).

நியாயப்பிரமாணத்தை ஒழியப் பண்ணின காரியம் கிறிஸ்தவர்கள் தொடர்ந்து பாவத்தில் ஜீவிக்க ஏதுவான விடுதலையைப் பெற்றிருக்கிறார்கள் என்று பொருளல்ல (ரோமர் 6:1-3). கிருபை என்பது ஒருவரை இயேசுவை கர்த்தரென்று கொண்டிருப்பதிலிருந்தோ அல்லது அவருடைய கற்பனைகளை கைக்கொள்வதிலிருந்தோ விடுதலையளிப்பதல்ல (மத்தேயு 28:18-20; யோவான் 14:15, 21; 15:10; 1 கொரிந்தியர் 7:19).

நியாயப்பிரமாணம் இயேசு மூலமாக வருகிற நிஜத்திற்கு வெறும் நிழல்மாத்திரமே (எபிரெயர் 10:1). பாவமன்னிப்பு இரத்தஞ்சிந்துதலை சார்ந்திருப்பதாக தேவன் மோசே மூலம் போதித்தார் (எபிரேயர் 9:22). பழைய ஏற்பாட்டு பிரமாணம் நிஜமாகிய இயேசு வந்தபோது அவர் தனக்குத் தேவை என்று மனித வர்க்கம் உணர்வடையும்படி ஆயத்தப்படுத்தியது (கலாத்தியர் 3:24, 25), அவர் வரும் போது (முன் வருகை) அப்படியாகும்.

இருப்பினும், மோசேயின் பிரமாணம் பாவமன்னிப்பளிக்கக் கூடாததாயிருந்தது, ஏனெனில் மிருக பலிகளால் பாவத்தை மன்னிக்க இயலவில்லை (எபிரெயர் 10:4). நியாயப்பிரமாணத்தால் நீதிமானாக்கப்பட, ஒரு நபரின் கிரியை பாவமில்லாதிருக்க வேண்டும். நியாயப்பிரமாணத்தின் கீழிருந்த எல்லாருமே பாவம் செய்தனர், ஒருவரும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே இரட்சிக்கப்படுவதில்லை என்பதை காட்டியது (கலாத்தியர் 2:16). தேவன் எப்பொழுதும் மனித வர்க்கத்துக்கு விசுவாசத்தினாலே இரட்சிப்பேயொழிய கிரியைகளினாலே அல்ல என்பதைக் காட்டியிருக்கிறார். கர்த்தருடைய வழியைக் காத்து நடக்கத்தக்கதாக தனது பிள்ளைகளுக்கு கருத்தாய்ப் போதிக்கும்படி - அவர் ஆபிரகாமைத் தெரிந்து கொண்டு (ஆதியாகமம் 18:19) - தங்களைச் சுற்றிலும் இருந்த பொல்லாங்கான சுழலிருந்து தனது சந்ததியை பிரித்தெடுத்தார் (உபாகமம் 7:3, 4). இந்த அநுகூலமான சூழ்நிலைக்குப் பிறகும்கூட அவர்கள், புறஜாதிகளைப் போல, தேவனுக்கு எதிராக பாவம் செய்தனர் (ரோமர் 3:9, 10).

இஸ்ரவேலர்கள் நியாயப்பிரமாணத்தின்கீழ் ஒரு சாதகமான நிலையில் அநேக ஆண்டுகள் வாழத்தக்கதாக தேவன் அனுமதித்திருந்ததற்குக் காரணம், எந்த ஒரு மனுஷனும் பாவமற்ற வாழ்க்கையை வாழமுடியாது என்று நிரூபிக்கவே.

கிறிஸ்துவே நமது வளர்ச்சிக்கான மூலாதாரம் (2:19)

மாம்ச இச்சைகளை மேற்கொள்ள உலகத் தத்துவங்களெல்லாம் பிரயோஜன மற்றவை. கிறிஸ்தவர்கள் ஒத்தாசை பெற இயேசுவை நோக்கிப் பார்க்க வேண்டும். அவரே நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் காரணியாக

இருப்பதால் உலகத்தின் சோதனைகளுக்கு நாம் மரிப்பதன் மூலம் அதை அடைய முடியும்.

கிறிஸ்தவனின் தேவை அனைத்தையும் கிறிஸ்து அருளிச் செய்கிறார், இவ்வுலக தத்துவ ஞானிகளும் பேர்போன போதகர்களும் இயேசுவின் போதனைகளோடு சேர்ப்பதற்கு எதுவுமில்லை. John Greenleaf Whittier கீழ்வருமாறு எழுதினார்,

> நாம் சத்தியத்தை உலகத்தில் தேடுகிறோம்; நாம்
> நல்லவைகளையும், தூய்மையையும், அழகையும் ஆராய்கிறோம்.
> எழுத்தால் பொறிக்கப்பட்ட கற்களிலிருந்தும் மற்றும் எழுதப்பட்ட
> புஸ்தக சுருளிலிருந்தும்,
> ஆத்துமாவின் அனைத்து பழமையான
> பூத்தோட்டங்களிலிருந்தும்;
> மேலும் சிறப்பாய்க் தேடிக் களைத்துப்போனவர்களாகிறோம்,
> நாம் தேடி அலைந்ததால் பாரச்சுமையோடு திரும்பிவருகிறோம்,
> அறிவுடை சான்றோர் சொன்னபடி அவை
> எல்லாவற்றையும் கண்டுபிடிக்க
> நம்முடைய தாய்மார்கள் படித்த புத்தகத்தில் காணலாம்.[22]

ஒவ்வொரு அங்கத்தினரும் சபையின் வளர்ச்சிக்கென செயல்பட வேண்டியவர்கள். கிறிஸ்தவனுக்கு இருக்கிற இரட்டை உறவுமுறை குடியுரிமை - கிறிஸ்துவோடும் மற்றும் (சகோதரரில்) ஒருவரிலொருவரும் கொண்டிருக்கிற நட்புறவு முறை - கோரப்படும் ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தேவையான போஷாக்கை அளிக்கிறது. மிஸவுரியில், (அமெரிக்காவில்) பதினொருமுனை நதி, பதினொரு நீருற்றுக்களால் நீர் வரத்தைக் கொடுத்து ஒரே நதியாக அமைப்பு பெற்று ஓடுகிறது. கிறிஸ்தவர்கள் விஷயத்தில் இது முற்றிலும் எதிர்பதமாக இருப்பதுதான் உண்மை: ஒரே மூலாதாரத்திலிருந்து அநேக கிறிஸ்தவர்களுக்கு பெலனளிக்கப்படுகிறது. நாம் இயேசுவாகிய மூலாதாரத்திலிருந்து பெற்று, ஒருவருக்கொருவர் போஷாக்கு அளித்துக் கொள்கிறோம்.

கிறிஸ்தவ வளர்ச்சிக்குக் காணும் ஒரே மூலாதாரம் இயேசு. அவர் ஆவிக்குரிய பெலனைக் கொடுப்பதில் வற்றாத ஆற்றலையுடையவர். அவர் போதுமானவராக, ஒருபோதும் தவறாத, எப்போதும் கிடைக்கச் செய்கிறவராயிருக்கிறார், அவரை நோக்கிப் பார்ப்பதனால், கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த வளர்ச்சிக்கு தேவையான உறுதியும் கிறிஸ்துவுக்காக வளரவேண்டியமற்றவர்களுக்கு உதவிபுரியவும் கூடும்.

கிறிஸ்து நம்மை மனுஷருடைய கற்பனைகளிலிருந்து விடுதலையளிக்கின்றார் (2:20-22)

கிறிஸ்தவர்கள் மனுஷருடைய கற்பனைகளுக்கும் போதனைகளுக்கும் மரித்தவர்கள், மனுஷருடைய இயல்பான சுபாவம் மற்றவர்களைப் போலத் தானும் வாழ்வது, அவர்கள் என்ன செய்கிறார்களோ அதைத் தாங்களும் செய்வது, மற்றும் நம்மைச் சுற்றியிருப்போரின் வாழ்வைக் கட்டுப்படுத்தும் கொள்கைகளை பின்பற்றுவது, இதுவே வாழ்விற்கான அணுகுமுறையில்

“மந்தையாய்” செயல்படுவது. பெரும்பாலானவர்கள் என்ன நினைக்கிறார்கள் என தேர்தல் குறிப்பிடுகிறது. ஒருவேளை அரசியலில் பெரும்பான்மைச் சட்டம் ஏற்புடையதாயிருக்கலாம், மேலும் வாழ்வின் குறிப்பிடப்பட்ட சில பகுதிகளில் அப்படி ஏற்றுக் கொள்ளக் கூடும்; ஆகிலும் ஒழுக்கரீதியாகவும் ஆவிக்குரிய ரீதியிலும் பொது ஜனங்களின் கருத்து தீர்மானத்துக்குரியவைகளாயிராது. நாம் கிறிஸ்துவுக்காக வாழ்வது எப்படி என்று சொல்லும் அதிகாரம் உடையது திருமறை மட்டுமே.

சுயக் கற்பனைகள் மதியீனமானவை, ஏனெனில் அவை புலன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தக் கூடாதவை. அவைகளெல்லாம் ஆவிக்குரிய வாழ்க்கைக்குரிய காரியங்களில் உதவ பெலனில்லாதவை. ஆதலால் அவைகள் அழிந்து போகும் காரியங்களுக்கே உதவி செய்பவை. இதற்கு ஒரு உதாரணம்தான் சரீரத்தை பெலப்படுத்தும் கலை. அதிகப்பட்ச தசை வலிமை பெற மிகக் கடினமான பயிற்சி மற்றும் விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும், ஆனால் மிகவும் மனதைக் தொடும் உடல் கட்டுமானம் கூட ஒரு நாளில் கல்லறையில் உருவழிந்து போகும். உடல் கட்டுமானக்கலை ஆவிக்குரிய வளர்ச்சியைக் கொடுக்கும் என்ற அவசியமில்லை. சிம்ஸோன் இந்த உண்மையை விளக்கப்படுத்துகிறான். தேவன் அவனுக்குக் கொடுத்த, மகத்தான வலிமை, அவன் தன் ஒழுக்க ரீதியான விஷயத்தில் பெலவீனப்பட்ட போது தடுத்து நிறுத்த முடியவில்லை (காண்க நியாயாதிபதிகள் 14-16). “சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது” (1 தீமோத்தேயு 4:8).

சுய இஷ்ட ஆராதனையை ஏற்படுத்தும் மனுஷனுடைய அணுகுமுறை ஞானமாய்த் தோன்றும். மனுஷ தோற்றம் குறித்தும் ஆசரிப்புகள் குறித்தும் நல்லதொரு தர்க்கத்தை செய்யலாம். மனுஷருடைய கண்ணோட்டத்தில் தேவனுடைய அணுகுமுறை பயனற்றதாய்க் காணலாம். எலிசா சொன்ன ஆலோசனையை நாமானால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை (2 இராஜாக்கள் 5:1-14). முன்கூட்டியே தீர்க்கதரிசி தனக்கு இன்னின்ன மாதிரி செய்ய வேண்டும் என்பதை அவன் தீர்மானித்திருந்தான். மனுஷருடைய பகுத்தறிவின் படி, யோர்தான் நதியில் மூழ்குதல் குஷ்டரோகத்தைச் சுத்தப்படுத்தாது - ஆனால் மனுஷருடைய வழிகளெல்லாம் தேவனுடைய வழிகள் அல்ல (காண்க ஏசாயா 55:8, 9).

நாம் இந்த உலகத்துக்கொத்த வேஷம் தரிக்காமல் நம்முடைய சரீரங்களை பலியாக ஒப்புக்கொடுத்து நம்முடைய மனம் புதிதாகிறதினாலே தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் (ரோமர் 12:1, 2). நாம் அவரை மட்டுமே பணிந்து கொண்டு அவரை மட்டுமே ஆராதிக்க வேண்டியவர்கள் (மத்தேயு 4:10), ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் (யோவான் 4:24). சகல சத்தியமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (யோவான் 16:13); மனுஷன் தன் மேட்டிமையினால் எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணாதபடிக்கு பிரயோஜனமற்ற பாரம்பரியங்களையும் மனுஷருடைய கற்பனைகளையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது (மத்தேயு 15:7-9; மாற்கு 7:6-13; தீத்து 1:14). கிறிஸ்தவர்கள் எதைச் செய்தாலும் இயேசுவின் நாமத்தில் அவருடைய அதிகாரத்தின் பேரில் செய்ய வேண்டும் (கொலோசெயர் 3:17).

குறிப்புகள்

[1]Peter T. O'Brien, *Colossians*, *Philemon*, Word Biblical Commentary, vol. 44 (Waco, Tex.: Word Books, 1982), 141. [2]Eduard Schweizer முன் நிழலாயிருந்த "நிஜம்" எனும் போதனை இயேசுவால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கக் கூடும் என்று குறிப்பிட்டார். அவர், "முற்றிலும் புரியாத புதிராக இருக்கும் ஒரே கருத்து நிழலாய் இருந்து வந்த நிஜம் கிறிஸ்துவ அல்லது சபையா" என்று எழுதினார். (Eduard Schweizer, *The Letter to the Colossians: A Commentary*, trans. Andrew Chester [Zürich: Benziger Verlag, 1976; reprint, Minneapolis: Augsburg Publishing House, 1982], 158.) Furthermore, Bauer suggested that the meaning in this passage is "substantive reality, *the thing itself, the reality* in imagery of a body that casts a shadow, in contrast to *skia* ... Col 2:17" (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick William Danker [Chicago: University of Chicago Press, 2000], 984). [3]Schweizer, 164. [4]Bauer, 448. [5]காண்க *மத்தேயு* 8:2; 9:18; 14:33; 15:25; 20:20; 28:9, 17; *மாற்கு* 5:6; *லூக்கா* 24:52. [6]Irenaeus *Against Heresies* 2.32.5. [7]E. K. Simpson and F. F. Bruce, *Commentary on the Epistles to the Ephesians and the Colossians*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957), 248. [8]Bauer, 459. [9]The word "not" does not appear in older manuscripts. [10]Bauer, 321.

[11]O'Brien, 144. [12]Christ's appearance to Paul was "last of all" among the immediate post-resurrection appearances. However, Christ did appear to John in the Book of Revelation in a different context. [13]Schweizer, 162. [14]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translators Handbook on Paul's Letters to the Colossians and to Philemon,* Helps for Translators (New York: United Bible Societies, 1977), 70. [15]H. C. G. Moule, *The Epistles to the Colossians and to Philemon,* The Cambridge Bible for Schools and Colleges (Cambridge: University Press, 1893; reprint, 1902), 114–15. [16]Ibid., 115. [17]O'Brien, 150. [18]Schweizer, 159. [19]O'Brien, 153. [20]Moule, 115.

[21]O'Brien, 155. [22]John Greenleaf Whittier, "From Graven Stone and Written Scroll," quoted in H. I. Hester, *The Heart of Hebrew History: A Study of the Old Testament* (Liberty, Mo.: William Jewell Press, 1951), 11.

11

கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவன், 1

(3:1–4)

மேலானவைகளைத் தேடுதல் *(3:1-4)*

[1]நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். [2]பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். [3]ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. [4]நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.

"நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால்" (3:1அ)

கொலோசெயரில், பிற சபைகளுக்கு அவர் எழுதின மற்ற பெரும்பாலான நிருபங்களில், போலவே, பவுல் முதலாவதாக அஸ்திபாரமிட்டு, பின்பு அந்த அஸ்திபாரத்தின் மேல் எப்படிப்பட்ட வாழ்க்கையை உபதேசக் கோட்பாடுகளின் ஆலோசனையில் கட்டி எழுப்ப வேண்டுமென்பதை விவரித்தார். ஆங்கிலத்தில் ஆகையால் எனும் வார்த்தையுடன் இந்த வசனம் தொடங்குகிறது, அது பவுல் இதே அமைப்பை 3:1ல் பயன்படுத்துகிறார் என்பதை சுட்டிக்காட்டுகிறது.[1]

கொலோசெயர் 3:1-4 துவக்கத் பகுதியில் பவுல் எழுதியவைகளிலிருந்து (1:12-2:23) நிருபத்தில் பின்பகுதியாகிய நிருபத்தின் சரீரப் பகுதியில் காட்சி மாறுவதைக் காட்டுகிறது (3:5-4:6). 2:8-23ல் தத்துவம் மற்றும் கள்ள உபதேசத்தைக் குறித்து தனது விவாதத்தை நிறைவு செய்தார் அதன் பிறகு கிறிஸ்துவுக்குள் இருக்கும் புதிய ஜீவனைக் குறித்தும் அதன் வளர்ச்சி ம ற்றும் குணாதிசயம் குறித்தும் விவாதிக்கத் துவங்குகிறார். கொலோசெயர்கள் தத்துவங்களுக்கும் உலக வழிபாடுகளுக்கும் ஊழியஞ் செய்ய வேண்டுவதில் லை என்று 2:20-23ல் விளக்கப்படுத்தின பின்பு, கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டும் எவைகளைச் செய்யக் கூடாது என்ற நேர்மறை மற்றும் எதிர்மறைக் கட்டளைகளை 3:1-14ல் கொடுத்தார்.

பவுல் ஒரு பகுதியை எழுதத் துவங்கும் போது, "ஆகையால்," என்று குறிப்பிட்டு ஏற்கனவே அவர் சொன்னவைகளைச் சுட்டிக் காட்டுகிறார். கொலோசெயிலிருந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுடனே கூட மரித்திருந்தார்கள் (2:20) மேலும் ஞானஸ்நானத்திலே அவரோடே கூட எழுந்தும் இருந்தார்கள் (2:12, 13). ஞானஸ்நானம் பண்ணப்பட்டதால், அவர்கள் இயேசுவின் மரணம் அடக்கம், உயிர்த்தெழுதலில் பங்குடையவர்களாக, அதன் மூலம் அவர்கள் ஆவிக்குரிய வகையில் ஜீவனுள்ளவர்களானார்கள். பவுல் இப்பொழுது இந்தக்

கருத்துக்குத் திரும்பி கிறிஸ்துவுடனான காரியங்களில் அனுபவம் பெற்றபின்பு தொடரவேண்டிய மறுரூபத்தைக் குறித்து விவாதிக்கிறார்.

வசனம் 1ல் நிபந்தனையுடன் கூடிய சொல் வகையில் உண்டா "னால்" (ஆல்) என்பது வசனம் 2:20ல் சொல்லப்பட்டதைப்போலவே கொலோசெயர்கள் கிறிஸ்துவுடனே கூட எழுந்திருந்தார்கள் என்பதை சந்தேகத்துடன் மறைமுகமாகக் கூறவில்லை. மாறாக, அது பவுல் அறை கூவலாக அவர்களுக்குச் சொன்னபடி, தாங்கள் கிறிஸ்துவுடனே கூட எழுப்பப் பட்டபோது ஞானஸ்நானத்திலே பெற்ற புதிய ஜீவன் மூலம் அந்த அறைகூவலை பின்பற்றும்படிக் குறிப்பிட்டார். "ஆல்" என்ற வார்த்தை "லிருந்து" என்றும் மொழிபெயர்க்கப்படலாம். இந்த ஆணித்தரமான கருத்தை விவாதித்தபின், பவுல் மேலானவைகளைத் தொடர்ந்து தேடும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவரோடே கூட புதிய ஜீவனுக்குள் பிரவேசித்திருந்த அவர்கள், "மேலான காரியங்களுக்காக" வாழ வேண்டியவர்களாயிருந்தனர்.

கிறிஸ்துவுடன் கூட **எழுப்பப்படுவதற்கு முன்,** இந்த நபர்கள் தனிப்பட்ட ரீதியில் அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாயிருந்தனர். அது அவர்களை பாவத்துக்கு மரிக்கச் செய்திருக்க வேண்டும் (ரோமர் 6:1-6; காண்க 3:3, 4ஆ வில் "அவரோடேகூட" எனும் விவாதம்) கூடவே உலகத்தின் சட்டதிட்டங்களுக்கும் மரித்தவர்களாயிருந்தார்கள். பவுல் இரண்டு முன்னதாக ஆராயப்பட வேண்டிய வார்த்தைகளைக் குறிப்பிட்டார்: அவர்கள் கிறிஸ்துவுடனே கூட மரித்தார்கள் மேலும் கிறிஸ்துவுடனே கூட எழுந்துமிருந்தார்கள் (கொலோசெயர் 2:12, 20). அவருடன் மரித்ததின் மூலம், அவர்கள் தங்களை உலக ஞானத்திலிருந்தும் பூமிக்குரிய வாழ்க்கையின் அணுகுமுறையிலிருந்தும் தங்களைத் துண்டித்துக் கொண்டிருந்தனர்.

அவர்களுடைய புதிய பார்வை கிறிஸ்து, ஆதலால், அவர் இருக்கும் இடமாகிய பரலோகத்தின் நிஜத்தையே தேட வேண்டியவர்களாயிருந்தனர். அவர்களுடைய பார்வை உலகப்பிரகாரமானவைகளைக் காணும்படி கீழ்நோக்கி அல்ல, மேல்நோக்கிப் பார்க்கப்பட வேண்டிய கிறிஸ்துவும் அவருடைய உபதேசங்களும்தான். அவர்களுடைய மனம் திருப்பு முனையைப் பெறுதல் தன்னிச்சையாய் வந்து விடாது; அது அவர்கள் பகுதியில் பிரயாசப்பட வேண்டியதாகும். புதிய ஆர்வங்கள் அவர்களின் சிந்தனைகளைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்தன.

ஞானஸ்நானத்தின்போது வரும் மறுரூபத்தை J. B. Lightfoot இவ்வாறு விவரித்திருக்கிறார்:

> ஞானஸ்நானத்தில் சம்பந்தப்படும் மாற்றம், உண்மையில் உணரப்படுமானால், ஒரு மனுஷனுடைய முழு இயல்பும் ஊடுருவி பரவும். அது அவனுடைய அன்றாட நடத்தையை மாத்திரமல்ல, அறிவுக் கூர்மையிலும் மாறுதலைக் கொண்டு வருகிறது. அது ஒரு புதிய எல்லைக்குள் மாறிப்போய் இருப்பதைவிட குறைவானதல்ல. அவன் பூமியிலிருந்து பரலோகத்திற்குள் உட்படுத்தப்பட்டிருக்கிறான்; மற்றும் இந்த மாற்றத்தில் அவனுடைய கருத்துக் கண்ணோட்டம் பண்பு நிலையை மாற்றுகிறது, அவனுடைய தீர்மானிக்கும் அளவுகோல்

முற்றிலுமாக மாற்றம் பெறுகிறது. பரு பொருள் அவனுக்கு இனியும் ஒரு எதிரியல்ல; அதைக் குறித்த எண்ணம் ஒரு முற்றுப் பெற்ற சம அளவையுடையதாயிருக்கிறது. சுயம் வெறுத்து உடல் வருத்தும் சட்டங்களும், சடங்காச்சார ஆசரிப்புக்களும் எவ்வித மதிப்புமின்றி ஒழிந்து போயின, அது எவ்வளவு பாதிப்பை மக்களுக்குள் ஏற்படுத்தியிருந்தாலும் ஒழிந்து போகவே செய்தது, இவைகளனைத்தும் பூமிக்குரியது, பூமிக்கடுத்த செயல். பருபொருள், தோன்றிமறைகிற தன்மை, உலகியல் வாழ்க்கை, ஆகியவை ஒழுக்கம், நித்தியம், பரலோகத்திற்குரியவைகளுக்கு இடமளித்து மறைகின்றன.[2]

கிரேக்க வார்த்தையில் "எழுப்பப்பட்டீர்கள்" எனும் சொற்றொடர் *sunegeirō* அது 2:12ல் காணப்படுகிற அதே வார்த்தைதான், அங்கே "எழுந்தவர்களாயும் இருக்கிறீர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது செயல் முடிந்த காலத்தில் பேசுகிறது. "கிரேக்க மொழியில் நிலை பேறுடமை பிரிவில் சொல்லப்படும் பதம் *(ei)* என்பது நிலை நிறைவேறிவிட்டது,"[3] என்பதாகும். அவர்கள் "கிறிஸ்துவுடன்" உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறார்கள் கொலோசெயர்கள் தங்கள் சிந்தனையை மறுபடியும் வழிகாட்டவேண்டியவர்களாய் தங்கள் மனதை அவர் மீது குவிக்க வேண்டியவர்களாய் அவரோடு தங்கள் நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டியவர்களாய் இருந்தார்கள்.

இந்த சகோதரர்கள், உலகப்பிரகாரமான காரியங்களை இனியும் தேடக்கூடாதவர்களாயிருந்தனர் (2:20). இப்போது அவர்கள் பரலோகத்தின் விலைமதிப்புள்ளவைகளைத் தேட வேண்டியவர்களாயிருதார்கள் (3:1). அவர்கள் வேறுபக்கம் நோக்குவதால் "மாம்ச காரியங்களுக்கு இடங்கொடுக்காதிருத்தல்" (2:23) என்ற பிரச்சனையை சந்திக்கிறவர்களாகவும் இயேசுவின் மேல் தங்கள் பார்வையை நிலைநிறுத்துகிறவர்களாகவும் (எபிரெயர் 12:1, 2) இருக்க வேண்டியவர்களாயிருந்தனர். அவர்கள் கிறிஸ்துவின் பண்புகளை எடுத்துக் கொள்ளத் தக்கதான அப்பணிக்கப்பட்ட வாழ்வின் புதிய கண்ணோட்டத்தை மகிமைப்படுத்தப்பட்டுள்ள உற்பத்தி செய்யக் கூடியவர்களாயிருந்தனர்.

"கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்" (3:1ஆ)

இயேசுவோடு கூட எழுந்ததினால் அதன் பலனாக, கொலோசெயர்கள் தங்களுடைய மனதை ஆவிக்குரிய விஷயத்திற்குத் திரும்ப வேண்டியவர்களாயிருந்தார்கள். *Zeteite* எனும் வார்த்தை **தொடர்ந்து தேடுங்கள்** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது ஒரு தொடர் நிகழ்ச்சியாக செயல்பட வேண்டியதை வெளிப்படுத்துகிறது. இதன் பொருள் தொடர்ந்து எதிர்நோக்கிக் கொண்டிருத்தல், தேடிக் கொண்டிருத்தல், கண்டுபிடிக்க பிரயாசப்படுதல் என்பதாகும். பவுலின் நிருபத்தைப் பெற்றவர்கள் பரலோக சிந்தையை கண்டு பிடிப்பது மட்டுமல்ல, அதை அடைந்து கொள்ளவும், அதேபோல அவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் (1:23), மேலானவைகளை தொடர்ந்து தேடவும்

வேண்டியவர்களாயிருந்தார்கள்.

இங்கே *anō* எனும் வார்த்தை "மேலான" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அதே விதத்தில் யோவான் 8:23லும், கலாத்தியர் 4:26லும், மற்றும் பிலிப்பியர் 3:14லும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. **மேலானவைகள்** எனும் சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் காணப்படவில்லை. தங்களுடைய புதிய நட்புறவை முறையாக கண்ணுறும்படி, கொலோசெயர்கள் தங்கள் கண்களை இவ்வாழ்வின் குப்பையிலிருந்தும் சகதியிலிருந்தும் திருப்பி செயல்பாட்டுடன் புதிய ஜீவனைப் பற்றிக் கொள்ள வேண்டும். புதிய கிறிஸ்தவர்களுக்கு, அவர் சொல்லும் காரியம் என்னவெனில் அவர்கள் பூமிக்குரிய கடமைகளுக்கு கண்களை மூடிக் கொள்ளவும் ஆவிக்குரியவைகளை மட்டும் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதல்ல; புதிய ஜீவனை அவர்கள் ஒரு தெய்வீக கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் என்பது தான் இதன் பொருள்.

கிறிஸ்தவர்களாகிய நாம், நமது முந்நுரிமைகளில் சரிசம நிலையைக் கொண்டிருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் பரலோகத்திற்குரிய காரியங்களுக்கு கவனம் செலுத்தக் கூடாத அளவுக்கு உலகக் காரியங்களில் சிக்கிக் கொண்டவர்களாகிவிடக் கூடாது, அதே வேளையில் பரலோகக் காரியங்களில் மிக அதிகமாய் உட்படுத்திக் கொண்டு உலகக் காரியங்களில் பொறுப்பற்றவர்களாக இருந்து விடக் கூடாது. சரியான சரிசம நிலையைக் காத்துக் கொள்வது என்பது தேவபக்திக்குரிய நோக்கங்களை நம்முடைய பூமிக்குரிய பொறுப்புக்களோடு சம்பந்தப்படுத்தி அடைய வேண்டியது.

நாம் சரீரத்திலே இயேசுவைக் காண முடியாது, ஆகிலும் அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார் என நம்மால் உணரமுடியும். பரலோக நிலையில், இயேசு தூய்மையானவைகளும் பாவமற்றதுமான காரியங்களால் மட்டுமே சூழப்பட்டிருக்கிறார். அவரைப் பின்பற்றிப் போகிறவர்களாக, நாம் நம்மையே கண்டு அவரோடு கூட அடையாளப்படுத்தி இப்பொழுது அவரைச் சூழ்ந்து கொண்டுள்ள பரிசுத்தத்திலும் காணப்பட வேண்டும்.

கொலோசெயர் நிருபத்தை பவுல் எழுதின போது, இயேசு பூமிக்கு வருவதற்கு முன் தாம் இருந்த ஸ்தலத்தில் இருந்தார். அவர் உயிர்த்தெழுந்த பின்பு நாற்பது நாட்கள் கழித்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்யும் பொருட்டு பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டார் (நடபடிகள் 1:3, 9-11), அந்த ஸ்தலம் உச்சக்கட்ட கனத்திற்குரியது. வேறெந்த ஜீவிகளுக்கும் தேவதூதர்களுக்குக்கூட இப்படிப்பட்ட அதிகாரம் கொடுக்கப்படவில்லை (எபிரேயர் 1:13). இயேசு தேவனுடைய வலது பாரிசத்தில் முடிசூடப்படுவார் என்பதை தாவீது முன்னுரைத்தார் (சங்கீதம் 110:1), இயேசு இந்த வசனத்தை தமக்கு ஒப்பிட்டார் (மத்தேயு 22:44; 26:64; மாற்கு 12:36; லூக்கா 20:41-44). அவர் பரமேறிச் சென்ற பிறகு, அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திகும் காட்சி ஒரு ஸ்தாபிக்கப்பட்ட உண்மையாக குறிப்பிடப்படுகிறது.[4]

இயேசு உயிர்த்தெழுந்து, பரமேறி, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்த பொழுது, சகலமும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டன (எபேசியர் 1:20-23), அதில் "தேவதூதர்களும்

அதிகாரங்களும், வல்லமைகளும் உள்ளடக்கம்" (1 பேதுரு 3:22). அப்பொழுதிலிருந்து அவருடைய ராஜ்யமும் ஆளுகையும் நிலைத்தி ருக்கிறது (கொலோசெயர் 1:13). அவர் இப்பொழுது சகலத்தையும் பிதா ஒருவரைத்தவிர மற்ற எல்லாரையும் ஆண்டு கொண்டுள்ளார். அவர் தமது இரண்டாம் வருகை வரைக்கும் ஆளுகை செய்வார், அதன் பிறகு பிதாவினிடத்தில் தமது ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார் (மத்தேயு 13:41-44; 1 கொரிந்தியர் 15:23-28). அவர் மறுபடியும் வரும்போது, இரட்சிக்கப்பட்டவர்களில் - உயிர்த்தெழுந்து வரப்போகிறவர்களும் (உலகில்) உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுமாகிய அனைவரும் - அவரை மேகத்தில் சந்தித்து அவரோடே கூட பரலோக்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவோம் (1 தெசலோனிக்கேயர் 4:15-17).

"பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" (3:2)

கொலோசெயர்கள் கைகளால் கெடுக்கப்பட இயலாததும் இயேசு வாசம் பண்ணுகிறதுமான இடத்திலுள்ள மேலானவைகளையே நாட வேண்டியவர்கள். அவர்கள் கவனம் செலுத்த வேண்டியது பூமிக்குரியவைகளிலா அல்லது பரலோகத்திற்குரியவைகளிலா என்று தெரிவு செய்து கொள்ளும்படி கோரப்பட்டனர். ஒரு இருப்பிட நிலையிலுள்ள வாழ்வில் அக்கறைகாட்டும் அளவுக்கு இருப்பிடநிலையை பவுல் சிந்திப்பதில்லை. வித்தியாசம் என்னவெனில் குறுகிய காலத்துக்குரியதும், முக்கியத்துவமற்றதுமான **பூமியிலுள்ள பாவக்காரியங்களுக்கும்** *பரிசுத்த முள்ளதும் நிலையானதுமான நித்தியத்திற்கும்* **மேலானவைகளுக்கும்** *இடையிலானது.*

நாடுங்கள் என்பது கிரேக்க மொழியில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த, *phroneite,*லிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சொல். இந்த இடத்திலும் பிற வசனப்பகுதிகளிலும் (ரோமர் 12:16; பிலிப்பியர் 3:19), (ஏதோ ஒன்றுக்கு) மிகவும் கவனம் செலுத்து, "ஒருவருடைய மனதை அதிலே வை, ஆர்வமுடன் பார்வையைச் செலுத்து."[5] என்று பொருள்.

KJV எனும் மொழிபெயர்ப்பு "set your affection" என்பதறாக மிக அதிகமான உணர்ச்சி வசப்படுதலை வலியுறுத்துகிறது. பவுல் கொலோசெயர்கள் நாட வேண்டியவைகளில் அக்கறையுள்ளவராயிருந்தார். அவர்கள் பரலோகத்திற்குப் போவதற்காக தேடுவதைக் காட்டிலும் அதிகமாக செய்ய வேண்டியவர்களாயிருந்தார்கள்; தேவபக்திக்குரிய பரேலாகத்திற்குரிய தன்மையே அவர்களுடைய சிந்தனையின் மையமாக இருக்க வேண்டும். கொலோசெயர்கள் "மேலானவைகள்" என்பது சரீரப் பிரகாரமான உலகத்தைக் குறிப்பிடுவதில்லை, என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியாக அதை அவர் "கிறிஸ்து வீற்றிருக்கிற" இடத்திலுள்ள என்ற வார்த்தையால் தகுதிப்படுத்தினார் (3:1).

பாவம் ஆளுகின்ற அரங்கம் "பூமி," "மேலானவைகளோ" உச்சக் கட்ட பரிசுத்தம் நிறைந்த இடத்தில் இருப்பவை. நாம் எப்படிப்பட்ட கிறிஸ்தவர்களாக வாழுகிறோம் என்பது நம்முடைய கண்ணோட்டத்தால் தீர்மானிக்கப்படுகிறது. நாம் இந்த உலகத்திற்குரிய காரியங்களில்

அக்கறை காட்டுவோமாகில், நாம் பூமிக்குரிய சிந்தையுடையவர்களும், உலகத்துக்குரிய ஜனங்களைப்போல வாழக்கூடியவர்களாயுமிருப்போம். நாம் பரலோகத்துக்குரியவைகளிலே நமது மனதை வைப்போமானால், நாம் தெய்வீகத் தன்மை பெற்று உலகத்திற்குரிய விளக்கங்களால் கட்டுப்படுத்தப்படாமல் இவ்வாழ்க்கையை வாழ்வோம். கொலோசெயர்களைப் போலவே, நமது கடமை என்னவெனில், நமது மனதைக் கட்டுப்படுத்தி, ஆவிக்குரியவைகளல்லாதவைகளையும் வாழ்க்கையில் சோதனைக்குட்படுத்தும் விஷயங்களையும் தவிர்க்கவும், ஆவிக்குரியவைகள் மீது தமது கவனத்தைத் திருப்பவும் வேண்டும்.

பாவச்செய்கைகளை நாம் நம்முடைய சிந்தைகளிலிருந்து தவிர்க்க வேண்டியதாயிருந்தாலும், இது போதுமானதல்ல, தீய செயல்களிலிருந்து விடுபட்டுள்ள ஒரு மனம் ஒழுக்கங்களால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஆவிக்குரிய சிந்தையாலும் வாழ்வாலும், எதிர்மறை செயல்பாடுகள் நீக்கப்படக் கூடும். தீமையை அகற்றுவதற்கான வழி நல்லவைகளைச் சிந்தித்துக் கொண்டிருப்பதுதான். இந்தக் கருத்தையே பவுல் ரோமர் 12:21; 13:14; 2 கொரிந்தியர் 3:18; மற்றும் கலாத்தியர் 5:16 ஆகிய வசனங்களில் வெளிப்படுத்தினார்.

பிலிப்பியர்களுக்கு எழுதியபோது, பவுல் பூமிக்கடுத்தவைகளை சிந்திக்கிறவர்கள் சிலுவைக்குப் பகைஞர்கள் என்றார் (பிலிப்பியர் 3:18, 19). அதே நிருபத்தில், அவர்களுடைய மனம் எவைகளில் வாசம் பண்ண வேண்டும் என்று நேர்மறையான கருத்துக்கள் கொண்ட ஒரு பட்டியலையே கொடுத்தார் (பிலிப்பியர் 4:8). யாக்கோபு பூமிக்குரியதும் பிசாசுக்கடுத்தவைகளுமான எண்ணிக்கையுள்ள கிரியைகளை பரலோகத்திற்குரியவைகளுக்கு முரணாக வரிசைப்படுத்துகிறார் (யாக்கோபு 3:14-18).

“ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது” (3:3)

கொலோசெயர்கள் மரித்தும் பிழைத்துமிருந்தார்கள் (2:13, 20). அவர்கள் ***மரித்திருந்தார்கள்*** *(apothnēskō). இந்த வினைச்சொல் முற்று பெற்ற உறுதியான செயல்களை வெளிப்படுத்துகிறது, ஆகிலும் இந்த சகோதரரில் சிலர் தாங்கள் ஒருவகையில் ஆவிக்குரிய வகையில் மரித்திருந்தார்கள் என்பதை உணருவதற்கு சிரமப்பட்டார்கள். இந்தக் கருத்தை பவுல் அவர்களுடைய மனதிலே ஆழமாக பதியவைக்கவும் அவர்களுடைய மரணத்தின் விளைவுகளை வலியுறுத்தவும் அவைகளை மறுபடியும் குறிப்பிட்டார். அவர் உங்கள் ஜீவன் என்று பன்மையுடன் ஒருமையை பயன்படுத்தியிருக்கிறார் (“உங்கள் [பன்மை] ஜீவன்” பன்மையில் “உங்கள் ஜீவன்கள்” என்று சொல்லுவதற்குப் பதிலாக) அப்படிக் குறிப்பிடுவது பொதுவாக கிரேக்கப் பயன்பாட்டில் இருந்தது.[6] கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் தங்களுடைய புதிய ஜீவனை பகிர்ந்து கொண்டார்கள்.*

அவர்கள் தங்களுடைய முந்தின வாழ்க்கையில் அக்கிரமகிரியைகளினாலே ஆவிக்குரிய முறையில் மரித்தவர்களாய் கிறிஸ்துவிலிருந்து தங்களைப் பிரித்துக் கொண்டிருந்தாலும் (1:21), கொலோசெயர்களோ அவரோடு கூட கொண்டிருந்த புதிய நட்புறவில் பிழைத்திருந்தார்கள், அவருடைய இரத்தத்தினாலே ஒப்புரவானார்கள். William Hendriksen *“ஏற்கனவே*

விளக்கப்படுத்தப்பட்ட பொருளில் (2:11, 12ல் காண்க) கொலோசெயர்கள் மரித்து அடக்கம் பண்ணப்பட்டிருந்தார்கள். இனி வாழ்வது அவர்களல்ல கிறிஸ்துவே அவர்களுக்குள் வாழ்கிறார். அவர்கள் தங்களுடைய பழைய மனுஷனுக்காகவும் பாவத்தால் கட்டுண்டிருந்த உலகத்துக்காகவும் மரித்திருந்தார்கள்,"[7] என்று எழுதினார்.

ஞானஸ்நானம் என்ற செயலில் அவர்கள் மரித்திருந்தார்கள். இந்த உண்மை 2:12ல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் ரோமர் 6ல் மிகவும் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இங்கே "பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" என்று பவுல் கேட்டார் (வசனம் 2). அதற்குப் பதிலாக அவரே, "அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" என்றார் (வசனம் 4இ) கொலோசெயிலிருந்த கிறிஸ்தவர்கள் இப்பொழுது, முன்பு இருந்த, தங்கள் வாழ்க்கையின் உலகக் காரியங்களுக்காக மரித்திருந்தார்கள். ஞானஸ்நானத்திற்கு முன்பு வரை தங்களுடைய வாழ்க்கையை வாழ்ந்த விதத்தில் தேவனுக்கு முன்பாக மரித்தவர்களாயிருந்தார்கள். இப்பொழுது இயேசுவின் மரணத்துடனான அடையாளப்படுத்துதலால், அவர்களின் கடந்த காலத்துக்கு மரித்தவர்களாயிருந்தார்கள். தேவனுக்குள் அவர்கள் ஒரு புதிய ரீதியை அடைந்துள்ளனர், கிறிஸ்துவுடன் சேர்ந்து, இந்த வாழ்க்கையில் வீசும் தீமையான புயலுக்கு அடைக்கலம் பெற்றுள்ளனர்.

மறைந்திருக்கிறது (kruptō) என்பது நிறைவு பெற்ற ஒரு செயலின் தொடர் விளைவை குறிப்பிடுகிறது. அவர்களுடைய ஜீவன் **தேவனுக்குள் கிறிஸ்துவிலே** மறைந்திருந்தது, தொடர்ந்து மறைந்திருக்கும், அவர்கள் கிறிஸ்துவுக்குள் இருப்பதால் அவர்கள் "தேவனுக்குள் கிறிஸ்துவுடன்" இருந்தார்கள் (2 கொரிந்தியர் 5:17) மேலும் அவர் தேவனுக்குள் இருக்கிறார் (யோவான் 10:38; 14:10, 11, 20; 17:21). ஒருவகையில், அவர்கள் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருந்தபடியால் உலகம் அவர்களைக் காணவில்லை (கலாத்தியர் 3:27). அவர்கள் "மறைக்கப்பட்டிருக்கிறார்கள்" என்ற உண்மையானது உலகம் அவர்களைப் பார்க்கவே முடியாது என்ற பொருளில் குறிப்பிடுவதில்லை; உலகம் கிறிஸ்துவைப் பார்த்தது, அவருடன் அவர்கள் அவரைத் தரித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த கிறிஸ்தவர்கள் "உலகத்துக்கு வெளிச்சமாயிருந்தார்கள். மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது" (மத்தேயு 5:14). அவர்கள் முழுமையாய் உலகத்திற்கு மறைக்கப்பட்டவர்களாயிருந்தால் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்க முடியாது. அவர்கள் பண்டிகை விசேஷ ஆடையாகிய, கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருப்பதை உலகம் பார்க்க வேண்டியது அவசியமாயிருந்தது (மத்தேயு 22:11, 12; கலாத்தியர் 3:27). அவரே வெளிச்சமாயிருக்கிறார் (யோவான் 8:12), அதிலே அவர்கள் முற்றிலும் மறைக்கப்பட்டிருக்கிறார்கள். இனி அவர்கள் இருளாயிராமல் கர்த்தருக்குள் ஒளியிலே இருக்கிறார்கள் (எபேசியர் 5:8), உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிறார்கள் (பிலிப்பியர் 2:15ஆ).

"தேவனுக்குள் கிறிஸ்துவிலே மறைந்திருத்தல்" என்பது அவர்கள் தேவனுடைய பராமரிப்பின் பாதுகாப்பில் இருக்கிறார்கள்

(1 கொரிந்தியர் 10:13), உலகத்தின் சீரழிக்கும் பழக்கங்களிலிருந்து மறைந்திருக்கிறார்கள் பழைய ஏற்பாடு ஒளிந்து கொள்ளக் கூடிய இடமாக தேவன் இருக்கிறார் என்றும் (சங்கீதம் 17:8; 31:20; 64:2), அவருடைய ஜனங்களுக்கு அவர் அடைக்கலமாயிருக்கிறார் (சங்கீதம் 61:2, 3), என்ற கருத்தையும் கொடுக்கிறது. இந்த பாதுகாப்பு அரணில் பாவம் எனும் சூறாவளிக்கும் உலகத்தின் துன்பங்களுக்கும் பாதுகாப்பாய் நிலைத்திருந்தனர். அவர்கள் தங்கள் பாதுகாப்பின் கன்மலையான கிறிஸ்துவோடும் தங்களுடைய புகலிடமாகிய தேவனுக்குள்ளும் இருந்தார்கள்.

கொலோசெயர்கள் தாங்கள் மறைக்கப்பட்ட ஸ்தலத்தில் பாதுகாப்பாய் இருக்கிற வரை, சாத்தானின் வலிந்து ஈர்க்கும் சக்திகள் அவர்களை மேற்கொள்ளவோ அவர்களை அடிமைகளாக்கிக் கொள்ளவோ திராணியுள்ளவைகளாக மாட்டாது (1 யோவான் 3:6, 9; ஒப்பீடுக 1 பேதுரு 1:23). தீய சக்திகளை இயேசு வெற்றி சிறந்திருப்பதால் (கொலோசெயர் 2:15), அவர்களும் மேற்கொள்ளும்படி உதவி செய்ய முடியும் (1 யோவான் 4:4). வெற்றிசிறந்தவருக்குள் அவர்கள் பாதுகாப்பாக நிலைத்திருந்தால், அவர்களும் வெற்றி சிறப்பார்கள். அவர்கள் தங்களுடைய மறைவிடமாகிய இயேசுவிடமிருந்து பிரித்துக் கொண்டு போய் தங்களுக்கு அடிமையாக்கிக் கொள்ள யாரையும் எதையும் அனுமதித்துவிடக் கூடாது (கொலோசெயர் 2:8).

“கிறிஸ்துவுடன் கூட” (*sun ... Christō*) எனும் பதத்தை இங்கு மட்டுமே பவுல் இந்த அர்த்தத்தில் பயன்படுத்தினால் அவர் அடிக்கடி “கிறிஸ்துவுடன்” என்று பெரும்பாலும் எழுதாமல் “கிறிஸ்துவுக்குள்” என்றே எழுதினார். ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய ரீதிக்குள் பிரவேசிக்க “கிறிஸ்துவுக்குள்ளாக” வேண்டும். இதே நிலையை “தேவனுக்குள்” இருப்பதாக விளக்கப்படுத்துவதில் புரிந்து கொள்வதில் பிரச்சனை இல்லை ஏனெனில் கிறிஸ்து “தேவனுக்குள்” இருக்கிறார் (யோவான் 10:38; 14:11, 20; 17:21); “கிறிஸ்துவுக்குள்” இருக்கிறவர்கள், ஆவிக்குரிய பொருளில், தேவனுக்குள்ளும் இருக்கிறார்கள்.

“நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து” (3:4அ)

3:1-4ல் **கிறிஸ்து** எனும் பட்டத்தை பவுல் நான்கு முறை பயன்படுத்தியிருக்கிறார், பிரதி பெயர்ச்சொல் பயன்படுத்தப்படவில்லை. இப்படிப்பட்ட வழக்கத்துக்கு மாறான திருப்பித் திருப்பி பேசும் செயல் வலியுறுத்தலுக்காகவே. கொலோசெயர்களின் வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் மறைந்திருப்பதால், ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது, அவர்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவார்கள் என்று பவுல் சொன்னார் (வசனம் 4ஆ) இப்படியாக, பவுல் இம்மைக்குரிய இவ்வாழ்க்கைக்கும் எதிர்கால வாழ்க்கைக்கும் இணைப்பை ஏற்படுத்துகிறார். இப்பொழுது கிறிஸ்துவோடு கூட இருப்போர் (வசனம் 4அ) அவர் மறுபடியும் வரும்போது அவரோடே கூட இருக்கும்படி தம்மோடு கூட கொண்டு வருவார் (4ஆ). கடந்து போகும் இந்த உலகம் அகற்றப்படும் போது, அவர்கள் மகிமையுள்ள இயேசு வரும் போது அவரோடே இருப்பார்கள், கொலோசெயரில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றி குறிப்பிடும் ஒரே வசனம் 4ஆ.

கொலோசெயர்களின் ஜீவன் கிறிஸ்துவுடனே மறைந்திருக்க மற்றொரு

காரணம் **அவரே நம்முடைய ஜீவனாயிருக்கிறார்:** மூலாதாரமும், மையமும், ஜீவஊற்றுமாக அவர் இருக்கிறார் (1 யோவான் 5:12).[8] அவரிடத்திலிருந்து வரும் ஜீவன் மட்டுமல்ல, அவரோடே பகிர்ந்து கொள்வது மட்டுமல்ல, மாறாக கிறிஸ்தவர்களுக்கு அவரே *ஜீவனாயிருக்கிறார்.* இயேசு திராட்சச் செடியாயும், கிறிஸ்தவர்கள் கொடியாயும் இருக்கிறார்கள் (யோவான் 15:5). கொடிகள் செடியோடு கொண்டுள்ள தொடர்பால் அவை உயிருள்ளவைகளாயிருக்கின்றன. இயேசுவிலே தரித்திராத எந்தக் கொடியும் வெட்டுண்டு உலர்ந்து போகும். பிறகு, அதற்கு இனியும் ஜீவன் (உயிர்) இல்லாதபடியால், அவை சுட்டெரிக்கப்படும் (யோவான் 15:6).

"ஜீவன்" எனும் வார்த்தையில் சிறு மாறுதலைக் காட்டும் கிரேக்க மொழியில் "நம்முடைய (எங்களுடைய)" அல்லது "உங்களுடைய" ஜீவன் என்று சொல்லப்படக்கூடும். "நம்முடைய," *hēmon* பின்வரும் மொழிபெயர்ப்புக்களில் காணப்படுகிறது, வசனப்பகுதியிலோ அல்லது பக்கத்தின் எல்லைக் கோட்டிற்குள்ளோ காணப்படுகிறது: KJV, ASV, RSV, NAB, NEB, NKJV, மற்றும் NRSV. மாறுபட்ட *humōn* ("உங்கள்") எனும் வார்த்தை மனதைத் தொடும் எண்ணிக்கையுள்ள பிரதிகளில் காணப்படுகிறது. இந்த வாசித்தல் கிரேக்க புதிய ஏற்பாட்டு நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. "உங்களுடைய" எனும் வார்த்தை NIV, NRSV, மற்றும் TEV, ஆகிய மொழிபெயர்ப்புகளிலும், ASV யின் எல்லை கோட்டுக்குள்ளும் காணப்படுகிறது. வசனப்பகுதியின் ஆதாரம் "நம்முடைய" என்று சொல்லுவதா; உங்களுடையது என்று சொல்லுவதா எது உறுதியான உண்மைப் பொருள் என கண்டுபிடிப்பது கடினம். முடிவில், வித்தியாசம் மிகச் சிறியது. பவுல் "நம்முடைய" என்று பயன்படுத்தியிருந்தால் கிறிஸ்துவை தங்களுடைய ஜீவனாகக் கொண்டிருக்கிறவர்களோடு அவர் தம்மையும் சேர்த்துப் பேசுகிறார். 2:13லிருந்தும் கலாத்தியர் 3:25, 26லும் மாறி "உங்களுடைய" என்பதிலிருந்து "நம்முடைய" என்று குறிப்பிட்டிருப்பது, பவுலுக்கு இது வழக்கத்துக்கு மாறானதல்ல என்பதை சுட்டிக் காட்டுகிறது.

"வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (3:4ஆ)

கொலோசெயர்களுக்கு அப்போஸ்தலன் சொல்லும் போது, அவர் **வெளிப்படும்போது** அவரோடே கூட மகிமையிலே அவர்களும் வெளிப்படுவார்கள் என்று சொன்னார். *Phaneroō* எனும் கிரேக்க வார்த்தை இயேசுவின் இரண்டாம் வருகைக்கு (1 பேதுரு 5:4; 1 யோவான் 2:28; 3:2), ஒரு காட்சி கொடுப்பதற்கு (மாற்கு 16:12, 14), மற்றும் அறியப்படாதிருப்பதை வெளிப்படுத்துதலுக்கு (மாற்கு 4:22; யோவான் 1:31). பயன்படுத்தப்பட்டுள்ளது அது மேலுமாக தேவன் கடந்த காலங்களில் மறைத்து வைத்திருந்தவைகளை சம்பந்தப்படுத்தி புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வெளியாக்கப்பட்டது என்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது (கொலோசெயர் 1:26).

அவரோடேகூட எனும் வார்த்தை இயேசுவுக்கு சம்பந்தப்படுத்தி நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் பவுலால் பயன்படுத்தப் பட்டது. கிறிஸ்தவனின் நிகழ்கால வாழ்க்கை இயேசுவோடே கூட

பரலோகத்திற்கான வாழ்விலும் தொடருவதைக் காட்டுகிறது (பிலிப்பியர் 1:23; 1 தெசலோனிக்கேயர் 4:17). கிறிஸ்தவர்கள் "கிறிஸ்துவோடுகூட உடன் சுதந்தரர்கள்" என்றும், கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூட பாடுபட்டால் அப்படியாகும் (ரோமர் 8:17ஆ). என்றும் பவுல் எழுதினார். கூட ... (வெளிப்படும்) "போது" (*சண்*) என்பது ஒரு தொகுப்பு வினையாகப் பயன்படுத்தப்பட்டது, அது கிறிஸ்துவோடு கூட இருப்பதையும், ஞானஸ்நானத்திலே புதிய ஜீவனின் பங்கடைவதையும் குறிப்பிடுகிறது (ரோமர் 6:4, 5; கொலோசெயர் 2:12, 13; 3:1).

கொலோசெயர்கள் இயேசுவோடு கூட கீழ்வரும் காரியங்களில் பங்கடைந்தார்கள் அல்லது பங்கடைவார்கள்:

- அவர்கள் அடக்கம் பண்ணப்பட்டு, எழுப்பப்பட்டு, அவரோடே கூட பிழைத்துமிருக்கிறார்கள் (2:12, 13; 3:1).
- அவர்கள் உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தவர்களானார்கள் (2:20).
- அதன் விளைவாக, அவர்கள் தேவனுக்குள் அவருடனே மறைந்திருக்கிறார்கள் (3:3).
- அவர்கள் மகிமையிலே அவருடன் வெளிப்படுவார்கள் (3:4).

இதற்கு ஒப்பான முன்னேற்ற சிந்தனையை பவுல் ரோமரில் பயன்படுத்தினார். அந்த கிறிஸ்தவர்கள், ஞானஸ்நானத்திலே, அவரோடே அடக்கம் பண்ணப்பட்டு, அவருடைய மரணத்திலே இணைக்கப்பட்டவர்களாய், அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டார்கள். இப்படியாக அவரோடேகூட மரித்ததால், அவரோடேகூட பிழைத்திருப்பார்கள் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்கள் (ரோமர் 6:4-8).

"அவரோடேகூட" எனும் வார்த்தை பவுல் குறிப்பிட்ட பிற இடங்களிலும் அதே பொருளையுடையது: "கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக் கொண்டு எழுப்பி, உங்களுடனே கூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்" (2 கொரிந்தியர் 4:14; காண்க ரோமர் 8:32). இயேசுவை எழுப்பின தேவன், அவரோடே கூட, நம்மையும் எழுப்புவார். 1 தெசலோனிக்கேயர் 4:14ல் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினார், "இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே, அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூட கொண்டு வருவார்." இந்த வசனத்தைக் குறித்து J. W. McGarvey விளக்கப்படுத்தியதாவது,

> "அவரோடேகூட" என்று சொல்லப்படுவது இங்கே இயேசு சரீரமற்ற ஆவிகளை *பரலோகத்திலிருந்து* உயிர்த்தெழுதலுக்காக கொண்டு வருவாரென்று பொருளல்ல, ஆனால் தேவன், இயேசுவை மரித்தோரிலிருந்து *(கல்லறையிலிருந்து)* எழுப்பிய அவர் நம்மையும் *கல்லறையிலிருந்து* எழுப்பி வரப் பண்ணுவார், இயேசுவோடுகூட என்ற இணைச்சொல், அதற்குள் நுழைந்தவர்கள் ஆவிக்குரிய ஜீவனில் இயேசுவோடுகூட வருவார்கள்.[9]

கல்லறையிலிருக்கிற நல்லவர்களும் கெட்டவர்களுமாகிய அனைவரும் ஒரே நேரத்தில் உயிர்த்தெழுவார்கள் (யோவான் 5:28). இது கடைசி நாளில் சம்பவிக்கும் (யோவான் 6:39, 40, 44, 54), அவ்வேளையில் அனைவரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (யோவான் 12:48).[10] சூரியன் பிரகாசிக்கும் காலம் வரைக்கும், சூரியனைச் சுற்றி பூமி சுழன்று கொண்டிருக்கும் காலம் வரை அது அச்சின் மேல் சுழன்று கொண்டிருக்கும் வரை, நாட்கள் தொடர்ந்து வரும். இயேசு மறுபடியும் வரும்பொழுது, இந்த பிரபஞ்சம் கடந்து போகும், அதன்பின்பு நாட்கள் வராது. உயிர்த்தெழுதல் இப்பிரபஞ்ச "கடைசிநாளிலே" இடம் பெறும். மரித்தவர்கள் நியாயத்தீர்ப்புக் கென்று உயிர்த்தெழுந்தபின்பு, வானங்களும் பூமியும் கடந்து போகும் (2 பேதுரு 3:10; வெளிப்படுத்தின விசேஷம் 20:11).

கொலோசெயர்கள் இயேசுவால் உயிர்த்தெழுதலுக்கும் அவருடைய ***மகிமையுள்ள*** *வருகையின்போது அவரோடேகூட பங்கடையும் படியாகவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியும். யோவான், "இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாமும் இருப்போம்" (1 யோவான் 3:2ஆ) என்று எழுதினார். பவுல் எழுதிய போது இயேசு "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலிப்பியர் 3:21அ), என்றார்.*

மரணத்துக்குப் பின்பு, சரீரமானது பூமியிலேயே நின்று விடுகிறது, ஆத்துமா பிரிந்து பாதாளத்துக்குச் செல்லுகிறது (ஆதியாகமம் 35:18; நடபடிகள் 2:27, 31). இயேசு மறுபடியும் வரும்பொழுது, மரித்த எல்லாருடைய சரீரங்களையும் உயிர்த்தெழப் பண்ணுவார் (யோவான் 5:28, 29) மறுரூபமாக்கப்பட்ட சரீரங்களை அவர்களுடைய ஆத்துமாக்களுடன் மறுபடியும் இணைப்பார், அவ்வேளையில் பாதாளம் அவர்களை ஒப்புவிக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-13). அடுத்ததாக, இயேசு தமது சிங்காசனத்தின் மேல் அமருவார், இப்போதைய இப்பிரபஞ்சம் முடிவுறும் (2 பேதுரு 3:10; வெளிப்படுத்தின விசேஷம் 20:11). அதற்குப் பின்பு, இயேசு சகல மனுஷர்களையும் நியாயந்தீர்ப்பார் - உயிர்த்தெழுந்தவர்களையும் அதுவரை உயிரோடிருக்கிற அனைவரையும் தீர்ப்பார்.[11] பிறகு, இயேசு ராஜ்யத்தை பிதாவினிடத்தில் ஒப்புக் கொடுப்பார் (1 கொரிந்தியர் 15:24-27).

"நீங்கள் ... அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" என்ற வாக்கியம் கொலோசெயர்களுக்கு அவர்கள் கிறிஸ்துவுடனே புதிய ஜீவனுடையவர்களாய் வாழும்படி எடுத்துக் கொண்ட பிரயாசம் அவரோடு கூடிய மகிமையாக அளிக்கப்படும் என்ற அமைதியான உறுதியளித்திருக்க வேண்டும். மகிமையுள்ள இந்த உறுதி இயேசுவோடு கூட மறைந்திருந்த தன்மை ஆவிக்குரிய வாழ்க்கையில் அவர்கள் பட்ட பிரயாசங்களைச் சார்ந்திருக்கும். அவர்கள் பூமியிலே அந்நியர்களாயிருந்தார்கள்; ஆனால் இப்பொழுது அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய சுய தேசம், அவர்கள் கொண்டிருந்த குடியிருப்பாகிய, பரலோகத்தில் இயேசுவோடு இருப்பார்கள் (பிலிப்பியர் 3:20). அவர்களுடைய சரீரம் இயேசுவின் மகிமையுள்ள சரீரத்துக்கு ஒப்பாக மாற்றப்படும். அவர்களும், இரட்சிக்கப்பட்ட அனைவரும், பூமிக்குரிய அழிவுள்ள சரீரத்திலிருந்து விடுபட்டு, அழிவில்லாததும், ஆவிக்குரியதுமான

சரீரம் கொடுக்கப்படுவார்கள் (காண்க 1 கொரிந்தியர் 15:42, 43; 2 கொரிந்தியர் 5:1, 2).

பயன்பாடு

கிறிஸ்துவோடு எழுப்பப்பட்டவர்களுக்கு புதிய வழிகாட்டல் உண்டாயிருக்கிறது (3:1, 2)

கொலோசெயர்கள் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட எழுப்பட்டவர்களாயிருந்தனர் (வசனம் 1அ; 2:12). எப்படியிருப்பினும், அவரோடேகூட எழுப்பப்பட்டிருப்பது உடனடி வளர்ச்சியை கொடுத்து விடாது. ஒரு பொறுமையோடு கூடிய கிறிஸ்தவ குணாதிசயம் விரிவாக்கப்பட பிரயாசம் தேவை. இது இயேசுவின் பரலோகத்துக்குரிய வாழ்க்கையின் அணுகுமுறையையும் உட்படுத்தியது. புதியதாய் பிறந்த கிறிஸ்தவர்கள், குழந்தைகளைப் போல ஞானஸ்நானமாகிய ஆவிக்குரிய பிறப்பிலே புதிய வாழ்வைத் தொடங்கினவர்கள் (யோவான் 3:3-5). அவர்களுக்கு ஆவிக்குரிய விதமாக வளர்ச்சி தேவ வசனமாகிய பால் அவசியமாயிருக்கிறது (1 பேதுரு 2:2).

கிறிஸ்தவர்கள் கிறிஸ்து வாசம் பண்ணுகிற மேலான இடத்தையே நோக்கிப் பார்க்க வேண்டியவர்கள் (வசனங்கள் 1ஆ, 2), நமது ஆர்வமெல்லாம் உலகத்துக் குரியவைகளாயிராமல் தேவனுக்குரியவைகளாயிருக்க வேண்டும் (1 யோவான் 2:15-17). நாம் பூமிக்குரிய காரியங்களிலே மிகவும் ஒட்டிக் கொண்டவர்களைப் போல மாறிவிடக் கூடாது. நாம் பரலோகத்துக்குரிய காரியங்கள் மீது கவனம் செலுத்துவோமானால் இதை தவிர்த்துவிட முடியும். ஒரு கப்பல் ஓட்டும் மாலுமி தான் சென்று சேர வேண்டிய இலக்கை அறிந்திருக்க வேண்டும். மேலும் தனது கப்பலை அவசியமான துறைமுகத்தை நோக்கி செலுத்த வேண்டும். அவனுடைய இலக்கிலிருந்து அவனுடைய கவனத்தைத் திருப்ப அநேக ஆர்வமிக்க சம்பவங்கள் நிகழக்கூடும், அவன் தன் பயணத்தை வெற்றிகரமாய் நிறைவேற்ற ஏதுவாக அவன் தன் கப்பலை முறையான நிலையில் செலுத்த வேண்டும்.

நாம் பரலோகத்திற்குரிய ரீதியில் காரியங்களை கைக் கொள்ள வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நமது இலக்கு மேலான ஒன்று: நாம் வாழும் பரியந்தம், தொடர்ந்து முயற்சித்தாலும், கிறிஸ்துவுக்கு ஒப்பான தகுதியை முழுமையாய் நாம் பெருக்கிக் கொள்ள இயலாது. கிறிஸ்தவ ஜீவியத்தின் அழகே அது ஒரு தொடர் சவாலாக எடுத்துக் கொண்டு எல்லா வகையிலும் கிறிஸ்துவுக்கு ஒப்பாக மாற மேலும் மேலும் பிரயாசப்படுதலை முன் நிறுத்துவதில் இருக்கிறது.

கிறிஸ்துவின் வளர்ச்சிக்கு அளவாக கிறிஸ்தவன் ஒருபோதும் முழுமையாய் வளர இயலாது; பரிபூரணத்தை ஒருபோதும் அடைய முடியாது, ஆகிலும் இயேசுவைப் பின்பற்றுவோருக்கு அதுதான் இலக்காக இருக்க வேண்டும். ஒரு உயரம் தாண்டும் நபர் தான் சிறப்பாக தாண்டுவதற்கும் மேலாக சற்று உயர்த்தி, அளவுகோலை வைத்து பயிற்சி எடுப்பார், அதே போல்தான் பவுலும் தன்னால் இயன்ற அளவு சிறப்பாகச் செய்ய கிறிஸ்துவினிமித்தம் பிரயாசப்பட்டார் (பிலிப்பியர் 3:12-14).

கிறிஸ்தவனுக்கு முன்மாதிரி இயேசு (1 கொரிந்தியர் 11:1; 1 யோவான் 2:6). ஒரு ஓவியம் தீட்டுவதில், ஒரு ஓவியன் வழக்கமாக ஒரு விளக்கமான உருவத்தை படைக்க முற்படுகிறான். இது அவன் வரையும் உருவத்தின் நிஜத்தை மறுபடியும் மறுபடியும் பார்த்துக் கொண்டே மிகக் கவனமாக வேலை செய்து, ஒரு பூரணப்பட்ட பிம்பத்தை உருவாக்க முயற்சிக்கிறான். கிறிஸ்தவர்களும் இயேசுவின் ஆவிக்குரிய தகுதியாம்சங்களைப்பெற அப்படியே செயல்பட வேண்டும் (எபேசியர் 4:13).

கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிற ஒரு ஜீவன் (3:3)

ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தைப் பெற்றதாக பவுல் சொன்னார், அது அவர்கள் தங்கள் பாவத்துக்காக மரித்த ஆவிக்குரிய மரணத்தை அடையாளப்படுத்தியது, அதன் பலனாக பாவத்திலிருந்து விடுதலை பெற்ற புதிய ஜீவன் உண்டாகிறது (ரோமர் 6:3, 4, 17, 18). ஞானஸ்நான நேரத்தில், பழைய ஜீவன் (வாழ்க்கை) முடிவுக்கு வந்து கிறிஸ்துவினிமித்தம் புதிய ஜீவன் துவக்கம் பெறுகிறது (வசனம் 3அ). குளிக்காமலேயே இருந்து விட்ட ஒரு நபர், பிறகு ஒரு பயன்பாட்டு உதாரணத்தை வைக்கிறான்: சகல அசுத்தமும், அல்லது சகல பாவமும், ஒரு ஆவிக்குரிய குளியலைப் பெறும்போது, கடந்த காலத்தின் காரியங்கள் அனைத்தும் அகற்றப்படுகிறது.

கிறிஸ்தவனுக்குரிய அடைக்கலம் தேவனுக்குள் கிறிஸ்துவுடனே பெறுகிற பாதுகாப்புதான். அவருக்குள் அடைக்கலம் தேடுவோமானால், உலகம் நம்மை கண்டுபிடிக்கவோ வலையில் அகப்படச் செய்யவோ தன் பொல்லாத வழிகளில் கிக்கவைக்க இயலாது. நாம் தேவனுக்குள் கிறிஸ்துவுடனேகூட நிலைத்திருக்கிற வரைக்கும் கேடுபாடான வழிகளுக்கு மறைந்திருக்கிறோம் (வசனம் 3ஆ).

கிறிஸ்து வரும் போது நாம் பெறும் மகிமை (3:4)

இந்த உலகம் கிறிஸ்தவர்களை மகிமைபெற்ற நிலையில் காண்பதில்லை, ஏனெனில் நாம் எதிர்காலத்தில் பெறப்போகிற மகிமையை இன்னும் பெறவில்லை. நாம் உலகத்தின் பார்வையில் மறைந்திருக்கிறோம் என்பது அது நம்மை தேவனுடைய பிள்ளைகளாக உணர்ந்து கொள்வதில்லை என்ற பொருளில் பேசுகிறது (1 யோவான் 3:1). கிறிஸ்து நம்மை மகிமையிலே சேர்த்துக் கொள்ளும்படி மறுபடியும் வரும்போது, அதற்குப் பின்பும் நாம் மறைக்கப்பட்டவர்களாயிராமல் அவரோடே கூட வெளிப்படக் கூடியவர்களாயிருப்போம், அவரது சாயலைத் தரித்துக் கொண்டிருப்போம் (வசனம் 4; பிலிப்பியர் 3:21; 1 யோவான் 3:2).

கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில், ஒரு முழுமையான இலக்கு இந்த அழிவுள்ளதும், தற்காலிகமானதுமான உலகத்தின் முடிவின் போது, மகிமையை அடைவதுதான் (2 கொரிந்தியர் 4:18). "நித்தியமானதும் ஒப்பிடக் கூடாததுமாகிய கனமகிமையைப்" பெறும் போது நமது சகலவித போராட்டங்களும் சோதனைகளும் பிரயோஜனமுள்ளவையாக இருக்கும் (2 கொரிந்தியர் 4:17).

குறிப்புகள்

[1]*மேலும் காண்க ரோமர் 12:1; 1 கொரிந்தியர் 15:58; 2 கொரிந்தியர் 5:17; கலாத்தியர் 5:1; எபேசியர் 4:1; பிலிப்பியர் 4:1.* [2]J. B. Lightfoot, *St. Paul's Epistles to the Colossians and to Philemon,* rev. (London: Macmillan & Co., 1916), 207. [3]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translators Handbook on Paul's Letters to the Colossians and to Philemon*, Helps for Translators (New York: United Bible Societies, 1977), 74. [4]*காண்க நடபடிகள் 2:34; 5:31; 7:55; ரோமர் 8:34; எபேசியர் 1:20; எபிரெயர் 1:3; 8:1; 10:12; 12:2; 1 பேதுரு 3:21, 22.* [5]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 1065. [6]*காண்க மத்தேயு 10:30; மாற்கு 8:17; லூக்கா 6:22, 38; யோவான் 14:1; யாக்கோபு 4:14.* [7]William Hendriksen, *Exposition of Colossians and Philemon,* New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1964), 141. [8]*காண்க யோவான் 11:25; 14:6; 20:31; 2 கொரிந்தியர் 4:10-12; 2 தீமோத்தேயு 1:1.* [9]J. W. McGarvey and Philip Y. Pendleton, *Commentary on Thessalonians, Corinthians, Galatians and Romans* (Cincinnati: Standard Publishing Foundation, n.d.), 20. [10]*மேலும் காண்க மத்தேயு 25:31, 32; 2 கொரிந்தியர் 5:10; வெளிப்படுத்தின விசேஷம் 20:11, 12.*

[11]*மத்தேயு 25:31-46; யோவான் 5:22; நடபடிகள் 10:42; 17:31; 2 கொரிந்தியர் 5:10; 2 தீமோத்தேயு 4:1.*

12

கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவன், 2

(3:5-14)

3:5-14 ன் மேலோட்ட கண்ணோட்டம்

பவுல் 3:5-14ஐத் தொடங்கி ஒரு வரிசையான முக்கிய கருத்துக்களைச் சொல்லி கூடவே "ஆகையால்" (oun) என்பதை பயன்படுத்தி இந்த கட்டளைகளெல்லாம் இதற்கு முந்தின வாக்கியத்தில் பயன்படுத்தப்பட்டதுடன் தொடர்புடையது என்று காட்டினார். கொலோசெயர்கள் கிறிஸ்துவுடனே கூட எழுப்பப்பட்டு, உலக வழிபாடுகளுக்கு மரித்து, கிறிஸ்துவுடனே கூட மகிமையிலே வெளிப்பட எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர்; "ஆகையால்," அதற்கேற்றாற் போல் வாழ வேண்டியவர்களாயிருந்தனர். அவர்கள் புதிய ஜனங்களானதால், புதிய ஜனங்களாக வாழ வேண்டியவர்களாயிருந்தனர். அவர்கள் புதியவர்கள் ஆனாலும் பூரணப்படாதவர்களாயிருந்தனர், எனவே அவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாக இருந்தது. பவுல் தனிப்பட்ட ரீதியில் இது உண்மையானது என்று உணர்ந்திருந்தார்; கிறிஸ்துவுக்கு பல ஆண்டுகளாக ஊழியக்காரனாயிருந்த பின்பும், இன்னும் உயர்ந்த எல்லையைத் தொட வேண்டும் என்று கிறிஸ்தவ வளர்ச்சிக்கு வகை தேடினார் (பிலிப்பியர் 3:13, 14).

சரீர இச்சைகளை மரிக்கச் செய்ய வேண்டியதிருந்தது. இப்படியாக அவைகள் இனியும் இந்தக் கிறிஸ்தவர்களை கட்டுப்படுத்த அனுமதிக்கப்படவில்லை. பவுல் பூமியின் வெறுமையையும் கனியற்ற தன்மையையும் அவர்கள் உணர வேண்டும் என்று விரும்பினார், அதினால் உலகம் எதையும் கொடுப்பதற்கு இல்லை என்று உணர்வடைவர். அவர்கள் பரலோகத்துக்குரிய நிஜத்தை நோக்கி பார்க்கவும் அடையப்போகிறதும் அனுபவிக்கப்போகிறதுமான மகிமையைக் காண வேண்டியதிருந்தது. இப்படிப்பட்ட கண்ணோட்டத்தை அவர்களுடைய மனதில் நாட்டின பின்னதாக, பவுல் பரலோகத்தின் மகிமையை அவர்கள் அடைய ஏதுவான கீழே - பூமிக்குரிய தகுதியாம்ஸங்களை விருத்தி பண்ணவும் கைக்கொள்ளவும் தவிர்க்க வேண்டியவைகளைத் தவிர்க்கவும் வேண்டியவைகளை முன் வைத்தார்.

கொலோசெயர்கள் எதிர்மறைக் காரியங்களை களைந்து போட வேண்டியவர்களாயிருந்தனர் (வசனங்கள் 5-11). ஆவிக்குரிய காரியங்களை தரித்துக் கொள்ளவும் (வசனங்கள் 12-14) வேண்டியவர்களாயிருந்தனர். எதிர்மறைக் காரியங்களின் பட்டியல் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டது. இதில் முதலாவதாக சரீர இச்சைகள் உட்படுத்தப்படுகின்றன, அவைகள் விசேஷமாக புறஜாதிகளால் மனம்போன

போக்கில் நடப்பிக்கப்பட்டவைகள் (வசனம் 5). தேவ கோபத்தினிமித்தம் அவர்கள் இவைகளை களைந்து போட வேண்டியவர்களாயிருந்தனர் (வசனம் 6). இரண்டாவது பகுதியில் ஏற்புடையதல்லாத குணங்கள் உள்ளடக்கிப் பேசப்படுகிறது (வசனங்கள் 8, 9), அவைகள் பவுலின் வாசகர்கள் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டியவை, ஏனெனில் அவர்கள் தங்களுடைய பழைய மனுஷனைக் களைந்து போட்டு புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருந்தனர் (வசனங்கள் 9, 10).

பிற நிருபங்களில் பவுல் இதற்கு ஒப்பான பட்டியல்களை கொடுத்துள்ளார். இந்தப் பட்டியல்களில் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதை தடை செய்யும் பாவங்களை வரிசைப்படுத்துகிறார்; ஒழுங்கீனம் (வேசித்தனம்), அசுத்தம், இச்சித்தல் (பொருளாசை), மற்றும் விக்கிரகாராதனை (கலாத்தியர் 5:19; 1 கொரிந்தியர் 6:9). கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட சில காரியங்களில் ஈடுபட்டு, விபசாரம், பொருளாசை, (இச்சைகள்) விக்கிரகாராதனை உட்பட்ட காரியங்களில் துணைபோகும் கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகளோடு கலந்திருக்கக் கூடாது என்று போதிக்கப்பட்டார்கள் (1 கொரிந்தியர் 5:11).

3:5-14ல் பவுல் தான் விரும்பியவைகளை கொலோசெயர்கள் முற்றிலுமாக சாதித்துக் காட்ட ஏதுவான நிறைவுள்ள உறுதியான செயலைச் செய்யும்படி பவுல் மூன்று வினைச்சொற்களை வைத்து கேட்டுக் கொள்கிறார். முதலாவதாக, அவர்கள் குறிப்பிட்ட சில பாவச் செயல்களை "மரித்தவைகளாக ... எண்ணும்படி" சொல்லப்பட்டார்கள் (வசனங்கள் 5-7). இரண்டாவதாக, அவர்கள் குறிப்பிட்ட சில தீய ஒழுக்கங்களை "களைந்து போட வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார் (வசனங்கள் 8, 9). மூன்றாவதாக, குறிப்பிட்ட சில நல்லொழுக்கங்களை "தரித்துக் கொள்ள" (வசனங்கள் 10-14) - முழுமையாய் தங்கள் மீது போட்டுக் கொள்ளச் சொல்லப்பட்டார்கள்.

அவர்களுடைய கடந்த கால ஒழுங்கீனக்காரியங்களை அழிக்க வேண்டியவர்கள் (3:5-7)

***5**ஆகையால், விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையாகிய பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். **6**இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வரும். **7**நீங்களும் முற்காலத்திலே அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்து கொண்டு வந்தீர்கள்.*

"ஆகையால், விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை" (3:5அ)

பவுலின் முதல் பட்டியலில் ஒழுங்கீனமான பாவங்கள் பட்டியலிடப்படுகிறது (வசனம் 5அ). இரண்டாம் பட்டியலில் நடத்தை மற்றும் சுபாவம் பண்புகள் குறித்த பாவங்கள் பெயரிடப்படுகிறது (வசனங்கள் 8, 9). இந்த தீயக் குணங்களை களைந்து போடுவதாலும், கிறிஸ்தவ ஒழுக்கங்களைத் தரித்துக் கொள்வதாலும் (வசனங்கள் 12-14)

கொலோசெயர்கள் ஞானஸ்நானத்தினால் அடைந்திருந்த புதிய ஜீவனுக்குரிய குணாதிசயங்களில் வளர்ச்சியடைவார்கள். முதல் பட்டியலில் இடம் பெற்ற தீய ஒழுக்கங்கள் தேவனுடைய கோபாக்கினையையும் ஆக்கினைத்தீர்ப்பையும் பெற ஏதுவானவை (ரோமர் 1:29-31; 1 கொரிந்தியர் 6:9, 10; கலாத்தியர் 5:21; எபேசியர் 5:5). இப்படிப்பட்ட தீயபழக்கங்களை கொலோசெயிலும் பிற இடங்களிலும் இருந்த கிறிஸ்தவர்கள் தங்களுடைய கடந்த கால அஞ்ஞான நம்பிக்கை காலத்தின் போது மனம் போன போக்கில் கைக் கொண்டிருந்தார்கள்.

அவர் முதலில் குறிப்பிட்ட செயல் **விபச்சாரம்**, இதற்கு *porneia* என்பதை பயன்படுத்தினார், இந்த வார்த்தையிலிருந்துதான் "பரத்தையர் பற்றிய இலக்கியம்" (pornography) வந்தது. மற்ற மொழிபெயர்ப்புகளில் fornication "வேசித்தனம்" என்று இந்தப்பதம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (KJV; NKJV; NRSV) அல்லது "பாலுறவு ஒழுங்கீனங்கள்" (NIV; TNIV). "பாலுணர்வு ஒழுங்கீனங்கள், அல்லது "மாறுபட்ட பாலுணர்வு," என்பதே "விபச்சாரம்" என்பதைக் காட்டிலும் சிறப்பான மொழிபெயர்ப்பாக இருக்கக் கூடும், இது மிக விசாலமான பொருளையுடையதாக இருக்கக் கூடும். *Porneia* என்பது ஒரு முறையற்ற பாலுறவை மட்டும் குறிப்பது; ஆனால் இது விபச்சாரத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட வார்த்தையல்ல, இந்த உறவு மணம் செய்து கொள்ளாத இருவர்களுக்கிடையே இடம்பெறும் உடலுறவு. மாறாக, பவுல் இங்கே பயன்படுத்தியுள்ள வார்த்தை சட்டத்திற்குப் புறம்பான பாலுறவு செயல்களாகக் காணும் அனைத்தையும் உட்படுத்திய வார்த்தை, அவை ஓரினச்சேர்க்கை, பெண்புணர்ச்சி, மிருகத்தனமான புணர்ச்சி, விபச்சாரம், வேசித்தனம், மணமாகாதவர்களுக்கிடையேயான பாலுறவு செயல் போன்றவை. புதிய ஏற்பாட்டின் பிற இடங்களில் பலதரப்பட்ட வார்த்தைகள் இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன, எல்லா இடங்களிலும் அப்படிப்பட்ட செயல்கள் கண்டிக்கப்படவே செய்கிறது.[1] யோவான் இதை வெளிப்படுத்தின விசேஷத்தில் உருவகமாக, இறைவெளிப்பாடாக பாபிலோனின் தீய ஒழுக்கங்களும் அதன் விபரங்களுமாக, குறிப்பிடுகிறார். (வெளிப்படுத்தின விசேஷம் 14:8; 17:2, 4; 18:3; 19:2).

கிரேக்கப் பெயர்ச்சொல் *moicheia* ("விபச்சாரம்"[2]) மற்றும் வினைச் சொல்லான *moicheuō* ("விபச்சாரம் செய்தல்"[3]) ஆகிய இரண்டையும் *porneia* எனும் "பாலுணர்வு ஒழுங்கீனத்துடன் குழப்பிக் கொள்ளக் கூடாது" இந்த செயல் திருமணமான ஒருவருக்கும் திருமணமாகாத ஒருவருக்குமிடையேயான உடலுறவையோ அல்லது திருமணமான ஒருவர் இன்னொருவருடைய (மனைவி அல்லது கணவன் ஆகிய) வாழ்க்கை துணைவராக இல்லாத ஒருவருடன் கொள்ளும் உடலுறவையோ குறிக்கப்பயன்படுத்தும் வார்த்தை. *Porneia* என்பது ஒரு விசாலமான பதத்திலிருந்து *moicheia* மற்றும் *moicheuō* ஆகிய இரண்டையும் உட்படுத்தின பதமாகும்.

பவுல் கொரிந்தியர்களுக்கு கற்பித்து *porneia* தொடர்புடையோருடன் கலந்திருக்க வேண்டாம் என்று சொன்னார் (1 கொரிந்தியர் 5:11). அவர் எச்சரிக்கை செய்து அவர்களிடம் "வேசிமார்க்கத்தாரும்" "தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை" என்று சொன்னார் (1 கொரிந்தியர் 6:9, 10). மேலும் அவர்களுக்கு அறிவுறுத்தி, "வேசித்தனத்துக்கு [பாலுணர்வு

ஒழுங்கீனங்களுக்கு] விலகியோடுங்கள்” என்று சொன்னார் (1 கொரிந்தியர் 6:18). கலாத்தியர் 5:19-21ல் மாம்சத்தின் கிரியைகளில் விபச்சாரத்தை அவர் முதலாவதாகக் குறிப்பிட்டார்.

பாலுணர்வு ஆசைகள் இனி கிறிஸ்தவர்களுக்குள் நிலைத்திருப்பதில்லை என்று போதிப்பதற்குப் பதிலாக, பவுல் இந்த ஆசைகளெல்லாம் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று போதித்தார். வேசித்தனத்தைத் தவிர்க்க, தங்களுடைய பாலுணர்வு ஆசைகளை கட்டுப்படுத்துவதிலிருந்து விலகியிருக்க ஏதுவாக ஒருவர் திருமணம் செய்து கொண்டு தேவன் வகுத்த எல்லைக்குள் பாலுறவை தாராளமாக அனுபவிக்கலாம் (1 கொரிந்தியர் 7:1-5).

பாலுறவு முரண்பாடு அடுத்து வரும் இரண்டு வார்த்தைகளில் அடங்கக் கூடும், **அசுத்தம்**, மற்றும் **மோகம்**. “அசுத்தம்” (*akatharsia*) சுத்தமற்ற ஏதோ ஒன்று அருவறுப்பான, குப்பையாக என்ற அர்த்தத்தில், சரீரக் கழிவு அல்லது கல்லறைக்குள் இருக்கும் நிலையை ஒத்த வார்த்தை (மத்தேயு 23:27). ஒழுக்க சம்பந்தப்பட்ட இழிவுத்தன்மை மற்றும் அசுத்தம் ஆகியவற்றுக்கு பயன்படுத்தும் போது, அது பெரும்பாலும் *போர்னியாவுடன்* சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். கலாத்தியர் 5:19ல் அது மாம்சத்தின் கிரியை என்று அழைக்கப்படுகிறது (காண்க 2 கொரிந்தியர் 12:21; எபேசியர் 5:3). இந்த வார்த்தை சுபாவப்படியல்லாத ஒழுங்கீனமான அனுபவத்தைக் குறிப்பிடுவது (ரோமர் 1:24), இதற்கு முரணானது பரிசுத்தமும் (“பரிசுத்தம்”; 1 தெசலோனிக்கேயர் 4:7) நீதியும் (ரோமர் 6:19).

“கட்டுக்கடங்கா உணர்ச்சி” (*pathos*) என்பது ஒருவரை அடிமையாக்கிவிடும் தன்மையைக் கொடுத்து கட்டுப்படுத்த இயலாதவாறு மேலோங்கி நிற்கும். இந்த வார்த்தை 3:5ஆ விலும், ரோமர் 1:26லும் காணப்படுகிறது (“இழிவான இச்சை ரோகங்கள்”) மேலும் 1 தெசலோனிக்கேயர் 4:4ல் (“மோக இச்சை”). பெரும்பாலான வேதாகமம் சாராத பயன்பாடுகளில் “அநுபவிக்கப்படுவது, சகித்துக் கொள்வது, அல்லது பாடுபடுதலைக் குறிக்கும்” (இயேசு சிலுவையிலே பாடுபட்ட காட்சியும் இதற்கு உட்பட்டது). ஸ்தோயிக்கர்கள் இந்தப் பதத்தை உணர்ச்சிகளால் ஆட்கொள்ளப்பட்ட ஒரு நபர் அமைதியாக வாழ இயலாமல் போகும் காட்சிக்கு இதைப் பயன்படுத்தினர். இங்கே இது ஒரு வலிமையான பாலுணர்வு மோகத்துக்கு, தீமையான பாலுணர்வு ஆர்வத்துக்கு, கட்டுப்படுத்த இயலாத பாலுணர்வு ஆசைகளை ஒழுங்கீனமாய் அனுபவித்தலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. “பாலுணர்வு ஒழுங்கீனங்கள்” சரீர செயலையும் உட்படுத்தியது, “மோகமோ” மனதிலே உட்கார்ந்து கொண்டு ஒழுங்கீனமான சரீர (பாலுறவுச்) செயலைச் செய்ய தூண்டிக் கொண்டேயிருக்கும்.

துர்இச்சை என்பது இரண்டு கிரேக்க வார்த்தைகளின், *kakē* (“தீமையான”) மற்றும் *epithumia* (“ஆசை”) ஆகியவைகளின் மொழிபெயர்ப்பு. ஒரு வசனப்பகுதியால் மட்டுமே “ஆசை” என்பது நல்லதா கெட்டதா என தீர்க்கமாக முடிவு எடுக்க உதவும். இந்தக் காரியத்தில், “ஆசை” என்பது “தீமை” என்பதோடு வருவது, பவுல் பாவ ஆசையைக் குறிப்பிட்டார் என்று பொருள்படுத்தும்.

Epithumia என்பதன் அடிப்படைப் பொருள் “ஒருவருடைய இருதயம் ஏதோ ஒன்றில் இருத்தல்,” ஏதோ ஒன்றைச் செய்வதற்காக அல்லது

பெறுவதற்காக வலிமையாக ஏக்கங் கொண்டிருத்தல். அந்த வார்த்தையானது "இச்சித்தலைக்" குறிக்கிற தவறான அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது, அது பத்துக்கட்டளைகளில் தடை செய்யப்பட்டுள்ளவைகளில் ஒன்று (காண்க ரோமர் 7:7; 13:9), தவறான இச்சை (1 கொரிந்தியர் 10:6; கலாத்தியர் 5:17; யாக்கோபு 4:2). பவுல் எபேசியரின் வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் தான் "இச்சிக்கவில்லை" என்று சொன்னார் (நடபடிகள் 20:33). முறையற்ற பாலுணர்வு ஆசைக்கு இயேசு இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார் (மத்தேயு 5:28). விபச்சார எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டிருப்பதே விபச்சாரம் செய்வதற்கு ஒப்பான பாவம் என்று போதித்தார். பாலுறவில் ஈடுபடுவது மட்டுமே பாவம் செய்வதற்கான வழிஅல்ல; ஆசைகளை வளர்த்துக் கொண்டு பாலுறவில் உடல் உறவை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கத்தோடு ஒரு பெண்ணை பார்ப்பதும் பாவமே. அப்படிப்பட்ட ஆசைகளுக்கு மரிக்க வேண்டும் என்று பவுல் போதித்தார்.

மற்றொரு வசனப்பகுதியில் *epithumia* என்பது நல்ல ஆசையையோ அல்லது ஏக்கத்தைக் கொள்வதையோ பொருள்படுத்தலாம்.[4] இதற்கு ஒரு உதாரணம் தான் கண்காணிப்பை விரும்புகிற மனுஷனுடைய விஷயத்தில் சொல்லப்படுகிறது; பவுல் எழுதும்போது அவன் நல்ல வேலையை "விரும்புகிறான்" என்று எழுதினார் (1 தீமோத்தேயு 3:1).

"விக்கிரகாராதனையான பொருளாசை" (3:5இ)

பவுலின் அடுத்த வார்த்தை, *pleonexia,* KJV "இச்சித்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆகிலும் NASB மொழிபெயர்ப்பில் வழக்கமாக பொருளாசை என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[5] KJV மொழிபெயர்ப்பிலும் NASB மொழிபெயர்ப்பிலும் ஒரே அடிப்படை வார்த்தையாகிய *pleonektēs* என்பது "இச்சித்தல்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 5:10, 11; 6:10; எபேசியர் 5:5). அது ஒரு தேவைக்கு மேலாக அல்லது எதிர்பார்க்கப்பட வேண்டியதற்கும் மேலாக, ஆசைவைத்தல் என்ற பொருளில் பொருளாசை கொள்ளுதல் இச்சித்தல் ஆகியன. பாலுணர்வு பாவங்களை மட்டும் குறிப்பதாக இந்த வார்த்தை பொருள் படவில்லை என்பதை உறுதிப்படுத்தும்படி, பவுல் தொடர்ந்து, "விக்கிரகாராதனையாகிய" என்பதையும் கூட்டி எழுதுகிறார். இயேசு தம்முடைய சீஷர்களிடம் "(எல்லாவகையான) பொருளாசையைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்" என்று சொன்னார் (லூக்கா 12:15அ).

ஒன்றை அடைய வேண்டும் என்ற பேராவல், சொந்தம் பண்ணிக் கொள்ளவோ, பயன்படுத்திக்கொள்ளவோ, அல்லது ஒன்றை அனுபவித்துவிட வேண்டும் என்ற வேட்கை விக்கிரகாராதனையாகிறது. ஒருவர் மிகத் தீவிரமாக தனது இச்சையைத் தீர்த்துக் கொள்ள ஆதாரம் தேடுவது அதுவே ஆராதிக்கப்படுவதாகிறது. இந்தப் பேராசை பாலுணர்வில் ஈடுபட விரும்புதலையோ அல்லது வேறு ஏதோ ஒரு ஆசை தேவனுக்குரிய சேவை மற்றும் ஒப்புக் கொடுத்தலின் இடத்தைப் பிடித்துக் கொள்ளுதலையே குறிப்பிடுமாகில் அது விக்கிரகாராதனையாகிறது. பண ஆசை இதற்கு ஒரு உதாரணம்: அது பொருளாசையை அடிப்படையாகக் கொண்டதும் "எல்லா தீமைக்கும்" வேரான தென்றும் காணுகிறோம் (1 தீமோத்தேயு 6:10).

பவுல் தனது சுவிசேஷப் பிரசங்கத்தின் உள்நோக்கம் பொருளாசையோ மாயம் பண்ணுதலோ செய்து ஐசுவரிய சம்பன்னனாவது அல்ல என்று எழுதினார் (1 தெசலோனிக்கேயர் 2:4, 5). கொரிந்துவிலே, சிலர் பொருளாசை கொண்டு, "peddling the word of God" *என்றுள்ளது (2 கொரிந்தியர் 2:17;* NASB*).*

விக்கிரகாராதனை *இஸ்ரவேலரின் தொழுகையில் ஒரு வாதையாக தொடர்ந்து நுழைந்து கொண்டிருந்தது. தேவன் கடுமையாக அதைக் கண்டனம் பண்ணினார், மேலும் தொடர்ந்து தீர்க்கதரிசிகளை அனுப்பி அதற்கு எதிராக எச்சரித்தார். தாவீது அநேகமாக தேவனுடைய எச்சரிப்புகளை பிரதிபலிக்கும் பொருட்டு வலிமையான வார்த்தைகளால் விக்கிரகாராதனைக்காரர்களுக்குக் கொடுத்தார்: "வீண் மாயைகளைப் (விக்கிரகங்களை) பற்றிக் கொள்ளுகிறவர்களை" வெறுக்கிறேன் (சங்கீதம் 31:6அ). இஸ்ரவேலர்கள் விக்கிரகாராதனை செய்கிற காரியத்தைக் குறித்து, "உங்களுக்குப் பாவமாக உங்கள் கைகள் செய்திருந்த வெள்ளி விக்கிரகங்களையும், பொன் விக்கிரகங்களையும், உங்களில் ஒவ்வொருவரும் அக்காலத்திலே வெறுத்து விடுவீர்கள்" என்று ஏசாயா எழுதினார் (ஏசாயா 31:7). மேலும் அவர் குறிப்பிடுகையில், "சித்திர வேலையான விக்கிரகங்களை நம்பி, வார்ப்பிக்கப்பட்ட சுரூபங்களை நோக்கி: நீங்கள் எங்கள் தேவர்கள் என்று சொல்லுகிறவர்கள் பின்னடைந்து மிகவும் வெட்கப்படுவார்கள்" (ஏசாயா 42:17; காண்க எரேமியா 10:14). எசேக்கியேல் மூலமாக, ஆராதிக்கப்பட்ட இந்தப் பொருட்கள் "சீயென்றிகழப்படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்க விக்கிரகங்கள்" என்று தேவன் சொன்னார் (எசேக்கியேல் 5:11).*

தேவன் பத்துக் கட்டளைகளில் இஸ்ரவேலர்கள் விக்கிரக வணக்கம் செய்தல் கூடாது என்று தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார் (யாத்திராகமம் 20:3-5; உபாகமம் 5:7-9). அதே போல கிறிஸ்தவர்களும் விக்கிரகங்களுக்கு சேவை செய்தலைக் குறித்து எச்சரித்தார் (காண்க நடபடிகள் 15:20). தங்களுடைய வாழ்க்கையின் பிரதானமான இலக்கு ஆஸ்திகளை சேர்க்க வேண்டுமென்று இருப்பவர்கள் தாங்கள் தேவனுக்கு பணிவிடை செய்வதைக் காட்டிலும், ஆஸ்திகளையே தங்கள் தேவர்களாக்குகிறார்கள், அதுவே அவர்களுடைய தேவர்களாகின்றன. ஆதிசபையானது "... விக்கிரகங்களுக்கு விலகியிருக்கும்படியும்" (நடபடிகள் 15:29அ) விக்கிரகங்களை வணங்குவதைத் தவிர்க்கும்படியும் போதிக்கப்பட்டிருந்தது (காண்க 1 கொரிந்தியர் 10:14; கலாத்தியர் 5:20, 21; 1 யோவான் 5:21).

தங்களுடைய தொழுகையிலே உருவங்களையும், சுரூபங்களையும் பயன்படுத்துகிறவர்கள் விக்கிரகங்களுக்கு எதிரான தேவனுடைய கட்டளையை மீறுவதாகும். தேவன் மோசேயினிடத்தில் காரணமாகத்தான் எந்த ஒரு சரீரப்பிரகாரமான தோற்றத்திலுள்ளவைகள் வானத்திலுள்ளவைகளுக்கு ஒப்பாக இருந்தாலும் பூமியிலுள்ளவைகளுக்கு ஒப்பாக இருந்தாலும் நமஸ்கரிக்க வேண்டாம் என்றார்: "கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசின நாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை" (உபாகமம் 4:15ஆ). ஏனெனில் தேவன் அதரிசனமானவர் (கொலோசெயர் 1:15; 1 தீமோத்தேயு 6:16), எனவே அவர் ஒரு அதரிசனமானவர் என்ற வகையில் மட்டுமே தொழுது கொள்ளப்பட வேண்டும். ஆவி என்ற வகையில் அவர் ஆவியோடும் உண்மையோடும்

தொழுது கொள்ளப்பட வேண்டும் (யோவான் 4:23, 24). மனுஷன் செய்கிற எதுவுமே தேவனை வெளிப்படுத்த சரியான ஒன்றாக இருக்க இயலாது, மேலும் அவரைத் தொழுது கொள்ள சரியான தோற்றத்தை கொடுக்க இயலாது அவரைத் தொழுது கொள்ள மனிதன் செய்கிற எதுவும் உபயோகப்படுத்தப்படக்கூடாது.

"ஆகிய இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்" (3:5ஆ)

*அவர்கள் **பூமிக்குரிய சரீரத்தின் அவயங்களை செத்துப் போனதாக நினைத்துக் கொள்ள வேண்டியவர்களாயிருந்தார்கள்** (3:5). நல்ல செயல்களும் அதே போல கெட்ட செயல்களும் சரீரத்தின் "அவயவங்கள்" மூலமே (melē) நடப்பிக்கப்படுகின்றன. கைகள் திருடக்கூடும் அல்லது நல்லது செய்யக்கூடும், கால் ஒருவரை தீமை செய்யும்படி ஒரு இடத்திற்கு கூட்டிக் கொண்டு போகலாம் அல்லது தேவனை தொழுகை செய்யும்படி கூட்டிக் கொண்டு போகலாம், கண்கள் சோதனைக்குட்படுத்தும் வாசகங்களை வாசிக்கவோ அல்லது தேவனுடைய வசனத்தின் மீது கவனத்தைத் திருப்பவோ செய்யலாம், நாவுகள் தீமையானவைகளைப் பேசலாம் அல்லது மற்றவர்களுக்கு உதவத்தக்க வார்த்தைகளைச் சொல்லி ஊக்கப்படுத்தலாம். காதுகள் வன்முறையான பேச்சுக்களைக் கேட்கலாம் அல்லது நல்வார்த்தைகளைக் கேட்கலாம் மற்றும் மூளையானது பாவகாரியங்களைச் சிந்திக்கலாம் அல்லது பரிசுத்தமான சிந்தனைகளைக் கொண்டிருக்கலாம், இந்த இடத்தில், பவுல் பொதுப்படையாக அவயங்களை தீமையான காரியங்களுக்குப் பயன்படுத்துவதையே குறிப்பிட்டார். தீமையான காரியங்களுக்கான மரணம் கிறிஸ்தவர்கள் அது உண்மையென்று கருதினால் மட்டுமே அது உண்மையானதாயிருக்கும். "அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" (ரோமர் 6:11).*

"மரித்தவர்களாக … எண்ணிக்கொள்ளுங்கள்" (nekrōsate), இந்த வசனத்தில் இது ஒரு முக்கியத்துவம் ஆனது, கிரேக்க மொழியில் மிக பலமான ஒரு சொல், நேரடிப் பொருளில் "மரிக்கச் செய்தல்." பவுலின் வழிகாட்டல் என்னவெனில் அவர்கள் தங்கள் பாவசரீரத்தின் செய்கைகளை ஞானஸ்நானத்தின் போதே முடிவுற்றிருக்க வேண்டிய நிலையில் முழுமையாய் கொல்லப்பட்டிருக்க வேண்டும் (6:1-6). அவர்கள் தங்கள் முந்தின வாழ்வுமுறைகளுக்கு ஞானஸ்நானத்தின் போது மரித்திருந்த போதிலும், அவர்களுடைய வாழ்க்கையிலிருந்த தீமையான எண்ணங்களெல்லாம் மரித்துப் போனதாகப் பொருளல்ல, ஏனெனில் இவைகள் ஆபத்துக்குரிய விதத்தில் அவர்களுடைய வாழ்க்கையிலே மீண்டும் கிரியை செய்யத் தூண்டக்கூடும், எனவே "சாக வேண்டுமெனில்" முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும்.

எட்வார்ட் லோஷ்சி எழுதினதாவது, "அழித்துப் போடுங்கள்." அதன் பொருள்: 'பழைய மனுஷன், அவன் மரித்தே இருக்கட்டும் ஏற்கனவே ஞானஸ்நானத்திலே, மரித்திருக்கிறான். "அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய

இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்.' "[6] மேலும் அவர் விளக்கமளித்து, "ஞானஸ்நானத்தில் பெற்ற கிறிஸ்துவுடனே கூட மரித்தல் என்பது, 'பூமிக்குரிய அவயங்களை' மரிக்கச் செய்வதால் அழித்துப் போடுதல் இப்போது சரியானதாக இருக்கும்" என்றார்.[7]

பவுல் இந்தக் கிறிஸ்தவர்களுக்கு அறைகூவலாக கடந்த காலத்துக்கு மரித்து நிகழ்காலத்துக்கு வாழும்படி அறிவுறுத்துகிறார். அழித்துப் போடுதல் (மரித்தல்) என்பதை அவர் நேரடிப் பொருளில் சொல்லவில்லை; மாறாக, அதை உருவக மொழியில் வாழுகிற மாதிரியை விட்டு விடும்படியாக, உலகத்தால் மாசுபடாதபடிக்கு அவைகளிலிருந்து முழுமையாக விலகியிருக்க வேண்டியதைக் குறிப்பிட்டார். சரீர ஆசைகளை தவறாக பயன்படுத்துவதால் பாவங்கள் வருகிறது - அவை பாலுணர்வு சம்பந்தப்பட்டவை, பசி, சரீர அமைதி போன்றவை - அவை தேவன் கொடுத்துள்ள வரையறைக்கு உட்பட்டதாயிருந்தால், நல்லது. கொலோசெயர்கள் இந்த சரீரமோகங்களை முறையாக வழிநடத்திக் கொள்ள வேண்டியவர்கள், அதினால் அவைகளைக் கட்டுப்படுத்தி தேவனுக்கென்று பயன்படுத்த வேண்டும். சரீரம், தன்னில் தானே, தீமையானது அல்ல; ஆனால் அது பாவமுள்ள செயல்கள் இடம் பெற ஏதுவாக அது ஒரு வழிப்பாதை. அது மூலமாகத்தான் இருதயம் நற்கிரியைகளை வெளிப்படுத்துகிற ஒரு கருவியாக இருக்கிறது. நல்லதும் கெட்டதும் ஒரு நபருடைய ஜீவியத்தில் உருவாகும் மூலஸ்தலம் அவரே (மத்தேயு 15:19, 20). உண்மையான நபர் உள்ளான மனுஷன்.

சரீரத்தின் அவயவங்கள் தீய நோக்கங்களுக்காக மரித்திருந்தால், அதன் விளைவு புதிய பயன்பாடாகவும் அவைகளுக்கென ஒரு நோக்கம் உடையதாகவும் இருக்கக் கூடும். "உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் ... இதுவே தேவனுக்குப் பிரியமானது" (ரோமர் 12:1); "மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மை சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோட பூரணப்படுத்தக்கடவோம்" (2 கொரிந்தியர் 7:1). பாவ சரீரம், மாம்ச சரீரமல்ல, அது ஒழிந்து போக வேண்டும் (ரோமர் 6:6). அதன் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாக பயன்படுத்துவதற்குப் பதிலாக, கொலோசெயர்கள் அவைகளை, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவர்களாக, நீதியின் ஆயுதங்ககளாகப் பயன்படுத்த வேண்டும் (ரோமர் 6:13). அவயவங்கள் அசுத்தத்திற்கும் அக்கிரமத்துக்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுக்கப்படாமல் நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் (ரோமர் 6:19ஆ).

உலகத்தார்கள், ஒரு குறிப்பிட்ட அளவு, பலதரப்பட்ட தீயக் குணங்களை தங்களுடைய வாழ்க்கையிலிருந்து ஒருவேளை அகற்றவோ அல்லது புதிய ஜீவனை அடையும் பொழுது அவர்கள் பவுல் பரிந்துரைக்கும் சில நல்லொழுக்கங்களைப் பெருக்கிக்கொள்ளவோ செய்யலாம், எப்படியிருப்பினும், கிறிஸ்தவர்களாகிய நமக்கு உலகத்தாருக்கு இல்லாத ஒரு சிநேகிதர் இருக்கிறார் (யோவான் 14:17அ), நம்முடைய வாழ்க்கையில் நாம் பரிபூரணமான பரிசுத்தத்தை அடைய நாம் தேடும் போது அவர் நம்மை பெலப்படுத்துகிறார் (எபேசியர் 3:16; 2 கொரிந்தியர் 7:1ஆ).

உலகம் சுயநீதிக்கென அப்படிப்பட்ட மாற்றங்களைப் பெற வகைதேடக் கூடும், ஆகிலும் கிறிஸ்தவர்களாகிய நாமோ கிறிஸ்துவை மகிமைப் படுத்தவும் பிரியப்படுத்தவும் நாம் மாற்றங்களைச் செய்கிறோம். இப்படிச் செய்வதால், அருவெறுக்கத்தக்க ஒழுங்கீனத்தில் கெட்டுப்போய் துர்வாடை வீசும் இந்த சமுதாயத்திற்கு எதிரான நற்கிரியைகளைச் செய்யக் கூடும். 2 கொரிந்தியர் 2:15, 16ல் பவுல், "இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்கு நற்கந்தமாயிருக்கிறோம், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும் இருக்கிறோம்."

"இவைகளின் பொருட்டே ... தேவகோபாக்கினை" (3:6அ)

கோபாக்கினை என்பது கிரேக்க வார்த்தையான *orgē*, என்ற சொல்லிலிருந்து வந்தது, இது "கோபம்" என்றும் மொழிபெயர்க்கப்படலாம். (காண்க 3:8ஆ வில் வரும் விவாதம்.) தேவனுடைய கோபம்தான் பழைய ஏற்பாட்டு புஸ்தகங்களினூடே சொல்லப்பட்ட பெரிதான மையக்கருத்து.[8] இது "தேவ கோபாக்கினை"[9] என்பதும் உண்மையாகும். புதிய ஏற்பாடும் கோபத்தின் தன்மையையும் தேவ கோபாக்கினையையும் தேவனுடைய பண்பாகப் பேசுகிறது.[10] கோபாக்கினை என்பது தேவனுடைய குணாதிசயத்துக்குரியது, அதை யாரும் மறுக்க முடியாது, அப்படித்தான் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் சொல்லப்பட்டுள்ளது. (காண்க "மேலும் கற்றுக்கொள்ள: 'தேவக்கோபாக்கினை' [3:6]").

தொடர்ந்து தேவனுடைய அன்பு, இரக்கம், மற்றும் தயவு ஆகியவைகளையே பார்த்தவர்களில் சிலர் அவருடைய கோபத்தையும் கோபாக்கினையையும் காண இயலாதவர்களாக்கப்பட்டுள்ளனர். மறையியல் ஞானிகள் என்போரின் கூற்றுப்படி பழைய ஏற்பாட்டுத் தேவன், கோபாக்கினை செலுத்தும் தேவனாக இருந்தார், அவர் புதிய ஏற்பாடு கூறும் அன்பின் தேவனைப் போன்றவரல்ல என்று போதித்தனர், நியாயப்பிரமாணத்துக் கீழ்ப்படியாமற்போனவர்களுக்கு மிகவும் கடுமையான தண்டனையை தேவன் கொடுத்ததால் அச்செயல் பழைய ஏற்பாட்டின் தேவன் புதிய ஏற்பாட்டிலிருந்து வித்தியாசப்பட்டவர் என்பதற்கான ஆதாரமாகப் பார்த்தனர்.

இப்படிப்பட்ட முடிவுகளால் இயேசுவின் கோபத்தை அறியாமலிருக்கின்றனர் (மாற்கு 3:5) மேலும் அனனியா சப்பீராள் மீது தேவன் செலுத்தின தண்டனையையும் (நடபடிகள் 5:1-10), ஏரோதின் மீதும் (நடபடிகள் 12:21-23), மற்றும் எலிமா மீதும் செலுத்தின ஆக்கினையையும் அறியாதிருக்கிறார்கள் (நடபடிகள் 13:6-11). அக்கிரமஞ் செய்வோர் மீது செலுத்தப்படும் தண்டனைகளும் கணக்கில் கொள்ளப்பட வில்லை (ரோமர் 2:6-11). இயேசுவும் பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு தேவனும் தங்கள் தன்மையிலே ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள். இயேசு கீழ்ப்படியாதவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும்படி வருவார் (2 தெசலோனிக்கேயர் 1:7-9).

தேவனுடைய கோபாக்கினையின் கடும் தீவிரம் இஸ்ரவேல் மீது காட்டப்பட்டது கிறிஸ்தவயுகத்தில் வாழ்வோருக்கு ஒரு எச்சரிப்பாகவும் உறுதியளிப்பதாகவும் கொடுக்கப்பட்டுள்ளது அவருக்குக் கீழ்ப்படியாதவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதற்குச் சான்று (எபிரெயர் 10:28, 29). இஸ்ரவேலுக்கு எதிரான அவருடைய செயல்கள் எல்லா ஜனத்தாரிலும் அவருக்கு மதிப்பளிக்காமலும் அவருடைய சித்தத்திற்கு பொறுப்பேற்காமலும் போகிறவர்களுக்கு அவர் அளிக்கும் தீர்ப்பு எப்படியிருக்கும் என்பதற்கு ஒரு உதாரணம். "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" (1 கொரிந்தியர் 10:11); "விரோதமான எந்த செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரும்" (எபிரெயர் 2:2ஆ).

தேவனுடைய கோபாக்கினையும் கோபமும் பகுத்தறிவற்ற பிரதிபலிப்பால் உண்டாகும் பிரியமற்ற காரியங்களுடன் ஒப்பிடப்படக்கூடாது. சில விளக்கவுரையாளர்கள் இந்த வார்த்தைகளை தவிர்த்து தேவனைக் குறிப்பிடுகையில் "தேவனுடைய திடீர் சங்காரம்," மற்றும் "தேவனுடைய பயங்கரமான தண்டனை," "தேவனுடைய தீர்ப்பு," "நடுங்கச் செய்யும் தண்டனை" என்றெல்லாம் பயன்படுத்துகின்றனர். இந்த வாக்கியங்களெல்லாம் உண்மையானவைதான் என்றாலும் பொல்லாங்கு நிறைந்த மனிதர்கள் முன்பு தேவனுடைய மனது அடையாளம் காட்டப்படுவதில்லை.

ஆச்சரியமாகக் காணப்பட்டாலும், கோபாக்கினை என்பது அன்பின் விளைவாக இருக்க முடியும். தன் மனைவியை அதிகமாய் அன்புகூரும் ஒரு மனிதன், தான் மனைவி அவனை விட்டு விட்டு வேறொரு மனுஷனோடு போய் விடுவாளானால் அவன் கோபம் கொப்பளிக்கக் காணப்படுவான். அவன் அவளிடத்தில் அன்பில்லாதவனாக இருந்திருந்தால் அவள் அவனை விட்டுப் போன சம்பவம் அவனைக் கோபப்படுத்தியிருக்காது. தேவன் தமது அன்பினாலே, தம்மை விட்டு விலகி பிசாசானவனை பின்பற்றிப்போகிறவன் மேல் தமது கோபாக்கினையைச் செலுத்துகிறார் (1 யோவான் 3:8), பவுல் பட்டியலிட்டபடி பாவத்தின் செய்கையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு அந்தக் கோபாக்கினை வரும்.

"கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் வரும்" (3:6ஆ)

தேவனுடைய கோபாக்கினை (**வரும்**) என்பதை பவுல் உறுதிப்படுத்த வினைச்சொல்லாகிய *erchomai* எனும் பதத்தைப் பயன்படுத்தினார். வசனம் 6லும் எபேசியர் 5:6லும் *erchomai* எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பது (நிகழ்) காலத்தில் (அது எதிர்கால நிகழ்ச்சி போல் குறிப்பிடப்பட்டிருந்தாலும்), சில வல்லுனர்கள் கீழ்ப்படியாதவர்கள் மேல் தேவனுடைய கோபம் இப்போது இருக்கிறது என்று பவுல் அர்த்தப்படுத்தினார் என்று முடிவு செய்கின்றனர். William Hendriksen விளக்கமளித்து, "சில வேளைகளில் இது நிகழ்காலத்தில் பேசும் தீர்க்க தரிசனம் என்பர் (ஒப்பீடுக யோவான் 4:21; 14:3) தேவனுடைய கோபாக்கினை வரும் எனும் வார்த்தை, அப்படிப்பட்ட பாவங்களை செய்வோரை அவர் விசாரிப்பார், என்பது உறுதி என்று காட்டும் பொருட்டு ஏற்கனவே வந்து விட்டது போல் பேசப்படுகிறது என்றார்."[11]

தேவனுடைய கோபாக்கினையின் தண்டனை எதிர்காலத்தில் நிறைவேற்றப்பட்ட திருப்தியை நிகழ்கால நிஜமாக பாவிக்கப்படுகிறது (1 தெசலோனிக்கேயர் 1:10). "குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (யோவான் 3:36ஆ).

கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் *எனும் சொற்றொடர் மூலபாஷையில் இருக்கும் வார்த்தையா இல்லையா என்பது குறித்து வல்லுனர்கள் கேள்வி எழுப்புகின்றனர். அதன் கிரேக்க புதிய ஏற்பாட்டின் சேர்க்கையைக் குறித்து ஐக்கிய திருமறைச் சங்கத்தால் வெளியிடப்பட்டதில்* Bruce Metzger *சொன்னதாவது, "... கமிட்டியின் பெரும்பான்மையோர் வசனங்களில் அந்த வார்த்தைகளை வைத்துக் கொள்ளவும் ஆனால் கொலோசெயரின் உண்மைத் தன்மைபற்றிய சில சந்தேகத்தினால் அவைகளை சதுர அடைப்புக் குறிக்குள் சேர்த்து கொள்ளவும் தீர்மானித்தனர்."*[12]

இந்த சொற்றொடரின் வேறுபாடுகள் எண்ணிறைந்த மொழிபெயர்ப்புகளில் காணப்படுகிறது (NASB; KJV; NKJV; TEV). *மற்றவைகளில் அது விடுபட்டு பக்க எல்லைக் கோட்டுக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது* (1977 NASB; ASV; NEB; NIV; TNIV; RSV; NRSV). *பெரிய மூலப் பிரதிகள் (உதாரணமாக, சீனாய்டிகஸ் என்னும் கிரேக்க- சீனாய் திருமறை, மற்றும் எகிப்திலிருந்த அலெக்ஸாந்திரிய திருமறை ஆகியன, மற்றும் அநேக சிறு சிறு பிரதிகள்) இந்த சொற்றொடர் மூலப் பிரதியில் இருந்தது என்பதற்கு இன்னும் அதிக ஆதாரத்தைக் கொடுக்கின்றன. சில வியாக்கியானிகள் "இந்தச் சொற்றொடர் தொடர்ந்து நிலைத்திருக்க அநேக பிரதிகளின் வெற்றி சிறந்த ஆதாரங்கள் காணுகின்றன" என்று சொல்லுகின்றனர்.*[13]

கொலோசெயர் நிருபத்தின் மூலப்பிரதியில் இச்சொற்றொடர் காணுகிறதோ இல்லையோ, எபேசியர் 5:6ல் இது காணுகிறது: "இப்படிப் பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்." இந்தக் காரணத்தால், இதில் வரும் வார்த்தைகள் கீழ்ப்படியாதவர்கள்மேல் வரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்த முகவுரைக்கு ஆதாரம் அளிக்கின்றது.

"கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்" என்றால் இந்தக் கூட்டத்தில் இருப்போர் கீழ்ப்படிதலில்லாத வாழ்க்கையை வாழ்ந்ததின் பயனாக உருவான இயல்பைப் பெற்றவர்கள் என்று பொருள். பவுல் இங்கே கீழ்ப்படிதலில்லாத பெற்றோருக்கு பிறந்தவர்கள் அவர்கள் என்று பொருள்படுத்தி எழுதவில்லை, அல்லது பாவ இயல்புடன் பிறந்ததாகவும் கூறவில்லை. "பிள்ளைகள்" என்பதோ "மகன்" (பிள்ளை) என்பதோ அவர்களுடைய (சுய) குணத்தை வெளிப்படுத்தப் பயன்படுத்திய வார்த்தை, அது "நரகத்தின் மகன்" (மத்தேயு 23:15), "இடிமுழக்க மக்கள்" (மாற்கு 3:17), "ஒளியின் பிள்ளைகள்" (லூக்கா 16:8), "இப்பிரஞ்சத்தின் பிள்ளைகள்" (லூக்கா 16:8), "கேட்டின் மகன்" (யோவான் 17:12), "ஆறுதலின் மகன்" (நடபடிகள் 4:36), மற்றும் "பிசாசின் மகன்" (நடபடிகள் 13:10), போன்றவற்றைக் குறிக்கும்.

"நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்து கொண்டுவந்தீர்கள்" (3:7).

கடந்த காலத்தில் கொலோசெயர்கள் உலகப்பிரகாரமான செயல்களில் ஈடுபட்டு வந்தனர், ஆனால் இப்பொழுது அப்படிப்பட்ட நடக்கைகளோடு அவர்களுக்கு எவ்வித சம்பந்தமுமில்லை. "முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும்" அவர்கள் இருந்தார்கள் (1:21). கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனை அவர்கள் துவங்கினார்கள் என்ற உண்மையானது அவர்கள் இதற்கு முன்பு சஞ்சரித்துக் கொண்டிருந்த காரியங்களுக்குத் திரும்பவே முடியாது என்று அர்த்தப்படுவதில்லை. எப்படியிருப்பினும், இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள வினைச் சொல் (periepatēsate) அது முற்றுப்பெற்றுள்ள கடந்தகால செயலாக அல்லது நிறைவேறின செயலாகக் கண்ணோக்கப்பட வேண்டும் பவுலின் நிருபத்தைப் பெற்றவர்கள் இந்தப் பாவங்களுக்காக மரித்திருந்தார்கள், இப்படியாக தங்களுடைய வாழ்வு முறையின் முந்தின மாதிரிக்கு முடிவுண்டாக்கினார்கள்.

"சஞ்சரித்தபோது" என்பது அவர்களுடைய செய்கையை, அல்லது இயக்கத்தைக் குறிக்கிறது, அது கடந்த காலத்தில் நிகழ்ந்திருக்கலாம் அல்லது நிகழ்காலத்திலே நடந்து கொண்டு இருக்கலாம்; ஆகிலும். "... போது" என்னும் வார்த்தை (pote) அவர்கள் தொடர்ந்து கடந்த காலத்தில் இந்தப் பாவங்களில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. சஞ்சரித்தல் என்பது குறிப்பிட்ட முறையில், நல்லமுறையிலோ, கெட்ட முறையிலோ, வாழ்வதைக் குறிப்பிடுகிறது. அது நல்ல அர்த்தமுடைய வாழ்விற்கும் பயன்படுத்தலாம்[14] அல்லது கெட்ட அர்த்தமுடைய வாழ்க்கைக்கும் பயன்படுத்தப்படலாம்[15] (காண்க ரோமர் 8:4).

பவுல் குறிப்பிட்ட பாவங்கள் போன்றவை ஜனங்களுடைய வாழ்க்கையை கட்டுப்படுத்தும் சக்திகளாக மாறிவிடக் கூடும். கொலோசெயர்கள் தொடர்ந்து பாலுணர்வு ஒழுங்கீனங்களிலும் (விபச்சாரம்) அசுத்தம், மோகம், துர்இச்சை, மற்றும் பொருளாசை போன்ற பாவங்களில் இருந்துள்ளனர். இயேசு, பாவஞ்செய்கிறவன் "பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்" என்றார் (யோவான் 8:34). பவுலும் பேதுருவும் இதே உண்மையைப் போதித்தார்கள் (ரோமர் 6:16; 2 பேதுரு 2:19). கொலோசெயர்கள் எச்சரிக்கையாக இராமற்போனால், அவர்கள் மீண்டும் தங்களுடைய முந்தின வாழ்க்கைக்கு திரும்பி விடக்கூடும், என்று அவர்கள் உணரும்படி பவுல் விரும்பினார். அவர்கள் பாவங்களில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள், அவைகளில் நடந்து கொள்வதையே வாழ்வு நெறியாகக் கொண்டிருந்தனர், இப்பொழுதோ இனியும் அவ்வழியில் வாழ்கிறவர்களல்ல.

அவபக்திக்குரிய நடத்தைகளை களைந்து போடுதல் *(3:8, 9)*

[8]இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும் உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள். [9]ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய

மனுஷனையும் அவனுடைய செய்கைகளையும் களைந்து போட்டு.

"இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத வம்பு வார்த்தைகளுமாகிய" (3:8அ)

கோபம் என்பது என்பதன் *orgē*, என்பதன் மொழிபெயர்ப்பு, இது *3:6*ல் கோபாக்கினை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[16] இது தவறு நடத்தலை கண்ணுறும் போது சில வேளைகளில் அதனிமித்தம் வெளிப்படுகிற கடுமையான மற்றும் ஆழமான அதிருப்தியை வெளிப்படுத்துவது, அது ஒரு தண்டிக்கப்படுதலிலோ அல்லது தெய்வத் தண்டனையிலோ முடிவுறும். *Orgē* என்பது மனிதனுடைய உணர்ச்சி வேகத்தைக் குறிக்கும், ஆனாலும் இந்த வார்த்தை பெரும்பாலும் கீழ்ப்படியாதவர்களுக்கும் பாவத்துக்கும் எதிரான தண்டனைத் தீர்ப்பாகவே பயன்படுத்தப்படுகிறது (யோவான் *3:36*; ரோமர் *1:18*; *13:4*; எபிரெயர் *3:11*; *4:3*). அவருடைய கோபம் நியாயத்தீர்ப்பிலும் ஆக்கினைத்தீர்ப்பிலும் முடிவுறும்.[17] நியாயப்பிரமாணம் ஆக்கினைக்குள்ளாக்கும் "கோபாக்கினையைக்" கொண்டுவருவது (*orgē*; ரோமர் *4:15*). ஒரு அரசுக்கு தண்டனையளிக்கும் உரிமையுண்டு, அது துன்மார்க்கர் மீது "கோபாக்கினையை" செலுத்துகிறது; கிறிஸ்தவர்கள் அப்படிப்பட்ட "கோபாக்கினைக்குட்படாமல்" அரசாங்கத்துக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும் (*orgē*; ரோமர் *13:4, 5*). குறிப்பிட்ட; சூழ்நிலையில் கிறிஸ்தவர்கள் கோபப்பட வேண்டிய இடத்தில் அப்படிச் செய்ய உரிமையுண்டு (எபேசியர் *4:26*); எப்படியிருப்பினும், பொதுவாக, நாம் கோபப்படுவதைத் தவிர்க்க வேண்டும் (எபேசியர் *4:31*; யாக்கோபு *1:19, 20*). வழக்கமாக, வேத வாக்கியங்கள் விவரிக்கும் கோபம் கட்டுப்படுத்தப்படும் கோணத்திலேயே பேசுகிறது.

அடுத்த வார்த்தை **மூர்க்கம்** (*thumos*) இது அநியாயத்தைக் கண்டு கடுமையான உணர்ச்சி வசப்பட்டு கோபிப்பதைக் கொண்டது. சில விஷயங்களில் இது *orgē* ஐ ஒத்திருக்கும்; இப்படியாக இதை தனித்த ஒரு பொருளைக் கொண்டதாக பயன்படுத்துவது இயலாதது. இந்த கிரேக்க வார்த்தைகளின் அமைப்புகள் ஒன்றாக சில வசனப் பகுதிகளில் காணப்படுவதுண்டு (ரோமர் *2:8*; எபேசியர் *4:31*; வெளிப்படுத்தின விசேஷம் *16:19*; *19:15*). வெளிப்படுத்தின விசேஷம் மற்றும் ரோமர் *2:8* லும், தேவனுடைய கோபாக்கினை குறித்துப் பேசுவதற்கு அப்பால், *தூமாஸ்* என்பது மனிதனுடைய கோபாக்கினையை அல்லது மூர்க்கக் குணத்தை குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (லூக்கா *4:28*; நடபடிகள் *19:28*; *2* கொரிந்தியர் *12:20*; கலாத்தியர் *5:20*; எபேசியர் *4:31*; கொலோசெயர் *3:8*; எபிரெயர் *11:27*). வெளிப்படுத்தின விசேஷத்தில் சாத்தானின் கோபத்துக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் *12:12*), பாபிலோனின் வெளியாக்கப்பட்ட "மோகம்" (வெளிப்படுத்தின விசேஷம் *14:8*; *18:3*), மற்றும் தேவனுடைய கோபாக்கினை (வெளிப்படுத்தின விசேஷம் *14:10, 19*; *15:1, 7*).

*Orgē*யும், *thumos*யும் இணைத்து பார்த்தால் வரும் பொருள், "உக்கிரமான கோபாக்கினை" (வெளிப்படுத்தின விசேஷம் *16:19*; *19:15*). பிற அமைப்புகளில் வித்தியாசப்பட்ட பொருள்களின் கிரேக்க வார்த்தை

காணப்படும் போது (2 கொரிந்தியர் 12:20; கலாத்தியர் 5:20; எபேசியர் 4:31; கொலோசெயர் 3:8), அது "அதிருப்தியின் தீவிரம்," அநியாயத்தைக் காணக்கூடாமல் வரும் கோபாக்கினை, அல்லது கோபாவேசம், என்றெல்லாம் ஆலோசனையாகச் சொல்லப்படுகிறது எனலாம். அது ஒருவேளை *orge*லிருந்து வித்தியாசப்படலாம், அதிலும் கூட இன்னும் அதிகத் தீவிரமாகவும் உக்கிரமாகவும் கோபாவேசம் கொண்டு பழிவாங்கத் தேடுவதையோ கட்டுப்படுத்தப்பட்ட கோபாவேசத்தையோ கொண்டிருக்கலாம் (லூக்கா 4:28; நடபடிகள் 19:28; எபிரெயர் 11:27).

பொறாமையும் மூலப்பிரதியில் (malice) வன்மம் *(kakia)* என்றுள்ளது இது மனுஷனுடைய கீழ்த்தரமான ஆசைகளின் வெளிப்பாடு, இழிநிலை, மோசமான நடத்தை, மற்றும் துன்மார்க்கம் போன்றவைகளோடு சம்பந்தப்பட்டது. அது தவறான எண்ணங் கொண்டோருடைய இருதயங்களில் ஏற்படும் பொல்லாததும், வன்மமும் மிக்க குணம். கெடு புத்தி கொண்ட (வன்மம்) மனுஷர்கள் இழிவான குணத்தையுடையவர்களாக, ஆழமான வெறுப்பு உடையவர்களாக, தீயொழுக்கம் உடையோராய், வெறுக்கத்தக்கவர்களாயிருப்பார்கள் (ரோமர் 1:29; எபேசியர் 4:31; தீத்து 3:3; 1 பேதுரு 2:1). "*Kakia* எனும் வார்த்தையை பழங்கால கிரேக்க அகராதி தொகுப்பாளர், சுய்தாஸ், விளக்கப்படுத்தியுள்ள விதமாவது, 'ஒருவர் தன்னுடைய அயலானை துன்புறுத்துவதில் ஆர்வம் காட்டுதல்' "[18] இந்த வார்த்தை "துன்புறுத்த, துன்பம் விளைவிக்க அல்லது மற்றவர்களை அழித்து அவர்கள்படும் துன்பங்களைக் கண்டு மகிழ்தலைக் குறிப்பிடுகிறது.

தூஷணவார்த்தை *(blasphēmia*, இதிலிருந்தே "தேவதூஷணம்" எனும் வார்த்தை வந்தது), இதன் பொருள் மற்றவர்களை வேண்டுமென்றே புண்படுத்தி புகழைக்கெடுக்கமுயற்சித்தல். மற்றவர்களைத் தவறாக நினைத்துக் கொள்ளும்படி செய்ய தவறான காரியங்களைப் பேசித்திரிபவர்கள் தூஷண வார்த்தைகளைப் பயன்படுத்தி புறங்கூரித்திரிபவர்கள் அல்லது தூஷணமாய் பேசுபவர்கள், எனப்படுபவர்கள். தூஷணவார்த்தைகளைப் பேசுதலில் மரியாதைக் குறைவாய்ப் பேசுதல் அல்லது வினயமாக நடந்து அவதூறு பேசி, சிறுமைபடுத்துதல், இதுவும் மற்றவர்களைக்கு தீமையாகப் பேசுவதாகும் (காண்க மத்தேயு 12:32). தூஷணவார்த்தையுடன் உட்பட்டது மனதில் கொண்ட எண்ணத்தை நிறைவேற்ற நினைப்பதுமாகும்; வேண்டுமென்றே ஏதாவது ஒன்றையோ அல்லது யாராவது ஒருவரையோ தவறாக நினைத்துக் கொள்ள பேசுபவர்கள் தூஷண வார்த்தைகளை (புறங்கூறித்திரிகிறவர்களாகப்) பேசப்படுவார்கள். இந்த வார்த்தை தேவனைத் தாழ்த்தி நிந்திக்கிறவர்களுக்குப் பொருந்தும் (வெளிப்படுத்தின விசேஷம் 13:6; 16:11, 21), அவருடைய நாமத்தையும் (ரோமர் 2:24; 1 தீமோத்தேயு 6:1; வெளிப்படுத்தின விசேஷம் 16:9), அவருடைய வார்த்தையையும் (1 தீமோத்தேயு 6:1; தீத்து 2:5), பரிசுத்த ஆவியையும் (மத்தேயு 12:31; மாற்கு 3:28, 29; லூக்கா 12:10), அல்லது பிற ஜனங்கள் (தீத்து 3:2), ஆகிய அனைத்திலும் தூஷணம் பண்ணுதல் பொருந்தும், தேவ தூஷணத்தின் அமைப்புச் சொற்கள் பலதரப்பட்ட குற்றச் சாட்டுக்களில் உட்பட்டது.[19]

சிலர் மனப்பூர்வமாக தேவனையும் மற்றவர்களையும் தூஷணமாய் பேசித்திரிகின்றனர். பவுல் இந்தப் பாவத்தை குறிப்பிடக்காரணம்

உபத்திரவப்பட கொலோசெயர்களை ஆயத்தப்படுத்துவதாகும்; உபத்திரவப் படுத்துவோரால் அவர்கள் தேவனை நிந்திக்க நிர்பந்திக்காதபடி அப்படிச் செய்தார். அவர் கிறிஸ்தவனாவதற்கு முன், சவுல் என்ற - அப்போஸ்தலனாகிய பவுல் - தூஷிக்கும்படி கிறிஸ்தவர்கள் நிர்பந்தித்திருந்தார் (நடபடிகள் 26:11), மற்றும் அவரே தூஷணம் பண்ணுகிறவராக இருந்தார் (1 தீமோத்தேயு 1:13).

வம்பு வார்த்தை *(aischrologia) கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணப்படுகிறது. இது மிக மட்டமான வார்த்தை; தீமையும் அசுத்தமும் மிக்க வார்த்தை; கெட்ட வார்த்தைகள் கொண்ட வேடிக்கைப் பேச்சுக்கள்; அநாகரிகமான பாலுணர்வு வார்த்தைகள்; வெட்கக் கேடான பேச்சுக்கள்; அருவெறுப்பைக் கொண்ட வாய்ப்பேச்சுக்கள் ஆகியன. கூடுதலாக, இது வெறுப்பூட்டும் வார்த்தைகளும், இழிவார்த்தைகளும், முரட்டுத்தனமான வார்த்தைகளும் எபேசியர் 5:4ல் பவுல் குறிப்பிடுவதற்கு ஒத்தவைகளாகும். இப்படிப்பட்ட தன்மை கொண்ட வார்த்தைகள் கொலோசெயரின் வாயிலிருந்து வரக்கூடாதிருந்தது. மாறாக, அவர்களுடைய வார்த்தைகள் எப்போதும் "கிருபை பொருந்தினதாயும், உப்பினால் சாரம் ஏற்றபட்டதாயும் இருக்க வேண்டும்" என்று பவுல் பின்னதாக எழுதினார் (கொலோசெயர் 4:6). யாக்கோபு குறிப்பிடுகையில் நல்லவைகளும் கெட்டவைகளுமான வார்த்தைகள் ஒரே வாயிலிருந்து வருவது இயல்புக்கு எதிரானது என்றார் (யாக்கோபு 3:9-12).*

உங்கள் வாயில் இருந்து *என்று பவுல் குறிப்பிட்டார், அது இப்படிப்பட்ட சிந்தனைகள் - அவை மனதில் தோன்றிலும் கூட - வாயினால் வெளிவரக்கூடாதவை. அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுவது தடுக்கப்பட ஒருவரது சிந்தனைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.*

"இப்பொழுதோ ... இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்" (3:8ஆ)

3:5ல் பவுல் கிறிஸ்தவர்களிடத்தில் அவர்களுடைய கடந்தகால தீய ஒழுக்கங்களுக்கு "... மரித்தீர்கள்" அல்லது "மரிக்கப்பண்ணப்பட்டீர்கள்" என்பதை சிந்தித்துப் பார்க்கும் படி சொன்னார். அவர்களுடைய நடத்தைக்கடுத்த குணங்கள் இன்னும் அவர்களுக்குள் இருந்து கொண்டிருந்தது, எனவே அவைகளை மரிக்கச் செய்யாதே போனால் மீண்டும் அது துளிர்த்து உயிர் பெற்று விடும். முந்தின நடக்கைகளுக்குரிய காரியங்களை களைந்து போடும்படி மற்ற வசனப்பகுதிகள் போதிக்கின்றன (ரோமர் 13:12; எபேசியர் 4:22, 25; எபிரெயர் 12:1; யாக்கோபு 1:21). கொலோசெயர்கள் முற்கால வாழ்க்கைக்குரிய காரியங்களுக்காக மரித்திருந்த போதிலும், அவர்களுடைய முந்தின வாழ்க்கை முறையை புறந்தள்ளி மாற்று வழி வாழ்க்கையை அந்த இடத்தில் கொண்டு வர வேண்டியவர்களாயிருந்தார்கள். ஒருவகையில், அவர்கள் தங்களுடைய சிறு அறைகளை சுத்தம் பண்ணவும் புதிய ஆடைகளை தரிக்கத் துவங்கவும் வேண்டும்.

கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாக (2 கொரிந்தியர் 5:17; கலாத்தியர் 3:27) இருத்தல் கிறிஸ்தவனை பாவமற்றவனாக்காது. அது நம்மை ஒரு பாவமற்ற இலக்கிற்கானவர்களாய் மாற்றும் ஒரு ரீதிக்கு மட்டுமே நடத்துகிறது. அனைத்து ஒழுங்கீன செய்கைகளையும் தீய ஒழுக்கங்களையும் நாம் களைந்து போட்டு, நமது வாழ்க்கையில் சுயக்கட்டுப்பாட்டை உடையவர்களாயிருக்க வேண்டும்

(வசனங்கள் 5, 8, 9). இவைகளெல்லாம் (தீய ஒழுக்கங்களெல்லாம்) நமக்கு சேதத்தை உண்டு பண்ணக் கூடியவைகள் மாத்திரமல்ல, மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியவைகளும் உறவுமுறையில் குந்தகம் விளைவிக்கக் கூடியவைகளுமாகும்.

"கோபம்" மற்றவர்களைத் துன்புறுத்தவும் கொலை செய்யவும் கூடத் தூண்டும். இவ்வார்த்தை எப்பொழுதும் "கோபாக்கினையோடு" ஒத்த வார்த்தையாகக் குறிப்பிடப்படும், ஆகிலும் இது உடனடி (முன்) கோபமாகவோ கோபாக்கினையைப்போல வெடிக்கும் வார்த்தைகளாகவோ இருக்காது, ஜனங்கள் கோபப்படும் போது, பேச்சிலோ அல்லது செய்கையிலோ தங்களுக்கே ஆக்கினையை வரவழைத்துக் கொள்ளக் கூடியவைகளாக இருக்கும் (மத்தேயு 5:22).

மனித "கோபாக்கினை" (மூர்க்கம்) என்பது ஜனங்களை எரிச்சலடைய தூண்டப்படுவதன் பிரதிபலிப்பாகி உடனடியாக கட்டுப்படுத்த இயலாத உணர்ச்சிவசப்படச் செய்யும்.

"மூர்க்ககுணம்" ஜனங்களை வெறுப்படையவும் வன்மம் பாராட்டவும் தூண்டும் அதினால் மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கவும் அவர்கள் துன்புறுவதைக் கண்டு சந்தோஷப்படவும் செய்யும்.

"தூஷணம்" வழக்கமாக பொறாமையினாலும், அன்பற்ற இருதயங்களாலும், மூர்க்கக்குணத்தாலும் வருகிறது, தூஷிக்கிறவர்கள் மற்றவர்கள் மீது பலமான கெடுதியை உண்டாக்குவதோடு பிற ஜனங்கள் தூஷிக்கப்படுகிறவைகளையோ அல்லது தூஷிக்கப்படும் நபர்களையோ தவறாக நினைத்துக் கொள்ளச் செய்யும்.

"வம்பு வார்த்தைகள்," நாகரிகமற்ற ஒரு மொழி, அது மற்றவர்களுக்கு தீங்கை ஏற்படுத்தும். இது ஜனங்களுடைய மனதிலே தீய சிந்தைகளை நிரப்பி, அல்லது அவைகளுக்கு உட்பட்டவர்களை ஊக்கமிழக்கச் செய்து அல்லது மனத்துயரைக் கொண்டுவரும்.

பொய்பேசுதல் சமுதாயத்துக்கு தீங்கு விளைவிப்பது ஏனெனில் ஒரு சமுதாயம் அமைப்புப் பெற்றுள்ள அடித்தளத்தையோ அதன் அமைப்பையோ அது மதிப்பற்றதாக்குகிறது. பொய்பேசுகிறவனை இச்செயல் தகுதியற்றவனாகவும் பிறருடைய நம்பிக்கையை தன் மீது வைக்கக் கூடாத நிலைக்கும் தள்ளுகிறது.

இப்படிப்பட்ட செயல்களால் ஏற்படும் விளைவுகளால், கொலோசெயர்கள் அவைகளை புறக்கணிக்க வேண்டும்; அவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் முழு எண்ணங்களையும் அணுகுமுறைகளையும் மாற்ற வேண்டும், ஞானஸ்நானத்தில் ஏற்படும் மறுரூபம் (2:11-13) முழுமை யாக கடந்த கால குணத்தை அகற்ற வில்லை, இப்பொழுது வளர்ச்சி அவர்களிடத்தில் வர வேண்டும்.

> விளக்கிக் காட்டப்பட்டபடி (காண்க 2:11, 12), கொலோசெயர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது ஒரு தீர்மானமாக தங்களையே துறந்து - "பழைய மனுஷனையும்" (ரோமர் 6:6; எபேசியர் 4:22). அதாவது "மாம்ச சரீரத்தையும்," தங்களுடைய முந்தின வாழ்க்கை நிலையையும், "முந்தைய துன்மார்க்கமான மனுஷனையும்," அதின் செய்கைகளையும், 3:5, 8, 9ல்

குறிப்பிடப்பட்டுள்ள செயல்களையும் களைந்து போட்டு, அல்லது விட்டு விட்டு - புதிய மனுஷனாக, கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டவர்களாய் இருந்தார்கள் (கலாத்தியர் 3:27), அதாவது கிறிஸ்துவின் அவயவங்களாக புதிய இயல்பைத் தரித்துக் கொண்டிருக்கிறார்கள், எனவே, தேவபக்தியுள்ள ஒரு வாழ்க்கையை வாழ்ந்து தங்களின் ஞானஸ்நானத்திலே செய்த அறிக்கையினை அலங்கரிக்கட்டும்.[20]

இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள் எனும் வார்த்தைகளும் (3:8அ) பின்னதாக "தரித்துக் கொள்ளுங்கள்" என்பதும் (3:12), கொலோசெயர்கள் பவுலின் கோரிக்கைகளுக்கு பதில் செயல் செய்ய வேண்டிய மிகவும் வலிமையான வார்த்தைகள். இவைகள் சகோதரர்கள் தீர்மானித்து தெரிவு செய்து கொள்ளக்கூடிய காரியமல்ல; அவைகள் கோரப்படுபவை. தனது வாசகர்கள் நேர்மையான முயற்சியுடன் இவைகளை நிறைவேற்றும்படி பவுல் எதிர்பார்த்தார். "அவைகளை அழித்துப்போடுங்கள்" என்பதன் பொருள் "மரித்திவர்களாய் எண்ணிக் கொள்ளுங்கள்" (3:5) அல்லது நேர் பொருளில் "மரிக்கச் செய்யுங்கள்" என்பதாகும்.

"ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு" (3:9)

வசனம் 9 பவுலின் நெடிய வாக்கியங்களில் ஒன்றாகத் துவங்குகிறது, அது வசனம் 11 வரைத் தொடருகிறது. அவருடைய வாசகர்கள் ஒருவருக்கொருவர் **பொய்** சொல்லக்கூடியவர்களாய் (*pseudomai*) இருக்கக் கூடாதவர்கள் என்று எழுதின போது, அவர் கிறிஸ்தவ சமுதாயத்தைக் குறிப்பிட்டு எழுதினார். அப்படிச் செய்வதினால், கிறிஸ்தவர்களல்லாதவர்களிடம் பொய் சொல்லிக் கொள்ளலாம் என்று பொருளல்ல. "... படியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்" (எபேசியர் 4:25ஆ). பொய்யர்களுக்கென்று தேவன் வைத்திருக்கிற தண்டனையே அது எவ்வளவாய் தேவனுடைய கண்களில் வினயமானது என்பதை வெளிப்படுத்துகிறது. "... பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 21:8).

மோசேயின் பத்துக்கட்டளைகளில் பொய்பேசுதல் விலக்கப்பட்டது (யாத்திராகமம் 20:16; உபாகமம் 5:20). இந்தக் காரணத்தினால், இது கோபத்தைக் காட்டிலும் மிகவும் வினயமானதாக, மூர்க்கம், தூஷணம், மற்றும் வம்பு வார்த்தைகளைக் காட்டிலும் மோசமானதாக சிலர் கருதுகின்றனர். கிறிஸ்தவர்கள் வசனம் 8ல் சொல்லப்படுகிற ஐந்து தீய ஒழுக்கங்களையும் பாவமுள்ளவைகளாகவும், விபச்சாரம், கற்பழிப்பு, மற்றும் கொலை செய்வதைப் போன்றது என்றும் உணர்ந்தறிய வேண்டும்.

வசனம் 9ஆ மற்றும் 10அவில் **களைந்து போட்டு** மற்றும் "தரித்துக் கொண்டிருக்கிறீர்களே" என்ற வார்த்தைகள் கடந்த கால முற்று வினைச் சொற்கள்.

வசனம் 9-10ல் காணப்படும் கடந்த கால முற்றுவினைச் சொற்களாகிய இரண்டும் ("களைந்து போடப்பட்டது" மற்றும் "தரித்துக் கொள்ளுங்கள்"

[AB]) *உறுதிப்பட ஏற்கனவே உண்மையில் நடந்தது என சிறப்பாகப் புரிந்துகொள்ளப்பட்டது: விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தின் மூலமாக எல்லா விசுவாசிகளும் தங்களுடைய "பழைய மனுஷனையும்" (அதோடு 3:5, 8-9அல் குறிப்பிடப்பட்ட தீய கிரியைகளையும்) அழித்துப் போட்டு புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டவர்கள் (வசனங்கள் 12-17ல் முறையான வாழ்வின் வழி விளக்கப்பட்டுள்ளது).*[21]

"விட்டு விடுங்கள்" *(apekduomai)* மற்றும் "தரித்துக் கொள்ளுங்கள்" *(enduō)* ஆகிய பதங்கள் வழக்கமாக ஆடையை களைந்து போடுதலையும் மேலே போட்டுக் கொள்வதையும் குறிக்கும். **பழைய மனுஷன் அகற்றப்பட்டு,** புதிய மனுஷன் தன்மீது ஏற்றுக் கொள்ளப்படுகிறான். பவுல் தனிப்பண்பாக பட்டியலிட்ட கொலோசெயர்களின் முந்தின கால கெட்டுப்போன வாழ்க்கை நிலை அகற்றப்பட வேண்டியிருந்தது இந்த ஜனங்கள் "துர்க்கிரியைகளுக்குரிய மனதுடையவர்களாய்" இருந்தபடியால் அப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்த்திருந்தார்கள் (1:21), ஆனால் அவர்கள் ஒரு காலத்தில் அப்படியிருந்த நிலையை விட்டு விட்டார்கள். அவர்களுடைய கடந்த கால தவறுகளும் செயல்களும் இனியும் நிலைத்திருக்க கூடாது; "பழைய மனுஷனானது" களையப்பட்டு அந்த இடத்தில் "புதிய மனுஷனானது" இடம் பெற்றது. இதே கருத்தை பவுல் ரோமரில் வெளிப்படுத்தினார்: "... பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டது" (ரோமர் 6:6).

பவுல் "மனுஷன்" என்று குறிப்பிடுவது, ஒருவருடைய மாம்ச சரீரப் பகுதியைக் குறிப்பிடாமல், நபர்த்தத்துவத்தைப் பொருள்படுத்துகிறார். ஒருவர் கிறிஸ்தவனாகும்போது, தீமையினால் கெட்டுப்போயிருந்தவனும் பாவத்தால் மூழ்கியிருந்தவனுமாகிய பழைய மனுஷன் அகற்றப்பட்டாக வேண்டும். நீதியோடு கூடிய ஒரு புதிய மனுஷனும் பரிசுத்தமானவனுமாகிய நபர் பழைய மனுஷன் இருந்த இடத்தில் இடம் வகிக்க வேண்டியதாயிருந்தது.

வேறொரு இடத்தில், பவுல் கடந்தவை களைந்து புதியவைகளை தரித்துக் கெள்ளுதலைப் பற்றிப் பேசுகிறார்.[22] அவர் தான் உலகத்திற்கு சிலுவையில் அறையுண்டதாகக் குறிப்பிடுகிறார் (கலாத்தியர் 6:14) மாம்சமும் அதின் ஆசை இச்சைகளும் கூட சிலுவையிலறையப்பட்டன (2 கொரிந்தியர் 4:16; எபேசியர் 3:16). அதே நாளத்தில் பேதுரு கிறிஸ்தவ ஸ்திரீகள் இருதயத்தில் மறைந்திருக்கிற தங்கள் குணத்தையே அலங்காரமாக்கிக் கொள்ள வேண்டும் என்று எழுதினார் (1 பேதுரு 3:4). உள்ளான புதிய மனுஷன் பழைய வஸ்திரத்தைக் களைந்துபோட்டு மேலும் புறம்பாக புதிய வஸ்திரங்களால் தரிப்பிக்கப்பட வேண்டும்.

கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாய் புதிதாக்கப்பட்டிருத்தல் (3:10, 11)

10 தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.
11 அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும்

விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை, புறஜாதி யானென்றும் புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்.

"தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக் கொப்பாய்" (3:10அ)

*கொலோசெயர்கள் தங்களைப் புதிதாக்கிக் கொள்ள அவர்களைச் **சிருஷ்டித்தவருடைய** சாயலுக்கொப்பானவருடைய அறிவைத்தேட வேண்டியதாயிருந்தது. புதிதாக்கிக்கொள்ளுதல் அறிவைக் கொண்டு வரும், அறிவு மேலும் புதிதாக்கிக் கொள்ள ஏதுவான அடிப்படையைக் கொடுக்கும். அறிவின் நோக்கம் அவர்கள் இயேசுவைப்போல மாற வேண்டும், அவர் அவர்களை புதிய ஜனமாய் மாற்றியிருக்கிறாரே (2 கொரிந்தியர் 5:17). இயேசுவின் மரணத்திற்கொப்பான சாயலைப் பெறுவதும் கிறிஸ்துவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பை அடைவதும் பவுலின் அணுகுமுறையாக இருந்தது (பிலிப்பியர் 3:10-14). உண்மையான அறிவைப் பெருக்கிக் கொள்வதில் அசையாது நிலைத்திருந்தால், தொடர்ந்து புதிதாகுதல் வந்து சேரும். ஒரு நடிகன் தான் நடிக்கும் பாத்திரத்தில் அதற்கொப்பான நிலையிலுள்ள ஒரு உண்மையான நபரை அறிந்திருக்க வேண்டும். அதைக் காட்டிலும் பெரிதான முறையில், நாம் கிறிஸ்துவின் சாயலில் புதிதாக்கப்படுவதற்கு முன் நாம் அவரைப் பற்றி அறிந்திருத்தல் அவசியம்.*

நாம் இயேசுவுக்குள் பிரவேசித்து அவரைத் தரித்துக் கொண்ட பிறகு (கலாத்தியர் 3:27), கொலோசெயர்கள் தங்களுடைய ஜீவியம் பாதுகாப்பாக இருக்கச் செய்பவரைப்போல மாற வேண்டியவர்களாயிருந்தனர், மனமாற்றம் பெற்ற ஒவ்வொரு வரும் தனது இயல்பைப் பெருக்கிக் கொள்ள இயேசுவை நோக்கிப்பார்க்க வேண்டும். 2 கொரிந்தியர் 3:18ல் பவுல் தனது இலக்கை இப்படியாக வெளிப்படுத்துகிறார்: "நாமெல்லாரும் திறந்த முகமாய் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போல கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்." இந்த இலக்கை அடைய, நாம் முன்னானவைகளை மறந்து "தேவன் கிறிஸ்துவுக்குள் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக" இலக்கை நோக்கி தொடரவேண்டும் (பிலிப்பியர் 3:13, 14அ). நாம் நம்மை சிருஷ்டித்தவரை அறிந்து கொள்வதன் மூலம், நாம் அவருடைய தனிப் பண்புகளை வளர்த்துக்கொள்ள முடியும்.

> *... புதிதாக்கப்படுதல் சிருஷ்டித்தவரின் சாயலுக்கொப்பானபடி இடம் பெறுகிறது. இப்படியாக ஒரு பக்கம் அவர் அது ஒரு புதிய சிருஷ்டியைப் பற்றிய விஷயம் என்பதை அவர் உறுதிப்படுத்துகிறார், ஒரு சில தீய செயல்களை விட்டு ஒரு சில ஒழுக்கங்களை ஏற்றுக் கொள்வது அல்ல. மறுபக்கம் பார்த்தால், அது அறிவுக்கு இட்டுச் செல்கிறது என்று சொல்லுகிறார்.*[23]

கொலோசெயர்களுக்கு என்ன விதமான அறிவு தேவைப்பட்டது? சீனாய் மலையில் மேசேயின் மூலம் கொடுக்கப்பட்ட உடன்படிக்கைகளைக் கொண்ட மோசேயின் நியாயப்பிரமாணம் (உபாகமம் 4:2-8, 13), அவர்களுடைய வாழ்க்கைக்குரிய அளவுகோல் அல்ல, சகல ஞானமும்

அறிவும் இயேசுவிடமுண்டு; அவைகளை அவர் பரிபூரணமாய்த் தமக்குள் உண்டாக்கியிருக்கிறார், அவர் அவர்கள் “எல்லாரிலும், எல்லாமுமாயிருக்கிறார்” (3:11). அவர்களுக்கு வேறெவரும், வேறெதுவும் தேவையில்லை, ஏனெனில் இயேசுவே உண்மையான கிறிஸ்தவ ஜீவியத்தின் மூலாதாரமும் முன்மாதிரியுமாயிருக்கிறார். யூதப் பாரம்பரியங்கள், இறைமை இணைவுப் பண்பு பக்திகள், கிரேக்க தத்துவம், மற்றும் அஞ்ஞான மதம் ஆகியன அவர்களுக்கென செய்ய எதுவுமில்லை.

ஆவியானவர் மூலம் அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் கொடுக்கப்பட்ட தேவனுடைய வெளிப்பாடுகளை வாசிப்பதன் மூலம், ஜனங்கள் இன்றைக்கு கிறிஸ்துவின் இரகசியத்தை “அறிந்து கொள்ள” இயலும் (எபேசியர் 3:4). தேவனுடைய குமாரனின் அறிவின் மூலம், தேவன் சபையில் ஆளுகை செய்பவர்களை (மூப்பர்களை)யும் போதகர்களையும் நியமித்து கிறிஸ்தவர்கள், “கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும்” அவர்களுடைய வளர்ச்சியில் உதவி செய்தார் (எபேசியர் 4:11ஆ, 13). நாம் இயேசுவின் தன்மையைக் கொண்டவர்களானால், தேவனுடைய சாயலின்படி இருக்கிற அவருடைய இயல்பின்படி, நாம் பரிசுத்தமாவோம்; ஏனெனில் தேவன் பரிசுத்தராயிருக்கிறார் (1 பேதுரு 1:16).

விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாக இருந்தாலும் கூட நாமாக ஒரு மனநிறைவு அடைந்து நமது கிறிஸ்தவ நடக்கைக்கு ஒரு தளம் அமைத்துக் கொண்டு விடக் கூடாது. நம்முடைய ஜீவியத்தின் உதாரணம் - இயேசுகிறிஸ்துவே நம்முடைய வளர்ச்சியை அளவிட்டுப் பார்க்க ஏதுவான அளவுகோலாக இருக்கிறார் - நமக்கு மேலாகவும் அப்பாலும் இருக்கிறது. நாம் மேல் நோக்கிச் செல்லவும் தொடர்ந்து வளர்ச்சிபெறவும், அறைகூவல் விடப்பட்டுள்ளோம், ஆகிலும் கிறிஸ்துவிலுள்ள வளர்ச்சிக்குத்தக்க பரிபூரணத்தை நம்மால் ஒரு போதும் அடைய முடியாது. இயேசு சரியானது எதுவோ அதையே கோருகிறார், எது சுலபமானது என்பதையல்ல.

“பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட” (3:10ஆ)

பழைய மனுஷனானது களைந்து போடப்பட்டு புதிய மனுஷனானது தரித்துக் கொள்ளப்பட்ட போதிலும், புத்துயிர் ஊட்டிக் கொண்டேயிருப்பது அவசியமானது. **புதிதாக்கப்படடிருத்தல்** *(anakainoumenon)* என்பது நிகழ்கால எச்சவினையாக கிரேக்க மொழியில் சொல்லப்பட்டுள்ளது, இது ஒரு தொடர் செயல். புதிய மனுஷனானது தொடர்ந்து புதிதாக்கப்படுகிறது. ஞானஸ்நானத்திலே பிறந்த புதிய மனுஷன் ஒரு குழந்தையைப் போல, இருக்கிறது. முழு வளர்ச்சிபெற்ற கிறிஸ்தவனாவதற்குரிய வலிமை இருந்த போதிலும், வளர்ச்சியை முழுமையாய் அடைவதற்கு முன் வளர்வதற்குத் தேவையான கால அவகாசம் தேவை.

நதிநீரை எதிர்த்து தனது படகை செலுத்த பிரயாசப்படாத ஒருவன், வேகமாக நதியின் போக்கிலே அடித்துச் செல்லப்படுவான். பெலவீனமாய் படகைச் செலுத்த முற்படுவது அதை அசைக்க முடியாமல் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருக்கச் செய்யும், அதை முன்னுக்கு கொண்டு போக அது போதுமானதல்ல. எதிர்த்து முன்னேறச் செய்ய, தொடர்ந்து படகை (வலித்து) செலுத்த வேண்டும், அதே போலத்தான், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப்

பின் பற்றிப் போகக் கூடியவர்களுக்கே உரிய நடக்கைகளோடே ஒழுக்கக் காரியங்களில் முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும் (2 கொரிந்தியர் 3:18; 10:15; எபேசியர் 4:13, 16; 1 தெசலோனிக்கேயர் 3:12; 4:9, 10; 2 தெசலோனிக்கேயர் 1:3; 1 தீமோத்தேயு 4:15). கிறிஸ்து தன்னுடைய வாழ்க்கையில் நாளுக்கு நாள் தன்னை புதிதாக்கினதாக பவுல் கண்டார் (2 கொரிந்தியர் 4:16). அவர் பரிசுத்த ஆவியின் உதவியால் கிறிஸ்தவர்கள் பெலப்படுத்தப்பட்டு புதிதாக்கப்படுகிறார்கள் என்று போதித்தார் (எபேசியர் 3:16; தீத்து 3:5).

புதிதாக்குதல் **கிறிஸ்தவனுக்கு உண்மையான அறிவைக்** கொண்டு வருகிறது. "... க்கு" என்பது "இஸ்" என்பதன் மொழியாக்கம், அதன் அடிப்படை அர்த்தம் "உள்" என்ற பொருளைக் கொண்டுள்ளது. அது ஆலோசனையாக இலக்கை அடைதல் அல்லது "திசையை நோக்கிப்" போதல் என்று காட்டுகிறது. புதிதாக்கப்பட்ட நபர் தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலில் "உண்மையான அறிவை" அடைகிறான் என்று பவுல் போதித்தார். பவுல் இந்தக் கருத்தை அநேகமாக சிருஷ்டிப்பிலிருந்து எடுத்திருக்கலாம் (ஆதியாகமம் 1:26, 27). புதிய மனுஷன் கிறிஸ்துவின் "சாயலைப்" பெறும்படி சிருஷ்டிக்கப்பட்டவன் அவன் தினசரி புதுப்பிக்கப்பட வேண்டியவனாயிருக்கிறான். இந்த புதுப்பிக்கப்படல் இல்லாத நிலையில் புதிய ஜீவன் முடிந்து போகும், மற்றும் அந்த நபர் தன்னுடைய முந்தைய வழியில் போய் விடக் கூடும்.

"அறிவு" (*epignōsis*) என்பது ஒருவரை இணங்க வைக்கத்தக்கதாக கள்ளப் போதகர்களின் போலியான அறிவுக்கு எதிரானது. அறிவையும் கிறிஸ்துவின் சாயலையும் பெற்றுக் கொள்வதின் விளைவு மீண்டும் மீண்டும் செயல்படுவதும் முன்னேற்றமடைவதுமான காரியம். ஒரு நபர் எந்தளவுக்கு இதில் சிறப்படைகிறாரோ அவ்வளவுக்கதிகமாய் அவர் இயேசுவைப் போலாக முடியும்; அவர் எவ்வளவாய் இயேசுவைப்போல் இருக்கிறாரோ அவ்வளவாய் அவரைப் பற்றிய அறிவு பெரிதாய் உண்டாயிருக்கும். அவருடைய தன்மையின் அறிவைப் பெற்றிருந்தால் மட்டுமே ஒரு கிறிஸ்தவன் இயேசுவைப் போல் மாறுவான்.

"புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்" (3:10இ)

வசனங்கள் 10, 11 பவுல் தனது பிற நிருபங்களில் சொன்ன வாக்கியங்களுடன் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளது. கலாத்தியர்கள் கிறிஸ்துவைத் "தரித்துக்" கொண்டதாக, அல்லது "அணிந்து கொண்டதாக" எழுதினார். **புதிய மனுஷனும்** கிறிஸ்துவும், ஆவிக்குரிய பொருளில், கிறிஸ்துவுக்குள் ஒருவன் ஞானஸ்நானம் பெறும் போது **தரித்துக் கொள்கின்றனர்** (2:12, 13; கலாத்தியர் 3:27). கொலோசெயர்கள் கிறிஸ்துவுக்குள் புதிதாகியிருந்தனர். அவர்கள் தங்களுடைய பழைய வஸ்திரங்களை களைந்து போட்டு புதிய ஆடையைத் "தரித்துக்" கொண்டார்கள்.

இந்த மாற்றம் ஒரு வித்தியாசப்பட்ட வாழ்க்கை முறையை கொண்டு வரவேண்டியதாயிருந்தது. கட்டுப்படுத்த இயலாத இச்சைகளில் வாழ்ந்து கொண்டிருந்த கடந்த காலத்தில் வாழ்ந்த மனுஷன், இனியும் இருக்கக் கூடாது;

புதிய மனுஷன் சுயகட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டியதிருந்தது. அவர்கள் தங்கள் வாழ்க்கையில் தீய ஒழுக்கங்களுக்கு இடமளிப்பதற்குப் பதில் கொலோசெயர் நல்லவைகளுக்கான கிரியை செய்யக் கூடியவர்களாயிருந்தனர். ஐசுவரிய வாலிபனின் பிரச்சனை கொலை பாதகமோ, விபச்சாரமோ, அல்லது கள்ள சாட்சிகளோ அல்ல, ஆனால் அவன் நற்கிரியை செய்வதில் ஈடுபாடு உடையவனாயிருக்கவில்லை, ஏழைகளைக் குறித்து அக்கறையில்லாமல் இருப்பது போன்ற காரியங்கள் அவனிடமிருந்தது (மத்தேயு 19:22).

கிறிஸ்துவைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொள்ளும் அநேகர் தங்களுடைய உலகத்துக்கடுத்த தீய செயல்களை களைந்து போட்டு விட்டதாகக் கூறுகின்றனர், ஆனால் அது போதுமானதல்ல. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் தங்களிடம் ஒழுக்கங்களை விருத்தியடையச் செய்து கிறிஸ்தவ சேவைகளிலும் மற்ற நேர்மறை காரியங்களில் கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்கவும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

கொலோசெயர்கள் புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டதோடு மாத்திரமல்ல, சிலுவையிலே கிறிஸ்துவின் மரணத்தினாலே சிருஷ்டிக்கப்பட்ட சமுதாயத்திலும் ஒரு அங்கமாகி இருந்தனர் (எபேசியர் 2:13). அவருடைய மரணம் நியாயப்பிரமாணத்தையும், யூதர்களுக்கும் புறஜாதிகளுக்குமிடையேயான பகையையும் அழித்துப் போட்டது, அதைத் தொடர்ந்து கிறிஸ்துவின் ஒரே சரீரமாகிய சபையை அவர்களுக்கு அளித்தார். பிரிவினைகளுக்குக் காரணமாயிருந்த முந்தின காரியங்கள் எதுவாயிருந்த போதிலும், இயேசு ஜனங்கள் ஒரே சரீரத்திற்குள் ஒன்றாகவும், அதாவது, அவருக்குள் ஞானஸ்நானம் பெறுவதன் மூலம், கிறிஸ்துவுக்குள்ளகும்படி பகைமையைத் தீர்த்துவைத்தார் (ரோமர் 12:5; 1 கொரிந்தியர் 12:13).

அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை (3:11அ)

***புதிதாக்கப்படுதல்** என்று பவுல் விவரிப்பது பழைய மனுஷனையே புதுப்பித்தல் என்று பொருளல்ல; பழைய மனுஷன் செத்துப் போகிறான். மாறாக, புதிய மனுஷன் தான் தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டியவனாயிருக்கிறான்.*

ஒரு கார் புதிதாக இருக்கலாம், ஆனாலும் அதன் ஓட்டுனர் அதன் எரிபொருள் கொல்களத்தை ஓட்டியதன் விளைவாக வெறுமையாக்குவார் மேலும் மறுபடியும் மறுபடியும் அந்தக்காலத்தை நிரப்ப வேண்டிய அவசியம் அவருக்கு உண்டு; நேரம் வரும்போது, அவர் சக்கரங்களின் டயர்களையும், பேட்டரியையும், அல்லது வேறு சில உதிரிப்பாகங்களையும் மாற்ற வேண்டிய நிர்பந்தம் அவருக்கு உண்டு.

***அதிலே** என்பது கிரேக்க வினையடைச்சொல் hopou, விலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, அதன் பொருள் "எங்கே" என்பதாகும். புதிதாக்கப்படுதலை அநுபவித்தவர்கள் ஒரு புதிய ஆவிக்குரிய இடத்தில் "அதிலே" - அல்லது "எங்கே" - இனம், தேசியம், மண்டலம், சமுதாயர்பிரிவு, மற்றும் சமுதாய வித்தியாசமில்லையோ அங்கே இருக்கிறார்கள். மனிதபார்வையில் இவைகளெல்லாம் நிலைத்திருப்பதில்லை என்று சொல்லப்படுவதாக பொருளல்ல; தேவனுடைய பார்வையில் இவைகள் இல்லாத இடம். கிறிஸ்தவர்கள் தேவனுடைய மனதைக் கொண்டிருக்க வேண்டியவர்கள்*

(எபேசியர் 4:1-3). எல்லாரும் அவருக்குள் ஒன்றாகும்படியாகவும் நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றதின் மூலம் இந்த வட்டாரத்திற்குள் பிரவேசிக்கிறோம் (கலாத்தியர் 3:26-28). இந்த உண்மையை பவுல் 1 கொரிந்தியர் 12:13லும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

3:5, 8, 9ல் பவுல் பட்டியவிட்டுள்ள தீய செயல்கள் வித்தியாசப்பட்ட இனபாகுபாடுகளை ஜனங்களிடையே தோன்றப்பண்ணி பிரிவினைகளையும் எல்லைகளையும் ஏற்படுத்துகின்றன, ஆகிலும் 3:12-14ல் அவர் வரிசைபடுத்தியுள்ள ஒழுக்கங்கள் அப்படிப்பட்ட பிரிவினைகளை தவிர்க்க உதவி புரியும். இந்த கூட்ட மக்கள் கிறிஸ்தவர்களாவதற்கு முன் பகையையும் சண்டைகளையும் கொண்டிருந்த போதிலும், இனியும் கொலோசெயர்களுக்குள்ளே வேறுபாடுகள் மங்கிப்போய், அந்த கிறிஸ்தவ சமுதாயத்துக்குள் அவை ஒரு பெரும் வழக்காயிருத்தல் கூடாததாயிருந்தது.

வசனம் 11ல் பவுல் முதலாவதாக புறஜாதிகளைக் குறிப்பிட்டார், அதினாலே யூதர்கள் தேவனுக்கு முன்பாக மற்றவர்களைக் காட்டிலும் முன்னிடம் பெறக் கூடியவர்களல்ல என வலியுறுத்தும்படி அப்படிச் செய்தார், வேறு இரண்டு பட்டியல்களில், பவுல் யூதர்களை முதலாவதாகக் குறிப்பிட்டார் பிறகு கிரேக்கர்களைக் குறிப்பிட்டார் (1 கொரிந்தியர் 12:13; கலாத்தியர் 3:28), இது சாதரணமாக அவர் வரிசைப்படுத்திக் காட்டும் முறை. (ரோமர் 1:16; 2:9, 10; 3:9, 29, 30; 9:24; 10:12; 1 கொரிந்தியர் 1:24). இதில் பெரும்பாலான வசனப்பகுதிகளில், அவர் இரண்டுவகையான ஜனங்களை மட்டுமே குறிப்பிட்டிருக்கிறார், அவர்களை யூதன் (யூதர்கள்) கிரேக்கர்கள் (கிரேக்கப் பண்பாட்டுக்குரியவர்கள்) - அதாவது, யூதர்கள் மற்றும் யூதரல்லாதோர், அல்லது புறஜாதிகள் என்று பிரித்திருக்கிறார். இந்த பட்டியல் பகுதியிலும் இதையே குறிப்பிட அவர் முயற்சித்திருக்கலாம், ஆனாலும் மற்ற கூட்டத்தாரையும் குறிப்பிட்டு எந்த கூட்ட மக்களெல்லாம் கிறிஸ்துவினால் சம அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டனர் என்பதை காட்டும்படி இப்படிக் குறிப்பிட்டார்.

பவுல் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கிற வேறுபட்ட கூட்டத்து மக்களெல்லாம் ஒரே மாதிரியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் மற்றும் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுடன் அதே நிலைப்பாட்டில் வைக்கப்பட வேண்டும் என்று அர்த்தப்படுத்த வில்லை. குறிப்பிடப்பட்ட தடைகள் எல்லாம் கிறிஸ்துவுக்குள் மாத்திரம் தகர்க்கப்பட்டது (கலாத்தியர் 3:28). நியாயப்பிரமாணத்தின் சுவரை அவர் தகர்த்து, சிலுவையின் மூலமாக தமக்குள்ளே ஒரே சரீரத்தில் இருப்பவர்களை தேவனுடன் ஒப்புரவாக்கக் கூடும்படி இப்படிச் செய்தார் (எபேசியர் 2:14-16). தேவன் பேதுருவிடத்தில் தாம் பட்சபாத முள்ளவரல்ல என்றும் கிறிஸ்தவர்கள் யூதக் கிறிஸ்தவர்களுக்கும் புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கும் இடையே பிரிவினைகளை ஏற்படுத்த வேண்டாம் என்றும் சொன்னார் (நடபடிகள் 10:34, 35; 15:7-11). பல்வேறு சந்தர்ப்பங்களில் கிறிஸ்துவுக்குள் இருந்த பல தரப்பட்ட மக்களுக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்தும் பொருட்டு பவுல் போராடினார்.[24]

புதிய ஜீவனுக்குள் பிரவேசிக்கும் வழி எல்லா கூட்டத்து மக்களுக்கும் ஒரே மாதிரியானது தான். யூதர்களும் பாவிகளாக இருந்தவர்கள்தான், புறஜாதிகளைக் காட்டிலும் அவர்கள் சிறப்பானவர்களாக

இருக்கவில்லை (ரோமர் 3:9, 10). இந்தக் காரணத்தால், தேவன் இரு திறத்தாருக்கும் இரட்சிப்பிற்குத் தேவைப்படுவைகளை கோருவதில் எந்த வித்தியாசமும் காட்ட வில்லை (நடபடிகள் 15:9, 11; ரோமர் 3:22) அல்லது தேவனோடு நட்புறவு வைப்பதில் அப்படி வித்தியாசம் காட்டவில்லை (ரோமர் 10:12). "எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத் தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள் அடைத்துப் போட்டார்" (ரோமர் 11:32).

"விருத்தசேதன முள்ளவனென்றும் விருத்த சேதனமில்லாதவனென்றுமில்லை" (3:11ஆ)

விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்கள் *எனும் வார்த்தை யூதர்களுக்குக் குறிப்பிடப்படுவது, அதிலே யூதமதத்தமைந்தவர்கள் உள்ளடக்கம், விருத்தசேதனம் பண்ணப்படாதவர்கள் என்பது அனைத்து யூதர்களல்லாதோரை, புறஜாதிகளை உட்படுத்தியது, பவுல் "விருத்த சேதனமில்லாமைக்கு" முன் "விருத்தசேதனமுள்ளவர்கள்" என்று பெரும்பாலான இடங்களில் குறிப்பிட்டுள்ளார், முதலாவதாக குறிப்பிடப்படுவதற்கு நியாயப்பிரமாணத்தின் கீழ் விருத்தசேதனம் பெற்றவர்களுக்கு பெரும் மதிப்பு கொடுக்கப்பட்டது தான் (காண்க ரோமர் 4:9-12; 1 கொரிந்தியர் 7:18, 19; கலாத்தியர் 5:6; 6:15). இரண்டு சம்பவங்களில் மட்டும் மாற்றி எழுதினார், எப்படியிருப்பினும், இந்த வித்தியாசம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதில்லை என்பதை வலியுறுத்தினார் (கலாத்தியர் 2:7; எபேசியர் 2:11). 1 கொரிந்தியர் 7:8அ வில் விருத்தசேதனத்தை முந்திக் குறிப்பிட்டவர் பிறகு வசனம் 18ஆ வில் வரிசையை மாற்றி எழுதினார்.*

யூதர்கள் கலாச்சார ரீதியாக பின்னடைவில் இருந்த அந்நியர்களை காட்டு மிராண்டி(கள்) என்றும் ஸித்தியர்(கள்) என்ற நாடோடி என்று நாகரீகமற்ற கூட்டமாகக் குறிப்பிட்டனர். நாகரீகமான, அல்லது நாகரீகமற்ற யூதரல்லாதோரை "விருத்தசேதனம் பெறாதவர்கள்" என்று குறிப்பிட்டது. கிரேக்கர்களைப் பொறுத்தமட்டில் அனைத்து கிரேக்கர் - அல்லாதவர்களை கிரேக்கர்கள் காட்டுமிராண்டிகள் என்று அழைத்தனர், ரோமர்கள் கூட முதலில் அப்படித் தான் அழைக்கப்பட்டனர். பின்னர், அவர்கள் கிரேக்க கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்ளத் துவங்கினபோது, ரோமர்களும் "கிரேக்கர்கள்" என்றழைக்கப்பட்டனர். அப்பொழுது ரோமகளும் கிரேக்கர்களும் கிரேக்க - ரோமக்கலாச்சாரத்துக்குப் புறம்பே இருந்த அனைவரையும் காட்டுமிராண்டிகள் என்ற ரீதியில் பார்த்தனர்.

"காட்டுமிராண்டி" என்னும் வார்த்தை (barbaros) புதிய ஏற்பாட்டில் வேறு இடங்களில் காணப்படுகிறது, அது சில வேளைகளில் "அந்நியர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (நடபடிகள் 28:2, 4; ரோமர் 1:14; 1 கொரிந்தியர் 14:11). அது கல்வியறிவு இல்லாதவர்களும் தெளிவாக பேச அறியாதவர்களும் அல்லது கலாச்சார ரீதியாக கற்றவர்களின் மொழியைப் பேச அறியாதவர்களுமாயிருந்தவர்கள், இயேசு "காட்டு மிராண்டித்" தனத்தை ஒழித்து "சகோதரர்" என்றழைக்கப்பட வழி வகுத்தார்.

"Barbarian[s]" *மற்றும்* "Scythian[s]" *"ஸ்கைத்தீனியர்" என்போர் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வசனம் 11ல் குறிப்பிடப்படுகிற மற்ற எதிரெதிரான கூட்டத்தாரைப்போல் இரண்டு கூட்டமல்ல. ஸித்தியர்கள்*

என்போர் காட்டுமிராண்டிகளாயிருந்தவர்கள். யூதர்களால், ரோமர்களும், கிரேக்கர்களும் அற்பமாய் கருதப்பட்ட மிகவும் கீழ்த்தரமான கொடிய காட்டுமிராண்டிகள் என்று சொல்லப்பட்டவர்கள், இவர்கள் கருங்கடலை சுற்றிலும் வாழ்ந்து கொண்டிருந்த நாகரீகமற்ற மலைஜாதியினர். ஒரு காட்டுமிருகத்தைப் போல பண்பில்லாத மக்களாய் வாழ்ந்தவர்கள் என்று ஜோசிபஸ் குறிப்பிட்டார்.[25]

ஸித்தியர்களைக் Scythians, குறித்து Herodotus எழுதியதாவது, "அவர்கள் தங்களுடைய எதிரிகளில், முதலில் கொல்லப்பட்டவனின் இரத்தத்தைக் குடித்தார்கள், மண்டை ஓட்டின் தோல்களை கை துடைக்கும் துணிகளாகவும் வெட்டப்பட்ட தலையின் மண்டை ஓட்டை குடிக்கும் பாத்திரமாகவும் பயன்படுத்தினர். மிக அருவருப்பான பழக்கங்களைக் கொண்டிருந்த அவர்கள் ஒருபோதும் தண்ணீரால் தங்களை சுத்தம் செய்து கொள்ள மாட்டார்கள்":[26] மற்ற எழுத்தாளர்களும் அவர்களுடைய மோசமான நடக்கைகளை உறுதி செய்தனர். அவர்கள் அருவெறுக்கத் தக்க ஜனங்களாயிருந்த போதிலும், கிறிஸ்தவர்களானபோது இயேசுவைப் பின்பற்றுகிற மற்றவர்களைப் போலவே சமமாக நடத்தப் பட்டார்கள். சமுதாயத்தில் எந்த ஒரு பகுதியில் வாழும் ஜனமாயிருந்தாலும் கிறிஸ்துவுக்குள் இணைக்கப்படமுடியும், அப்பொழுது இந்த பிரிவுகள் தடை செய்யப்பட்டவர்களாய்க் காணப்பட மாட்டார்கள், கிறிஸ்தவம் வித்தியாசங்களை அழிக்கவும் எல்லாரையும் ஒரே சகோதரத்துவத்துக்குள் கொண்டுவரவும் செயல்பட்டுள்ளது.

"அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை" (3:11இ)

அடிமைகளும் சுயாதீனமுள்ளவர்களும் கூட கிறிஸ்துவுக்குள் சமத்துவத்தைக் காணமுடியும். அவர் (கிறிஸ்து) அவர்களுக்கிடையே இருந்த பெரும் பிளவை எடுத்துப் போட்டு அதினால் அவர்கள் சகோதர சிநேகத்தில் இணைக்கப்பட்டிருக்கச் செய்தார். சிலுவையினிமித்தம் இருவருமே சுயாதீனமுள்ளவர்கள். பவுல் பயன்படுத்தியுள்ள வார்த்தையின்படி "சுயாதீனமுள்ளவன்" என்பது, அடிமையாயிருந்த ஒருவன் சுயாதீனம் பெற்றிருப்பதையும், அதே போல ஒருபோதும் அடிமையாக இருந்திராதவனையும் குறிக்கும். அடிமைத்தனம் ஒரு காலத்தில் இருந்திருந்த போதிலும், சமத்துவக் கொள்கைகள் மற்றும் கிறிஸ்துவுக்குள் காணப்படும் அன்பு போதிக்கப்படும் போது அவரால் அடிமைகள் மற்ற கிறிஸ்தவர்களோடு இணைக்கப்பட்டார்கள் மற்றும் முடிவில் அடிமைத் தனத்தை ஒழிப்பதில் வெற்றி சிறந்தது.

ரோமர்களிடத்தில் அநேக அடிமைகள் இருந்தார்கள், அவர்களில் பெரும்பாலானோர் யுத்தக் கைதிகளாக பிடித்து வரப்பட்டவர்கள். "அரிஸ்டாட்டலின் கருத்துப்படி ஒரு அடிமை என்பவன் பூர்வ கால உலகத்தில், சட்டரீதியாகப் பேசினால், ஒரு நபரல்ல அவன் ஒரு சொத்தாக அல்லது 'ஒரு வாழும் கருவியாக' வோ கூட இருந்தான் ..."[27] சில நேரங்களில் அடிமைகள் தங்கள் எஜமானர்களை விட அதிகமான கலாச்சாரப்பண்பு பெற்றவர்களாயிருந்தார்கள், அவர்கள் அநேகந்தரம் விலங்குகளைப் போல் நடத்தப்பட்டிருந்தார்கள். அவர்களில் சிலர் தங்கள் சுயாதீனத்தை கிரயம் கொடுத்து வாங்கமுடிந்தது அல்லது அவர்களின் சிறப்பான சேவையினிமித்தம்

ஒரு தயவை பெற்றனர். இது கிலாவுதியுராயனின் தாயார், அந்தோனியாளின் அடிமையாகிய பேலிக்ஸின் விஷயத்தில் உண்மையாயிருந்தது.

தேவன் ஜனங்களின் பாஷைகளை தாறுமாறாக்கினார், அதினால் ஜனங்கள் சிதறி உலகம் முழுவதும் பரவ ஏதுவாக்கிற்று (ஆதியாகமம் 11:1-8). மனித இனம் பிரிந்திருக்கக் கூடும் ஆனால் அதே வேளையில் ஐக்கியப்பட்ட குடும்பங்களின் கூட்டமாக வாழும்படி வகையில் அவர் இதைச் செய்தார். ஜனங்கள் தங்கள் பொல்லாத திட்டத்தை நிறைவேற்ற இயலாமல் செய்யும்படி சிதறடிப்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. இயேசுவின் பணியோ வித்தியாசமானது. அவர் நீதியால் ஜனங்களை ஒன்றிணைத்து தேவனை சேவிக்கச் செய்யவே அவர் வந்தார். ஒவ்வொருவரையும் இணைத்து ஒரே பூமிக்குரிய தேசமாக உருவாக்க அவர் வரவில்லை. அவர் தம்மைப் பின்பற்றி வருவோரை தமக்குள்ளாக ஒன்றாக்கவும் சகோதரத்துவத்தை ஏற்படுத்தும் பொருட்டு உலக முழுவதும் தம்மைப் பின்பற்றுவோர் உண்டாயிருக்கும் பொருட்டாகவும் அவர் அவர்களைப் பரிசுத்தமாக்கவே அவர் வந்தார். அவர் பிரிவினைக்கு இடமளிக்க வில்லை. மேலும் அவருடைய ஒரே சரீரத்திற்குள் பிரிவினையாகிய நடுச்சுவரை நிலைத்திருக்கவும் விடவில்லை.

“கிறிஸ்து எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்” (3:11ஈ)

கிறிஸ்து எல்லாரிலும், எல்லாமுமாயிருக்கிறார். எல்லாம் என்றால் என்ன? நேரடிப்பொருளில் சொன்னால் “கிறிஸ்துவே எல்லாக் காரியங்களாயும், எல்லா காரியங்களுக்குள்ளாகவும் இருக்கிறார்.” கிறிஸ்துவே “எல்லாம்” என்பது இந்தப் பிரபஞ்சம் அவரை நம்பியிருக்கிறது, ஏனெனில் அவரே அதை சிருஷ்டித்தவரும் தமது வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவருமாயிருக்கிறார் (எபிரெயர் 1:2, 3). அவரே “எல்லாமுமாக” கிறிஸ்தவர்களுக்குத் தேவையான சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் கொடுக்கிறவராயிருக்கிறார், அவர் “எல்லாரிலும்” இருக்கிறார், ஏனெனில் அவரது பிரசன்னத்தினாலும் வல்லமையினாலும் சகலமும் நடப்பிக்கப்படுகிறது (கொலோசெயர் 1:16, 17). அவரே “எல்லாரிலும்” இருக்கிறபடியால் சகல ஆவிக்குரிய மற்றும் சரீரத்திற்குரிய தேவைகள் அவரில் வாசம் பண்ணுவோருக்கு அளிக்கப்படுகிறது.

நிலைத்திருக்கும் சகலத்திலும் மட்டும் அவர் எல்லாமாக இருப்பதில்லை, மாறாக அவருக்குள் புதிதாக்கப்பட்டவர்களிலும் அவர் எல்லாமுமாக இருக்கிறார். கிறிஸ்தவர்கள் *யாராக என்னவாக* வெல்லாம் இருக்கிறார்களோ அவைகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக அவரையே சார்ந்திருக்கிறது, இந்தக் காரணத்தினால், கிறிஸ்தவ சமுதாயத்தில் எவ்வித பிரிவினைக் கோடும் பலதரப்பட்ட இனங்களின் தனிமங்களுக்கு இடையே வரையப்பட்டு விடக்கூடாது. கிறிஸ்து தமது ஜனங்களை ஒற்றுமையாக்க தேவையான சகலத்தையும் ஒழுங்கு செய்திருக்கிறார்.

பவுல் சொல்லணிக் கலையாக கேட்ட கேள்வி: “கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?” (1 கொரிந்தியர் 1:13அ) கிரேக்க மொழியில் இந்தக் கேள்வி ஒரு எதிர்மறைப் பதிலை எதிர்பார்த்து கேட்கப்பட்டதுபோல் உள்ளது. இதை வருகிற இந்தச் சொற்றொடர் போல் அமைக்கலாம்; கிறிஸ்து பிரிந்திருக்கவில்லை, அவர் பிரிந்திருக்கிறாரா? இதற்கு தெளிவாக பதில் அளித்தால், “இல்லை, அவர் பிரிந்திருக்க வில்லை,” என்பது தான்.

அவர் தம்மை பின்பற்றுவோருக்கு எல்லாமுமாக இருப்பாரானால் மற்றும் அவர்கள் எல்லாரிலும் இருப்பாரானால், பிறகு நாம் பிரிந்திருக்கக் கூடாது, ஏனெனில் அவர் பிரிந்திருக்க வில்லை. கிறிஸ்தவ சமுதாயத்தின் அனைத்துத் தனிமங்களிலும் ஒன்று பட்டிருக்க வேண்டும், சமூக தடைகள் எதுவாயிருந்த போதிலும் இதுவே உண்மை.

இந்த "எல்லா" எனும் இவ்வசனப்பகுதியில் வரும் வார்த்தையின் பகுதி அளவு நல்லவைகள் எல்லாவற்றிலும் தம்மைப் பின்பற்றுவோர் உட்பட எல்லாரிலும் இருக்கிறார். இங்கே குறிப்பிடப்படும் காரியம் அவர் வாசம் பண்ணுகிற எல்லா விசுவாசிகளையும் குறிக்கும் (யோவான் 17:23) ஆனால் சாத்தான் வாசம் பண்ணுகிற, அவருக்குப் புறம்பேயிருக்கிற மனுஷர் எல்லாரிலும் இருப்பதில்லை (யோவான் 8:44; 13:27), ஏனெனில் அவர் எல்லாமுமாக மற்றும் இவ்வுலகத்தின் எல்லா நல்ல காரியங்கள் எல்லாவற்றிலும் இருப்பதால், அவர் கிறிஸ்தவர்களுக்கு எல்லாமுமாக இருக்கிறார். நாம் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாயிருந்தால், பிறகு அவருடைய இந்த பிரபஞ்சத்தின் நல்லவைகளின் ஒரு பகுதியாக நாமும் இருக்கிறோம்.

தேவபக்திக்கான காரியங்களைத் தரித்துக்கொள்ளுதல் *(3:12-14)*

12 ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு, 13 ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். 14 இவை எல்லாவற்றின் மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்.

"ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய்" (3:12அ)

***ஆகையால்** (oun) எனும் வார்த்தை - "எனவே" என்றும் மொழிபெயர்க்கப்படும் - இதற்கு முந்திய வார்த்தையை திருப்பிப் பார்க்கச் செய்கிறது: "கிறிஸ்து எல்லாரிலும், எல்லாமுமாக இருக்கிறார்." கிறிஸ்து "எல்லாரிலும் எல்லாமுமாக," இருப்பதால் கொலோசெயர்கள் தங்களிடம் ஒழுக்கங்களை விருத்திசெய்து சகலத்திலும் போதுமானவராயிருக்கிற கிறிஸ்துவுக்கேற்றாற்போல் ஒற்றுமையை வளர்க்க வேண்டும். பவுல் தான் வசனம் 9, 10ல் குறிப்பிட்ட வாக்கியத்தை சுட்டிக்காட்டி அவர்கள் தங்கள் பழைய மனுஷனை களைந்து போட்டு புதிய மனுஷனைத் தரித்து கொண்டிருப்பதைப் பேசியிருக்கக் கூடும். இதைச் செய்ததினால், அவர்கள் புதிய மனுஷனுக்குரிய தன்மையின் நல்லொழுக்கங்களை எடுத்துக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையை புதியதாய் சிருஷ்டித்துக் கொள்ள வேண்டும்.*

கொலோசெயிலிருந்த கிறிஸ்தவர்கள் தெரிந்துகொள்ளப் பட்டவர்களாயிருந்தார்கள் (eklektoi). ஒரு நபர் தெரிந்து கொள்ளப்பட வேண்டுமாயின் குறிப்பிட்ட தகுதியாம்ஸங்களைப் பெற்றுக் கொள்ள

வேண்டும். யூதாஸிற்குப் பதிலாக ஒருவன் தெரிந்தெடுக்கப்பட்ட போதும், பந்திவிசாரணை செய்ய தெரிந்து கொள்ளப்பட்ட ஏழுபேர் விஷயத்திலும் இது உண்மையாக இருந்தது (நடபடிகள் 1:21-25; 6:5). தேவனால் தெரிந்து கொள்ளப்பட தகுதியுடையவராக வேண்டுமாயின், ஒரு நபர் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும் (எபேசியர் 1:4). கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஜனங்கள் அவருக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள், இப்படியாக அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். கொலோசெயர்கள் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள் (2:12), ஆதலால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்குள் அவர்களும் இருந்தார்கள். கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்களைத் தேவன் தெரிந்து கொள்ளவில்லை.

"தெரிந்து கொள்ளப்படுதல்" "தேர்ந்தெடுத்தல்" ஆகியன இரட்சிப்புக் கென்று முன்பதாகவே தெரிந்து கொள்ளப்பட்டவர்களல்ல என்பதைப் பவுல் 2 தீமோத்தேயு 2:10ல் தெரிந்து கொள்ளுதலைக் குறித்து சொல்லும் வாக்கியமானது தெளிவாக்குகிறது: "ஆகையால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாக சகிக்கிறேன்," என்றார். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டவர்களாயிருந்தால், அவர்கள் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி பவுல் ஏன் அநேக பாடுகளை அவர்களினிமித்தம் சகிக்க வேண்டும்? இஸ்ரவேலர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்று ஏன் அவர் ஜெபிக்க வேண்டும் (ரோமர் 10:1-3). சிருஷ்டிப்புக்கு முன்பாக இத்தனை பேர்தான் பூமியில் இரட்சிக்கப்பட வேண்டுமென்று முன் தீர்மானித்திருந்தால் ஏன் அப்படி ஜெபிக்க வேண்டும்? குறிப்பிடப்பட்டுள்ளபடி, தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மற்றும் இரட்சிக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்களாகிறார்கள், ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவுக்குள் வர ஜனங்களுக்கு தெரிவு செய்யும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் ஒருவராக இருக்கக் கூடும்.

கிறிஸ்துவுக்குள் வருவோர் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு தேவன் முன் குறித்திருக்கிறோம் (ரோமர் 8:29). இவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் - தாம் துவக்கத்திலிருந்தே அறிந்திருந்தவர்கள், அவர்கள் சத்தியத்தை விசுவாசிப்பவர்கள் (2 தெசலோனிக்கேயர் 2:13), அதாவது தங்கள் இரட்சிப்பின் சுவிசேஷத்தை விசுவாசிப்பவர்கள் (எபேசியர் 1:13). இந்த சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் (2 தெசலோனிக்கேயர் 1:7-9). கீழ்ப்படியவும் கீழ்ப்படியாமற் போகவும் ஜனங்களுக்கு தெரிவு செய்து கொள்ளும் உரிமை உண்டு, மற்றும் அப்படிச் செய்ய விரும்புகிற எவரும் "ஜீவத் தண்ணீரை இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளக் கூடும்" (வெளிப்படுத்தின விசேஷம் 22:17). தேவன் தமது சித்தத்திற்கு ஜனங்கள் பதில் செயல் செய்யும்படி விரும்புகிறார் (2 பேதுரு 3:9), ஆகிலும் அவர் அவர்களை கீழ்ப்படிய பலவந்தம் பண்ணுவதில்லை. இயேசு எருசலேமை பார்த்து அழுதார் (லூக்கா 19:41) ஏனென்றால் அவர் அவர்களைத் தம்மிடமாய்ச் சேர்த்துக் கொள்ள ஆசையாயிருந்தார், ஆனால் அவர்களுக்கோ அவரிடத்தில் வர மனமில்லை

(மத்தேயு 23:37). இயேசு அவர்களைத் தெரிந்தெடுத்தார், ஆகிலும் அவர்கள் அவரை புறந்தள்ளினார்கள், ஒவ்வொருவருக்கும் சுயமாய் தெரிந்து கொள்ளும் உரிமையிருக்கிறது.

இந்தத் தெரிந்து கொள்ளுதலை விவரிக்க இரண்டு கூடுதல் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிரேக்க வார்த்தையான hagioi, *இங்கே* **பரிசுத்தம்** *என்று மொழிபெயர்க்கப்பட்டது,* **பரிசுத்தவான்கள்** *என்றும் வசனங்கள் 1:2, 3, 12, 27 ஆகியவைகளில் மொழிபெயர்க்கப்பட்டது,* **பிரியர்** *எனும் வார்த்தை (ēgapēmenoi), பவுலால் வேறு இடங்களில் துல்லியமாக பேசப்படுகிறது (1 தெசலோனிக்கேயர் 1:4; 2 தெசலோனிக்கேயர் 2:13), இதன் பொருள் அவர்கள் நேசிக்கப்பட்டவர்களும் தொடர்ந்து தேவனால் நேசிக்கப்படக்கூடியவர்களாகவுமிருக்கிறார்கள். இந்த இரண்டு பதங்களும் தேவனோடு அவர்களுக்குள்ளே நட்புறவு முறை சுய விளக்கமுடையவை.*

இந்த சகோதரர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்குள் இருந்தார்கள், "ஆகையால்" - "எனவே" - அவர்கள் தேவனுடைய பரிசுத்தராயும் பிரியமுள்ளவராயும் ஜீவிக்க வேண்டியவர்கள், அவர்கள் தேவனுக்கு விசேஷமானவர்களாயிருந்தார்கள். அவர்கள் மற்றவர்களைப் போல பொதுவானவர்களும் (தீட்டுள்ளவர்கள்) சாதாரணமானவர்களுமாயிராதபடியால், ஆனால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், உலகத்தின் தீய செயல்களிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டவர்களுமாயிருந்தபடியால், மிக உயர்ந்ததும் சிறப்பானதுமான ஆவிக்குரிய ஒழுக்கங்களை அவர்கள் முன்மாதிரியாகக் காட்ட வேண்டியவர்களாயிருந்தார்கள். இந்த தகுதியாம்ஸங்களெல்லாம் அவர்களை உயர்பண்புடையவர்களாக அவர்களுடைய சமுதாயத்தில் காட்டும்.

"உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு" (3:12ஆ)

("உருக்கமான" என்பது உள்ளத்தில் அல்லது இருதயத்தில் என்று ஆங்கில மொழிபெயர்ப்பு கூறுகிறது. அதன் நேரடி வார்த்தை தமிழ் திருமறையில் இல்லை. எனவே "உருக்கமான" என்ற தலைப்பிலேயே கவனிக்கவும்.)

உருக்கமான ***(இருதயத்தில்)*** *என்று இங்கே சொல்லப்பட்டிருப்பது வழக்கமாக "இருதயம்" என்பதற்கு பயனப்படுத்தப்பட்ட வார்த்தையான* kardia, *அல்ல. இந்த வார்த்தை* splagchnon, *என்பது நேரடிப் பொருளில் "குடல்கள்"* (bowels) *(காண்க KJV). எப்பொழுதும் ஏறத்தாழ இவ்வார்த்தை பன்மையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது, இந்த வார்த்தை ஒரு மனிதனுடைய உள்ளான பகுதிகளை, யூதாஸ் காரியோத்தின் "குடல்கள்" பற்றி சொல்லப்பட்டிருப்பது போல் பேசப்படுகிறது (நடபடிகள் 1:18). அதே வார்த்தை "இருதயம்" என்று பிலேமோனில் சொல்லப்படுகிறது (பிலேமோன் 7, 12, 20க்கான விளக்கவுரையைக் காண்க) மேலும் 1 யோவான் 3:17; ஆனால் வேறு சம்பவங்களில், மனம் இளகுதல் ("இரக்கத்தின்" மாற்று வார்த்தை; லூக்கா 1:78) மற்றும் "உருக்கமான பட்சம்" (2 கொரிந்தியர் 6:12; 7:15; பிலிப்பியர் 1:8; 2:1). பவுல் இங்கே இரக்கத்துடன் சேர்த்து சொன்னார். கிரேக்க மற்றும் எபிரேய கருத்தில், பல்வேறு உணர்ச்சிகரமான நிலைகள்*

சரீரத்தின் வித்தியாசப்பட்ட பகுதிகளுடன் சம்பந்தப்பட்டுள்ளன - உடலின் உட்பாகங்கள், ஈரல், நுரையீரல்கள், மற்றும் இருதயம் ஆகியவைகளுடன் சம்பந்தப்பட்டவை, கிரேக்கர்கள் உடலின் உட்பகுதிகளை கோபம் அன்பு போன்ற உணர்வுகளின் உறைவிடமாகக் கருதினர். எபிரெயர்கள் உடலின் உட்பகுதிகளை பாசம், அனுதாபம், இரக்கம், மற்றும் அன்பு ஆகியவற்றின் மூல (உற்பத்தி) ஸ்தானமாகக் கருதினர்.

இந்த வார்த்தையின் ஒரு அமைப்பு (splagchnizomai), "இரக்கத்தை உணருதல்," என்பது தேவையுடையோரினிமித்தம் இயேசு கொண்டிருந்த எண்ணத்தை வெளிப்படுத்துகிறது (மத்தேயு 9:36; 14:14; மாற்கு 1:41; 8:2; லூக்கா 7:13). மற்றவர்களின் தேவைகளைக் கண்டு உள்ளத்தால் தொடப்பட்டவர்களைக் குறித்த உவமைகளை விளக்கப்படுத்த இயேசு இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார் (மத்தேயு 18:27; லூக்கா 10:33; 15:20).

இரக்கத்தை *(oiktirmos) என்பது இரக்கத்தின் செயலாக, அனுதாபம், அக்கறை, மற்றும் ஜனங்களுடைய பிரச்சனைகளைக் குறித்த விழிப்புணர்வு ஆகியவை வெளிப்படுத்தப்படுகிறது. இந்த வார்த்தை இரக்கத்தின் உணர்வாக மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது, விசேஷமாக மற்ற பாடுபடுகிறவர்களுக்குக் காட்டுகிற பரிவு, அல்லது உதவி தேவைப்படுவோருக்கு இரங்குதல், என்பதை அர்த்தப்படுத்துகிறது. அது ஒரு இளகிய மற்றும் அன்புள்ளம் கொண்டவராயிருத்தல் மூலமாக ஜனங்கள் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டு ஆழ்ந்த அனுதாபம் காட்டல்.*

Splagchnon மற்றும் oiktirmos ஆகியவை சேர்ந்து ஒன்றாக நேரடிப் பொருளில் "உடலின் உட்பகுதியின் இரக்கம்" எனப்படுவது. அவைகளை "இருதயத்தால் இரக்கப்படுதல்" என்று மொழிபெயர்ப்பது சிறப்பானது.

தயவு *(chrēstotēs) இதன் பொருள் உதவிகரம், உயர் பண்புடமை, மனம் இளகுதல், நேர்மை, அல்லது நற்குணம் ஆகியன - தேவனுடைய இயல்பின் தகுதியை விளக்கப்படுத்துகிறது (லூக்கா 6:35; ரோமர் 2:4; 11:22; 2 கொரிந்தியர் 6:6; எபேசியர் 2:7; தீத்து 3:4) மேலும் கிறிஸ்தவர்கள் விருத்தி செய்து கொள்ள வேண்டிய தகுதியும் இதுவே (கலாத்தியர் 5:22). இயேசு தயவுக்கு உதாரணமாக தேவனை உதாரணப்படுத்தி தமது சீஷர்களை பின்பற்றச் செய்தார் (லூக்கா 6:35). சங்கீதம் 14:1ஆ வை மேற்கோள் காட்டி, பவுல் எழுதினார், "நன்மை செய்கிறவன் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:12ஆ). ஒருவகையில் கிறிஸ்தவர்கள் இந்தத் தனிப் பண்பை முழுமையாய் அடைந்து விடமுடியாது; இருப்பினும் தேவனுடைய உதவியுடன், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நாம் அதை முன்னேற்றம் செய்து கொள்ள முடியும்.*

அடுத்த நல்லொழுக்கம் ***மனத்தாழ்மை*** *(tapeinophrosunē). இந்த வார்த்தை தன்னையே ஒருவர் தாழ்ச்சியுடன் எண்ணி நடந்து கொள்வது அது தவறான மனத்தாழ்மைக்கு ("மாயமான தாழ்மை"; 2:18, 23), பெருமை மேட்டிமை, மற்றும் கர்வம் ஆகியவைகளுக்கு முரணானது. கொலோசெயர் புத்தகத்திற்கு அப்பால், புதிய ஏற்பாட்டில் இது நான்கு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது (நடபடிகள் 20:19; எபேசியர் 4:2; பிலிப்பியர் 2:3; 1 பேதுரு 5:5அ). இந்த வார்த்தையின் மாற்று வார்த்தைகள் கிரேக்க புதிய ஏற்பாட்டில் காணுகிறது. இயேசு தாமே தம்மை "மனத்தாழ்மையுள்ளவராக" மத்தேயு 11:29ல் சொன்னார். பவுல் இயேசு தம்மைத் தாமே "தாழ்த்தி"*

மரணபரியந்தம் கீழ்ப்படிந்திருந்தார் என்று எழுதினார் (பிலிப்பியர் 2:8, 9), பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், "தாழ்மையுள்ளவர்களுக்கோ" கிருபையளிக்கிறார் (1 பேதுரு 5:5ஆ, 6).

தாழ்மையாயிருந்த ஜனங்கள் பொதுவாக கிரேக்கராலும், ரோமர்களாலும், மற்ற அஞ்ஞான உலகத்தாராலும் பரியாசம் செய்யப்பட்டார்கள்; அவர்கள் பெலவீனர்களாயும் கோழைகளாயும் கருதப்பட்டார்கள். திருமறை கருத்தில், எப்படியிருப்பினும், தாழ்மை மற்றவர்களுடன் ஒப்பிடும் போது தன்னை விலைமதிப்பிடுவதாகவும் தேவனுடைய கண்களில் எல்லாருமே சம மதிப்புள்ளவர்கள் என்று ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. தாழ்மையுள்ளவர்கள் ஏதாவது உயர்ந்த சிறப்பு திறமை தன்னிடத்தில் இருந்தால் அது தேவனிடத்திலிருந்து அவர்கள் அந்தக் திறமைகளைப் பெற்றுக் கொண்டதாகவும் அது அவர்களுடைய சுயமான முயற்சியால் வரவில்லை, என்றும் சொல்லுவார்கள் (1 கொரிந்தியர் 4:7).

இயேசுவிடம் போய்ச் சொல்லும்படி நூற்றுக்கதிபதி ஆட்களை அனுப்பி "... நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல" (லூக்கா 7:6). என்று சொன்னபோது அவன் தாழ்மையைக் காட்டினான் இயேசு தமது உவமையில் பயன்படுத்திய நபர்களில் ஒருவனாகிய ஆயக்காரன் "தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்" என்று சொன்ன போது தனது தாழ்மையைக் காட்டினான் (லுக்கா 18:13). எபேசு பட்டணத்து மூப்பர்களிடம் பவுல் தான் வெகுத்தாழ்மையுடன் தேவனை சேவித்ததாகக் குறிப்பிட்டார் நடபடிகள் (20:19). அவர் பிலிப்பியர்களுக்கு புத்திமதி சொல்லும்போது. "... மனத்தாழ்மையினாலே ஒருவரையோருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக் கடவீர்கள்" என்றார் (பிலிப்பியர் 2:3).

சாந்தம் *(prautēta)* என்பதை "ஒருவருடைய சுய முக்கியத்துவம், சாந்தம், மனத்தாழ்மை, மரியாதை, பிறரின் எண்ணங்களுக்குக் மதிப்பளித்தல் ஆகியவைகளினால் ஒரு அளவுக்கு அதிகமாக மன நெகிழ்ச்சி அடையாதத் தன்மையை விளக்கப்படுத்துகிறது."[28] கிறிஸ்தவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டியதும் ஆசைப்பட வேண்டியதுமான இந்தத் தகுதியை பவுல் அடிக்கடி தனது போதனையில் சேர்த்துக் கொண்டிருந்தார்.[29] சாந்தகுணமுள்ளவர்கள் பெரிதும் மன இரக்கம் உள்ளவர்களாகவும், அன்புடையவர்களாகவும், இளகிய மனமுடையவர்களாகவும், சிந்திக்கப்பட வேண்டிய அவர்களுடைய இயல்பான பண்புகளும் உடையவர்களாயிருப்பார்கள். அவர்கள் கடுமையானவர்களும் மரியாதையில்லாதவர்களும் மற்றும் மூர்க்கமானவர்களுமாய் இருப்பதில்லை - இதனால் அவர்கள் பெலவீனமானவர்கள் என்று அர்த்தமல்ல.பெலவீனமுள்ள ஒருவன் மேஜையின் மேல் உள்ள இருநூறு பவுண்டு எடையுள்ள பொருளை கவனமாக தூக்கி கீழே தரையின் மேல் வைப்பது இயலாத காரியம்; பலசாலியாயுள்ள ஒரு நபர் மட்டுமே அதைச் செய்ய முடியும். ஜனங்கள் கொடூரகுணமுள்ளவர்களாயும், அன்பில்லாதவர்களாயும், வெறுப்புக்குணமுடையவர்களாயும், அல்லது மரியாதையற்றவர்களாயும் இருக்கும் போது சாந்தமாய் இருக்க வேண்டுமாயின் உள்ளான பலம் தேவை.

இந்தப் பட்டியலின் கடைசி தகுதி நீடிய **பொறுமை.** இங்கே பயன்படுத்தப்படுகிற கிரேக்க வார்த்தை *(makrothumia)*

பின்வருமாறு விளக்கப்படுத்தப்படுகிறது, "கோபமுறுத்தும் சூழ்நிலையிலும் சகிப்புத் தன்மையுடன், நீடிய பொறுமையாய், மற்றவர்களுடன் அமைதியாய் நடந்து கொள்ளும் தன்மையுடன் இருப்பது."[30] பொறுமையாய் இருப்பவர்கள் தவறாக நடத்தப்பட்டாலும் சகித்துக் கொள்ள விருப்பமுள்ளவர்களாயிருப்பார்கள், கஷ்டமான சூழ்நிலைகள் வரும்போது உறுதியாய் இருப்பார்கள். இந்த வார்த்தை தேவனாலும் இயேசுவாலும் மனிதகுலத்தை தெய்வீகமாய் நடத்துதலைக் குறிக்கிறது (ரோமர் 2:4; 9:22; 1 தீமோத்தேயு 1:16; 1 பேதுரு 3:20; 2 பேதுரு 3:15), அதே போல கிறிஸ்தவர்கள் கொண்டிருக்க வேண்டிய தகுதியும் கூட (2 கொரிந்தியர் 6:6; கலாத்தியர் 5:22; எபேசியர் 4:2; 2 தீமோத்தேயு 4:2). யாக்கோபு பொறுமைக்கு மாதிரியாக பயிரிடுகிறவர்களையும், தீர்க்கதரிசிகளையும், யோபையும் குறிப்பிட்டார் (யாக்கோபு 5:7, 10, 11). ஆகிலும், இயேசுவே மிகப் பெரிய உதாரணமாயிருக்கிறார்: "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேதுரு 2:23). "தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களை" அவர் சகித்தார் (எபிரெயர் 12:3).

இன்னல்களும் சோதனைகளும் தங்கள் நடத்தைகளை விருத்தி செய்து கொள்ள கிறிஸ்தவர்களுக்கு உதவிடக்கூடும் (ரோமர் 5:3, 4; யாக்கோபு 1:2-4). வேதனைகளையும் சோதனைகளையும் அல்லது பரீச்சைகளையும் தங்கள் வாழ்க்கைச் சூழலில் பொறுமையாய் சகிப்பவர்களுக்கே இது உண்டாகிறது (1 கொரிந்தியர் 4:12; 1 பேதுரு 2:20). "அந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதானப் பலனைத் தரும்" (எபிரெயர் 12:11).

கொலோசெயர்கள் ஏற்கெனவே "புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருந்தார்கள்" (3:10), ஆனாலும் அவர்களுடைய பண்புகளில் உடனடியான மாற்றம் எதையும் உண்டாக்கியிருக்கவில்லை. புதிய நபருக்குரிய சில பண்புகளை அவர்கள் தரித்துக் கொள்ள வேண்டியதிருந்தது. அவர்கள் அசுத்தமான, பாவமான நாடோடிகளிலிருந்து கிறிஸ்துவின் இராஜ்யத்தின் சுதந்திரராய் மாற்றப்பட்டிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய பழைய அழுக்கான ஆடைகளிலேயே தொடர்ந்து இருக்கக் கூடாதிருந்தது, ஆனால் கறையற்ற ஆடைகளாகிய புதிய வாழ்க்கையைத் தரித்துக் கொள்ள வேண்டியவர்களாயிருந்தார்கள்.

தரித்துக் கொண்டு *(endusasthe)* என்பது கொலோசெயர்கள் வசனப்பகுதியில் சொல்லப்பட்ட நல்லொழுக்கங்களைத் ("ஆடையைப்போல") தரித்துக் கொள்ள வேண்டிய ஒரு கட்டளையின் வலியுறுத்தலாக இருந்தது. இது தேவனுடைய பரிசுத்தரும் பிரியருமாய் மாற்றப்பட்ட தன்மைக்கு முரண்படாதது. அவர்கள் யாராக இருந்தார்கள் என்பதால், ஆவிக்குரிய முறையில் அவர்கள் வித்தியாமானவர்களாக இருக்க எதிர்பார்க்கப்பட்டனர்.

"பவுலால் பாராட்டுப்பெற்ற நல்லொழுக்கங்கள் சரி எதிராக கண்டனம் பண்ணப்பட்ட தீய ஒழுக்கங்களுக்கு முன் இருக்கின்றன - சமுதாயக் கிருபைகள், சமுதாய பாவங்களெல்ல."[31] வசனங்கள் 8, 9ல் வரும் காணப்படக் கூடாத தீய ஒழுக்கங்கள் மற்றும் வசனங்கள் 12 லிருந்து 14ல் வரும் இருக்க

வேண்டிய நல்லொழுக்கங்கள் கிறிஸ்தவ நடத்தைகளுக்கு மாத்திரமல்ல ஐக்கியத்துக்கும் அவசியமானவை. கோபம், மூர்க்கம், பொறாமை, தூஷணம், வம்பு வார்த்தைகள், மற்றும் பொய் ஆகியவையெல்லாம் ஒரு சமுதாய ஜனங்களை துண்டு துண்டுகளாக பிரித்து விடும்; இவைகள் இல்லாதிருப்பதே ஐக்கியத்திற்கான அடிப்படை. இரக்கம், தயவு, மனத்தாழ்மை, சாந்தம், பொறுமை, சகிப்புத் தன்மை, மன்னித்தல், மற்றும் அன்பு ஆகியவைகளின் அஸ்திபாரத்தின் மேல் ஒற்றுமை கட்டியெழுப்பப்பட முடியும். இந்த நல்லொழுக்கங்கள் புறந்தள்ளப்பட்டு தீயொழுக்கங்கள் கைக் கொள்ளப்படுவதால் அவை குழப்பத்தையும் பிரிவினையையும் மட்டுமே கொண்டு வரும்.

கொலோசெயர்கள் தங்கள் வாழ்க்கையில் பெருக்கிக்கொள்ள வேண்டிய நல்லொழுக்கங்கள் மூன்று பிரிவுகளாக காணப்படுகின்றன: (1) மற்றவர்களிடம் காட்ட வேண்டிய மனப்பான்மை - உருக்கமான இரக்கம், தயவு, சாந்தம், மற்றும் அன்பு (2) தனக்குள் கொண்டிருக்க வேண்டிய மனப்பான்மை - தாழ்மை; மற்றும் (3) தீமையாக நடத்தப்படும் போது செயல்படும் எதிர் கிரியை - பொறுமை, சகிப்புத் தன்மை, மற்றும் மன்னித்தல். முதல் ஐந்தும் மனப்பான்மையையும், கடைசி மூன்றும் மற்ற ஜனங்களிடம் காட்ட வேண்டிய பொறுப்புணர்வையும் உட்படுத்தியுள்ளன. கொலோசெயர்கள் குறிப்பிட்ட தகுதியாம்ஸங்களைத் தரித்துக் கொள்ள வேண்டியவர்களாயிருந்தார்கள் (3:12-14) மேலும் குறிப்பிட்ட சில காரியங்களை நடப்பிக்கவும் வேண்டியவர்களாயிருந்தார்கள் (3:15-17). அதே போல தீய ஒழுக்கங்கள் ஒருவரின் சுயத்திலும், மற்றவர்கள் மீதும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும், அதுபோலவே நல்லொழுக்கங்களும் அவைகளுக்கென பாதிப்புக்களைக் கொண்டிருக்கின்றன.

“ஒருவரையொருவர் தாங்கி ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்குமன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்” (3:13)

சகிப்புத் தன்மையும் மன்னித்தலுமாகிய நல்லொழுக்கங்களை தொடர்ந்து வளர்த்துக் கொள்ள கொலோசெயர்கள் எதிர்பார்க்கப்பட்டனர். **ஒருவருக்கொருவர் தாங்கி** (*anechomai*) என்பதன் பொருள் சகித்துக்கொள்ளுதல் - கஷ்டங்களையும் கோபமூட்டுதலையும் சகித்துக்கொள்ள சித்தமுள்ளவர்களாயும், அதேபோல மற்றவர்களால் சினமூட்டப்படும் சூழ்நிலைகளிலும் பொறுமையாய் நடந்துகொள்ளுதல் என்பதாகும். எபேசியர் 4:2ல் பவுல் அன்பினால் ஒருவரையொருவர் தாங்க வேண்டும் என்று அன்பை சேர்த்துச் சொல்லுகிறார். தமது பொறுமையை சோதிக்கத்தக்கதாக செயல்பட்டவர்களுடன் இயேசு பொறுமையோடே சகித்தார் (மத்தேயு 17:17; மாற்கு 9:19; லூக்கா 9:41). அவரைப் பின்பற்றுவோர் உபத்திரவங்களையும் அல்லது தொல்லைகளையும் சகிக்க வேண்டியதாகலாம் (1 கொரிந்தியர் 4:12; 2 தெசலோனிக்கேயர் 1:4; 2 தீமோத்தேயு 3:12). மேலும் நாம் அவமதிப்புக்களையும் கெடுதிகளையும் மற்றவர்களால் விளைவிக்கப்படுவதை விசுவாசத்தினிமித்தம் சகித்துக் கொள்ள தயாராக இருக்க வேண்டும்.[32] நேர்மறையில் பேச வேண்டுமானால் “தாங்கிக்”

கொள்ள வேண்டுமென்பது கனிவுடன் வெறுப்பையும் சகித்துக் கொண்டு, பழிவாங்குவதற்குப்பதிலாக ஆசீர்வதிக்க வேண்டியது (லூக்கா 6:28; ரோமர் 12:14; 1 பேதுரு 2:21-23). எதிர்மறையில் சொன்னால், அன்பற்றமுறையிலோ அல்லது தவறாகவோ நடத்தப்படும் போது கலக்கமடையவோ கோபப்படவோகூடாது. கொலோசெயர்கள் மற்றவர்களால் தவறாக நடத்தப்படும் போது தங்களுடைய தகுதியை மீறி நடக்கக் கற்றுக்கொள்ளக் கூடாதவர்கள், மாறாக சகிப்புடன் கூடிய ஆவியுடையவர்களாய் நடந்து கொள்ள வேண்டும்.

சக கிறிஸ்தவர்களிடம் சகிப்புத்தன்மையைக் காட்ட வேண்டும். பெரும்பாலும் ஜனங்கள் அடுத்தவர் மனம் புண்படும்படி அல்லது பாதிக்கப்படும்படியான காரியங்களை நடப்பிப்பார்கள். கிறிஸ்தவர்கள் அவர்கள் சகோதரரைப் பொறுத்துக் கொள்ளத்தக்க எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும், பவுல் **ஒருவரையொருவர்** *மற்றும்* **ஒருவருக்கொருவர்** *என்னும் வார்த்தையைப் பயன்படுத்தி விசுவாசிகளின் சமுதாயத்தில் நிலைத்திருக்கத்தக்க நெருக்கத்தை வெளிப்படுத்தினார். கிறிஸ்துவுக்குள் சகோதரர்களாக சகோதரிகளாக, நாம் சில குடும்பங்களில் இருப்போர் தங்களைச் சுற்றிலும் இருப்பவர்களைக் காட்டிலும் தங்கள் குடும்பத்தாரிடம் மிகவும் புண்படும் படி நடந்து கொள்வதுபோல, நடந்து கொள்ளாதபடி எச்சரிக்கையாக நாம் இருக்க வேண்டும்.*

ஒருவருக்கொருவர் **மன்னியுங்கள்** *(charizomai; charis என்பதலிருந்து தொடர்புடைய சொல்) என்பது "கொடுத்தல்," "அளித்தல்," அல்லது "படைத்தல்" என்றெல்லாம் பொருள்படக் கூடும் (காண்க லூக்கா 7:21; ரோமர் 8:32; 1 கொரிந்தியர் 2:12; கலாத்தியர் 3:18; பிலிப்பியர் 1:19; 2:9; பிலேமோன் 22) அல்லது "இன்னொருவருடைய பாதுகாப்பில் ஒருவரை ஒப்படைப்பது" (நடபடிகள் 3:14; 25:11, 16). அது ஒரு கடனை மன்னிப்பது போலவோ அல்லது இங்கே குறிப்பிடுவது போல மற்றவர்களை பாதிக்கும் செயலை செய்வதற்காகவோ மன்னிப்பதைக் குறிப்பிடலாம் (லூக்கா 7:42, 43; 2 கொரிந்தியர் 2:7, 10; எபேசியர் 4:32). "பாவமன்னிப்பிற்கென்று" அடிக்கடிப் பயன்படுத்தப்படும் வார்த்தை இது அல்ல, அது aphesis; ஆகிலும் இது பாவமன்னிப்பைக் குறித்த நிறைவான பொருளைக் கொடுக்க வல்லது, இதுதான் லூக்கா 7:42ல், "இரக்கத்துடன் மன்னித்தல்" என்று பொருள்பட மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, பவுல் கொலோசெயர்கள் தொடர்ந்து ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டியவர்கள் எனும் பொருளில் ஒரு வார்த்தையை அமைத்துப் பேசினார்.*

மன்னிப்பைக்குறித்த தமது போதனையில், இயேசு அடிக்கடி பயன்படுத்திய வார்த்தைகள் aphesis ("மன்னித்தல்") மற்றும் aphiēmi ("மன்னிக்கும்படி") என்பவைகள். நாம் மற்றவர்களை மன்னிக்கும் செயல் ஒழுக்கரீதியாக முடிவுபெறாதவைகளாக இருக்கவேண்டும்: "ஏழு எழுபது முறை" (மத்தேயு 18:22). இந்தக் கருத்தை அவர் தனது எஜமானனால் பெரிய கடன் தனக்கு மன்னிக்கப்பட்டும், தனது உடன் வேலையாட்கள் தங்களுடைய சிறிய கடனை தனக்குத் திருப்பிக் கொடுக்கும் படி நிர்ப்பந்தம் பண்ணின ஊழியக்காரனைப் பற்றிய உவமை மூலம் விளக்கப்படுத்துகிறார். எஜமானன் மற்றவர்களை மன்னிக்காத ஊழியக்காரனைத் தண்டித்தான் (மத்தேயு 18:23-

34). அதற்கு முடிவுரையாக இயேசு, "நீங்களும் அவனவன் தன்தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற் போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" என்றார் (மத்தேயு 18:35). மற்றவர்களை மன்னிக்க மறுக்கும் நபர்களை தேவன் மன்னிக்க மாட்டார் (மத்தேயு 6:14).

நாம் பெறும் மரியாதக் குறைவுகள், அவமதிப்புகள், புறக்கணிப்புக்கள், மன ரீதியான புண்படுத்தப்படுதல் போன்ற ஊறுபாடுகளை மன்னிக்க வேண்டும். ஒரு தவறு நடத்தலுக்கு எதிரான இயல்பான எதிர்கிரியை ஒருவேளை மன்னிக்காத அதிருப்தியுடன் கூடிய ஆவியில் பழிவாங்கும் மனப்பான்மையாயிருக்கலாம். நமக்கு தீங்கு செய்வோருக்கு திருப்பி நாமும் தீங்கு செய்வதற்குப் பதிலாக, நம்மை வேதனைப்படுத்துவோருக்கு நாம் நன்மை செய்ய வேண்டும் (லூக்கா 6:35; ரோமர் 12:20, 21).

ஒருவர் பேரில் ஒருவருக்கு **குறைபாடு** உண்டானால் *(momphē)*, எனும் கிரேக்கப் பெயர்ச்சொல், புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணப்படுகிறது, இந்த வார்த்தையின் வினைச்சொல், *memphomai*, என்றால் "குற்றப்படுத்துதல்" அல்லது "குற்றம் கண்டுபிடித்தல்" (மாற்கு 7:2; ரோமர் 9:19; எபிரெயர் 8:8). பவுல் குறைபாடு இருப்பது நியாயமானது என்று நியாயப்படுத்தவில்லை, ஏதோ ஒன்றின் நிமித்தம் நாம் பாதிக்கப்பட்டால் அதினால் நாம் நீதியுள்ளவராகக் கருதப்பட்டாலும் கருதப்படாமல் போனாலும், நம்மை வேதனைப்படுத்தினவர்களை நாம் மன்னிக்கத்தான் வேண்டும். ஒரு குற்றம் மன்னிக்கப்பட்ட பின், அது மறக்கப்படவும் வேண்டும். இப்படியாகத்தான் "கர்த்தர்" நம்மை மன்னித்திருக்கிறார். இந்த வசனத்தில் சொல்லப்படும் கர்த்தர் (கிறிஸ்து எனும் பதம்) இயேசுவைக் குறிக்கிறது.

மன்னித்தது போல *(charizomai)* என்பது "மன்னியுங்கள்" எனும் முந்திய வசனத்தில் சொன்ன அதே வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டுள்ளது; ஆனால் இந்த சொல் அமைப்பு ஒரு கடந்தகால முற்றுவினை, அதாவது கர்த்தர் தமது மன்னிக்கும் செயலை அவர்களுடைய கடந்தகால பாவங்களை *மன்னித்து விட்டார்* என்று காட்டுகிறார். "மன்னித்தல்" என்பது கிறிஸ்தவர்களுக்கு ஒரு முக்கியமான பண்பாக இருக்கிறது.[33] நாம் அடிக்கடி தேவனுடைய சித்தத்தை மீறியும் அவர் நம்மை மன்னிப்பாரானால், நாமும் ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும். தனக்கு மன்னிக்கப்பட வேண்டாத அளவுக்கு பாவமில்லாதிருக்கிற மனுஷனே மற்றவர்களை மன்னிக்காதிருக்க அதிகாரம் பெற்றவனாயிருக்கிறான். மன்னிப்பதற்கான முன்மாதிரியையும் உள்நோக்கத்தையும் இயேசு நமக்கு கொடுத்திருக்கிறார் (எபேசியர் 4:32).

ஆக்கப்பூர்வமான வார்த்தைகளான **போல** மற்றும் **அதே போல** *(kathōs kai*[34] மற்றும் *houtos kai*[35]*)* என்பன பவுலின் எழுத்துக்களில் பொதுவானமுறை. இந்த வார்த்தைகள் கொலோசெயர்கள் பின்பற்ற வேண்டிய மாதிரி இயேசுவே என்பதை வலியுறுத்தும்படி பயன்படுத்தப்பட்டது. அவர்களை முற்றிலுமாய் "மன்னித்திருந்த" இயேசுவை பின்பற்ற வேண்டியவர்களாயிருந்தார்கள். நேரடியாக, கிரேக்க பொருளில் சொல்லப்படுகிறது, "கர்த்தர் உங்களை மன்னித்திந்தது போல நீங்களும் தான்" என்று சொல்கிறது. இந்த வாக்கியத்தை பூர்த்தி பண்ணிக்கொள்ள உங்களுக்குத்

தெரியும்: "... நீங்களும் கூட *மன்னிக்க வேண்டும்.*" தேவனுடைய மன்னிப்பை அனுபவித்தவர்கள் மற்றவர்களை மன்னிக்க மனமுடையவர்களாக இருக்க வேண்டும்.

"இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்" (3:14)

கிறிஸ்தவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய உச்சக்கட்ட தகுதியாம்ஸம் "அன்பு" (*agapē*); மற்ற எல்லாவற்றிற்கும் மேலே காணப்படுவது இது (1 கொரிந்தியர் 13:13; 1 பேதுரு 4:8). அன்பு கிறிஸ்தவ நல்லொழுக்கங்களிலேயே உச்சக்கட்ட பண்பாக வைக்கப்பட்டுள்ளது. கிரேக்க வார்த்தையின்படி அதன் தோற்றக் காட்சியில் மிகத் தெளிவானதாய்க் காணுகிறது, ஏனெனில் "அன்பு" பவுல் பட்டியலிட்டபடி நல்லொழுக்கங்களிலேயே முதலில் இடம் பெறுகிறது (கலாத்தியர் 5:22). 2 பேதுரு 1:5-7ல், அது கடைசியில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஒருவகையில் சொன்னால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சில காரியங்கள் இப்படித்தான் வலியுறுத்தி எபிரேய மொழியில் காட்டப்படும். அன்பு மற்றவர்களை கட்டி எழுப்புகிறது (1 கொரிந்தியர் 8:1) கூடவே மற்றெல்லா நல்லொழுக்கங்களிலும் வளர்வதற்கான செயல் ஊக்கம் கொடுக்கிறது (ரோமர் 13:8-10; கலாத்தியர் 5:14).

அன்பு (செலுத்தப்படும்) மற்ற நபர் அதற்குத் தகுதியானவரா இல்லையை அல்லது சுலபமாக அன்பு செலுத்தக்கூடியவரா என்பதை அடிப்படையாகக் கொண்டதல்ல. கிறிஸ்தவர்கள் அன்பு செலுத்தப்படத்தக்கவர்களுக்கும் தகுதி இல்லாதவர்களுக்கும் அன்பு காட்ட வேண்டும். தேவன் இப்படித்தான் அன்பு கூருகிறார் (1 யோவான் 4:9, 10). இந்தப் பாவம் நிறைந்த உலகத்தை, தமது அன்புக்குப் பாத்திரமில்லாத உலகத்தை, எவ்வளவாய் அன்புகூர்ந்து அதன் இரட்சிப்புக்காக தமது குமாரனையே கையளித்தார் (யோவான் 3:16). தேவன் அன்பின் தேவனாக இருக்கிறபடியால், அன்புகூர்ந்தார், ஜனங்கள் அன்பு கூரத்தக்கவர்கள் என்பதால் அல்ல.

வசனம் 14அ வில் **இவை எல்லாவற்றின் மேலும் ... அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்** என்று சொல்லுகிறது. NASB "அன்பைத் தரித்துக் கொள்ள வேண்டியவர்கள் நாம்" என்று சொல்லுகிறது, இந்த சொற்றொடரில் பவுல் வினைச்சொல் எதையும் கொடுக்கவில்லை. இதன் நேரடி மொழிபெயர்ப்பில் இதை இப்படியாக வாசிக்கலாம், "மேலும் அவைகள் அனைத்திலும் அன்பு." "தரித்துக் கொள்ளுங்கள்" என்பது குறித்துக் காட்டுகிறது. கிரேக்க வார்த்தையான *epi*, என்பது இங்கே "அப்பால்," எனும் பொருள் 3:2, 6ல் சொல்லப்பட்டுள்ளது போல "மேல், மீது" என்ற எளிமையாக அல்லது "மேலே" என்றும் (NIV) மொழியெர்க்கப்பட்டுள்ளது. மற்றொரு சாத்தியக்கூறான பயன்பாடு, "கூடுதலாக" என்பது தெரிந்துகொள்ளப்பட்ட பொருளில் அன்பின் அளவீடு இடம் பெற்றிருக்கலாம்: "இவை எல்லாவற்றின் மேலாக," "மற்றெல்லாவற்றிற்கும் மேலாக" அல்லது இங்கே மொழிபெயர்க்கப்பட்டுள்ளபடி, "இவையெல்லாவற்றிற்கும் அப்பால்" என்று பொருள் கொள்ளலாம். இந்தச் சொற்றொடர் "இவைகளுக்கப்பால் (அல்லது, இவை எல்லாவற்றிற்கும் மேல்) அன்பையும் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று எடுத்துக் கொண்டால் இதன் பொருள் அவ்வளவு அதிக வித்தியாசத்தை

ஏற்படுத்தாது.

பவுல் பிறகு **சற்குணத்தின் கட்டைக்**குறித்துப் பேசினார், அதை அன்பின் கருத்துடன் நெருக்கமாக கட்டுகிறார், **பூரணம்** என்பதன் கிரேக்க வார்த்தை, *teleiotēs,* என்பது எபிரெயர் 6:2ல் மட்டுமே வேறிடத்தில் காணப்படுகிறது, அது பூரணராகுதல் (வளர்ந்தேறினவர்) என்று மொழிபெயர்க்கப்பட்டது. *Teleios* ன் பெயருரிச்சொல் நிறைவான பூரணம் என்பதற்கு மேலான பொருளைக் கொண்டிருக்கிறது, அது குறையற்ற வளர்ச்சி என்பதை விட மேலானது (காண்க 1:28). **கட்டு** (*sundesmos*) என்பது காரியங்களை ஒன்றிணைத்துக் கட்டுகிற அமைப்பைக் குறிக்கிறது. இந்த வார்த்தை நடபடிகள் 8:23ல் "கட்டில் அகப்பட்டிருத்தல்" என்றும் மற்றும் வேறு இடத்தில் "உடலின் தசை நாரால் ஒன்றுடன் ஒன்று இணைத்துக் கட்டப்பட்டிருத்தல்" பற்றி "கட்டு" என்று சொல்லப்பட்டது (எபேசியர் 4:3; கொலோசெயர் 2:19).

"அன்பின் பூரண பந்தத்துக்கு" சம்பந்தப்படுத்தி விளக்கமளிக்க மூன்று பெரிய வியாக்கியானங்கள் ஆலோசனையாகக் கொடுக்கப்படுகிறது: அன்பு கிறிஸ்தவர்களை ஒன்றாகக் கட்டுகிற ஒரு கட்டு, அது கிறிஸ்தவ ஒழுக்கங்களைக் கூட்டிக் கட்டுகிறது, அல்லது கிறிஸ்தவனுக்குள்ளே பரிபூரணத்தைக் கொண்டு வருகிறது, கிறிஸ்தவர்களின் ஜீவியத்தில் அன்புக்குக் கிடைக்கப்பட்டுள்ள செல்வாக்கு இந்த மூன்று கோணங்களில் எதுவுமே அநீதியுள்ளதாயிராது. ஒவ்வொரு விளக்கவுரையையும் கூர்ந்து கவனிப்போமாக:

முதல் விளக்கம், அன்பு பிசின் போன்று ஒட்டும் தன்மையுடையது, அதாவது முழுமையாக இயேசுவைப் பின்பற்றுவோரை ஐக்கியத்தில் ஒன்றிணைத்துக் கட்டத்தேவையான போதிய சக்தி அதற்குள் அடங்கியிருக்கிறது. அதுதான் மிகப் பெரிய பந்தத்தை ஏற்படுத்தும் முகவர். நாம் ஒருவருக்கொருவர் ஈர்க்கப்பட்டு ஒரு அன்பின் வல்லமையான கட்டினாலே ஐக்கியத்திற்குள் ஒற்றுமையான பரிபூரணத்தால் இணைக்கப்படுகிறோம். இதற்கு ஒரு உதாரணம் தான் யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துவாவோடே இசைந்திருந்தது (1 சாமுவேல் 18:1).

இரண்டாவதாக, அன்பு பரிபூரண கட்டாகிய ஒழுக்கத்தின் நூல் கயிறாக இருந்து மற்ற எல்லா நல்லொழுக்கங்களையும் ஒன்றாக இணைக்கத்தக்கதாக ஒரே பொட்டலமாகச் சுற்றப்பட்டு கட்டப்படுகிறது. அது முழுமையாக இணைத்து அவைகளை ஒரு முழு சரீரத்தின் அவயங்கள் இணைக்கப்பட்டது போல் கட்டுகிறது. அன்புக்கு இப்படிப்பட்ட பாதிப்பு இருக்கிறதா என்பது சாத்தியமே ஆனால் சந்தேகத்திற்குரிய விளக்கம்.

மூன்றாவதாக, அன்பு ஒரு தனி சிறப்புள்ள பண்பு, அது ஆவிக்குரிய வளர்ச்சியை அல்லது பரிபூரணத்தை அடையச் செய்கிறது, இதுதான் அதன் அர்த்தம் எனில், அது கிறிஸ்தவன் மற்ற ஒழுக்கங்களை வளர்த்துக் கொள்ளச் செய்கிறது என்று பொருள் (1 கொரிந்தியர் 13:4-7). சிலர் இதை முதலாவது கருத்துடன் சேர்த்து ஆலோசனையாக, அன்பு கிறிஸ்தவர்களை ஒற்றுமையாக இணைத்துக் கட்டுவதால், அது நிறைவான உறவுமுறையை ஏற்படுத்துகிறது. என்கின்றனர். உறவுமுறைகளின் பரிபூரணமெல்லாம் விசுவாசிகள் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பினால் வருகிறது. அன்பு என்பது ஒரு பந்தம் அது கிறிஸ்தவர்களை வளர்ச்சியடையச் செய்து ஒரு அளவான வளர்ச்சிக்குரிய கூட்டமாக, கிறிஸ்துவுக்குள் சமாதானமான ஐக்கியத்தை ஏற்படுத்துகிறது.

சுருங்கச் சொல்லின், பவுல் கொடுத்துள்ள நல்லொழுக்கங்களின் பட்டியல் 3:12-14ல் காணப்படுவது பின் வருமாறு:

1. *"இரக்கம்" ஒரு மனுஷன் மற்றவர்களின் பாதிப்புகளை உணர்ந்து நேரம் வரும்போது அவர்களுடைய தேவைகளையோ அல்லது பாடுகளையோ அறிந்து அவர்களுக்கு உதவி செய்ய விரும்புவார்.*
2. *"தயவு" ஒரு கிறிஸ்தவனை செயலூக்கம் கொடுத்து இளகிய மனதுடனே கூட கவனிக்கவும் கடுமையாகவோ கரடுமுரடாகவோ நடந்து கொள்ளாமல் இருக்கச் செய்கிறது.*
3. *"தாழ்மை" ஒரு நபரை மனபூர்வமாய் எல்லாரோடும் ஒருங்கிணைத்து எந்த நிலையிலிருந்தாலும் அவர்களுக்கு மேல் தன்னை உயர்த்திக் கொள்ளாமல் அல்லது மற்றவர்களைக் காட்டிலும் தான் உயர்ந்தவன் என்ற எண்ணங்கொள்ளாதிருப்பான்.*
4. *"சாந்தம்" தனிப்பட்டவர்களின் கடினமான முனைகளை மிருதுவாக்கி உறவுமுறையை பலப்படுத்தும் ஒரு மெத்தையாக்குகிறது. அது ஒரு மென்மையான ஸ்பரிசத்தால் இருதயத்தை வருடிக் கொடுத்து மற்றவர்களுக்குள் கிரியை செய்கிறது.*
5. *"பொறுமை" வாழ்க்கையின் போராட்டத்தை வெகு காலமாக கண்ணோக்கிப் பார்த்து இவைகள் கொஞ்சம் காலத்துக்கு மட்டுமே என்றும் அவைகளின் முக்கியத்துவம் கடந்து போகும் என்று காணுகிற ஒரு நல்லொழுக்கம்.*
6. *"ஒருவருரையொருவர் தாங்கி" என்பது தனக்கு இழைக்கப்படும் அவமானத்தைச் சகித்துக் கொள்ளும் தகுதி, தடைகளைப் பொறுத்துக் கொண்டு, தவறிழைக்கப்படுகையில் பழிவாங்கும் எண்ணமில்லாத குணம்.*
7. *"மன்னித்தல்" என்பது தேவனுடைய தன்மையின் இயல்பைக் குறிக்கக் கூடியதாயும் அது முறுமுறுப்பு இல்லாமல் தனக்கு இழைக்கப்பட்ட தவறை மறந்து விடக் கூடியதாகவுமிருக்கிறது.*
8. *"அன்பு" சகல நல்லொழுக்கங்களையும் கட்டுகிறது மற்றவர்களுக்காக அக்கறையும் இரக்கமும் காட்டவல்லது. அது தன்னையே அர்ப்பணிக்கத்தக்க மனதையும் பாசத்தின் நோக்கத்திற்காக அப்படிச் செய்கிறதுமாய் இருக்கிறது.*

மேலும் கற்றுக்கொள்ள

"அன்பு" (3:14)

"அன்பு" என்பது "மற்றவர்களிடத்தில் தனிக்கவனத்துடன் ஆர்வம் காட்டுதல், மதிப்புக்கொடுத்தல், பாசம் காட்டுதல், கவனம் செலுத்துதல், காதலித்தல் (மிகவும் நெருக்கமானவர்களிடத்தில் மட்டும் அன்பு காட்ட வேண்டும் என்று மட்டுப்படுத்தாமை, மற்றும் கிரேக்க வசனப்பகுதியில் மிக அபூர்வமாக பாலுணர்வு கவர்ச்சியை வெளிப்படுத்துதல்)" என்றெல்லாம் விளக்கமளிக்கப்படுகிறது.[36] இதன் வினைச்சொல் 3:12, 19 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது; இதன் பெயர்ச்சொல் வார்த்தை 1:4, 8, 13; 2:2; 3:14 ஆகிய

வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கிரேக்கமொழியில் இரண்டு பதங்கள், வித்தியாசப்பட்ட விதத்தில், புதிய ஏற்பாட்டில் "அன்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: *agapē* (அதன் வினைச்சொல்லாகிய *agapaō*) மற்றும் *phileō*. இதன் வினைச்சொல் வடிவமாகிய *philē* புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லை. அடிப்படைப் பொருள் என்னவெனில், உணர்ச்சி வசப்படுதலில் வெளிப்படுத்தப்படுதல், அதிலே பிரியப்படுதல் மற்றும் அடுத்த நபருடன் உறவு கொண்டாடுதல். *Agapaō* என்பது பாசம், நல்விருப்பம், நற்கவனம் செலுத்துதல். பவுலின் காலத்தில், *agapaō* எனும் வார்த்தை மிக அதிகமாக அன்பை வெளிப்படுத்தும் பொருட்டு *phileō* பயன்படுத்தப்பட்ட சொல். இரண்டு வார்த்தைகளையும் பயன்படுத்துவதில் கணிசமான முறையில் அதன் பயன்பாட்டு வார்த்தைகள் ஒத்திருக்கிறது. "அன்பு," என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள மற்றொரு வார்த்தை *eros* (இது சிற்றின்ப ஆவலைத் தூண்டுகிற காதல் என்பதைக் குறிக்கும்). புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை வருவதில்லை.

Phileō. பவுல் வினைச்சொல்லாகிய *phileō* வைப் பயன்படுத்தி 1 கொரிந்தியர் 16:22லும் தீத்து 3:15லும் மட்டுமே தன்னிலை விளக்கமாகப் பயன்படுத்தினார். யோவானில் இவ்வார்த்தை, அடிக்கடியாக பதினொருமுறை, பயன்படுத்தப்பட்டுள்ளது. *Phileō* என்பது நட்பு, நேசம், மற்றவர்களிடம் காட்டும் சகோதரத்துவம் என்றெல்லாம் விளக்கமளிக்கப்படுகிறது. கிரேக்கப் பெயர்ச்சொல்லான *philos* என்பது "நண்பன்" (பிரியம்) என்று இருபத்தியெட்டு முறை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் தொகுப்பு வார்த்தைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது: "சகோதர சிநேகம்," *philadelphia* (ரோமர் 12:10); "பண ஆசை" என்பதற்கு *philarguria* (1 தீமோத்தேயு 6:10); "பணப்பிரியர்" (பண ஆசையுள்ளவர்கள்) *philarguros* (2 தீமோத்தேயு 3:2); "தற்பிரியர்" *philautos* (2 தீமோத்தேயு 3:2); "சுகப்போகப்பபிரயர்" *philēdonos* (2 தீமோத்தேயு 3:4); "தேவப்பிரியர்" *philotheos* (2 தீமோத்தேயு 3:4); "நல்லோர்மேல் பிரியமுள்ளவன்" *philagathos* (தீத்து 1:8); "புருஷரிடத்தில் ... அன்புள்ளவர்கள்" *philandros* (தீத்து 2:4); "பிள்ளைகளிடத்தில் அன்புள்ளவர்கள்" *philoteknos* (தீத்து 2:4); மற்றும் "(தேவனுடைய) அன்பு மனுஷர்மேல் காட்டப்படுதல்" *philanthropos* (தீத்து 3:4).

Phileō இயல்பான பாசத்தை தன்னுள் கொண்டது, ஆனால் அது கற்றலால் வரும் அன்பாகவும் இருக்கக்கூடும். வாலிப ஸ்திரீகள் தங்கள் புருஷர்களையும் தங்கள் பிள்ளைகளையும் அன்பு செலுத்தும்படி முதிய ஸ்திரீகள் போதிக்க வேண்டியவர்கள் (தீத்து 2:4). (கிரேக்க வார்த்தைகளில் ஒன்றான *philandros* என்பதன் பொருள் "புருஷப் - பிரியர்கள்.") *Phileō* என்பது போதிக்கப்படவும் "கைக்கொள்ளப்படவும்" வேண்டிய ஒன்று.

Agapaō. இப்படிப்பட்ட அன்பு *phileō* அன்பையும் உட்படுத்தியிருக்கலாம்,[37] ஆனால் *agapaō* என்பதில் வரும் உறவுமுறை *phileō* வை காட்டிலும் ஆழமான அன்பை மற்றவர்கள் மீது வெளிப்படுத்துவதைக் குறிக்கும். இரண்டுமே தங்களுக்கென ஏதோ ஒன்றை தெரிந்து கொள்வதில் காட்டும் ஆர்வத்தைக் குறிக்கும், முதன்மை இடத்தைத் தேடுவது

போல (மத்தேயு 23:6ல் phileō லூக்கா 11:43ல் agapaō) அல்லது ஒரு நபரிடம் கொண்டுள்ள அன்பு, அது இயேசு அன்பாயிருந்த "சீஷன் மேல் கொண்டிருந்த அன்பைப்" போன்றது (agapaō என்று யோவான் 19:26; 21:7, 20; ஆகிய வசனங்களில் சொல்லப்படுகிறது; phileō யோவான் 20:2). தேவன் அன்புகூருகிறவர்களை சிட்சிக்கிறார் (agapaō எபிரெயர் 12:6; வெளிப்படுத்தின விசேஷம் 3:19ல் phileō). Agapaō என்பது அநேகக் காரியங்களில் கட்டளையிடப்பட்டிருப்பதால், அது எப்பொழுதுமே இயல்பான அன்பைக் குறிப்பதில்லை, இயேசு ஒரு வாலிபனைப் பார்த்து அவனிடத்தில் "அன்புகூர்ந்தார்" (மாற்கு 10:21), அது இயல்பான அன்பைக் குறிப்பிடுவதாகக் காணுகிறது.

சிலர் குறிப்பிடுகையில் உணர்ச்சி வசப்படும் பாசம் agapaō, எனும் வார்த்தையில் சேர்க்கப்படவில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளனர், இதற்கு முக்கிய காரணம் இயேசு தம்மைப் பின்பற்றுவோர் தங்கள் சத்துருக்களை சிநேகிக்க வேண்டும் என்று போதித்தார் என்பதே அன்பிலே வித்தியாசப்பட்ட அளவீடுகள் இருப்பதால் (மத்தேயு 10:37; லூக்கா 7:42, 47; யோவான் 15:13), நாம் நம்முடைய சத்துருக்களை சகக் கிறிஸ்தவர்களிடத்தில் காட்டுகிற அதே ஆழமான பாசத்துடன் கூடிய அன்பைக் காட்டுகிற அளவுக்கு கோரவில்லை என்ற முடிவுக்கு நாம் வரமுடியும். சில வகைகளில், இயேசு தமது மற்ற சீஷர்களைக் காட்டிலும் ஒரு சீஷனிடத்தில் மட்டும் அதிகமாக அன்புகூர்ந்திருக்க வேண்டும். யோவான் 19:26லும் 21:7, 20லும் பெரிதான அன்பைப் பற்றி விளக்கப்படுத்துகிறது.

வித்தியாசப்பட்ட அளவிலான அன்பு கிறிஸ்தவர்களிடம் கோரப்படுகிறது. நாம் அவரை நமது முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும். முழு மனதோடும், முழு பெலத்தோடும் அன்புகூர வேண்டியவர்கள் (மத்தேயு 22:37; மாற்கு 12:30). இரண்டாவது தளம் குடும்பத்துக்கும் சக கிறிஸ்தவர்களுக்கும் காட்டுகிற அன்பு, இது இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் காட்டிய அன்புக்கு சமமானது (யோவான் 13:34). மூன்றாவது தளம் நம்மைப் போல பிறனையும் நேசிக்கிற, நமது அயலார்களுக்குக் காட்டுகிற அன்பு (மத்தேயு 22:39). கடைசி தளம் நமது சத்துருக்களுக்கான அன்பு (மத்தேயு 5:44; லூக்கா 6:35). நாம் நம்முடைய தேவனிடத்தில் அன்புகூருவது போல, சக கிறிஸ்தவர்களிடத்தில் அன்புகூருவது போல, அல்லது நம்முடைய அயலாரிடம் அன்புகூருவதுபோல சத்துருக்களிடத்திலும் அன்புகூர கோரப்படுவதில்லை.

Phileō விலோ agapaō விலோ உள்ள அர்த்தம் எதுவாக இருந்தாலும் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையான அன்புகூரக் கூடியவர்களாயிருக்க வேண்டியவர்கள். "ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?" (1 யோவான் 3:17). ஒரு கிறிஸ்தவன் தனது சக கிறிஸ்தவனுக்கு எவ்வளவாய் அன்பு காட்டுகிறானோ, அவ்வளவாய் அவன் தேவனைப் போலாவான்; ஏனெனில் தேவன் அன்பாயிருக்கிறார் (1 யோவான் 4:8). இயேசு தம்மைப் பின்பற்றுவோர்களிடம் காட்டும் அன்பு அவர்களுடைய இருதயங்களை நிரப்பி, இருதயங்களில் செயலுக்கம் கொடுத்து தேவனுடைய சேவையில் ஊக்கமளிக்க வேண்டும். அன்பு இருதயத்திலிருந்து -

தோன்றிவருகிற ஒரு சீஷத்துவ சின்னம் அதை கிறிஸ்தவர்கள் ஒரு அடையாளக் குறியாக அணிந்து கொள்ள வேண்டும். அன்பு சகல ஜனங்களுக்கும் நாங்கள் இயேசுவின் சீஷர்கள் என்று அறியப்பண்ணும் (யோவான் 13:35).

மன்னிப்பு (3:13)

மன்னிப்பு என்பது என்ன? நாம் மன்னிக்கப்படும்படி (பிறனை) மன்னிக்க வேண்டுமென்று இயேசு போதித்தார். மன்னிப்பைக் குறித்து நான்கு கிரேக்க வார்த்தைகள் விவாதங்களில் பயன்படுத்தப் படுகின்றன.

(1) *Aphesis,* எனும் வார்த்தை, இதன் பொருள் "விடுதலையாக்குதல்" அல்லது "சுதந்திரம் கொடுத்தல்" இது பாவத்திலிருந்து (விடுதலை) கொடுப்பது போல, இப்பதம் நாம் மற்றவர்களை மன்னிப்பதற்குக் குறிப்பிடலாம் தேவனுடைய செய்கைக்கு மட்டுமே குறிப்பிடப்படுகிறது.[38]

(2) *Apolouō* என்பது "மன்னிப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது ஒரு முறை மட்டுமே ("மன்னித்தல்"): அது மற்றவர்களை மன்னிக்கிற காரியத்தில் குறிப்பாக பயன்படுத்தப்பட்டது: "மன்னியுங்கள் அப்பொழுது உங்களுக்கு மன்னிக்கப்படும்" (லூக்கா 6:37ஆ) மற்ற வசனப்பகுதிகளில் "அனுப்பிவிடுதல்" (மத்தேயு 15:23), "தள்ளி விடுதல்" (மத்தேயு 19:3), மற்றும் "விடுதலையாக்குதல்" (மத்தேயு 27:15).

(3) *Aphiēmi* எனும் வார்த்தை அடிக்கடி "அனுமதித்தல்" (மத்தேயு 3:15) அல்லது "விட்டுவிலகுதல்" (மத்தேயு 4:11) என்று பொருள்படும், இயேசு தமது மலைப் பிரசங்கத்தின் போது மாதிரி ஜெபத்தில் மற்றவர்களுடைய கடன்களை மன்னித்தல் பற்றிக் குறிப்பிடுகிறார் (மத்தேயு 6:12; காண்க லூக்கா 11:4) தொடர்ந்து அவர், நாம் மற்றவர்களின் மீறுதல்களை மன்னிக்க வேண்டும் என்றும் சொன்னார் (*paraptōma* என்பதும் "குற்றப்படுத்துதல்"; ரோமர் 4:25; மத்தேயு 6:14, 15; மாற்கு 11:25, 26). நமக்கு எதிராக பாவம் செய்கிறவர்களை குறித்து பேதுரு கேட்டார் (*hamartia*) (மத்தேயு 18:21). நமக்கு எதிராக பாவஞ்செய்கிறவர்களை நாம் கடிந்து கொள்ள வேண்டும். அவர்கள் மனந்திரும்பினால் நாம் மன்னிக்க வேண்டும் (லூக்கா 17:3, 4).

(4) மற்றொரு வார்த்தை *charizomai,* என்பது "மன்னித்தல்," என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அதன் பொருள் "கிருபையாக மன்னித்தல்," இப்படியாக நம்முடைய பாதிக்கப்பட்ட நம்முடைய உள்ளங்களுக்கு எவ்விதமறுதிருப்தியும் எதிர் பார்க்காமலேயே மன்னித்தல் (எபேசியர் 4:32; கொலோசெயர் 3:13).

நமக்கு எதிரான பாவத்தைப்பற்றி என்ன? மன்னித்தலைக் குறித்து பேதுருவுக்கு ஒரு ஆர்வம் இருந்தது, ஏனெனில் இயேசுவிடம் அவர், " 'ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரம் மட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபது தரம் மட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்' " என்றார் (மத்தேயு 18:21, 22). பிறகு அவர் இரண்டு வேறுபட்ட தொகையில் கடன் பெற்ற மனுஷர்களை ராஜா மன்னிப்பதைக் குறித்த உதாரணத்தைக் கொடுத்தார். அதிகமான கடனைக் கொண்டவன் அதிகமாய் மன்னிக்கப்பட்டிருந்தும் தன்னை விட குறைவான கடன் தன்னிடத்தில் பெற்றவனை மன்னிக்கும்

மனமில்லாமையினால் அதிக வேதனைக்கு அவன் உள்ளானான். இயேசு முடிவுரையாக, "நீங்கள் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" என்றார் (மத்தேயு 18:35).

நமக்கு எதிராகப் பாவஞ்செய்தவர்களிடம் நேர்மையான அக்கறையுடன் அணுக வேண்டியவர்கள் நாம். அவர்கள் மனந்திரும்பினால், நாம் அவர்களை மன்னிக்க வேண்டும் (லூக்கா 17:3, 4). இத்துடன் இயேசு மேலும் குறிப்பிடுகையில் சகோதரன் தனித்திருக்கையில் அவனிடம் போய் பேசியும் அவன் செவி கொடாமற்போனால், நம்மோடே கூட இரண்டு அல்லது மூன்று சாட்சிகளைக் கூட்டிக் கொண்டு போய் பேச வேண்டும். அவர்களுக்கும் அவன் செவிசாய்க்காமற்போனால், இந்தக் காரியம் சபைக்கு முன்பாகக் கொண்டு போகப் படவேண்டும்; சபைக்கும் அவன் செவி சாய்க்காமல் போனால் அவனை "கிறிஸ்தவனல்லாதவனைப் போல" நடத்த வேண்டும்[39] (மத்தேயு 18:15-17). சில சூழ்நிலைகளில் நாம் நமக்கு எதிராக பாவஞ்செய்தவர்களை மன்னிக்க இயலாமல் போகலாம், இந்த விஷயத்தில் மன்னிப்பதுதான் சரியான எதிர்கிரியையாக இருக்க முடியும் (லூக்கா 23:34; நடபடிகள் 7:60).

நமக்கு எதிரான பாவங்கள் என்பது கடன்கள் அல்லது சமுதாயக் கடமைகளிலிருந்து வித்தியாசப்பட்டவை. நாம் ஜெபம் பண்ணும்போது யாரைப் பற்றியாவது விரோதமான எண்ணம் நமக்குள் இருந்தால் நாம் அவர்களை மன்னித்து ஜெபிக்க வேண்டும். அப்படிப்பட்டதப்பிதங்களை நாம் மன்னியாதிருந்தால் தேவன் நம்மை மன்னிக்கமாட்டார் (மாற்கு 11:25, 26). இந்த குற்றங்களில் விருப்பமற்ற செயல்கள் மற்றவர்களால் நமக்கு இழைக்கப்படக் கூடும் அல்லது தனிப்பட்ட ரீதியில் நமக்கு கோபமூட்டும் செயல்களான, மரியாதைக் குறைவாக நடத்தப்படுதல், அவமானங்கள், புறக்கணிப்புகள், மனம் புண்படுத்தப்படுதல் ஆகிய அனைத்தும் உட்பட்டவை. நாம் அவர்களை நமது இரக்கத்துடன் மன்னிக்க வேண்டும். நாம் வெகு நாட்கள் ஒருவருடன் இருந்தால், நமக்கு விருப்பமற்ற ஏதாவது ஒரு செயல் நடக்கும், அதை நாம் அவருக்கு எதிராக எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது; மாறாக, நாம் அவரை மன்னிக்க வேண்டும்.

"தேவனுடைய கோபம்" (3:6)

தேவனுடைய சரிசம கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க வேண்டுமானால், நாம் அவருடைய நிறைவான இயல்பை அறிந்து கொள்ள வேண்டும். அவர் கிருபையும் நீதியுமுள்ள தேவன் (ரோமர் 3:24, 26), கோபமும் இரக்கமுமுள்ளவர் (ரோமர் 2:5; 12:1), அன்பும் வெறுப்புமுள்ளவர் (எபிரெயர் 1:9). அவர் இவைகளில் எந்த ஒரு தனிப் பண்புக்கும் அளவிடப்பட்டவரல்ல, ஏனெனில் அவர் அன்பாகவும் இருக்கிறார் தீவிரமாகவுமிருக்கிறார் (ரோமர் 11:22). மனிதர்கள் அவருடைய சாயலில் உருவாக்கப்பட்டிருப்பதால், அவர்கள் அவருடைய உணர்வுகளோடு தொடர்புடையவர்களாயிருக்கின்றனர் (ஆதியாகமம் 1:26, 27), ஜனங்களிடத்தில் அவருடைய அப்படிப்பட்ட குணாதிசயங்கள் சில இருக்கின்றன. வித்தியாசம் என்னவெனில் தேவன் அவர்களைக் கட்டுப்படுத்தி நீதியின் வழியில் நடத்துகிறார், அவர்களோ அவைகளைப் புரட்டி தவறாகப் பயன்படுத்துகின்றனர்.

பாவம்நிறைந்த மனுக்குலத்தின் மேல் தேவனுடைய கோபாக்கினை வரும் (மத்தேயு 3:7). நற்செய்தி என்னவெனில் பாவமன்னிப்பிற்கென்று இயேசு தமது இரத்தத்தைச் சிந்தினார் (மத்தேயு 3:7; 26:28; 2 கொரிந்தியர் 5:21) மேலும். அப்படிச் செய்ததினால், வருகின்ற கோபாக்கினைக்கு விசுவாசிகளை தப்பிக்க வைத்தார் (1 தெசலோனிக்கேயர் 1:10; 5:9). அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு இயேசு நித்திய இரட்சிப்பாகிய பிரதிபலனை அளிக்கிறார் (எபிரெயர் 5:9), ஆனாலும் அவர் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினையை செலுத்துவார் (2 தெசலோனிக்கேயர் 1:7-9) தேவன் அப்படிப்பட்ட ஆக்கினைத் தீர்ப்பைக் கொடுப்பார், ஏனெனில் அவரால் "அன்பு காட்டவும் கூடும் ... இனி அன்பு காட்டாமாலும்" இருக்க முடியும் (ஓசியா 9:15) அந்தத் தீர்ப்பு எதிராளியாய் காணும் பாவிகள் தொடர்ந்து முரட்டாட்டத்தில் நிலை நிற்பவர்களுக்குக் கொடுக்கப்படும் (சங்கீதம் 5:5; 11:5).

தமது பிரமாணங்களை மதிக்காதவர்கள் மேல் தேவன் தமது நீதியின்படியான கோபாக்கினையைச் செலுத்துவார். "மேலும் நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது, நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை" (ரோமர் 4:15). தேவனுடைய பிரமாணத்தை ஒருவரும் மீறாதிருந்தால், நீதியுள்ள கோபாக்கினையோ கிருபையோ தேவையில்லை, ஏனெனில் கிருபை பாவங்களை மன்னிக்கவும் நீதிசெலுத்துவதிலும் தொடர்புடையது. எல்லாரும் பாவம் செய்தவர்கள் (ரோமர் 3:23); எல்லாரும் தேவனுடைய பிரமாணத்தை மீறினவர்கள், ஆதலால் இயேசு சாத்தியப்படுத்திய கிருபையின் மூலமாக வருகிற நீதி அவசியமானது (ரோமர் 3:24).

நியாயப்பிரமாணம் நீதியைத்தருவிக்க இயலாததாயிருந்ததால், கிறிஸ்தவர்கள் எந்த வித பிரமாணத்துக்கும் கீழ் இல்லை என்று சிலர் முடிவு செய்கின்றனர் (ரோமர் 3:20; கலாத்தியர் 2:16, 21; 5:4). நியாயப்பிரமாணம் கோபாக்கினையையும் ஒரு சாபத்தையும் கொண்டு வருகிறது (ரோமர் 4:15; கலாத்தியர் 3:10). இந்தத் தோற்றக் காட்சியிலிருந்து, நியாயப்பிரமாணம் ஒருவரையும் நீதிமானாக்கவில்லை என்று காணுகிறது. மறுபுறம் பார்த்தால், கீழ்ப்படியத்தக்க கட்டளைகளை இயேசு கொடுத்திருக்கிறார்.[40] இவை தேவனுடைய பிரமாணத்தையும் கிறிஸ்துவின் பிரமாணத்தையும் உருவாக்குகிறது (1 கொரிந்தியர் 7:19; 9:21; கலாத்தியர் 6:2), அது சுயாதீனப் பிரமாணம் (யாக்கோபு 1:25; 2:12). கட்டளைகள் எங்கேயோ, அங்கே பிரமாணமும் உண்டாயிருக்கிறது; ஏனெனில் நியாயப்பிரமாணம் கட்டளைகளாலானது. இயேசு தமது கட்டளைகளுக்கு எல்லாரும் கீழ்ப்படிந்து நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படி கொடுத்திருக்கிறார் (யோவான் 12:49, 50).

தேவனுடைய கோபாக்கினை உண்மையானது. அவரது பிரமாணத்தைப் பின்பற்றாமல் கிறிஸ்துவின் பிரமாணத்தையும் பின்பற்றாமல் இருக்கும்படி தெரிவுசெய்து கொண்டவர்கள் மேல் அவருடைய கோபாக்கினை ஊற்றப்படும். தேவனை அறிந்து கொள்ளுதல் என்பது அவரது அன்பையும், இரக்கத்தையும் அதே போல அவருடைய நீதியையும் அறிவதே.

பயன்பாடு

தவிர்க்க வேண்டிய குறிப்பான பாவங்கள் (3:5-7)

வசனம் 5ல் சொல்லப்பட்டபடி கிறிஸ்தவர்களான பின்பு "பாவத்துக்கு மரித்திருத்தல்" என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பாவங்கள் யாவை?

1. *ஒழுங்கீனங்கள் - எல்லா வகையான பாலுணர்வு ஒழுங்கீனச் செயல்கள்.*
2. *அசுத்தம் - கிறிஸ்தவர்கள் மனதில் கொண்டுள்ள எவ்வித அசுத்த சிந்தனைகளும் (மத்தேயு 5:27, 28; ரோமர் 1:32).*
3. *தீய இச்சைகள் - கிறிஸ்தவர்கள் சரீர இச்சைகளை கட்டுப்படுத்த அறிந்திருத்தல் அவசியம்.*
4. *தீய ஆசைகள் - ஒழுங்கீனமான செயல்களுக்கு கொண்டிருக்கும் எல்லாவித பலமான ஆசைகளும்.*
5. *பொருளாசை - ஆஸ்திகள், தொழுகை செய்வது உட்பட, அளவுக்கு மீறிய ஆசை, அல்லது அதற்காகவே ஒப்புக்கொடுத்த பிரயாசங்கள் போன்ற ஆரோக்கியமற்ற எண்ணங்கள்.*

ஒழுங்கீனமான பழக்கத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருப்பவர்கள் மேல் தெய்வீகக் கோபாக்கினை வரும் (வசனம் 6). தேவன் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறார் (எபிரெயர் 1:9அ). தேவன் தமது சித்தத்தை எதிர்த்து புறந்தள்ளுகிறவர்களுக்கும், தீய இச்சைகளுக்கு தங்களை ஒப்புக்கொடுப்பவர்களுக்கும் அவர் எதிராயிருக்கிறார்.

கொலோசெயர் தங்களுடைய முந்தைய இத்தகையப் பாவங்களுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருந்தனர், ஆதலால் தேவனுடைய கோபாக்கினைக்குக் கீழ் இருந்தனர் (வசனம் 7). இந்த பழக்கங்களுக்கு அவர்கள் மரித்த போது, அவர்கள் மீது தேவன் கொண்டிருந்த கண்ணோக்கு இப்பொழுது மாறியது. மன்னிப்பைப் பெற்றுக் கொண்டதால் தேவனுடைய மனதில் எவ்வித மாற்றம் இந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருந்தவர்களுக்கு உறுதியளித்தது? முதல் பேதுரு 2:10 சொல்லுகிறது. "முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதே இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்."

இயேசுவைப்போல் மாறுதல் (3:8-11)

நாம் கோபத்துக்கும், புறங்கூறுதலுக்கும் பொய் பேசுதலுக்குமாக வசீகரிக்கப்படும் போது நாம் எப்படி இயேசுவைப் பின்பற்றக் கூடும்? கிறிஸ்தவர்கள் பின்வரும் காரியங்களை களைந்து போடும்படி போதிக்கப்படுகின்றனர்:

1. *கோபம் - மனநிலையின் நிதானத்தைக் கட்டுக்குள் வைக்க இயலாமல் கிளர்ந்தெழுதல்.*
2. *மூர்க்கம் - அநியாயத்தைக் கண்டு அடக்க முடியாத தீவிரமான கோப உணர்ச்சி.*
3. *பொறாமை - கீழ்த்தரமான ஆவியைக் கொண்டிருத்தல்.*
4. *புறங்கூறுதல் - யாரோ ஒருவரின் அல்லது ஏதோ ஒன்றின் புகழை*

(அல்லது நற்பெயரைக்) கெடுக்க எடுத்துக் கொள்ளும் பிரயாசம்.

5. *வம்புவார்த்தை - கடினமான வார்த்தைகளின் பேச்சு.*
6. *பொய் - சத்தியத்தைப் புரட்டுதல்.*

இந்த பாவமுள்ள பழக்கவழக்கங்களை தவிர்ப்பதால் மட்டும் கிறிஸ்தவ நடக்கையை உறுதிப்படுத்துவதில்லை; கிறிஸ்துவைப் போன்றத் தகுதி களைத் தரித்துக்கொள்வதும் அவசியமானதே (வசனம் 10). கிறிஸ்தவர்கள் இயேசுவை அறிந்து கொள்ளும்போது மட்டுமே அவருடைய தனிப்பண்புகளைத் தரித்துக் கொள்வார்கள். பவுலின் இலக்கு இயேசுவை அறிந்து கொள்வதும் அதினால் அவரால் நியமிக்கப்பட்டிருக்கும் பந்தயப்பொருளை அடைவதும் தான் (பிலிப்பியர் 3:10-14). நமது கண்கள் இயேசுவின் மீது மட்டும் வைக்கப்பட்டிருக்க வேண்டும் (எபிரெயர் 12:2).

The Great Stone Face, *(மிகப் பெரிய கல் - முகம்) எனும் கதையில், ஒரு பையன் தனது சிறுவயது தொடங்கி தனது கிராமத்துக்கு வரப்போகிற ஒரு பெரிய மனிதனைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தான். அந்த மனிதனுடைய முகம் ஒரு மலையிலிருக்கிற கல்லுக்கு ஒப்பாக இருக்கும். இந்தப் பையன் வருடங்களினூடே அந்த மனிதனுடைய நடக்கையைக் கேள்விப்பட்டதில் மிகவும் வியப்படைந்தான், அவனை இவன் (பையன்) ஒரு நாள் சந்திப்பான் என்று நம்பியிருந்தான். அவன் அதை உணரவில்லை, ஆனால் அவன் வளர்ந்து வரும்போது அந்த மனிதனுடைய நடவடிக்கையை சிந்தித்துக் கொண்டே வளர்ந்தான், பிற்பாடு அந்தப் பையனே பெரிய மனிதனாக வந்தான் என்று கிராமத்தினர் விளக்கமளித்தனர். இப்பொழுது ஒரு வயதானவனாக - அந்தப் பையன் வளர்ந்திருந்த வேளையில் ஒரு நாள் - அவன் அந்த மலையில் இருந்த முகத்தை ஏறெடுத்துப் பார்த்தான், அப்பொழுது கிராமத்தினர் அவன் மிகப்பெரிய கல் முகமாக அவனை உணர்ந்தார்கள்.[41] அவன் அந்த (கல்முக) மனிதனைப்போல மாறினான் ஏனெனில் அந்த மனிதனைப் பற்றி கேள்விப்பட்டு அதிசயித்து அந்த மனிதன் விவரிக்கப்பட்டது போல அவனைப் பின்பற்றியிருந்தான், இயேசுவை நோக்கிப் பார்ப்பதன் மூலம், அவரைக்குறித்து அதிசயப்பட்டு, அவரைப் பற்றிய சிந்தையில், நாமும் அவரைப் போல் ஆகமுடியும் (2 கொரிந்தியர் 3:18).*

கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய தகுதியாம்ஸங்கள் (3:12-14)

புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளும்போது அதன் தகுதியாம்ஸங்கள் கடந்த காலத்திலிருந்த விரும்பத்தகாத குணாதிசயங்களை தவிர்ப்பதற்கு அது உதவிகரமாயிருக்கும், ஒரு கண்ணாடி தம்ளரில் தண்ணீரை நிறைத்தால் அதிலிருந்து காற்று வெளியேற உந்தும்; அதை போல நேர்மறைக் கிறிஸ்தவ நடக்கைகள் எதிர்மறைக் குணாதியங்களை தங்கள் வாழ்க்கையிலிருந்து அப்புறப்படுத்த உதவியாயிருக்கும்.

புதிய இயல்பைத் தரித்துக்கொள்ள பவுல் நமக்கு மூன்று காரணங்களைக் கொடுத்தார்: நாம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், பரிசுத்தர், மற்றும் பிரியர்கள் (வசனம் 12அ). தேவன் நம்மைத் தமது சொந்தமாக தெரிந்து கொண்ட தன் நம்பிக்கையை நாம் பிரதிபலிக்க வேண்டியவர்கள். நாம் பொல்லாத உலகத்திலிருந்து தனியாகப் பிரித்தெழுக்கப்பட்டு

அவருக்குப் பிரியமான பிள்ளைகளானோம், என்பதை நாம் உணரவேண்டும் விசேஷித்த வேலைக்கென தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு பிள்ளை தன்னுடைய வேலையைக் குறித்துப் பெருமைப்படுவான், ஏனெனில் தன்னைப்போல் மற்றவர்கள் நிறைவேற்ற இயலாத பொறுப்பு தன்னிடம் ஒப்புக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதால்தான். அதேபோல, இயேசு நம்மை தம்முடைய வித்தியாசப்பட்ட பிரியர்களாகத் தெரிந்து கொண்டார் என்று கிறிஸ்தவர்கள் அறிய வேண்டும்.

கிறிஸ்தவர்கள் தங்களின் ஆவிக்குரிய தகுதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள் (வசனங்கள் 12ஆ-14). இந்த நல்லொழுக்கங்களை வளர்த்துக் கொள்ளும் போது ஒருவர் எப்படியிருக்கக் கூடும்? அவர் எவ்வாறு செயல்படுகிறார்? அவர் ...

1. *இரக்கமுள்ளவராயிருப்பார் - மற்றவர்களுடைய தேவைகளில் அக்கறையுள்ளவராயிருப்பார்.*
2. *தயவுள்ளவர் - மற்றவர்களுடைய நலனைத் தேடுவதில் ஆர்வமுள்ளவர்.*
3. *தாழ்மையுள்ளவர் - மற்றவர்களுடைய நிலைமைக்கு ஒப்பாக தனது நிலைமையை மாற்றிக் கொண்டு அவர்களிடமிருந்து தன்னை தனிமைப்படுத்திக் கொள்ளாதிருப்பார்.*
4. *சாந்தமுள்ளவர் - மற்றவர்களைக் குறித்து இளகிய மனமுடையவராயிருந்து, மற்றவர்களிடம் பழகும்போது கடுமையானவைகளை தவிர்த்து, இரக்கமற்ற தன்மையை விட்டு பழகுவார்.*
5. *பொறுமையுள்ளவர் - மன அழுத்தம் மற்றும் நெருக்கடி நேரங்களில் சகித்துக் கொள்ளும் தன்மையுடையவராயிருத்தல்.*
6. *ஒருவரையொருவர் தாங்குபவர் - இழைக்கப்படும் அவமானங்களை கண்டுகொள்ளாதிருந்து, தடைகளை சகித்து, தவறாக நடத்தப்படும்போது பழி வாங்கும் எண்ணமில்லாதிருப்பார்.*
7. *மன்னிப்பவர் - தனக்கு விரோதம் செய்பவர்களுக்கு எதிரான மனம் கொண்டிராதவர், மன்னிப்பிற்கான அடிப்படை இயேசுவிடம் தான் பெற்ற மன்னிப்பு.*
8. *அன்புள்ளவர் - மற்றவர்களின் நலனைத் தேடுவதன் விளைவாகக் காட்டப்படும் நேசம். மற்றவர்களிடத்தில் அன்புகூரும் கிறிஸ்தவர்களின் இருதயத்தில் மற்றெல்லா தகுதிகளும் ஒருங்கே வந்து சேரும். எல்லா நல்லொழுக்கங்களுக்கும் மேலான மிக முக்கியமான நல் லொழுக்கம் இது.*

மன்னித்தல் என்றால் மறப்பதாகுமா? (3:13அ)

மனது புண்படுத்தப்பட்ட அனுபவம் ஒருபோதும் மறந்து விட முடியாது, அது உண்மையாக மன்னித்து விடப்பட்டாலும் மறக்க இயலாதது, இராயனுக்கு முன்பாக நின்ற போது விசாரணை நேரத்தில் பவுல் தன்னை கைவிட்டவர்களை நினைவுகூருகிறார், ஆகிலும் அவர்களை அவர் மன்னித்திருந்தார். "அந்தக் குற்றம் அவர்கள் மேல் சுமராதிருப்பதாக" என்று வேண்டிக் கொண்டார் (2 தீமோத்தேயு 4:16இ).

ஒருவர் தான் அநுபவித்த அநியாயங்களை நினைத்துப் பார்கிறாரா அல்லது இல்லையா என்பதைப் பொருத்தா மன்னிப்பு நிச்சயிக்கப்படுகிறது? இல்லை, அது புண்பட்ட காரியம் எப்படி நினைவுபடுத்தப்படுகிறது என்பதைப் பொருத்தது. அது நினைத்துப் பார்க்கப்பட்டாலும் அதை இழைத்த நபருக்கு எதிராக பற்றிக் கொண்டிராத பட்சத்தில், அது மன்னிக்கப்பட்டதுதான். இருப்பினும், அவைகள் நினைவுபடுத்தப்பட்டு, தவறிழைத்தவருக்கு எதிராக பற்றிக் கொள்ளப் பட்டிருக்குமானால், பிறகு அவர் மன்னிக்கப்படவில்லை என்று பொருள்.

தவறிழைத்தவர் மனந்திரும்பாதபோது (3:13அ)

ஒருவர் மனந்திரும்பாதபோதும் மன்னிக்கப்படலாமா?

இயேசு தம்மைப் பின்பற்றினோர்களிடம் கட்டளையிட்டு மனந்திரும்பிவிட்டோம் என்று சொல்லுபவர்களுக்கு மன்னியுங்கள் என்றார். "உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்தால், அவனைக் கடிந்து கொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக அவன் ஒரே நாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, ஏழுதரம் ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: 'நான் மனஸ்தாபப்படுகிறேன்' என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக" என்றார் (லூக்கா 17:3அ, 4). ஒருவர் இன்னொருவருக்கு எதிராக எதைச் செய்தால் என்று வசனம் தெளிவுபடுத்தவில்லை, ஆனாலும் இயேசு குறிப்பிடும்போது அவர்கள் மனந்திரும்பினால் தம்மைப் பின்பற்றுபவர்கள் அவர்களை மன்னிக்க வேண்டும் என்றார்.

தன்னை மன்னிக்கும்படி ஒருவர் கோரும்போது, நாம் என்ன செய்ய வேண்டும் என்று பார்த்த பின், நாம் இப்படியாகக் கேட்டுக் கொள்வோம், "அவர் நம்முடைய மன்னிப்பைக் கோராதிருப்பாரானால் என்னவாகும்"; நாம் மன்னிக்க வேண்டுமா? தேவன் அளிக்கும் மன்னிப்பு நிபந்தனைக்குட்பட்டது, அது மனந்திரும்புதலைச் சார்ந்தது (2 பேதுரு 3:9), எனவே மனந்திரும்பாதவர்களை கிறிஸ்தவர்கள் மன்னிக்கக் கட்டுப்பட்டவர்களல்ல என்பதாகக் காணப்படுகிறது. இது கிறிஸ்தவனுக்கும் பொருந்துமா? ஒரு கிறிஸ்தவனுக்கு வேதனையைக் கொடுத்தவன், மன்னிக்கச் சொல்லி கேட்கவில்லை, ஆகிலும் அவன் தன் தவறுக்கு மனஸ்தாபப்படுவது போன்ற அடையாளத்தைக் காட்டுகிறான், ஒரு கிறிஸ்தவன் அவனை மன்னிக்க வேண்டுமா? ஒருவன் உண்மையில் மனந்திரும்பாமல் மாய்மாலமாக மன்னிப்புக் கேட்டால் அதைப் பற்றி என்ன? அந்த நபரை மன்னிப்பது தவறா?

இந்தக் கேள்விகளுக்கான பதில் மாற்கு 11:25ல் காணப்படுகிறது. அங்கே இயேசு போதித்ததாவது, "நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்" (மாற்கு 11:25). மன்னிக்கும்படி கேட்காத ஒருவனை மன்னிப்பதற்கு இது ஒரு உதாரணமாக இருக்கக் கூடும். மன்னிப்புக் கோராதவர்களுக்காக இயேசு மன்னிக்கும்படி ஜெபம் செய்தார் - தம்மை சிலுவையில் ஆணி அடித்தவர்களுக்காகவும் ஜெபம் பண்ணினார் (லூக்கா 23:34). அதே மன்னிக்கிற சுபாவமுடையவனாக ஸ்தேவான் தான்

கல்லெறியப்பட்டு மரிக்கிற போது தன்னை வெளிப்படுத்தினான் (நடபடிகள் 7:60).

குறிப்புகள்

[1]*மத்தேயு 5:32; 15:19; 19:9; மாற்கு 7:21; நடபடிகள் 15:20, 29; 21:25; 1 கொரிந்தியர் 5:1; 6:13, 18; 7:2; 10:8; 2 கொரிந்தியர் 12:21; கலாத்தியர் 5:19; எபேசியர் 5:3; 1 தெசலோனிக்கேயர் 4:3; வெளிப்படுத்தின விசேஷம் 2:14, 20, 21; 9:21.* [2]*மத்தேயு 15:19; மாற்கு 7:22; யோவான் 8:3.* [3]*மத்தேயு 5:27, 28; 19:18; மாற்கு 10:19; லூக்கா 16:18; 18:20; யோவான் 8:4; ரோமர் 2:22; 13:9; யாக்கோபு 2:11.* [4]*மத்தேயு 13:17; லூக்கா 15:16; 16:21; 17:22; 22:15; 1 தீமோத்தேயு 3:1; எபிரெயர் 6:11; 1 பேதுரு 1:12.* [5]*லூக்கா 12:15; ரோமர் 1:29; எபேசியர் 4:19; 5:3; 1 தெசலோனிக்கேயர் 2:5; 2 பேதுரு 2:3, 14.* [6]Eduard Lohse, *Colossians and Philemon*, trans. William R. Poehlmann and Robert J. Karris, Hermeneia (Philadelphia: Fortress Press, 1971), 137. [7]Ibid. [8]*யாத்திராகமம் 4:14; எண்ணாகமம் 11:10; உபாகமம் 11:17; யோசுவா 7:1; நியாயாதிபதிகள் 2:12; 2 சாமுவேல் 6:7; 1 இராஜாக்கள் 15:30; 2 இராஜாக்கள் 13:3; எஸ்றா 10:14; யோபு 9:13; சங்கீதம் 78:31; ஏசாயா 5:25; எரேமியா 4:8; எசேக்கியேல் 5:13; ஓசியா 8:5; மீகா 5:15; நாகூம் 1:6, 7; செப்பனியா 2:2; சகரியா 1:2.* [9]*எண்ணாகமம் 16:46; உபாகமம் 9:8; யோசுவா 22:20; 1 சாமுவேல் 28:18; 2 இராஜாக்கள் 22:13; யோபு 42:7; சங்கீதம் 21:9; ஏசாயா 51:20; எரேமியா 7:20; எசேக்கியேல் 13:13-15; தானியேல் 9:16; ஓசியா 13:11; மீகா 5:15; செப்பனியா 1:18; சகரியா 7:12.* [10]*மாற்கு 3:5; யோவான் 3:36; ரோமர் 1:18; 5:9; எபேசியர் 5:6; எபிரெயர் 3:11; வெளிப்படுத்தின விசேஷம் 14:10; 15:1; 16:19; 19:15.*

[11]William Hendriksen, *Exposition of Colossians and Philemon*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1964), 147. [12]Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament*, 2d ed. (New York: United Bible Societies, 1971), 625. [13]Herbert M. Carson, *The Epistles of Paul to the Colossians and Philemon: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 82. [14]*யோவான் 11:9; 12:35; ரோமர் 6:4; 1 கொரிந்தியர் 7:17; 2 கொரிந்தியர் 5:7; கலாத்தியர் 5:16, 25; 6:16; எபேசியர் 2:10; 4:1; 5:8, 15; பிலிப்பியர் 3:17; கொலோசெயர் 1:10; 1 தெசலோனிக்கேயர் 2:12; 4:1; 1 யோவான் 1:7; 2:6; 2 யோவான் 4, 6; 3 யோவான் 3, 4.* [15]*யோவான் 8:12; 11:10; 12:35; 1 கொரிந்தியர் 3:3; 2 கொரிந்தியர் 4:2; 10:3; எபேசியர் 2:2; 4:17; பிலிப்பியர் 3:18; 1 யோவான் 1:6; 2:11.* [16]NASB, *மொழிபெயர்ப்பில் orgē என்பது ஆறுமுறை "கோபம்" என்றும் முப்பது முறை "மூர்க்கம்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [17]*மத்தேயு 3:7; லூக்கா 3:7; 21:23; ரோமர் 2:5, 8; 3:5; 5:9; 9:22; 12:19; எபேசியர் 2:3; 5:6; கொலோசெயர் 3:6; 1 தெசலோனிக்கேயர் 1:10; 2:16; 5:9; வெளிப்படுத்தின விசேஷம் 6:16, 17; 11:18; 14:10; 16:19; 19:15.* [18]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translators Handbook on Paul's Letters to the Colossians and to Philemon*, Helps for Translators (New York: United Bible Societies, 1977), 82. [19]*மத்தேயு 15:19; மாற்கு 7:22; கொலோசெயர் 3:8; 1 தீமோத்தேயு 6:4; 2 தீமோத்தேயு 3:2.* [20]Hendriksen, 149.

[21]David M. Hay, *Colossians*, Abingdon New Testament Commentaries (Nashville: Abingdon Press, 2000), 126. [22]*ரோமர் 13:12-14; கலாத்தியர் 3:27; எபேசியர் 4:22, 24; 1 தெசலோனிக்கேயர் 5:8.* [23]Eduard Schweizer, *The Letter to the Colossians: A Commen-*

tary, trans. Andrew Chester (Zürich: Benziger Verlag, 1976; reprint, Minneapolis: Augsburg Publishing House, 1982), 197. [24]*நடபடிகள் 15:1, 2; 1 கொரிந்தியர் 12:12, 13; கலாத்தியர் 2:11-14; 3:26-28.* [25]Josephus *Against Apion* 2:269; see also Philo *On the Embassy to Gaius* 10. [26]Herodotus *History* 4.64, 65, 75; quoted in Hendriksen, 154. [27]Peter T. O'Brien, *Colossians, Philemon*, Word Biblical Commentary, vol. 44 (Waco, Tex.: Word Books, 1982), 193. [28]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 861. [29]*காண்க 1 கொரிந்தியர் 4:21; 2 கொரிந்தியர் 10:1; கலாத்தியர் 5:23; 6:1; எபேசியர் 4:2; 2 தீமோத்தேயு 2:25; தீத்து 3:2.* [30]Bauer, 612.

[31]A. T. Robertson, *Paul and the Intellectuals: The Epistle to the Colossians*, rev. and ed. W. C. Strickland (Nashville: Broadman Press, 1959), 107. [32]*நடபடிகள் 18:14; 2 கொரிந்தியர் 11:1, 4, 19, 20; எபேசியர் 4:2; 2 தீமோத்தேயு 4:3; எபிரெயர் 13:22.* [33]*காண்க ரோமர் 12:17-21; 2 கொரிந்தியர் 2:5-11; கலாத்தியர் 6:1, 2; பிலேமோன் 17, 18.* [34]*ரோமர் 15:7, 8; எபேசியர் 5:2, 25, 29.* [35]*ரோமர் 5:15, 18; 11:31; 1 கொரிந்தியர் 2:11.* [36]Bauer, 6. [37]"If *phileō* and *agapaō* ... are to be distinguished in the NT, the former is probably the love of friendship, the latter reverential love: but there appears to be a growing tendency to regard the two verbs as synonymous" (James Hope Moulton and George Milligan, *The Vocabulary of the Greek Testamen*t [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1930], 669–70). [38]*மத்தேயு 26:28; மாற்கு 1:4; 3:29; லூக்கா 1:77; 3:3; 4:18; 24:47; நடபடிகள் 2:28; 5:31; 10:43; 13:38; 26:18; எபேசியர் 1:7; கொலோசெயர் 1:14; எபிரெயர் 9:22; 10:18.* [39]David L. Roper, *The Life of Christ, 1: A Supplement,* Truth for Today Commentary (Searcy, Ark.: Resource Publications, 2003), 581. [40]*மத்தேயு 28:20; யோவான் 12:50அ; 14:15, 21, 24; 15:10; 1 கொரிந்தியர் 14:37; 1 யோவான் 2:3, 4; 3:22, 24; 5:2, 3.*

[41]Nathaniel Hawthorne, "The Great Stone Face," in *The Complete Short Stories of Nathaniel Hawthorne* (Garden City, N.Y.: Doubleday & Co., 1959), 451.

13

கிறிஸ்துவுக்கு பதில்செயல்

(3:15-17)

3:1-14ல் பவுல் கொலோசெயர்களை ஊக்கப்படுத்தி ஆவிக்குரிய காரியங்கள் நிமித்தமாக பரலோகத்திற்குரிய மேலானவைகளைத் தேடும்படி ஊக்கமளித்தார், ஏனெனில் உலகக்காரியங்களுக்காக கிறிஸ்துடனே கூட அவர்கள் மரித்திருந்தார்கள். இதினால், அவர்கள் குறிப்பிட்ட சில மாம்ச இச்சைகளையும் செயல்களையும் களைந்து போட்டு கிறிஸ்துவுக்குள் காணும் தேவபக்திக்குரிய புதிய தகுதிகளைத் தரித்துக் கொள்ள வேண்டும். இந்த போதனைகளைப் பின்பற்றி, அவர்கள் ஒருவருக்கொருவர் போதித்து தேவனுக்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்ளும்படிக்கு ஆவிக்குரியப் பாடல்களைப் பாடித் துதிக்க ஊக்கமளித்தார் (3:15-17). இவைகள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவின் சித்தத்தின்படி செய்யப்பட வேண்டியதாயிருந்தது.

அவருடைய சமாதானத்தைப் பெறுதல் (3:15)

15தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்.

"தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது" (3:15)

***சமாதானம்** (eirēnē) என்பது இருதயத்தில் இருக்கும் ஒரு அமைதி, உள்ளான ஒரு சமாதானம், மற்றும் ஆத்துமாவில் தொந்தரவற்ற ஒரு சூழ்நிலை அதை நாம் ஒரு கபடற்ற, உலகத் தேவைகளையோ கவலைகளையோ கொண்டிராத தூங்கும் ஒரு குழந்தையின் முகத்தில் காணலாம். உள்ளான அமைதி என்பது ஒரு இருதயத்தில் இருப்பதே, அது இருதயத்தின் உள் இருந்து வருகிறது மற்றும் அது புறச் சுழலின் விளைவாய் வரவேண்டிய அவசியமில்லை.*

இயேசுவின் (தேவ) சமாதானத்தைப் பெற்றுக் கொள்ள கிறிஸ்தவனின் பகுதியில் வினயமான பிரயாசம் தேவை (ரோமர் 14:19; 2 தீமோத்தேயு 2:22; 1 பேதுரு 3:11). அது தங்களுடைய இருதயங்களில் அவர் ஆளும்படி அனுமதித்து தங்களுடைய சிந்தனைகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்பவர்களுக்குள் வருகிறது. ஒரு வீட்டுக்குள் சூரிய ஒளி வராதபடி தடுப்புகளால் மறைத்துக் கொள்ளலாம் அல்லது தடுப்புகளையும் கதவையும் திறந்து வைத்து அந்த ஒளியை உள்ளே வரச் செய்யலாம். அதேபோல, நாம் நம்முடைய இருதயங்களைத் திறந்து இயேசுவின் சமாதானத்தை உள்ளே வர அனுமதிக்கலாம். பவுல் அவர்களின் கவலைகளைப் பகிர்ந்து கொண்டதின் மூலமும், ஜெபத்திலே தேவனுக்கு நன்றி செலுத்துவதன் மூலமும் மற்றும் அவர்கள் பவுலிடமிருந்து கற்றுக் கொண்டதாகக் கொண்டு

செயல்பட்டு தேவ சமாதானம் அவர்களுடைய இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்துவுக்குள் காத்துக் கொள்ளும் படி பிலிப்பியர்களை உறுதிப்படுத்தினார் (பிலிப்பியர் 4:6, 7, 9).

இயேசு தமது அழுகையில் எருசலேம் மக்கள் சமாதானத்துக்கு வழி நடத்துபவைகளை அறிந்திருக்கவில்லை என்று புலம்பினார் (லூக்கா 19:42). உபத்திரவம் நிறைந்திருக்கும் உலகத்தில் அவர் தமது சமாதானத்தை தம்மைப் பின்பற்றுவோருக்கு உறுதி அளித்தார் (யோவான் 16:33), ஆனால் உலகம் கொடுக்கிற சமாதானத்தை அல்ல (யோவான் 14:27). நேரம் வரும்போது (சில நேரங்களில்). உலகம், சரீரப்பிரகாரமான சமாதானத்தைக் கொடுக்கக் கூடும்; ஆனால் அது இயேசு கொண்டு வரும் சமாதானத்தைக் கொடுக்க இயலாது. தமது நுகத்தைச் சுமந்து கொண்டு அவரிடத்தில் கற்றுக் கொள்கிறவர்களுக்கு இளைப்பாறுதலை அவர் வாக்களித்திருக்கிறார் (மத்தேயு 11:28-30).

கிறிஸ்துவின் சமதானம் மூவகைப்படும்; தேவனிடத்தில் சமாதானம் பிறரிடம் சமாதானம், மற்றும் தனக்குள்ளாகவே சமாதானம். இயேசு தேவனோடு சமாதானமாயிருக்க ஏதுவான சிலாக்கியத்தை தமது ஜீவியத்தின் மூலமாகவும், போதனையின் மூலமாகவும், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாகவும் தம்மைப் பின்பற்றுவோருக்கு அளித்திருக்கிறார் (கொலோசெயர் 1:20; ரோமர் 5:1). கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களால் இது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது (2 கொரிந்தியர் 5:17-21), அவர்கள் ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவுக்குள்ளானவர்கள் (ரோமர் 6:3; கலாத்தியர் 3:27).

கிறிஸ்தவர்கள் தங்கள் சக சகோதரர்களோடும் எல்லா ஜனத்தாரோடும் சாமாதானமாய் வாழ வேண்டியவர்களாயிருந்தார்கள் (2 கொரிந்தியர் 13:11; 1 தெசலோனிக்கேயர் 5:13; எபிரெயர் 12:14; யாக்கோபு 3:18). நியாயப்பிரமாணமாகிய நடுச்சுவரைத் தகர்த்ததின் மூலம் இயேசு இதை சாத்தியமாக்கினார் (எபேசியர் 2:14, 15). கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் ஒரே சரீரத்திற்குள் ஒற்றுமையாக ஒருவருக்கொருவர் சார்ந்திருக்க வேண்டியவர்கள் (எபேசியர் 2:16; 4:1-4). ஒவ்வொரு அங்கத்தினரும் கிறிஸ்தவர்களுக்குள் சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக தனது பங்கையாற்ற வேண்டிய பொறுப்பை பெற்றிருக்கிறார், ஏனெனில் அவருடைய சமாதானம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியது. அவர் தனது சமாதானத்தை தனித்தனியே அனுபவிக்க மாத்திரமல்ல. முழு விசுவாசக்கூட்டத்தாராகிய சரீரம் அநுபவிக்கும்படி கொடுக்கிறார். அவருடைய சமாதானம் ஆளுகிற இடத்தில், அவரைப் பின்பற்றுவோருக்குள் ஒற்றுமை நிலவும்.

உள்ளான குழப்பங்களும், கிளர்ச்சிகளும், ஆத்துமாவை கெடுத்துள்ள பாவங்களும் நீக்கப்படுவதால், உள்ளான சமாதானம் இயேசுவிடமிருந்து வருகிறது. முழுமையானதும் சகிப்புத் தன்மையும் கொண்ட சமாதானம் இயேசுவிடமிருந்து தேவனோடும், மற்றவர்களோடும், தனக்குள்ளும் எப்படி கொண்டு வரப்படவேண்டும் என்று கற்றுக் கொள்வதன்மூலம் அடையக்கூடும்.

கிறிஸ்துவின் (தேவ) அன்பு கிறிஸ்தவர்களின் **இருதயங்களில்** (*brabeuō*) **ஆள***வேண்டும். கிரேக்க வசனங்களில் இந்த வார்த்தை சரியாக இங்கு மட்டுமே காணப்படுகிறது, அது ஒரு தொகுப்பு வார்த்தையாக katabrabeuetō ("2:19ல்*

வஞ்சியாதிருத்தல்") என்று காணப்பட்டாலும் மேற்குறித்த வார்த்தையில் வருகிறது. புதிய ஏற்பாட்டுக்குப் புறம்பே இதன் பொருள் "தகுதி முக்கியத்துவம் (வாய்ந்த) 'போட்டிகளில் வென்று வெகுமதி பெறுதல்,' பிறகு பொது(வான) கட்டுப்பாட்டில் ஒரு முடிவெடுத்தல், தீர்ப்பு செய்தல், தீர்மானித்தல், ஆளுகை செய்தல்,"[1] ஆகியவற்றைக் குறிக்கும். அது "இருபிரிவினரின் வேற்றுமைக்கு தீர்வு காணுதல்"[2] என்றும் பொருள்படும், அதாவது கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சமாதானம் வந்து தங்களைக் கட்டுப்படுத்தும் காரணியாக தீர்மானிக்கும்படி அனுமதித்தல் எனும் பொருளில் பேசுகிறது. முரண்பாடுகள் ஏற்படும் போது சமாதானத்துக்கான ஆவல் அந்த சச்சரவை சரிப்படுத்தும். கிறிஸ்துவின் சமாதானம் ஆளும்படி அனுமதிக்கும் போது, சகோதரர்களுக்கிடையே ஏற்படும் வாக்குவாதங்களுக்கும் பிரச்சனைகளுக்கும் ஒரு முடிவை உண்டாக்கி சகோதரர்களுக்கு இடையே எழும்பி சபையின் அமைதிக்கு பயமுறுத்தலாக இருந்த காரியங்களுக்கு ஒரு தீர்வாகும். இருதயங்கள் கட்டுப்படுத்தப்படுவதாலும் சக கிறிஸ்தவர்களோடு சமாதானமாக வாழ வேண்டும் என்ற ஆவலால் செயலூக்கமும் காணப்பட்டால் தீர்வுகள் காணப்பட முடியும்.

தேவ சமாதானம் சபைமுழுவதும் பரவ வேண்டும் என்பது பவுலின் ஆசை. கொலோசெயிலிருந்த கிறிஸ்தவர்கள் தனித்தனியே தங்களுக்குள் சமாதானத்தைப் பெற வேண்டிய அவசியமட்டுமல்ல, தேவனோடும் சமாதானம் கொண்டிருப்பது மட்டுமல்ல, மாறாக அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கிற மற்ற அனைவரோடும் சமாதானத்தைக் கையாளுவது அவசியமானது.

"இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்" (3:15)

கொலோசெயர்கள் கிறிஸ்துவுக்குள்ளான **ஒரே சரீரத்திற்குள்** தங்கள் சமாதானத்தின் புகலிடத்தைக் காண வேண்டியவர்கள் (ரோமர் 12:5) இதற்கென்றே அவர்கள் அழைக்கப்பட்டவர்கள். **இதற்கென்றே** எனும் சொற்றொடரில், "க்கு" எனும் வார்த்தை *(eis)* என்பதன் பொருளில் "உள்ளாக" என்றுள்ளது. பவுலின் செய்தி என்னவெனில் அவர்கள் சமாதானத்திற் "கென்றே" ஒரே சரீரத்திற்குள் அழைக்கப்பட்டார்கள் என்பது தான். இயேசு ஜனங்களை பல வித்தியாசப்பட்ட சரீரங்களுக்குள்ளாக அல்ல, ஒரே சரீரத்திற்குள் அழைத்திருக்கிறார்; அதினால் நாம் ஒருவருக்கொருவர் சமாதானமாக வாழ வேண்டியவர்கள். இயேசு கலகத்துக்கும் முரண்பாடு கொண்டிருக்கும்படியாகவும் அழைப்பதில்லை, மாறாக ஒற்றுமையான சரீரமான ஒரே ஜனமாக இருக்கும்படி அழைத்திருக்கிறார். பிரிவினைகள், பேதங்கள், சண்டைகள், பொறமை மற்றும் கட்சி பிரிவினை ஆவி ஆகியன சமாதானத்தைக் குலைத்து, "ஒரே சரீரத்தில்" முறிவை ஏற்படுத்தி துண்டுகளாக்கி விடும். சண்டைகளும் பிரிவினைகளும் மேலிருந்து வந்தவையல்ல; இவைகள் இயேசுவிடமிருந்தோ தேவனிடத்திலிருந்தோ வருபவையல்ல, ஆனால் பிசாசிடமிருந்து வருபவை (யாக்கோபு 3:14-16). 3:8, 9ல் குறிப்பிடப்பட்டுள்ள தீய ஒழுக்கங்களை ஒரே சரீரத்திற்குள் அழைக்கப்பட்ட விசுவாசிகள் தவிர்ப்பார்களானால் சமாதானத்தை அவர்கள் உணரமுடியும், மேலும் 3:12-14ல் சொல்லப்பட்டுள்ள ஒழுக்கங்களை கட்டியெழுப்ப முடியும்.

"ஒரே சரீரம்" என்று குறிப்பிடப்பட்டுள்ள இந்த வசனப் பகுதியில் பவுல், பிற வசனப் பகுதிகளில் குறிப்பிட்டுள்ளது போல, கிரேக்க பிரதி பெயர்ச் சொல்லாகிய autou ("அவருடைய" சரீரம்) என்றோ அல்லது திட்டமான கிரேக்க தனிப்பொருளில் ("the" - "தனிச்" சரீரம்), என்றோ குறிப்பிடவில்லை. மாறாக, அவர், விசுவாசிகளெல்லாரும் தனித்தனி ஒருமையில், ஒரே சரீரத்திற்குள் அழைக்கப்பட்டவர்கள் என்பதை வலியுறுத்தவே வகை தேடினார்.

மதத்தலைவர்கள் ஜனங்களை கட்சிகளாகவும் பிரிவினைகளாகவும், குழப்பத்திற்கும் முரண்பாடுகளுக்குமுரியவர்களாக அழைத்தி ருக்கிறார்கள் (நடபடிகள் 20:29, 30). இயேசு அப்படிப்பட்ட சண்டைகளை விரும்புவதில்லை; அவர் ஐக்கியத்தையும் ஒற்றுமை (ஒருமை) யையுமே விரும்புகிறார் (யோவான் 17:20-23). அவர் தம்மைப் பின்பற்றுவோர் பிரிவினையுள்ளதும் தனிமைப்படுத்தப்பட்டதுமான சமுதாயத்தினின்று பிரித்தெடுத்து ஒரே சரீரத்திற்குள் இருக்கும் சமாதானத்தை அடைய விரும்புகிறார். இந்த சரீரம் மனித உறவுகளை உடைத்தெறியும் புயலின் தோழமைகளிலிருந்து புகலிடமாயிருக்க வேண்டும்.

கொலோசெயரில் "ஒரே சரீரம்" என்பது இங்கு மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. 1:18, 24ல் சரீரம் என்பது சபை என்றும் பவுல் எழுதினார். இயேசு தமது சபையைக் கட்டினார் (மத்தேயு 16:18), அது ஒரே சரீரம் (எபேசியர் 4:4; காண்க கொலோசெயர் 1:18), எல்லா ஜனங்களையும் தன்னிடமாய் சேர்த்துக்கொள்வதே அவரது நோக்கம் (யோவான் 12:32). அவர்தான் ஒன்றுபடுத்தும் சக்தி, தமது ஜனங்களை ஒரே சரீரத்திற்குள் ஒற்றுமைப்படுத்துவது அவரே (ரோமர் 12:5; 1 கொரிந்தியர் 10:17; 12:12, 20; எபேசியர் 2:16). அவருக்குள் ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் நாம் அவருக்குள்ளும் அவருடைய சரீரத்திற்குள்ளும் உட்படுத்தப்படுகிறோம் (ரோமர் 6:3; 12:5; 1 கொரிந்தியர் 12: 13; கலாத்தியர் 3:27). இந்த சரீரத்திற்குள், நாம் ஒன்றாகிறோம் (கலாத்தியர் 3:28). கிறிஸ்தவர்களாகிய நம்முடைய இலக்காக ஒருவரிலொருவர் கொண்டிருக்கும் நட்புறவை கையாளுவதில் இயேசுவின் சமாதானம் மட்டுமே தீர்மானிக்கும் காரணியாக இருக்கக் கூடும்.

இயேசு ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும் என்பது குறித்துப் பேசினார் (யோவான் 10:16), மேலும் விசுவாசிகள் எல்லாரும் ஒன்றாயிருக்கும்படி ஜெபித்தார் (யோவான் 17:20, 21). ஆதிசபை "ஒரு மனப்பட்டவர்களாய்," "ஒரே இருதயமும்" இசைந்த ஆத்துமாக்களாயுமிருந்தவர்களைக் கொண்டு துவக்கம் பெற்றது (நடபடிகள் 2:46; 4:32). அவர்கள் கூடிவரும்போது "ஒருமனப்பட்டவர்களாய்" கூடி வந்தனர் (நடபடிகள் 5:12; காண்க ரோமர் 15:6). விசுவாசிகளுக்குள் பிரிவினைகள் தவிர்க்கப்பட வேண்டியவைகளாயிருந்தன (1 கொரிந்தியர் 1:10; ரோமர் 16:17).

கிறிஸ்தவ சிந்தனையில் **அழைக்கப்படுதல்** *ஒரு முக்கிய கருத்து. வசனம் 15ல் கிரேக்க வார்த்தையான eklēthēte எனும் வார்த்தை கொலோசெயர்களின் அழைப்பு ஒரு நிறைவானது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. "அழைக்கப்பட்டவர்களில்" அவர்களும் இருந்தார்கள் (klētos; ரோமர் 1:6; 8:28; 1 கொரிந்தியர் 1:24).*

சுவிசேஷம் முழு உலகிற்கும் பிரசங்கிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது (மாற்கு 16:15) எனவே ஒவ்வொருவரும் அழைக்கப்படக்கூடும்

(2 தெசலோனிக்கேயர் 2:13, 14). ஆகிலும், அழைக்கப்பட்டவர்கள் எல்லாம் தெரிந்து கொள்ளப்பட்டவர்களல்ல, கொலோசெயிலிருந்த கிறிஸ்தவர்கள் அழைப்பை ஏற்றுக் கொள்ளும்படி தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிய மறுப்பவர்கள் ஆக்கினைக்குள்ளாவார்கள், கீழ்ப்படிபவர்களோ இரட்சிக்கப்படுவார்கள்.

"நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்" (3:15)

இந்த குறுகிய நிருபத்தில், பவுல் அடிக்கடி நன்றியறிதல் அல்லது ஸ்தோத்திரஞ்செலுத்துதல் ஆகிய வார்த்தைகளை மறைமுகமாக குறிப்பிட்டுக் காட்டுகிறார் (1:3, 12; 2:7; 3:15, 16, 17; 4:2). குணச்சொல்லாகிய eucharistoi ("நன்றியறிதல்"), என்பது கிரேக்க வசனங்களில் இங்கு மாத்திரம் காணப்படுகிறது, ஆனால் இதன் வினைச்சொல்லான eucharisteō என்பது புதிய ஏற்பாட்டில் இருபத்தி ஐந்து முறை பயன்படுத்தப்பட்டுள்ளது மேலும் மற்ற கிரேக்க இலக்கியங்களிலும் அடிக்கடி காணப்படுகிறது. அது பாராட்டும் இயல் பண்புடன் கூடிய நன்றியறிதலை குறிப்பிடுகிறது. கொலோசெயருக்கு பவுலின் அறிவுரை என்னவெனில் நன்றி செலுத்தலை உங்கள் வாழ்க்கை நெறியாக கைக் கொள்ளுங்கள் என்பதுவே. மற்றவர்களோடு ஒற்றுமையாய் வாழ்பவர்கள் நன்றியறிதலுள்ளவர்களாய் வாழ்வதற்கான காரணம் உண்டு. ஏனெனில் அவர்கள் அன்பினால் மற்றவர்களுடன் கட்டப்பட்டவர்கள், அவர்களுடைய குடியிருப்பு பகுதி எதுவாக இருந்த போதிலும், எப்படிப்பட்ட வித்தியாசமான பின்னணியையுடையவர்களாயிருந்த போதிலும் ஒரே சரீரத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததால் கொலோ செயர்கள் நன்றியறிதல் உள்ளவர்களாயிருக்க வேண்டிய அவசியம் இருந்தது. "ஒரே சரீரத்திற்குள் அழைக்கப்பட்டிருந்தும்," சிலர் "நன்றியதலுக்கும்" தொடர்பு அற்றவர்களாயிருந்தனர், ஆனால் மற்றவர்களோ ஒரு தொடர்பை ஏற்படுத்துகின்றனர்:

> *"நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்" என்ற அறிவுரை ... (kai eucharistoi ginesthe) என்பது மனுஷர்கள் இயற்கையான தங்கள் பண்புடன் நன்றியுடையவர்களாயிருந்து தங்கள் ஜெபங்களில் தேவனிடத்தில் பேசுவதுமட்டுமல்ல. மாறாக சமுதாயம் தனது துதிகளைச் சொல்லி நன்றியறிதலோடு கூட தேவன் தங்களை விடுவித்தமைக்கு மகிமையை ஏறெடுத்து இருளின் அதிகாரத்தினின்று தங்களை அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்குப்படுத்தினதற்காக ஸ்தோத்திரங்களைச் சொல்ல வேண்டும் (1:12). ஒரே "சரீரத்தின்" அதிகாரம், அதாவது, "சபைக்குள்," ஸ்தோத்திரஞ் செலுத்துதல் (அல்லது நன்றி செலுத்துதல்) பாடல்களிலிருந்து ஒலிக்க வேண்டும் அதிலே "அதரிசனமான தேவனுடைய தற்சூருபமும்" ... எல்லாவற்றிலும் ஆண்டவருமாயிருக்கிற கிறிஸ்து மகிமைப்பட வேண்டும் (1:15-20).[3]*

பூமியிலுள்ள சகல ஜனங்களிலும், நிச்சயமாக கிறிஸ்தவர்கள் நன்றியறிதலோடு இருப்பதற்கு அதிகப்படச் காரணங்கள் இருக்கின்றன. கிறிஸ்து மூலமாக நமக்கு அநேக சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் உண்டு, மற்றும் கிறிஸ்துவுக்குள் நமக்கு "சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும்"

இருக்கிறது (எபேசியர் 1:3). நாம் கிறிஸ்தவ நண்பர்களாலும், தேவனாலும், கிறிஸ்துவினாலும் அன்புகூரப்படுகிறோம். இதற்கப்பால், நாம் தேவனுடைய பராமரிப்பையும் அநுபவிக்கிறோம், தற்காலத்திற்கும் எதிர்காலத்திற்குமான நம்பிக்கையால் நிரப்பப்பட்டிருக்கிறோம், மேலும் தற்கால வாழ்க்கையைக் குறித்தும், எதிர்கால வாழ்க்கையைக் குறித்த உண்மை நிலையை அறியும் உள்நோக்கும் பார்வையைப் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவுக்குள் தேவனுடைய கிருபையால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் (எபேசியர் 1:7; 2 தீமோத்தேயு 2:1).

பாடலுடன் அவரைத் தொழுது கொள்ளுதல் (3:16)

[16]கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனை களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி.

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" (3:16)

ஒரே சரீரத்திற்குள் இருப்பவர்களுக்கு பவுல் சொன்னதாவது, **கிறிஸ்துவின் (தேவ) சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது,** மற்றும் **கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாய் வாசமாயிருப்பதாக.** "கிறிஸ்துவின் வசனம்," "வசனம்," "தேவனுடைய வசனம்," "கர்த்தருடைய வசனம்" போன்ற சொற்றொடர்கள் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி காணப்படுகின்றன.[4] சில நேரங்களில் இயேசு "என் வசனம்" என்று சொன்னார்.[5] ஆகிலும் இந்த வசனத்தில் "தேவ (கிறிஸ்துவின்) வசனம்" என்று இங்கேயும் ரோமர் 10:17லும் (ரோமர் 10:17ல் "வசனம்" என்பது *hrēma* என்று கிரேக்க மொழியில் *logos* என்பதற்குப் பேதிலாக) சொல்லப்பட்டுள்ளது.

இந்த "கிறிஸ்துவின் (தேவ) வசனம்" கிறிஸ்தவனுக்குள் ஐசுவரியத்துடன் "வாசமாயிருக்க" வேண்டும் *(enoikeō)*. "வாசம் பண்ணுதல்" என்றால் "வீட்டில் இருத்தல்" என்று பொருள். இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் வேறே அமைப்புகளில் காணப்படுகிறது (ரோமர் 8:11; 2 கொரிந்தியர் 6:16; 2 தீமோத்தேயு 1:5, 14). குறிப்பிடப்பட்ட இந்த வார்த்தையைப் பயன்படுத்தி இங்கே, பவுல் கிறிஸ்துவின் வசனம் தொடர்ந்து அவர்களுக்குள் வாசம் பண்ணும்படி கொலோசெயர்கள் அனுமதிக்கும்படி வேண்டிக் கொண்டார் மேலும் அவர்களுடைய வாழ்க்கையில் நித்தியமான ஒரு அங்கமாகும்படியும் அவர்கள் விட வேண்டும் என விரும்பினார்.

"பரிபூரணமாக" *(plousiōs)*, என்பது "முழுமையாய்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டது (1 தீமோத்தேயு 6:17; தீத்து 3:6; 2 பேதுரு 1:11), அதன் பொருள் "முற்றிலும்," "நிறைவாக," "சம்பூரணமாய்," என்று சொல்லலாம். கிறிஸ்துவின் வசனம் இந்த சகோதரர்களுக்குள் பரிபூரணமாக வாசம் பண்ண வேண்டியது, அவர்களுடைய மனதிலே ஒரு நல்லவராக வரவேற்கும்

இடமாக இருக்க வேண்டும். உலகக் காரியங்களால் அது நெருக்கப்படவோ அல்லது அவர்களுடைய இருதயங்களிலே ஒரு சிறப்பான இடத்தை பிடித்துக்கொள்ள தடை விதிக்கப்படவோ கூடாது. பவுல் ஒருவேளை வசனம் அதன் ஐசுவரியத்துடன் வாசம் பண்ண வேண்டும் என்றும் பொருள்படுத்தியிருக்கலாம் - அதாவது, அளவில் மாத்திரமல்ல, தகுதியிலும் கூட. இயேசுவின் போதனைகள் விலையுயர்ந்த மாணிக்கக்கல் மற்றும் ஆஸ்திகள் போன்றது மற்றும் அவர்கள் அவைகளுக்குள் வாழ்ந்து அவைகளை தங்களுடைய பாடுதலின் சப்தத்தில் வெளிப்படுத்த வேண்டியவர்கள்.

கொலோசெயர்கள் அநேகமாக இயேசுவின் எழுதப்பட்ட வசனங்களைக் கொண்டிராமல் இருந்திருக்கலாம். ஆவியானவரைக் கொண்டு போதித்தவர்களை அவர்கள் சார்ந்திருக்க வேண்டியவர்களாயிருந்தனர் (எபேசியர் 3:3-5). இப்படியாக அவர்களுக்கு இயேசுவின் வசனம் வெளிப்பட ஏதுவாக்கினார். இதிலே அவர்களுக்கு உதவும்படியும் இயேசுவின் போதனையை அவர்களுக்கு நினைப்பூட்டும்படியாகவும் கொடுக்கப்பட்டவைகளில் ஒரு வழி, குரலிசை மூலமாக ஒழுங்கு செய்யப்பட்டது. ஜனங்கள் வசனங்களின் ஆயிரக்கணக்கான வரிகளை நினைவுபடுத்திக் கொண்டிருக்கலாம் அவை இசையாக வெளிப்படாத பட்சத்தில் நினைவில் கொண்டுவருவது கடினமானதாக இருக்கும். பாடல்களில் இருக்கும் சிந்தனைக் கருத்துக்களை தியானம் பண்ணுவதினால், பாடியோ அல்லது கேட்டு கவனித்தோ அப்படித்தியானம் பண்ணுவதன் மூலம் கிறிஸ்துவின் வசனம் அவர்களுடைய மனதிலே நல் எண்ணத்தை ஏற்படுத்தும். இப்படியாக பரிபூரணமாய் அவர்களுக்குள் வாசமாயிருக்கும் பழைய ஏற்பாட்டுக்குப் பதிலாக, கொலோசெயர்கள் இயேசுவின் போதனைகளுக்கு அதிகமாய் அக்கறைகாட்டி அவைகளைச் சார்ந்திருக்க வேண்டும். ஆதிசபை இயேசு அப்போஸ்தலர்களுக்கு நேரடியாகவோ அல்லது பரிசுத்த ஆவியானவர்மூலமாகவோ போதித்தவைகளான (யோவான் 14:26; 16:13) அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தரித்திருந்தனர் (நடபடிகள் 2:42).

“சங்கீதங்களினாலும் கீர்த்தனை களினாலும் ஞானப்பாட்டுகளினாலும்” (3:16)

சங்கீதங்கள், கீர்த்தனைகள், ஞானப்பாட்டுக்கள் (என்று எபேசியர் 5:19லும் குறிப்பிடப்பட்டுள்ளது) ஆகியவை ஆதிசபையிலே பாடிய பாட்டுக்களின் வகைகள். விளக்கவுரையாளர்கள் பொதுவாக இந்த மூன்றுக்கும் நுணுக்கமான வேறுபாடுகளை ஏற்படுத்துவது கடினமானது என்று ஒப்புக் கொள்கின்றனர். பலதரப்பட்ட பாடல்களின் அமைப்புகளின் பதங்கள் விளக்கமாகக் காணுகின்றன. சிலர் “சங்கீதம்” என்ற வார்த்தையின் (psalmoi) பொருள் பழைய ஏற்பாட்டின் சங்கீதப் புத்தகத்தின் இயல்பை பிரதிபலிப்பதாக அல்லது யூதர்களின் பாடல் அமைப்பைக் கொண்டவைகளாக இருப்பவை என்று கருத்து தெரிவிக்கின்றனர். “கீர்த்தனைகள்” (humnoi) கிறிஸ்தவ பாடல்கள் எழுதுவோரால் புனையப்பட்ட துதிப்பாடல்கள். “ஞானப்பாட்டுக்கள்” என்பது ஆதிசபையின் காலத்தில் இருந்த நடைமுறைக்கு ஏற்றாற்போல் புனிதப்பாடல்களாக வடிவமைக்கப்பட்டவை. “பாட்டுக்கள்”

(odai) என்பவை பக்திப் பாட்டுக்களாகத்தான் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை, ஆகிலும் பவுல் பாடவேண்டிய பாடல்களின் வகையைக் குறிப்பிட்டுச் சொன்னார்; அவை பக்திக்குரியவைகளாய் அல்லது இயல்பில் ஆவிக்குரியவைகளாய் இருக்க வேண்டியதிருந்தது. O'Brien ஒரு முடிவுரையாக,

> பதங்களுக்கிடையே உறுதியான வித்தியாசங்களை கண்டு பிடிக்க முடியாவிட்டாலும் வகைப்படுத்தப்பட்ட - இசை இன்னதென்று சரியாக நிதானிக்கவும் முடியாது. புதிய ஏற்பாட்டின் பாடல்களின் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு ... இந்த மூன்று வார்த்தைகளும் "சங்கீதம்," "கீர்த்தனை," "ஞானப்பாட்டுக்கள்" ஆகியவற்றின் "முழுமையான கருத்துக்களை விவரித்து பாடுதலை ஆவியானவர் வெளிப்படுத்துகிறார்" ... கிறிஸ்துவின் வசனம் (சபை) சமுதாயத்தின் அங்கத்தினர்கள் மத்தியில் வாசம் பண்ணி அவர்களைக் கட்டுப்படுத்துகிறார், அதினாலே அவர்கள் ஒருவருக்கொருவர் போதித்து ஆவியினால் ஏவப்பட்ட சங்கீதங்கள் கீர்த்தனைகள் ஞானப்பாட்டுக்களினாலே புத்திசொல்லிக் கொள்கின்றனர் ...[6]

"சகல ஞானத்தோடும் ... ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு" (3:16)

கிறிஸ்துவின் வசனம் அவர்களுக்குள் வாசமாயிருந்திருந்தால், அது பாடலில் வெளிப்படுத்தப்பட்டிருந்தால், அது போதிப்பதற்கும் புத்தி சொல்லுவதற்குரிய ஞானத்தின் மூலாதாரமாக இருக்கும். **ஞானம்** *(sophia)* கிறிஸ்தவர்களுக்கு முக்கியமானது. பவுல் "ஞானம்" எனும் பதத்தை இந்த நிருபத்தில் ஆறுமுறை பயன்படுத்தியிருக்கிறார் (1:9, 28; 2:3, 23; 3:16; 4:5). அவர் உலக ஞானத்தை உண்மையான ஞானத்தோடும் ஒப்பிட்டு கொரிந்தியர் புத்தகத்தில் முரண்படுத்திக் காட்டியிருக்கிறார் (1 கொரிந்தியர் 1:17-2:13). வசனம் சொல்லுவதை கொலோசெயர்கள் அறிந்திருப்பதோடு மட்டுமல்ல மாறாக அவைகளை ஞானமாக கையாண்டு சபையின் நலனுக்காக பயன்படுத்த வேண்டும்.

கொலோசெயர்களை கலங்கப் பண்ணின கள்ள போதகர்களின் ஞானம், சுத்தமும் பரிபூரணமும் நிறைந்த இயேசுவின் போதனைகளுக்கு முரண்பட்டு காணப்பட்டது. அது மேலும் மெருகூட்டப்பட வேண்டியதாயிருக்கவில்லை, ஏனெனில் அவருடைய வார்த்தைகள் கேட்பவர்களின் ஆவிக்குரிய தேவைகளை நிறைவேற்றபோதுமானவைகளாக இருந்தன. இயேசு பேசின வார்த்தைகள் மூலமும் (யோவான் 12:49, 50), எழுதப்பட்ட வசனங்கள் மூலமும் (1 கொரிந்தியர் 14:37; 1 யோவான் 1:1-4) தேவனுடைய சத்தியம் அறியப்பண்ணப்பட்டது. கிறிஸ்துவின் நிறைவான போதனை அவருடைய வசனத்தின் மூலம் மட்டுமே தெரிய வந்தது.

"சகல ஞானமும்" என்பது ஒன்றேல் "உங்களுக்குள் வாசம் பண்ணுதல்" மூலமாகவோ அல்லது **ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லுதல் மூலமாகவோ** ஒரு சிறுமாற்றத்துடன் செயல்படுவது. முன்பு சொன்னதாக இருந்தால், பிறகு கொலோசெயர்கள் வசனத்தை தங்களுக்குள் வைத்துக் காத்துக் கொண்டு வாழவேண்டும். பின்னதான கருத்தாக இருக்குமானால்,

இதுவே பெரும்பாலான மொழிபெயர்ப்பாளர்களும் விளக்கவுரையாளர்களும் தெரிந்து கொண்டுள்ளபடி, கொலோசெயர்கள் போதித்து கிறிஸ்துவின் ஞானத்துடன் புத்திசொல்ல கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தனர் (2:3).

"போதித்து" (*didaskontes*) என்றால் கற்பித்தல் மூலம் கல்வி புகட்டுதல் என்று பொருள். "புத்தி சொல்லுதல்" என்றால் (*nouthetountes*) வழிகாட்டுதல் அல்லது ஆலோசனை கொடுத்தல், சரியற்ற நடத்தைகளை கவனித்துப் பார்த்து புத்தி சொல்லுதல், இப்படியாக மற்றவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்று பொருள். கிறிஸ்தவர்கள் பாடுவதன் மூலம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி அவர்களை கட்டியெழுப்ப வேண்டியவர்கள், அவை செயலுக்கத்தைக் கொடுத்தலும் அதே போல போதித்தலுமாகும்.

பாடுதல் என்பது இரட்டை வழிகாட்டிச் செயலாகும்; நம்முடைய பாடலின் வார்த்தைகள் மற்றவர்களை நோக்கினதாகவும் தேவனை நோக்கினதாகவும் இருக்க வேண்டும். பாடுதல் மற்றவர்களுக்குப் போதித்து புத்தி சொல்லக் கூடியவைகளாயிருப்பதால், கிறிஸ்தவ சமுதாயத்தில் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டிய செயல்பாடு அது. மேலும் அது ஒரு தனிப்பட்ட நபருக்கும் தேவனுக்கும் இடையேயான ஒரு தொடர்பு. இரண்டிலும் சரிசமவிகிதம் எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்றைக் காட்டிலும் மற்றொன்றுக்கு அதிக வலியுறுத்தல் கொடுக்கப்பட்டு பேசும்போது, பாடுதலின் நோக்கத்தையே கெடுத்து விடக் கூடும்.

"ஒருவருக்கொருவர்" என்பது கிறிஸ்தவ சமுதாய மக்கள் கிறிஸ்துவின் வசனங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்தளித்து இப்படியாக முழுமையாகப் பலனடைய வேண்டும். Peter T. O'Brien எழுதினதாவது.

> எப்படியிருப்பினும், இங்கே, உள்ளூர் சபையின் அங்கத்தினர்கள் … ஒருவருக்கொருவர் போதித்து புத்தி (*heautous*, "உங்களுக்குள்" சொல்லிக்கொள்ள வேண்டும் என்பது உண்மையில் *allelous*, "ஒருவருக்கொருவர்," என்பதிலிருந்து வித்தியாசப்பட்டதல்ல, இதன் பிரதிபலிப்பு பரஸ்பரம் ஒருவருக்கொருவர் செயல்பட வேண்டும் …).[7]

சிலர் வசனங்கள் 3:16லும் எபேசியர் 5:19லும் குறிப்பிடப்பட்டுள்ள பாடுதல் கிறிஸ்தவக்கூட்டங்களில் பாடுவதோடு சம்பந்தப்பட்டவைகளல்ல என்று சொல்லுகின்றனர், ஆனால் தனிப்பட்ட பாடுதலுக்கும் அல்லது தனிப்பட்ட கூட்டங்களில் பாடுவதற்கும் சொல்லப்பட்டது என்கின்றனர். F. F. Bruce என்பவர் அப்படியொரு முடிவெடுப்பதை கண்டிக்கிறார்:

> "உங்கள்" என்பது "உங்களுக்குள்" என்று பொருளாகுமா (ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனுக்குள்ளும்) என்று பொருளா அல்லது "உங்கள் மத்தியில்" (கிறிஸ்தவ சமுதாயமாக) என்று பொருளா? இரண்டில் ஒன்று ஏற்புடையதாயிருந்த போதிலும், ஒரு வகையில் [பவுல்] மிக ஆழமாக மிக உறுதிப்பட இரண்டில் எந்த ஒன்றிற்கும் மாற்றுக் கருத்தாக கூறவில்லை, வசனப்பகுதியின் கண்ணோட்டத்தில் பொதுவாக கூடிவருதலின் பயன்பாட்டையே தெரிவு செய்யப்பட வேண்டும். ஒரு பரவலான நோக்கோடு கிறிஸ்தவ செய்தியின்

பிரஸ்தாபத்திற்காகவும் கிறிஸ்தவ போதனைக்காகவும் அவர்களுடைய கூட்டங்களில் இடமளிக்கப்படுவதாக.[8]

Eduard Lohse இந்த மதிப்பீட்டை ஏற்றுக் கொண்டு இந்த செயல்பாடு சபையால் செயல்பட வேண்டிய காரியம் என்று கூறியதன் மூலம் உறுதிப்படுத்தினார். "சரியான நன்றி செலுத்துதல், வசனம் 15ல் ஊக்கமளிக்கப்படுவது போல், வசனத்தைக் கேட்டு அதிலே தன் பிரதிபலிப்பைக்காட்டுவதாலும் தேவனை மகிமைப்படுத்தும்படி பாடல்களை பாடுவதாலும் நடப்பிக்கப்பட வேண்டும்."[9]

ஆதிசபை கூடிவந்தபோது அதில், பாடுதல் தொழுகையில் ஒரு முக்கியமான பங்கைக் கொண்டிருந்தது. இளைய பிளினி (Gaius Plinius Caecilius Secundus, கி.பி. 61 வாக்கில் பிறந்தவன்) கிறிஸ்தவர்களோடு தனக்கிருந்த எதிர்ப்பை எழுதினான். ரோம சக்கரவர்த்தி ட்ரேஜனுக்கு இவன் எழுதிய கடிதங்களில் கிறிஸ்தவர்களைக் கண்டபோது அவர்களை அவன் எப்படி நடத்தினான் என்று விவரித்திருக்கிறான். இந்த கடிதங்கள் கிறிஸ்தவர்கள் ஒன்றாகக் கூடிவரும் கூட்டங்களில் அவர்களின் செயல் பாடுகளைக் குறித்து கிறிஸ்தவனல்லாதவனிடமிருந்து வந்த தகவல்கள் ஆகும். கி.பி. 110 வாக்கில் அவன் எழுதிய போது "அவர்கள் ஒரு குறிப்பிட்ட நாளில் வெளிச்சத்துக்குமுன் கூடிவருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர், அக்கூட்டங்களில் கிறிஸ்து எனும் தேவனுக்கு பாடல் வரிகளை மாறிமாறிப் பாடினார்கள் ..."[10] என்று எழுதினான். கிறிஸ்தவர்கள் தங்கள் தொழுகை நேரத்தில் பாடினார்கள் என்பதற்கு கிறிஸ்தவர்களல்லாதவர்களால் கொடுக்கப்பட்ட வரலாற்றுச் சான்று இது, இதைத்தான் பவுலும் இந்த வசனப் பகுதியில் கேட்டுக் கொண்டார் (3:16).

"உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாடி" (3:16)

பாடுதல் *(adontes)* என்பது **நன்றியுடன்** *(charis)* **தேவனுக்கு இருதயத்திலிருந்து** *(kardiai)* **சேர்த்து வரவேண்டும்.** இதற்கு ஒப்பான வசனப்பகுதியில் (எபேசியர் 5:19ல்), பவுல் எபேசியர்களுக்கு "உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பாடி *(adontes)* கீர்த்தனம் பண்ணி *(psallontes)*" என்று எழுதினார். "சங்கீதம்" என்பதை தொடர்புடைய வினைச்சொல்லாகிய *psalmos* என்பதன் அர்த்தத்தை *psallō* என்று (தனி நபர் பாடுவதை) சிலர் தவறான கருத்தைக் கொடுத்தனர். (காண்க "மேலும் கற்க எனும் தலைப்பின் கீழ் *Psallō* என்பதன் பொருள்" என்ற இந்தப் புத்தகத்தின் இன்னொரு பகுதியில் காணவும்.)

கொலோசெயர்கள் செய்கிற எல்லாக் காரியத்துக்கும் "நன்றி செலுத்தும்படி" அடுத்த வசனத்தில் பவுல் குறிப்பிடுவதால், J. B. Lightfoot *charis* நன்றி என்பதை " 'ஏற்புடமை,' 'இனிமை,' " என்று புரிந்து கொள்ளப்படவேண்டும்[11] என்ற முடிவுக்கு வந்தார். அதன் பிரதான அர்த்தத்தில் இன்னும் அதிகமான ஒற்றுமையைக் குறிக்கிறது. அது KJV மற்றும் NKJVயில் "கிருபை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, "நன்றி செலுத்துதல்" என்றும், "நன்றியுள்ளவர்களாயிருத்தல்" என்றும் அல்லது "நன்றியறிதல்" என்றும் மற்ற மொழிபெயர்ப்புகள் கூறுகின்றன (RSV; NRSV; 1977 NASB;

NASB; NIV; TNIV). *மொழிபெயர்ப்பாளர்களும் விளக்கவுரையாளர்களும் இங்கே நன்றி செலுத்துதல் அல்லது நன்றியறிதல் என்பதே பொருள்படும் என்று பொதுவாக ஒப்புக்கொள்ளுகின்றனர், charis என்பது மற்ற வசனப்பகுதிகளில் மிக அபூர்வமாக இந்த அர்த்தத்தைக் கொண்டுள்ளது.*

Charis, என்பது அதன் அடிப்படையிலிருந்து அதே வார்த்தை, "கிருபை" என்று 122 முறையும், "நன்றி" என்று 3 முறையும், "நன்றியுள்ளவர்களாயிருத்தல்" என்று 2 முறையும், "நன்றிகள்" என்று 6 முறையும் NASB *மொழிபெயர்ப்பில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. Charis என்பது நன்றி செலுத்துதலுக்காக அடிக்கடி பயன்படுத்தப்படாவிட்டாலும், இந்த அர்த்தம் குறிப்பிட்ட சில அமைப்புகளில் பொருந்துகிறது (ரோமர் 6:17; 1 கொரிந்தியர் 15:57; 2 கொரிந்தியர் 2:14; 8:16; 9:15). அதன் பிரதான அர்த்தம் அழகு மேலும் கவரத்தக்க தோற்றத்தைக் கொடுக்கத்தக்கதாக கவர்ச்சி, அன்பான, வசீகரிக்கத்தக்க என்றெல்லாம் விவரிக்கப்படலாம். நட்புறவுமுறைக்கு குறிப்பிடும்போது, கிருபை என்பதன் பொருள், தகுதியில்லாதவனுக்குக் காட்டும் தயவு என்பதாகும். சிலவேளைகளில் இதன் பொருள் நன்றியறிதல் மற்றும் விசேஷ தயவுக்காக நன்றி செலுத்துதல் என்பதாகும்.*

சகலத்தையும் அவருடைய நாமத்தில் செய்தல் (3:17)

17வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.

"வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து" (3:17)

பவுல் கொலோசெயருக்குச் சொன்ன எல்லாவற்றையும் அவர்கள் கைக்கொள்வது மட்டுமல்ல, ஆனால் அவர்கள் **வார்த்தையினாலோ கிரியைகளினாலோ எதைச் செய்தாலும்** (அவர்கள் செய்தார்கள்) அவைகளை இயேசுவின் நாமத்தில் செய்ய வேண்டும். **எதைச் செய்தாலும்** என்பது நல்ல காரியங்களுக்கு மட்டுமே குறிப்பிடுகிறது, தீய செய்கைகளை கைக் கொள்வதையல்ல.

கிறிஸ்தவம் என்பது ஒரு செயல் மார்க்கம். கிறிஸ்தவர்கள் *செய்கிறவர்களாய்* மாத்திரமல்ல, அறிந்து கொள்கிறவர்களுமாயும் இருக்க வேண்டும் (யாக்கோபு 4:17), *விசுவாசிப்பதைப்* போல *செயல்படவும்* வேண்டியவர்கள் (யாக்கோபு 2:24), மேலும் *சொல்லுவதைப்* போல *செய்யவும்* வேண்டியவர்கள் (மத்தேயு 23:3). எல்லாரும் அவர்களுடைய வார்த்தைகளாலே நியாயந்தீர்க்கப்படுவார்கள் (மத்தேயு 12:37), அதேபோல அவர்களுடைய செயல்களாலும் (பிரசங்கி 12:14; மத்தேயு 16:27; ரோமர் 2:6; 2 கொரிந்தியர் 5:10; 1 பேதுரு 1:17), நியாயந்தீர்க்கப்படுவார்கள். அவர்கள் அறிந்தவைகளையும் விசுவாசிப்பவைகளையும் கொண்டு அல்ல. இந்தக் காரணத்தால் நாம் என்ன சொல்லுகிறோம் என்ன செய்கிறோம் என்று எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

கீழ்ப்படிதல் வெளிப்படையாக வெளிப்படுத்தப்படும்போது, விசுவாசம் ஒரு நபரை செயல்படும்படி உந்துவதுபோல (எபிரெயர் 11:4, 5, 7; யாக்கோபு 2:14-26) இருதயத்தால் உந்தப்பட வேண்டும் (ரோமர் 6:17). இருதயம்தான் ஒரு நபருடைய மொழிக்கு மூலகாரணி, அதேபோல கோபம் கொள்ளுதல், இரக்கங் காட்டுதல், வெறுத்தல், அன்பு, தயவு, வருத்தம், சந்தோஷம், இச்சை, நல்லொழுக்கம், தவறு, சத்தியம், வேறு எந்த செயலும் - நன்மையானாலும் தீமையானாலும் அப்படியே (மத்தேயு 12:34-36). இதினால் தான் நியாயத்தீர்ப்பு வார்த்தைகளையும் செயல்களையும் அடிப்படையாகக் கொண்டது.

"எதைச் செய்தாலும்" மற்றும் "எல்லாவற்றையும்" ஆகிய இரண்டுமே ஒரு அடிப்படை வேர்வார்த்தையிலிருந்து வந்தவை, மற்றும் அவை எல்லாவற்றையும் இயேசுவின் அதிகாரத்தின் கீழ் செய்வதை வலியுறுத்துகிறது. ***இதுதான் இயேசுவின் நாமத்தினாலே*** *என்ற சொற்றொடரின் பொருள்.*

William Hendriksen *சரியாக ஆய்வு செய்துள்ளார்,*

> *நாமம் என்பது இயேசு தாமே வெளிப்படுத்தியபடி கர்த்தராகிய இயேசுவை குறிக்கிறது என்பது கவனிக்கப்பட வேண்டியது. "நாமத்தினாலே" என்பது, அவருடைய (செயலின்) படி என்று பொருள், அவருடன் கொண்டுள்ள முக்கியமான நட்புறவைக் கொண்டிருப்பதன்படி என பொருள்படும், அதாவது, அவரது வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்கு ஒப்பாக, அவருடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படிதலாக, அவருடைய வல்லமையைச் சார்ந்திருப்பதன்படியாக என்றெல்லாம் அது பொருள்படும்.*[12]

கொலோசெயர் எல்லாவற்றையும் "கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலே" "en" செய்ய வேண்டியவர்களாயிருந்தனர். இதன் பொருள் அவர்கள் எதைச் செய்திருந்தாலும் தம்முடைய நாமத்தினாலே தம்மை வெளிப்படுத்திய இயேசுவுக்கு மரியாதையுடன், அவரைக் கனம் பண்ணும்படி, அவருக்கு கீழ்ப்படியும் பொருட்டு செய்யப்பட வேண்டும். இயேசுவின் நாமத்தைக் குறித்த இந்த எண்ணப்போக்கு, இப்படியாக இயேசு தாமே, ஒவ்வொரு செயலின் பின்னணியிலும் அவரே செயலூக்கம் கொடுக்கும் சக்தியாக இருக்கிறார். அவர்கள் எல்லாவற்றையும் அவருடைய சித்தத்தின்படி செய்து எதையுமே அவருடைய எதிர்பார்ப்புக்கு முரண்படாமல் செய்ய வேண்டியவர்களாயிருந்தனர்; இப்படியாக எல்லாவற்றையும் அவருடைய அதிகாரத்துக்கு மதிப்புக் கொடுத்து அவருடைய நாமத்தினால் செய்வார்கள்.

கிறிஸ்தவர்களின் செயல்பாடுகளெல்லாம் மனித அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டவை அல்ல, மார்க்கப் போதகரால் ஒரு காரியம் கைக்கொள்ளும்படி அறிமுகப்படுத்தப்பட்டால், அதை ஏற்றுக் கொள்பவர்கள் அதை அந்த நபரின் பெயரின் அடிப்படையில் தொடர்ந்து செயல்பட மட்டுமே முடியும். அந்த கைக்கொள்ளும் செயல் இயேசுவின் நாமத்தினால் கைக் கொள்ளப்பட முடியாது.

இயேசு அதிகாரத்தில் மேலானவர். அவர் "கர்த்தரும்" "இயேசுவுமாய்" அல்லது "கிறிஸ்துவுமாய்" இருக்கிறார். "கர்த்தர்" என்பது அதிகாரத்தைக் குறிக்கிறது; அது பிதாவுக்கும் குறிப்பிடலாம் (மத்தேயு 4:7) அதே போல

இயேசுவுக்கும் குறிப்பிடலாம் (1 கொரிந்தியர் 8:6). புதிய ஏற்பாட்டில் "கர்த்தர்" என்பது பெரும்பாலும் இயேசுவுக்கு குறிப்பிடப்படுகிறது. "இயேசு" என்றால் எபிரேய மொழியில் "யோசுவா," இதன் பொருள் "யெகோவா இரட்சிக்கிறார்" அல்லது "யெகோவா இரட்சிப்பாய் இருக்கிறார்." "மேசியா," என்றால் ராஜாவாக, தீர்க்கதரிசியாக, அல்லது ஆசாரியராக அபிஷேகம் பெற்றவர், என்பது எபிரெய பெயருக்கு சமமாக "கிறிஸ்து" எனும் சொல்.

இயேசுவின் பெயரைக் குறித்துச் சொல்லப்பட்டது போலவே அவரைக் குறித்துச் சொல்லப்பட்டவைகளும் உண்மைகளே. அவருடைய பெயரிலிருந்து அவரைத் தனிமைப்படுத்த இயலாது. அவருடைய நாமம் எல்லா நாமத்துக்கும் மேலானது (எபேசியர் 1:21; பிலிப்பியர் 2:9), மேலும் அவர் மற்றெல்லாருக்கும் மேலானவர், அவருடைய நாமத்திலே முழங்கால் யாவும் முடங்கும் (பிலிப்பியர் 2:10) மற்றும் அவர் முன்பாக வணங்கும். பவுல் இயேசுவின் நாமத்தில் என்று குறிப்பிட்ட போது, குறிப்பிட்ட வேண்டுகோள்கள் நிமித்தம் (1 கொரிந்தியர் 1:10; 2 தெசலோனிக்கேயர் 3:6; 2 தீமோத்தேயு 2:19) அவர் இயேசுவுக்கே மரியாதை கொடுத்துப்பேசினார். 3:17ல் பவுல் கொலோசெயர்கள் தங்கள் வாழ்க்கையை "கர்த்தருடைய நாமத்தில்" வழிநடத்திக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டார் - அதாவது, இயேசுவின் அதிகாரத்தின் பேரிலும் அவருடைய ஆளுமையின் பேரிலும் அவரைக் கர்த்தரென்று ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இயேசுவைப் பின்பற்றுகிறவராகிறவர்கள் "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்பட்டனர். கிறிஸ்தவர்களாக, நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிரயத்துக்கு வாங்கப்பட்டவர்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 1:5). நாம் அவருக்கு அடிமைகளாக அவருக்கே உரியவர்கள் (1 கொரிந்தியர் 7:22; எபேசியர் 6:6) மேலும் நாம் அவரை மகிமைப்படுத்த வேண்டியவர்கள் (1 கொரிந்தியர் 6:20). நாம் எல்லாவற்றையும் அவருடைய நாமத்தினாலே செய்தால் நாம் அவரை மகிமைப்படுத்துகிறவர்களாயிருப்போம் - அதாவது, அவருடைய சித்தத்தின்படி செய்தால் - ஏனெனில் அவர் நம்முடைய கர்த்தராயிருக்கிறார். நாம் கிறிஸ்தவர்களானபோது, அவருடைய நாமத்தைத் தொழுது கொண்டோம் (நடபடிகள் 2:21; ரோமர் 10:13) அவரை கர்த்தராக ஏற்று அவருக்கு கீழ்ப்படிகிறவர்களானோம் (மத்தேயு 7:21; லூக்கா 6:46; நடபடிகள் 22:16). நாம் கிறிஸ்துவுக்குடையவர்களானதால், தொடர்ந்து அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களாய் எல்லாவற்றையும் அவருடைய நாமத்தினாலே செய்கிறோம், அவருடைய சித்தத்தின்படியும் நடந்து கொள்ளுகிறோம்.

"அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" (3:17)

தொடர்ந்து செய்கிற எல்லாவற்றிலும் நாம் **நன்றிசெலுத்த வேண்டும்.** "ஸ்தோத்திரி" எனும் பதம் (*eucharisteō*) தன்னுள் *charis* எனும் ("கிருபை") வார்த்தையைக் கொண்டுள்ளது, அதில் நன்றியுணர்வு மற்றும் ஸ்தோத்தரித்தல் ஆகிய வார்த்தைகளும் உட்பட்டவை (காண்க 3:16). *Eucharisteō* என்ற வார்த்தை இயேசு நாலாயிரம்பேரை அப்பங்களாலும் மீன் துண்டுகளாலும் போஷிப்பதற்கு முன் தேவனிடத்தில் அவர் ஜெபித்தபோது இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது (மத்தேயு 15:36) மற்றும் கர்த்தருடைய பந்தியை அவர்

ஸ்தாபித்தபோது ஜெபித்த வார்த்தைகளும் இப்படித்தான் குறிப்பிடப்பட்டது (மத்தேயு 26:27). வேறு வசனப்பகுதிகளில், அது தேவனிடத்தில் ஜெபித்த ஜெபங்களில், அதிகமாக அடிக்கடி பயன்படுத்தப்பட்டது (யோவான் 11:41; நடபடிகள் 27:35) அல்லது நன்றி செலுத்துதலுக்குப் பயன்படுத்தப்பட்டது (1 கொரிந்தியர் 1:14; 14:18).

கொலோசெயர்கள் நன்றியுணர்வுடன் ஒட்டிக்கொண்டவர்களாய் இருப்பதற்கு 3:15-17ல் பவுலால் கொடுக்கப்பட்ட மூன்று கட்டளைகளைக் காண்கிறோம். அவர்கள் ஒரே சரீரத்தில் நன்றியறிதலுள்ளவர்களாய் கிறிஸ்துவின் சமாதானம் தங்கள் இருதயங்களை ஆளும்படி விட வேண்டும் (வசனம் 15); அவர்கள் நன்றியறிதலுள்ளவர்களாய் பக்தியுடன் பாடி கிறிஸ்துவின் வசனம் பரிபூரணமாய் அவர்களுக்குள் வாசம் பண்ண விட வேண்டும் (வசனம் 16); மேலும் அவர்கள் எல்லாவற்றையும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து (பிதாவை) ஸ்தோத்தரிக்க வேண்டும் (வசனம் 17). கொலோசெயர்கள் எல்லாவற்றிற்காகவும் எல்லாக் காலங்களிலும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கக் காரணம் உண்டு. பவுல் எபேசியருக்கு எழுதும்போது, "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிக்கும்படி" கூறினார் (எபேசியர் 5:20).

***அவர் முன்னிலையாக** என்று சொல்வதினால், பவுல் இயேசு மூலமாக அவர்கள் **பிதாவாகிய தேவனிடத்தில்** ஜெபத்தோடும், துதியோடும், தொழுகையோடும் மற்றும் நன்றியறிதலுடனும் செல்ல வேண்டுமென்று அர்த்தப்படுத்தினார். இயேசுவானவர் மட்டும், அவர் மட்டுமே கிறிஸ்தவர்களுக்கு ஒரே மத்தியஸ்தராக இருக்கிறார் (1 தீமோத்தேயு 2:5). மற்ற இடங்களிலே பவுல் பிதாவினிடத்தில் இயேசு மூலமாகத்தான் கிட்டிச் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம் என்று போதித்தார் (ரோமர் 1:8; 7:25; 16:27; 2 கொரிந்தியர் 1:20).*

மேலும் கற்றுக்கொள்ள

ஊெறீபுஸிஸிநுனு என்பதன் பொருள்

எபேசியர் 5:19ல், பவுஜ ல் சகோதரர்களிடம், "ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடி [adontes] கீர்த்தனம் பண்ணி [psallontes]" என்று சொன்னார்.

Psallō என்றால் கீர்த்தனம் பண்ணுதல் அல்லது பாடுதல் என்று பொருள். மிக உயர்வாகக் கருதப்பட்ட lexicon *சில பதிப்புகள்,*[13] *வார்த்தைக்கு விளக்கம் எனும் பெயரில் வாத்திய இசைக்கருவியுடன் பாடுதலை உட்படுத்தியிருக்கிறது, இது சரியானதல்ல. அப்படிப்பட்ட விளக்கங்களினாலே வசனங்கள்* Koine *எனப்பட்ட ("பொதுவான") கிரேக்க மொழியில் எழுதப்பட்டது என்பதையும் சிறப்பு கிரேக்க மொழி நடையில் எழுதப்படவில்லை என்பதையும் அறியாதிருக்கிறார்கள்.* Bauer *தனது ஒப்புதலில், " ... கீர்த்தனம் பண்ணுதல் என்பது சிறப்பாகப் புரிந்து கொள்ளத்தக்கது" அதன் பொருள் எபேசியர் 5:19ன்படி psallō என்பதுதான் என்றார்.*[14] *1 கொரிந்தியர் 14:15ல் இந்த வார்த்தை சிறப்பாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது மற்றும் யாக்கோபு 5:13ல்*

“சங்கீதம் பாடக்கடவன்” என்றும் விளக்கம் அளிக்கப்படுகிறது.

கிறிஸ்தவ தொழுகையில் இசை

தொழுகையில் இசையைக்குறித்து தேவன் எதிர்பார்ப்பது என்ன?

(1) தேவன் நாம் “பாடும்படி” எதிர்பார்க்கிறார். நாம் புதிய ஏற்பாட்டில் “பாட” அல்லது “கீர்த்தனம் பண்ணும்படி” போதிக்கப்பட்டோம் (ரோமர் 15:9; 1 கொரிந்தியர் 14:15; யாக்கோபு 5:13; எபேசியர் 5:19). சிலர் கிரேக்கப் பெயர்ச்சொல்லான *psalmos* என்பது இசைக் கருவி சேர்க்கப்படுவதன் அவசியத்தை உறுதிப்படுத்துவதாக கூறுகின்றனர். A. T. Robertson “சங்கீதத்தின் முன்னோடியான கருத்து இசைக் கருவியைச் சேர்த்துக் கொள்வது,”[15] என்று எழுதினார். ஆகிலும் சாட்சியங்கள் அப்படியோரு முடிவுக்கு விடுவதில்லை. பிற வியாக்கியானிகள் *psallō* என்னும் கருத்துக் கொண்ட பாடுதலில் இசைக்கருவியை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கருதுகின்றனர். ஆகிலும், முன்னோடிகளாய்க்காணும் நிபுணர்கள் இந்த மதிப்பீட்டிற்கு மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

The New International Dictionary of New Testament Theology புத்தகம் “சங்கீதம்” எனும் வார்த்தைக்கு விளக்கமளித்து, கீர்த்தனைகளும் ஞானப்பாட்டுக்களும் துணைப்பண்புகளைச் சுட்டிக் காட்டுகிறதேயல்லாமல் விளக்கவுரையில் இசைக்கருவி சேர்த்துக் கொள்ளப்படுதலை குறிப்பதில்லை: “*Psalmos*, என்றால் ஆவிக்குரிய புனிதப்பாடல்கள், சங்கீதம் போன்றவை; *psallō* என்பது (ஒருபாட்டு அல்லது துதித்துப்) பாடுதல்.”[16] அது மேலும் பின்வரும் வாக்கியத்தைக் கொடுக்கிறது: “மிகவும் பொதுப்படையாகக் குறிப்பிட்டால் *psalmos* என்பது ஒரு துதி கீர்த்தனையையும், *psallō* என்பது ஆவிக்குரிய அல்லது புனிதப்பாடலைப்பாடுதலையும் குறிக்கிறது.”[17]

புதிய ஏற்பாட்டின் மிகப்பெரிய அகராதி ஒன்று ஒரு சங்கீதத்தை ஒரு கீர்த்தனையோடு அல்லது ஞானப்பாட்டோடு ஒப்பிட்டு இப்படியாக வார்த்தையில் (வசனத்தில்) வாத்தியக்கருவி இசையை சேர்க்கவில்லை. அதில், கிரேக்க மொழியில் பேசும் யூதர்கள் *hymnos* [கீர்த்தனை] மற்றும் *psalmos* [சங்கீதம்] அல்லது *ōdē* [பாடல்] இவைகளுக்கிடையே எந்த வித்தியாசமும் ஏற்படுத்தவில்லை என்று சொல்கிறது.[18]

கூடுதலாக, O’Brien எழுதியதாவது,

> *Psallo* என்பதன் மூல அர்த்தத்தின் அடிப்படையில் ... “பிடுங்குதல் (முடியை)” “இழுத்துக் கட்டப்பட்ட ஒரு நாண் ஏற்படுத்” தும் ஒலி, ஒரு வில்லில் கட்டப்பட்ட நூல் கயிறு போல், ஒரு யாழின் நரம்பால் இசைக்கப்படும் ஒலி போன்றது, சிலர் சங்கீதம் என்பது தவிர்க்க இயலாத பொருளில் நரம்புகளால் ஆன இசைக் கருவியுடன் பாடுகிற பாடலைக் குறிக்கும் என்கின்றனர்; ஆனால் இந்த வரையறை தேவையில்லை ...[19]

கிரேக்க *psalmos* (“சங்கீதங்கள்”) குறித்து Marvin R. Vincent எழுதிய *psallō* என தலைப்பிட்ட கட்டுரையின் கீழ் குறிப்பிடும் வியாக்கியானவுரையாவது.

> பெயர்ச்சொல்லாகிய *சங்கீதம்* (எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16; 1 கொரிந்தியர் 14:26), இந்த வினைச்சொல் அடிச்சொல் வரலாற்றுப்

பண்பில் இருப்பது, புதிய ஏற்பாட்டில் மார்க்க (பக்திப்) பாடலாக பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது, அது மத்தேயு 26:30; மாற்கு 14:26, ஆகிய வசனங்களில் பழைய ஏற்பாட்டு சங்கீதத்தின் தன்மை காணுகிறது என்றாலும், *hymneō*, அதுதான் நம்முடைய கீர்த்தனை, பழைய ஏற்பாட்டில் சங்கீதமாக பாடி பயன்படுத்தப்பட்டது ... சிலர் இதன் வினைச்சொல் அதன் மூல அடையாளத்துடன் இசைக்கருவியுடன் பாடுவதைக் குறிப்பதாக நினைக்கின்றனர். செப்துவஜிந்த் என்ற (கிரேக்க எபிரெய) திருமறையின் ஆதிக்கமாக இருக்கிறது ... ஆனால் பேசிலோ, அம்புரோஸோ, கிறிஸ்சோஸ்டமோ, அவர்களுடைய இசையைக்குறித்து எழுதியவற்றில் இசைக்கருவிகுறித்து குறிப்பிடவில்லை. குறிப்பிட்ட இசைக்கருவி, ஆகியவற்றை பேசில் வன்மையாகத் கண்டிக்கிறார். பிங்ஹாம் காரியத்தை சுருக்கமாக விட்டுவிட்டு, ஜஸ்டின் மார்டின் சொன்னதை மேற்கோள் காட்டி வாத்திய இசைக்கருவி கிறிஸ்தவ சபைகளிலே பயன்படுத்தப்படவில்லை என்றார் இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள வினைச்சொல் துதிகளைப்பாடுதல் என்பதே பொதுவான பொருளில் சொல்லப்பட்டுள்ளது.[20]

வின்செண்ட் குறிப்பிட்ட கூற்றுப்படி அன்று ஆதிச்சபை இசைக்கருவிகள் எதையும் சேர்த்துக்கொள்ளாமல்தான் பாடியிருக்கின்றனர். அவருடைய கண்ணோட்டத்தில், சங்கீதங்களைப் பாடுதல் என்பது, ஒரு வாத்திய இசைக் கருவியோடு பாடுவதை குறிப்பிடுவதில்லை.

பழைய ஏற்பாட்டு தொழுகைகளில் பலதரப்பட்ட இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், ஆதிசபையின் துவக்கத்திலிருந்து, கிறிஸ்தவர்கள் குரலிசை கொண்டே அல்லது வாத்தியக்கருவிகளை இசைக்காக சேர்த்துக் கொள்ளாமலேயே பாடினார்கள்.

இது பதினாறாம் நூற்றாண்டு வரை அது உட்பட சபையிலே இசையை கருவிகளைச் சேர்க்காத சத்தங்கொண்டு பாடஇசை எழுதப்பட்ட காலக்கட்டத்தைக் குறிக்கிறது ... இன்று உள்ள நாட்களில் இன்னிசை பெரும்பாலும் பயன்பாட்டிலிருப்பதால் (கருவி) சேர்த்துகொள்ளப் படாத என்ற பல பொருள்கொண்ட ஒரே வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.[21]

கிறிஸ்தவர்கள் தங்கள் தொழுகைகளில் பாடுவதை மட்டுமே குறைந்த பட்சம் முதல் ஆறுநூறு ஆண்டுகள் வரை, பயன்படுத்தியுள்ளனர், அதன் பிறகு ரோமன் கத்தோலிக்க சபை உருவாகி அவர்களுடைய மட்டரகமான மாஸ்களில் வாத்திய இசைக் கருவிகளை அறிமுகப் படுத்தியுள்ளனர். கிழக்கத்திய பாரம்பரிய மரபு சபைகள் (ரஷ்யா, கிரேக்கம், உக்ரைன் சபைகள்) இசைக்கருவிகளை பயன்படுத்துவதிலிருந்து சமீப ஆண்டுகளில் விலகியிருக்கின்றனர், புராட்டஸ் டண்டுகளில் பெரும்பாலான இயக்கங்கள் மார்டின் லூத்தர் அவைகளின் தோற்றத்திற்கு காரணமாய் துவக்கி வைத்தபோது முதல் இருநூறு ஆண்டுகள் குரலிசைப் பாடல்களையே பாடியுள்ளனர். புராட்டஸ்டண்ட் சபைகளில் வாத்திய இசைக்கருவிகள் கொண்டு வரப்பட்டபோது, அதற்கு எதிர்ப்பு கிளம்பாமல் இருக்கவில்லை,

குறிப்பாக பிரிஸ்பிட்டேரியன் சபைகளில் எதிர்ப்பு இருந்தது.[22] பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் பகுதியில், இசைக்கருவிகளை சேர்த்ததால் அநேக உள்ளூர் சபைகள் பிரிந்து போய் மீட்டமைப்பு இயக்கம் தோன்ற வேண்டியதாயிருந்தது.

1979 மற்றும் 2000 வருட பதிப்புகளில் அவருடைய கிரேக்க ஆங்கில அகராதிக்கு வால்டர் பாயுயர் முகவுரை எழுதினார். செப்துவஜிந்திலுள்ள கிரேக்கு புதிய ஏற்பாட்டு கிரேக்கிலிருந்து வித்தியாசப்பட்டிருப்பதாக அது விவரிக்கிறது:

> துவக்கநிலை கிறிஸ்தவ இலக்கியத்துடன் தொடர்புடைய இலக்கியங்கள், அநேக எண்ணிக்கையுள்ள பிரதிகளாக கிரேக்க மொழியில் தொகுக்கப்பட்டது. அது பூர்வகால கிரேக்க மொழியல்ல, குறைந்த பட்சம் அவை அத்தனே நாட்டு பொற்கால கிரேக்கமாக இருந்திருக்கலாம்.[23] இவை உயர்வகை கற்றலுக்கு வழிகாட்டும் ஸ்தாபனங்களில் போதிக்கப்படுகிறது, அவைகள் பயன்படுத்தும் சொல் அகராதிகளில் இது முதன்மையான இடத்தைப் பிடித்துள்ளது. அதற்கு ம றாக, ஒலியியல் ஆய்வு, சொல்வடிவ இயல், சொற்றொடர் இயல் மற்றும் அதன் நடை, மேலும், எல்லாவற்றுக்கும் குறைவாயல்லாத சொல் தொகுதி ஆகியவைகளின் ஒப்பீடு வித்தியாசங்களை வெளிப்படுத்துகிறது.[24]
>
> தோற்றத்திற்கு மேல் முக்கியமானது புதிதாய் அமைவு பெற்ற வார்த்தைகள் தான் நமது இலக்கியங்கள், சில வேளைகளில் செப்துவஜிந்த்தைப் பின்பற்றுகிறது, சில வேளைகளில் அதற்கு புறம்பே காணுகிறது, பழங்கால வார்த்தைகளில் பலவற்றையும் பொதுவான கிரேக்க மொழி புதிய அர்த்தத்துடன் கூட பயன்படுத்துகிறது ...[25]

எனவே, புதிய ஏற்பாட்டில் காணும் வார்த்தைகள், செப்துவஜிந்த்தில் அதே பொருள்களை கொண்டிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இந்தக் காரணத்தால், *psallō*, என்பது செப்துவஜிந்த்தில் வெறுமையாய் “பாடுதல்” என்றோ அல்லது “இசைக் கருவிகளுடன் பாடுதல்” என்றோ, அர்த்தப்படலாம், அது *psallō*, என்பதன் கொய்னே (“பொதுவான”) கிரேக்க அர்த்தத்தைப் பிரதிபலிக்காமலும் இருக்கலாம்.

சிலர் தாயெரின் பழைய பதிப்பான *புதிய ஏற்பாட்டின்* கிரேக்க - ஆங்கில அகராதியை சுட்டிக் காட்டி *psalmos* என்றால் புதிய ஏற்பாட்டு காலத்தில் ஒரு பாடல் வாத்திய இசைக்கருவியோடுதான் பாடப்பட்டது என்று சிலர் குறிப்பிடுகின்றனர். தாயெர் எழுதியதாவது,

> *Psalmos*, என்னும் வார்த்தைக்கு அதிகபட்ச கருத்து, இசைக்கருவிகள் சேர்த்து பாடுவதை குறிப்பிட்டாலும், *hymnos* என்பது தேவனுக்கு துதி என்றும் பாடலுக்குரிய பொதுவான சொல் *ode* என்பது தான், கருவிகள் சேர்க்கப்பட்டாலும், சேர்க்கப்படாவிட்டாலும் துதிப்பாடலானாலும் வேறு எந்த கருத்தைக் குறித்தப்பாடலானாலும் இதுதான் பொதுவான வார்த்தை. இப்படியாக ஒரே பாடல் *psalmos*, என்றோ *hymnos* என்றோ *ode* என்றோ குறிப்பிடப்படலாம் ...[26]

தாயெரின் அகராதி முகவுரை ஒரு பொருள் கொடுக்கும் பல சொற்கள்

கொடுக்கப்படுவதால் அகராதியின் பிரதானப்பகுதியின் விளக்கம் அதன் பொருளை மாற்றாது என்று விளக்கமளிக்கிறது:

> மீண்டும்: ஒரு பொருள் கொண்ட பல சொற்களின் பதங்கள் அதன் வேறுபாடு கொண்டு பயன்படுத்தும் விதம் (Schmidt தனது அதிகமான பரிணாமமுள்ள இலக்கியத்தில்) பலதரப்பட்ட கட்டுரைகளிலே கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களை மாற்றம் செய்வதற்காக வடிவமைக்கப்பட்டதன்று. மாறாக, சிறப்புப் பயன்பாட்டை விளக்குவது ஒப்பிடுவதற்காக மட்டுமே பெரும்பாலும் ஒரு அளவுகோலாக பயன்படுத்தப்பட்டது, இதினால் ஒரு வார்த்தையின் அளவீடும் வழிகாட்டலும் மாறுதல் பெறும்போது அது அளவிடமுடியும்.[27]

Psallō எனும் பதத்தை விளக்கப்படுத்தும் கட்டுரையில் தாயெர் *psallō*வைக் குறித்த அடிச்சொல் வரலாற்றின் பரிணாமக் கருத்தைக் கொடுத்தார், பிறகு புதிய ஏற்பாட்டில் அதின் பொருள் என்ன என்பதையும் குறிப்பிட்டார், அது *"ஒரு கீர்த்தனையைப்பாடுவது, பாடல்மூலம் துதிகளைச் செலுத்தி தேவனைக் கொண்டாடுவது"*[28] என்றார். *Psalmos* என்பதிலேயும் இதே விளக்கத்தைக் கொண்டு அணுக வேண்டும். புதிய ஏற்பாடு அடிச்சொல் வரலாற்றைக் குறித்த விளக்கத்தை கொடுத்திருக்கிறது: *"ஒரு பக்திப்பாடல், ஒரு சங்கீதம்."*[29]

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், புதைபொருள் படிப்புகளால், வேத வல்லுனர்கள், புதிய ஏற்பாட்டு கொய்னி கிரேக்க மொழியை நன்கு புரிந்து கொண்டனர். இந்த நேரத்திற்கு முன்பு, சில வேத வல்லுனர்கள் புதிய ஏற்பாட்டு கிரேக்கம் பழைய சிறப்பு கிரேக்கத்திலிருந்து வித்தியாசப்பட்டிருப்பதாக உணர்ந்தவர்கள், அது எபிரெய மொழியின் சொல்வாக்கினால் என்று நினைத்தனர். மற்றவர்கள் அது ஒரு தனித்துவம் பெற்று தன்னில் தானே விளக்கியமொழி, தூய்மையும் ஒப்புயர்வற்றதுமான ஒரு கிரேக்கமே பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டது. என்று நினைத்தனர். அன்றாட பதிவேடுகளின் கண்டுபிடிப்பால், பொதுவாக ஜனங்கள் மத்தியில் பழக்கத்தில் இருந்த கிரேக்கம் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருப்பதை, வேத வல்லுனர்கள் உணரத்துவங்கினர். இந்த பதிவேடுகள் அகராதியின் தொகுப்பாளர்கள் இன்னும் அதிகமாக கொய்னே, அல்லது "பொதுவான," கிரேக்க மொழிப் பயன்பாட்டை சரியாக விளக்குவதற்கு உதவிசெய்தன, மேலும் புதிய ஏற்பாட்டிலுள்ள வார்த்தைகளுக்கு சரியற்ற விளக்கங்களைக் கொடுப்பதைத் தவிர்க்கவும் செய்தன.

(2) தேவன் தமது அதிகாரத்தின்படி நாம் பாடுவதை எதிர்பார்க்கிறார். தேவனுடைய எல்லா வெளிப்பாடுகளிலும் நமக்கான அவருடைய தெரிவுப்படி பாடுவதில் தான் கண்டிப்பாக இருக்கிறார். அவர் எந்த வித வரையரையும் விதிக்காத காரியங்களில், தொழுது கொள்பவர்கள் தங்களுடைய சுய பகுத்தறிவுப் பண்புப்படி செயல்படலாம். இந்த உபதேசத்திற்கான ஒரு நல்ல உதாரணம் பேழையைக் கட்டியது (ஆதியாகமம் 6:14-16). அதைக் கட்டுவதில் நோவாவுக்கு பயன்படுத்தப்படும் கருவிகளில் சுதந்திரமிருந்தது. ஆனாலும் அந்த பேழைக்கான செயல்பொருளில் அவருக்கு வரையறையிருந்தது. ஒரு கதவையோ ஜன்னலையோ கூடுதலாக பயன்படுத்தியிருந்தாலும் அது தேவனுடைய சித்தத்தை மீறுவதாயிருந்திருக்கும்.

இதே கோட்பாடு தேவனை தொழுது கொள்வதில் பயன்படுத்தப்பட வேண்டும். இயேசு புளிப்பில்லாத அப்பத்தையும் திராட்சப்பழ ரசத்தையும் தெரிவு செய்தார். அப்பமும் திராட்சப்பழ சரமும் மட்டுமே கர்த்தருடைய பந்தியில் பயன்படுத்தப்பட வேண்டும். திராட்சப்பழ ரசத்தை வழங்குவதற்கு ஒரு பாத்திரம் பயன்படுத்தப்படுகிறது. தேவன் குறிப்பிட்ட பொருளில் செய்யப்பட்ட பாத்திரத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று எங்கும் குறிப்பிட வில்லையாதலால், கிறிஸ்தவர்கள் எந்த வகையிலான பாத்திரத்தையும் பயன்படுத்திக் கொள்ள தெ ரிவு செய்து கொள்ளலாம். அது கண்ணாடிப் பாத்திரமாகவோ, பிளாஸ்டிக், பேப்பர், உலோகம், அல்லது மண்ணாலான எவ்வகைப் பாத்திரத்தையும் பயன்படுத்தலாம்.

தேவனாக தெரிவு செய்தால், அதற்கு விதி விலக்கு உண்டு. கூட்டுதல், குறைத்தல், அல்லது மாற்று பொருள் கொணருதல் என்பதெல்லாம் அவருடைய சித்தத்தை மீறுவதாகும். தேவன் ஒரு காரியத்தை தெரிவு செய்யும்போது, விலக்கப்பட வேண்டியவைகளைப்பற்றி அவர் கூற வேண்டியதில்ல. அப்படிச் செய்தால் விலக்கப்பட வேண்டிய எல்லாவற்றையும் கூறவேண்டும். தேவன் தடைகள் எதையும் வைக்கவில்லையென்றால் அவருடைய சீஷர்கள் ஆராதிப்பில் அவர்கள் தெரிவு செய்யும் எதையும் பயன்படுத்த சுதந்திரம் பெற்றுள்ளனர். நாம் ஆராதிப்பில் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் தெரிவு செய்துள்ளார். ஆகவே அவருடைய தெரிவுடன் சேர்ப்பதற்கு எதுவுமில்லை. பாடுதலிலும், ஜெபித்தலிலும், கொடுப்பதிலும் (காணிக்கையிலும்), அல்லது வேறு எந்த செயல்களிலும் இதுதான் உண்மை. தேவன் கற்பித்துள்ளவைகளுக்கப்பால் அத்துடன் ஒன்றை சேர்ப்பதோ குறைப்பதோ அவருடைய சித்தத்தை மீறும் செயலாகும்.

ஒரு நகரத்தில் பயணம் பண்ணுபவர் தனது கார் ஓட்டுனரிடம் குறிப்பான முகவரியைக் கொடுக்க வேண்டும்; வேறு எந்த சாத்தியக்கூறுகளையும் அவர் மறுக்க முற்பட வேண்டுவதில்லை. வழிகாட்டுதல் என்பது போக வேண்டிய தெருக்களை மட்டுமே உள்ளடக்கியவை; *போக வேண்டாத* தெருக்களை குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. குறிப்பிட்ட தெருவின் பெயர் குறிப்பிடப்படாததன் பொருள் தான் சென்று சேரவேண்டிய இடம் அந்த தெரு மூலமாக அல்ல என்பதே. தேவனும் தமது போதனையில் அதைத்தான் செய்துள்ளார். நாம் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுவதன் மூலம், மற்றெல்லாவற்றையும் அவர் தவிர்த்தார்; நாம் என்னவெல்லாம் செய்யக் கூடாது என்று அவர் எல்லாவற்றையும் பட்டியலிடவேண்டுவதில்லை.

(3) சரியான எண்ணத்துடன் நாம் தொழுது கொள்வதை தேவன் எதிர்பார்க்கிறார். தேவன் குறிப்பிட்டுள்ளவைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பதில் கிறிஸ்தவர்கள் கவனமாயிருக்க வேண்டும். அவைகளுக்கு மேலாகவோ குறைவாக செயல்படுவோர் தேவனுடைய தெரிவுகளை மீறுதலில் உட்பட்டிருக்கின்றனர். எப்படியிருப்பினும், தொழுகை அமைப்பில் சரியாக இருப்பதாலேயே தொழுகையின் சாராம்ஸம் சரியானதாயிருக்கும் என்று சொல்லமுடியாது. வார்த்தைகளைப் பாடுவதுமட்டும் போதுமானதல்ல; நாம் ஆவியிலும் உட்பட்டிருக்க வேண்டும் சகல தொழுகையும் ஆவியினாலும் உண்மையினாலும் செய்யப்பட வேண்டும் (யோவான் 4:23, 24). தேவனால் தெரிவு செய்யப்பட்ட ஊடகத்தினூடே அவரைக் கிட்டிச் சேரும்போது

தங்களுடைய இருதயங்களை ஊற்றி விடுவோரின் தொழுகையை தேவன் ஏற்றுக்கொள்கிறார். “ஆவியோடும்” “தேவனிடத்தில் உங்கள் இருதயப் பூர்வமாகவும்” என்பன ஒரே கருத்தைக் கொடுப்பவைதான். சொற்கள் சார்ந்த தொடர்புகள் இருதயத்திற்கு உட்பட்டவை; அது பாடுவதுடன் சேர்ந்து வருகிற கருவி அதுவே.

துதிகளோடும் வணக்கத்தோடும் உதடுகள் நிறைந்திருக்கையில் தொழுகை ஏறெக்கப்படுகிறது (எபிரெயர் 13:15) அவைகள் நன்றியுள்ள இருதயத்தோடு வியப்பாலும் ஸ்தோத்திரத்தாலும் தேவனிடத்தில் சேருகிறது. கிறிஸ்தவ தொழுகை துதிகளைக் கொண்ட கீர்த்தனைகளோடு கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துதலையும், அதே போல போதனைகளையும் அறிவுரைகளையும் கொண்ட பாடல்களையும் உட்படுத்தியது.

பயன்பாடு

நன்றியறிதலுடன் வாழ்தல் (3:15-17)

தேவன் நமக்குச் செய்துள்ள யாவற்றையும் நாம் நினைத்துப்பார்த்தால், நாம் நன்றிசெலுத்துவதற்கு அநேகக் காரணங்களைக் காண முடியும் (வசனங்கள் 15, 17). கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கம் வகிக்கிற பிரியமுள்ள செயலே சந்தோஷத்திற்கும் நன்றி செலுத்துதலுக்கும் மூலக்காரணிகளாயுள்ளன, வாழ்வில் எதிர்மறைக்காரியங்களை கொண்டு உலாவருவது தேவனை நோக்கி நன்றியறிகிற உணர்வைக் கொண்டு வராது. நாம் மற்றவர்களின் வாழ்வு முறையைப் பார்த்து நமது வாழ்க்கையில் எதுவுமே மறுக்கப்பட்டதாக நினைத்துக் கொள்ளக்கூடாது (சங்கீதம் 37:7-10; 73:2, 3, 16-20). பாடுகளே வாழ்க்கையில் நல்லொழுக்கங்களை விருத்தி செய்கிறது என்ற உணர்விலிருந்து நன்றி செலுத்துதல் வருகிறது (ரோமர் 5:3, 4; எபிரெயர் 12:4-11; யாக்கோபு 1:2-4). நமது வாழ்க்கையில் நாம் பெறுகிற மழைக்காகவும் சூரிய வெளிச்சத்துக்காகவும் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும், அவைகள் இரண்டுமே ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அவசியமானவை.

கிறிஸ்தவர்கள் மற்றவர்களுக்கு உபதேசிக்கவும் தேவனுக்கு நன்றிசெலுத்துதலையும் பாடல் மூலம் வெளிப்படுத்த வேண்டும் (வசனம் 16). கிறிஸ்தவத்தில் காணும் மாபெரும் பக்தி பாடல்கள் வேறு எந்த மதத்திலும் இல்லை, ஏனெனில் கிறிஸ்தவர்கள் பாடுவதற்கு நிறைய காரியங்கள் இருக்கின்றன. நாம் ஏறத்தாழ எப்பொழுதும், எங்கும் பாடமுடியும். நாம் துதித்துப் பாடும்போது, நாம் இசைக்காக மாத்திரம் பாடக்கூடியவர்களல்ல என்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும், மாறாக அதினாலே நாம் தேவனோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவும் சக கிறிஸ்தவர்களுக்கு போதிக்கவும் நாம் பாடுகிறோம், என்றும் உறுதிபடுத்திக் கொள்ளவேண்டும்.

கிறிஸ்தவர்கள் எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்துவின் சித்தத்தின்படி செய்ய வேண்டியவர்கள் (வசனம் 17). நாம் செய்கிற எல்லாவற்றிலும் தமது நாமம் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதையும் நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இயேசு போதித்தவைகளுக்கு முரணாக நாம் எதையுமே செய்யக் கூடாது. மாறாக, நாம் செய்கிற அனைத்துமே அவருடைய உபதேசத்தை அஸ்திபாரமாகக் கொண்டு

செயல்பட வேண்டியவர்கள் (மத்தேயு 7:24-27; 28:20).

“தேவ (கிறிஸ்துவின்) சமாதானம்” (3:15)

“கிறிஸ்துவின் சமாதானம்” மூன்று மடங்கானவை: தேவனோடு சமாதானம், உள்ளான சமாதானம், மற்றவர்களுடனான சமாதானம், இந்த மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை இதில் மிகவும் இன்றியமையாதது தேவனோடு சமாதானம், இதிலிருந்து உள்ளான சமாதானமும், கூடியவரை மற்றவர்களுடனான சமாதானத்தையும் கொண்டு வருகிறது.

தேவனோடு சமாதானம் என்பது இயேசுவின் கிரியைகளினால் வந்தது. “இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்” (ரோமர் 5:1; காண்க ஏசாயா 9:6).

நமது துன்மார்க்கக் கிரியைகள் தேவனிடத்திலிருந்து நம்மை அந்நியமாக்கி அவரிடத்தில் பகைமையை உண்டாக்கக்கூடும் (கொலோசெயர் 1:21). தமது இரத்தத்தை சிலுவையில் சிந்தியதன் மூலம், இயேசு நமது பாவக்கடனைத் தீர்த்தார், அதினால் தேவனோடு சமாதானத்தை கொண்டிருக்கும் சாத்தியக்கூறையும் ஏற்படுத்தினார் (1:20-22).

நாம் தேவனோடு சமாதானமாயிருக்கிறோம் என்ற உணர்வைக் கொண்டிருப்பதால் மட்டும் நமக்கு அவரிடத்தில் சமாதானமுண்டு என்று பொருள் அல்ல. எரேமியா தன் காலத்து தீர்க்கதரிசிகளைக் குறித்து, “சமாதானமில்லாதிருந்தும்: சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்” என்று எழுதினார் (ஏரேமியா 6:14; காண்க எசேக்கியேல் 13:10) நாம் நமது பாவங்களிலிருந்து விடுதலையாக்கப்பட்டிருந்தால் மட்டுமே மற்றும் அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழ்ந்தால் மட்டுமே நாம் தேவனிடத்தில் சமாதானமாயிருப்பதாகும்.

உள்ளான சமாதானம் என்பது கடந்த காலத்தின் திருப்திகரமான உணர்வும், நிகழ்காலத்தின் ஒரு அமைதியான உணர்வும், வருங்காலத்தின் ஒரு நம்பிக்கையோடு கூடிய இருதயமும் கொண்டிருப்பது. கடந்த காலம் நமது மனதில் அடிக்கடி தோன்றலாம். “துன்மார்க்கருக்கு இளைப்பாறுதல் இல்லை” (ஏசாயா 48:22); “ஒருவரும் தொடராதிருந்தும் துன்மார்க்கர் ஓடிப்போகிறார்கள்” (நீதிமொழிகள் 28:1). நாம் தேவனுக்கு சேவை செய்ய விரும்புவோமானால் மேலும் இயேவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டிருந்தால் (1 யோவான் 1:7), நமது கடந்த காலம் (பாவம்) மறக்கப்பட்டதற்கான நிச்சயம் நமக்கு உண்டாயிருக்கிறது (எபிரெயர் 8:12). இயேசு நமது கடந்த கால பாவங்களிலிருந்து விடுதலை செய்திருந்தால் நமது நடந்த கால தீமை நினைவுறுத்தப்படமாட்டாது.

கடந்தகால மீறுதல்களிலிருந்து விடுதலையாக்கப்பட்ட காரியம் தற்காலத்தில் நாம் ஏற்படுத்திக் கொண்ட எதிர்கால பாதிப்புக்குரிய பிரச்சனைகளை அழித்து விடும் என்ற அவசியமில்லை. நமது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் கடந்தகாலகுழப்பம் பாதித்திருக்குமானால், தேவனுடைய

சித்தத்தை செய்யும்படி தேடுகிறபோது, அவர் நம்மை கைவிடுவதுமில்லை நம்மை விட்டு விலகுவதுமில்லை (எபிரெர் 13:5).

நிகழ்காலத்தில் நாம் உள்ளான ஒரு சமாதானம் கொண்டிருக்க முடியும். தாவீது ஒருவருக்குள் இருக்கும் உள்ளான சமாதானத்தின் அமைதியைக் குறித்து விவரித்து எழுதுகிறார், "சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரை செய்வேன்; கர்த்தாவே, நீர் ஒருவரே என்னை சுகமாய் தங்கப் பண்ணுகிறீர்" (சங்கீதம் 4:8). தன்னுள் சமாதானம் கொண்டுள்ள ஒரு நபர் இரவு வேளையில் சமாதானத்தோடே இளைப்பாறுவான்.

> *பாவம் மன்னிக்கப்பட்ட ஆத்துமாவை மனக்கண் முன்பாக ஒரு காட்சியாகப் பாருங்கள், அது தான் தேவனுடைய கரத்திற்குள் பாதுகாப்பாய் தங்கியிருப்பதை அறியும்; அது தேவனுடைய முகத்தின் பிரகாசத்திலும், மெய்மறந்த அவருடைய அன்பின் அரவணைப்பிலும், உலகத்திலும் கூட, மகிழ்ந்து களிகூருகிறது; அது ஆறுதலின் தண்ணீர்களின் நடுவிலே வாசம் பண்ணுகிறது, மற்றும் மேய்ச்சலின் பசுமையிலும் படுத்துக்கொள்ளுகிறது; இரட்சிப்பு என்கிற சிறிய தீவைச் சுற்றி கடலெனக் காணும் பயங்கரமும், கோபாக்கினையின் இடிமுழக்கம் தூரத்து அலையின் இரைச்சல் ஒரு தொலைவில் காணும் சிதைவு பாறை அதைச் சூழ்ந்திருக்கிறது.[30]*

நமது எதிர்காலத்தைக் குறித்து நாம் கவலைப்படத் தேவையில்லை, ஏனெனில் இயேசு தேவனுடைய ராஜ்யத்தை முதலாவதாக வைப்பவருக்கு தேவன் அக்கறையுள்ளவராயிருக்கிறார் என்று உறுதிப்பட சொன்னார் (மத்தேயு 6:28-33). எதிர்காலத்தைக் குறித்த அக்கறைக்கு தேவனிடத்தில் கொண்டுள்ள விசுவாசமும் நம்பிக்கையும் தான் அவசியம் என்பதால் கலக்கமுற்ற இருதயத்துக்கு இதுவே நச்சு முறிவு மருந்து. தேவன் அவரில் விசுவாசமாய் இருப்பவர்களை பூரண சமாதானத்தோடு வைத்திருப்பார் (ஏசாயா 26:3). சங்கீதம் 23 அப்படிப்பட்ட தேவனில் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது: "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன் ... நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" (சங்கீதம் 23:1, 4).

உள்ளான சமாதானத்துக்கு இயேசு நம்மை அவரிடத்தில் வரும்படி அழைப்பதன்மூலம் விதிமுறையைக் கொடுத்தார், அது அவருடைய நுகத்தைச் சுமக்கவும், அவரிடத்தில் கற்றுக் கொள்ளவும் கேட்டார். இதைச் செய்வதன் மூலம், நமது ஆத்துமாவுக்கு நாம் இளைப்பாறுதல் பெறுவோம் (மத்தேயு 11:28-30). அவர் தமது சமாதானத்தை நமக்கு விட்டுச் சென்றார் (யோவான் 16:33). ஆவிக்குரிய காரியங்களில் நமது மனதைச் செலுத்துவோமானால் சமாதானம் நம்முடையது (ரோமர் 8:6; கலாத்தியர் 5:22, 23), சரியான காரியங்களைச் சிந்திக்க வேண்டும் என்பது இதன் பொருள், பவுலின் ஜீவியத்தைப் பின்பற்றுதல் (பிலிப்பியர் 4:8, 9), ஜெபத்தின் மூலம் நமது பாரங்களை தேவன்மேல் வைத்து விடுவது (1 பேதுரு 5:7) என்றும் பொருள்.

மற்றவர்களோடு சமாதானம் என்பது இயேசு நம்மிடம் எதிர்பார்க்கும்

ஒன்று (மாற்கு 9:50). சில மக்கள் அவர்களோடு நம்மை சமாதானம் பொருந்துவதை அனுமதிக்க மாட்டார்கள். இது உண்மையாயிருக்கும் போது, சமாதானத்தை ஏற்படுத்த நாம் எடுக்கும் பிரயாசங்களை புறந்தள்ளுபவர்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் (மத்தேயு 5:44), மற்றவர்களிடம் ஆலோசனையைத் தேட வேண்டும் (நீதிமொழிகள் 15:22), அவர்களோடு சமாதானத்துடன் வாழ நம்மால் கூடுமானவரை சிறப்பாக செயல்பட வேண்டும் (ரோமர் 12:18; 14:19).

நம்பிக்கையையும் சமாதானத்தையும் நாம் கிறிஸ்துவுக்குள் கொண்டிருக்கும் காட்சியை நமது கீர்த்தனைகளில் ஒன்றில் "சமாதானம், சம்பூர்ண சமாதானம்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது.[31] அதிலே சமாதானத்திற்கான மூலக் காரணிகளை ஆலோசனையாகச் சொல்லுகிறது: பாவ இருள் சூழ்ந்த இவ்வுலகத்தில் இயேசுவின் இரத்தம்; கடமைகளை குவித்துக் கொள்வதற்குப் பதில் இயேசுவின் சித்தத்தை செய்வதைச் சார்ந்திருப்போம்; மோதியடிக்கும் வருத்தங்களின் மத்தியில் இயேசுவின் மார்பில் அமைதி காண்போம்; சிங்காசனத்தில் வீற்றிருக்கும் இயேசுவில் அறிய அரிதான எதிர்காலத்தை வைத்து சார்ந்திருப்போம்.

யாரோ ஒருவர் நன்றாகச் சொன்னார், "எதிர்காலம் தன்னகத்தே கொண்டுள்ளது என்ன என்று எனக்குத் தெரியாது, ஆனால் எதிர்காலத்தை தன்னில் கொண்டுள்ளவர் யார் என்று எனக்குத் தெரியும்."

நமது பாடல்களில் கிறிஸ்துவின் வார்த்தைகள் (3:16)

ஆதிகால கிறிஸ்தவப் பாடல்கள் கிறிஸ்துவின் போதனைகளில் காணும் வார்த்தைகளை உட்படுத்தி உணர்வுப் பூர்வமாக அவருக்கு வழிபாடு செய்தது. ஆதிகால கீர்த்தனைகளில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளை யாரும் உறுதியாக அறிவதில்லை; ஆகிலும் பவுலின் நிருபங்களில் சில அவைகள் எப்படிப்பட்டவைகளாயிருந்தன என்பதற்கு ஒரு குறிப்பைக் கொடுக்கக் கூடும். அநேக வல்லுநர்களும் அவர் தம்முடைய இந்த நிருபங்களில் இவைகளில் சிலவற்றை சேர்த்துள்ளதாக நினைக்கின்றனர் (காண்க எபேசியர் 5:14; 2 தீமோத்தேயு 2:11-13). 1 தீமோத்தேயு 3:16ல், அவர் பின்வருமாறு எழுதினார்,

> தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே விளங்கப்பண்ணப்பட்டார், தேவ தூதர்களால் காணப்பட்டார்; புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப் பட்டார்.

கிறிஸ்துவின் வசனம் நமக்குள்ளே பரிபூரணமாய் வாசம் பண்ணக்கடவது. ராகத்தைக் காட்டிலும் பாடலில் வரும் வார்த்தைகள் மிக முக்கியமானவை. பவுல் பாடல்களைப் பற்றி அறிவுரை கொடுத்தார், சுருதியைப் பற்றி அல்ல. நம்முடைய சங்கீதங்கள், கீர்த்தனைகள், மற்றும் (ஆவிக்குரிய) ஞானப்பாட்டுகள் ஆகியன இயேசுவையும் அவருடைய போதனைகளையும் உள்ளடக்கியவையாக இருக்க வேண்டும். நம்முடைய பாடல்களில் அநேக பாடல்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அந்தப்

பிரகாரமாக புனையப்பட்டவை.

இருதயத்திலிருந்து பாடுபவை தேவனுக்குப் பொருந்துபவை. தேவன் இருதயத்தைக் காண்பதால் இது உண்மையே. நமது மனதிற்கு அப்பாற்பட்டதொலைதூரக் காரியங்களைப் பாடுவோமாகில், கிறிஸ்துவின் வசனம் நம்மிலே வாசம்பண்ண நம்முடைய பாடுதலின் நேரத்தில் நாம் அனுமதிப்பதில்லை. அப்படிப்பட்ட பாடல்கள் வெறுமையானதும் வீணானதும், ஏற்புடைமையற்றதுமாகும். இஸ்ரவேலைக் குறித்து தேவன் சொன்ன முறையீடுகளை ஏசாயா எழுதினார் (காண்க மத்தேயு 15:8): "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்திலே சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது" (ஏசாயா 29:13). தொழுகையிலே தேவன் உதடுகளின் கனிகளாகிய பலியை விரும்புகிறார்; அதிலும் மேலாக, நமது பாடலின் இசை (ராகம்) இருதயத்திலிருந்து வருவதை விரும்புகிறார் (எபேசியர் 5:19).

கிறிஸ்துவின் வசனம் ஞானத்தையும் அறிவையும் கொண்டவை. இயேசுவே சகல ஞானத்துக்கும் அறிவுக்கும் மூலகாரணி (கொலோசெயர் 2:3); ஆகையால், அவருடைய உபதேசங்களை நமது பாடல்களுக்கு அடித்தளமாகக் கொள்வது அவசியமானது. நாம் நேர்மையான பிரயாசத்துடன் அவருடைய செய்திகளின் சாரம்ஸத்தை சரியாக முன்வைக்க விரும்புவோமாகில் அவருடைய உபதேசங்களை பாடல் வடிவத்தில் வெளிப்படுத்த முடியும்.

கிறிஸ்துவின் வசனங்கள் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்ல வைக்கிறது. நாம் பாடுவதில் உள்ள நோக்கங்களில் ஒன்று இயேசுவின் போதனையை மற்றவர்களுக்கு கற்பிக்கக் கூடியவைகளாயிருக்க வேண்டும். ஒரு கூட்டுத் தொழுகையைச் செய்யும்படிக்கு பவுலின் போதனைகள் அவசியமாக்குகிறது, அது நாம் "ஒருவருக்கொருவர்" போதித்து புத்தி சொல்ல விரும்பினால் அப்படியாகும். கிறிஸ்தவக் கூட்டங்களில் நாம் பாடுவதற்கு வரையறை எதுவும் கொடுக்கப்படவில்லை, நாம் தனித்து இருக்கும் போதும் பாடலாம் (யாக்கோபு 5:13).

நன்கு அமைப்புப் பெற்ற ஒரு நிகழ்ச்சியில் பாடும் பாடல்களின் இசையில் போதனைகளும், புத்தி சொல்லுதலும், துதிகளும், தொழுகையும் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியவை. நாம் பாடுகிறபோது, அங்கே உள்ளூர் சபை அங்கத்தினர்கள் மட்டுமே இல்லை என்பதை நாம் நன்கு மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். அங்கே தேவனும் பிரசன்னமாயிருக்கிறார்.

கிறிஸ்துவின் வசனங்கள் தேவனுக்கு நன்றியறிதலைக் கொண்டுள்ளது. தேவன் தாமே எல்லா நம்மையான காரியங்களுக்கும் ஊற்றும் காரணமுமாயிருக்கிறார் என்பதை நாம் மறந்து விடக் கூடாது (யாக்கோபு 1:17). இந்த உணர்வு நம்முடைய இருதயங்களில் நன்றியறிதலையும் பாடல்களில் அவைகளை வெளிப்படுத்தத்தக்க வகையில் நம்முடைய இருதயங்களில் நிறைந்து காணப்பட வேண்டும். ஒருவகையில் நம்முடைய இருதயங்கள் பாடும் மகத்தான பாடல்கள் தேவனுடைய நன்மைகளைப் பற்றி நாம் துதிப்பதாக இருக்கும். இந்தக் கருத்து அடிக்கடி சங்கீதத்தில் சொல்லப்படுகிறது.[32]

நமது வாழ்வில் தேவன் கொடுக்கிற அநேக ஆசீர்வாதங்களுக்காக நாம்

நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். சில வேளைகளில் நமது மாபெரும் ஆசீர்வாதங்களை எல்லாம் போராடி பெறவேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் வெற்றி கண்ட பின், இன்னும் அதிகமான பெலம் பெற்ற கிறிஸ்தவர்களாக நாம் வளரும்படி செயலூக்கம் கொடுக்கப்படுகிறோம் (ரோமர் 5:3, 4; எபிரெயர் 13:4-11; யாக்கோபு 2:2-4).

தேவன் செய்த நன்மையான காரியங்களுக்காக நாம் நன்றியதலுள்ளவர்களாய் நமது இருதயம் நிறைந்திருக்கும் போது நாம் உண்மையிலேயே தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். நாம் பெற்றிருக்கிற ஆசீர்வாதங்களெல்லாம் நம்முடைய சொந்த கிரியைகளினால் மட்டும் வந்த விளைவு அல்ல என்று உணரும் போது இது இடம் பெறுகிறது; ஆகிலும் தேவன் கிரியை செய்து நல்ல ஈவுகளை நமக்குக் கொடுக்கிறார் (யாக்கோபு 1:17). இது உண்மை என்று நாம் உணரும்போது, நாம் நம்முடைய இருதயங்களில் நன்றியறிதல் ததும்ப பாட முடியும்.

நம்முடைய வார்த்தைகளும் செயல்களும் (3:17)

நாம் சிலவற்றை இயேசுவின் நாமத்தில் செய்யும்போது, அதை நாம் ஒன்றேல் அவருடைய அதிகாரத்தின் பேரில் செய்கிறோம் அல்லது நாம் அவரைக் கனப்படுத்தவும் மகிமைப்படுத்தவும் செய்கிறோம். இயேசு, "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்தேயு 5:16), என்று சொன்னார். நாம் வார்த்தையினாலும் கிரியையினாலும் எதைச் செய்தாலும் அவருடைய நாமத்தினாலே செய்ய வேண்டும்.

நாம் வார்த்தையினால் செய்வது என்ன. திருமறை தன்னுள் கொண்டுள்ள அநேக வசனப்பகுதியிலே நமது வார்த்தைகளைக் குறித்தும் நாவின் பயன்பாடு குறித்தும் விவாதிக்கிறது. திருமறையில் உள்ள மற்ற எந்த புத்தகத்தையும் விட நீதிமொழிகள் புத்தகம்தான் இது குறித்து அதிக தகவல்களைக் கொண்டுள்ளது. யாக்கோபும் தன் நிருபத்தில் நல்ல அறிவுரையைக் கொடுத்திருக்கிறார். கேட்கிறதற்கு நாம் தீவிரமாயும் பேசுகிறதற்குப் பொறுமையாயும் கோபிக்கிறதற்கு தாமதமாயும் இருக்கும்படி அவர் எழுதினார் (யாக்கோபு 1:19). நாவைக் கட்டுப்படுத்த யாராலும் கூடாது என்றும் சொன்னார் (யாக்கோபு 3:1-9).

ஒவ்வொரு வார்த்தையும் தேவனுடைய மகிமைக்கென்று பேசப்பட வேண்டும். இயேசு நாம் எப்படி பேசும்படி விரும்புகிறாரோ அப்படி பேச வேண்டும் அதினால் அவருடைய நாமம் கனப்படுத்தப்படும்.

கிரியையினாலே நாம் செய்கிறது என்ன. நம்முடைய ஒவ்வொரு செயலும் எப்படி செய்யப்பட வேண்டும் என்று இயேசு விரும்புகிறாரோ அப்படி செய்யப்பட வேண்டும். பின் வரும் காரணங்களினால் நாம் செய்வது எதுவோ அது முக்கியமானது:

1. கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பாக நாம் இருக்கலாம் (மத்தேயு 7:24, 25).
2. தேவனுடைய சித்தத்தை செய்வதன் மூலம் நாம் இயேசுவின் உறவு

முறையினராயிருக்கலாம் (மத்தேயு 12:50).

3. *நமது கிரியையினாலே நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் (மத்தேயு 16:27; ரோமர் 2:6; 2 கொரிந்தியர் 5:10; 1 பேதுரு 1:17).*
4. *தேவனுடைய வசனத்தின்படி செய்வதினால் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம் (லூக்கா 11:27, 28; யாக்கோபு 1:25).*
5. *நமது இரட்சிப்பு நமது கிரியைகளுக்கு ஏற்ற தாக்கம் பெறுகிறது (பிலிப்பியர் 2:12).*
6. *நமது கிரியையினால் மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் (யாக்கோபு 2:15-17).*
7. *நாம் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல கிரியைகளினாலும் "நீதிமானாக்கப்படுகிறோம்" (யாக்கோபு 2:24).*

நாம் செய்கிறது இயேசுவின் நாமத்தினாலே செய்யப்பட வேண்டும். அவருடைய நாமத்தினாலே நாம் கூடி வர வேண்டும் (மத்தேயு 18:20; 1 கொரிந்தியர் 5:4), மனந்திரும்புதலைப் பிரசங்கிக்க வேண்டும் (லூக்கா 24:47), விசுவாசித்தல் (யோவான் 1:12; 1 யோவான் 5:13), ஜெபத்தில் கேட்டல் (யோவான் 14:14), ஞானஸ்நானம் பண்ணப்படுதல் (நடபடிகள் 2:38), பேசுதல் (நடபடிகள் 9:27; யாக்கோபு 5:10), நீதிமானாக்கப்படுதல் (கொரிந்தியர் 6:11), மற்றும் நன்றி செலுத்துதல் (எபேசியர் 5:20) ஆகிய அனைத்தையும் அவருடைய நாமத்தினாலே செய்ய வேண்டும்.

"கிறிஸ்தவர்கள்" எனும் பெயரை நாம் தரித்துக் கொண்டுள்ளோம், மேலும் அந்த நாமத்தினாலே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (1 பேதுரு 4:14-16). நமது அக்கறையெல்லாம் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படவும் அதினால் அவருடைய நாமம் சம்பந்தப்பட்ட எந்த இலச்சையும் வராதபடியான வாழ்வை வாழக்கூடியவர்களாயிருக்க வேண்டும்.

குறிப்புகள்

[1]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 183. [2]J. D. Douglas, ed., *Greek-English Interlinear New Testament*, trans. Robert K. Brown and Philip W. Comfort (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1990), 704. [3]Eduard Lohse, *Colossians and Philemon*, trans. William R. Poehlmann and Robert J. Karris, Hermeneia (Philadelphia: Fortress Press, 1971), 150. [4]*உதாரணமாக காண்க மத்தேயு 13:20; 15:6; லூக்கா 22:61; நடபடிகள் 8:25.* [5]*யோவான் 5:24; 8:31, 37, 43, 51, 52; 14:23; 15:20.* [6]Peter T. O'Brien, *Colossians, Philemon*, Word Biblical Commentary, vol. 44 (Waco, Tex.: Word Books, 1982), 209–10. See also E. K. Simpson and F. F. Bruce, *Commentary on the Epistles to the Ephesians and the Colossians*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957), 284, n. 118; and H. C. G. Moule, *The Epistles to the Colossians and to Philemon*, The Cambridge Bible for Schools and Colleges (Cambridge: University Press, 1893; reprint, 1902), 129–30. [7]O'Brien, 208. [8]Simpson and Bruce, 283. [9]Lohse, 150. [10]Pliny *Letters* 10.96, S 7; addressed to Emperor Trajan; quoted in Everett Ferguson, *Early Christians Speak* (Austin: Sweet Publishing Co., 1971), 81.

[11]J. B. Lightfoot, *St. Paul's Epistles to the Colossians and to Philemon*, rev. (London:

Macmillan & Co., 1916), 226. [12]William Hendriksen, *Exposition of Colossians and Philemon*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1964), 163–64. [13]Bauer (2000), 1096. [14]Ibid. [15]A. T. Robertson, *Paul and the Intellectuals: The Epistle to the Colossians*, rev. and ed. W. C. Strickland (Nashville: Broadman Press, 1959), 112, n. 3. [16]K. H. Bartels, "*psalmos*," in *The New International Dictionary of New Testament Theology*, ed. Colin Brown (Grand Rapids, Mich.: Zondervan Press, 1978), 3:670. [17]Ibid., 671. [18]Gerhard Delling, *"humnos, humeno, psallo, psalmos,"* in *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Friedrich, trans. and ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 8:499, n. 73. [19]O'Brien, 209. [20]Marvin R. Vincent, *Word Studies in the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1946), 3:269–70.

[21]*Oxford English Dictionary*, 2d ed., vol. 1 (1989), s.v. "a cappella." [22]See M. C. Kurfees, *Instrumental Music in the Worship or the Greek Verb Psallo Philologically and Historically Examined* (Nashville: Gospel Advocate Co., 1950), 146, 177, 190, 194. [23]இந்த ஒத்த வாக்கியம் கிரேக்க கலைக்குரியது, இது செப்துவஜிந்த்தில் இப்படியே காணப்படுகிறது. [24]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 2d ed., trans. William F. Arndt and F. Wilbur Gingrich, rev. and aug. F. Wilbur Gingrich and Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 1979), xi; and Bauer (2000), xiii. [25]Bauer (1979), xx; and Bauer (2000), xxii. [26]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament*, trans. and rev. Joseph H. Thayer (Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 637. [27]Ibid., viii. [28]Ibid., 675. [29]Ibid. [30]Robert Hugh Benson, *By What Authority?*; quoted in John Chapin, ed., *The Book of Catholic Quotations* (London: John Calder, 1956), 666.

[31]Edward H. Bickersteth, "Peace, Perfect Peace," *Songs of the Church*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). [32]சங்கீதம் 25:8; 34:8; 54:6; 69:16; 86:5; 100:5; 106:1; 107:1, 108:21; 118:1; 135:3; 136:1.

14

உறவுமுறைகளில் பொறுப்புகள்

(3:18–4:1)

குடும்பம் சார்ந்த உறவுமுறைகள் குறித்த தனது விவாதத்தின் 3:18-4:1ல் பவுல் போதனைகளையும் சுருக்கமான விளக்கங்களையும் பலதரப்பட்ட குழுக்களுக்கு முன் வைக்கிறார்.[1] கீழ்ப்படிந்திருக்க வேண்டிய மூன்று கூட்டமக்களுக்கு அவர் எழுதுகிறார்: மனைவிகள் (3:18), பிள்ளைகள் (3:20), மற்றும் வேலைக்காரர்கள் (3:21-25). தங்கள் கவனிப்பில் இருக்கும் வேறு மூன்று கூட்டமக்களுக்கு அவர்களுடைய கடமைகளும் கொடுக்கப்பட்டுள்ளன: புருஷர்கள் தங்கள் மனைவிகளை "அன்புகூர வேண்டும்" (3:19); பிதாக்கள் தங்கள் பிள்ளைகளை திடனற்றுப் போகாமலிருக்க "அவர்களை கோபமூட்டாமல்" இருக்க வேண்டும் (3:21); மேலும் எஜமானர்கள் தங்கள் வேலைக்காரருக்கு "நீதியும் செவ்வையுமானதைச்" செய்ய வேண்டும் (4:1).

புருஷர்கள், பிதாக்கள், மற்றும் எஜமானர்கள் ஆகியோருக்கு மற்றவர்கள்மேல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தை அவர்கள் துஷ் பிரயோகம் செய்யாமல், அவர்களின் கீழ் உள்ளவர்களின் நலனுக்காக உபயோகிக்க வேண்டும். வேலைக்காரர்கள் வீட்டுக்காரியங்களினிமித்தம் குறிப்பிடப்பட்டனர், ஏனெனில் அவர்களில் சிலர் குடும்ப அமைப்புக்குள் ஒருவராக செயல்பட்டனர்.

பவுலால் நியமிக்கப்பட்ட அளவுகோல், அதிகாரத்தில் இருப்போர் தங்களுக்குக் கீழ் இருப்போரின் நன்மையை நாடி செயல்பட வேண்டும், அதற்கு பிரதியாக அவர்களுக்குக் கீழ் இருப்போர் முறையான ம ரியாதையைச் செலுத்த வேண்டும். இதில் எந்தக் கூட்டமும் மற்றவர்களின் உணர்வுகளையோ தேவைகளையோ அவமதித்துவிடக்கூடாது. ஒவ்வொரு உறவுமுறையும் இரண்டு மடங்கு பொறுப்புக்களைக் கொண்டுள்ளது. இதில் முதலாவதும் உயர்ந்ததுமான கடமை இயேசுவுக்கே, அதற்குப் பிறகுதான் ஒருவருக்கொருவர் செலுத்தும் கடமை வருகிறது. பிரதானமான இலக்கு கிறிஸ்துவைப் பிரியப்படுத்துவதாக இருக்க வேண்டும். மற்றவர்களைப் பிரியப்படுத்துவது. அவருக்குப் பிறகு இரண்டாம் பட்சமாகத்தான்.

1 பேதுரு 2:13-3:7ல் பேதுருவின் கீழ்ப்படிதல் பற்றிய விவாதத்தில், அதிகாரமுள்ள ராஜாக்களுக்கும் அதிகாரிகளுக்கும் கீழ்ப்படியும்படி கிறிஸ்தவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் (2:13-16). இயேசுவின் பின்பற்றாளர்கள், தவறாக நடத்தப்பட்ட சூழ்நிலையிலும், அவரும் அதைப்போல சகித்துக் கொண்டதுபோல அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும் (2:17-25). கிறிஸ்தவ மனைவிகள் தங்கள் கணவர்களுக்கு, அவர்கள் அவிசுவாசிகளாக இருந்தாலும் கூட கீழ்ப்படிந்திருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர் (3:1-6). மனைவி புருஷனுக்குக் கீழ்ப்படிதல்

என்பது அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிதல் போலிருப்பதில்லை. மாறாக, மனைவி தன் கணவருக்குக் கீழ்ப்படிதல் என்பது அவன் மேலுள்ள அவளுடைய அன்பினாலும், அவர்களுடைய உறவுமுறைகளினால் ஏற்படும் நெருக்கத்தினாலும் இருக்க வேண்டும்.

பல்வேறுபட்ட காட்சிகளில் பூரணப்பட்ட முன்மாதிரி இயேசுதான். அவர் பரலோகத்தின் பிதாவுக்குக் கீழ்ப்படிதலுள்ள குமாரனாயிருந்தார் (பிலிப்பியர் 2:8; எபிபெயர் 5:8; 10:9), ஆதலால் பிள்ளைகளுக்கு கீழ்ப்படிதலின் முன் மாதிரியாக இருக்கிறார். ஒரு இளம் வயதுள்ள வாலிபனாயிருந்தும் தமது பெற்றோருக்கு அவர் கீழ்ப்படிந்திருந்தார். இந்த விஷயத்தில், பெரிதான ஸ்தானத்தைப் பெற்றிருந்தவர் குறைவான ஸ்தானத்தில் இருந்தவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்; இது பிள்ளைகளுக்கு முன்பாக ஒரு முன்மாதிரியாகச் செயல்படக்கூடும். அதுபோலவே மனைவிகளும் வேலைக்காரரும் உயர்வான திறமைசாலிகளாக இருந்தபோதிலும் கீழ்ப்படிதல் உள்ளவர்ளாயிருப்பதற்கு ஒரு முன் மாதிரிச் செயல். மரண வேதனைகளைத் தாம் சந்தித்துக் கொண்டிருந்த வேளையில், இயேசுவின் அக்கறையெல்லாம் அவருடைய தாயாரின் மீது இருந்தது. இந்தச் செயல் பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களைக் கனப்படுத்துவதற்கும் புருஷர்கள் தங்கள் மனைவிகளை கவனித்துக் கொள்வதற்கும் இந்த அக்கறை ஒரு முன்மாதிரியாக கிரியை செய்கிறது. ஒரு எஜமானன் எப்படி தன் வேலைக்காரர்களுக்கு பணிவிடை செய்யக்கூடும் என்பதற்கு ஒரு முன்னுதாரணமாக, இயேசு தமது சீஷர்களின் கால்களைக் கழுவினார், இயேசு "ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யும்படி வந்தார்" (மத்தேயு 20:28), அது வேலைக்காரர்களுக்கும் அதேபோல பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஒரு முன்னுதாரணம்.

ஏனெனில் கொலோசெயர் 3:17ன் படி நடப்பிக்க வேண்டிய எல்லாவற்றையும் "கர்த்தருடைய நாமத்தினாலே செய்ய வேண்டும்," என்பதால் பவுல் இந்த பயன்பாட்டை கர்த்தரின் மீது சார்ந்த அடிப்படையாகக் கொண்டார். கொலோசெயர்களின் பதில்செயல் "கர்த்தருக்கு ஏற்கும்படியும்" (கொலோசெயர் 3:18) "கர்த்தருக்குப் பிரியமானதாயுமிருந்தது" (3:20). அவர்கள் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாய் (3:22) மேலும் "கர்த்தருக்கென்று சேவை செய்கிறவர்களாய்" (3:24), அவர்களுக்கு பரலோகத்தில் ஒரு "எஜமான்" இருக்கிறாரென்று "அறிந்து" (*kurios*, "கர்த்தர்") மனப் பூர்வமாய் செய்ய வேண்டியவர்களாயிருந்தனர் (4:1). அவர்கள் தங்களுக்கு வருகிற பலனோ தண்டனையோ "கர்த்தரிடத்திலிருந்து வருகிறது" என்று உணர வேண்டியவர்களாயிருந்தனர் (3:24, 25).

ஸ்திரீகள் தங்கள் புருஷருக்கு "எல்லாவற்றிலும்" கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (எபேசியர் 5:24). அதற்கு முரணாக வேலைக்காரர்கள் தாழ்ந்திருக்க மாத்திரமல்ல மாறாக கீழ்ப்படிதலுள்ளவர்களாயும் இருக்க வேண்டும் (தீத்து 2:9; 1 பேதுரு 2:18). "கீழ்ப்படிந்திருங்கள்" எனும் பதத்தின் பயன்பாடு மனைவிகள் (அடிமைபோன்ற) "கீழ்ப்படிதலைக்" குறிப்பதில்லை மாறாக தாழ்ந்திருக்க வேண்டும் என்ற வித்தியாசப்பட்ட முறையில் புருஷர்களுக்கும் மனைவிகளுக்கும் உள்ள கீழ்ப்படிதலைக் காட்டிலும் பிதாக்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையேயான உறவுமுறை அல்லது எஜமானர்களுக்கும் அடிமைகளுக்குமிடையேயான உறவுமுறையில் ஒரு வித்தியாசத்தைக்

குறிப்பிடுகிறது (காண்க 3:20ன் விவாதம்). மனைவிகள் தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படிதலுள்ள மரியாதையைச் செலுத்த வேண்டும், பிள்ளைகளும் வேலைக்காரர்களும் "எல்லாவற்றிலும்" மரியாதையுடன் கீழ்ப்படிய வேண்டும் (எபேசியர் 6:1, 5; கொலோசெயர் 3:20, 22).

மனைவிகள் மட்டுமே "கீழ்ப்படிதலுள்ளவர்களாக" அல்லது "தாழ்ந்து போகிறவர்களாக" (hupotassō) கோரப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் இந்தப் பதம் பயன்படுத்தப்பட்டுள்ள விதத்தைக் காண்போம்:

லூக்கா 2:51 - இயேசு தம்முடைய பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்.

லூக்கா 10:17 - இயேசு தமது வல்லமையை ஊதி அனுப்பிவைத்த எழுபது பேருக்கும், பிசாசுகள் கீழ்ப்படிந்தன.

ரோமர் 10:3 - யூதர்கள் தேவ நீதிக்குக் கீழ்ப்படிந்திருக்க வில்லை.

ரோமர் 13:1, 5 - கிறிஸ்தவர்கள் அரசாங்கத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும் (காண்க தீத்து 3:1; 1 பேதுரு 2:13).

1 கொரிந்தியர் 14:32 - தீர்க்கதரிசிகளின் ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருந்தன.

1 கொரிந்தியர் 14:34 - ஸ்திரீகள் அமர்ந்திருக்க வேண்டும், வேதமும் அப்படியே சொல்லுகிறது.

1 கொரிந்தியர் 15:27 - சகலத்தையும் அவருடைய பாதத்துக்குக் கீழ்ப்படுத்தினார்.

எபேசியர் 5:21 - கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

எபேசியர் 5:24 - சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்திருக்கிறது.

பிலிப்பியர் 3:21 - இயேசு எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டார்.

தீத்து 2:9 - வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (காண்க 1 பேதுரு 2:18).

எபிரேயர் 12:9 - கிறிஸ்தவர்கள் தேவனுக்கு அடங்கி நடக்க வேண்டும்.

1 பேதுரு 3:22 - தூதர்களும் அதிகாரங்களும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன.

1 பேதுரு 5:5 - வாலிப கிறிஸ்தவர்கள் முதிர் வயதுள்ளவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

கிறிஸ்தவர்கள், தேவனுடைய பார்வையில் (கலாத்தியர் 3:28) ஆவிக்குரிய சமநிலை என்பது எல்லா மனித உறவுமுறைகளிலும் சமநிலையைக் கொடுக்கிறது என்று எண்ணக் கூடாது. ஒரு எஜமானன் தனது வேலைக்காரனுக்கோ, பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கோ, அல்லது புருஷன் தன் மனைவிக்கோ கீழ்ப்படிய கடமைப் பட்டவர்களல்ல. மாறாக, இயேசு அதற்கு அப்படியே மாறுபட்ட நிலையே சரியானதாகத் தீர்மானித்தார். அவரைப் பிரியப்படுத்த, அவர் குறிப்பிட்டுள்ள முறைப்படி அவரைக் கனப்படுத்த வேண்டும்.

தனிப்பட்ட பண்புகளுக்கான அடித்தளத்தை 3:12-14ல் போட்ட பவுல், அடுத்ததாக கொலோசெயரின் அன்றாட வீட்டு உறவு முறைகளைச்

செயல்படுத்த ஏதுவான உபதேசத்தைப் பயன்படுத்துகிறார். இவைகள் “கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்ய வேண்டியவைகள்” (3:17), அதாவது அவருடைய சித்தத்தின்படி செய்ய வேண்டியவை.

பெற்றோரும் பிள்ளைகளும் கோபம், மூர்க்கம், பொறாமை, வாயில் பிறக்கலாகாத தூஷணம், வம்பு வார்த்தைகள், மற்றும் பொய் ஆகியவை களிலிருந்து விலகியிருக்கும் போது குடும்ப அமைப்பு இரட்டிப்பாய் ஆசீர்வதிக்கப்படும் (3:8, 9). இந்த கெட்ட ஒழுக்கங்களில்லாமலிருப்பது மாத்திரமல்ல குறிப்பிட்ட சில நல்லொழுக்கங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் - அவை உருக்கமான இரக்கம், தயவு, மனத்தாழ்மை, சாந்தம், நீடிய பொறுமை மற்றும் அன்பு (3:12-14). இறுதி ஒழுக்கமான அன்பு, எதிர்மறைக் காரியங்களை குடும்பத்திலிருந்து தவிர்த்து, குடும்ப பந்தத்தை ஏற்படுத்தி, ஒற்றுமையோடும் பாசத்துடனும் கட்டியெழுப்பும் நேர்மறைக் காரியங்களை வலியுறுத்துகிறது.

மனைவிகள் புருஷர்களுக்கு (3:18)

18 மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்.

“மனைவிகளே, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்” (3:18)

ஸ்திரீகள் தங்கள் புருஷருக்கு “எந்தக் காரியத்திலேயும்” கீழ்ப்படிய வேண்டும் (எபேசியர் 5:24). பவுல் அவர்கள் (தங்கள்) ***புருஷர்களுக்குக்*** *கீழ்ப்படிய வேண்டும் என்று போதித்தார், நிகழ்கால கண்டிதத்துடன் குறிப்பிடப்பட்ட இச்சொல் ஒரு தொடர்ச்சியான கீழ்ப்படிதலை மனைவிகளால் அளிக்கப்படுவதை குறிப்பிடுகிறது (hupotassesthe, என்பது hupotassō விலிருந்து வந்த சொல்).* Robert G. Bratcher *மற்றும்* Eugene A. Nida *hupotassō என்பதற்கு இந்த விளக்கத்தைக் கொடுத்தனர்:*

> *இராணுவத்தில் கீழிருந்து மேல் வரை இருக்கிற முறைப்படி கீழ்நிலை வீரர்கள் மேல்நிலை உயர் அதிகாரிகளுக்கு இடையே இருக்கும் உறவுமுறையை விவரிக்கும் வார்த்தை (இது). அது மனைவியின் உறவுமுறை எபேசியர் 5:22, தீத்து 2:5, 1 பேதுரு 3:1 ஆகியவைகளில் பேசப்படும் வேலைக்காரன் எஜமானன், உறவுமுறை தீத்து 2:9, 1 பேதுரு 2:13, மாநில அதிகாரங்கள், ரோமர் 13:1 ஆகிய உறவுகளை குறிப்பிடுகிறது.[2]*

3:18ல் பேசப்படும் கீழ்ப்படிதல் பாலுறவுக்கு கீழ்ப்படிவதை மட்டுமே இங்கே குறிப்பிடுவதாக நினைப்பதை தவிர்க்க வேண்டும். இதுவும் இவ்வசனத்தில் உட்படுத்திப் பேசப்பட்டிருந்தாலும், அது “கீழ்ப்படிதலை” விவரிப்பதில்லை, புருஷன் மனைவியிடையேயான பாலுறவுகுறித்து பவுல் வேறு இடத்தில் பேசினார் (1 கொரிந்தியர் 7:3-5).

திருமறை உதாரணங்களில் மனைவியானவள் சுய விருப்பத்துடன் ஆயத்தமாக தனது புருஷனின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்று விளக்கப்படுத்துகிறது. 1 பேதுரு 3:5, 6ல் கிறிஸ்தவ ஸ்திரீகளுக்கு பேதுரு சாராளை உதாரணமாக கொடுத்தார். அவள்

ஆபிரகாமுக்கு கீழ்ப்படிந்திருந்தாள், அவருக்கு அவள் "கீழ்ப்படிந்து," அவரை "ஆண்டவன்" என்று சொன்னாள். இங்கே குறிப்பிடப்பட்ட "கீழ்ப்படிதல்," hupakouō, என்பதிலிருந்து வந்த வார்த்தை, பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிதலில் கட்டளையிட்டது போல ஸ்திரீகளுக்கு கட்டளையிடவில்லை. மேலும் எஜமானருக்கு வேலைக்காரர்கள் கீழ்ப்படிவது போல "கீழ்ப்படியும்படி" சொல்லப்படவில்லை.

வேறுசில வசனப்பகுதிகளைக் காண்போம். எபேசியர் 5:22-24 சொல்லுகிறது.

> *மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்கும் தலையாயிருக்கிறான் … ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல, மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.*

தீத்து 2:4, 5 "தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் சொந்த புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்று" சொல்லுகிறது. அதேபோல பேதுரு எழுதும்போது "அந்தப்படி, மனைவிகளே, உங்கள் சொந்த புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் … இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்கு கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்" (1 பேதுரு 3:1, 5).

ஸ்திரீகளுக்கு மிகப்பெரிய சுதந்தரம் அளிக்கப்பட்டு தங்கள் புருஷர்களிடம் கனத்தையும் அன்பையும் பெற ஏதுவான நிலைக்கு இயேசு அவர்களை உயர்த்தினார். ஸ்திரீகளல்ல, புருஷர்களே, குடும்பங்களைக் கவனிக்கவும் பாராமரிக்கவும் கூடிய பாரமும் பொறுப்பும் கொடுக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்தவ ஸ்திரீகள் தங்கள் மீது இப்படிப்பட்ட பாரங்கள் சுமத்தப்படவில்லை என்பதற்காக நன்றியுடையவர்களாயிருக்க வேண்டும். அவர்கள் தங்கள் புருஷர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை எடுத்துக் கொண்டு குடும்பத்தின் தேவைகளை கண்காணிக்கவும் கவலைதரும் வேலைகளைச் செய்யும்படி தோளில் சுமந்து கொள்ளவும் முயற்சிக்கக் கூடாது. தங்களின் பராமரிப்பை தங்களுடைய புருஷர்கள் தங்களுக்குச் செய்வதைப் பாராட்டும் பொருட்டு, அவர்கள் ஒத்துழைப்பைக் கொடுக்கவும், பிடிவாதம் பண்ணாமலும், தலைக் கனமாய் நடந்து கொள்ளாமலும், முரட்டாட்டமில்லாமலும் நடந்து கொள்ள வேண்டும்.

"கர்த்தருக்கேற்கும்படி" (3:18)

கர்த்தருக்கேற்கும்படி *எனும் சொற்றொடர் ஸ்திரீகள் தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படிகிற விஷயத்தில் நிதானித்து செயல்படும்படியும் கருத்தை முன்வைக்கிறது. அவர்களுடைய கீழ்ப்படிதல் கிறிஸ்தவ பெண்களுக்குத் தகுதியானவையாக இருக்க வேண்டும். அவர்கள் தங்கள் புருஷர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டியவர்கள், ஆகிலும் இயேசுவின் விருப்பத்துக்கு விரோதமான வேண்டுகோள்களுக்கு ஏற்ப நடக்கக் கூடாது. அப்படிப்பட்ட செயல் "ஏற்கும்படி" (anēken), இராது,*

முறையாகவோ சரியானதாகவோ இருக்காது என்பது இதன் பொருள். பவுல் இந்த வார்த்தைக்கு எதிர் சொல்லை தகாதவைகள் என்று எபேசியர் 5:4ல் குறிப்பிட்டார் மற்றும் அதன் நேர்மறைச் சொல்லை பிலேமோனில் உள்ள நம்பிக்கையாகக் குறிப்பிட்டார் (பிலேமோன் 8, 9) தன்னால் கொடுக்கப்பட்ட வேண்டுகோளை நிறைவேற்றும்படி அப்படிச் சொன்னார்.

"எந்தக் காரியத்திலும்" என்று பவுல் பயன்படுத்திய வார்த்தை எபேசியர் 5:24ல் "எல்லாவற்றிலும்" என்பது "கர்த்தருக்குள்" என்ற எல்லைக்குள் அளவிடப்பட்டது என்று பொருள். ஒரு புருஷன் தன் மனைவியை தேவனுடைய சித்தத்தை மீறும்படி கேட்டால், அவள் அவனுக்குப் பதிலாக தேவனுக்கே கீழ்ப்படிய வேண்டும் (நடபடிகள் 5:29). "கர்த்தருக்குள்" வாழுகிற வாழ்க்கைக்கு உட்பட்ட வேண்டுகோள்களை மட்டுமே அவள் நிறைவேற்றி கீழ்ப்படிய வேண்டும்.

மனைவிகள் தங்கள் புருஷர்களுக்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிகிற கடமையைச் செய்கிறார்கள். வெறுப்போடோ, பகைமையோடோ, அல்லது முறுமுறுப்புடனோ காட்டுகிற கீழ்ப்படிதல் "ஏற்கும்படியானதல்ல." 3:8, 9ல் காணப்படுகிற தன் கணவனைச் சம்பந்தப்பட்ட எந்த ஒரு தீயொழுக்கமும் மனைவியால் களைந்து போடப்படவேண்டிய ஒன்று. மாறாக, 3:12-14ல் வரிசைபடுத்தப்பட்ட நல்லொழுக்கங்களை தனது செயல்கள் மூலமாக அவள் நடப்பித்து காட்ட வேண்டும். இயேசுவிடத்தில் அன்புகூர்ந்து அவருக்குச் சேவை செய்ய விரும்புகிறவர்களின் குணாதிசயங்கள் இவை, இப்படிப்பட்ட வழியில் வாழும் வாழ்க்கையில், அவள் கிறிஸ்து தமது பரலோகப் பிதாவுக்கு காட்டின கீழ்ப்படிதலின் வழியாகும் (பிலிப்பியர் 2:8; எபிரெயர் 5:8) கிறிஸ்தவ மனைவியின் அன்புக்குப் பொருத்தமான வேறு எந்த பதில் செயலும் ஏற்புடையதல்ல.

இந்த வசனப் பகுதியில் பவுல் ஒரு அவிசுவாசமுள்ள புருஷனைக் கொண்டுள்ள மனைவியின் பொறுப்பைக்குறித்து பேசவில்லை. இவ்வித போதனைகளை மனைவிக்குக் கொடுக்கும் காரியங்கள் 1 கொரிந்தியர் 7:12-16 மற்றும் 1 பேதுரு 3:1-6ல் உட்படுத்தப்பட்டது. அவிசுவாசமுள்ளவர்களின் மனைவிகளுக்குச் சொல்லப்பட்டது, "... உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்துக்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையைப் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்" (1 பேதுரு 3:1, 2).

புருஷர்கள் மனைவிகளுக்கு (3:19)

19 புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள்.

"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள்" (3:19)

இரக்கமும் அன்பும் உள்ளவனாயும் கொடுமைக்காரனாயுமிராத கணவனைக் கொண்டிருந்தால் மனைவியின் கீழ்ப்படியும் கடமை மிகவும்

எளிதாக்கப்படுகிறது. புருஷர்கள் தங்கள் மனைவிகளிடத்தில் காட்டும் செயல்கள் அன்பினால் கட்டுப்படுத்தப்பட வேண்டும். **அன்பு** (*agapaō*) நிகழ்கால கண்டிப்புச் சொல்) புருஷன் தன் மனைவியிடத்தில் கொண்டுள்ள உறவுமுறையை ஆளும் ஆதாரமாயிருக்க வேண்டும். அவன் அவள் மேல் **கசந்து கொள்ளக்கூடாது**. கசந்து கொள்ளுதல் எனும் வினைச்சொல் (*pikrainō)* புதிய ஏற்பாட்டில் காணப்படும் வேறு இடம் வெளிப்படுத்தின விசேஷம் மட்டுமே (8:11; 10:9, 10).

திருமணத்துக்கு முன்பு இருந்த அதே அன்பு திருமணத்துக்குப் பிறகும் தொடரவேண்டும். திருமண நிகழ்ச்சிகள் புருஷனுக்கும் மனைவிக்குமிடையேயான அன்பின் உறவுமுறைக்கு முடிவைக் கொண்டு வருவதில்லை, இந்தச் சொற்றொடரை மாற்றுச்சொல்லில், "புருஷர்களே, உங்கள் பெண்களை நேசியுங்கள்" எனலாம். கிரேக்க வார்த்தையில் **கணவர்கள்** என்பதற்கு, *andres* எனும் வார்த்தை "ஆண்கள்" என்றோ "புருஷர்கள்" என்றோ குறிப்பிடலாம்; **மனைவிகள்** என்பது, *gunaikes* எனும் பதம் "ஸ்திரீகளையோ" அல்லது "மனைவிகளையோ" குறிப்பிடலாம். இந்த வார்த்தைகள் எப்படி மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்பதை சந்தர்ப்பப்பொருள் தான் நிச்சயிக்கிறது. இந்த வசனப்பகுதி புருஷர்கள் தங்கள் மனைவிகளில் அன்புகூரவேண்டும் என்பதை தெளிவுபடுத்துகிறது.

இங்கும் எபேசியர் 5:25லும் பவுல், புருஷன் - மனைவி உறவுமுறையைக் கட்டுப்படுத்தும் வலிமை "அன்புக்கு" மட்டுமே புருஷனுடைய பகுதியில் உணர்வுப்பூர்வமாக உண்டு என்று எழுதினார். மனைவிகள் தங்கள் புருஷர்களில் அன்புகூர வேண்டுமென்று (*agapaō*) புதிய ஏற்பாட்டில் நமக்கு எந்த இடத்திலும் கூறப்படவில்லை. தீத்து 2:4ல் முதிர் வயதுள்ள ஸ்திரீகள் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷர்களிடத்தில் "அன்பு"கூரும்படி போதிக்க கட்டளையிடப்பட்டுள்ளது. அது ஒரு தொகுப்புச் சொல்லான *philandres,* இது *phileō* ("அன்பு") விலிருந்து வந்த சொல் மற்றும் *anēr* ("புருஷன்").

அன்பு ஒருவரை எப்படி செயல்படவைக்கிறது என்ற மிக மேன்மையான விளக்கத்தை 1 கொரிந்தியர் 13:4-8ல் பவுல் எழுதினார். தனது முஷ்டியின் விரைப்புத்தன்மையையும், பிடிவாதக் குணமும், ஆதிக்க மனப்பான்மையும் உடையோராயிருக்கிற புருஷர்கள் தங்களுடைய அன்பை தங்களுடைய மனைவிகளிடத்தில் காட்ட ஏதுவாக இந்த வசனப்பகுதியை அடிக்கடி வாசித்து அதன்படி செய்ய வேண்டும்.

ஒரு கணவன் எரிச்சலுடையவனாகவோ அல்லது "கசப்புணர்வு" உடையவனாகவோ தன் மனைவியினிடத்தில் நடந்து கொள்ளும்போது, அவன் தன் சக்தியை பிரயோகித்து தன் கோபத்தை வெளிப்படுத்தக் கூடியவனாக இருக்கலாம். பேதுரு எழுதியபோது புருஷர்கள் தங்களுடைய மனைவிகளை பெலவீனப்பாண்டமாக கருதி விவேகத்தோடு நடந்து கொள்ளும்படி புத்தி சொன்னார் (1 பேதுரு 3:7).

அன்பாயும் தயவாயும் நடந்து தீமைக்குத் தீமையை சரிகட்டாமல் (ரோமர் 12:17), இருக்கிற ஒரு புருஷன் சமாதானமும் ஒற்றுமையும் மிக்க ஒரு உறவுமுறையை தன்மனைவியினிடத்தில் ஏற்படுத்திக் கொள்வான். அவன் தன் மனைவியின் இருதயத்தைப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். இருவரும் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு நெருக்கமான பிணைப்பைத்

தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்டு, அன்பினால் கிட்டிச் சேர்ந்து தயவிலும் (கனிவிலும்) நல்எண்ணத்தோடும் நெருங்கியிருக்க வேண்டும். 3:8, 9ல் சொல்லப்படுகிற பாவங்களை தவிர்த்தல் மற்றும் 3:12-14ல் சொல்லப்படுகிற தகுதிகளை வளர்த்துக் கொள்ளுதல் புருஷனுக்கும் அதே போல மனைவிக்கும் பொருந்துபவை.

புருஷன் தன் மனைவியை ஆதிக்கஞ் செலுத்தவும் அவளைத் தனக்குக் கீழ்ப்பட்டிருக்கச் செய்யவும் ஊக்கப்படுத்தப்படுவதில்லை. மாறாக, அவன் அவளை அன்புகூரும்படி சொல்லப்படுகிறான். ஒரு திருமண பந்தம் இருக்க வேண்டிய முறைப்படி இருக்க வேண்டுமானால் புருஷன், தன் மனைவியினிடத்தில் அன்பு நிறைந்த ஒரு தலைவனாக, தன்னைத்தானே அவளுக்காக ஒப்புக்கொடுக்கக் கூடியவனாக, இயேசு தம்மைத்தாமே சபைக்காக ஒப்புக்கொடுத்தது போல ஒப்புக்கொடுக்க வேண்டும் (எபேசியர் 5:25). ஒரு "பொருளாகப்" பார்க்கப்படும் மனைவி உயர்த்தப்பட்டு ஒரு அலங்காரமான தோழியாக மாற புருஷன் தனது சிறப்பான காரியங்களைக் கொடுக்கவும் தனது பெரிதான கனத்தைச் செலுத்தவும் வேண்டும்.

ஒரு மனைவியானவள் தனது புருஷனுடைய பாலுணர்வு ஆவலுக்காக மாத்திரமே என்று உத்தேசித்திருப்பாரானால் பவுல் கிரேக்க வினைச்சொல்லாகிய *eraō* என்பதை (பாலுணர்வு காதலுக்குரிய ஒரு வார்த்தையைப்) பயன்படுத்தியிருக்க வேண்டும். மாறாக அவர் *agapaō*, எனும், தியாகமும் சுயத்தை அர்ப்பணிப்பதுமாகிய அன்பை எழுதினார். புருஷன் தன் மனைவியின் நலத்தைத் தன்னுடைய நலனைக் காட்டிலும் பெரிதாகக் கருத வேண்டுமென்று அது சுட்டிக் காட்டுகிறது.

பிள்ளைகள் பெற்றோருக்கு (3:20)

[20]பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது.

"பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்" (3:20)

பிள்ளைகளே, *(tekna)* இதன் பொருள் "சந்ததி" அல்லது "வாரிசு." இது குறிப்பாக "குழந்தைகள்," "சிசுக்கள்," "இளம் சிறார்," அல்லது "குமாரர்கள்" என்று குறிப்பிட்டுச் சொல்லுவதில்லை. இந்த வார்த்தையில் வயதோ அல்லது பாலினமோ வெளிப்படுத்துவதில்லை. தெளிவாக, பவுல் வீட்டில் இருக்கிற எந்த வயதுக் குழந்தைகளையும் குறிப்பிட்டுக் கொண்டிருந்தார்.

Peter T. O'Brien, தேவனுடைய கட்டளைகளைப் பற்றி முக்கியமான கைக் கொள்ளுதலைக் குறித்த விளக்கத்தைப் பவுல் பயன்படுத்தியதாக கவனித்திருக்கிறார்: ஸ்திரீகளுக்குக் கொடுக்கப்பட்ட உபதேசங்களைக் காட்டிலும் பிள்ளைகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் கொடுக்கப்பட்ட கட்டளைகள் பலமானவை. ஸ்திரீகளுக்குக் கொடுக்கப்பட்ட உபதேசங்களைக் காட்டிலும் பிள்ளைகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் கொடுக்கப்பட்ட கட்டளைகள் பலமானவை. ஸ்திரீகள் "மனமுவந்து தங்களின் கீழ்ப்படிதலைக்" காட்டும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள்,

அதே வேளையில் "முழுமையான கீழ்ப்படிதல்" பிள்ளைகளிடத்திலிருந்தும் வேலைக்காரர்களிடத்திலிருந்தும் கோரப்படுகிறது.[3]

பிள்ளைகள் [தங்கள்] **பெற்றோர்களுக்கு** [*goneis*] **எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்** என்று பவுல் சொன்னார். பிள்ளைகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் கொடுக்கப்பட்ட கட்டளை அளவற்றது என்றோ அல்லது வரையறுக்கப்படாதவை யென்றோ நினைத்து விடக்கூடாது. "எல்லாவற்றிலும்" என்பது "எல்லாக்காரியங்களிலும்" சரியானவைகளில் என்று மட்டுமே பொருள்படும். தேவ பயமற்ற பெற்றோரின் கோரிக்கைக்கும் நாட்டுச் சட்டம் என்ன சொல்லுகிறது என்பதற்கும் முரண்பாடு தோன்றும் போது, பிள்ளைகள் அரசு சட்டங்களுக்கு மட்டுமே கீழ்ப்படிய வேண்டும் (ரோமர் 13:1-5; 1 பேதுரு 2:13). அரசாங்கத்துக்குச் செய்வதைக் காட்டிலும் மேலான கடமையொன்றுண்டு: அது தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டிய கடமை (நடபடிகள் 4:19; 5:29).

பிள்ளைகள் பெற்றோரில் யாருடைய கோரிக்கையை எடுத்துக் கொள்வது அல்லது தெரிவு செய்து கீழ்ப்படிவது என்று முடிவு செய்யக்கூடாது. மாறாக, பிள்ளைகள் தங்கள் பகுத்தறிவைப் பயன்படுத்தியோ விருப்பப்படியோ வழி நடத்தப்படாமல் தங்கள் பெற்றோரின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். அதே நேரத்தில், கிறிஸ்தவப் பெற்றோர்களைப் பொறுத்த மட்டில் தங்கள் பிள்ளைகளிடத்தில் வைக்கும் கோரிக்கை தங்கள் சுய தேவைகளுக்கு அடுத்தவைகளாயிராமலும் தங்கள் பிள்ளைகளின் ஒட்டுமொத்த நலனில் அக்கரையில்லாமலும் முடிவெடுப்பதல்ல தங்கள் பொறுப்பை உறுதிப்படுத்திக் கொண்டே கோரிக்கை வைக்க வேண்டும்.

கொடுக்கப்பட்ட சட்டப்படி, கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகள் நீடித்த ஆயுசு நாட்களை அநுபவிப்பார்கள், ஏனெனில் தேவன் அவர்களை ஆசீர்வதிக்கிறார். மேலும் ஏனெனில் பொதுவாகவே, அவர்கள் ஆரோக்கியமான எண்ணங்களையும் வாழ்வு நெறியையும் கொண்டிருக்கின்றனர். "பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள், இது நியாயம், உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும் உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே (வாக்குத்தத்தமுள்ள முதலாங்கற்பனையாயிருக்கிறது)" என்று பவுல் எழுதினார் (எபேசியர் 6:1-3). இளம் பிராயத்திலேயே தங்கள் பெற்றோரைக் கனம் பண்ண கற்றுக் கொண்ட பிள்ளைகளுக்கு மிக அபூர்வம ாகவே காவலில் வைக்கப்படுவதோ அல்லது சிறையில் அடைக்கப்படுவதோ நிகழும். பெற்றோர்கள் கனப்படுத்தப் படாத இடத்தில் சமுதாயத்துக்கோ அல்லது அதிகாரத்தில் இருப்பவர்களுக்கோ கனம் கிடைக்காது. குடும்பத்தி லே ஏற்படும் மரியாதைக் குறைவு ஒரு கெட்டுப் போன சமுதாயத்தையே உருவாக்கும். பவுல் பெற்றோர்களுக்கு கீழ்ப்படியாமையை பிறபாவங்களோடு உள்ளடக்கினார் (ரோமர் 1:28-32; 2 தீமோத்தேயு 3:2-5).

மோசேயின் பிரமாணத்தின் கீழ், பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியும்படி எதிர்பார்க்கப்பட்டனர் (யாத்திராகமம் 20:12; லேவியராகமம் 19:3). தங்கள் பெற்றோரை சபிக்கிற (நிந்திக்கிற) பிள்ளைகளை கொலை செய்ய வேண்டியதிருந்தது (யாத்திராகமம் 21:17; லேவியராகமம் 20:9; உபாகமம் 21:18-21). இயேசு இந்தச் சட்டத்தை மேற்கோள் காட்டி வேதபாரகர்களாலும் பரிசேயர்களாலும் கேள்விகள் எழுப்பப்பட்டதற்குப் பதிலளிக்கும்படி இதை

முன்வைத்தார் (மத்தேயு 15:4).

பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லாத ஒரு வயதோ அல்லது ஒரு சூழ்நிலையோ இருக்கிறதா? திருமறை இந்தக் கேள்விக்கு எங்கும் பதில் கொண்டிருப்பதில்லை. "பிள்ளைகள்" என்பது தங்கள் வளரும் பிராயத்தில் தங்கள் பெற்றோரின் வீட்டில் இருக்கும் வருஷங்களைக் குறித்து தான் பேசுகிறது, அவர்கள் பெரியவர்களாகி தங்களுடைய பராமரிப்பைத் தாங்களே செய்து கொள்ளும் பிராயத்தை உடையவர்களைப் பற்றி என்ன? பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுடன் வாழ்ந்து பொருளாதார ரீதியாக ஆதரவு அளிக்கப்படும் காலம் வரை அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். தங்களுக்கென்று சுயமான குடும்பங்கள் வீடுகள் என்று உருவாகும் காலந்தொட்டு, இனியும் அவர்கள் கீழ்ப்படிந்திருக்க எதிர்பார்க்கப்படுவதில்லை. வயது எதுவாயிருப்பினும் சூழ்நிலை எதுவாயிருப்பினும், பிள்ளைகள் எப்போதும் தங்கள் பெற்றோரைக் கனப்படுத்த வேண்டும்.

"இது கர்த்தருக்குப் பிரியமானது" (3:20)

*பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிய வேண்டும் ஏனெனில் அது **கர்த்தருக்குப் பிரியமானது** (en kuriō, இதன் நேரடிப் பொருள் "கர்த்தருக்குள்"). பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிவது கர்த்தருக்குப் பிரியத்தை ஏற்படுத்தும் செயல். தேவனைப் பிரியப்படுத்துவது என்பதுவே, பிள்ளைகளின் நிறைவான இலக்காக இருக்க வேண்டும். தேவனுக்குக் கீழ்ப்படிய முயற்சிக்கும் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து அவர்களைப் பிரியப்படுத்தும்படி வகை தேடுவார்கள், தேவபக்தியுள்ள பெற்றோருக்குக் கீழ்ப்படிபவர்கள் தேவனையும் பிரியப்படுத்துவார்கள்.*

பெற்றோர் பிள்ளைகளுக்கு (3:21)

21பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்.

"பிதாக்கள், உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்" (3:21)

*Pateres, எனும் வார்த்தை இங்கே பயன்படுத்தப்பட்டிருப்பதால், இதன் வழக்கமான பொருள் **பிதாக்களே,** எனவே பவுல் இங்கே தாய்மார்களைத் தவிர்த்து பேசுகிறாரா, அல்லது பெற்றோர் இருவரையும் குறித்து எபிரேயர் 11:23ல் குறிப்பிடப்படுகிறபடி பேசுகிறாரா? இங்கே அவர் புருஷர்களின் கடமைகளைக் குறித்துப் பேசுவதால், இங்கே சொல்லப்படும் போதனை அநேகமாக தகப்பனுக்கு மட்டுமே இருக்கலாம். **பிள்ளைகளைப்** பயிற்றுவிக்கிற விஷயத்தில், பெற்றோர் இருவரையுமே உட்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் தான் பவுல் வசனம் 20ல் **பிள்ளைகள்** பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று பவுல் எழுதினார்.*

பிள்ளைகள் கீழ்ப்படிய வேண்டியவர்களாயிருக்கும்போது, தகப்பன் தன் பிள்ளைகள் திடனற்றுப் போகுமளவுக்கு அவர்களை மிகவும் கடினமாக

நடத்துவதும் அல்லது புரிந்து கொள்ளுதலில் குறைவுள்ளவர்களாயிருப்பதும் கூடாது. கிரேக்க மொழியில், **திடனற்றுப் போதல்** *என்பது ஒரே வார்த்தையில் (erethizō) என்று சொல்லப்பட்டுள்ளது, இவ்வார்த்தை கோபமூட்ட, தூண்டிவிட, வருத்தப்படுத்த அல்லது வன்மங்காட்ட காரணமாயிருத்தல் என்றும் அர்த்தப்படும். பவுல் இந்த வார்த்தையை இன்னும் ஒரே ஒருமுறை மட்டும் பயன்படுத்தியிருக்கிறார், அதுவும் மற்றவர்களை ஊக்கமளிக்கும் வகையில் நேர்மறைப் பொருளில் பயன்படுத்தி பேசுகிறார் (2 கொரிந்தியர் 9:2, "தூண்டுதல்"). கொலோசெயர் 3:21ல் பெற்றோர் இருவரையும் குறித்து அவர் பேசாவிட்டாலும், தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை கோபமூட்ட உரிமை பெற்றவர்கள் எனும் பொருளில் சொல்ல வில்லை.*

தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளை கடினமான வார்த்தை பயன்படுத்தி கட்டளையிடுவதும், ஒவ்வொரு சின்ன தப்பையும் (கண்டிப்புடன்) திருத்தி முற்படுவதும், கண்டிப்புடன் கோரிக்கைகளை வைப்பதும், அல்லது கடினமாகத் தண்டிப்பதுமாக செயல்பட்டால் அவர்கள் பிள்ளைகளை கோபமூட்டுகிறார்கள். அவர்கள் தங்கள் கோபதாபங்களை ஒழுங்குபடுத்தி தங்கள் கண்டிப்புகளை மாற்றி அன்போடும் தயவோடும் நடத்த வேண்டும். தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளை எப்பொழுதும் குறை கூறுபவராகவோ, குற்றம் சொல்லக் கூடியவராகவோ, அவர்களை கோபப்படுத்த கூடியவராகவோ, தொடர்ந்து புகார் சொல்லக் கூடியவராகவோ, பிள்ளைகளின் கோபத்தைத் தூண்டக் கூடியவராகவோ இருக்கக் கூடாது, பிள்ளைகளைத் தாழ்ச்சியடையச் செய்து, மற்றவர்களுக்கு சமமாக அவர்களை நடத்தாமல், அல்லது அவர்களைப் புரிந்து கொள்ள தவறுவது மிகப்பெரிய சோர்வை ஏற்படுத்தும்.

கடந்த காலங்களில் தங்கள் பிள்ளைகளை பயிற்றுவிக்கும் பொறுப்பை. தகப்பன்மார்களிடம் கொடுத்து தேவன் அவர்களைப் பொறுப்பாளியாக்கினார். ஆபிரகாம் கர்த்தருடைய வழியைத் தான் காத்துக் கொண்ட பிறகு தனது பிள்ளைகளுக்கு பயிற்சி அளிப்பார் என்பதால் தேவன் தம் விசேஷ தேசத்துக்கு ஆபிரகாமைத் தகப்பனாகத் தெரிந்து கொண்டார் (ஆதியாகமம் 18:19). தன் பிள்ளைகள் கெட்டுப்போனதற்கு ஏலியே பொறுப்பு என்று தேவன் குறிப்பிட்டிருந்தார் (1 சாமுவேல் 2:27-29; 3:13, 14). பவுல் பிதாக்களுக்கு போதித்து தங்கள் பிள்ளைகளை "கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும்" வளர்க்கும்படி சொன்னார் (எபேசியர் 6:4).

பிள்ளைகள் வாழ வேண்டிய வகையைத் தீர்மானிக்கத் தக்கதாக பயிற்றுவிக்க வேண்டியது முக்கியமானது. தவறுகளை சுட்டிக் காட்டுகிற ஒரு எதிர்மறை அணுகுமுறை அவசியம் தான், ஆனால் அதுமட்டும் கூட பிள்ளைகளை ஊக்கமிழக்கச் செய்யும். அவர்கள் சரியான வாழ்விற்கு நேர்மறை உபதேசத்தில் ஒரு நல்ல உதாரணத்துடன் வழி நடத்தப்பட வேண்டும், ஒரு நல்ல தகப்பன் தனது பிள்ளைகளின் நற்செயல்களை ஏற்று அதிலே தனது திருப்தியைக் காட்டி அவர்களை ஊக்குவிப்பான்.

பெற்றோர்கள் பிள்ளையின் குணாதிசயத்தை விருத்தி செய்ய விலைமதிப்புள்ள அறிவுரைகள் நீதிமொழிகளில் காணப்படுகிறது. (காண்க 13:24; 19:18; 22:6, 15; 23:13, 14; 29:15, 17.)

பிள்ளைகளை மிகவும் கடினமாக நடத்துவதும் அல்லது புரிந்து

கொள்ளுதலில் பெற்றோர் குறைவுள்ளவர்களாக காட்டுவதும் ஊக்கமிழக்கச் செய்யும் அல்லது திடனற்றுப் போகச் செய்யும். கிரேக்க மொழியில் “திடனற்றுப் போதல்” என்பது (*athumeō* என்ற) ஒரே வார்த்தை, அது புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணப்படுகிறது. அது நம்பிக்கை குலைந்துபோதல் உற்சாகமிழத்தல் அல்லது வாட்டமடைதல் என்றும் மொழிபெயர்க்கப்படலாம், மிருதுவான ஒரு குழந்தையின் இருதயம் மிக எளிதாக உடைந்து போகக்கூடும், அதன் விளைவாக பிள்ளை தாழ்வு மனப்பான்மையுள்ளதாகிவிடும்.

பிள்ளைகள் குறும்பு செய்யாதபடி அவர்களைப் பயிற்றுவிப்பதில் அக்கறை கொண்டிருப்பது மட்டும் பெற்றோரின் பிரயாசமாயிருந்து விடக்கூடாது. தவறானவைகளை தவிர்க்க மிக அதிகமான வலியுறுத்தல் கூட பிள்ளைகளிடத்தில் எதிர்கிரியை செய்யத் தூண்டிவிடக்கூடும். பெற்றோரின் முறையான இலக்கு தங்கள் பிள்ளைகளை கிறிஸ்துவைப் போன்ற நடக்கையை கொண்டிருக்க ஏதுவாகப் பயிற்றுவிப்பதுதான், இதில் நேர்மறை ஒழுக்கங்களைத் தரித்துக் கொள்ளவும் எதிர்மறைக் காரியங்களைக் களைந்து போடும் செயலையும் உட்படுத்தியுள்ளது. பிள்ளைகள் பின்பற்ற ஏதுவான நாயகர்களும் முன்மாதிரிகளும் தேவைப்படுகின்றனர், தவறான நடத்தைகளைப் பற்றிக் கொள்ள தொடர்ந்து ஏதுவாக்கும் கண்டனத்துக்குரிய நபர்களல்ல. பிள்ளையானவன் “நடக்க வேண்டிய முறைப்படி” நடத்துவது (நீதிமொழிகள் 22:6) என்பது அவன் நடக்கக்கூடாத வழியைப் பற்றி அவனைப் பயிற்றுவிப்பதைக் காட்டிலும் மேலான காரியங்களை உட்படுத்தியது. தவறான வழியில் பிள்ளைகள் போகாதபடி எச்சரிப்பதைக் காட்டிலும் பிள்ளைகளை சரியான வழியில் செல்லும்படி சுட்டிக்காட்டுவது அதிக முக்கியத்துவம் பெற்றது.

ரோம உலகில், ஒரு பிள்ளையின் வாழ்வுக்கும் சாவுக்குமுரிய வல்லமையை தகப்பன் பெற்றிருந்தான். எல்லா ஜனங்களின் ஜீவனுக்காக, இயேசு ஒவ்வொரு நபருடைய வாழ்வையும் உயர்த்தினார், பிள்ளைகளையும் கூட, அவர்களின் உணர்வினிமித்தமும் அவர்களுடைய நலனுக்காகவும் அன்புடன் கூடிய அக்கறையை அவர்கள் மீது காட்டினார். மத்தேயு 7:12ன் உபதேசம் எல்லாருக்கும் பொருந்தக் கூடியது, அது பெரியவர்களானாலும் பிள்ளைகளானாலும் யாவருக்கும் பொருந்துவது. பிள்ளைகள் தங்களை நடத்தும்படி விரும்புகிறபடியே பெற்றோர் பிள்ளைகளை நடத்த வேண்டும். கொலோசெயர் 3:8, 9, 12-14ல் பவுல் வரிசைப்படுத்தியுள்ள எல்லா தீய ஒழுக்கங்களையும் களைந்து போட்டு எல்லா நல்லொழுக்கங்களையும் பிதாக்கள் தரித்துக் கொள்வார்களானால் அவர்கள் தங்கள் பிள்ளைகளை அன்பின் இரக்கத்துடன் நடத்துவார்கள்.

ஒவ்வொருவரும் யாரோ ஒருவருக்குக் கீழ்ப்படிதல் வேண்டும். புருஷர்கள், மனைவிகள், பிள்ளைகள் ஆகிய எல்லாருமே அரசுக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்கள், அதே போல தங்களுடைய மேலதிகாரிகள் மற்றும் தேவனுக்கும் கீழ்ப்படிய வேண்டியவர்கள், பிள்ளைகளும் கூட பெற்றோர்களுக்குத் தங்களைக் கீழ்ப்படுத்த வேண்டியவர்கள், வேலைக்காரர்கள் தங்கள் எஜமானர்களுக்கும், பெற்றோர்களுக்கும், அரசுக்கும் மற்றும் தேவனுக்கும் கீழ்ப்படிய வேண்டும். அர்ப்பணிப்பும்

(தாழ்த்துவதும்) கீழ்ப்படிதலும் எல்லா உறவுமுறைகளிலும் கோரப்படுகிற ஒன்று; இந்த பதில்செயல் கடமைகளெல்லாம் தாழ்ச்சியையோ அல்லது குறைவான திறமையையோ கொண்டு வருவதில்லை.

வேலைக்காரர்களிடமிருந்து எஜமானர்களுக்கு *(3:22-25)*

[22]வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, நீங்கள் மனுஷருக்கு பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ் செய்யுங்கள். [23]நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, [24]எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்று மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள். [25]அநியாயஞ் செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்; பட்சபாதமே இல்லை.

"வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்" (3:22)

வேலைக்காரருக்கு, (அடிமைகள், slaves NASB) *ஆஸ்தி என்பதாக எந்த உரிமைகளும் இல்லை, அவர்கள் தங்கள் முதலாளிகளின் எண்ணக்கோளாறுகளுக்கும் கோரிக்கைகளுக்கும் ஏற்ப ஊழியஞ் செய்ய வேண்டியவர்களாயிருந்தனர். சில எஜமானர்கள் அடக்குமுறையை கையாளுபவர்களாயிருந்தனர், அதே வேளையில் மற்றவர்கள் வேலைக்காரர்களை மரியாதையுடன் நடத்தினர். அவன்தன் எஜமானனால் எப்படிப்பட்டமுறையில் நடத்தப்பட்டாலும், கிறிஸ்தவனாயிருக்கும் வேலைக்காரன் தன் எஜமானனுக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்திருக்க (hupakouō) வேண்டுமென்று போதிக்கப்படுகிறான்.*

பவுல் மனைவிகள், புருஷர்கள், பிள்ளைகள், பிதாக்கள், அல்லது எஜமானர் ஆகியோருக்கு கொடுத்ததைக் காட்டிலும் விசாலமான போதனையை வேலைக்காரர்களுக்குக் கொடுத்தார். அவருடைய முக்கியமான போதனையின் நோக்கம் கிறிஸ்தவ வேலைக்காரர்களுக்கு இயேசுவோடு உள்ள உறவுமுறையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. வேலைக்காரர்களுக்கு போதிக்கும்படி, அவர் அவர்களுக்கு மரியாதை கொடுத்து அவர்களை சபையின் கடைமைமிகுந்த அங்கத்தினர்களாக எண்ணினார். அவர் பின்பற்ற ஏதுவான வழிகளை மட்டும் கொடுக்கவில்லை, மாறாக அவர்கள் "கீழ்ப்படிய" வேண்டிய அவசியத்திற்கான காரணத்தையும் விளக்கப்படுத்தினார். வேலைக்காரர்களின் பொறுப்புக்களைக் குறித்து மற்ற நிருபங்களில் அவர் எழுதியிருக்கிறார் (காண்க எபேசியர் 6:5-8; 1 தீமோத்தேயு 6:1, 2). அநீதியானவர் மற்றும் நல்ல எஜமானர் ஆகிய இருவருக்குமே உண்மையான வேலைக்காரர்கள் தங்கள் ஊழியத்தைச் செய்யும்படி பேதுரு எழுதினார் (1 பேதுரு 2:18-20).

பூமியிலே எஜமானனாயிருக்கிறவர்கள் *(tois kata sarka kuriois)*

என்பதன் நேரடிப் பொருள் "மாம்சக் கர்த்தாக்களின் - விருப்பப்படி" என்பதாகும். இந்த சொற்றொடர் இயேசுவுக்கு முரணானது, அவர் கிறிஸ்தவர்களின் பரலோக ஆவிக்குரிய, கர்த்தரும் எஜமானருமாயிருக்கிறார். "எஜமானன்" என்னும் பதம் அடிக்கடி இயேசுவைக் குறிப்பிடும்படி "கர்த்தர்" என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்தவ எஜமானருடன் ஒரு கிறிஸ்தவ வேலைக்காரன் கொண்டுள்ள உறவுமுறை உலகப் பிரகாரமான உறவுமுறையைக் காட்டிலும் மேலானது, ஏனெனில் அவன் வேலைக்காரன் மாத்திரமல்ல மாறாக அவன் கிறிஸ்துவுக்குள் சகோதரனும் கூட.

வேலைக்காரன் **எல்லாவற்றிலும்** கீழ்ப்படிதலுள்ளவனாயிருக்க வேண்டும். இந்த சொற்றொடரை புரிந்து கொண்டிருக்கிற கூட்டத்திற்குட்பட்டவர்கள் எனும் பொருளில் - தேவனுடைய பார்வையிலிருக்கிற சகல சரியானவைகளையும் செய்யும்படி, இது குறிப்பிடுகிறது.

முதலாம் நூற்றாண்டு சமுதாயத்தில் அடிமைத்தனம் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது; அவர் கொரிந்தியர்களுக்கு எழுதும் போது ஒரு அடிமையானவன் சுயாதீனனாகக் கூடுமானால் அதை நலமென்று அனுசரித்துக் கொள்ளும்படிச் சொன்னார் (1 கொரிந்தியர் 7:21). எப்படியிருப்பினும், அவர் அடிமைகளையும் எஜமானர்களையும் சமுதாய புரட்சி அடிப்படையில் அடிமைத்தனத்துக்கு முடிவை உண்டு பண்ணுதலில் ஈடுபடும்படி அவர் கட்டளையிடவில்லை. மாறாக, அவர்கள் தங்கள் உறவுமுறையில் புரட்சி ஏற்படுத்த ஏதுவான உபதேசங்களைக் கொடுத்தார். பவுல் பிலேமோனுக்கு எழுதிய ஒரு நிருபத்தில் ஒனேசிமுவை அவன் இனியும் அடிமையாக நடத்தாமல், ஒரு கிறிஸ்தவ சகோதரனாக நடத்தும்படி பரிந்துரைத்தார் (பிலேமோன் 16).

அடிமைத்தனத்தைக் குறித்த இயேசுவின் போதனைகள் சபையிலே சமத்துவத்தையும் உலகத்திலே பெரும்பாலான பகுதிகளில் அடிமைத்தனத்திற்கு ஒரு முடிவையும் கொண்டு வந்தது. அவரது அன்பைக் குறித்த உபதேசம் கிறிஸ்தவர்கள் தங்கள் அடிமைகளிடத்தில் நல்லமுறையில் நடந்து கொள்ள ஊக்கப்படுத்தியது, அவர்களைத் தங்களுடைய அயலார்களாக நடத்தவும் அவர்களைக் குறித்த அக்கறையேயில்லாமலிருந்த தன்மையை விடுத்து அக்கறை காட்ட வழிகாட்டியது (ரோமர் 13:8-10). தான் எப்படி நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களோ அதையே மற்றவர்களுக்கும் செய்ய சொல்லும் கருத்து (மத்தேயு 7:12) அடிமைத்தன ஒழிப்புக்கு பெரும் பங்காற்றியுள்ளது.

இன்றுள்ள பெரும்பாலான சமுதாயங்களில் அடிமைத்தனத்தைக் குறித்த விவாதத்திற்கு அவசியமற்றதாகத் தோன்றலாம், அடிமை - எஜமானன் என்னும் உறவுமுறைதான் உண்மையில் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் பொருத்தமான தலைப்பாக இருக்கிறது - அது கிறிஸ்துவுடன் நமக்குள்ள உறவுமுறைக்கு ஒரு பொருத்தமான விளக்கமாகும் (காண்க 4:1; 1 கொரிந்தியர் 7:22). பவுல் தன்னையும் சக கிறிஸ்தவனையும் ஒரு "ஊழியக்காரன்" (ஒப்பந்த - அடிமை) என்று குறிப்பிட்டார் (ரோமர் 1:1; கொலோசெயர் 1:7; 4:7). கிறிஸ்துவுக்கு அடிமைகளாக, அல்லது வேலைக்கார்களாக, நாம் பவுல் கொடுத்த அடிமை-எஜமானன் உறவுமுறையைக்குறித்து அதிகமாக கற்றுக் கொள்ளலாம்.

"நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல்" (3:22)

பார்வைக்கு ஊழியஞ்செய்தல் *(ophthalmodoulia)* என்பது கிரேக்கில் ஒரே வார்த்தையாக இருக்கிறது. இந்தப் பதத்தின் நேரடிப் பொருள் (வெளிப்படையாக மனுஷருடைய) "பார்வைக்காக ஊழியஞ் செய்தல்," என்பது எபேசியர் 6:6லும் காணப்படுகிறது, கவனிக்கப்பட்டு கொண்டிருக்கும் போது மாத்திரம் ஒரு வேலைக்காரன் வேலையை உண்மையாக செய்வது அல்ல, அதன் மூலம் தன்னைக் கண்காணிக்கும் ஆளோட்டிகளைப் பிரியப்படுத்தக் கூடும், பிறகு கண்காணிப் பவனின் பார்வை இல்லாதபோது தனது கடமைகளை புறக்கணிக்கலாம். தனது ஊழியத்தின் சரியான உள்நோக்கம் இயேசுவைப் பிரியப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பணியும் அவருடைய பார்வையில் நடக்கிறது, ஆதலால் அவரே நித்தியத்திற்கான பலனை அளிப்பார். ஒரு நல்ல வேலைக்காரன் கடின உழைப்பிற்காக உலகப்பிரகாரமாக லாபமான பிரதிபலனைப் பெறக்கூடும், ஆனால் இன்னும் அதிகமான முக்கியத்துவம் வாய்ந்த பரலோகத்திற்கான ஆசீர்வாதங்களையும் சம்பாதிப்பது முக்கியமானதாக இருந்தது. கிறிஸ்தவ வேலைக்காரன் முதலாவது கிறிஸ்துவுக்குரியவனாயிருக்கிறான் (1 கொரிந்தியர் 7:22) பிறகுதான் அவன் பூமிக்குரிய எஜமானனுக்குரியவனாகிறான்.

மனுஷரை பிரியப்படுத்துதல் எனும் வார்த்தை *(anthrōpareskoi)* புதிய ஏற்பாட்டில் இன்னும் ஒரு இடத்தில் காணப்படுகிறது (எபேசியர் 6:6). அதிலே "மனுஷருக்கு பிரியமாயிருக்க விரும்புகிறவர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பவுல், இந்த வார்த்தையை அப்படியே பயன்படுத்தாவிட்டாலும், தனது பிரசங்கத்தைக் குறித்து, இந்தக் கருத்தை உட்படுத்தி எழுதியிருக்கிறார், ஜனங்களைப் பிரியப்படுத்தும்படி தனது செய்தியை அவர் மாற்றிக் கொள்ளவில்லை (கலாத்தியர் 1:10; 1 தெசலோனிக்கேயர் 2:4), ஆனால் தனது வாழ்க்கையின் முறையால் அவர்களைக் கலக்கமுறச் செய்யவில்லை (1 கொரிந்தியர் 10:33).

ஒரு வேலைக்காரன் தான் கண்காணிக்கப்படும்போது மாத்திரம் தன் எஜமானனுக்கு ஊழியம் செய்கிறவனாயும் அல்லது தான் முற்றிலும் கட்டாயப்படுத்தப்பட்டு கீழ்ப்படியச் செய்யப் பட்டதற்காகவும் மாத்திரம் ஊழியம் செய்கிறவனாயிருக்கக் கூடாது. தனது எஜமானனோ அல்லது வேறுயாராகிலுமோ தன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அல்லாமல்அவனது ஊழியம் இருதயப் பூர்வமாய்த் தோன்றிய ஒரு நேர்மையான செயலாக இருக்க வேண்டும்.

"இல்லை" *(mē)* என்பதுடன் "ஆனால்" *(alla)* என்பது கிரேக்க மொழி மரபு, அது மொழி அமைப்பின் முன் பகுதியை விடுத்து அடுத்த பகுதியை வலியுறுத்துகிறது. அதை B ஐப் போல A இல்லை என்று புரிந்து கொள்ளப்பட வேண்டியது. பவுல் அடிமைகள் தங்கள் எஜமானர்களை கண்டுகொள்ள வேண்டாம் என்று சொல்லுகிறதில்லை; மாறாக, அவர்கள் இயேசுவைப் பிரியப்படுத்துவதே அவர்களின் முதலாவது கடமை என அவர் சொன்னார். இதனால்தான் NASB ன் கடைசி வெளியீட்டில் "மனுஷர்களை மட்டுமே" "பிரியப்படுத்துகிறவர்களாய் இராமல்" என்ற பொருளில் மொழிபெயர்த்துள்ளது. கிரேக்க மொழியில் "மட்டுமே" என்ற பதம் இல்லை,

கிரேக்க மொழி மரபுப்படி இப்படி அது பொருள்படுகிறது.[4]

சாதாரணமாக ஒரு கட்டளைக்குக் கீழ்ப்பட்டு மனுஷரைப் பிரியப்படுத்துவதற்காக ஊழியஞ் செய்ய முயற்சிப்பது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டிய செயல்களல்ல. பவுல் சொல்லும் போது ஊழியம் என்பது தேவனுக்கு அதிகமாய் பயப்படுவதிலிருந்து வரவேண்டுமே யொழிய மனுஷர்களைப் பிரியப்படுத்தும் ஆவியிலிருந்து வரவேண்டிய ஒன்றல்ல, என்றார்.

"தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ் செய்யுங்கள்" (3:22)

அடிமைகள் தங்கள் எஜமானர்களுக்குக் காட்ட வேண்டிய கனம் கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை ஏற்றுக்கொள்வதை அடிப்படையாகக் கொண்டது. (அன்று) அடிமைகள் இருவகை கர்த்தாக்களைக் (எஜமானர்களைக்) கொண்டிருந்தனர், பூமிக்குரிய கர்த்தாக்கள் (*kurioi*, "எஜமானர்கள்") மற்றும் பரலோகத்துக்குரிய கர்த்தர் (*kurios*). இரண்டு பதங்களும் ஒரே கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தவை, ஆனால் ஒன்று ஒருமை மற்றொன்று பன்மை. அவர்கள் தங்கள் கர்த்தரைப் பிரியப்படுத்தும் பொருட்டு - அதாவது, தேவனைப் பிரியப்படுத்தும் பொருட்டு - அடிமைகள் தங்கள் இருதயங்களிலிருந்து உண்மையான ஊழியத்தைச் செய்ய வேண்டியவர்களாயிருந்தனர். மனுஷருடைய இருதயமே ஒருவனுடைய உள்ளான ஜீவனின் மையப்பகுதி, அதில் சிந்தனைகளும், உணர்ச்சிகளும் விருப்பு வெறுப்புகளும் உட்படுத்தப்பட்டுள்ளன. **கபடமில்லாத** (உண்மையான) இருதயத்தோடே (*haplotēs*) என்ற வார்த்தை பிற இடங்களில் இதே பொருளில் காணப்படுகிறது (2 கொரிந்தியர் 1:12; எபேசியர் 6:5). 2 கொரிந்தியர் 11:3ல், கிரேக்க வார்த்தையிலிருந்து இந்தப் பதம் "உண்மை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, பிற வசனப்பகுதிகளில் இதே வார்த்தை "சுதந்திரமாக" (சுயாதீனமாக) என்ற பொருளில் பேசுகிறது (ரோமர் 12:8; 2 கொரிந்தியர் 8:2; 9:11, 13).

கிரேக்க அல்லது ரோம அடிமையானவன் பிளவுபடாத தொடர் உருவக மரபில் ஒருமை நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டியவன். அவன் தன் எஜமானனின் சொத்து. அவன் தனக்கென்று ஒரு அடிமையிருந்தால் அவன் எப்படிப்பட்ட ஊழியத்தைக் தனக்குச் செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பானோ அதே ஊழியத்தை இவன் தன் எஜமானனுக்குச் செய்யவேண்டும்.

பயத்துடன் என்ற பதத்திற்கான கிரேக்க வார்த்தை, *phoboumenoi*, தேவனிடத்தில் காட்டும் பயத்தை குறிக்கும்போது அது "மதிப்புக்குரிய பயம்" என விளக்கமளிக்கப்படலாம், நடுங்கச் செய்யும் பயத்தையோ பயமுறுத்தலையோ குறிப்பதில்லை; இந்த வார்த்தை அமைப்பு பேதுருவால் அடிமைகள் தங்கள் எஜமானர்களுக்கு செய்யும் ஊழியத்திலும் மனைவிகள் தங்கள் புருஷர்களுக்கு ஆற்றும் பணியிலும் போதிக்கப்பட்டது (அல்லது "மரியாதை" செலுத்துதல்; காண்க 1 பேதுரு 2:18; 3:2). பூமிக்குரிய எஜமானன் மரியாதை காட்டப்பட வேண்டியவராயிருந்தார். அதற்கு மேலாக, கர்த்தர் கனப்படுத்தப்பட வேண்டும், ஏனெனில் அவரே கடைசியும் பெரிதுமான

பிரதிபலனைக் கொடுக்கவல்லவர்.

> ஆகிலும் கிறிஸ்தவ அடிமை ... எல்லா செயல் தூண்டுதல்களுக்கும் மேலான உண்மையுள்ளவனும் மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டவனாயும் தனது கடமைகளை நிறைவேற்றுபவன்; அவன் மற்றெல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்துவுக்கு ஊழியக்காரனாயிருக்கிறான், மேலும் அவன் முந்தியும் முதலாவதாகவும் செயல்பட்டு அதினாலே தேவனைப் பிரியப்படுத்துகிறான். அவனது செயலூக்கம் பூமிக்குரிய எஜமானனுக்கு பயப்படுவதல்ல, ஆனால் "கர்த்தராகிய கிறிஸ்துவுக்குச்" செலுத்தும் தெய்வீகப் பயத்தைப் பிரதானமாய்க் கொண்டிருப்பவன், இது கிறிஸ்தவனாயிருக்கும் வேலைக்காரர்கள் ஆர்வமுடனும் மகிழ்ச்சியுடனும் வேலைசெய்து கடினகுணமுள்ள எஜமானர்களுக்கும் அவர்கள் மனச்சாட்சிக்குக் கட்டுப்படாதவர்களாயினும் நன்றியதல் இல்லாதவர்களாயினும் கூட அப்படிப்பட்டவர்களிடத்தில் எவ்வித நன்றியறிதலையும் எதிர்பாராமல் கிறிஸ்துவிடமிருந்து மட்டுமே எதிர்பார்த்து ஊழியம் செய்யும்படிச் செய்கிறது.[5]

தேவனைப் "பயத்துடன்" தொழுது கொள்ளுங்கள் என்பது அன்பு பயத்தைப் போக்குகிறது என்ற போதனையுடன் முரண்பட்டதல்ல. யோவான் "அன்பு" பயத்தை புறம்பே தள்ளும் என்று குறிப்பிடவில்லை, ஆனால் "பூரண அன்பு" பயத்தைப் புறம்பே தள்ளும் என்று சொன்னார் (1 யோவான் 4:18), "பூரண அன்பையுடைய" நபர் பூரணக் கீழ்ப்படிதலையும் கொண்டிருப்பார், ஏனெனில் செயலூக்கம் கொடுக்கும் சக்தியாக அன்பு விளங்குவதால் அது கீழ்ப்படிதலுக்கான ஊக்கத்தை அளிக்கிறது (யோவான் 14:15, 21, 23; 1 யோவான் 5:3). [தேவனுடைய] "வசனத்தைக் கைக் கொள்ளுகிற" மனுஷனால் அன்பு "பூரணமாக்கப்படுகிறது" (1 யோவான் 2:5). நாம் சிலவேளைகளில் பாவம் செய்கிறவர்களாயிருக்கிறோம் (1 யோவான் 1:8, 10); ஆகையால், நாம் பூரண அன்பை உடையவர்களல்ல, இதினால் தான் நாம் பயப்படுகிறோம். சரியான விதமான பயம் கிறிஸ்தவர்கள் பாவம் செய்யாமலிருக்கவும், தேவனுக்கு கீழ்ப்படிதலில்லாமையிலிருந்தும் நம்மை பாதுகாக்கிறது (எபிரெயர் 10:27, 31).

"நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவை சேவிக்கிறதினாலே" (3:23)

நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சேவிக்கிறதினாலே என்று பவுல் எழுதியபோது, அவர் பன்மை வினைச் சொல்லைப் (*douleuete*) பயன்படுத்தினார். அவர் வேலைக்காரர்களுக்கு எழுதினார், வேலைக்காரர்கள் கவனமான சேவையைப் புரியும்படி சொல்லக் காரணம் பூமிக்குரிய எஜமானர்களைப்பிரியப்படுத்துவது மட்டுமல்ல, ஆனால் மிகப்பெரிய கர்த்தரை, கர்த்தராகிய கிறிஸ்துவைப் பிரியப்படுத்த வேண்டும். தாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்தது போல ஊழியஞ் செய்கிறவன் எல்லாரிலும் பெரியவனாயிருப்பான் என்று இயேசு போதித்தார் (மத்தேயு 20:25-28). அவர் நியாயாசனத்தில் வீற்றிருக்கும் போது, மற்றவர்களுக்கு உதவி செய்தவர்களாகிய வலது பக்கத்தில் நிற்பவர்கள் நித்திய ஜீவனைப்

பெற்றுக் கொள்வார்கள், இப்படியாக அவர்கள் அவருக்கு ஊழியஞ் செய்தவர்களாவார்கள் (மத்தேயு 25:31-40). பூமிக்குரிய எஜமானர்களுக்கு நன்கு ஊழியஞ் செய்யும் வேலைக்காரர்கள் இயேசுவுக்கே ஊழியஞ் செய்தவர்களாவார்கள்.

பவுல் இந்த உபதேசங்களை வேலைக்காரர்களுக்கு எழுதின போது, யாரோ ஒருவருக்கு பணிவிடை செய்ய ஒப்புக் கொண்டு ஏற்றுக் கொண்டிருக்கிற யாராயிருந்தாலும் அவர்களுக்காகவும் சேர்த்து எழுதினார் என்று ஒரு விசாலமான பயன்பாட்டுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு வேலைக்காரன் தன்னை வேலைக்கு அமர்த்தியவனுக்கு மனச்சாட்சியுடன் பணிபுரிய வேண்டும், அது அவன் கர்த்தருக்கு பணிவிடை செய்வதற்கு ஒப்பாக செயல்பட வேண்டும். அவன் தான் பெறும் ஒரு நாளைய கூலிக்கு ஒப்பாக ஒரு நாளைக்குரிய நல்ல வேலையைச் செய்ய வேண்டும். இயேசுவின் வாக்கியம் இங்கே பொருத்தமானதாயிருக்கிறது: "ஆதலால் மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத்தேயு 7:12). தேவ பக்தியுள்ள வேலைக்காரனின் இலக்கு, முதலாவதாக, இயேசுவைப் பிரியப்படுத்துவது; இரண்டாவதாக, தன்னை வேலைக்கு அமர்த்தியவரை பிரியப்படுத்துவது; மூன்றாவதாக, உழைப்பைக் கொடுப்பது. அதினால் அவன் தனிப்பட்ட ரீதியில் தனது வேலையில் திருப்தி பட்டுக் கொள்வான் (கலாத்தியர் 6:4).

"சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து" (3:23)

தேவனுக்கு ஊழியஞ்செய்வது போல் வேலைக்காரர்கள் வேலை செய்ய வேண்டியவர்களாயிருக்கக் காரணம் அவனுக்குக் கிடைக்கும் ***பிரதிபலன்*** *எந்த உலகப் பிரகாரமான தனது எஜமானனும் கொடுக்கிறதைக் காட்டிலும் பெரிய பிரதிபலனை பரலோகப்பலனாக அவன் பெற்றுக் கொள்வான். உண்மையுள்ள ஒரு கிறிஸ்தவ வேலைக்காரன்* ***கர்த்தரால்*** *வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட* ***சுதந்தரத்தைப்*** *பெறுகிற உறுதியைக் கொண்டிருக்கிறான்.*

"சுதந்தரம்" (klēronomia) என்பது ஏதோ சம்பாதித்த ஒன்றல்ல மாறாக சுதந்தரித்துக் கொண்ட பிரதிபலனாக இருந்தது. சில பிரதிபலன்கள் சம்பாதிக்கக் கூடியவைகளாயிருந்த போதிலும், கொடுக்கப்படும் மற்றவைகள், கொடுப்பவரின் தயாளகுணத்தை சார்ந்திருக்கிறது. பெரும்பாலான அடிமைகளுக்கு பூமிக்குரிய சுதந்தரத்தைப் பெறுவோமென்கிற நம்பிக்கையில்லை, ஏனெனில் சுதந்தரமானது சுயாதீனர்களுக்கு மட்டுமே வைக்கப்பட்டுள்ளது; ஆனால் உண்மையுள்ள கிறிஸ்தவ வேலைக்காரர்களுக்கு பரலோகப்பிரதிபலனைப் பெறுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. கிறிஸ்துவுக்குள்ளான சமத்துவத்தினால் கிறிஸ்தவ வேலைக்காரர்கள், மற்ற கிறிஸ்தவர்களைப் போலவே அதே சுதந்தரத்தைப் பெறுவார்கள் என்று முன்னெதிர் நோக்கலாம். அவர்கள் "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் பங்கடைவார்கள்" (கொலோசெயர் 1:12).

இயேசு சில திராட்சத் தோட்டக்காரர்கள் தங்கள் எஜமானனின் குமாரன் சுதந்தரவாளியாய் வராதபடிக்கு அவனைக் கொன்று போட்ட உவமையைச் சொன்னார் (மத்தேயு 21:33-40; மாற்கு 12:1-11). கிறிஸ்தவனுக்குரிய சுதந்தரம் இப்படிப் பெறப்பட மாட்டாது. அது சம்பாதிக்கப்படவும் முடியாது.

பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ள நித்திய ஜீவன் இரட்சிப்பைப் போலவே, ஒரு வரமாக கொடுக்கப்படுகிறது (நடபடிகள் 20:32; எபேசியர் 2:8, 9). மேலும், அது நித்தியமானதும் முடிவற்றதுமான சுதந்தரம் (எபிரெயர் 9:15), அது தேவனுடைய குமாரர்களாக (ரோமர் 8:17; கலாத்தியர் 4:7), மறுபடியும் பிறந்தவர்களுக்கு (யோவான் 3:1; பேதுரு 1:3, 4) வைக்கப்பட்டுள்ளது. ஒருவர் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் தேவனுடைய பிள்ளையாகிறார், அதின் விளைவாக வாக்குத்தத்தத்தின்படி அவரை சுதந்தரவாளியாக்குகிறது (கலாத்தியர் 3:26, 27, 29).

வழக்கமாக ஒரு எஜமானனின் பிள்ளைகளுக்கு சுதந்தரம் வைக்கப்பட்டிருந்தது. வழக்கத்துக்கு மாறாக இருப்பினும் ஒரு எஜமானன் தனது வேலைக்காரனுக்கு ஒரு சுதந்தர வீதத்தைக் கொடுக்க சாத்தியமுண்டு, பூமிக்குரிய ஆஸ்தியாகிய சுதந்தரம் பற்றிய வாக்குத்தத்தம் ஒரு அடிமைக்கு அவன் இன்னும் விழிப்புடன் ஊழியம் செய்ய ஏதுவாக்க கொடுக்கப்படுவதுண்டு. கிறிஸ்தவ வேலைக்காரனுக்கு அதைக் காட்டிலும் ஊக்கமான பெரிய சுதந்தரம் உண்டு, ஏனெனில் பூமிக்குரிய எஜமானன் கொடுக்கக் கூடிய பூமிக்குரிய வெகுமதியைக் காட்டிலும் விலைமதிப்பில்லாத சுதந்தரத்தைப் பெறப் போகிற நம்பிக்கை அவனுக்கு இருக்கிறது, வேலைக்காரன், ஒரு தேவனுடைய குமாரனாக, கிறிஸ்துவின் சுயாதீனனாக இருந்தான் (1 கொரிந்தியர் 7:22), ஏனெனில் கிறிஸ்துவுக்குள் அடிமைக்கும் எஜமானனுக்குமிடையே இருக்கிற வேறுபாடு மறைந்து போகிறது. கிறிஸ்தவ வேலைக்காரன் தேவனுடைய சுதந்தரனாயிருக்கிறான் (கலாத்தியர் 3:26-29; 4:7). பரலோகத்துக்குரிய சுதந்தரத்துடன் தேவனோடு நித்தியத்துக்கும் வாழுகிற நம்பிக்கையும் அவனுக்கு உண்டாயிருக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பரலோகம்தான் ஒரே நம்பிக்கை (கொலோசெயர் 1:5; எபேசியர் 4:4; 1 பேதுரு 1:3, 4).

பிதாவினிடத்திலிருந்து வரும் சுதந்தரம் பூமிக்குரிய இடமல்ல. மாமிசப் பிரகாரமான வானமும் பூமியும் ஒழிந்து போகும் என்று இயேசு போதித்தார் (மத்தேயு 24:35). பேதுரு அவைகள் எரிந்து போகும் என்று எழுதினார் (2 பேதுரு 3:10), நியாயத்தீர்ப்புக் காட்சியைக் குறித்து எழுதிய யோவான் வானமும் பூமியும் அகன்று போயின என்று எழுதினார் (வெளிப்படுத்தின விசேஷம் 20:11; 21:1).

சுதந்தரமானது ஒரு பிரதிபலனாகக் கொடுக்கப்படுகிறது, எனவே அது சம்பாதித்துக் கொண்டதல்ல. இந்தக் காரணத்தால், இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு நபரும் ஒரே விதமான பிரதிபலனை அடைவார்கள். பரலோகம் சம்பாதிக்கப்படத் தக்கதாகவோ, பெறும் தகுதி அடிப்படையில் கொடுக்கப்பட்டாலோ தனிப்பட்ட திறமை அடிப்படையில் பெற்றதாகவோ கருதப்பட்டால், அது உண்மையல்ல (எபேசியர் 2:8, 9), அப்படியிருக்குமானால் பிரதிபலனில் பல படிகள் கொண்டிருப்பதாக எதிர்பார்க்கலாம். தன்னால் இயன்ற வரை ஒரு நபர் இயேசுவுக்கென்று எல்லாம் செய்த பிறகும் கூட அவர் தகுதியற்றவராகவோஅப்பிரயோஜனமான ஊழியக்காரன் என்றே கருத வேண்டும் (லூக்கா 17:7-10). இயேசு கிறிஸ்துவின் திறன் தகுதி அடிப்படையில் மட்டுமே யாரும் இரட்சிக்கப்படக் கூடும். தங்கள் வாழ்நாள் முழுவதும் ஊழியஞ்செய்வோரும் தங்களது கடைசி காலத்தில் ஊழியஞ்செய்வோரும்

ஒரே வித பிரதிபலனையே அடைவார்கள் (மத்தேயு 20:1-16). பரலோகத்தில் எல்லாருமே ஒரே வித ஸ்தானத்தையும் சமமான இடத்தையும் பெறுவார்கள்.

"எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" (3:24)

வேலைக்காரன் தேவனுக்கு ஊழியஞ்செய்வதுபோல **பணியாற்ற** வேண்டியவன். **மனப்பூர்வமாய்** *(ek psuchēs*, என்பதன் நேரடிப் பொருள், "ஆத்மார்த்தமாக") எனும் பதம் கொலோசெயரில் இங்கு மட்டுமே காணப்படுகிறது. வேலைக்காரர்கள் உண்மையோடுடனே தங்கள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்கள் ஏனெனில் தேவனுக்கு அவன் செலுத்த வேண்டிய கனத்தினிமித்தமும் ஊழியஞ்செய்ய வேண்டும் என்ற உள்ளான விருப்பத்தாலும் தான். இது அவர்களுடைய தனிப்பட்ட மதிப்பை அதிகப்படுத்தும், ஆனால் அது இயேசுவின் நாமத்தையும் மகிமைப்படுத்தி கிறிஸ்தவத்திற்கும் நன்மதிப்பைக் கொண்டுவரும். தேவனைப் பிரியப்படுத்தும்படி ஊழியஞ்செய்வோர், அநேகமாக, தங்கள் எஜமானர்களை அதே போல பிரியப்படுத்துவார்கள். ஒப்புக்கொடுத்த சேவையாக இருந்தாலும் கூட, உலகப்பிரகாரமான எஜமானனிடமிருந்து கண்டனத்தைப் பெற்றாலும், பரலோகத்திலுள்ள எஜமானன் இன்னமும் மகிழ்ந்து பரலோகத்திற்குரிய சுதந்தரத்தால் அந்த உண்மையுள்ள ஊழியக்காரனுக்கு பலனளிப்பார் (1 பேதுரு 1:3, 4).

ஒரு வேலைக்காரன் தனது எஜமானனுக்கு கீழ்ப்படிய வேண்டியவனாயிருந்த போதிலும், அவன் பூமிக்குரிய எஜமானைப் பிரியப்படுத்துவதைக் காட்டிலும், இயேசுவைப் பிரியப்படுத்த வேண்டியவனாக இருந்தது. கிறிஸ்தவனான பின்பு, ஒரு வேலைக்காரன் ஒரு புதியதும் வித்தியாசமுமான தோற்றத்தில் ஊழியஞ்செய்யவேண்டியதிருந்தது. கூடுமானால் அவன் விடுதலையடைய வேண்டியதிருந்தது; இல்லையெனில், அவன் அழைக்கப்பட்ட சமுதாய ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதிருந்தது (1 கொரிந்தியர் 7:20, 21). ஒருவர் வேலைக்காரனாயிருக்கிற பரியந்தம், தேவனுக்கு ஊழியஞ்செய்வதுபோல அவர் தன்னுடைய எஜமானனுக்கு மனப்பூர்வமாய் ஊழியஞ்செய்ய வேண்டும், அவன் தனது ஊழியத்தில் மேன்மையை நாட வேண்டும், மற்றும் தன்னால் இயன்ற சிறப்பான திறமையை வெளிப்படுத்த வேண்டும். தேவனுக்கு ஊழியஞ் செய்கையில், வித்தியாசப்பட்ட ரீதியில் ஊழியஞ் செய்வது, மற்ற வேலைக்காரர்களிடமிருந்து அவனைத் தனித்துக் காட்டக்கூடும், ஏனெனில் மற்ற ஊழியர்கள் அவனைப் போல் ஊழியஞ் செய்யாமலிருக்கலாம். இப்படிச் செய்வதால் அவன் தன்னுடைய எஜமானனிடத்தில் தயவுடன் கூடிய ஏற்பைப் பெற்றுக் கொள்வான். அதே போல சமூக அந்தஸ்த்தைப் பெற்று மற்றவர்களுக்கு முன்பாக முன்மாதிரியாகவும் திகழுவான்.

கிறிஸ்தவனல்லாத வேலைக்காரர்கள் தங்கள் எஜமானர்களை பிரியப்படுத்தத்தக்க வகையில் பணிபுரிந்திருக்கலாம், ஆகிலும் அவர்கள் இயேசுவைப் பிரியப்படுத்தும் வகையில் ஊழியஞ்செய்ய வில்லை. கிறிஸ்தவ வேலைக்காரன், இயேசுவைப் பிரியப்படுத்தத்தக்க வகையில் ஊழியஞ்செய்து, தனது எஜமானனையும் பிரியப்படுத்துவான், தனது ஊழியத்தில் காட்டும்

வைராக்கியம் அது அந்த எஜமானன் கிறிஸ்தவனாயினும் அல்லது கிறிஸ்தவனல்லாதவனாயினும் ஒரே மாதிரியாகத்தான் இருக்க வேண்டும்.

"அநியாயஞ் செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்" (3:25)

*வேலைக்காரனோ - அல்லது எஜமானன் உட்பட வேறுயாராகிலுமோ - அநியாயஞ் செய்கிறவன் தான் அநியாயத்தினினித்தம் அவன் அதின் பலனை அடைவான். பவுல் இங்கே வேலைக்காரர்களை மட்டுமே குறிப்பிட்டிருந்தால், அவர் "அநியாயஞ் செய்கிற நீங்கள் (பன்மையில்) என்று எழுதி" "நீங்கள்" ("வேலைக்காரர்கள்") என்று முந்தைய வசனங்களுடன் ஒத்துப் போகத் தக்கதாக எழுதியிருப்பார். மாறாக, அவர் **அநியாயஞ் செய்கிறவன்** என்று குறிப்பிடுகிறார், அதன் பொருள் "எந்த நபராகவும் - அடிமை, எஜமானன், அல்லது வேறு யாராகிலும் - அநியாயஞ் செய்கிறவன் எவனோ தனது செயலுக்குத்தக்க பலனை அடைவான்" என்பதே.*

அடுத்த உடனடி வசனப் பகுதியில், எஜமானர்களுக்கு கீழ்ப்படியாமை அல்லது மரியாதை செலுத்தாமையின் மூலம் வேலைக்காரர்கள் அநியாயஞ் செய்கிறவர்களாயிருக்கிறார்கள், ஆகிலும் (அநியாயஞ்செய்) "கிறவன்" என்று பவுல் குறிப்பிடுவதால், பவுல் ஒரு பரந்த பயன்பாட்டை உட்படுத்தியிருக்கிறார், அதில் அநியாயஞ் செய்கிற எவரும் உட்படுவர். இயேசு அப்போஸ்தலர்களுக்குப் போதிப்பதில் இதே மாதிரிதான் செய்தார். அவர் அப்போஸ்தலருடன் இருக்கையில், கர்த்தருடைய பந்தியை நிலைப்படுத்தினார்.[6] இந்த அமைப்பில், அவர் அப்போஸ்தலர்களிடம் நேரடியாகப் பேசும் போது, அவர் "நீங்கள்" என்று குறிப்பிட்டார் (யோவான் 14:19, 20); ஆனால் அவர், "அவன்" என்று சொன்னபோது (யோவான் 14:21). அவர் பொதுவாக யாரையும் குறிப்பிட்டிருக்கலாம். இதே போல யோவான் 14-16ல் முழுவதும் இதைத் தான் அவர் செய்தார்.

பவுல் "அநியாயஞ் செய்தல்" குறித்தும் தமது நிருபத்தில் பிலேமோனில் பேசினார் (வசனம் 18). இதில் தேவனுடைய சித்தத்திற்கு முரணான எந்த செயலையும் உட்படுத்தும். ஜனங்கள் செய்கிற ஒவ்வொரு முறையற்ற செயலுக்கும் இயேசு நியாயந்தீர்ப்பார் (2 கொரிந்தியர் 5:10) பட்சபாதமில்லாமல் அப்படிச் செய்வார் (ரோமர் 2:6-11). பழிவாங்குதல் (செய்கைக்குத் தக்க தண்டனை அளித்தல்) என்பது தேவனுடைய நித்தியக் கொள்கையாக இருந்துள்ளது. இஸ்ரவேலருடன் அவர் தம் செயலில், "... விரோதமான எந்த செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை ... பெற்றார்கள்" (எபிரெயர் 2:2; காண்க உபாகமம் 10:17). "... மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலாத்தியர் 6:7).

நமது உண்மையும் நேர்மையுமான சேவைக்கு இரண்டு காரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன: தமக்கு ஊழியஞ்செய்கிறவர்களுக்கு இயேசு பரலோக சுதந்தரத்தைக் கொடுப்பார், மற்றும் அநியாயஞ் செய்கிறவர்களை அவர் தண்டிப்பார். அவருக்குக் கீழ்ப்படிதல் அதன் பலனைக்கொண்டு வரும் (எபிரெயர் 5:8, 9), ஆகிலும் அவருடைய சித்தம் மீறப்படுமானால் தண்டிக்கப்பட்டாக வேண்டும் (2 தெசலோனிக்கேயர் 1:6-9).

“பட்சபாதமே இல்லை” (3:25)

*தேவன் யாருக்கும் தாட்சண்யம் காட்டுவதில்லை. **பட்சபாதமின்றி** அவர் நியாயத்தீர்ப்பு செய்வார் (நடபடிகள் 10:34; ரோமர் 2:6, 11; 1 பேதுரு 1:17). அடிமைகளுக்குக் கொடுத்த இதே எச்சரிப்பை பவுல் எஜமானர்களுக்கும் கொடுத்தார் (எபேசியர் 6:9). ஒவ்வொருவரும் எந்தப் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தார்களோ அதே அளவீட்டின்படி நியாயந்தீர்க்கப்படுவார்கள், இஸ்ரவேலர்கள் பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின் கீழ் இருந்தார்கள் எனவே அந்தப் பிரமாணத்தின்படி நியாயத்தீர்க்கப்படுவார்கள் (ரோமர் 2:12). நியாயப்பிரமாணத்துக்குட்பட்டிராத புறஜாதிகள் மனச்சாட்சியின்படி நியாயந்தீர்க்கப்படுவார்கள் (ரோமர் 2:14, 15). இயேசு மரணத்தால் பிரதிஷ்டைப் பண்ணப்பட்ட, புதிய உடன்படிக்கையின் கீழிருப்பவர்கள் (எபிரெயர் 9:15-17), இயேசுவின் போதனைகளால் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (யோவான் 12:48). ஒவ்வொருவரும் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் அளவீட்டின்படியே நியாயந்தீர்க்கப்படுவதால், எந்த ஒருவருமே விசேஷித்த பரிசீலனையை எதிர்பார்க்க இயலாது, அல்லது மற்ற எல்லாரையும் விட கிருபை கூட்டி வழங்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது, தாங்கள் விசேஷமாக கவனிக்கப்பட வேண்டுமென்று எதிர்பார்ப்பவர்கள் தங்களுக்கு அந்த தகுதி உண்டென்று நம்புவார்களானால் அவர்கள் கிருபையின் ஆவியை நிந்திக்கிறார்கள் (எபிரெயர் 10:29).*

நியாயத்தீர்ப்பின் நாளிலே, ஒரு மனிதனுடைய மதிப்போ அல்லது அவனுடைய சமுதாய அந்தஸ்தோ அளவீடாக எடுத்துக் கொள்ளப் படமாட்டாது. தோற்றம், ஆஸ்திகள், திறமைகள், பணம், மற்றும் வேறே தனிப்பட்ட அநுகூலங்கள் எந்த ஒருவருக்கும் தனிக்கவனம் செலுத்தப் பட்டு தயவு காட்டி தீர்ப்பளிக்க தேவனை சம்மதிக்கச் செய்ய மாட்டாது. அடிமைகள், எஜமானர்கள், மற்றெல்லா ஜனங்களும் தேவனுடைய பார்வையில் ஒரே நிலையில் தான் இருக்கிறார்கள். எந்த ஒருவருக்கும் மற்ற எவருக்கும் மேலான சலுகையைப் பெற இயலாது ஏனெனில் தேவன் எல்லாரையும் ஒரே மாதிரிதான் நடத்துகிறார்.

எஜமானர்கள் அடிமைகளுக்கு (4:1)

1 எஜமான்களே, உங்களுக்கும் பரலோகத்தில் எஜமான் இருக்கிறாரென்று அறிந்து, வேலைக்காரருக்கு நீதியும் செவ்வையுமானதைச் செய்யுங்கள்.

“எஜமான்களே, உங்களுக்கும் பரலோகத்தில் எஜமான் இருக்கிறாரென்று அறிந்து, வேலைக்காரருக்கு நீதியும் செவ்வையுமானதைச் செய்யுங்கள்” (4:1)

*கிரேக்க வார்த்தையான kurioi என்பது (“கர்த்தாக்கள்”; காண்க 3:22) **எஜமான்கள்** என்று பன்மையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆனால் ஒருமையில் அது இயேசுவைக் குறிப்பிட்டு “கர்த்தர்” என்று குறிப்பிடுகிறது (1:3, 10; 2:6; 3:13, 17, 18, 20, 23, 24; 4:17). ஆதிக்கிறிஸ்தவர்களில் அநேகம் பேர் பணக்காரர்களாயிருக்கவில்லை, அவர்களில் பெரும்பாலானோர் அடிமைகளாயிருந்தார்கள், ஆகையால், அநேகமாக ஒருசிலர் மட்டுமே அடிமைகளைக் கொண்டிருக்க வேண்டும். பவுல் இந்தக்*

காரணத்தினால்தானோ என்னவோ அடிமைகளைக் கொண்டிருந்த முதலாளிகளுக்கு ஒரு விசாலமான போதனைகளைக் கொடுக்கவில்லை.

அடிமை இரண்டு கர்த்தாக்களை அல்லது எஜமான்களைக் கொண்டிருந்தான், ஒன்று பூமிக்குரிய எஜமான் மற்றொன்று பரலோகத்துக்குரிய எஜமான். அடிமைகளை சொத்துக்களாக எண்ணினபடியால், அவர்களின் உரிமையாளர்கள் அல்லது கண்காணிகள், சில வேளைகளில் அவர்களை பிராணிகளைப் போல நடத்தினார்கள், மனுஷர்களைப் போல நடத்த வில்லை. அந்த நாட்களில் நடைமுறையிலிருந்த சட்டங்கள் அடிமைகளுக்கென்று எவ்வித பாதுகாப்பையும் கொண்டிருக்கவில்லை, மாறாக எஜமானர்கள் அவர்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளத் தக்க ஆஸ்திகளாக கருதும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார்கள்.

கிறிஸ்தவ எஜமான்கள் தங்கள் வேலைக்காரர்கள்மீது அக்கறை காட்டவும் **நீதியையும் செவ்வையானதுமான** காரியங்களைக் காட்டவும் கூடியவர்களாயிருந்தனர். *Dikaios* எனும் வார்த்தையின் பொருள் ("நீதி") அது "சரியானவை" என்றும் (பிலிப்பியர் 4:8). மேலும் அது "நீதி" என்றும் (ரோமர் 3:10) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "செவ்வை" (*isotēs*) எனும் வார்த்தை புதிய ஏற்பாட்டில் இன்னும் இரண்டு வசனங்களில் காணப்படுகிறது (2 கொரிந்தியர் 8:13, 14). அங்கே "சமநிலை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அதன் பொருள் சரியான சமநிலையைக் கொண்டிருத்தல். இந்த இரண்டு வார்த்தைகளும், இடையில் "மற்றும்," என்ற வார்த்தையால் இணைக்கப்படுகிறது, இதன் பொருள் எஜமானர்கள் தங்கள் வேலைக்காரரிடம் அக்கறையுடன் நடந்து கொள்ள வேண்டும், அவர்களிடத்தில் நீதியோடும் செவ்வையோடும் நடந்துகொள்ள வேண்டும். பவுல் ஒருவேளை எஜமானர்கள் வேலைக்காரர்களை சமமாக நடத்த வேண்டும் என்று சொல்லுகிறார் போலும், அவர்களை சம மனுஷர்களாகக் கருத வேண்டும். இது ஒரு புரட்சிகரமான கருத்து, நிச்சயமாகவே, வேலைக்காரர்கள் சுயாதீனர்களுக்கு சமமாக நடத்தப்படுவது பொதுவான பழக்கமாக இருக்கவில்லை, அல்லது வேலைக்காரர்கள் எஜமான்களாகிய தாங்கள் எப்படி நடத்த வேண்டும் என்று விரும்புகிறார்களோ அப்படி நடத்துவதும் இயலாததாயிருந்தது, இருந்த போதிலும் இயேசுவின் இந்த முக்கியமான போதனை - ஒருவர் தான் எப்படி நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறாரோ என்பது (மத்தேயு 7:12) - எஜமானர்களுக்கும் பொருந்தும்.

பவுல் எஜமானர்களுக்குக் கட்டளையிட்டு தங்கள் வேலைக்காரர்களை விடுதலையாக்கும்படி குறிப்பாகக் சொல்லவில்லை. அவர்களுடைய சமுதாயச் சட்டமும் இதைக் கோருவதில்லை, மற்றும் கிறிஸ்தவம் அரசுக்கு அறைகூவல் விடவும் இல்லை. ஆகிலும், பிசைந்த மாவை புளிப்பு பாதிப்பை ஏற்படுத்துவது போல, கிறிஸ்துவின் உபதேசம் அமைதியான முறையில் சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது, மாற்றங்களைக் கொண்டுவர இயேசு கையாண்ட முறைகள் புறம்பான சக்திகளல்ல அல்லது அடிப்படைக்கூறு சார்ந்த சமுதாய புரட்சியுமல்ல. அவரது நல்லொழுக்க விதிகளெல்லாம் புரட்சிகரமானதாயிருந்த போதிலும், அது உள்ளான மாற்றங்களை மட்டுமே கொண்டு வருகிறதாயிருக்கிறது. அதன் விளைவு சமுதாய மாற்றம். எஜமானர்கள் தங்கள் வேலைக்காரர்களை மனிதாபிமானத்தோடு

நடத்தும்படி கொடுக்கப்பட்ட இயேசுவின் ஊக்கமளிப்பினால், அநேக எஜமானர்கள் தங்கள் வேலைக்காரர்களுக்கு (அடிமைகளுக்கு) சுயாதீனத்தைக் கொடுத்தார்கள்.

கிறிஸ்தவ வேலைக்காரர்களைக் கொண்ட எஜமான்கள் தங்கள் மனதில் கொள்ள வேண்டியது என்னவெனில், கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாக, அவர்களுக்கும் **பரலோகத்தில் ஒரு எஜமான் உண்டு** என்பதைத்தான். அதே போல, அவர்கள் தங்கள் வேலைக்காரர்கள் தங்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களைப் பிரியப்படுத்தும்படி எதிர்பார்த்தனர், இந்த எஜமானர்கள் கிறிஸ்துவைப் பிரியப்படுத்த முற்பட வேண்டும். அவர்கள் தங்கள் வேலைக்காரர்களை தொடர்ந்து கவனிக்க இயலாதவர்களாயிருக்கும்போது, எதுவும் அவர்களுடைய பரலோக எஜமானனால் கவனிக்கப்படாமல் விடப்படுவதில்லை.

மேலும் கற்றுக்கொள்ள

ஸ்திரீகள் கீழ்ப்படிந்திருப்பது ஒரு கலாச்சாரக் காரியமா?

மனைவிகளுக்குத் தங்கள் புருஷர்களிடம் உள்ள உறவுமுறையில், மனைவிகள் புருஷர்களுக்கு இனி கீழ்ப்படிந்திருக்க வேண்டுவதில்லை என்றும் ஏனெனில் முதல் நூற்றாண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கலாச்சாரத்தை மட்டுமே பவுல் குறிப்பிடுகிறார் என்றும் அல்லது சமுதாய சீர்கேடுகளை சரி செய்கிறார் என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். எப்படியாயினும், ஸ்திரீகளுக்கு வசனங்கள் மூலம் கொடுக்கப்படும் உபதேசங்கள் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டவையல்ல. மற்றவர்களுக்கு கீழ்ப்படிதலைக் குறித்து, Eduard Schweizer எழுதிய போது, "சரியாக நோக்கிப் பார்த்தால், மற்ற ஜனத்தாருக்கல்ல, கர்த்தருக்கே கீழ்ப்படிந்திருக்க வேண்டும்" என்றும் (கொலோசெயர் 3:23). "தோற்றத்தில் இந்த ஆழ்ந்த சிந்தனை முழுமையான விடுதலையை மனித எஜமானர்களிடமிருந்து பெறுவதைக் காட்டிலும் குறைவானதல்ல,"[7] என்றும் சொன்னார்.

வசனங்கள் ஆரம்பத்தைச் சுட்டிக் காட்டுகின்றன. பவுலும் பேதுருவும் சொன்ன வார்த்தைகளை கீழே கவனியுங்கள்:

> ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் *தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும்,* நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன் … புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, *ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள்,* புருஷன் ஸ்திரீக்காக சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள் (1 கொரிந்தியர் 11:3, 8, 9; வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது.

> ஸ்திரீகள் … *சபையிலே அமர்ந்திருக்க வேண்டும், வேதமும் அப்படியே சொல்லுகிறது* (1 கொரிந்தியர் 14:34; வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது).

> உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும்,

> ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்கவேண்டும். என்னத்தினாலெனில், *முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள்* (1 தீமோத்தேயு 2:12, 13; வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது).

> இப்படியே *பூர்வத்தில்* தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள் (1 பேதுரு 3:5; வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது).

பவுல் இங்கே தேவனுடைய சிருஷ்டிப்பின் வரிசைப்படி எழுதியதன் மூலம் இக்கருத்தை பயன்பாட்டில் விளக்கப்படுத்துகிறார், "புருஷன் ஸ்திரீக்கு தலையாயிருக்கிறான்"; "ஸ்திரீ புருஷனிலிருந்து தோன்றியவள்"; "புருஷனுக்காக ஸ்திரீ சிருஷ்டிக்கப்பட்டவள்"; "(ஸ்திரீயானவள்) அமர்ந்திருக்க வேண்டும், வேதமும் அப்படியே சொல்லுகிறது"; மேலும் "முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள்." பேதுரு பூர்வத்து ஸ்திரீகளை முன்வைத்து கிறிஸ்தவ ஸ்திரீகளுக்கு முன்மாதிரியாக தேவனால் ஏற்கப்படும் வாழ்க்கையை வாழ்ந்ததாகக் குறிப்பிட்டார்.

"ஸ்திரீகள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்று வேதம் எந்த இடத்தில் குறிப்பிடுகிறது?" என்று சிலர் கேட்டிருக்கிறார்கள் (1 கொரிந்தியர்கள் 14:34ஐக் காண்க). அவர்கள் ஏன் அப்படிக் கேட்கிறார்கள் என்றால் மோசேயிக்கு வெளிப்படுத்தப்பட்ட பிரமாணங்களிலும் ஆசரிப்புக்களிலும் மேற்குறிப்பிட்டபடியான வாக்கியம் எதுவும் காணப்படவில்லை. இந்தக் கேள்விக்குக் கீழ்வரும் பதிலைக் கொடுக்கக் கூடும்; இயேசு சில வேளைகளில் பழைய ஏற்பாட்டைக் குறிப்பிடும்படி "வேதம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். அவைகள் (நேரடியாக) மோசேயின் பிரமாணத்தில் காணப்படுவதில்லை. (காண்க சங்கீதம் 82:6; யோவான் 10:34லும்; சங்கீதம் 35:19, யோவான் 15:25லும் குறிப்பிடப்பட்டுள்ளது). மேலும், பவுல் 1 கொரிந்தியர் 14:21ல் தனது போதனைக்கு ஆதாரமாக வேதத்தைப் (நியாயப்பிரமாணத்தை) பயன்படுத்தினார், ஆகிலும் அவர் ஏசாயா 28:11, 12ஐ மேற்கோள்காட்டினார். இந்தக் கேள்விக்கான பதிலாக மேலும் ஒரு கருத்தாக கலாத்தியர் 4:21, 22ல் வேதத்திற்கு ஒப்பீடாக சாராளையும் ஆகாரையும் சுட்டிக்காட்டினார் நியாயப்பிரமாணத்தைக் குறித்து (வேதம் என்று) பவுல் சுட்டிக்காட்டிய போதெல்லாம் தேவன் மோசேயிக்குக் கொடுத்த பிரமாணத்தை மட்டும் வரையறுத்துக் குறிப்பிடவில்லை. பவுல் ஆதியாக மத்தையும் நியாயப்பிரமாணத்தில் ஒன்றாகக் கருதினார், இது ஒரு விசாலமான பொருள் என்பது தெளிவு. இப்படியாக, அவரைப் பொறுத்த மட்டில், சரியாகச் சொன்னால், "... அவன் உன்னை ஆண்டு கொள்வான்" என்று வேதம் சொல்லியிருக்கிறது என்கிறார் (ஆதியாகமம் 3:16).

பவுல் ஸ்திரீகளுக்குக் கொடுத்த உபதேசங்களெல்லாம் கலாச்சாரத்துக்கு எதிரானவை. கிறிஸ்தவ ஸ்திரீகளுக்கு அவர் கொடுத்த உபதேசம் (1 கொரிந்தியர் 14:34, 35; 1 தீமோத்தேயு 2:11, 12) அவர்கள் சமுதாயங்களில் காணும் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டவையல்ல. கிரேக்க - ரோமக் கலாச்சாரத்தில், ஸ்திரீகள் சமுகத்தில் தலைமைத்துவ பணிகளில்

நுழைந்து கொண்டிருந்தார்கள். புதிய ஏற்பாட்டு உலகில் பெண்களின் ஸ்தானம் என்ன என்பதை விளக்கப்படுத்தும் மேற்கோள்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

> புருஷர்களைப் போலவே ஸ்திரீகளும் அநேக பொதுப் பதவிகளிலும் இடம் பெற்றிருந்தனர் என்பதையும் அவர்கள் தங்கள் பொதுக் கடமைகளை நிறைவேற்றவும் எதிர்பார்க்கப்பட்டனர் என்பதற்கான உறுதியான ஆதாரங்கள் குறிப்பிட்டுக் காட்ட காணப்படுகின்றன. ஸ்திரீகளின் பெயர்கள் ஒரு பரந்த அலுவல் ரீதியான பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டும் - அவர்களுடைய வெளிப்படையான சேவைகளும் தர்ம சிந்தைகளும்- கனப்படுத்தப்பட்டுள்ளன. அவர்கள் கோவில்களைப் பராமரித்தும், விளையாட்டுக்களுக்குப் பொறுப்பேற்றும், ஊர்வலம் நடத்துதல், மற்றும் பலியிடுதல் போன்ற அனைத்திலும் பங்காற்றியுள்ளனர்.[8]

> ஸ்திரீகள் ஆசாரியர்களாகவும் மற்றும் வேறுபல காரியங்களில் தலைமைவகித்தும் பெரும்பாலான அஞ்ஞான கலாச்சாரங்களில் முன் நின்றும், Diana, Isis, Livia, Dionysos, Liber மற்றும் Libera போன்றவற்றிற்கு சேவைசெய்வதிலும் ஈடுபட்டு இருந்திருக்கின்றனர். அவர்கள் இலக்கியங்களிலும், பாடல்கள் தொகுப்பதிலும் மதச்சடங்காச்சாரங்களை நடப்பிப்பதிலும், கோவில்கள், மற்றும் மதச்சம்பந்தப்பட்ட நிதி நிலைகளை கையாள்வதிலும், ஒழுங்கு செய்யப்பட்ட பண்டிகை மற்றும் ஆசரிப்புகளிலும், இசைகளை வாசிப்பதிலும், திரளான எண்ணிக்கையுள்ள ஜனங்களில் முன்னோடித்துவ தீர்மானங்களை எடுப்பதிலும் பங்காற்றியுள்ளனர்.[9]

> பழங்கால கிரேக்கப் பண்பாட்டின் காலம் பெண்களின் அடிமைத்தன ஒழிப்புக் காலமாக பொதுவில் கருதப்பட்டது ... (பெ)ண்கள் கணிசமான விடுதலை இயக்கத்தைக் கொண்டவர்களாக பவுலின் காலத்தில் காணப்பட்டார்கள், திருமணம் மற்றும் விவாகரத்து சடங்காச்சாரங்களில், சில இடங்களில் மத சம்பந்தப்பட்ட பதவிகளை கொண்டிருக்க உரிமை பெற்றிருந்தனர் ... கிரேக்க பெண்மணிகள் தங்கள் முக்காடுகளை கைவிட்டார்கள் மேலும் எண்ணற்ற சிகை அலங்கார முறைகளையும் பரீட்சித்துக் கொண்டிருந்தார்கள்.[10]

அப்போஸ்தலர் நடபடிகளில், ஸ்திரீகளால் நடப்பிக்கப்பட்ட செயல்பாடுகளையும் அதினால் அவர்கள் சமுதாயத்தில் அடைந்த மேன்மையையும் லூக்கா பதிவு செய்துள்ளார். மேலும் அவர்கள் ஆண்களுக்கு ஆதரவாக பணிபுரிய அனுமதிக்கப்பட்டனர். பிசிதியாவிலுள்ள அந்தியோகியாவில் "பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகளையும்" "பட்டணத்து முதலாளிகளையும்" எடுத்து விட்டு பவுலைத் துன்பப்படுத்தும்படி செய்தனர் (நடபடிகள் 13:50), மேலும் தெசலோனிக்கேயாவில் கனம் பொருந்திய ஸ்திரீகள் கிறிஸ்தவர்களானார்கள் (நடபடிகள் 17:4).

சமுதாயம் பொறுப்புக்களை ஸ்திரீகளுக்கு கொடுத்தாலும் கிறிஸ்தவ

ஸ்திரீகள் உலகத்தின் செல்வாக்குகளுக்கு உடன் போகக் கூடாது (ரோமர் 12:2). அவர்களின் குறிக்கோள் இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதுதான், அது அவருடைய கட்டளைகள் கலாச்சார ஆசரிப்புகளுக்கு முரணாக அமைந்திருந்தாலும் கூட கீழ்ப்படிதல் அவசியம். ஸ்திரீகள் "சமுதாயம் என்னிடத்தில் எதிர்பார்ப்பது என்ன?" என்று கேட்காமல் "இயேசு என்னிடத்தில் எதிர்பார்ப்பது என்ன?" என்று கேட்க வேண்டும்.

பயன்பாடு

குடும்ப உறவுமுறைகள்

புருஷர்கள் தங்கள் மனைவிகளில் அன்புகூரவும், மனைவி தன் புருஷனிடத்தில் அன்புகூரவும், பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்புகூரவும் தேவன் எதிர்பார்க்கிறார் (எபேசியர் 5:25; தீத்து 2:4). குடும்பங்களில் ஒருவருக்கொருவர் அன்பை அதிகப்படுத்த வேண்டும் - அது தகப்பன் தன் பிள்ளைக்குக் காட்டும் அன்புக்கு ஒப்பாக இருக்க வேண்டும் (யோவான் 3:35; 5:20; 17:23, 24) அதே போல குமாரன் தன் தகப்பனிடத்தில் காட்டும் அன்பைப்போலவுமிருக்க வேண்டும் (யோவான் 14:31). பிள்ளைகள் தங்கள் பிதாக்களின் விருப்பத்துக்கு பொறுப்பேற்று நடத்தல் வேண்டும். இயேசுவும் தமது தற்காலிக பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்திருந்தது போல நடந்து கொள்வது அவசியம் (லூக்கா 2:51).

குடும்பத்திலே அன்பை வெளிப்படுத்துவது எப்படி என்பதற்கான வழிகாட்டி 1 கொரிந்தியர் 13:4-8ல் காணப்படுகிறது, ஒரு குடும்பம் இந்த வசனங்களால் நடத்தப்பட ஏதுவாக அவைகளை எழுதிவைப்பது ஒரு சிறப்பான கருத்து. குடும்ப அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பற்காக அவர்கள் அடிக்கடி அவைகளை வாசிப்பது சிறந்தது.

நம்மில் ஒவ்வொருவருக்கும் தேவன் வைத்துள்ள கடமைகளை புரிந்து அவைகளை மதிக்க வேண்டும், அதினால் நாம் எதிர்பார்த்த பொறுப்பை ஏற்று நமது கடமையை நாம் நிறைவேற்றுவோம். நமக்குக் கொடுக்கப்படாத பொறுப்புக்களை நாம் செய்ய முற்படும்போது மோசமான சூழல்கள் ஏற்படும்.

புருஷன் குடும்பத்திற்குத் தலைவனாயிருப்பதை தேவன் விரும்புகிறார் (எபேசியர் 5:23). குடும்பப் பகுதியில் அவன் நடத்திச் செல்பவனாக செயல்பட வேண்டும். கடமைகள் மாறும்போது பிரச்சனைகள் எழும்பும்.

ஸ்திரீகள் தங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் தங்களை அலங்கரித்துக் கொள்ள வேண்டும், அது பூர்வத்திலே தேவ பக்தியுள்ள ஸ்திரீகளாகிய சாராள் போன்றவர்களுக்கு ஒப்பாக இருக்க வேண்டும்.

> இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள் (1 பேதுரு 3:5, 6).

தேவபக்தியுள்ள ஒரு மனைவியைக் குறித்த விளக்கம் நீதிமொழிகள் 31:10-31ல் காணப்படுகிறது. இந்த வசனப்பகுதி அவளுடைய வேலைகளையும், அவள் தன் புருஷனுக்கும் பிள்ளைகளுக்கும் கொண்டுள்ள அக்கறையையும் உட்படுத்தியுள்ளது.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல முன்மாதிரியாக விளங்க வேண்டும். திருமறை நல்ல முன்மாதிரிகளையும் கெட்ட முன்மாதிரிகளையும் கொண்ட பெற்றோரைக் காட்டுகிறது. ஆபிரகாம் ஒரு நல்ல தகப்பனுக்கு முன்மாதிரி. அவர் தன் பிள்ளைகளை கர்த்தருடைய வழியில் நடத்துவார் என்று தேவன் அறிந்திருந்தார் அதினால் அவர்களை ஆசீர்வதிக்க முடிந்தது (ஆதியாகமம் 18:19).

பிள்ளைகள் தங்கள் பெற்றோரைக் கனப்படுத்தி கீழ்ப்படிய வேண்டும் (எபேசியர் 6:1-3) இது தேவனுடைய திட்டம். அப்சலோம் மாத்திரம் தன் தகப்பனைக் கனம் பண்ணி அவரை எதிர்த்து கலகம் பண்ணாதிருந்திருந்தால் முழு இஸ்ரவேல் ராஜ்யத்திலும் தாவீதின் குடும்பத்திலும் எல்லாமே நலமாகப் போயிருக்கக் கூடும். அவருடைய குமாரனின் கலகத்தால், தாவீது தனது உயிரைக் காத்துக் கொள்ள ஓடினார்; ஆனால் யுத்தம் வெடித்தபோது, அப்சலோமின் படை தோற்றது, அவனும் கொல்லப்பட்டான். மனம் உடைந்த ஒரு தகப்பனாக, தாவீது, அழுது புலம்பி, "என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும்; அப்சலோமே, என் மகனே," என்று சொல்லி அழுதான் (2 சாமுவேல் 18:33).

தேவனுடைய திட்டம் குடும்பத்திற்கென கொடுக்கப்பட்டிருந்தும் அவை பின்பற்றப்படாதபோது, குடும்பப் பிரச்சனைகள் எழும்புகின்றன, குடும்பத்திற்கான தேவனுடைய திட்டத்தை நாம் மேம்படுத்த இயலாது.

சமுதாய உறவுகள்

சமுதாய உறவுமுறைகளில் ஜனங்களுக்கிடையே மரியாதையுடன் நடப்பிக்கப்பட வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார், கொலோசெயரில் எஜமானன் - வேலைக்காரன் உறவுமுறை குறித்து எழுதப்பட்டிருப்பதிலிருந்து நாம் இதை அறிந்து கொள்ளலாம் மற்றும் அதை பணிக்கு அமர்த்தியவர் பணிக்கு அமர்த்தப்பட்டவனுக்குமிடையேயுள்ள உறவுமுறைக்கும் அல்லது அதுக்கு ஒத்த சூழ்நிலைக்கு எதிர் செயலாற்றக் கூடும்.

வேலைக்காரர்கள் தங்கள் எஜமானர்களைப் பிரியப்படுத்தத் தக்கதாக மனப்பூர்வமாய் தங்கள் எஜமான்களுக்குக் *கீழ்ப்படிய வேண்டும்.* அவர்கள் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்துடன் ஊழியம் செய்ய வேண்டும். அவர்கள் கர்த்தருக்கு ஊழியஞ்செய்வது போல பணியாற்றி, தனது எஜமானனைக் காட்டிலும் சிறப்பான பலனை தேவன் கொடுக்கிறார் என்று உணர வேண்டும்.

எலிசாவின் வேலைக்காரனான கேயாசி ஒரு நாள், தானாக செயல்பட வேண்டும் என்று முடிவெடுக்கும் வரை, தீர்க்கதரிசியின் விருப்பங்களை நிறைவேற்றினான். தேவன் நாகமானை சுகப்படுத்தின பின்பு எலிசா நாகமான் கொடுக்கும் வெகுமதியை ஏற்றுக் கொள்ள கேட்ட போது அவன் அங்கே இருந்தான்.

எலிசா "நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய

ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" என்று சொன்ன போது கேயாசி அதைக் கேட்டான் (2 இராஜாக்கள் 5:16). எலிசாவின் விருப்பங்களுக்கு எதிராக தான் போகிறதை அவன் உணர்ந்திருக்க வேண்டும், ஆகிலும் அவன் நாகமானைப் பின் தொடர்ந்து போய் பொய்யை அவனிடத்தில் சொல்லி அந்த வெகுமதியை தன்னிடத்தில் கொடுக்கும்படி செய்தான். அவனுடைய பேராசையினாலும் கீழ்ப்படியாமையினாலும், எலிசா அவனை நாகமானின் குஷ்டரோகம் பிடித்துக் கொள்ளச் செய்தார் (2 இராஜாக்கள் 5:27). வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களின் விருப்பத்தை நிறைவேற்ற தேவன் எதிர்பார்க்கிறார், அவர்கள் தேவனுடைய கோரிக்கைகளை மீறாத எஜமானர்களாய் இருக்கும் வரை அப்படிச் செய்ய விரும்புகிறார் (நடபடிகள் 5:29).

வேலைக்காரர்களுக்கு கொடுக்கப்படும் உபதேசம் அநேகமாக வேலைக்கு அமர்த்தப்படுபவர்களுக்கும் பொருந்தக் கூடும். நாம் ஒரு நாளுக்குரிய நல்ல கூலியைப் பெற ஒரு நாளுக்குரிய வேலையை செய்தாக வேண்டும். நாம் செய்கிற வேலையினால் இயேசு கனப்படுத்தப்பட வேண்டும் அதினால் நாம் அவருடைய நாமத்திற்கு அவமானத்தைக் கொண்டுவர மாட்டோம்.

ஒரு உயர்நிலைப் பள்ளி மாணவன் ஒரு பண்டகச் சாலையில் தன்னைக் கடினமாய் வேலை செய்ய வேண்டாம் என்று சொன்ன வயது முதிர்ந்த ஒரு கூட்டத்தாருடன் வேலை செய்யத்துவங்கினான். முதலாளி அங்கே இருக்கும் போது மட்டும் ஒரு நல்ல பிரயாசத்துடன் அவர்கள் வேலை செய்தார்கள். அந்த மாணவன் தான் கடினப்பட்டு வேலை செய்யும்போது மற்றவர்கள் இயன்ற வரை கொஞ்சமான வேலைகளையே செய்தது அவனுக்கு மிகவும் மனப்பாதிப்பாக இருந்தது. ஒரு நாள் மதிய உணவுநேரத்தில், அவன் கொலோசெயர் 3:23ஐ வாசித்தான், அப்பொழுதிலிருந்து அவன் மனுஷருக்கல்ல இயேசுவுக்காகவே வேலை செய்கிறோம் என்ற தீர்மானத்தை எடுத்தான். முதலாளி தனக்கு ஒரு உதவியாளரை நியமிக்கும் நேரம் வந்த போது, வயதில் முதிர்ந்தவர்களைக் கடந்து போய் இந்த மாணவனைத் தெரிவு செய்து தனக்கு உதவியாளாராக நியமித்தான்.

ஒரு குறிப்பிட்ட பட்டணத்தில் நடந்த சுவிசேஷக் கூட்டத்தில் ஒரு சுவிசேஷகருடைய போதனையைக் கேட்டு ஒருவர் மட்டுமே கீழ்ப்படிந்தார். ஞானஸ்நானம் பெறும்படி வந்த அந்தப் பெண்மணியைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தார், ஏனெனில் அந்த சமுதாயத்தில் அவள் ஒரு பேர்பெற்ற பெண்மணி. அவள் மனதைத் தொடுமளவுக்கு அவர் என்ன வார்த்தையைப் பயன்படுத்திப் போதித்திருப்பார் என்பதை அறிய ஆவலாக அவர் கேட்டார், ஏனெனில் அதே வார்த்தைகளைப் பயன்படுத்தி மற்ற கூட்டங்களில் பேசலாம் என்ற எண்ணத்தில், "சுவிசேஷத்துக்குத் கீழ்ப்படியக் கூடிய அளவுக்கு நான் என்ன சொன்னேன் அல்லது செய்தேன் என்று நீங்கள் சொல்ல முடியுமா?" என்றார். அவள் பதிலளித்து, "நீங்கள் சொன்னதோ அல்லது செய்ததோ எதுவுமில்லை. கூட்டம் நடந்து கொண்டிருந்த போது ஒரு பெண்ணின் அருகே நான் அமர்ந்திருந்தது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? அவள் என் வீட்டை சுத்தம் செய்பவள். அவள் செய்யும் வேலையிலும் வாழ்க்கையிலும் மிகவும் மனதிருப்தி ஏற்பட்டது எனவே அவளது பக்தியைக் குறித்து விசாரித்தேன். அவள் தாழ்மையாக தான் ஏன் இயேசுவை விசுவாசிக்கிறாள் என்றும் அவள் ஏன் அவருடைய சபையில் அங்கம் வகிக்கிறாள் என்றும் சொன்னாள். நான்

கிறிஸ்தவளாக இருக்க விரும்புவதற்கும் கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்க விரும்புவதற்கும் அவள்தான் காரணம்" என்றாள்.

எஜமானர்கள் தங்கள் பரலோக எஜமானர்களைப் பிரியப்படுத்த வேண்டும். அவர்கள் தங்கள் வேலைக்காரர்களை முறையாக நடத்த வேண்டும். இந்த உபதேசம் சபையில் இருந்து கொண்டு வேலைக்கு அமர்த்துபவர்களுக்கும் பொருந்தும். முதலாளிகள் தங்கள் வேலைக்காரரிடத்தில் அக்கறை காட்ட வேண்டும். வேலையில் அமர்த்தப்பட்டவர்களுக்கு நியாயமான கூலி கிடைக்க வேண்டும், மேலும் வேலைக்கு அமர்த்தியவர்கள் தங்கள் வேலைக்காரர்கள் எப்படித் தங்களை அன்பாக நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களோ அப்படியே இவர்களும் அவர்களை நடத்த வேண்டும் (மத்தேயு 7:12).

சரியான உறவுமுறையைப் பெருகப் பண்ணுதல்

நம்முடைய முதல் கடமை தேவனோடு நமக்கு இருக்கிற உறவுமுறை, நமது இரண்டாவது கடமை மற்றவர்களோடு நமக்கு இருக்கிற உறவுமுறை. எல்லா உறவுமுறைகளும் அன்பை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்க வேண்டும். அதில் தேவனிடத்தில் வைக்கும் அன்பு, சக கிறிஸ்தவர்களிடத்தில் வைக்கும் அன்பு, அயலார்களிடம் மற்றும் சத்துருக்களிடத்தில் வைக்கும் அன்பு ஆகியவற்றை உட்படுத்தியது. நமது அனைத்து உறவுமுறைகளும் அன்பை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டிருக்குமானால், நம்மில் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள தொடர்பில் எவ்வித பிரச்சனையும் சரிசெய்யப்படக் கூடும்.

கிறிஸ்தவர்கள் மற்றவர்களிடம் கொண்டுள்ள உறவுமுறையை நன்கு புரிந்து கொண்டு அதைக் கனப்படுத்தி அந்த உறவுமுறைக்குத் தேவைகளைச் சந்திப்பது அவசியமானது. கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கும் அங்கங்கள் ஒருவருக்கொருவர் கடமைப்பட்டவர்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் சபையில் ஆற்ற வேண்டிய கடமைகள் உண்டு.

புருஷர்களும் மனைவிகளும் (3:18, 19). மனைவி தனது புருஷனுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் - அவன் அவளை மேற்கொள்ளத் தேவையான பலத்தைக் கொண்டிருப்பதால் அல்ல, ஆனால் அவளுடைய மனப்பூர்வமான கீழ்ப்படிதல் கர்த்தருடைய சித்தத்திற்கு உட்பட்டது என்பதால். ஒரு ஸ்திரீயானவள் தன் புருஷனை உணர்ச்சிவசப்பட்டு சீர்குலைவை ஏற்படுத்துமளவுக்கு ஆதிக்கம் செலுத்துதல் கூடாது, அது சரீர சீர்குலைவை ஏற்படுத்துமளவுக்கு நாசப்படுத்துதலாக இருக்கக் கூடும். பொதுவாகச் சொன்னால், ஸ்திரீயின் அழகினாலே புருஷன் ஈர்க்கப்படுகிறான், புருஷன் மனைவிக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் திராணியையும் அக்கறை செலுத்தும் தன்மையையும் கொண்டிருப்பதால் மனைவி ஈர்க்கப்படுகிறாள். இந்த குணாதிசயங்கள் மற்ற நபர்களுக்கு எதிராகத் திரும்பும்படியாக இருக்கக் கூடாது.

புருஷர்கள் கட்டாயப்படுத்தியோ பலவந்தம் பண்ணியோ மனைவிகளைக் கீழ்ப்படியப்பண்ணக் கூடாது. மாறாக, அவர்களுக்காக ஆழமான அன்பு காட்டி அவர்களிடம் அக்கறை காட்ட வேண்டும் (எபேசியர் 5:25). இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களை உட்படுத்தும் ஒவ்வொரு உறவுமுறையிலும், யாராவது ஒருவர் முன் நடத்த வேண்டும்; ஒரே நேரத்தில்

இறண்டு பேர் தலைவர்களாக செயல்பட முடியாது. தேவனுடைய ஏற்பாடு எப்பொழுதும் சிறப்பாக செயல்படுகிறது.

பெற்றோரும் பிள்ளைகளும் (3:20, 21). அதிகாரங்களைக் கனப்படுத்தாத பிள்ளைகளால் சமுதாயம் பிளவுபட்டு விழுந்துபோகிறது, குறிப்பாக தங்கள் பெற்றோரின் அதிகாரத்தைக் கனப்படுத்தாதபோது. கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்ட பிள்ளைகளையே எதிர்கால சபை சார்ந்திருக்கிறது. இதினால் தான் மூப்பர்கள் மரியாதையும் கீழ்ப்படிதலும் உடைய பிள்கைளைக் கொண்டவர்களாயிருக்க வேண்டும் (1 தீமோத்தேயு 3:4, 5).

தகப்பன்மார்கள் சிறுபிள்ளைகள் பார்வையில் பெரிய உருவங்களாக, அதிகாரமிக்கவர்களாக, மற்றும் கொடுங்கோலர்களாக காட்சி தருவார்கள். அவர்களுடைய கோபங்களும் சில காரியங்களுக்கு அவர்கள் அனுமதி கொடுக்காததும் பயத்தை உண்டு பண்ணுபவைகளாயிருக்கக் கூடும். முரட்டுக் கைகளையும், எப்போதும் (எதையாவது, பிள்ளைகள் செய்ய வேண்டுமென்று) கோருவதும் அல்லது ஆதிக்கம் செலுத்துவதும் பிள்ளைகள் சிறப்பான இடத்தை அடையாதபடி குறைவுள்ளவர்களாக்கி விடும். இப்படி நடக்க அனுமதிப்பதைக் காட்டிலும். தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உற்சாகமூட்டி நம்பிக்கையை வளர்க்கச் செய்ய வேண்டும். சில வேளைகளில் சிறுபிள்ளைகள் தங்கள் தகப்பனால் எதையும் செய்யக் கூடும் என்று நம்பிக்கொண்டிருப்பார்கள். தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளும் கூட, சகல தகுதியுள்ள இலக்குகளை சாதித்துக் காட்ட முடியும் என்று நம்ப வைக்க வேண்டும்.

எஜமானர்களும் வேலைக்காரர்களும் (3:22-4:1). ஆவிக்குரிய ரீதியில் எல்லாரும் சமமானவர்கள் என்பதால், தனி நபர்களுக்கிடையே கிறிஸ்துவுக்குள் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது (கலாத்தியர் 3:28). மனமாற்றப்பட்ட அடிமைகள் கிறிஸ்துவுக்குள் விடுதலை பெற்றவர்கள், அவர்கள் ஆவிக்குரிய சமநிலையை தங்கள் எஜமானர்களுடன் கொண்டிருந்தாலும், அவர்கள் தங்கள் எஜமானர்களுக்கு இன்னமும் கடமைப் பட்டவர்களாகத் தான் இருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து ஊழியஞ்செய்யும்படி கர்த்தர் எதிர்பார்க்கிறார், இன்னும் பெரிதான முறையில் அவர்கள் பக்திபயத்துடன் பணியாற்ற வேண்டியவர்கள், அவர்கள் இயேசுவுக்கு ஊழியஞ் செய்வது போல் அவர்களுடைய பணி இன்னும் ஒரே மாதிரியாகத் தான் இருக்க வேண்டும். ஒரு வேலைக்கு அமர்த்தும் நபருக்கு அமர்த்தப்பட்டவர் இப்படிப்பட்ட பணிவிடையைத்தான் செய்ய வேண்டும். இயேசுவே இறுதியில் பெரிதான பலனை அளிப்பவர் என்று அறிந்து அப்படிச் செய்ய வேண்டும். நாம் மனுஷ சரீரத்தில் இருக்கும்போது செய்த சகலக் காரியங்களுக்கும் நம்மில் ஒவ்வொருவரும் இயேசுவுக்கே கணக்குக் கொடுக்க வேண்டும் (2 கொரிந்தியர் 5:10).

எஜமானர்கள் தங்கள் வேலைக்காரர்களை கனப்படுத்தி நியாயமாய் நடத்த வேண்டும், ஏனெனில் அவர்களுக்கும் எஜமானன் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று முன்மாதிரி காட்டுகிற ஒரு எஜமானர் அவர்களிடம் அப்படி எதிர்பார்க்கிறார். கிறிஸ்துவின் மாதிரியை தன்னில் வளர்த்துக் கொள்ளும் ஒரு எஜமானன் தன் வேலைக்காரர்களை கனப்படுத்தும் அளவுக்கு வளர்ச்சியடைந்து ஒருவேளை அவர்களை (வேலைக்காரர்களை)

விடுதலையாக்கவும் கூடும். சில வேலைக்காரர்கள் பெருந்தன்மை பொருந்திய தங்கள் எஜமானர்கள் விடுதலையளித்தாலும் அவர்கள் அந்த எஜமானர்களை விட்டுப் போக மனதில்லாதிருப்பார்கள். அதிகாரவர்க்கத்திலிருக்கும் எந்த ஒருவரும் இயேசுவை ஒரு முன்னுதாரணமாக நோக்கிப் பார்த்து தனக்குக் கீழ் இருக்கிறவர்களை நடத்துவது எப்படியென்று அறிந்து கொள்ள வேண்டும்.

குறிப்புகள்

[1]*கொலோசெயரின் இந்தப் பகுதியில் மேற்கொண்டு காணப்பட்ட பிரிவுகளிலிருந்தும் கூட்டப்பட்டிருக்கக் கூடும். டேவிட் என்பவர் பின்வருமாறு கவனித்திருக்கிறார், "ஸ்திரீகள் ஒரே நேரத்தில் மனைவியுமாயிருக்கலாம், பெற்றோராக,* [*குமாரத்திகளாக,*] *மற்றும் அடிமை - எஜமானிகளாக இருக்கலாம், ஆண்கள் புருஷர்களாக, குமாரர்களாக, மற்றும் அடிமை - முதலாளிகளாக இருக்கலாம், அந்த தனிப்பட்ட நபர் ஒரு முறவுமுறையில் மேலதிகாரியாகவும் இன்னொரு உறவுமுறையில் தாழ்ச்சியுடையவராகவும் இருக்கக்கூடும்"* (David M. Hay, *Colossians*, Abingdon New Testament Commentaries [Nashville: Abingdon Press, 2000], 140). [2]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translators Handbook on Paul's Letters to the Colossians and to Philemon*, Helps for Translators (New York: United Bible Societies, 1977), 92. [3]Peter T. O'Brien, *Colossians, Philemon*, Word Biblical Commentary, vol. 44 (Waco, Tex.: Word Books, 1982), 224. [4]*மேலும் காண்க மத்தேயு 4:4; ரோமர் 7:17; 1 கொரிந்தியர் 1:17; 1 தீமோத்தேயு 4:12; 1 பேதுரு 3:3, 4.* [5]E. K. Simpson and F. F. Bruce, *Commentary on the Epistles to the Ephesians and the Colossians*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957), 294. [6]*காண்க மத்தேயு 26:20; மாற்கு 14:17; லூக்கா 22:14; யோவான் 13:2, 4.* [7]Eduard Schweizer, *The Letter to the Colossians: A Commentary*, trans. Andrew Chester (Zürich: Benziger Verlag, 1976; reprint, Minneapolis: Augsburg Publishing House, 1982), 219. [8]Ross Shepard Kraemer and Mary Rose D'Angelo, *Women and Christian Origins* (New York: Oxford University Press, 1999), 86. [9]Valerie A. Abrahamsen, *Women and Worship at Philippi: Diana/Artemis and Other Cults in the Early Christian Era* (Portland, Maine: Astarte Shell Press, 1995), 194. [10]William Baird, *The Corinthian Church—A Biblical Approach to Urban Culture* (New York: Abingdon Press, 1964), 121–22.

3:18-4:1ல் உறவுமுறைகளுக்கு வழிகாட்டி[1]

வசனம்	எழுதப்பட்டவர்கள்	போதனை	விளக்கம்
3:18	*மனைவிகள்*	*தங்கள் புருஷர் களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்*	*இது கர்த்தருக்கேற்றது*
3:19	*புருஷர்கள்*	*மனைவியில் அன்புகூருங்கள்*	
3:20	*பிள்ளைகள்*	*உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள்*	*இது கர்த்தருக்குப் பிரியமானது*
3:21	*பிதாக்கள்*	*உங்கள் பிள்ளைகளை கோபமூட்டாதிருங்கள்*	*அவர்கள் திடனற்றுப் போகாமலிருக்கும்படி*
3:22-25	*வேலைக்காரர்*	*உங்கள் எஜமான்களுக்கு கீழ்ப்படியுங்கள்*	*பார்வைக்கு ஊழியம் செய்யாமல் மனுஷருக்குப் பிரியமாய் நடக்காமல் கர்த்தருக்கு பயந்து; மனப்பூர்வமாய் ஊழியஞ் செய்து; மனுஷருக்கென்று செய்யாமல் கர்த்தருக் கென்று ஊழியம் செய்யுங்கள்*
4:1	*எஜமான்கள்*	*வேலைக்காரரை நீதியும் செவ்வையுமாய் நடத்துங்கள்*	*உங்களுக்கும் பரலோகத்தில் எஜமான் இருக்கிறாரென்று அறிந்து கொள்ளுங்கள்*

[1]மேலும் எபேசியர் 5:22-6:9; தீத்து 2:2-10; 1 பேதுரு 2:13-3:7 காண்க.

15

புத்திமதிகள்

(4:2-6)

தனிப்பட்ட கிறிஸ்தவ நடத்தைகளைப் பற்றி பவுல் எழுதிய பின்பு (3:5-17), சபையிலுள்ள பல்வேறு கூட்ட மக்களுக்கு அவர் போதனைகளைக் கொடுத்தார் (3:18-4:1). அடுத்து, முழு கொலோசெ பட்டணத்துச் சபைக்கும் எழுதினார். அவருடைய முடிவுரைக் குறிப்பிலிருந்து இரண்டு பாடங்களைப் பெறக்கூடும்: கிறிஸ்தவர்கள் நேர்மறைச் செயல்களான ஜெபம் போன்றவற்றை கைக்கொள்ள வேண்டியவர்கள் (4:2-4). மேலும் கிறிஸ்துவுக்கென்று விசேஷித்த ஊழியங்களில் ஈடுபடவேண்டும், (ஆத்துமாவை) இழந்து போனவர்களை அவரிடம் நடத்த வேண்டும் (4:5, 6).

விசேஷமாக பவுலுக்காக ஜெபியுங்கள் (4:2-4)

[2]இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள். [3]கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேச வேண்டிய பிரகாரமாய்ப் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு, [4]திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்.

"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (4:2)

பவுலின் அநேக நிருபங்களின் முடிவுக்கு அருகில் அவர் தம் வாசகர்களை ஜெபத்திற்கு நேரத்தை செலவிடும்படி உற்சாகப்படுத்துகிறார்,[1] பெரும்பாலும் தனக்காகவும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்.[2] கொலோசெயர்களுக்கு, அவர் சொல்லுகையில், **இடைவிடாமல்** [*proskartereō*] **ஜெபம் பண்ணுங்கள்.** *proskartereō* என்பது ஜெபத்தில் தொடர்ந்து இருப்பதோடு சம்பந்தப்பட்டது (நடபடிகள் 1:14; 2:42; 6:4; ரோமர் 12:12) அல்லது வேறு காரியங்களில் ஈடுபடுவது ஆகியவற்றைக் குறிக்கும் (காண்க மாற்கு 3:9; நடபடிகள் 2:46; 8:13; 10:7; ரோமர் 13:6). இயேசு தம்மைப் பின்பற்றுவோர் விட்டுவிடாமல் அல்லது சோர்ந்து போகாமல் ஜெபிக்கும்படி போதித்தார் (லூக்கா 11:5-13; 18:1-8).

ஜெபம் எனும் வார்த்தை (*proseuchē*) நன்றி செலுத்துதலைக் காட்டிலும் அதிகமாக விண்ணப்பம் செய்தலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மாற்கு 9:29; 12:5; ரோமர் 1:10; 15:30; யாக்கோபு 5:17). கொலோசெயிலிருந்து கிறிஸ்தவர்கள் ஜெபித்து, தேவனிடத்தில் அவருக்காகவும் அவரோடிருப்பவர்களுக்காகவும் விண்ணப்பிக்கும்படியாகவும் கேட்கப்பட்டார்கள். மற்ற நிருபங்களில், தனது சார்பாக ஜெபிக்கக் கேட்டுக் கொண்டபின் அதை தொடர்ந்து செய்யும்படி வேண்டினார் (எபேசியர் 6:18-

20; 1 தெசலோனிக்கேயர் 5:17, 25). அவர் ஒரு வருக்கொருவர் ஜெபிப்பதை மிக முக்கியமானதாகக் கருதினார், ஏனெனில் அவர் மற்றவர்களுக்காக தொடர்ந்து ஜெபித்தார், அதேபோல அவர்களும் தனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

"ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" (4:2)

கொலோசெயர்கள் விழித்திருந்து *(grēgoreō)* **எச்சரிக்கையாயிருக்கும்படி** சொல்லப்பட்டார்கள். இயேசு தமது வருகைக்கு ஆயத்தமாக இருக்கும்படிக்கு விழித்திருங்கள் என்று சொன்னார் (மத்தேயு 24:42; 25:13; லூக்கா 12:37, 39). சகோதரர்கள் சோதனையால் அல்லது தீமையினால் மேற்கொள்ளப்படுவதை பவுல் விரும்பவில்லை 1 கொரிந்தியர் 16:13; 1 தெசலோனிக்கேயர் 5:6) அல்லது கள்ளப்போதகர்களால் தவறாக நடத்தப்படவும் விரும்பவில்லை (நடபடிகள் 20:31).[3] கெத்சமனே தோட்டத்தில் பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவானுக்கு இயேசு போதித்தார் "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் ..." என்றார் (மத்தேயு 26:41).

விழித்திருந்து என்று சொல்லப்படுவது தொடர் ஆபத்தைச் சுட்டிக் காட்டுகிறது. சுறுசுறுப்பாய் இயங்கும் எதிராளியும் நமக்கு எதிராளியாயிருப்பவனுமாகிய பிசாசானவன், தனக்கென்று பொய்யையும் மோசம் போக்கும் வழிகளையும் கொண்டிருக்கிறான் (யோவான் 8:44; 2 கொரிந்தியர் 2:11; 11:3). கிறிஸ்தவர்கள் தொடர்ந்து விழித்திருக்க வேண்டும், ஏனெனில் அவன் கொடிய சோதனைகளைக் கொடுத்து ஆவிக்குரிய, ஒழுக்க, உபதேசம், சரீரப்பிரகாரமான, சமுதாய ரீதியில், பொழுதுபோக்கு மற்றும் பொருளாதார ரீதியில் செயல்படுகிறான். எந்த நேரத்திலும் நமது பாதுகாப்பையோ அவனுக்கு எதிரான போராட்டத்தில் கவனத்தையோ இழந்து விடக்கூடாது. தேவன் கிறிஸ்தவர்களுக்கு ஆவிக்குரிய போராயுதங்களை பாதுகாப்புக்காக கொடுத்திருக்கிறார், ஆகிலும் நாம் அந்த போராயுதங்களைத் தரித்து யுத்தத்திற்கு பலப்படுத்திக் கொள்ளவும், விழித்திருந்து ஜெபிக்கவும் வேண்டும் (எபேசியர் 6:10-18).

பவுல் தொடர்ந்து விழித்திருக்க வேண்டும் என்று சொன்னபோது *(en autē),* அவர் ஜெபத்தைக் குறிப்பிட்டார். கொலோசெயர்கள் விழித்திருப்பதற்கு ஏதுவான வழி இடைவிடாமல் ஜெபத்தில் தரித்திருப்பதுதான், அதற்கு முரணானது உலகத்தாரைப் போல் வாழ்வது, அது தூங்க வைக்கும் தாலாட்டாக பிசாசினால் மேற்கொள்ளப்படுவதுமாகும்.

இந்த புத்திமதி கொலோசெயரில் பவுல் நன்றியறிதலையும், ஸ்தோத்திரங்களையும், ஸ்தோத்திரஞ் செலுத்துதலையும் குறிப்பிடுவது இது ஏழாவது முறை (காண்க 1:3, 12; 2:7; 3:15, 16, 17). அவர் அடிக்கடி **ஸ்தோத்திரஞ்செலுத்தும் எண்ணத்தை** ஜெபத்துடன் செலுத்துவதில் சம்பந்தப்படுத்தியிருந்தார்.[4]

"கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக்குறித்து பேச வேண்டிய பிரகாரமாய்ப்பேசி" (4:3)

பவுல் 1:26, 27ல் சொல்லப்பட்டபடியே ஒரு **இரகசியத்தைக்** *(mustērion),* குறித்துப் பேசினார் பழைய ஏற்பாட்டில் **கிறிஸ்துவைக்** குறித்த

இரகசியம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது, ஆனால் புதிய ஏற்பாட்டில் அந்த இரகசியம் வெளியாக்கப்பட்டது (ரோமர் 16:25, 26; எபேசியர் 3:3-5; 1:26ல் சொல்லப்பட்டுள்ள விவாதத்தைக் காண்க). பவுலின் குறிக்கோளெல்லாம், "தைரியமாய் சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிப்பதுதான்" (எபேசியர் 6:20).

கிறிஸ்துவின் இரகசியத்தை அவர் பிரசங்கித்ததால், பவுல் ***சிறைவைக்கப்பட்டார்.*** *"சிறைவைக்கப்படுவதற்கு" பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை, இதன் நேரடிப் பொருள் கட்டப்பட்டிருத்தல்.[5] "தேவ வசனமோ கட்டப்பட்டிருக்க வில்லை" என்று எழுதியபோது பவுல் அதைப் பயன்படுத்தினார் (2 தீமோத்தேயு 2:9). மேலும் அவர் விவாகமான ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குங்காலம் வரை நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைகளுக்குக் "கட்டப்பட்டிருக்கிறாள்" என்று சொன்ன போதும் அதைத் தான் குறிப்பிட்டார் (ரோமர் 7:2; 1 கொரிந்தியர் 7:27, 39).*

கொலோசெயரில் மற்ற இடங்களில், பவுல் தனது பாடுகளை கட்டப்பட்டதற்கு ஒப்பிட்டுப் பேசினார் (1:24; 4:7-9). அவர் தாம் சிறைவைக்கப்பட்டதை அல்லது "கட்டப்பட்டிருந்ததை" (desmos) பிலிப்பியர் 1:7, 13, 14, 17; கொலோசெயர் 4:18; 2 தீமோத்தேயு 2:9; மற்றும் பிலேமோன் 10, 13 ஆகிய வசனங்களில் பேசினார்.

ரோமாபுரிக்கு அவர் வந்த போது, பவுல் குறைந்த பட்சம் இரண்டு வருடங்கள் அங்கே "தன்னைக் காத்திருக்கும் சேவகருடனே தனித்துக் குடியிருக்கும்படி" அனுமதிக்கப்பட்டார் (நடபடிகள் 28:16). அவர் கட்டப்பட்டிருந்தபோதிலும் (எபேசியர் 6:20) சேவகர்களால் காவலில் வைக்கப்பட்டிருந்த போதிலும், அவர் தனது சொந்த வாடகை வீட்டில் தங்கியிருந்தார். ஜனங்கள் சுதந்தரமாக அவரைப் போய் பார்த்து வர ஏதுவிருந்தது (நடபடிகள் 28:30, 31). பவுல் இந்த வசனத்தில் "நாங்கள்" என்பதற்குப் பதிலாக "நான்" என்று மாற்றிக்கொண்டார். இதன் நோக்கம் தனது நிலை மற்றவர்களிலிருந்து வித்தியாசப்பட்டிருப்பதை குறிப்பிடும்படியாகத்தான். Peter T. O'Brien *"ஒருமைக்கு மாற்றிப் பேசுவது இயல்பானதுதான், தனக்கும் மற்றவர்களுக்கும் பொதுவான காரியத்திலிருந்து தனக்கு மாத்திரமே உரியதுக்கு மாறினதைக் குறிப்பிட்டார் ..." என்றார்.[6]*

இந்த நேரத்தில் பவுல் யூதர்களுடைய கைகளில் விழுவதைக் காட்டிலும் இராயனால் விசாரிக்கப்படும் படிக்கு காவலில் வைக்கப்பட்டு சிறையில் காத்திருப்பது நலமென்று எண்ணி ரோமாபுரியில் (வீட்டுக்) காவலில் வைக்கப்பட்டிருந்தார், யூதர்கள் அவரை கொலை செய்யும்படி வகை தேடினார்கள் (நடபடிகள் 25:1-3). ரோமர் அரசின் பாதுகாப்புக்குக் கீழ் தான் இருக்கும்படிக்கு அவர் இராயனுக்கு அபயமிட்டார் (நடபடிகள் 25:8-12). அவர் அபயமிட்டபின், கட்டப்பட்டவராய், ரோமிற்கு அனுப்பப்பட்டார். ஒரு ரோமக்குடிமகன் என்ற அடிப்படையில் அவருக்கு அந்த உரிமையிருந்தது.

"நான் பேச வேண்டிய பிரகாரமாய் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு" (4:3)

கொலோசெயர்கள் தங்கள் ஜெபங்களில் இரண்டு விண்ணப்பங்களைத் தங்களுக்காக ஏறெடுக்கும்படி பவுல் அவர்களைக் கேட்டுக் கொண்டார்: வசனத்தைப் பேசுவதற்கு தனக்கு சந்தர்ப்பங்கள் உண்டாகும்படியாகவும்

அதைத் துரிதமாகவும் புரிந்துகொள்ளத் தக்க வகையில் செய்யும்படியும் ஜெபிக்கச் சொன்னார். அவர்கள் தனது செய்தியை தைரியமாய் பிரசங்கிக்கவும், கிருபை பொருந்தினதாயும், ஞானத்தோடும் பிரசங்கிக்க ஏதுவாக ஜெபிக்கச் சொன்னார். அவர் தானோ தன்னுடைய சக ஊழியர்களோ தனிப்பட்ட முறையில் ஆசீர்வாதங்களைப் பெறத்தக்க வகையில் ஜெபிக்கச் சொல்லவில்லை; மாறாக, அவருடைய அக்கறையெல்லாம் அவர்கள் தனது பிரசங்கத்தை புரிந்துகொள்ளத்தக்க வகையில் பிரசங்கிக்க ஏதுவாக ஜெபிக்கச் சொன்னார்.

அதை **வெளிப்படுத்துவதற்கு,** *என்பது கிரேக்க மொழியில் ஒரே வார்த்தையாக உள்ளது, அது (phaneroō). 3:4ல் "வெளிப்படுதல்" என்பது 1:25ல் "வெளியாக்கப்பட்ட" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* கேட்பவர்கள் புரிந்து கொள்ளவும் செயல்படவும் தேவன் ஏவும்படி ஜெபிக்க பவுல் குறிப்பிடவில்லை, *அவருக்குத் தனக்கென கடமையிருந்தது, அவர்களுக்கெனவும் கடமையிருந்தது. தனது செய்தியைக் கேட்பவர்களுக்கு முன்பாக சாதுரியமாகவோ அல்லது வசனிப்புடனோ பேசி மனதில் எழுச்சி உண்டாக்க வகை தேடுவதற்குப் பதிலாக, அவர் தம் பேச்சு தெளிவானதாயும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்கதாகவும் இருப்பதை விரும்பினார். அவர்* மனவெழுச்சியை ஏற்படுத்துவதக்குப் பதிலாக தகவல் அறிவிக்கவே *விரும்பினார் (காண்க 1 கொரிந்தியர் 2:1).*

அப்போஸ்தலன் **பேச வேண்டிய பிரகாரமாய்** [*dei*] **பேச** *விரும்பினார், இந்த வாக்கியம் அவசியம், கடமை, பொறுப்பு, மற்றும் மாற்றமற்ற* தேவைகளை உள்ளடக்கியது. *Dei* என்பது பெரும்பாலும் "கட்டாயம்" *என்னும் பொருளில் தான் மொழிபெயர்க்கப்பட்டது. (காண்க மத்தேயு 23:23; 24:6; லூக்கா 2:49; 9:22; யோவான் 4:24; 12:34; நடபடிகள் 4:12; 9:6.)*

இரட்சிக்கும் பெலன் *செய்தியிலிருக்கிறது* (நடபடிகள் 11:14; ரோமர் *1:16) செய்தி அளிப்பவரிடம் அல்ல. இருந்தும், செய்தி அளிப்பவரின் பேச்சும் ஜீவியமும் செய்தியை பாதிக்காதபடி நடந்து கொள்ள வேண்டும். அன்போடும் சரியாயும் பிரசங்கிக்கிப்படும் - சத்தியம் - தேவன் இழந்து போனவர்களை இரட்சிக்க தெரிந்து கொண்ட பொருள்.*

"திருவசனம் செல்லும்படியான வாசலை தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்" (4:4)

வேண்டிக் கொள்ளுதல் என்பது நிகழ்காலத்தில் பேசப்படுகிறது, *பவுல் தனக்காகவும் தன்னோடு இருப்பவர்களுக்காவும் தொடர்ந்து ஜெபத்தை ஏறெடுக்கும்படி விரும்பினார்.* **"எங்களுக்காக"** *எனும் வார்த்தையை ஒருவேளை அவர் பதிப்பு செய்யும் முறையில் "எனக்காக" என்ற வார்த்தைக்குப் பதிலாகப் பயன்படுத்தியிருக்கலாம். ஏனெனில் அவர் தொடர்ந்து சகோதரர்கள் "நாங்கள் பேச வேண்டிய பிரகாரமாய்ப் பேசி" (வசனம் 3) அதை "நான் வெளிப்படுத்துவதற்கு" (வசனம் 3) தொடர்ந்து ஜெபிக்கும்படிக் கேட்டுக் கொண்டார். தன்னோடிருக்கிறவர்களையும் சேர்த்து பவுல் குறிப்பிட்டிருக்கலாம், ஏனெனில் அவர்களும் போதித்திருக்கக் கூடும். அப்படியிருந்திருக்குமானால், அவர் வசனம் 3ன் முன்பகுதியில் தன்னை மட்டும் குறிப்பிட்டு தனக்காக கேட்டிருக்கக் கூடும், பின்பு எங்களுக்காகவும்*

என்று அவர்களை சேர்த்துக் கொண்டு பேசினார்.

பவுல் பொதுவாக ஜெபிக்கும்படி கொலோசெயர்களிடம் கேட்டது மாத்திரமல்ல, ஜெபிப்பதற்கான காரியங்களை குறிப்பிட்டு அவைகளுக்காகவும் ஜெபிக்கும்படி கேட்டார். தன்னை காவலிலிருந்து விடுவிக்கும்படி அவர் ஜெபிக்கச் சொல்லவில்லை, மாறாக **தேவன் ... திருவசனம் செல்லும்படியான ... வாசலைத் திறக்கும்படியாகவும் ...** ஜெபிக்கச் சொன்னார், இந்த உருவகத்தை அவர்வேறே வசனப் பகுதிகளிலும் பயன்படுத்தியிருக்கிறார் (1 கொரிந்தியர் 16:9; 2 கொரிந்தியர் 2:12). "திறந்த வாசலுக்காக" அவர் வேண்டிக் கொள்ளச் சொன்னது வசனத்தைப் பிரசங்கிக்க ஏதுவான சந்தர்ப்பம் கிடைக்கும்படிக்கு வேண்டிக் கொள்ளச் சொன்னார் என்று பொருள். அது ஒரு வீட்டுச் சொந்தக்காரர் தனது வீட்டிற்குள் ஒரு பார்வையாளரை (விருந்தினரை) கதவைத் திறந்து வரவேற்பது போன்றது. யூதர்களும் புறஜாதிகளும்கூட அநேக இடங்களில் பவுல் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளச் சென்றபோது அவரது சுவிசேஷப் பயண நேரங்களில் கதவை அறைந்து சாத்தியிருக்கின்றனர் (நடபடிகள் 13:50; 14:5, 6; 17:10; 13; 1 தெசலோனிக்கேயர் 2:14-16). எப்படியிருப்பினும், அந்த ஜனங்கள் பவுலிடத்தில் வந்து காவலில் அவர் இருக்கையில் அவரிடம், "மிகுந்த தைரியத்துடன் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்ததைக் கேட்டார்கள்" (நடபடிகள் 28:30, 31). பவுல் பிலிப்பியர்களுக்கு எழுதியதாவது,

> சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன், அரண்மனையெங்குமுள்ளவர்களுக்கும் மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளியரங்கமாகி, சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன் கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள் (பிலிப்பியர் 1:12-14).

அவர் தன் அநுகூலமின்மையிலும் அநுகூலத்தைக் கண்டார். பவுல் தன்னை ஒரு சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாக எண்ணிக் கொண்டார் (எபேசியர் 6:19).

பவுலின் சிறை நிருபங்கள் உலகத்தில் ஒரு பலமான விளைவை ஏற்படுத்தியிருந்தன. அவர் எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், மற்றும் பிலேமோன் ஆகிய நிருபங்களை தனது முதல் முறை காவலின் போதும் 2 தீமோத்தேயு புத்தகத்தை இரண்டாவது முறை காவலில் வைக்கப்பட்டிருந்த போதும் எழுதினார், நூற்றாண்டுகளினூடே, பவுல் இந்த நிருபங்கள் வாயிலாக கிறிஸ்துவின் மார்க்கத்தை அறிவுறுத்தத் தொடர்ந்தார்.

அடுத்ததாக பவுல் **திருவசனத்தைக்** குறிப்பிட்டார் (*logos*). (இது வார்த்தை என்றும் பொருள்படும்.) ஒரு செய்தியை வெளிப்படுத்துவதற்கு வார்த்தை ஒரு வாகனம் போன்றது அதன் மூலமாகவே வெளிப்படுத்தப்படும், "வார்த்தை" தன்னகத்தே கொண்டுள்ள செய்தி அவிசுவாசிகளும் கேட்கத் தக்கதாக சென்றடையும். இழந்துபோனவர்களிடம் பேசத்தக்க ஒரு இடம் உண்டாயிருப்பதை பவுல் விரும்பினார். அவர் போவதற்கு சங்கிலிகள்

தடையாயிருந்தபடியால் அவருடைய செய்தியைக் கேட்பதற்கு ஜனங்கள் அவரிடத்தில் வர வேண்டியதாயிருந்தது.

தேவனுடைய வசனம் பின்வரும் கண்ணோட்டத்தில், முக்கியத்துவம் வாய்ந்தது:

- *அது ஜீவனைக் கொடுக்கிறதும் வல்லமையுள்ளதுமாகும் (யோவான் 6:63; எபிரெயர் 4:12).*
- *பாவத்திலிருந்து விடுதலையளிக்க அதுவே மூலக் காரணியானது (யோவான் 8:32).*
- *அது பரிசுத்தமாக்கப்பட ஏதுவான அடிப்படை (யோவான் 17:17).*
- *அது இரட்சிப்பைக் கொண்டு வருகிறது (நடபடிகள் 11:14)*
- *அது விசுவாசத்தின் மூலக்கரு (ரோமர் 10:17).*
- *அது ஆத்துமாவை சுத்திகரிக்கிறது (1 பேதுரு 1:22)*
- *அது புதிய பிறப்பைக்கொடுக்கிறது (1 பேதுரு 1:23).*

அவருடைய வசனத்தைக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிகிறவர்களே ஆசீர்வாதம் பெறுவார்கள். வசனம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், சரியாகக் கையாளப்பட வேண்டும், பிரசங்கிக்கப்பட வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 2:13; 2 தீமோத்தேயு 2:15; 4:2).

வசனத்தைப் பிரசங்கிக்க ஏதுவான வாசலை தேவன் மட்டுமே திறக்க முடியும், ஆனால் அவரது செய்தியாளர்கள் அதிலே பிரவேசித்து பிரசித்தப்படுத்த வேண்டும். தேவன் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்தார் (நடபடிகள் 14:27); ஆகிலும், பவுலும் பர்னபாவும் அவருடைய முகவர்களாக இருந்து இரட்சிப்பின் செய்தியை அதிலே பிரவேசித்துக் கூறினார்கள். பேசுவதற்கான சந்தர்ப்பம் என்பது பேசப்படும் செய்தி ஏற்றுக்கொள்ளப்படும் என்று பொருள் அல்ல, ஏனெனில் கேள்விப்படுகிறவர்கள் வசனத்தை ஏற்றுக் கொள்ள பொறுப்பைக் கொண்டிருக்கின்றனர் (நடபடிகள் 2:41; 11:1; யாக்கோபு 1:21). பவுல் தங்களுக்குப் பிரசங்கித்தவைகளை அநேகர் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள் (காண்க நடபடிகள் 13:46).

புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து கொள்ளுதல் (4:5, 6)

***5*புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். *6*அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.**

கிறிஸ்தவ வாழ்க்கை தேவனோடு கிடைக்கிற உறவுமுறையிலும் சபைக்குள் கிடைக்கப்பெறுகிற உறவுமுறையாலும் மாத்திரம் முக்கியத்துவம் பெற்றதல்ல, மாறாக உலகத்துக்கு முன்பாக வாழுகிற முன்மாதிரியினாலும் கூட இது

முக்கியத்துவம் வாய்ந்தது. புறம்பானவர்களிடம் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நான்கு வழிமுறைகளை பவுல் கொடுத்திருக்கிறார்.

"புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து" (4:5)

புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் **நடந்து** (*peripateite*) என்பதன் நேரடிப்பொருள் "நடந்து" முன்னிலையில் கண்டிப்பாகச் சொல்வது (4:5; மத்தேயு 4:18; 9:5; 1 யோவான் 1:6). *Peripateō* என்பது ஒருவருடைய நடத்தையையும் அவருடைய வாழ்க்கைமுறையையும், அல்லது செயல்களையும் கூட பொருள்படுத்தும் (மாற்கு 7:5; யோவான் 8:12; 11:9, 10; 12:35). இதன் வினைச் சொல் பவுல் எழுதியதற்கு அப்பால் ஒரு பொருளையுடையது, அது "அலைப்புண்டு திரிதலை" (எபிரெயர் 13:9) அல்லது "சுற்றித்திரிதலை" (1 பேதுரு 5:8) உட்படுத்தியது. *Peripateō* என்னும் வார்த்தையை பவுல் மாம்ச ரீதியிலான நடத்தையைக் குறிப்பிடப் பயன்படுத்தவில்லை, மாறாக ஒருவரின் ஒழுக்கத்தை உருவகப்படுத்தியே எழுதுகிறார் (கொலோசெயர் 1:10; 2:6; 3:7; 4:5).

புறம்பேயிருக்கிறவர்களுக்கு அல்லது அவிசுவாசிகளுக்கு முன்பாக **ஞானமாய்** [*sophia*] நடந்து கொள்வதன் விளைவுகளைக் குறித்து பவுல் அதிக விளக்கத்திற்குள் போகவில்லை. மற்ற நிருபங்களில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாகவோ அல்லது அவருடைய சரீரத்திற்குப் புறம்பாக இருக்கிறவர்களுக்குள்ளாகவோ அவர்களின் மனதைப் புண்படுத்தக் கூடாதவர்களாய் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை பவுல் விவாதித்தார் (ரோமர் 14:1-21; 1 கொரிந்தியர் 8:8-13; 9:19-23; 10:31-33). "புறம்பேயிருக்கிறவர்கள்" என்று பவுல் குறிப்பிடுவது நேரடிப் பொருளில் "புறம்பாக இருக்கிற (நபர்கள்)" கிறிஸ்துவின் சரீரத்திற்கு வெளியே இருப்பவர்கள் எனும் பொருளில் பேசுகிறார். கொலோசெயர்கள் மற்றவர்களோடு சம்பந்தப்பட்டிருக்கும்போது ஞானத்தை பிரயோகிக்க வேண்டும். அவர்கள் விசுவாசத்தோடே தேவனிடத்தில் கேட்பதன் மூலம் ஞானத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடும் (யாக்கோபு 1:5, 6), மேலும் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தைக் குறித்ததான அறிவினால் நிரப்பப்பட்டிருப்பதாலும் பெற்றுக் கொள்ளக் கூடும் (கொலோசெயர் 1:9).

சில ஜனங்கள் கிறிஸ்தவர்களிடம் சீற்றம் கொண்டு அன்பற்றவர்களாய் நடந்து கொண்டார்கள். "உதாரணமாக, (கிறிஸ்தவர்கள்) கண்ணிற்கு புலப்படுகிற தரிசனமான தேவனை தொழுது கொள்ளாததால், அவர்களை *நாத்திகர்கள்* என்றும், சக்ரவர்த்தியின் (இராயனின்) உருவத்துக்கு முன்பாக தூப வர்க்கம் இடாததால் *நாட்டுப்பற்றற்றவர்கள்* என்றும், அடிக்கடி பூட்டப்பட்ட அறைக்குள் கூடிவர வேண்டிய நிர்பந்தம் இருந்ததால், *ஒழுக்கமற்றவர்கள்* என்றும், அழைக்கப்பட்டார்கள்."[7]

பவுல் கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, "நீங்களும் யூதருக்கும் கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 10:33). அவர்களுடைய வாழ்க்கை மிக ஜாக்கிரதையான ஒழுங்குமுறைகளையும் ஒழுக்கரீதியிலான அழகையும் கொண்டிருப்பதும் அவசியமானதாயிருந்தது. அவர்கள் "கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடமற்றவர்களும்,

தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்க வேண்டியதிருந்தது” (பிலிப்பியர் 2:15). அவர்கள் இருள் நிறைந்த உலகிற்கு இயேசுவை தங்கள் மூலம் பிரகாசிக்கச் செய்வதன் மூலம் அவர்களே வெளிச்சமாயிருக்கக் கூடும் (மத்தேயு 5:14-16).

“காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்” (4:5)

நடத்தையைக் குறித்து வலியுறுத்தும் பொருட்டு அதை விளக்கும்படி பவுல் சந்தை வெளியில் பயன்படுத்தும் ஒரு வார்த்தையை இரவல் வாங்கினார், பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் (*exagorazomenoi*) என்பது எபேசியர் 5:16லும் இதே பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது, இதன் நேரடிப் பொருளில் “வாங்கும்படி,” அல்லது கிடைக்கப் பெறுகிற எல்லாவற்றையும் ஒரு குறிப்பிட்ட உற்பத்திப் பொருளை வாங்குவது. இந்த வார்த்தைக்கு மற்றொரு பொருள் “மீட்கப்படுதல்” (கலாத்தியர் 3:13; 4:5).

காலத்தைப் **பிரயோஜனப்படுத்துதல்** (*kairos*), அல்லது “நேரம்,” என்பதில் சரியான ஒரு நேரத்தை குறிப்பிட்டுச் சொல்லுவதில்லை (கலாத்தியர் 6:9, 10; 1 பேதுரு 5:6), ஆகிலும் அது ஒரு காலக்கட்டத்தைக் குறிப்பதாகும் (1 கொரிந்தியர் 7:5, 29; 2 தீமோத்தேயு 4:3; 1 பேதுரு 1:5). *Kairos* என்பது “காலங்கள்” (நடபடிகள் 14:17; கலாத்தியர் 4:10) மற்றும் “வேளைகள்” (நடபடிகள் 1:7; 1 தெசலோனிக்கேயர் 5:1), என்றும் மொழிபெயர்க்கப்படலாம், அது சிலவேளைகளில் “காலம்” அல்லது “காலங்கள்” என்று வழக்கமாக காணப்படுகிறது.

ஒரு நேரடி மொழிபெயர்ப்பு என்னவெனில், “எல்லா காலங்களையும் தொடர்ந்து வாங்குதல்.” மற்றொரு பொருள் “உங்களுக்குள்ள சந்தர்ப்பகாலத்தை அநுகூலப்படுத்திக் கொள்ளுதல்” அல்லது “முழுமையாய் உங்கள் நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளுதல்” என்பன. கிறிஸ்தவர்கள் சும்மாயிருக்கக் கூடாது. மாறாக ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் இயேசுவின் சேவைக்கென பெரும்பாலும் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தடைகள் உண்டாயிருக்கும் நேரங்களில் கூட கொலோசெயர்களை இயேசுவுக்கு சேவை செய்யும்படி பவுல் எதிர்பார்த்தார். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏதோ ஒரு கஷ்டம் இருக்கத்தான் செய்யும், ஆனால் ஒவ்வொரு கஷ்ட நேரத்திலும் ஒரு சந்தர்ப்பமும் கிடைக்கும். சோர்வடைந்த மனதையுடையோரும் செயல்படுவதில் ஒரு மங்கின சூழலைக் காண்போரும் தங்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களையெல்லாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இயேசு எப்போதும் நேரத்தை பயன்படுத்தும் சிந்தையைக் கொண்டிருந்தார். அவர் தமது சீஷர்களிடம், “பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது,” என்று சொன்னர் (யோவான் 9:4). அவர் எதையும் செய்வதில் அவசரம் காட்டவில்லையென காணப்பட்டாலும், அவர் எப்போதும் பயனுள்ள காரியங்களைச் செயலாற்றுவதில் மும்முரமாக இருந்தார். காலத்தை ஒருபோதும் அவர் வீணாகக் கழித்ததில்லை.

“அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு” (4:6)

*பவுல் கவனமான கிறிஸ்தவ தொடர்புகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். கொலோசெயர்கள் தங்கள் பேச்சுக்களில் சரியான நேரத்தையும், கூட்டத்திற்குத் தகுதியான, சரியான செய்தியைக் கொடுத்தல், கேட்கிறவர்களுக்குள் ஒரு சரியான விளைவை ஏற்படுத்துதல், பேசும் போது விசுவாசத்தோடு கூடிய சத்தியத்தைப் போதித்தல் ஆகியவற்றை மனதில் கொள்ள வேண்டியதிருந்தது. அவர்களுடைய குறிக்கோள்களெல்லாம் சரியான வார்த்தைகளை சரியான நேரத்தில் சரியான ஜனங்களுக்கு சரியான போதனையாகக் கொடுக்க வேண்டும் என்பதாயிருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு சுவிசேஷகனல்ல என்ற போதிலும், ஒவ்வொருவரும் ஒரு அர்த்தமுள்ள அமைதிநிறைந்த வழியில் ஒவ்வொரு நிகழ்வுக்கும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். பேதுரு “கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்” என்று எழுதினார் (1 பேதுரு 3:15). திறமையான சம்பாஷனைகளை மற்றவர்களுடன் செயல்படுத்தும்போது அடுத்தவர்களின் உணர்வுகளையும் விருப்பங்களையும் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும், **அறியும்படிக்கு** என்று குறிப்பிட்டதால், நன்கு அறியப்பட்டவார்த்தையாகிய ginōskō, என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை, இவ்வார்த்தையின் பொருள் “ஏதோ ஒன்றின் வாயிலாக தகவல்களை பெற்றுக்கொள்ளுதல்”;[8] மாறாக, eidenai (oida, என்ற வார்த்தையிலிருந்து), என்ற வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார், அதன் பொருள் “அனுபவத்தின் மூலம் அறிந்து கொள்ளுதல்.” கொலோசெயர்கள் கிருபையாகப் பேசும்படி பயிற்சி செய்திருந்தபடியால் ஏற்றுக் கொள்ளப்படும்படி **அவனவனுக்கு உத்தரவு சொல்ல ஏதுவாக** கற்றுக் கொள்ள வேண்டியவர்களாயிருந்தனர்.*

“உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக” (4:6)

*அடுத்ததாக, பவுல் **பேச்சுக் குறித்த** காரியத்தைப் பேசினார். Logos, என்பது பெரும்பாலும் “வார்த்தை” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, கொலோசெயரில் இது வேறு பகுதிகளிலும் கொடுக்கப்பட்டுள்ளது (1:5, 25; 3:16, 17; 4:3). பவுல் இங்கே சுவிசேஷ செய்தியைக் குறிப்பிடவில்லை. மாறாக, தொடர்பை ஏற்படுத்தும் செய்தியை எடுத்துச் செல்லும் வார்த்தையாகிய வாகனத்தை அர்த்தப்படுத்தினார். தேவனுடைய செய்திதொடர்புக்கு சரியான வார்த்தைகள் தேவை.*

*கிறிஸ்தவர்களின் வார்த்தைகள் **கிருபை பொருந்தினவைகளாய்** (en chariti). பேசப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டார். Charis எனும் வார்த்தை “நன்றியறிதல்” என பொருள்பட்டாலும் (காண்க 3:16), பவுல் அநேகமாக பேசும் ஷரத்தும் பேசும் விதத்தையுமே மனதிற்கொண்டு பேசியிருக்கக் கூடும். சுவையாகவும் கிருபையினால் நிறைந்ததுமான வார்த்தைகளைப் பேசும்படியும், அவை மிகப்பொருத்தமாக சந்தோஷத்தையளிக்கத்தக்க*

வகையில் அமையும்படியும் பேசும்படி கேட்டுக்கொண்டார். அவர்களது வார்த்தைகளின் சாரம்ஸம் சத்தியமாக இருக்கத்தக்கதாக, பேசும்விதம் யாரையும் புண்படுத்தாத தொனியாக இருக்கும்படியும் கேட்டுக் கொண்டார். கேட்பவர்களின் இருதயத்திற்குப் பேசுவதாக தங்கள் இருதயத்திலிருந்து வருகிற ஏற்புடைய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும். பவுல் எபேசியர்களுக்கு "அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு" என்று அறிவுறுத்தியபோது. இதைத் தமது மனதில் கொண்டிருக்கவேண்டும் (எபேசியர் 4:15).

கேட்கிறவர்களை வருத்தமடையச் செய்யாத முறையில் கொலோசெயர்கள் பேசவேண்டியவர்களாயிருந்தனர். செய்தியினால் சிலர் ஒரு வேளை புண்படுத்தப்படலாம், ஆனால் செய்திகொடுப்பவர் தெரிவு செய்யும் வார்த்தையினால் எவரும் புண்படுத்தப்பட்டு விடக் கூடாது. இந்த சகோதரர்கள், இன்றுள்ள கிறிஸ்தவர்களைப் போல, கடினமான வார்த்தைகள், அசுத்த வார்த்தைகள், கெட்ட வார்த்தைகள், ஆகியவை இல்லாதவார்த்தைகளைப் பேச வேண்டியவர்களாயிருந்தார்கள். அசுத்த வார்த்தைகளுக்குப் பதிலாக, சுத்தமான வார்த்தைகளை அவர்கள் பேச வேண்டியவர்கள், அதினால் அதைக் கேட்பவர்கள் பக்திவிருத்தியடைவார்கள்.

கொலோசெயரின் பேச்சு **உப்பினால்** [*halas*] **சாரமேற்றப்பட்டது போல** [*artuō*] சுவையாகவும், திறமையாகவும் கவர்ச்சிகரமாகவும், ஏற்புடைய ருசியோடும் இருக்க வேண்டுமென்று பவுல் எதிர்பார்த்தார். அவர்கள் கடினமான, உணர்ச்சியற்ற, அல்லது அன்பற்ற பேச்சைப் பேசக் கூடாதவர்களாயிருந்தார்கள். ஒரு சாப்பாட்டிற்கு உப்பு ருசியைக் கொடுப்பதுபோல, கொலோசெயர்கள் சுவையான நறுமணமூட்டும் செயலை அவர்களுடைய பேச்சில் சேர்க்க வேண்டியவர்கள், அதினால் கேட்பவர்களுக்கு அது பிரியமுண்டாகச் செய்யும். H. C. G. Moule பவுலின் விளக்கச் சொற்றொடரை உள்நோக்கிப் பார்க்கச் செய்கிறார், இதில் அவர் உப்பானது பாதுகாக்கும் தன்மையுடையதால் கெட்டுப்போகாமலும் தூய்மையற்றுப்போகாமலும் இருக்கச் செய்கிறது என்றார். "கெட்ட வார்த்தை ஒன்றும் ['தூய்மையற்ற வார்த்தை'; KJV; NKJV] உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்கு பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" என்று பவுல் எழுதினார் (எபேசியர் 4:29). அவர்களுடைய பேச்சிலே தெளிக்கப்படும் "உப்பு" அவர்களுடைய கிருபையுள்ள வார்த்தைகளிலிருக்கும் அசுத்தங்களையும் தூய்மையற்ற வார்த்தைகளையும் அழித்து அதே வேளையில் மகிழ்ச்சிகரமான "இரட்சகரின்" ஆரோக்கியமான போஷாக்கு மிகுந்த "சிந்தனைக்கான உணவை" மேம்படுத்தும்.[9]

பயன்பாடு

இறுதி வியாக்கியானம் (4:2-6)

தனது நிருபத்தை முடிக்குந்தருவாயில், பவுல் இறுதி வடிவமாக கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் உள்ள முக்கியத்துவத்தை தனது பட்டியலில் சேர்க்கிறார். நாம் (1) விழித்திருந்து ஜெபிக்க வேண்டும், (2) சுவிசேஷ

ஊழியத்தை செய்வோரையும் ஜெபத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும், (3) கிறிஸ்தவர்களல்லாதவர்களிடம் முறையாக நடந்து கொள்ள வேண்டும், மற்றும் (4) எப்பொழுதும் பிரயோஜனமான வார்த்தைகளையே பயன்படுத்த வேண்டும்.

ஒப்புக்கொடுக்கப்பட்ட ஜெபத்தில் விழித்திருங்கள். நாம் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, பவுல் தன்னுடைய எல்லா நிருபங்களிலும் எழுதியது போல செயல்பட வேண்டும். இந்த குறுகிய நிருபத்தில் அவர் ஐந்துமுறை, ஆரம்பத்திலும் முடிவிலுமாக, ஜெபத்தைக் குறித்து பேசியிருக்கிறார் (1:3, 9; 4:2, 3, 12).

நமது திட்டமிடுதலில் அநேக முக்கியத்துவமற்ற செயல்பாடுகள் இடம் பெற்று நாம் ஜெபிக்க இயலாதவாறு செய்கிறது. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஜனங்களுடைய வாழ்க்கை இன்றைக்குள்ள ஜனங்களின் அமைதி குறைவான வாழ்க்கையைப் போல அநேக பலதரப்பட்ட குழப்பங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. ஒருவகையில் இந்த ஆதிக்கிறிஸ்தவர்களுக்கு ஜெபிப்பதற்கென அதிகமான நேரம் இருந்திருக்க வேண்டும், ஆகிலும் அவர்கள் ஜெபிக்கும்படி தங்களை ஒப்புக் கொடுக்க ஊக்கமளிக்க வேண்டியிருந்தது.

ஒப்புக்கொடுத்தல் எனும் போது நமது நேரத்தையும் குறிப்பிடப்பட்ட காரியங்களுக்காக அல்லது செயல்பாட்டிற்காக பிரயாசப்படுவதும் என்று பொருள். நாம் நம்மை விளையாட்டு குழுவுக்காக, தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக, பொழுது போக்குச் செயல்களுக்காக நாம் ஒப்புக் கொடுக்க முடிகிறது. இந்தக் காரியங்களில் நமது நாளை நாம் கழித்தபின், அதனால் மிக அற்பமான சாதனையையே பெறுகிறோம்.

நம்மிலே அநேகருடைய பிரச்சனை என்னவெனில் நாம் ஜெபிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை அடக்கி வைக்கிறோம், அதினால் நமது கவனம் திருப்பப்பட்டு தேவனோடு நமக்குள்ள தொடர்பு தடுக்கப்படும்படி அனுமதிக்கிறோம். இந்தத் தடைகள் ஒருவேளை பிசாசினிடத்திலிருந்து வந்து தேவனோடு நாம் கொண்டிருக்க வேண்டிய விலையேறப் பெற்ற நேரத்தை தவிர்க்கிறதாக இருக்கக்கூடும். நமது ஜெபிக்கும் சந்தர்ப்பங்களை கொள்ளையாடுகிற அந்தக் காரியங்கள் இடைஞ்சலானவைகளாதலால் அவைகளை ஒதுக்கித் தள்ளி விட வேண்டும் (எபிரெயர் 12:1).

சாத்தான் நமக்குத்தடைகளை ஏற்படுத்துவதால் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் (1 பேதுரு 5:8). அவனுடைய சோதனைகளுக்கு நம்மிலே யாருமே விதிவிலக்கல்ல, அவன் இயேசுவை சோதித்தான் (மத்தேயு 4:1) பேதுருவை சுளகிலே போட்டு புடைக்கத் தேடினான் (லூக்கா 22:31). தோட்டத்திலே இயேசு பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவானிடம் "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் ..." (மத்தேயு 26:41), என்றார்.

சுவிசேஷ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள். பவுல் தனக்காக ஜெபிக்கச் சொன்னார். அவர் கேட்காத காரியம் அவர் வேண்டிக் கொண்டதைப் போல முக்கியத்துவம் வாய்ந்தது. அவர் தனது கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகளிடத்தில் தான் பணத்தை சம்பாதிக்க வேண்டுமென்றோ, ஏற்கும் இருதயங்களுக்காகவோ, அநேகர் (திருமறையை) ஏற்றுக் கொள்ளும்படியாகவோ, அநேகர் மனம்மாறவேண்டுமென்றோ,

சுலபமான ஒரு திட்டமிடல் தேவையென்றோ, கஷ்டங்களிலிருந்து விடுதலை வேண்டுமென்றோ ஐஸ்வரியமும் பிரசித்தியும் பெற்றவர்கள் கீழ்ப்படிய வேண்டுமென்றோ பெரிதும் கௌரவமும் மிக்க உள்ளூர் சபைகள் இருக்க வேண்டுமென்றோ அல்லது வேறு எந்த சரீரப் பிரகாரமான வசதிகளுக்காகவோ ஜெபிக்கச் சொல்லவில்லை. அவர் கொலோசெயர்களை வசனத்திற்கான வாசல் திறக்கும்படி, கிறிஸ்துவின் இரகசியத்தை பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை அளிக்கும்படி, தெளிவாக தைரியமாய் பேச ஏதுவாகும்படி ஜெபிக்கச் சொன்னார். நாம் சுவிசேஷ ஊழியஞ்செய்வோருக்காக ஜெபிக்கும்போது அவரது வேண்டுகோள்கள் நமக்கு ஒரு முன்னுதாரணமாயிருக்கக்கூடும்.

"திறந்த வாசல்" என்று பவுல் குறிப்பிடுவதன் பொருள் வசனத்தைப் பிரசங்கிக்க ஒரு சந்தர்ப்பம் என்பது தான். பவுல் தனது முதல் சுவிசேஷப் பயணத்தை நிறைவு செய்து திரும்பிய போது, "தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையும் அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவுகளைத் திறந்ததையும் அறிவித்தார்" (நடபடிகள் 14:27). அவர் இதே உருவகத்தைப் பயன்படுத்தி கொரிந்தியர்களுக்கு எழுதினார். தான் எபேசுவில் இருக்கையில் ஒரு "கதவு" திறக்கப்பட்டதையும் (1 கொரிந்தியர் 16:9), துரோவாவில் ஒரு கதவு திறக்கப்பட்டதையும் (2 கொரிந்தியர் 2:12) குறிப்பிட்டார்.

அவருடைய சுவிசேஷப் பயணத்தின் போது, பெரும்பாலும் கதவுகள் (வாசல்கள்) அடைக்கப்பட்டன, எனவே குறிப்பிட்ட பகுதியில் வசனத்தை பவுல் பிரசங்கிக்க முடியாமல் போயிற்று என்று சொல்லலாம் (நடபடிகள் 13:50; 17:5-10, 13). அவர் யூதர்களைக் குறிப்பிட்டு "புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் அவர்களோடே பேசாதபடிக்குத் தடை பண்ணுகிறார்கள்" என்றார் (1 தெசலோனிக்கேயர் 2:16). இந்தப்படியாக பவுல் தான் தடைபண்ணப்பட விரும்பவில்லை என்றார், மாறாக சுதந்திரமாக வசனத்தைப் பிரசங்கிக்கவே விரும்பினார்.

கிறிஸ்தவர்களல்லாதோரிடம் முறையான நடக்கையைக் கொண்டிருங்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கையை வாழ்வதிலிருந்து நமக்கு மிகப் பெரிய பலம் கிடைக்கிறது. நாம் பூமிக்கு உப்பாக இருக்கிறோம் (மத்தேயு 5:13), மலையின்மேல் இருக்கிற பட்டணம் போல், உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறோம் (மத்தேயு 5:14), நம்மைச் சுற்றிலுமிருக்கிறவர்களால் வாசிக்கப்படும் நிருபம் நாம் (2 கொரிந்தியர் 3:2). நமது ஜீவியத்தாலும் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பினாலும், எல்லாருக்கும் முன்பாக நாம் இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் எனக் காட்ட முடியும்.

நமது பேச்சைக் கேட்பவர்கள் அதினால் பயனடைகிறார்கள் என்பதை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள். உப்பு உணவுக்கு சுவை சேர்ப்பது போல, நாம் எப்படிச் சொல்லுகிறோம் என்ன சொல்லுகிறோம் என்பது முக்கியமானது. நாம் அன்பினால் சத்தியத்தைக் கைக் கொண்டு பேச வேண்டும் (எபேசியர் 4:15, 25) மற்றும் சாலொமோனின் ஆலோசனைக்கு செவிசாய்க்க வேண்டும்: "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்" (நீதிமொழிகள் 15:1).

நாம் எதை விசுவாசிக்கிறோம் என்பதைக் குறித்துக் கேட்போருக்கு நாம் பதிலளிக்க ஆயத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். நமது பதில்கள்

"சாந்தத்தோடும் வணக்கத்தோடும்" இருக்க வேண்டும் *(1 பேதுரு 3:15).* பவுல் எபேசியர்களுக்கு, *"கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்"* என்று எழுதினார் *(எபேசியர் 4:29).*

கிறிஸ்தவர்களாகிய நாம் ஜெபத்திலே நமது கவனத்தைத் திருப்பவும் கிறிஸ்து விரும்புகிற வாழ்க்கையை நாம் வாழவும் வேண்டும்.

வெளிச்சத்தைப் போல வாழுங்கள் (4:5, 6)

கிறிஸ்தவர்கள் இழந்துபோனவர்களோடு ஞானமாய் செயல்பட வேண்டும் (வசனம் 5). இருள் நிறைந்த உலகத்தில் நாம் வெளிச்சம் கொடுக்கிறவர்களாயிருக்க வேண்டும் *(பிலிப்பியர் 2:14-16).* இழந்து போனவர்கள் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையைக் கவனித்துப்பார்த்து, இயேசுவின் வழிகளை அறிந்து கொள்ளக்கூடும்: நமது காரியங்களில் (வியாபாரங்களில்) நியாயமாய் நடந்து, அன்பற்றவர்களுக்கு முன்பாக கிருபையைக் காட்டி, தேவையுடையோருக்கு உதவிகரமாயிருந்து, பேச்சிலே கவனத்தையும், இருதயத்திலே சுத்தத்தையும், நாம் செய்கிற எல்லாவற்றிலும் கிறிஸ்துவுக்கு ஒப்பாக செயல்படவும் வேண்டும் *(காண்க மத்தேயு 5:13-16).*

கிறிஸ்தவர்கள் கிடைக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் (வசனம் 5). மற்றவர்களின் நலன் கருதி வரும் சந்தர்ப்பங்களை மேலோட்டமாக நழுவ விட்டு விடக் கூடாது என்பதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, நாம் கிறிஸ்துவை இழந்தவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ள ஏதுவான வழிகளையும் கண்டு பிடிக்க வகை தேட வேண்டும். பவுல் எல்லாரும் கிறிஸ்துவிடம் வந்தடையத்தக்க சந்தர்ப்பங்களைத் பவுல் தேடினார் *(ரோமர் 1:13-15; 1 கொரிந்தியர் 9:19-23; 10:33).* யூதர்கள் அவரை கொலை செய்ய தேடினபோதும், அவர் சிதைக்கப்பட்டு இரத்தம் ஒழுக ஒழுக, அவர்களிடம் பேசி கிறிஸ்துவுக்காக அவர்களை ஆதாயப்படுத்த ஏதுவாக பேச அனுமதி கேட்டார் *(நடபடிகள் 21:31, 36, 39).*

கிறிஸ்தவர்கள் மற்றவர்களுக்கு பதில் அளிக்கும்போது கிருபை நிறைந்த பேச்சுக்களைப் பயன்படுத்த வேண்டும் (4:6). ஒருவருடைய பேச்சு அவருடைய இருதயத்தில் இருப்பதைக் காட்டிக் கொடுக்கும், அவரது மனதின் எண்ணங்களையும் வெளிப்படுத்தும் *(மத்தேயு 12:34; 15:18, 19).* சரியான வார்த்தைகளையே பேச கிறிஸ்தவர்கள் மேலான காரியங்களையே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும் *(பிலிப்பியர் 4:8).* நற்சுவை மிக்க ஞானமான காரியங்களை நாம் பேசுகிறவர்கள் என்று அறியப்பட்டிருக்க வேண்டும், நம்முடைய பேச்சு கேட்பவர்களை கவரக்கூடியவைகளாக இருக்க வேண்டும், ஏனெனில் நமது பேச்சுக்களெல்லாம் அன்பு நிறைந்த இருதயத்திலிருந்து வருபவை *(எபேசியர் 4:15).*

குறிப்புகள்

[1]*ரோமர் 12:12; எபேசியர் 6:18; பிலிப்பியர் 4:6; கொலோசெயர் 4:2;*

1 தெசலோனிக்கேயர் 5:17. [2]*ரோமர் 15:30-32; 2 கொரிந்தியர் 1:11; எபேசியர் 6:19; கொலோசெயர் 4:3; 1 தெசலோனிக்கேயர் 5:25; 2 தெசலோனிக்கேயர் 3:1, 2; பிலேமோன் 22.* [3]*மேலும் காண்க வெளிப்படுத்தின விசேஷம் 3: 2, 3; 16:15.* [4]*காண்க 2 கொரிந்தியர் 1:11; எபேசியர் 1:16; பிலிப்பியர் 1:3; 4:6; 1 தெசலோனிக்கேயர் 1:2; 5:17, 18; பிலேமோன் 4.* [5]*இதே வார்த்தை அமைப்பு மத்தேயு 12:29; 13:30; 14:3; 16:19; 18:18; 21:2; 22:13; 27:2; நடபடிகள் 9:2, 14, 21; 12:6; 20:22; 21:11, 13, 33; 22:5, 29; 24:7 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது.* [6]Peter T. O'Brien, *Colossians, Philemon*, Word Biblical Commentary, vol. 44 (Waco, Tex.: Word Books, 1982), 240. [7]William Hendriksen, *Exposition of Colossians and Philemon*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1964), 182. [8]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 200. [9]H. C. G. Moule, *The Epistles to the Colossians and to Philemon*, The Cambridge Bible for Schools and Colleges (Cambridge: University Press, 1893; reprint, 1902), 136.

16

அறிவுரைகளும் பாராட்டுகளும்

(4:7–9)

பவுல் சபைகளுக்கு எழுதின நிருபங்களில், அவர் தனது நிறைவு உபதேசங்களையும் சில வேளைகளில் தனது உடன் வேலைக்காரர்களின் (ஊழியர்களின்) வாழ்த்துக்களையும் கொடுத்து நிருபத்தை முடிப்பார், கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் மாத்திரம் அதிகமான தனிப்பட்டக் குறிப்புகளையும் விமர்சனங்களையும் தன்னோடு இருப்பவர்களைக் குறித்து வழக்கத்துக்கு மாறான முறையில் எழுதுகிறார். இந்த நிருபத்தைக் கொண்டு போனவர்களும், அவருடைய தனிப்பட்ட செய்தியாளர்களுமாயிருந்த தீகிக்கு மற்றும் ஒநேசிமுவைப் பெயர் குறிப்பிட்டு பாராட்டினார் (வசனங்கள் 7-9). பிறகு அவர் தன்னோடிருக்கும் ஆறுபேர்களை வரிசைப்படுத்தி கொலோசெ சகோதரர்களுக்கு வாழ்த்துக்களைச் சொல்வதாகக் குறிப்பிடுகிறார் (வசனங்கள் 10-14). லவோதிக்கேயா சபைக்கு வாழ்த்துக்களைச் சொல்லுகிறார், அத்துடன் நிம்பாவையும் அவளுடைய வீட்டிலே கூடிவருகிற சபையையும், அர்க்கிப்புவுக்கு அறிவுரைகளையும் கூறுகிறார் (வசனங்கள் 14-17). பவுல் தனிப்பட்ட ரீதியிலான வாழ்த்துக்களுடன் கொலோசெ நிருபத்தை நிறைவு செய்கிறார் (வசனம் 18).

பவுல் தன்னையும் தன்னோடிருப்பவர்களையும் உயர்வான தலைவர்களாகவோ அல்லது மதிப்புமிகு மற்றும் கனம் பொருந்திய உயர்அதிகாரிகளாகவோ ஸ்தானத்தில் மற்ற கிறிஸ்தவர்களைக் காட்டிலும் மேலான புனிதம் நிறைந்தவர்களாவோ விவரித்துக் கொள்ள வில்லை, மனுஷர்களை உயர்த்துவது குறித்து இயேசு எதிர்த்துப் பேசினார் (மத்தேயு 23:6-12). தமது சீஷர்களில் பெரியவனாயிருக்க விரும்புகிற எவனும் மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்யக் கடவர்கள் என்று சொன்னார். தன்னோடு பிரயாசப்பட்டவர்களை உண்மையுள்ள ஊழியக்காரர்களாக, உடன் வேலைக்காரர்களாக, அடிமைகளாக பவுல் விளக்கப்படுத்தினார் (1:7; 4:7, 12), இது தன்னோடு ஊழியஞ்செய்து கொண்டிருந்தவர்களைக் குறித்தும் தன்னைக் குறித்தும் பவுல் கொண்டிருந்த எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. இந்த ஊழியர்களோடு தன்னை பவுல் குறிப்பிட்டு "உடன்" வேலையாள் என்று குறிப்பிட்டு; தனது பெயருடன் அவர் எந்த ஒரு பட்டத்தையும் விசேஷம ாக சேர்த்துக் கொள்ள வில்லை, அல்லது தான் அவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர் என்பதாகக் காட்டிக்கொள்ள வில்லை.

தீகிக்குவுடன் சம்பந்தப்படுத்தி (4:7, 8)

[7]பிரியமான சகோதரனும், உண்மையுள்ள ஊழியக்காரனும், கர்த்தருக்குள் எனக்கு உடன் வேலையாளுமாயிருக்கிற தீகிக்கு என்பவன் என்

செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பான். [8]உங்கள் செய்திகளை அறியவும், உங்கள் இருதயங்களைத் தேற்றவும், [9]அவனையும் உங்களில் ஒருவனாயிருக்கிற உண்மையும் பிரியமுமுள்ள சகோதரனாகிய ஒநேசிமு என்பவனையும் உங்களிடத்தில் அனுப்பியிருக்கிறேன்; அவர்கள் இவ்விடத்துச் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பார்கள்.

"பிரியமான சகோதரனும், உண்மையுள்ள ஊழியக்காரனும் கர்த்தருக்குள் எனக்கு உடன்வேலையாளுமாயிருக்கிற தீகிக்கு என்பவன் என் செய்தி களையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பான்" (4:7)

*பவுலின் நிருபத்தை கொலோசெயர்களிடம் பட்டுவாடா செய்ய இரண்டு முகவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர் - ஒரு சுயாதீனன் **தீகிக்கு,** மற்றும் ஒரு அடிமை ஒநேசிமு. தனிமையாய் ஒருவன் பயணம் பண்ணுவதைக் காட்டிலும் இரண்டுபேர் செல்லும் போது பெரிதான பாதுகாப்பை பெற்றிருப்பார்கள், மேலும் இரண்டு பேரும் சேர்ந்து பவுலின் செய்திகளை இன்னும் முழுமையாக கொடுப்பதற்கு வாய்ப்பாயிருந்திருக்கக் கூடும். அவருக்கும் அவர்களுக்கும் இடையே இருந்த பரஸ்பர அன்பு பவுலைப் பற்றிய செய்தியைக் கொண்டு செல்ல இவர்களை நல்ல தூதுவர்களாக்கியது.*

தீகிக்கு என்றால் "சந்தர்ப்பம்" அல்லது "வாய்ப்பு" என்று பொருள், அவன் ஆசியா முனையைச் சேர்ந்தவனும் சிறிதளவே அறியப்பட்ட பவுலின் கூட்டாளியுமாயிருந்தான். நடபடிகள் 20:4ல் இவனைக் குறித்து லூக்கா முதலாவதாகக் குறிப்பிடுகிறார், ஆனாலும் எங்கே எப்பொழுது பவுலுடன் சேர்ந்து கொண்டார் என்று வெளிப்படுத்தவில்லை. பவுல் தனது மூன்றாவது சுவிசேஷப் பயணத்தை நிறைவு செய்து மக்கதொனியா வழியாக திரும்பிக் கொண்டிருக்கும்போது அவன் பவுலுடன் இருந்ததாகத் தெரிகிறது, ஆசியா முனையிலிருந்த துரோவாவுக்கு Sopater, Aristarchus, Secundus, Gaius, *மற்றும்* Timothy *ஆகியோருடன் பவுலுக்கு முன்னே பயணம் பண்ணிப்போனான். மக்கதோனியா வழியாக பயணம் பண்ணின பின்பு தனது மூன்றாவது சுவிசேஷப் பயணத்தில் நிறைவில், வரவிருந்த பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் எருசலேம் போய்ச் சேரவும் (நடபடிகள் 20:16), தீகிக்குவையும் மற்றவர்களையும் பவுல் எருசலேமிலிருக்கிற சபைக்கு வெகுமதிகளைக் கொடுக்கும்படி கூட்டிக் கொண்டுபோனார், எருசலேமிலிருந்த சபையில் தேவையுடையோருக்காக அவர் (பவுல்) சேகரித்த நிதிகளை தீத்துவுடன் கொண்டுபோன உயர்ந்த மதிப்புடைய சகோதரனாக அவன் (தீகிக்கு) கருதப்பட்டான் (காண்க நடபடிகள் 24:17; 1 கொரிந்தியர் 16:3; 2 கொரிந்தியர் 8:16-19).*

தனது முதல் காவலின்போது ரோமாபுரியில் இந்த நிருபத்தை எழுதுகையில், தீகிக்கு உடனிருந்தான் (எபேசியர் 6:21). மேலும் அவருடைய இரண்டாவது காவலின்போதும் அவன் அவருடன் இருந்தான் (2 தீமோத்தேயு 4:12; தீத்து 3:12). பவுலுடன் இருக்கும்படிக்கு எப்படி அல்லது எப்பொழுது தீகிக்கு ரோமாபுரிக்குப் போனான் என்று லூக்கா சொல்லவில்லை.

*தீகிக்குவுக்கு பவுலிடத்தில் உயர்ந்த மதிப்பு இருந்தது, அவர் அவனைக் குறித்து **பிரியமான சகோதரன், உண்மையுள்ள ஊழியக்காரன் மற்றும் உடன் வேலையாள்** என்று சொன்னார், "மேலும் பிரியமான சகோதரன்*

உண்மையுள்ள ஊழியக்காரன்" என்று (எபேசியர் நிருபத்திலும்) எழுதினார் (எபேசியர் 6:21). பவுல் தனது சகக் கிறிஸ்தவர்களை "சகோதரர்கள்" அல்லது "சகோதர சகோதரிகள்" என்று அடிக்கடி குறிப்பிடுவது உண்டு (1:1, 2; 4:7, 9, 15; 1:1ல் விவாதிக்கப்படும் கருத்தைக் காண்க).

இந்த நிருபத்தில் பவுல் தீகிக்குவை பிரியமான சகோதரன் என்று குறிப்பிட்டார் (4:7); மேலும் வேறு நான்கு பேரை அப்படிக் குறிப்பிட்டார் - எப்பாபிராதீத்து (1:7), ஒநேசிமு (4:9), மேலும் லூக்கா (4:14); மற்றும் இயேசுவுக்கு இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார் (1:13). சில வேளைகளில் கிறிஸ்தவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் குறிப்பிட்ட சிலரிடத்தில் அதிகமான பிரியத்தையும் ஆழமான அன்பையும் காட்டுவது சரிதானா என்று கேள்வி எழுப்பப்படுவதுண்டு. பவுலும் அதே போல நமது கர்த்தரும் அப்படிச் செய்துள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. (இது அவர் அப்போஸ்தலனாகிய யோவானிடத்தில் காட்டின அன்பில் காணப்படுகிறது; யோவான் 20:2; 21:7, 20.)

தீகிக்குவை மட்டுமே பவுல் ஒரு "உண்மையுள்ள ஊழியக்காரன்" *(pistos diakonos)* என்றும் "faithful minister" (NIV) என்றும் அழைத்தார். "உண்மையுள்ள" என்பது "நம்பிக்கைக்குரிய" அல்லது "ஒப்புக்கொடுத்த" என்று பொருள்.

ஒரு விசுவாசமுள்ள செய்தியாளனாக, தீகிக்கு எபேசுவிலே கொண்டுபோய் பவுலின் நிருபத்தைக் கொடுக்க ஏதுவான நம்பிக்கையைப் பெற்றிருந்தான் (எபேசியர் 6:21). அன்று பவுலுக்கு இப்போதிருக்கிற அஞ்சலகசேவை வசதி இருக்க வில்லை, எனவே அவர் நம்பிக்கைக்குரிய தனி நபர் தனது நிருபத்தைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய நிலையில் இருந்தார். சில காலத்துக்குப் பின்னர் பவுல் தீமோத்தேயுவின் இடத்தில் ஊழியம் செய்ய அல்லது அவனுக்கு சற்று விடுப்பு அளிக்கக்தக்கதாக தீகிக்குவை எபேசுவுக்கு அனுப்பினார் (2 தீமோத்தேயு 4:12). மேலும் அவனோ அல்லது அர்தெமாவோ கிரேத்தாத் தீவில் தீத்துவுக்குப் பதிலாக ஊழியம் செய்ய அனுப்ப பவுல் திட்டமிட்டார், இதினால் தீத்து நிக்கோப்போலிக்குப் போய் பவுலுடன் மாரிகாலத்தில் இருக்க ஏதுவாகும் (தீத்து 3:12).

(Diakonos) வேலைக்காரன் என்பது "ஊழியக்காரன்" என்றும் "உதவிக்காரன்" என்றும் மொழிபெயர்க்கப்படக்கூடும். பவுல் உதவிக்காரர்களின் சேவையை அர்த்தப்படுத்தத்தக்க வகையில் மூன்றுமுறை இதைப் பயன்படுத்தினார் (பிலிப்பியர் 1:1; 1 தீமோத்தேயு 3:8, 12), மற்றபடி, இங்கே சொல்லப்படுவது போல, இதன் பொருள், ஊழியஞ் செய்பவன் அல்லது வேலைக்காரன். பவுல் அநேகமாக அவனுக்கு என்ன தகுதி அடிப்படையில் பணியாற்ற சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டாலும் அவன் உண்மையாக அதிலே ஈடுபட்டான் என்று சொல்லியிருக்கலாம்.

பவுல் இங்கே "உடன் - ஊழியக்காரன்" எனும் பொருளில் *(sundoulos)* எனும் பதத்தை முன்பு எப்பாபிராவுக்கும் பின்பு தீகிக்குவுக்கும் பயன்படுத்தினார். இது ஒரு தொகுப்பு வார்த்தை: *sun*, "உடன்," கூட்டல் *doulos*, "அடிமை" அல்லது "ஊழியக்காரன்." இயேசு இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார் (காண்க மத்தேயு 18:28; 24:49), அதே போல யோவானும் எழுதினார் (வெளிப்படுத்தின விசேஷம் 6:11; 19:10; 22:9). பவுல் தன்னை

இயேசுவின் அடிமை என்றும், தீகிக்குவை கர்த்தருக்குள் தன் உடன் ஊழியன் என்றும் குறிப்பிட்டார். மற்ற கிறிஸ்தவர்ளுடனே கூட, பவுலும் தீகிக்கும் இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தின் மூலம் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டிருந்தார்கள்; இப்படியாக, உடன் ஊழியக்காரர்களாக அவருக்குச் சொந்தமானார்கள்.

இரண்டும் ஒரே அர்த்தத்தைக் கொண்டிருந்தாலும், ***கர்த்தருக்குள்*** *எனும் சொற்றொடரை "கிறிஸ்துவுக்குள்" என்பதைக் காட்டிலும் குறைவாக பவுல் பயன்படுத்துகிறார் (காண்க 1:2, 4, 28; 2:5). தீகிக்கு "கர்த்தருக்குள்" இருந்தபடியால், அவன் புது சிருஷ்டியாயிருந்தான், சபையாகிய ஒரே சரீரத்திற்குள், விசுவாசமுள்ள கூட்டத்துக்குள் இருந்தான். பவுல் இந்த வித்தியாசத்தைக் காட்டி, அதினால் தீகிக்கு தன்னோடு பயணம் பண்ணி தன்னோடு ஊழியம் செய்தவன் மட்டுமல்ல, மாறாக அவன் ஒரு உடன் விசுவாசியுமானவன் எனக் குறிப்பிட்டார்.*

"உங்கள் செய்திகளை அறியவும் உங்கள்
இருதயங்களைத் தேற்றவும் அவனையும் ...
உங்களிடத்தில் அனுப்பியிருக்கிறேன்" (4:8)

தீகிக்குவின் வருகையின் நோக்கங்களில் ஒன்று ***அவன்*** *[அவர்களின்]* ***இருதயங்களைத் தேற்றுவான்.*** *"தேற்றுவான்" (parakaleō) என்பது ஒரு தொகுப்பு வினைச்சொல், para "என்பதுடன்," kaleō "அழைத்தல்." இதன் அடிப்படைப் பொருள் ஒருவரை தனக்குப் பக்கத்தில் வரச் செய்வது, அதாவது, பலமாக வற்புறுத்துதல் (நடபடிகள் 16:39; 28:20; ரோமர் 12:1; 1 கொரிந்தியர் 1:10). தைரியத்தையும் ஆறுதலையும், கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுக்குள் கொடுப்பதைக் குறிப்பிடுவது (2 கொரிந்தியர் 1:4; 7:6; கொலோசெயர் 2:2; 4:8). Paraklētos, என்பது அதே வார்த்தையின் மற்றொரு அமைப்பு, பரிசுத்த ஆவிக்குப் பயன்படுத்தப்பட்டது (யோவான் 14:16, 26; 15:26; 16:7) மற்றும் இயேசுவுக்கும் பயன்படுத்தப்பட்டது (1 யோவான் 2:1), இதன் பொருள் உதவியாளராக இருந்து வழிநடத்தும்படி கூடவே இருப்பவர் என்று பொருள்.*

அனுப்பியிருக்கிறேன் *(epempsa) என்பது நிறைவேற்றப்பட்ட செயலைக் குறிக்கிறது. நிருபத்தை வாசிப்பவர்களின் கோணத்தில் பவுல் எழுதுகிறார். நான் "அவனை அனுப்புகிறேன்," நிகழ்காலத்தில் குறிப்பிட்டிருக்கலாம், அது தான் எழுதின காலத்தை குறிப்பிடுவதாக இருந்திருக்கக் கூடும்; ஆனால் தீகிக்கு ஏற்கனவே கொலோசெயில் இருந்திருக்கிறான், அப்பொழுது இந்த நிருபத்தைப் பெற்றுக் கொண்ட அவர்கள் அதை வாசித்திருக்க வேண்டும். இந்தக் காரணத்தால் பவுல் அவர்கள் பக்கத்து கோணத்தில் எழுதினார், தனது கோணத்தில் அல்ல.*

ஒநேசிமுவுடன் சம்பந்தப்படுத்தி (4:9)

9 அவனையும், உங்களிலொருவனாயிருக்கிற உண்மையும் பிரியமுமுள்ள சகோதரனாகிய ஒநேசிமு என்பவனையும், உங்களிடத்தில் அனுப்பியிருக்கிறேன்; அவர்கள் இவ்விடத்துச் செய்திகளை யெல்லாம் உங்களுக்கு அறிவிப்பார்கள்.

"உங்களிலொருவனாயிருக்கிற உண்மையும் பிரியமுமுள்ள சகோதரனாகிய, ஒநேசிமு என்பவனையும்" (4:9)

ஒநேசிமு தீகிக்குவுடனிருந்தான். இந்தப் பெயர் "பயனுள்ளது" அல்லது "பிரயோஜனமுள்ளது" என நேரடிப் பொருளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பவுல் இங்கே வார்த்தை ஜாலத்தை பயன்படுத்துகிறார், அவர் எழுதிய போது தனது எஜமானனுக்கு ஒநேசிமு முன்பு "பிரயோஜனமில்லாதவனும்" "பயனற்றவனுமாயிருந்தான்" ஆனால் இப்பொழுது அவனுக்கும் பவுலுக்கும் "பயனுள்ளவனாகவும்" "பிரயோஜனமுள்ளவனாகவுமிருக்கிறான்" (பிலேமோன் 11, 20). வேலைக்காரர்களுக்குள் அவனுடைய பெயர் விசேஷமாக பொதுவானது, இது சிலரை பிலேமோனுக்கு எழுதப்பட்ட நிருபத்தில் விவாதிக்கப்படும் வேலைக்காரன் இவன்தானா என்ற சந்தேகத்தை எழுப்புகிறது. பிலேமோனில்பேசப்படும் நபர் இவனாக இருக்கலாம், ஏனெனில் அந்த நிருபத்திற்கு அவனுடைய பெயராகிய பிலேமோனையே முதலாவதாக வைத்தார், அதன் பொருள் பிரதானமாக அவனுக்கே எழுதப்பட்டதாக சுட்டிக் காட்டுகிறது, வேறுசிலர் அவன் அப்பியாவுக்கும் அர்க்கிபுவுக்கும் வேலைக்காரனாயிருந்தவனாதலால், பிலேமோனுக்கு எழுதியவைகள் அடிப்படையில் அவர்களுக்கும் சேர்த்து எழுதப்பட்டதுதான் என்கின்றனர் (பிலேமோன் 2).

தீகிக்குவைப் போலின்றி, ஒநேசிமு எபேசியர் நிருபத்தில் சேர்க்கப்படவில்லை அல்லது "ஊழியக்காரன்" என்றும் குறிப்பிடப்படவில்லை (காண்க 4:7; எபேசியர் 6:21). இது ஒருவேளை அவன் சுவிசேஷப் போதகனாயிராமல் ஒரு எளிமையான விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக இருந்திருக்கலாம் - அல்லது பவுல் அவனை ஒரு வேலைக்காரனாக நினையாமல் அல்லது பூமிக்குரிய எஜமானனுக்கு அடிமையாக நினையாமலிருக்க ஒருவேளை அப்படிச் செய்திருக்கலாம்.

கொலோசெயர்கள் ஒநேசிமுவை ஒரு கிறிஸ்தவனாக அறிந்திராமல்ஓடிப்போன ஒரு அடிமையாக மட்டுமே அறிந்திருக்கலாம் (பிலேமோன் 10-20). பவுல் அவனைக் குறித்துக் குறிப்பிடுகிறபடி ஒநேசிமு ஒரு உண்மையற்ற அடிமையாயிருந்தவன் ***உண்மையும் பிரியமுமான சகோதரனாக*** *மாறியிருந்தான். இந்தப் பதங்கள் அவனுக்கு கனத்தையும் மதிப்பையும் கொடுத்தது, ஏனெனில் மற்றவர்களைக் குறிப்பிடுவது போலவே அதே அன்பு மிக்க வார்த்தைகளை அவனுக்கும் பயன்படுத்துகிறார். ஒருவேளை கொலோசெயர்கள் எஜமானர்களையும் சுயாதீனர்களையும் அன்புகூருவது போல அடிமைகளிடத்திலும் தங்களுடைய சக கிறிஸ்தவர்களாக அன்பு கூரும்படி வலியுறுத்தப்பட்டதாயிருக்கலாம்.*

அப்போஸ்தலனான பவுல் ரோமாபுரியில் காவலில் வைக்கப்பட்டிருக்கையில் ஒநேசிமு மனமாற்றப்பட்டிருக்க வேண்டும். இந்த உண்மை "என்னவென்றால், கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகனாகிய ஒநேசிமுக்காக உம்மை மன்றாடுகிறேன்" என்று அவர் சொன்னதிலிருந்து இந்த உண்மை தெரிய வருகிறது (பிலேமோன் 10). பவுல் அவனுடைய உதவியை விருப்பப்பட்டிருந்த போதிலும், அவனுடைய எஜமானனின் அனுமதியின்றி அவனைத் தன்னோடு வைத்துக் கொள்ள விரும்ப வில்லை, எனவே ஒநேசிமுவை அவனுடைய எஜமானனிடத்தில்

திருப்பி அனுப்பினார். பிலேமோனுக்கு எழுதிய அவருடைய நிருபத்தில், பிலேமோன் அடிமையானவனாக அல்ல, கர்த்தருக்குள் பிரியமுள்ள சகோதரனாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று பவுல் வேண்டிக் கொண்டார். பண விஷயத்தில், ஒநேசிமு ஏதாவது பணத்தை எடுத்திருந்தாலோ அல்லது அவன் இல்லாததால் ஏதாவது நஷ்டம் ஏற்பட்டிருந்தாலோ, பவுல் அந்தப் பணத்தைத்திருப்பிக் கொடுக்க விருப்பமாயிருந்தார் (பிலேமோன் 18, 19). பிலேமோன் நிருபம் பாதுகாக்கப்பட்டிருப்பதிலிருந்தே, ஒநேசிமு விடுதலையாக்கப்பட்டிருந்தான் என்றும் சுட்டிக்காட்டக் கூடும்.

பவுல் ஒநேசிமு குறித்து, "என் மகன்," எனக்கும் ... "பிரயோஜனமுள்ளவன்," "என் உள்ளம் போல் இருக்கிறவன்" "பிரியமான சகோதரன்" என்றெல்லாம் குறிப்பிட்டு தனது பாராட்டை தெரிவித்துக் கொண்டதோடு "எனக்கு ஊழியஞ்செய்யும்படி (அவனை) என்னிடத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்றிருந்தேன்" என்றும் குறிப்பிட்டார் (பிலேமோன் 11-13, 16). "உண்மையும் பிரியமுமுள்ள சகோதரன்" எனும் சொற்றொடர் ஒநேசிமுவை தயவுடன் கொலோசெயர்களைப் பார்க்கச் செய்தது, மேலும் அவனை தங்களுடைய ஐக்கியத்தில் சேர்த்துக் கொள்ளவும் செய்தது, அவன் ஓடிப்போன அடிமையாக அல்ல, கிறிஸ்துவுக்குள் சகோதரனாக பாவித்து ஏற்றுக்கொண்டனர். அவன் ஓடிப்போயிருந்தாலும், இப்போது அவர்கள் அவன் மேல் நம்பிக்கையாயிருக்க முடிந்தது, அடிமைகளும் சுயாதீனர்களும் ஒன்று போலவே தேவனுடைய பிள்ளைகள் ஆகக் கூடும் (கலாத்தியர் 3:26-28).

கொலோசெயர்கள் ஒநேசிமுவை (தங்களில்) ***ஒருவனாக*** *அறிந்திருந்தார்கள் என்பது தெளிவாகிறது. பவுல் குறிப்பிட்டதன் பொருள் இதுதான் என்றால், பிலேமோன் - ஒநேசிமுவின் எஜமானன், அல்லது முந்தைய எஜமானும் கூட - கொலோசெயைச் சேர்ந்தவனாக இருந்திருக்கலாம். ஆகிலும் இது புரிந்து கொள்ள இயலாத ஒன்றாக இருக்கிறது, ஏனெனில் பிலேமோன் கொலோசெயில் வாழ்ந்திருந்தால், பவுல் தனது கொலோசெயர் நிருபத்தில் வாழ்த்துதல் சொல்லும் போது ஏன் அவனையும் பெயர் சொல்லி வாழ்த்தவில்லை? அவர் அவனை தன்னுடைய வாழ்த்துதலில் சேர்த்துக் கொள்ளாமைக்குக் காரணம், அதே பயணத்தில் ஒநேசிமு தனிப்பட்ட ஒரு கடிதத்தை பிலேமோனிடத்தில் கொடுத்ததால்தான் என்று சிலர் யூகமாகச் சொல்லுகின்றனர்.*

"அவர்கள் இவ்விடத்துச் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பார்கள்" (4:9)

பவுல் தீகிக்குவை கொலோசெயர் நிருபத்துடன் அனுப்புகையில் இரண்டு நோக்கங்கள் இருந்தன: பவுலின் வாசகர்களை தேற்றுவதும் பவுலின் நிலைமைகளை லீகஸ் பள்ளத்தாக்கில் உள்ள சகோதரர்களுக்கு அறிவிப்பதுமே, அப்போஸ்தலன் தனது நிருபத்தைக் கொண்டு போன இருவருடைய பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களை தன்னுடன் இருப்பவர்களின் வரிசையில் முன்பதாகக் குறிப்பிட்டார், அவர்கள் ரோமில் அவர் (பவுல்) எப்படியிருக்கிறார் என்று அறிவிப்பார்கள், என்று குறிப்பிட்டார். பவுல் காவலில் வைக்கப்பட்டிருந்த செய்தியை அறிந்திருந்தார்கள் ஆனாலும் அங்கு அவருக்கு இருந்த சூழ்நிலையை சிறிதளவே அறிந்திருக்க வாய்ப்பு இருந்தது.

காவலில் வைக்கப்பட்ட போதிலும், பவுலின் தைரியத்தையும் வெற்றியையும் குறித்த செய்தி அவர்களை உற்சாகப்படுத்தக் கூடும். செய்தியைக் கொண்டு போனவர்களின் நோக்கத்தைக் குறித்து பவுல், மூன்றுமுறை குறிப்பிடுகிறார். முதலாவதாக, "தீகிக்கு ... என் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பான்" என்றார் (4:7). பிறகு, அவர் "உங்கள் இருதயங்களை தேற்றுவான்" என்பதற்காகவே தீகிக்கு அனுப்பப்படுகிறான் என்று சொன்னார் (4:8). மூன்றாவதாக, **அவர்கள்** (தீகிக்கு மற்றும் ஒநேசிமு) **இவ்விடத்துச் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பார்கள்** என்று சொன்னார்.

பவுல் அங்கிருந்த சூழ்நிலையின் விவரம் குறித்து எந்த தகவலையும் தன் நிருபத்தில் தெரிவிக்க வில்லை. விளக்கமாய் எழுதப்பட்ட கடிதத்தில் காவலின் விரும்பத்தகாத நிலைகளைக் கொண்டிருக்குமானால், நிருபம் வழியில் கைப்பற்றப்பட்டிருந்தால், (யாருடைய கையிலாகிலும் கிடைத்தால்) அது அவர்களை வேதனைப்பட நடத்தவும் ஆபத்துக்குரியதாக்கியிருக்கவும் கூடும். ஆகிலும், இந்தக் கோணம் ஏற்புடைய ஒன்றல்ல, ஏனெனில் ரோமில் அவர் நன்கு நடத்தப்பட்டிருந்தார். லூக்கா "நாங்கள் ரோமாபுரியில் சேர்ந்தபோது, நூற்றுக்கு அதிபதி தன் காவலிலிருந்தவர்களைச் சேனாதிபதியினிடத்தில் ஒப்புக் கொடுத்தான்; அப்பொழுது பவுல் தன்னைக் காத்திருக்கிற சேவகனுடனே தனித்துக் குடியிருக்கும்படி உத்தரவு பெற்றுக் கொண்டான்" என்று எழுதினார் (நடபடிகள் 28:16). "பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷ முழுவதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தான்" (நடபடிகள் 28:30, 31), என்றும் சொன்னான்.

அநேகமாக, கொலோசெயர்கள் ஏதோ நடைமுறைச் சம்பவங்களை அறிந்துகொள்வதைக் காட்டிலும் ஒரு முழுமையான நடவடிக்கைகளை தனது நிருபத்தில் சேர்க்கப்பட்டு அறிந்து கொள்ள வேண்டுமென்று பவுல் விருப்பப்பட்டார். வாய்மொழியாக சொல்லப்பட்ட சங்கதிகளை முழுமையாய்க் கேட்டறிந்த பின்பு, நிருபத்தைப் பெருபவர்கள் வேறு விளக்கங்களையும் பவுலின் நிலைக்குறித்தும் கேள்விகேட்டு தெரிந்துகொள்ளக்கூடும். எபேசியருக்கு எழுதின நிருபத்திலும் கூட பவுல் குறிப்பிடுகையில் செய்திகளையெல்லாம் முழுமையாக தீகிக்கு அறிவிப்பான் என்று குறிப்பிட்டார் (எபேசியர் 6:21).

அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்ததால், சிறைச்சாலையில் ஒரு அறையில் வைக்கப்பட்டிருப்பதைக் காட்டிலும் அவரது சூழ்நிலை சிறப்பு மிக்கதாயிருந்தது. அவர் தாங்கமுடியாத சிறைச்சாலைக் கண்டிப்புக்களால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக் கூடும் என்ற கொலோசெயரின் (வேதனை) மனதை விடுதலை அளிக்கத்தக்கதாக தீகிக்கு மற்றும் ஒநேசிமுவின் அறிக்கையிருந்திருக்கும். இந்தச் செய்தியாளர்கள் கிறிஸ்தவர்களுக்கு அறிவிக்கத்தக்கதாக "முழு" (*panta*,"சகல") மையாக பவுலுக்கு ஏற்படும் காரியங்களை தெரிவிக்கிறவர்களாயிருந்தனர் - பவுல் அனுபவித்த எல்லாவற்றையுங் குறித்தல்ல, ஆனால் பவுலைப்பற்றி அவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய "அனைத்தையும்" அறிவிக்க முடிந்தது.

தேவனுடைய வெளிப்பாட்டை வாய்மொழியாகச் சொல்லியனுப்புவதைச் சார்ந்திராமல் நிருபத்தை எழுதக் காரணம் தீகிக்கோ ஒநேசிமுவோ பவுலுக்கு இருந்த அதிகாரத்தையோ ஏவுதலையோ பெற்றிருக்கவில்லை என்பதால்தான். அவருடைய செய்தியை கொலோசெயருக்கு எழுதிக் கொடுத்தனுப்பியதன் மூலம் சரியான போதனைகளைக் கொடுக்கவும் தொடர்ந்து அவைகளை அவர்கள் மறுபடியும் மறுபடியும் ஒப்பிட்டுப்பார்க்கவும் அது அவசியமாயிருந்தது. கொலோசெயருக்கு எழுதப்பட்ட மகத்தான செய்தியை தேவன் அடுத்தடுத்து வரும் சந்ததியார்கள் பயனடைய விசுவாசத்தோடே பாதுகாத்துவைக்க விரும்பியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிருபத்தின் கடைசிப்பகுதியில் நாம் கேட்கவிரும்பும் அநேக கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படவில்லை. உதாரணமாக, பிலேமோனும் அப்பியாவும் (பிலேமோன் 1, 2) கொலோசெயில் வாழ்ந்திருந்தால், ஒநேசிமுவின் முந்தின சொந்த ஊர் அதுவாக இருந்திருந்தால், பவுல் அவர்களுக்கு ஏன் வாழ்த்துக்களை அனுப்பவில்லை? வாசகர்கள் மாற்கைப் பற்றி பவுல் குறிப்பிட்டவைகளைக் குறித்து இன்று ஆச்சரியப்படலாம், அதே போல எப்பாப்பிரா கொலோசெயர் நிமித்தம் பட்டபாடுகள், நிம்பாவைக் குறித்துச் சொல்லப்பட்ட விசேஷம், பகுத்தறிவுக் காரணத்தால் பரிமாறிக் கொண்ட லவோதிக்கேயருடனான நிருபங்கள், அர்க்கிப்புக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரையைக் குறித்தும் வாசகர்கள் அநேக கேள்விகளை எழுப்பலாம், இந்தக் கேள்விகளெல்லாம் இரசியமானவைகளாகவே காணப்பட்டாலும், துவக்கத்தில் பவுலின் நிருபங்களை வாசித்தவர்கள் அவர் என்ன சொல்ல வருகிறார் என்று நிச்சயமாக புரிந்து கொண்டிருந்தார்கள்.

பயன்பாடு

சகோதரர்களிடம் அறிவித்தல்

கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் பவுல் தனது சொந்த விஷயங்களை சேர்க்க வில்லை, தீகிக்கும் ஒநேசிமுவும் கொலோசெயிக்குப் போய்ச் சேர்ந்த போது, அவருடைய நிலையையும் செயல்களைக் குறித்தும் அவர்கள் அறிவிப்பார்கள், ஒரு முழுமையான அறிக்கையை கொடுக்கும்படி பவுல் தனது செய்தியாளர்களை நம்பியிருக்க முடிந்தது.

தான் எப்படியிருக்கிறார் என்று கொலோசெயர்கள் அறிய வேண்டுமென பவுல் ஏன் விரும்பினார்? சில சாத்தியக்கூறுள்ள காரணங்கள், அவர்கள் தனக்காக தங்கள் ஜெபத்தில் எவைகளையும் சேர்க்க வேண்டும் என்பதை அறிய மிகவும் ஆர்வப்பட்டார், சுவிசேஷம் பரவுகின்ற காரியத்தில் காணும் முன்னேற்றத்தால் ஊக்கப்படுத்தப்பட வேண்டும், கர்த்தருக்கென்று தான் கடினமாய் உழைக்கும் தன்மை ஒரு முன்மாதிரியைக் கொடுக்க வேண்டும், அல்லது தேவனுடைய வசனத்தின் வளர்ச்சியினிமித்தம் கிடைக்கும் வெற்றியில் தன்னோடு கூட அவர்கள் சந்தோஷப்படவேண்டும். ஒருவகையில் அவருடைய தேவைக்கென பொருளாதார உதவி அனுப்ப ஏதுவாக அல்லது அவரை ஊக்கப்படுத்தும் செய்திகளை அனுப்ப உதவும். இன்றுள்ள உள்ளூர் சபைகள் தங்கள் சுவிசேஷ ஊழியர்களிடத்தில் தொடர்ந்து நட்புறவு வைத்துக்

கொள்ள இவைகளெல்லாம் நல்ல காரணங்கள்.

சுவிசேஷ பணி குறித்த அறிக்கை முக்கியமானது. சுவிசேஷ பணியாளர்களின் சூழ்நிலைகளை மற்ற கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டும், ஒப்புக்கொடுத்த மனுஷர்கள் தொடர்பு கொள்ளும் நோக்கத்திற்குள் வர வேண்டும்.

உள்ளூர் சபைகளுக்கு ஊழிய அறிக்கை அவசியமானது. அங்கத்தினர்களுக்கு அறிவிக்கப்பட்டால், அவர்கள் ஊழிய பணியில் பெரிதான ஆர்வத்தை எடுத்துக் கொள்வார்கள். என்ன நடக்கிறது என்பதை அவர்கள் அறிந்து இருப்பார்களானால், அவர்கள் ஊழியத்தைத் தங்கள் ஜெபத்தால் தாங்குவார்கள் மேலும் தேவனிடத்தில் கேட்க வேண்டியவைகள் இன்னது என்பதை புரிந்து கொள்வார்கள்.

பவுல் தனது சுவிசேஷப் பயணங்களை நிறைவு செய்து கொண்டு திரும்பும் போது, அந்தியோகியாவுக்குத் திரும்ப வந்தார், அங்கிருந்துதான் அவர் புறப்பட்டு போயிருந்தார். பவுல் தனது முதலாவது சுவிசேஷப் பயணத்திலிருந்து திரும்பியது குறித்து லூக்கா, "அவர்கள் அங்கே சேர்ந்த பொழுது சபையைக் கூடிவரச் செய்து, தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததையும் அறிவித்து," என்று எழுதினான் (நடபடிகள் 14:27).

சில சுவிசேஷப் பணியாளர்கள் உற்சாகமிழ்ந்து விடுகிறார்கள், ஏனெனில் அவர்களுக்கு பொருளாதார ரீதியாக உதவி செய்பவர்கள் அவர்களுடன் எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்வதில்லை, சுவிசேஷக் களத்தில் இருப்போருக்கும் உதவுகிற ஸ்தல சபைக்குமிடையே தொடர்பு இருந்து கொண்டு இருக்க வேண்டும், அதினால் ஒருவருக்கொருவர் நட்பை வளர்க்க ஏதுவாக்கும்.

ஊழியத்தையும் ஊழியப் பணியாற்றுபவர்களின் சூழ்நிலைகளையும் புரிந்து கொள்வதே பிரதானமானது. ஊழியம் சிறப்பாக நடந்து கொண்டிருக்கையில், ஊழியர்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரு-ம்புவார்கள். அவர்கள் கஷ்டப்படுவார்களானால், அவர்களுக்கு விசேஷித்த உதவியும் ஊக்கமளிப்பும் தேவை, ஆனால் அவர்கள் தங்கள் கஷ்டங்களைச் சொல்லாமல் இருக்கலாம். பொறுப்புமிகுந்த உள்ளூர் சபைகள் தங்கள் சுவிசேஷகர்களுடன் திறந்த மனதுடைய தொடர்பைக் கொண்டிருத்தல் அவசியம்.

ஒப்புக்கொடுத்த விசுவாசமுள்ளசெய்தியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு சுவிசேஷப் பணிக்கு உதவுகிற உள்ளூர் சபைகளுக்கும் சுவிசேஷகர்களுக்குமிடையே பயணம் பண்ணும்படி பணித்தல் வேண்டும். கூடுமானால், மூப்பர்கள் வருடத்துக்கு ஒருமுறையாகிலும் ஆட்களை அனுப்பி நடப்பிக்கப்பட்டுள்ள ஊழியத்தை பார்வையிட்டு ஊழியத்தில் உட்பட்டவர்களை ஊக்குவிப்பது அவசியம். கடிதப் போக்குவரத்துக்களும், தொலைபேசிகளும், மின் அஞ்சல் தொடர்புகளும் கொண்ட செய்திகள் உதவிகரமானவைதான், ஆனாலும் இவைகள் சுவிசேஷ களத்திற்கு நேரடியாகச் செல்லும் பார்வையாளர்களுக்கு இது இணையாகாது.

பவுல் தனது கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் தன்னுடைய சூழ்நிலையை விவரித்துச் சொல்லியிருக்கலாம், ஆனாலும் பேசப்படும்

வார்த்தைகளைப் போல ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதப்படும் வார்த்தைகள் அழுத்தம் கொடுக்காது. எழுதப்பட்ட ஒரு சிறிய குறிப்பு, ஒரு தனிப்பட்ட நேரடியான செய்தியைப் போல் முழுமையாகவும் ஆர்வமுள்ளதாகவும் இருக்காது. மேலும், ஊழியத்தை புரிந்து கொள்ளும் பொருட்டு ஒரு முழுமையான அறிக்கைக்காக செய்தியாளர்களிடம் கேள்விகள் கேட்கப்படலாம்.

சகோதரர்களிடம் ஊழிய அறிக்கையை சமர்ப்பிப்பது வசன ரீதியான முற்பட்ட நிலையையும் உதவி செய்யும் சபைகளுக்கும் சுவிசேஷகர்களுக்குமிடையே ஒரு ஆரோக்கியமான நட்புறவை ஏற்படுத்த முக்கியமானது. கொடுப்பவர்கள் வெளிநாட்டிலிருந்து கேள்விப்படும் நல்ல ஊழியசெய்திகளால் பயனடைவார்கள், சுவிசேஷகர்கள் விசுவாசமுள்ள சகோதரர்களும் சகோதரிகளும் தங்களுக்காகவும் தங்களின் ஊழியப் பணிகளுக்காகவும் ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிந்து பயனடைகிறார்கள்.

பாராட்டத்தகு உடன் வேலையாள் தீகிக்கு (4:7-9)

தீகிக்குவின் நற்பண்புகள் எல்லாக் கிறிஸ்தவர்களுக்குள்ளும் விரும்பப் படத்தக்க நற்பண்பாக இருக்கிறது. கிறிஸ்துவுக்காக நாம் மற்றவர்களோடு ஊழியஞ் செய்யும் போது, நாம் அப்படியே வாழ வேண்டியவர்கள். அதினால் நாம் நமது சக ஊழியர்களோடு தீகிக்குவை பவுல் பார்த்த விதத்தில் பார்க்க வைக்க வேண்டும். மேலும், நமது உடன் வேலைக்காரர்களிடத்தில் நற்பண்புகளைக் காணும் போது, நாம் பவுலைப் போலவே அவர்களைப் பாராட்ட வேண்டும், தீகிக்குவைப்பற்றி அவர் குறிப்பிட்டுள்ளவைகளைக் கவனியுங்கள்.

"பிரியமான சகோதரன்." கிறிஸ்தவர்கள் அன்பினால் கட்டப்பட்டவர் களாயிருக்க வேண்டியவர்கள், கர்த்தருக்குள் விசுவாசமுள்ள வாழ்க்கையை வாழ்கிறவர்கள் அன்புக்கும் மரியாதைக்கும் தகுதி பெற்றவர்கள். சில வேளைகளில் ஊழியஞ்செய்யத் தேடுகிறவர்கள் பிற ஊழியக்காரர்களை அன்புகூரத் தவறுகிறார்கள், காரணம் பொறாமை. இப்படி ஒருபோதும் நடக்கக் கூடாது, ஏனெனில் இப்படிப்பட்ட உணர்வுகள் போட்டியையும் சண்டைகளையும் கொண்டு வரும்.

"உண்மையான ஊழியக்காரன்." உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் இயேசுவுக்கு உண்மையுள்ளவர்களாய் தரித்திருந்து மரணபரியந்தம் உண்மையுடன் நிலைத்திருக்கிறார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 2:10) ஏனெனில் இயேசுவுடன் இருக்கும் புதிய ஜீவனைக் குறித்த நம்பிக்கைதான் (1 கொரிந்தியர் 15:19, 20, 58); பரலோகத்தில் நித்திய ஜீவன் (1 பேதுரு 1:3, 4), மற்றும் இயேசுவுக்கு ஒப்பான மறுரூபமடைதல் (1 யோவான் 3:2, 3) ஆகியன. உண்மையில் உறுதியாய்த் தரித்திருத்தல் என்பது ஒருவர் உபத்திரவத்தைச் சந்திக்கும் போதும், ஏமாற்றங்களை அவிசுவாசமுள்ள சகோதர சகோதரிகளிடமிருந்து சந்திக்கும் போதும் அல்லது பிசாசினிடத்திலிருந்து சோதனைகள் வரும்போதும் அது முடிவதல்ல.

"உடன் வேலையாள்." பாவஞ்செய்கிறவர்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருக்கிறார்கள், ஆனால் இயேசுவுக்குக் கீழ்ப்படிவதன்

மூலம் நீதியின் அடிமைகளாகிறார்கள் (ரோமர் 6:17, 18). கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் அவருக்குச் செய்யும் ஊழியத்தை ஒற்றுமையாகச் செய்ய வேண்டும். கிறிஸ்தவர்கள் இயேசுவுக்கு ஊழியஞ் செய்வதில் பவுலுக்கும் தீகிக்குமிடையே இருந்த ஒற்றுமையை மாதிரியாகக் கொண்டு பின்பற்ற வேண்டும்.

தீகிக்கு ஒரு உண்மையுள்ள முன்மாதிரிச் செய்தியாளன். அவனை மாதிரியாகப் பயன்படுத்திக் கொண்டு, கிறிஸ்தவர்கள் பின்வரும் காரியங்களைச் செய்ய பிரயாசப்பட வேண்டும்.

(1) நம்பிக்கைக்குப் பாத்திரராயிருங்கள். பவுல் தீகிக்குவை நம்பித்தான் பவுலுக்குப் பிரியமான வகையில் தனது நிலைமையைப் போய் அறிவிக்கச் சொன்னார். மற்றவர்களின் சார்பாகப் பேசுகிறவர்கள் தாங்கள் பேசுவது துல்லியமானதாயிருத்தல் அவசியம் என்பதில் நிச்சயமாய் இருக்க வேண்டும். தவறான அறிக்கை நம் மதிப்பைக் கெடுப்பதோடு உள்ளூர் சபையிலும் பாதிப்பை ஏற்படுத்தும். சிலவேளைகளில், கிறிஸ்தவர்கள் தங்களுக்குத் தெரிந்த எல்லாவற்றையும் சொல்லி விடாதபடி (அது உண்மையாகவே இருந்தாலும்கூட) விலகியிருக்க வேண்டும். யாக்கோபு, "சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்" என்று எழுதினார் (யாக்கோபு 4:11).

(2) ஊக்கமளிப்பவராயிருங்கள். மற்றவர்களைத் தேற்றுகிற விஷயத்தில் தீகிக்குவின் திறமை சிறிதளவு மட்டுமே தெரியவந்துள்ளது. பர்னபா ஆறுதலளிப்பதில் ஒரு சிறப்பான கிறிஸ்தவனுக்குரிய நல்ல உதாரணம். இதனால் தான் அப்போஸ்தலன் அவனை "ஆறுதலின் மகன்" என்றழைத்தார் (நடபடிகள் 4:36). அவர் பவுலை சேர்த்துக் கொண்டு, அப்போஸ்தலர்கள் பவுலை ஏற்றுக் கொள்ளும்படி இசையச் செய்தான் (நடபடிகள் 9:27). அந்நியோகியாவிலிருந்த ஊழியத்தில் உதவி செய்யும்படி பர்னபாவை அப்போஸ்தலர்கள் தெரிவு செய்தபின், அவன் பவுலை ஊழியத்திற்கு உட்படுத்தினான். பின்னதாக, அவன் மாற்கு தன்னை மேம்படுத்த உதவி செய்தான், அதன்மூலம் ஒரு பயனுள்ள கர்த்தருடைய ஊழியக்காரனாக ஆனான் (2 தீமோத்தேயு 4:11).

(3) விசுவாசமுள்ள உடன் வேலையாளாயிருங்கள். தீகிக்குவும் ஒநேசிமுவும் ஒரு நல்ல குழுவாக இருந்தனர். ஒநேசிமு ஒரு அடிமையாக இருந்தும் அவர்கள் ஒற்றுமையாக ஊழியஞ் செய்யமுடிந்தது. கிறிஸ்தவர்கள் தங்கள் சமுதாயத்திலும் அந்தஸ்திலும் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் கர்த்தருக்கு ஒற்றுமையாய் ஊழியஞ்செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். இயேசு தம்மைப் பின்பற்றுகிறவர்களை ஒற்றுமையை ஊழியஞ் செய்ய ஏதுவாக்க தமக்கு ஒப்பாக அவர்களை அவர் மறுரூபமாக்க இயலும்.

17

வாழ்த்துக்களும் சிறப்புரைகளும்

(4:10-18)

4:10-14ல் சேர்க்கப் பட்டுள்ள பவுலுடன் பயணம் பண்ணின அனைவரும் "யுஸ்து என்னப்பட்ட இயேசு" என்பவனைத் தவிர மற்ற அனைவரும் பிலேமோன் 23, 24லும் குறிப்பிடப்பட்டுள்ளனர். பவுல் வேறு இரண்டு நிருபங்களில் மட்டுமே ஒரு நீண்ட பட்டியலை எழுதியிருக்கிறார் (ரோமர் 16:1-23; 1 கொரிந்தியர் 16:10-20). இந்த நிருபங்களில் அவர் வாழ்த்தினவர்களெல்லாரும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர், ஆனால் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் தன்னோடு ரோமில் இருந்தவர்களை வரிசைப்படுத்தி கொலோசெயருக்கு வாழ்த்துதலைச் சொல்லுகிறார். இவர்களெல்லாம் அவருக்கு ஊழியஞ்செய்தவர்களும், தன்னோடிருந்த மற்றவர்களுக்குப் போதித்தவர்களும், அவரோடு காவல் வைக்கப்பட்டவர்களுமாயிருந்தனர். நிருபத்தை எழுதும் போது அவர்கள் பவுலோடு இருந்திருந்தால், அவர்கள் வாழ்த்துதலில் தங்களையும் சேர்த்துக் கொள்வதில் ஆவலாய் இருந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பவுலின் ஆறு உடன் ஊழியர்களே தங்களின் தனிப்பட்ட வாழ்த்துக்களை அனுப்பினார்கள். 1:1ல் பவுலுடன் தீமோத்தேயு பெயரிடப்பட்டிருந்ததால் அவன் சேர்க்கப்படவில்லை. வசனம் 10 பர்னபாவின் இனத்தானாகிய மாற்குவை அடையாளப்படுத்துகிறது.

வாழ்த்துச் சொல்லுவதாக பவுல் குறிப்பிட்ட மூன்று சகோதரர்கள் யூதப் பின்னணியை உடையவர்களாயிருந்தனர் ("விருத்தசேதனமுள்ளவர்களில்"; வசனம் 11). அவர்கள் மாத்திரமே பவுலுடனிருந்து ஊழியஞ்செய்த உடன் வேலைக்காரர்களாயிருந்த யூதக் கிறிஸ்தவர்கள். பவுலின் உடன் வேலைக்காரர்களாயிருந்த அடுத்த மூன்று பேர் விருத்தசேதனமில்லாதவர்கள்; அதாவது, அவர்கள் புறஜாதிக் கிறிஸ்தவர்களாயிருந்தார்கள்.

தேசத்தவர்கள் (ஜாதிகள்) என்று சொல்லி பவுல் அவர்களுக்கிடையே வித்தியாசத்தை ஏற்படுத்தினமைக்கு ஒருவேளை யூத மற்றும் புறஜாதி சகோதரர்கள் கை கோர்த்து கர்த்தருக்கென்று பக்கம் பக்கமாய் நின்று பணியாற்றுகின்றனர் என்பதை கொலோசெயருக்கு உறுதியளிக்கும்படி செய்திருக்கலாம். ஒருவேளை புறஜாதி கிறிஸ்தவர்களும் யூதர்களைப் போலவே ஆழமாக சுவிசேஷத்தைப் பரப்புவதில் தங்களை ஈடுபடுத்தியிருக்கிறார்கள் என்று கொலோசெயருக்கு தெரிவித்திருக்கலாம். ஒருவேளை இதற்கு மேலாக எதுவுமில்லாமலிருக்கலாம்.

பெரும்பாலும் விருத்த சேதனமில்லாதவர்களைக் கொண்டிருந்த

கொலோசெ சபையில் இருந்த அங்கத்தினர்களெல்லாம், தங்களுடைய சக புறஜாதியினர் இயேசுவுக்கு ஊழியஞ் செய்வது கண்டு ஊக்கப்படுத்தப்பட்டிருக்கலாம். பவுல் யூத விசுவாசிகளால் மாத்திரம் சூழப்பட்டிராமல், எல்லா கிறிஸ்தவர்களோடும் வெளிப்படையாக ஊழியஞ்செய்து கொண்டிருந்தார். அவர்கள் "தேவனுடைய ராஜ்யத்தின் பொருட்டு" ஒன்றுபட்டு பிரயாசப்பட்டார்கள் (4:11).

David M. Hay *கொலோசெயர், பிலேமோன் நிருபங்களில் குறிப்பிட்டிருக்கும் கிறிஸ்தவர்களின் பட்டியலில் உள்ள ஒற்றுமைகளையும் வித்தியாசங்களையும் சுட்டிக்காட்டினார்:*

> *கொலோசெயர் 4ஐப் போலவே பிலேமோன் 23-24லும் எப்பாப்பிரா விடமிருந்தும், மாற்கு, அரிஸ்தர்க்கு, தேமா, மற்றும் லூக்கா (ஆகியோரிட மிருந்தும் அர்க்கிப்பு பிலேமோன் 2லும் ஒநேசிமு பிலேமோன் 10லும் குறிப்பிடப்படுகின்றனர்) வாழ்த்துக்கள் வரிசைப்படுத்தப்படுகிறது. மற்றொருபுறம், பிலேமோனில் தீகிக்குவை குறிப்பிடவில்லை, அதேபோல யுஸ்துவையோ நிம்பாவையோ குறிப்பிடவில்லை; மற்றும் கொலோசெயரில் பிலேமோனும் அபியாவும் குறிப்பிடப்படவில்லை.*[1]

இரண்டு நிருபங்களிலும் பெயர்களின் வரிசை வித்தியாசப்படுகிறது. பவுல் இந்த மனுஷர்களின் பெயர்களை தனது பார்வைக்கு கண்டபடி அவரவர்களின் முக்கியத்துவத்துக்கு ஏற்ப அல்லது வாசகர்கள் பார்வையில் பட்ட முக்கியத்துவத்துக்கு ஏற்ப வரிசைப்படுத்தியிருக்கக் கூடும். பிலேமோன் 23, 24ல் பின்வருமாறு அவர்களை வரிசைப்படுத்துகிறார். எப்பாப்பிரா, மாற்கு, அரிஸ்தர்க்கு, தேமா, மற்றும் லூக்கா. கொலோசெயரில் 4:10-14ல் அரிஸ்தர்க்கு, மாற்கு, யுஸ்து என்னப்பட்ட இயேசு, எப்பாப்பிரா, லூக்கா, மற்றும் தேமா ஆகியோர் தீகிக்கு, ஒநேசிமுவுக்குப் பின் வரிசைப்படுத்தப்படுகின்றனர்.

உடன் வேலைக்காரர்களிடமிருந்து வாழ்த்துக்கள் *(4:10-14)*

10என்னோடேகூடக் காவலிலிருக்கிற அரிஸ்தர்க்கு உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; பர்னபாவுக்கு இனத்தானாகிய மாற்கும் வாழ்த்துதல் சொல்லுகிறான், இவனைக் குறித்துக் கட்டளை பெற்றீர்களே; இவன் உங்களிடத்தில் வந்தால் இவனை அங்கீகரித்துக் கொள்ளுங்கள். 11யுஸ்து என்னப்பட்ட இயேசுவும் வாழ்த்துதல் சொல்லுகிறான். விருத்தசேதனமுள்ளவர்களில் இவர்கள் மாத்திரம் தேவனுடைய ராஜ்யத்தின் பொருட்டு என் உடன் வேலையாட்களாயிருந்து, எனக்கு ஆறுதல் செய்து வந்தவர்கள். 12எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; உங்களைச் சேர்ந்தவனும், கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான். 13இவன்

உங்களுக்காகவும், லவோதிக்கேயருக்காகவும், எராப்போலியருக்காகவும், மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கிறானென்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன். [14]பிரியமான வைத்தியனாகிய லூக்காவும், தேமாவும், உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

"என்னோடே கூடக் காவலிலிருக்கிற அரிஸ்தர்க்கு உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்" (4:10)

__அரிஸ்தர்க்கு__, என்பதன் நேரடிப் பொருள் "சிறப்பான ஆளுனர்," மக்கதோனியாவிலுள்ள தெசலோனிக்கே அவனது சொந்த ஊர். அவன் பவுலின் மூன்றாவது சுவிசேஷப் பயணத்தின்போது அதிகமாக அவரோடேகூட பயணம் பண்ணினவன். வாழ்த்துதல் சொல்லியவர்களின் வரிசையில் அவனை முதலாவதாகக் குறிப்பிடுவதிலிருந்தே பவுல் அவனிடத்தில் வைத்திருந்த மரியாதையைக் காட்டுகிறது. அவன் பவுலைச் சந்தித்த பிறகு அவரோடே கூட ஒரு நெருக்கமான நட்பை வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும் ஏனெனில் அவனும் லூக்காவும் மட்டுமே பவுலோடு கூட ரோமாபுரிக்கு கப்பலில் பயணித்திருக்க வேண்டும் (நடபடிகள் 27:2).

__என்னோடே கூட காவலிலிருக்கிற__ என்ற சொற்றொடர் (sunaichmalōtos mou), நேரடியாக மொழிபெயர்த்தால், அரிஸ்தர்க்கு பவுலோடே "கூட யுத்தக் கைதியாக காவலில் வைக்கப்பட்டிருந்தான்" என்று பொருள்படும், இதே சொற்றொடர் தான் பவுலின் இனத்தாராகிய அன்றோனிக்கை மற்றும் யூனியா ஆகியோருக்கும் ரோமர் 16:7ல் பயன்படுத்தப்படுகிறது, இதே முறையில் பிலோமோனுக்கு எழுதப்பட்ட நிருபத்தில் பவுல் எப்பாப்பிராவைக் குறித்து எழுதுகிறார், ஆனால் அரிஸ்தர்க்குவை அப்படி குறிப்பிடவில்லை. அதே வேளையில் அரிஸ்தர்க்குவும் பவுலுடன் காவலில் வைக்கப்பட்டிருந்ததாக - அதே சுவிசேஷத்தைப் பிரசங்கித்த காரணத்துக்காக அவன் காவலில் வைக்கப்பட்டிருந்ததாக கொலோசெயரில் இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. பவுல் இதை ஒரு உருவகமொழியில் தன்னோடு கூட சிறைவைக்கப்பட்டதாக அல்லது கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யும்படிக்கு எழுதியிருக்கக் கூடும், அநேகமாக, "காவலில் வைக்கப்பட்டவன்" என்பது நேரடிப் பொருளில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது, பவுல் தன்னை இயேசுவுக்காக யுத்தம் செய்யும் வீரனாக காவலில் வைக்கப்பட்டிருந்ததாகப் பாவித்தார். கிறிஸ்துவுக்கான ஆவிக்குரிய இந்த யுத்தத்தில் அரிஸ்தர்க்கு பவுலோடு கூட பக்கம்பக்கமாக நின்று யுத்தம் செய்கிறவனாயிருந்தான்.

அப்போஸ்தலர் நடபடிகளில் அரிஸ்தர்க்கு முதலாவதாக வரிசைபடுத்தப்படுகிறான், பவுலுக்கு எதிராக கலகம் வெடித்தபோது எபேசுவிலே அவனும் இருந்தான். அவனும் காயுவும் கலகக்காரர்களால் இழுத்துக் கொண்டு போகப்பட்டு அரங்க சாலைக்குள் கொண்டு போகப்பட்டார்கள் (19:29). பவுலோடு கூட மக்கதோனியாவுக்குப் போனபிறகு, அவன் மற்றவர்களோடு கூட பவுலுக்காக காத்திருக்கும்படி முன்பதாகவே துரோவாவில் போய் காத்திருந்தான் (20:4, 5). அங்கிருந்து அவனும் செக்குந்தும் பவுலோடு கூட தெசலோனிக்கேயாவிலிருந்து வந்திருந்த சில முகவர்களுடன் எருசலேமிலிருக்கிற சகோதரர்களுக்கு தருமப் பணத்தை எடுத்துக் கொண்டு போனார்கள் (காண்க 24:17).

இரண்டு வருடங்களுக்குப் பிறகு (24:27), அவனும் லூக்காவும் பவுலோடு கூட ரோமாபுரிக்குப் போக செசரியாவில் கப்பல் ஏறினார்கள், பிறகு ஒரு காவலில் வைக்கப்பட்டவரானார் (27:1, 2). அங்கே ரோமில் தங்கியிருந்தபோது, பவுலுடன் ஊழியக்காரனாகவோ அல்லது உடன் காவல் வைக்கப்பட்டவராகவோ இருந்திருக்கிறார். மீறாவிலிருந்து தனது சொந்த ஊராகிய தெசலோனிக்கேயாவுக்கு திரும்பிப் போய் விட்டதாக சிலர் கருதுகின்றனர், அங்கே பவுலும் லூக்காவும் கப்பல்களை மாற்றிக் கொண்டனர் (27:5, 6). அவன் பவுலோடு கூட ரோமாபுரியிலிருந்து கொலோசெயர் நிருபம் எழுதப்படும்போது இருந்திருப்பதால் மேற்சொன்ன கருத்து சந்தேகமளிக்கின்றது.

"பர்னபாவுக்கு இனத்தானாகிய மாற்கும் வாழ்த்துதல் சொல்லுகிறான், இவனைக் குறித்துக் கட்டளை பெற்றீர்களே; இவன் உங்களிடத்தில் வந்தால், இவனை அங்கீகரித்துக் கொள்ளுங்கள்" (4:10)

பவுலைப் போலவே (நடபடிகள் 13:9), **மாற்குவிற்கும்** இரண்டு பெயர்கள் இருந்தன (நடபடிகள் 12:25). அவனுடைய எபிரெயப் பெயர் யோவான் - நேரடிப் பொருளில், "தேவன் கிருபையாயிருக்கிறார்," அவனுடைய கிரேக்கப் பெயர் "மாற்கு," இதன் பொருள் "ஒரு பெரிய சுத்தியல்." பவுல் அவனை அவனுடைய கிரேக்கப் பெயரால் மட்டுமே அழைத்தார் (கொலோசெயர் 4:10; 2 தீமோத்தேயு 4:11; பிலேமோன் 24). இதே போலதான் பேதுருவும் அவனை அழைத்தார் (1 பேதுரு 5:13), அரிஸ்தர்க்குவுடன், மாற்கும் வாழ்த்துதலை அனுப்பினான்.

லூக்கா மாற்கை "யோவான் என்று அழைக்கப்பட்ட மாற்கு" என்று அறிமுகப்படுத்தினார் (நடபடிகள் 12:12, 25; காண்க 15:37) பின்னதாக அவனை "யோவான்" என்று மட்டுமே அழைத்தார் (13:5, 13). எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்கள் அவனுடைய தாயாகிய மரியாளுடைய வீட்டில் கூடி, பேதுரு சிறையாக்கப்பட்டிருந்த வேளையில் சிறைச்சாலையிலிருந்து விடுதலையடைய ஜெபம் பண்ணினார்கள். பேதுரு சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெற்ற போது, அந்த வீட்டிற்குப் போனார், இது கிறிஸ்தவர்கள் கூடிவருகிறதற்கான அங்கீகரிக்கப்பட்ட வீடாக இருந்துள்ளது என்று காணுகிறது (நடபடிகள் 12:12). மாற்குவின் தகப்பனாரைக்குறித்து எதுவும் சொல்லப்படவில்லை.

பவுல் முதல் சுவிசேஷப் பயணத்தை தனது **உறவினரான**, பர்னபாவுடன் மாற்கு துவக்கினான். சாலமி மற்றும் பாப்போ ஆகிய சீப்புருத்தீவிலிருந்த பட்டணங்கள் வரை சென்று, பிறகு பம்பிலியாவிலிருந்த பெர்கேவுக்கு நிலம் வழியாகப் போனான் (நடபடிகள் 13:13), அங்கிருந்து எருசலேமிற்குத் திரும்பிப் போனான் (நடபடிகள் 13:5-13).

மாற்கு ஊழியத்தை விட்டு ஏன் திரும்பிப் போனான் என்று நிச்சயமாக ஒருவருக்கும் தெரியவில்லை, ஆனால் பல காரணங்கள் கருத்தாகச் சொல்லப்படுகிறது. பர்னபாவுக்குப் பதிலாக பவுல் தலைமையேற்று முக்கியப் பேச்சாளராக இருந்தபடியால் பொறாமை கொண்டு திரும்பிப்போனானா? பவுலுக்கு இருந்த சுகவீனம் (கலாத்தியர் 4:13-15) ஒருவேளை தொற்று நோயாக மாறி மற்றவர்களையும் பிடிக்குமென்று பயந்து போய் விட்டானா? 2 கொரிந்தியர் 11:24-27ல் குறிப்பிடப்பட்டவைகளான, பவுல்

சகித்துக்கொண்ட உபத்திரவங்களைக் கண்டு, இந்த வாலிபன் தன் சொந்த ஊரை விட்டு வெளியிலே வந்திருக்கிற அந்த வேளையில் விசேஷமாக மிரட்டலைக் கொடுத்திருக்கக் கூடுமா? தான் எதிர்பார்த்த அளவுக்கு ஊழியம் வெற்றியளிக்கவில்லை என்ற ஏமாற்றமா? அவன் தன் இடத்திற்குத் திரும்பிப் போனதற்கான காரணமாக இவைகளில் எதுவாகவும் இருக்கலாம்; முதலில் சொல்லப்பட்ட காரணம், அநேகமாக, கடைசி சாத்தியமாக இருக்கலாம்.

மாற்கு மிக அவசரப்பட்டு ஊழியத்தை விட்டு போனபடியினாலே அவன் இன்னொரு ஊழியப் பயணத்துக்குப் போக அவன் ஆயத்தமாயில்லை என்று பவுல் நினைத்தார் இது ஒரு தீவிரமான ஏற்புடமையை இல்லாமல் செய்து பவுலுக்கும், சீப்புருத்தீவானான பர்னாபாவுக்குமிடையே கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தியது (நடபடிகள் 4:36), ஆதலால் ஞானமாய் தனது இனத்தானாகிய மாற்குவைக் கூட்டிக் கொண்டு தனக்கு பரிச்சயமான சொந்த மாநிலத்தில் சுவிசேஷ ஊழியம் செய்யும்படி புறப்பட்டுப் போனான் (நடபடிகள் 15:39). பவுலுக்கு மாற்குவினிடத்தில் எவ்வித பகைமையும் இல்லை, ஆனால் அந்த வாலிபன் இன்னும் முதிர்ச்சிபெற்று உறுதிப்பட வேண்டும் என்று விரும்பினார் பர்னபாவும் இதை உணர்ந்தே இருந்தான், எனவே, மற்றவர்களுக்கு ஆறுதலின் மகனாக இருந்த அவன், மாற்குவுடன் தங்கி பொறுமையாக அவனுக்கு உதவி செய்து கிறிஸ்துவுக்கு ஒரு நல்ல சேவகனாக மாற்றவிழைந்தான். இது உண்மையாக இருந்திருக்குமானால், பர்னபாவின் முயற்சி ஒரு பயனுள்ள காரியம் என்பது நிரூபணமாகிறது.

பர்னபாவை பவுல் எந்த ஒரு அறிமுகம் செய்யாமல் குறிப்பிடுவதால் கொலோசெயில் இருந்த சபையில் அவன் நன்கு அறியப்பட்டிருந்தான் என்று தெரிகிறது. அவன் மாற்குவை விட நன்கு அறியப்பட்டவனாயிருந்திருக்கிறான். அப்படியிருக்குமானால், சபை மாற்குவின் மீது ஆர்வம் கொண்டிருந்திருக்கும் ஏனெனில் அவன் “பர்னபாவின் இனத்தானாயிருந்தான்.”

இன்றைய வாசகர்களுக்கு அதிகமான விளக்கங்கள் தேவைப்படும் நிலையில், பவுல், மாற்கு குறித்து எழுதும் போது அவருடைய மனதில் இருந்தவைகளை விளக்கமாக அறிந்து கொள்ள வேண்டிய நிலையில் அன்று நிருபத்தைக் கொண்டு போனவர்களும் பெற்றுக் கொண்டவர்களும் **இவனைக் குறித்து கட்டளை பெற்றிருக்கிறீர்களே** என்று எழுதியிருப்பதைக் கொண்டு பவுல் சொன்னதன் பொருளை நிச்சயமாக புரிந்து கொண்டிருப்பார்கள். பவுல் ஏற்கனவே கொலோசெயர்களுடன் மாற்குவை குறித்த தொடர்புடையவராயிருந்தார் ஆதலால் எனவே இந்த நிருபத்தில் அதை மீண்டும் குறிப்பிட வில்லை. அவனை வழிகாட்ட வேண்டிய சபையின் தேவைகளைக் குறித்த அறிவுரைகளை அவர் உட்படுத்தியிருக்கலாம் அல்லது அவனைத் தங்க வைத்து பராமரிக்கும்படி அறிவுரை கூறியிருக்கலாம்.

பவுல் மாற்கை **அங்கீகரித்துக் கொள்ளும்படி** *(dechomai)* சொன்னார். இந்த வார்த்தையின் பொருள் புதிதாய் வருகிற ஒரு நபருக்கோ அல்லது விருந்தாளிகளுக்கோ காட்டும் உபசரிப்பு என்று பொருள்.[2] யாரோ ஒருவர் நன்கு ஏற்றுக் கொள்ளப்பட ஏதுவாக உபசார நிருபங்கள் (2 கொரிந்தியர் 3:1) அடிக்கடி அனுப்பப்பட்டது. ஒரு அறிமுகமாகாத நபரின் வருகைக்கு முன்பாக இவைகள் அனுப்பப்பட்டு வாசிக்கிறவர்கள் அவர்களை ஏற்றுக் கொண்டு அவர்களின் அடிப்படைத் தேவைகளையும் தங்க வைக்கவும்

ஊக்கமளிக்கப்பட்டிருந்தனர்.

மாற்குவின் பயணத்திட்டத்தைக் குறித்து பவுல் உறுதியாய்த் தெரிந்திருக்க வில்லை, ஆகிலும் பவுல் ஏற்கனவே அவர்களுக்கு அறிவுறுத்தியிருந்தபடி மாற்கு கொலோசெ போவானானால் அவைகளைப் பின்பற்றும்படி கேட்டார். சிலர் மாற்குவைப் பற்றி பவுலுக்கும் பர்னபாவுக்குமிடையே ஏற்பட்ட உட்பூசலை அறிந்திருக்கலாம் எனவே மாற்குவிற்கு அன்பு காட்டி அவனுடைய தேவைகளுக்கு உதவலாமா என்பது குறித்து சந்தேகப்பட்டிருக்கக்கூடும் பவுல் அவர்களுக்கு உறுதி யளித்து, அவர்கள் "அவனை அங்கீகரிக்கும்படி" சொன்னார். பவுலின் உடன் வேலையாட்களில் அவனும் ஒருவன் எனவே அவர் கனத்துக்கும் உதவிக்கும் பாத்திரமுள்ளவன். பவுலின் நிருபத்தில் மாற்குவும் யுஸ்துவோடு சேர்க்கப்பட்டு "இவர்கள் எனக்கு ஆறுதல் செய்தவர்கள்" என்று 4:11ல் குறிப்பிட்டார். ஒரு காலத்தில் பவுலால் மறுப்பு தெரிவிக்கப்பட்ட அந்த வாலிபன் இப்பொழுது பவுலுக்கு ஆசீர்வாதமும் தேறுதலாகவும் மாறினான்.

இந்த நிருபத்தை அவர் எழுதும்போது பவுலுக்கும் மாற்குவிற்கும் இடையேயான நட்பு மீட்கப்பட்டிருந்தது. மாற்கு அவரைச் சந்திக்கும்படி ரோமாபுரி சிறைச் சாலைக்கு (காவல் வீட்டுக்குப்) போனான், அங்கே அவருடன் தங்கியிருந்த போதுதான் கொலோசெயர் மற்றும் பிலேமோன் நிருபங்களை அவர் எழுதினார். பவுல் அவனை ஒப்புக் கொடுத்த "உடன் வேலையாள்" என்பதாகக் குறிப்பிட்டார் (பிலேமோன் 24). அவனைக் குறித்து பெருமையுடன் சிபாரிசு செய்கிறவராயிருந்தார். பவுல் அவனையும் சேர்த்து பிலேமோன், அப்பியா மற்றும் அர்க்கிபு ஆகியோருக்கு வாழ்த்துதலைச் சொன்னார் (பிலேமோன் 1, 2, 23, 24), அதாவது அவர்களை அவன் தனிப்பட்ட ரீதியில் சந்தித்திருக்கிறான் என்பது ஆலோசனையாக சொல்லப்படுகிறது.

பின்னதாக, பவுலும் மாற்கும் சில காலம் பிரிந்திருந்தனர்; ஆனால் ரோமில் பவுலின் இரண்டாம் சிறைக்காவலில் இருந்த போது, விரைவாகவே மாற்கு தனக்கு உதவிகரமாக இருப்பான் என்று உணர்ந்து அவனுக்காக சொல்லி அனுப்பினான். அவர் தீமோத்தேயுவுக்கு எழுதி, "மாற்குவை உன்னோடே கூட்டிக் கொண்டு வா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்" என்றார் (2 தீமோத்தேயு 4:11). அந்நேரத்தில் மாற்கு எபேசுவிலே தீமோத்தேயு கூடவோ அல்லது அருகிலிருந்த கொலோசெ பட்டணத்திலோ இருந்திருக்கலாம் (1 தீமோத்தேயு 1:3). எழுதப்பட்ட எந்த பதிவேட்டிலும் மாற்கு கொலோசெயிக்கு பயணம் பண்ணினதாக குறிப்பிடப்படவில்லை; ஆனால் தகவல்களை ஒன்று திரட்டிப் பார்க்கும் போது, நாம் நியாயமான முறையில் அவன் அங்கு போயிருந்தான் என்ற முடிவுக்கு வர இயலும்.

அனைத்துக் குறிப்புக்களின்படி, மாற்கு கர்த்தருக்கென்று மிகப்பெரிய ஊழியக்காரனாக வளர்ந்திருந்தான். தனது ஊழியத்தை ஆட்டங்காணத்தக்க வகையில் ஆரம்பித்த ஒரு நபர் சந்தோஷமான முடிவை கண்டடைந்தான். அவனுடைய பெயரைக் கொண்ட சுவிசேஷ விபரங்களுக்கு அவன் தான் ஆசிரியர் என்று புறம்பான சாட்சியங்கள் உறுதியளிக்கின்றனர். மாற்குவின் பெயர் கடைசியாக ஏவப்பட்ட பேதுருவின் நிருபங்களில் காணும் வசனங்களில் காணப்படுகிறது, ஒருவேளை அவன் ரோமில் பேதுருவுடன்

இருந்திருக்கிறான் என்பதை இது குறிப்பிடுகிறது (1 பேதுரு 5:13).

"யுஸ்து என்னப்பட்ட இயேசுவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்" (4:11)

*தன் உடன் வேலையாளாக பவுல் சேர்த்துக் கொண்ட அடுத்த நபர் **யுஸ்து எனப்பட்ட இயேசு.** "இயேசு" (Iēsous) என்பது எபிரெய பெயரான யோசுவாவின் கிரேக்கப்பதம் - நேரடிப் பொருளில், "தேவன் இரட்சிக்கிறார்" அல்லது "தேவன் இரட்சிப்பாயிருக்கிறார்" என்பதாகும். இந்த பெயர் யூத சமுதாயங்களில் பொதுவான ஒன்று (நடபடிகள் 13:6), இப்பெயர் உலகத்தின் இரட்சகர் இயேசு என்பதும் ஒன்றுதான். இரண்டாம் நூற்றாண்டில் வழக்கமாக யாருக்கும் இந்தப் பெயர் வழங்கப்படவில்லை. பவுலால் யுஸ்து என்று அழைக்கப்பட்ட இந்த நபரின் பெயர், ஒரு பொதுவான இலத்தீனப் பெயர், யூதர்களுக்குள் வழங்கப்பட்டது, இதன் பொருள் "நீதியுள்ள ஒருவன்" "அல்லது நீதிமான்" என்பது.*

"யுஸ்து என்னப்பட்ட" என்பது இந்த நபர் தனது எபிரெய பெயரான "இயேசு" என்பதைவிட இலத்தீன் பெயரால் நன்கு அறியப்பட்டிருந்தான். என்று சுட்டிக்காட்டுகிறது. இரட்டைப் பெயர்களைத் தரித்துக் கொள்வது, அதாவது எபிரெய மொழியில் ஒன்று கிரேக்க மொழியில் மற்றொன்று, யூதக் கலாச்சாரத்தின்படி சாதாரணமானது. இதற்கு உதாரணமாக "சீமோன் ... என்னப்பட்ட பேதுரு" (மத்தேயு 4:18), "யோசேப்பு... என்னப்பட்ட பர்னபா" (நடபடிகள் 4:36), மற்றும் "யோவான் ... என்னப்பட்ட மாற்கு" (நடபடிகள் 12:12).

"விருத்தசேதனமுள்ளவர்களில் இவர்கள் மாத்திரம் தேவனுடைய ராஜ்யத்தின் பொருட்டு என் உடன் வேலையாட்களாயிருந்து எனக்கு ஆறுதல் செய்து வந்தவர்கள்" (4:11)

*பவுல் குறிப்பிட்ட முதல் மூன்றுபேர் யூதர்கள் என்று விளக்கமாகக் குறிப்பிட வில்லை; மாறாக, அவர் அவர்கள் **விருத்தசேதனமுள்ளவர்களிலிருந்து வந்தவர்கள்** என்று சொன்னார். முன்னும் பின்னும் வருகிற வசனப்பகுதிகளில் குறிப்பாகச் சொன்னாலொழிய, "யூதர்கள்" எனும் பதம் பெரும்பாலும் எப்பொழுதுமே நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றுவோரை மட்டுமே குறிப்பிடும், அவர்கள் கிறிஸ்தவத்திற்கு மனம் மாற்றம் பெறாதவர்கள் (நடபடிகள் 9:22, 23; 13:43, 45). இன்னொருபுறம் பார்த்தால், யூதமத நம்பிக்கையுள்ள ஒருவன் கிறிஸ்தவனாக மாறியிருந்தாலும் அவன் இன்னமும் யூதனென்றே அழைக்கப்படுவான். பேதுரு தன்னுடைய வார்த்தைகளில் தன்னையும் உட்படுத்தி யூதர்கள் அந்நியர்களுடன் கலந்து போக்கு வரத்தாயிருக்கக் கூடாது என்று சொன்னார் (நடபடிகள் 10:28). ஆக்கில்லா, ஒரு கிறிஸ்தவன், ஒரு யூதனென்று அழைக்கப்பட்டான் (நடபடிகள் 18:2), மற்றும் யாக்கோபு குறிப்பிட்ட சில விசுவாசிகளை யூதர்கள் என்றே அழைத்தார் (நடபடிகள் 21:20, 21). பவுல் ஒரு கிறிஸ்தவனாக மாறின பின்னும் தன்னை யூதனென்று அழைத்துக் கொண்டார் (நடபடிகள் 21:39; 22:3).*

*பவுல் **தேவனுடைய ராஜ்யம்** என்பது நிகழ்கால உண்மை என்பதாகப்*

பேசினார் (காண்க 1:13; ரோமர் 14:17; 2 தெசலோனிக்கேயர் 1:5). எபேசுவிலும் மற்ற இடங்களிலும் பிரசங்கம் பண்ணி, ரோமாபுரி உட்பட இரண்டு வருடங்கள் இந்த ராஜ்யத்தைக் குறித்து போதித்து வந்தார் மற்ற சந்தர்ப்பப்பகுதிகளில் "தேவனுடைய ராஜ்யமே" இம்மையில் இந்த வாழ்க்கையைத் தொடர்ந்து வரும் உலகமாகச் சொல்லப்படுகிறது.[3] பவுல் இந்தப் பதத்தை தன்னுடைய பதிமூன்று நிருபங்களில் ஆறு நிருபங்களில் சேர்த்துள்ளார் (ரோமர் 14:17; 1 கொரிந்தியர் 6:9, 10; 15:50; கலாத்தியர் 5:21; எபேசியர் 5:5; கொலோசெயர் 4:11; 2 தெசலோனிக்கேயர் 1:5).

உடன் வேலையாட்கள் (sunergoi) என்பது பொதுவாக கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தாது, ஆனால் தங்கள் பிரயாசங்களால் சுவிசேஷத்தை பரப்புவதில் மற்றவர்களிடமிருந்து வேறுபடுகின்றனர் (காண்க 3 யோவான் 8). தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருப்போரையும் (1 கொரிந்தியர் 3:9; 1 தெசலோனிக்கேயர் 3:2), "கிறிஸ்துவுக்குள்" (ரோமர் 16:3, 9) பவுலுடன் (ரோமர் 16:21; பிலிப்பியர் 2:25; 4:3; பிலேமோன் 24), மேலும் கிறிஸ்தவ சமுதாயத்துக்கும்கூட (2 கொரிந்தியர் 1:24; 8:23) பயன்படுத்தப்பட்டது.

பவுலுக்கு **ஆறுதல் செய்தவர்கள்** (parēgoria) அரிஸ்தர்க்கு, மாற்கு, மற்றும் யுஸ்து. புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை இங்கு மட்டுமே காணப்படுகிறது. திருமறைக்கு அடுத்த இலக்கியங்களில் "ஆறுதல்" என்ற அர்த்தத்தையும் உள்ளடக்கியுள்ளது. அவர் கிறிஸ்துவுக்கு ஒரு பெரிய ஊழியக்காரனாயிருந்த போதிலும், மற்றவர்களைப் போலவே பவுலுக்கும் ஆறுதல் தேவைப்பட்டது. கொரிந்துவில் இருந்தபோது கிறிஸ்து அவனுக்குத் தரிசனமாகி அவனுக்கு ஆறுதல் அளித்தார் (நடபடிகள் 18:9, 10; காண்க 2 கொரிந்தியர் 1:3, 4). அவர் தனிமையில் பயணம் செய்வதோ அல்லது தங்கியிருக்கவோ செய்யாமல், மற்றவர்களைத் தன்னோடு கூட இருக்கும்படி தெரிவு செய்து கொள்வார். அவர் தன்னுடைய இரண்டாவது சுவிசேஷப் பயணத்தில் அத்தேனே பட்டணத்திற்குப் போனபோது, சீலாவுக்கும் தீமோத்தேயுவுக்கும் "சொல்லியனுப்பி சீக்கிரத்தில் தன்னிடம் வரும்படி" கூறினார் (நடபடிகள் 17:15). தெசலோனிக்கேயாவில் இருந்தவர்களினிமித்தம் அத்தேனே பட்டணத்தில் தனித்து விடப்பட விருப்பம் தெரிவித்தார் (1 தெசலோனிக்கேயர் 3:1). உடனிருப்போர் தனக்குத் தேவை என்று உணர்ந்து, இப்படியாக எழுதினார், "மேலும் நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி துரோவாபட்டணத்தில் வந்த போது, கர்த்தராலே எனக்கு கதவு திறக்கப்பட்டிருக்கையில், நான் என் சகோதரனாகிய தீத்துவைக் காணாதபடியினாலே, என் ஆவிக்கு அமைதலில்லாதிருந்தது ..." (2 கொரிந்தியர் 2:12, 13).

"உங்களைச் சேர்ந்தவனாகிய எப்பாப்பிரா" (4:12)

எப்பாப்பிரா, "லூக்கா," மற்றும் "தேமா" (காண்க வசனம் 14) ஆகியன புறஜாதிப் பெயர்கள். தனது உடன் வேலைக்காரர்களாகிய யூதர்களிடமிருந்து வாழ்த்துக்களைச் சொன்னபின் பவுல் தன்னுடைய புறஜாதி உடன் வேலையாட்களிடமிருந்து பெயரிட்டுச்சொல்லி வாழ்த்துகிறார்.

பவுல் எப்பாப்பிராவைக்குறித்து உயர்ந்த மதிப்பீட்டை வெளிப்படுத்தி

தனது உடன் வேலையாளாகச் சேர்த்து இந்நிருபத்தின் முன்னுரையில் குறிப்பிட்டார் (1:7). அவனுடைய முழுப்பெயர் எப்பாப்பிரா தீத்து. பிலிப்பிய நிருபத்தை பவுல் எழுதிய போது அவனுடன் இருந்த நபர் பிலிப்பிலிருந்து வந்தவனல்ல (பிலிப்பியர் 2:25; 4:18).

எப்பாப்பிரா கொலோசெயர்களுக்கு நெருங்கினவனாக இருந்திருக்க வேண்டும். எப்பாப்பிராவை தீமோத்தேயுவுடனோ அல்லது தீமோத்தேயுவுக்குப் பதிலாகவோ ஏன் பவுல் உள்ளடக்கவில்லை? நிருபத்தை எழுத உதவிசெய்தவர்களின் பட்டியலில் அறிமுகவுரையில் அவனை அவர் ஏன் சேர்க்கவில்லை? ஒரு சிறைப்பட்டவனாக, அவன் பவுலிடமிருந்து பிரிக்கப்பட்டவனாகவும் அடிக்கடி காணப்படாதவனாகவும் இருந்திருக்கக் கூடும். மேலும் அவன் பவுலுடன் சிறைவைக்கப்பட்டிருந்தவனானால் (பிலேமோன் 23), அவன் பயணம் பண்ண இயலாதவனாகவும் இருந்தான், அவனை தீகிக்குவுடனும் ஒநேசிமுவுடனும் நிருபத்தை கொடுக்கும்படி பவுல் ஏன் அனுப்பவில்லை என்பதை விளக்கப்படுத்தும்.

உங்களைச் சேர்ந்தவன் என்பது எப்பாப்பிராவின் சொந்த ஊர் கொலோசெ என்பதையும் அல்லது அவன் தன்னை அந்த பிராந்தியத்திலிருந்து வந்தவன் அல்லது கொலேசெயிலிருந்த உள்ளூர்சபையைச் சேர்ந்தவன் என்பதாகக் கருதினதாகவும் குறிப்பிடுவதாயிருக்கலாம். அவன் கொலோசெயிலும் அதே போல லவோதிகேயாவிலும் ஏரோபோலியிலும் ஊழியம் செய்யத் தெரிவு செய்து கொண்டிருக்கக் கூடும், ஏனெனில் அவனுடைய உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரினிமித்தமாகவோ அல்லது அந்தப் பகுதியில் கொண்டிருந்த ஆர்வத்தினாலோ இருக்கலாம். பவுல் எபேசுவில் இருந்தபோது, எப்பாப்பிரா அந்தப் பகுதியைச் சேர்ந்தவன் என்பதால் அங்கே ஊழியம் செய்யும்படி கொலோசெவுக்கு அவனை அனுப்பியிருக்கலாம். அவன் தன்னுடைய சொந்த மாகாணத்தில் விசேஷித்த ஆர்வத்தை இயல்பாகவே கொண்டிருந்திருக்கக் கூடும்.

"கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும், பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்" (4:12)

பவுல் தன்னுடைய நிருபங்களில் இயேசு கிறிஸ்துவின் உடன் ஊழியக்காரன் எனும் பதத்தை எப்பாப்பிராவுக்கும், தீமோத்தேயுவுக்கும், மற்றும் தனக்கும் மட்டுமே பயன்படுத்தினார் (ரோமர் 1:1; கலாத்தியர் 1:10; பிலிப்பியர் 1:1; தீத்து 1:1). இப்படிக் கனப்படுத்துவதன் மூலம் பவுல் எப்பாப்பிரா குறித்து தனது நல்லெண்ணத்தைக் காட்டினார். அவர் எப்பாப்பிராவை "உடன் வேலையாள் என்றும்" குறிப்பிட்டார் (1:7; 4:7), தன்னையும் அவனுடன் இணைத்து இயேசுவின் ஊழியக்காரன் எனும் ஸ்தானத்தையே கொடுத்து அழைத்துக் கொண்டார். "வேலைக்காரன்" மற்றும் "அடிமை" ஆகியவை மதிப்பைக் குறைக்கும் பதங்களாய்க் காணுகிறது, ஆனால் பவுல் அவற்றை இந்த விதமாகப் பயன்படுத்த வில்லை. அவர் அதை இயன்ற வரை இயேசுவின் வேலைக்காரன் மற்றும் அடிமை என்ற உயர்ந்த

ஸ்தானமாகவே கருதினார்.

"நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்று ..." (4:12)

எப்பாப்பிராத்து அவனுடைய சகோதரர்கள் பூரணமுள்ளவர்களாய் நிலைநிற்க வேண்டுமென்று ஜெபம் பண்ணினான். "நிலைநிற்றல்" (stathēte, எனும் வார்த்தை histēmi யிலிருந்து வந்தது), சரீரப்பிரகாரமாக ஒரே நிலையில் "நிற்றல்." ஆவிக்குரிய பொருளில், உறுதியாக நிற்குதல் அல்லது ஒரு திடநம்பிக்கையுடன் நிற்குதல், அசைக்கப்படாதபடி நிலை நிறுத்தப்படல்[4] *என்று பொருள். எப்பாப்பிரா கொலோசெயர்களை விசுவாசத்தில் தரித்திருக்கும்படியாகவும் உலக வழிபாடுகளிலும் பாரம்பரியங்களிலும் கொள்ளைகொண்டு போய் விடாதபடிக்கும் ஜெபம் பண்ணினான்.*

"நிற்குதல்" என்பது, செயற்பாட்டு வினையில் எப்பாப்பிரா ஜெபித்து இந்தக் கிறிஸ்தவர்கள் பூரணமாய் நிற்கச் செய்யப்பட வேண்டும் என்று கேட்டான். அவர்கள் எப்படி நிலை நிற்கச் செய்யப்பட வேண்டுமென பவுல் விளக்கப்படுத்த வில்லை. சிலர் தெய்வீக உதவியால் மாத்திரமே அவர்களுடைய நிலை நிற்குதல் வரவேண்டுமென ஜெபித்ததாகக் குறிப்பிடுகின்றனர், தெய்வீக உதவி பரிசுத்த ஆவியின் மூலம் கொடுக்கப்படுகிறது (எபேசியர் 3:16), ஆனால் மனுஷருடைய ஒத்துழைப்பு இல்லாமல் அது வருவதில்லை. எபேசுவிலிருந்து கிறிஸ்தவர்கள் நிற்கும்படி கட்டளையிடப்பட்டனர், அது அவர்களுடைய பகுதியில் நிற்க ஏதுவான பிரயாசத்தை எடுத்துக் கொள்ளுவதைக் குறிக்கிறது (எபேசியர் 6:13, 14).

"பூரணமுள்ளவர்களாய்" (teleioi) என்பது முழுமையையும் முதிர்ச்சியையும் குறிக்கிறது, அது குறைவில்லாதத் தன்மைக்கு மேலானது. NASB யில் இந்த கிரேக்க வார்த்தை "பூரணமுள்ள" என்று பன்னிரெண்டு முறை மொழிபெயர்க்கப் பட்டுள்ளது, அவைகளில் ஏழு முறை "முதிர்ச்சி" என்றோ அல்லது "முழு வளர்ச்சி" என்றோ சிறப்பான மொழிபெயர்ப்பில் குறிப்பிடப்படுகிறது, ஏனெனில் அவை கிறிஸ்தவ குணாதிசயங்களை வளர்த்துக் கொள்வதைக் குறித்துப் பேசும் பகுதி (மத்தேயு 5:48; பிலிப்பியர் 3:15; 3:12; யாக்கோபு 1:4; 3:2; 1 யோவான் 4:18). நான்கு சரியான தொடர்புடைய காரியங்களை முழுமையோடு சம்பந்தப்படுத்தி தேவனுடைய வசனத்தில் அல்லது தேவனுடைய சித்தத்தில் காணுகிறது (ரோமர் 12:2; 1 கொரிந்தியர் 13:10; யாக்கோபு 1:17, 25). மற்றும் ஒன்று பரலோகத்தின் உத்தமமான கூடாரத்தைக் குறிப்பிடுகிறது (எபிரெயர் 9:11). மற்ற வசனப் பகுதிகளில் NASB teleios எனும் வார்த்தையின் வகைகளை "தேர்ச்சி" (1 கொரிந்தியர் 2:6; 14:20; எபேசியர் 4:13; எபிரெயர் 5:14) அல்லது "நிறைவு" (மத்தேயு 19:21; கொலோசெயர் 1:28) என்று மொழிபெயர்த்திருக்கிறது.

பாவமில்லாதோர் எவருமில்லை (ரோமர் 3:9, 10, 23). தெய்வம் மட்டுமே பூரணப்பட்டவரும் எவ்விதத் தவறுமில்லாத முற்றிலும் பாவமற்ற தன்மையுடையவர் (மத்தேயு 19:17). மேலே குறிப்பிடப்பட்ட வசனங்கள் வளர்ச்சியடையும் அளவுக்கு கிறிஸ்தவர்கள் கொண்டிருக்க வேண்டிய தகுதியாம்ஸங்களை விளக்கப்படுத்துகிறது. இதினால், teleios என்னும்

வார்த்தையை "பூரணம்" என்று மொழிபெயர்க்காமல் மாறாக "தேர்ச்சி" அல்லது "வளர்ச்சியடைந்த" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். எப்பாப்பிரா கொலோசெயர்களின் சமுதாயத்தில் பயன்தரும் தேர்ச்சிக்காக ஜெபிக்கையில், அது பயனுள்ளதாயிருக்கும் போது குறைவிலா பரிபூரணம் என்பது பிரயோஜனமற்றது. இம்மையில் பாவமற்ற குற்றமற்ற தன்மையை யாராலும் அடைந்து விடமுடியாது (1 யோவான் 1:8, 10). இயேசு மட்டுமே பாவமற்றவராய் வாழ்ந்தார் (2 கொரிந்தியர் 5:21; எபிரெயர் 4:15; 7:26).

கூடுதலாக, கொலோசெயர்கள் தேவனுடைய சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண **நிச்சயமுள்ளவர்களாயும்** *(plērophoreō)* இருக்கும்படி எப்பாப்பிரா ஜெபம் பண்ணினார். இந்த வினைச்சொல்லின் முழுமைச் சொல்வடிவம் கடந்தகால செயலின் தொடர் விளைவைக் குறிப்பது. சத்தியத்தின் செய்தியைக் கேட்டு அவர்கள் மனதில் தீர்மானித்திருப்பதைக் கண்டு, எப்பாப்பிரா அவர்கள் முழுமையாய் மனதில் சம்மதிக்கப்பட்டிருக்க வேண்டும் என ஆசைப்பட்டான்.

தேவனுடைய சித்தமானவைகளெல்லாவற்றிலும் என்று சொல்வதால், தேவன் விரும்புகிற எந்த காரியத்தையும் விட்டு விடாமல் என்று பவுல் பொருள்படுத்தினார். அவர்கள் அவருடைய சித்தத்தில் ஒன்றைக் கூட்டினாலோ அல்லது குறைத்தாலோ, அவர்கள் அவருக்குச் "சித்தமானவைகளெல்லாவற்றையும்" செய்பவர்களல்ல. இயேசு அப்போஸ்தலர்களுக்கு கட்டளையிட்டு சீஷராகி ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் அவர் கட்டளையிட்ட எல்லாவற்றையும் கைக் கொள்ளும்படி உபதேசிக்க வேண்டுமென்று சொன்னார் (மத்தேயு 28:19, 20). ஒரு நபர் அவருடைய கட்டளைகள் "எல்லாவற்றையும்" அவர் வெளிப்படுத்தினவைகளில் ஒன்றையுங் கூட்டாமலும் குறைக்காமலும் செயல்படும்போது மாத்திரமே நிறைவேற்றுபவராயிருப்பார்.

அடுத்ததாக, பவுல் இந்த எப்பாப்பிரா **தன் ஜெபங்களில் எப்பொழுதும் (அவர்களுக்காக) போராடுகிறான்** என்று சொன்னார். "எப்பொழுதும் போராடுகிறான்" *(agōnizomenos*, எனும் வார்த்தையிலிருந்துதான் agonize லிருந்து வந்தது), இதன் பொருள் "உண்மையான பிரயாசத்துடன் உடனடியாக செயல்படுவது,"[5] லூக்கா கெத்சமனே தோட்டத்தில் இயேசு (துக்கத்தோடும் வியாகுலத்தோடும்) ஜெபித்த விதத்தை இந்த வார்த்தையின் வினைச்சொல்லில் விவரிக்கிறார் (லூக்கா 22:44), அதேபோல பவுலும் கொலோசெயருக்காக தான் போராடியதைக் குறிப்பிட்டார் (2:1). அவர் ஒரு வினைச்சொல்லைப் பயன்படுத்தி அவர்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில் தன்னைப் போலவே போராட வேண்டுமென்று வேண்டிக் கொண்டார் (ரோமர் 15:32). இங்கே சொல்லப்படும் சொற்றொடர் எப்பாப்பிராவின் ஜெபம் ஊக்கமாக இருப்பதை வெளிப்படுத்துகிறது. அவர் ஊக்கமாய் ஜெபித்தது மாத்திரமல்ல, அதைத் தொடர்ந்து செய்தார் ("எப்பொழுதும்").

"இவன் உங்களுக்காகவும் லவோதிக்கேயருக்காகவும், எராப்போலியருக்காகவும், மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கிறான் என்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன்" (4:13)

லவோதிக்கேயா மற்றும் எராப்போலி ஆகிய இரண்டு பட்டணங்களும்

லீகஸ் பள்ளத்தாக்குவிலிருந்த நதியிலிருந்து, ஆறு மைல்களுக்கப்பால் எதிரெதிர் பக்கங்களில் அமைந்திருந்தவை. எப்பாப்பிரா பவுலுக்கு நெருக்கமான உடன் வேலைக்காரனாயிருந்தபடியாலும் அடிக்கடி இந்த சகோதரர்களுக்காக அவருடன் சேர்ந்து ஜெபித்ததாலும், அந்தக் கிறிஸ்தவர்கள் அவனுடைய இருதயத்தில் பலமான இடம் வகித்திருந்ததை பவுல் அறிந்திருந்தார். அவன் தொடர்ந்து அவர்களுடைய சார்பாக, அவர்களின் உறுதிப்பாட்டிற்காகவும் இயேசுவுக்கு ஒப்புக் கொடுக்கவும் ஜெபித்தான்.

"பிரியமான வைத்தியனாகிய லூக்காவும், தேமாவும், உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" (4:14)

லூக்கா *என்பது "லூசியஸ்" எனும் இலத்தீனப் பெயருடன் கூடிய செல்லப் பெயர். **பிரியமான வைத்தியன்** என்று சொல்லப்படுவது பவுல் லூக்காவிடத்தில் கொண்டுள்ள நேசத்தைக் காட்டுகிறது. "பிரியமான" என்பது பவுல் தனது மற்ற உடன் பணியாளர்களுடன் தான் கொண்டுள்ள பாசத்தை விவரிக்கும் பொருட்டு வெளிப்படுத்தும் அன்பின் சொல்.[6] இது பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளும் பாசம், லூக்கா பவுலைச் சார்ந்திருந்து மற்றவர்களெல்லாரும் அவரை விட்டுப் போயிருந்த வேளையிலும் அவன் அவரோடிருந்தான் (2 தீமோத்தேயு 4:11).*

நடபடிகள் 27:28ன்படி, லூக்கா பவுலோடுகூட ரோமாபுரிக்கு கப்பலில் பயணித்து, அவர் காவலில் இருந்த போது, தானும் அவரோடு தங்கியிருந்தான். இரண்டாம் மூன்றாம் சுவிசேஷப் புத்தகங்களை எழுதினவர்களாகிய, மாற்கு லூக்கா ஆகியோர் பவுலின் இரண்டாம் சிறையிருப்பின்போது பவுலோடு கூட அவர்களெல்லாரும் ஒரே நேரத்தில் ஒன்றாக இருந்திருக்கிறார்கள் என்பது ஆர்வமளிக்கிறது. அவர்கள் தகவல்களை பரிமாறிக் கொண்டார்களா? அவர்கள் அதற்கு முன்பே தங்கள் சுவிசேஷ புத்தகங்களை எழுதிவிட்டனரா? நமக்குத் தெரியாது.

மேலும் இரண்டு சிறை நிருபங்களில், லூக்கா மற்றும் அப்போஸ்தலர் நடபடிகளை எழுதின ஆசிரியரான லூக்காவை தன்னுடைய உடன் வேலையாட்களாக பவுல் குறிப்பிட்டார் (2 தீமோத்தேயு 4:11; பிலேமோன் 24). லூக்காவின் பெயர் இந்தப் புத்தகங்களில் காணப்படாவிட்டாலும், பவுலின் நிருபங்களுடன் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அங்கே தீத்துவும் லூக்காவும் மட்டுமே பவுலுடன் இருந்திருக்க வேண்டுமென தெரிகிறது. ஏனெனில் புத்தகத்தின் ஆசிரியர் "நாங்கள்" "எங்கள்" என்று குறிப்பிட்டிருப்பதே இதற்கு ஆதாரம்.[7] லூக்கா தான் இரு புத்தகங்களையும் எழுதினார் என்பதற்கு பிற சாட்சியங்களாக, லூக்கா எழுதின இரண்டு புத்தகங்களின் மொழிநடை, அவன் நன்கு கற்றறிந்தவன் என்பதை பிரதிபலிக்கிறது, கூடவே ஆரம்ப கால எழுத்தாளர்களான Diognetus, Irenaeus, Alexandria, *வைச் சார்ந்த* Clement, Tertullian, *மற்றும்* Eusebius *ஆகியோரின் சாட்சியங்களும் காணப்படுகிறது.*

பவுல் லூக்காவை "பிரியமான வைத்தியனாகிய லூக்கா" என்று அழைத்தார் (4:14), மேலும் அவனோடே கூட மாற்கு, அரிஸ்தர்க்கு, மற்றும் தேமா ஆகியோருடைய வரிசையில் தன்னோடே கூட "உடன் வேலையாட்களில்" அவனும் ஒருவன் என்று குறிப்பிட்டார் (பிலேமோன் 24). அப்போஸ்தலர்

நடபடிகளில் தான் ஒரு வைத்தியன் என்று லூக்கா எழுதவில்லை, மாறாக அவன் பவுலோடும் மற்றவர்களோடும் சுவிசேஷத்தைப் பரப்புவதில் பிரயாசப்பட்டதாகக் குறிப்பிட்டான். தேவன் ("அவர்களை) சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அழைத்தார்" என்று லூக்கா எழுதினான் (நடபடிகள் 16:10).

அப்போஸ்தலர் நடபடிகளில் வருகிற "நாங்கள்" என்ற வசனங்களெல்லாம் லூக்கா துரோவாவில் பவுலின் இரண்டாவது சுவிசேஷப்பயணத்தின் போது அவரோடு ஊழியப்பணியில் சேர்ந்து கொண்டார் என்பதை வெளிப்படுத்துகின்றன. அவன் துரோவாவில் பவுலுடன் சேர்ந்து கொள்ளும் போது அநேகமாக ஒரு கிறிஸ்தவனாக இருந்திருக்க வேண்டும், ஏனெனில் மக்கதோனியாவுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அவனும் அந்த அழைப்பிற்குட்பட்டிருந்தான் (நடபடிகள் 16:10). தனக்கு மருத்துவக்கவனிப்புக்குத் தேவையாகக் கருதி பவுல் அவனை தொடர்பு கொண்டதாக சிலர் யூகிக்கின்றனர். பவுல் அவனோடு கொண்டிருந்த நட்புறவின் மூலம் அவனை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வந்தார், தனது சுய மருத்துவர் ஒருவர் பவுலின் மருத்துவ தேவைகளினிமித்தம் அவருக்கு உதவி செய்யும்படிக்கு அவன் அவரோடு கூட தொடர்ந்து பயணித்தான். இது ஒரு யூகம் மட்டுமே, உறுதியாக இதை நினைத்து ஏற்றுக் கொள்ள இயலாது.

பவுலோடும் பிற வேலையாட்களோடும், லூக்கா துரோவாவிலிருந்து பிலிப்பி வரை பயணம் பண்ணினான். அங்கே, சந்தைவெளியில், ஒரு குறிப்பிட்ட அடிமைப் பெண்ணை அவன் எதிர் கொண்டான், அவள் அவனையும் (பவுல், சீலா மற்றும் தீமோத்தேயு ஆகியோரையும்) பின் தொடர்ந்து வந்து, "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" என்று சொன்னாள் (நடபடிகள் 16:17). அவளுடைய இந்த வார்த்தைகள் அவரும் மற்றவர்களும் இயேசுவின் நாமத்தினாலே இரட்சிப்பைப் போதித்தார்கள் என்பதைக் காட்டுகிறது. பவுலும், சீலாவும், தீமோத்தேயுவும் சென்ற பின்பு லூக்கா, பவுல் மீண்டும் தனது மூன்றாவது சுவிசேஷ பயணத்தின்போது திரும்பி வரும்வரை பிலிப்பியில் தங்கியிருந்தான் (நடபடிகள் 16:10-17; 20:5-15). அங்கிருந்து, அவன் பவுலோடு எருசலேம் வரை தொடர்ந்து போய் (நடபடிகள் 21:1-18) பிறகு ரோமாபுரிக்கும் பயணம் பண்ணி, பின்னர் இரண்டு வருடங்கள் பவுலோடு இருந்தான் (நடபடிகள் 27:1-28:16).

சிலர் தீத்து லூக்காவின் சகோதரன் என்பதாக யூகிக்கின்றனர், அப்படி யூகிக்கக் காரணம் லூக்கா அவனை பவுலுடைய உடன் ஊழியன் என்று குறிப்பிடாததை அடிப்படையாகக் கொண்டு அப்படி நினைக்கின்றனர். பவுலின் நிருபங்கள் தீத்து பவுலோடு மூன்றாம் சுவிசேஷ ஊழியத்தில் இருந்ததற்கான சாட்சியத்தைக் கொடுக்கிறது (காண்க 2 கொரிந்தியர் 2:13; 7:6; கலாத்தியர் 2:1-3). இது உண்மையாயின், லூக்கா தனது சகோதரன் தீத்துவின் பெயரையோ, அல்லது தனது சொந்தப் பெயரையோ அப்போஸ்தலர் நடபடிகளில் கொடுக்கவில்லை என்பது லூக்காவின் நற்குணமாக அவனது தன்னடக்கம் என்று பொருள் கொள்ளலாம்.

லூக்காவின் பெயர் புறஜாதிகளாகிய மற்ற உடன் வேலையாட்களுடன் வரிசைப்படுத்தப்பட்டிருப்பதால் லூக்காவும் ஒருவேளை புறஜாதியிலிருந்து வந்தவனாக இருக்கலாம். ஓரிஜென் அவனை அறியப்படாத

லூகி என்பவனுடன் அடையாளப்படுத்தி ரோமர் 16:21ல் பவுல் அவனை இவனுடைய இனத்தான் என்று குறிப்பிட்டார். யூசிபியஸ் மற்றும் யெரோம் ஆகியோர் இந்தமனுஷன் சிரியாவிலுள்ள அந்தியோகியாவில் பிறந்தான் என்ற முடிவுக்கு வந்தனர்.[8] அப்படியிருக்குமானால் நடபடிகள் 13:1ல் குறிப்பிடப்படுகிற சிரேனே ஊரானாகிய லூகி இவனாகத்தான் இருக்க வேண்டும் என்று சிலர் குறிப்பிடுகின்றனர். வைத்தியனுக்கும் (லூக்காவுக்கும்) இந்த இருவருக்கும் எதுவும் தொடர்பு இருப்பதாக உறுதியான ஆதாரம் எதுவுமில்லை. மற்றொரு அடிப்படை ஆதாரமற்ற கூற்று அவன் (லூக்கா) தியோபிலுவே எனப்பட்ட, அநேகமாக ஒரு ஐசுவரியமிக்க அரசு அதிகாரியின் வீட்டாருக்கு சேவை செய்ததாகவும் அவனுக்குத்தான் லூக்கா மற்றும் அப்போஸ்தலர் நடபடிகள் ஆகிய புத்தகங்களை எழுதியிருந்தான் என்றும் கூறப்படுகிறது (லூக்கா 1:3; நடபடிகள் 1:1). பாரம்பரியத்தின்படி, லூக்கா தல்மாத்தியா, கவுல், இத்தாலி, மற்றும் மக்கதோனியா ஆகிய பகுதிகளில் பவுலின் மரணத்துக்குப் பின்பு பிரசங்கியாராக ஊழியஞ் செய்தான் என்று நம்பப்படுகிறது; அவன் முதல் நூற்றாண்டின் இறுதியில் அகாயாவிலோ பித்தினியாவிலோ மரித்திருக்கக் கூடும் என்றும் சொல்லப்படுகிறது.[9]

தேமாவின் *பெயர் லூக்காவுடன் கொலோசெயர் மற்றும் பிலேமோன் புத்தகங்களில் இடம் பெறுகிறது. இந்த உடன் வேலையாட்களைக் குறித்து பவுல் கடைசியாக எழுதிய போது, லூக்கா பவுலோடு தங்கியிருந்தான் - அப்பொழுது அவர் காவலில் வைக்கப்பட்டிருந்தார் - அவ்வேளையில் தேமா தெசலோனிக்கேயாவுக்குப் புறப்பட்டு போயிருந்தான் (2 தீமோத்தேயு 4:10, 11). "தேமா" என்பது "தெமெத்திரியு" என்ற பெயரின் சுருக்கப்பெயர், என்றும் ஆதலால் சிலர் 3 யோவான் 12ல் குறிப்பிடப்படுவது இவன்தான் என்றும் அடையாளப்படுத்த ஏதுவாக்கிற்று. மற்றவர்களை விமர்சிப்பது போல பவுல் இவனை விமர்சனம் செய்யாமல் குறிப்பிட்டிருப்பதால் கொலோசெயர்கள் இவனை நன்கு அறிந்திருந்தனர் என்று தெரிகிறது. அதே வேளையில், பவுல் ஒருவேளை இவனைக் குறித்து ஒன்றும் உயர்த்தி சொல்ல இல்லாமலிருந்ததால் அவனை எதுவும் விமர்சிக்க வில்லை என்பதாக இருக்கலாம். 2 தீமோத்தேயுவில், தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசைவைத்து பவுலை விட்டு, அவன் பிரிந்து போனான் என்று பவுல் அவனைப் பற்றிச் சொன்னார் (4:10). ஒருவேளை பவுல் பின்னால் தெளிவாக வெளிப்படப்போகிற ஸ்திரமின்மையை அவனில் கண்டறிந்தார்.*

சகோதரர்களுக்கு வாழ்த்துக்களும் குறிப்புரைகளும் *(4:15-17)*

15லவோதிக்கேயாவிலிருக்கிற சகோதரரையும், நிம்பாவையும், அவன் வீட்டில் கூடுகிற சபையையும் வாழ்த்துங்கள். 16இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்ட பின்பு இது லவோதிக்கேயா சபையிலும் வாசிக்கப்படும்படி செய்யுங்கள்; லவோதிக்கேயாவிலிருந்து வரும் நிருபத்தை நீங்களும் வாசியுங்கள். 17அர்க்கிப்பைக் கண்டு: நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருப்பாயாகவென்று சொல்லுங்கள்.

“லவோதிகேயாவிலிருக்கிற சகோதரர்களை வாழ்த்துங்கள்” (4:15)

லவோதிக்கேயர்களை வாழ்த்துவதும் பவுலின் நிருபத்தை அவர்களோடு பகிர்ந்து கொள்வதும் கொலோசெயர்களுக்கு எந்தக் கஷ்டத்தையும் உண்டாக்கப் போவதில்லை, ஏனெனில் அவர்களின் இரண்டு பட்டணங்களும் சுமார் பத்து மைல் இடைவெளியில் இருந்தன. **லவோதிக்கேயாவிலிருந்த** *அநேகரையும் பவுல் அறியாதிருந்த போதிலும், அவர் அந்த உள்ளூர் சபையில் சில அங்கத்தினர்களை அறிந்திருந்தார். நிம்பாவை அவர் பெயர் அளவில் அறிந்திருந்தார். பவுல் எபேசுவில் மூன்று வருடம் தங்கியிருக்கையில் சில லவோதிக்கேயர்கள் பவுலைப் போல் பார்த்திருக்கக் கூடும் (நடபடிகள் 20:31).*

சகோதரர்கள் *(adelphoi), ஆண்பாலில் இவ்வார்த்தை குறிப்பிடப்பட்டாலும், அநேகமாக ஆண்பெண் இரு சாராரையும் குறிப்பிடுகிற வார்த்தை இது. பவுல் “சகோதரர்களே, சகோதரிகளே” என்று அவர்களை அவர் அழைத்து எழுதியிருக்கலாம், இதிலே பெண்பால் வார்த்தையான adelphai. சேர்ந்திருக்கக் கூடும். ஆகிலும் இங்கு adelphoi எனும் வார்த்தை குறிப்பிடப்பட்டிருப்பதால், பவுல் நிச்சயமாக “சகோதரர்களே” என்பதை ஒரு பொதுவான பொருளில் தான் குறிப்பிட்டு சகோதரிகள் தங்களையும் அதிலே உட்படுத்தி எழுதியிருக்கிறார் என்று புரிந்து கொண்டிருப்பார்கள்.*

ஒரு உள்ளூர் சபை மற்றொரு உள்ளூர் சபையை **வாழ்த்தும்படி** *குறிப்பிடப்பட்ட ஒரே இடம் புதிய ஏற்பாட்டில் இது மட்டும்தான். இந்த வாழ்த்துதலை எப்படிச் செலுத்த வேண்டும் என்று பவுல் குறிப்பிடவில்லை, ஒரு பிரதி நிதியிடம் நிருபத்தைக் கொடுத்தனுப்பியா அல்லது ஒரு முகவர் போய் நேரில் வாழ்த்துவதா, தனிப்பட்ட முறையிலா அல்லது ஒரு பொதுவாகக்கூடும் பொழுதா என்று குறிப்பிடவில்லை. யார் வாழ்த்துவது என்றும் குறிப்பிடவில்லை; நிருபத்தை வாசிக்கிறவரா, உள்ளூர் சபையில் காணும் ஒரு முன்னோடியா, அல்லது வேறு யாராகிலுமா. கொலோசெயிலிருந்தவர்கள்* **லவோதிக்கேயாவில்** *இருப்பவர்களை வாழ்த்தும்படி பவுல் சொன்னார். தான் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தை அவர்கள் வாசித்தே ஆக வேண்டும் என்று அவர் எழுதவில்லை, கொலோசெயர்கள் லவோதிக்கேயர்களை வாழ்த்தும்படி ஆலோசனை கொடுத்தது இந்த இரண்டு சபைகளுக்குள்ளும் உள்ளான உறவுமுறை நிலவியது என்பதால் தான் மற்றும் ஒருவேளை வேறே உள்ளூர் சபை விசுவாசிகளும் இதிலே இருந்திருக்கலாம், இந்த இரண்டு சபைகளும் நிச்சயமாக ஒன்றுக்கொன்று ஐக்கியம் கொள்ள போதிய நெருக்கம் அவைகளுக்குள் இருந்தன.*

“நிம்பாவையும், அவன் (அவள்?) வீட்டிலே கூடிவருகிற சபையையும் வாழ்த்துங்கள்” (4:15)

சபை *(ekklēsia) என்பது பல்வேறு விளக்கங்களை கொண்டிருந்த போதிலும், இங்கே அது உலகளாவிய சபையைக் குறிக்காமல் உள்ளூர் சபையையே குறிக்கும்.*

உள்ளூர் சபைகள் பெரும்பாலும் தனிப்பட்டோரின் வீடுகளின்தான் கூடிவந்துள்ளன (நடபடிகள் 12:12), விசேஷமாக பணக்கார அங்கத்தினர்களின் வீடுகளில், கூடிவர ஏதுவான மிகப்பெரிய அறைகளைக் கொண்ட வீடுகளில் தொழுதனர். முதல் இரண்டு நூற்றாண்டுகள் வரை, கிறிஸ்தவர்களின்

இயற்கையான தொழுது கொள்ளுமிடம் இதுவாகத்தானிருந்தது. மற்ற கிறிஸ்தவர்களின் வீடுகளில் சபைகள் கூடிவருவதை பவுல் குறிப்பிட்டார் (ரோமர் 16:5, 23; 1 கொரிந்தியர் 16:19; பிலேமோன் 2).

நிம்பா *என்ற பெயரின் பாலினம் (அல்லது "நிம்பாஸ்") அதன் அடுத்து வரும் பெயரிடைப் பண்பை குறிக்கும் சொல்லைக் கொண்டு தீர்மானிக்க இயலாது. இந்த விஷயத்தைப் பொறுத்த மட்டில் இதில் வரும் பிரதிப் பெயர்ச்சொல் எந்த பாலினம் என்று தீர்மானிக்கிறது. சிறப்பான சில கையெழுத்துப் பிரதி கள் "அவன் வீட்டிலே" என்பதற்குப் பதிலாக "அவள் வீட்டிலே" என்று குறிப்பிடுகிறது, இப்படி மொழிபெயர்ப்புகள் வேறுபடுகின்றன, ஆங்கில மொழிபெயர்ப்புகளான* NIV, TNIV, 1977 NASB, *மற்றும்* NASB *ஆகியன "அவள்" என்றே சொல்லுகிறது; ஆனால்* NASB*யில் கொடுக்கப்பட்டுள்ள அடிக்குறிப்பில்: அல்லது நிம்பாஸ் (ஆண்*[*பாலில்*]*) என்று குறிப்பிடுகிறது.* KJV *மற்றும்* NKJV *யில் "அவன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது."* ASV*யில் "அவர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சில விளக்கவுரையாளர்கள் குறிப்பிடுகையில் பின் சந்ததியார் ஒரு வீட்டின் உரிமையாளராக பெண்ணை குறிப்பிட்டுச் சொல்வதை கேள்வியெழுப்பினர் ஆதலால் "அவன் வீட்டார்" என்று மாற்றப்பட்டதாக யூகிக்கின்றனர்; ஆகிலும் இது மதிப்பிற்குரிய விளக்கமல்ல. யோவான் மாற்கின் தாயாகிய மரியாளுக்கு, எருசலேமில் ஒரு வீடு இருந்தது (நடபடிகள் 12:12), மற்றும் லீதியாள் பவுலையும் அவருடன் இருந்தவர்களையும் "என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள்" என்று கேட்டாள் (நடபடிகள் 16:15), இவைகள் ஸ்திரீகளும் வீட்டிற்கு சொந்தக்காரர்களாயிருந்துள்ளனர் என்று காட்டுகிறது. மேலும் நிம்பாஸ் என்பது ஆணின் பெயராகிய* Nymphodorus *என்பதன் சுருக்கப்பெயர் என்றும் அந்த வீடு ஒரு ஆணுக்கு உரியது என்றும் கருத்து சொல்லப்படுகிறது. ஆகிலும் கையெழுத்துப் பிரதியின் சாட்சியம், "அவளுடைய வீடு" என்றே குறிப்பிடுவதால் அது சரியான தெளிவுடைய கருத்து.*

பவுல் ஒருவேளை நிம்பாவை தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கலாம். குறைந்தபட்சம் நிம்பாவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள செயல் அவர் அவளை ஒருவேளை சந்தித்திருக்க வேண்டும் அல்லது அவளைக் குறித்த செய்தியை யாரிடமிருந்தாவது, ஒருவேளை எப்பாப்பிராவிடமிருந்து கூட, தெரிந்திருக்கலாம். பவுல் (தனது நிருபங்களில்) ஒரு பெண்ணின் பெயரைக் குறிப்பிடுவது வழக்கத்துக்கு மாறானதல்ல, ஏனெனில் மற்ற நிருபங்களில் பெண்களின் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார் (காண்க ரோமர் 16:3, 6; 1 கொரிந்தியர் 16:19; பிலிப்பியர் 4:2, 3).

நிம்பா வாழ்ந்து கொண்டிருந்த பட்டணம் நிச்சயமாக தீர்மானிக்க இயலாது. லவோதிக்கேயா சபைக்கு பவுலின் வாழ்த்துரையை தொடர்ந்து உடனடியாக அவள் குறிப்பிடப்படுவதால், இது அவளுடைய அங்கம் வகிக்கும் சபையாக இருந்திருக்க வேண்டும். நிருபத்தை வாங்கினவர்கள் அவள் எங்கே குடியிருந்தாள் என அறிந்திருக்கக் கூடும்.

"இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்ட பின்பு இது லவோதிக்கேயா சபையிலும் வாசிக்கப்படும்படி செய்யுங்கள்" (4:16)

வாசியுங்கள் *(anaginōskō)* *என்பது பொதுவாக வாசிப்பதைக் குறிக்கிறது.*

Anagnōsis, எனும் வார்த்தை, பொதுவான வாசிப்பாக புதிய ஏற்பாட்டில் மூன்று முறை மட்டுமே காணப்படுகிறது (நடபடிகள் 13:15; 2 கொரிந்தியர் 3:14; 1 தீமோத்தேயு 4:13). பவுலின் நிருபங்கள் (உள்ளூர்) சபைகளுக்குள் சுற்றோட்டமாக விடப்பட வேண்டியவைகளாயிருந்தன, அவைகள் இன்றும் படித்து கனப்படுத்தப்பட வேண்டியவைகளாயுள்ளன. **உங்களில்** என்று அவர் சொன்னது சபையிலுள்ள அனைத்து அங்கத்தினர்களும் தனது நிருபத்தின் செய்திகளை கேட்கும்படி ஒரு சந்தர்ப்பம் கொடுக்கும்படி செய்யப்படுவதைக் குறிக்கிறது (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:27).

கொலோசெயிலிருந்த சபையை மட்டுமல்லாமல் பவுல் ஒரு பெரிய கூட்டத்தை மனதில் கொண்டு பேசுகிறார், ஏனெனில் அவருடைய நிருபம் லவோதிக்கேயாவிலும் வாசிக்கப்பட வேண்டும் என்று கேட்டதிலிருந்து இது தெரிகிறது. அதேபோல லவோதிக்கேயாவிலிருந்து வரும் நிருபத்தை கொலோசெயர்களிடம் வாசிக்கப்படுவதையும் அவர் விரும்பினார், இதிலிருந்து அந்த இரண்டு உள்ளூர் சபைகளும் ஒரேமாதிரியான பிரச்சனைகளை சந்தித்ததை காட்டுகிறது, உள்ளூர் சபையின் கூட்டத்தில் அதை யார் வாசிக்க வேண்டும் என்று அவர் குறிப்பாகச் சொல்லவில்லை. கொலோசெயிலிருந்த சபையில் யார் வாசிப்பது அது எப்படி வாசிக்கப்பட வேண்டும் என்ற முடிவை அவர்களுடைய விருப்பத்தின்படி முடிவெடுக்க விட்டுவிட்டார். வசனத்தில் சொல்லப்படும் சில காரியம் என்ன செய்ய வேண்டுமென சொல்லப்படும் என்பதற்கு இது ஒரு சிறப்பான விளக்கம்; ஆனாலும்; எப்படி எப்பொழுது, எங்கே என்பதெல்லாம் சொல்லப்பட்ட அறிவுரைகளை நிறைவேற்றுபவர்களின் தீர்மானத்திற்கு விடப்பட்டிருந்தது.

வழக்கமாக சபை கூடிவந்த வாரத்தின் முதல் நாளிலே வாசிக்கப்பட்டதாக யூகிக்க முடியும். இது அவர்களுக்கு ஒரு விசேஷித்த நாள் (நடபடிகள் 20:7; 1 கொரிந்தியர் 16:2), அது கர்த்தருடைய நாள் (*hē kuriakē hēmera*; வெளிப்படுத்தின விசேஷம் 1:10) என்று அழைக்கப்பட்டது. இந்த சொற்றொடர் தங்களுடைய வாரத்தின் முதல் நாளைக் குறிக்க ஆதி சபையாரால் பயன்படுத்தப்பட்டது.

"லவோதிக்கேயாவிலிருந்து வரும் நிருபத்தை நீங்களும் வாசியுங்கள்" (4:16)

லவோதிக்கேயாவிலிருந்து வரும் நிருபம் என்று குறிப்பிடுவது அவ்வளவு எளிதாக பதில் அளிக்க இயலாத கேள்விகளை எழுப்புகிறது. பல்வேறு சாத்தியக்கூறுகள் தெரிவிக்கப்படுகின்றன.

(1) இது லவோதிக்கேயர்களுக்கு பவுலால் எழுதப்பட்ட காணாமல் போன நிருபம் என்று சிலர் நினைக்கின்றனர். மார்மன் என்ற பிரிவு கூட்டத்தார் இதை வைத்துக் கொண்டு அநேகதெளிவான விலைமதிப்பற்ற காரியங்கள் திருமறையில் காணவில்லை என்கின்றனர். லவோதிக்கேயாவுக்கு எழுதப்பட்ட நிருபம் என்ற பெயரில் நான்காம் நூற்றாண்டு வாக்கில் வழக்கத்துக்கு மாறான ஒரு நிருபம் தோன்றியது.

> ஜெரோமும்[10] ... சில கிரேக்க தந்தைகளும் லவோதிக்கேயரின் நிருபம் என்ற பெயரில் வெளியான கள்ளப்பிரதியை மேலோட்டமாக இரண்டாம்

நீசியக் கூட்டத்தில் பேசி அதைப் (கி.பி. 787) புறந்தள்ளினார்கள். ஆகிலும், ஆறாம் நூற்றாண்டு தொடங்கி, அநேக இலத்தீன (மூலகைப் பிரதிகள்) Codex Fuldensis *உடன் மத்திய யுகம்வரை தொடர்ந்து வசனத்தைப் போன்ற போலியான தோற்றத்துடன் லவோதிக்கேயருக்கு எழுதப்பட்ட நிருபம் என்று ஒரு புத்தகம் வெளியானது: மிகவும் பெலவீனமானதும் அமைப்பற்றதுமான சொற்றொடர்களைக் கொண்டு பவுலின் எழுத்துக்களாக சித்தரித்து, முக்கியமாக பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தின் மொழிநடையை போல உருவாக்கி கொலோசெயர் 4:16ஐ பூர்த்தி செய்யும் நோக்கமேயன்றி வேறெதையும் தெளிவான ஒரு நோக்கமின்றி முக்கியமாக வெளியிட்டுள்ளனர். கிரேக்க மொழியிலிருந்து மொழிபெயர்த்தது போன்ற அடையாளங்களுடன் வெளிக்கொண்டு வரப்பட்டது; வைக்கப்பட்டிருந்த ஒரு அராபிக் மொழிபெயர்ப்பும் இதை உண்மையென கருத்து தெரிவித்தது; அது நான்காம் நூற்றாண்டுக்கு பின்வெளிவந்திருக்க வாய்ப்பில்லை ஆகிலும் இரண்டாம் - நூற்றாண்டின் நிருபம் முரட்டோரியன் கிறிஸ்தவ சட்ட திட்ட தொகுப்பில் தாக்கப்பட்டுள்ளது.*[11]

(2) மற்றொரு கருத்து என்னவெனில் அது பவுல் அப்படிப்பட்ட ஒரு அறியப்படாத உள்ளூர் சபைக்கு எழுதின நிருபம், என்று ஒரு சிலர் கருத்துக் கொண்டுள்ளனர்; மறுபடியும், அப்படி ஒரு நிருபம் இருந்திருந்தால், அது காணமல் போயுள்ளது.

(3) கொலோசெயரில் பவுல் ஏன் லவோதிக்கேயருக்கு வாழ்த்துதலை அனுப்பினார் என்பதை விளக்கப்படுத்த வேண்டுமானால், லவோதிக்கேயருக்கு எப்பாப்பிரா நிருபத்தை எழுதினான் என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. பவுல் இதை எழுதியிராதிருந்தால், எப்பாப்பிரா அவர்களுக்கு தனது வாழ்த்துக்களை அனுப்புவது இது முதல் தடவை, இந்த விளக்கம் கணக்கில் எழுத்துக்கொள்ள வேண்டுவதில்லை ஏனெனில் லவோதிக்கேயா நிருபத்தை பவுல் "தன்னுடைய நிருபம்" என்று குறிப்பிட்டார் (4:16).

(4) ஆதி எழுத்தாளர்களான Chrysostom, Mopsuestis, *ஐசேர்ந்த* Theodore *மற்றும்* Theodoret *ஆகியோர் அது லவோதிக்கேயர் பவுலுக்கு எழுதின நிருபம் என நம்புகின்றனர். இது அறிவுக்குப் பொருத்தமானதாய்த் தெரியவில்லை: தன்னிடத்தில் வந்து சேராத ஒரு நிருபம் பற்றி பவுலுக்கு எப்படித் தெரிந்திருக்கக்கூடும்?*

அந்த நிருபம் கொலோசெயருக்கு ஏன் வாசித்துக்காட்டப்பட வேண்டும்? லவோதிக்கேயா சபையால் எழுதப்பட்ட ஒரு நிருபம் பவுலால் எழுதப்படும் ஒரு நிருபத்திற்கு ஒப்பான அதிகாரம் பெற்றதல்ல, கொலோசெயருக்கு அவர் எழுதின நிருபத்தை லாவோதிக்கேயா சபையில் வாசிக்கக் சொல்லி எதிர் பார்த்தது, அது அவருடைய அப்போஸ்தலிக்க அதிகாரத்தைக் கொண்டிருந்ததாக அவர் கருதினார் என்பதை அது சுட்டிக்காட்டினது.

(5) சிலவேத வல்லுனர்கள் இந்த நிருபம் எபேசியர், பிலேமோன், அல்லது எபிரெயருக்கு எழுதின நிருபத்தின் நகல்கள் என்றும் அவை அதுவே லவோதிக்கேயாவுக்கு போய்ச் சேர்ந்திருக்க வேண்டுமென்றும் நம்புகின்றனர். பிலேமோனுக்கு பவுல் எழுதின நிருபம் தள்ளுபடி

செய்யப்பட்டது, ஏனெனில் அது தனிப்பட்ட செய்திகளை மட்டுமே கொண்டவை, அதிலே கொலோசெயருக்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்கப்படவில்லை. சில வேத வல்லுனர்கள் அது எபிரேயருக்கு எழுதின நிருபம் என்கின்றனர், ஏனெனில் பவுல் தான் அதை எழுதியிருப்பாரா என்று சந்தேகப்படுகின்றனர். மேலும் கொலோசெயர்கள் இயேசுவைக் குறித்து விவாதிக்கிறபடி, அவர் நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் மேலானவர் என்ற கருத்தை மதித்து நடக்கிற அளவுக்கு யூத ஜனத்தொகை கொலோசெயில் இருந்திருப்பார்களா என்ற கேள்வியும் எழும்புகிறது. அந்த நிருபம்தான் அவர் எபேசியருக்கு எழுதியதாக இருந்திருக்கலாம். மார்சியோன்[12] எபேசியர் நிருபத்தை எழுதிய ஆசிரியர் யார் என்று தெரியவில்லை என்றும், பவுல் எழுதியிருக்கலாம் என்று யூகிக்கப்படுவதாகவும், அவருடைய புத்தகத் தொகுப்பில் "லவோதிக்கேயருக்கு" என்று தலைப்பிட்டிருந்ததாகவும் கூறுகிறார்; எப்படியிருப்பினும், குறிப்பிட்ட நம்பிக்கை ஏற்கப்பட்ட மார்க்க எதிர்ப்பு பணியில் யூகத்திற்கு இடமளிக்கலாகாது.

வேறு சிலர் தர்க்கித்து இது எபேசியர் நிருபமும் அல்ல, ஏனெனில் எபேசியர் நிருபம் கொலோசெயர் நிருபத்துக்குப் பின்னரே எழுதப்பட்டது என்கின்றனர். எபேசியர் நிருபம் தான் முன்பதாக எழுதப்பட்டிருக்கக் கூடும் ஆகிலும் அதை உடனே கொண்டு போய்க் கொடுக்க ஆளில்லாமையால் தாமதமாகியது. இன்னும் சிலர் ஆசியா முனையிலிருந்த எல்லா சபைகளுக்கும் எபேசியர் நிருபம் ஒரு தோழமைக்கடிதமாக எழுதப்பட்டதாகக் காண்கின்றனர் ஏனெனில் அது "எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது" (எபேசியர் 1:1) என்று தொடங்கி எழுதப்பட்டது, ஒரு குறிப்பிட்ட உள்ளூர்சபைக்கு எழுதப்படவில்லை அல்லது சில மூலக் கைப்பிரதிகள் *en Epheso* ("எபேசுவிலே") என்ற வார்த்தையை தவிர்த்துள்ளது. மேலும், எபேசியரில் பவுல் தன்னுடைய இயல்பான மாதிரியைப் பின்பற்றி தனது சக ஊழியர்களிடமிருந்து வாழ்த்துக்களையும் தனிப்பட்ட செய்திகளையும் பெறுபவர்களைக் குறித்த விமர்சனங்களையும் அனுப்பவில்லை. எபேசுவிலே அவர் மூன்று வருஷம் தங்கியிருந்தும் தான் நன்கு அறிந்த ஜனத்தாருக்கு வாழ்த்துக்களையோ போதனைகளையோ அனுப்பவில்லை என்பது வழக்கத்துக்கு மாறானது எனத்தெரிகிறது (நடபடிகள் 20:31). ஒரு வேளை குறிப்பிட்ட ஜனங்களுடைய பெயர்களை குறிப்பிட்டு பயன்படுத்தாமலிருந்திருக்கலாம், ஏனெனில் அவர் தனது நிருபம் ஆசியா முழுவதுமிருந்த ஒரு பரந்த கூட்டத்திற்கு பயன்பட ஏதுவாக்கினார், இப்படி அவர் தனது ஊழியத்தை எபேசியர் மூலம் அடைந்தார்.

Herbert M. Carson எபேசியர் நிருபத்திற்கான ஆதாரங்களை முன்வைத்து அது "லவோதிக்கேயாவிலிருந்து" வந்த ஒன்று தான் என்றார்:

> இது ஒரு (உள்ளூர்) சபைக்குரிய நிருபமல்ல ஆனால் பரவலாக சுற்றுக்கு விடப்பட்டது என்று வழக்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது ... உள்ளூர் சூழ்நிலைகளை குறித்த காரியங்களை நிருபம் கொண்டிருக்கவில்லை மாறாக ஒரு பரந்த அளவில் தாக்கத்தை ஏற்படுத்துகிற சத்தியத்தைக் கொண்டிருந்தது. நிருபத்தை கொண்டு போன நபர் தீகிக்கு (எபேசியர்

6:21) அவன்தான் கொலோசெயர் நிருபத்தையும் கொண்டு போய்ச் சேர்த்தான்; இது ஒன்றாக இணைந்து இரண்டு நிருபங்களுக்குமிடையே ஒற்றுமையையும் அவை ஒரே நேரத்தில் தோன்றியவை என்ற நிருபணத்தையும் மேலும் ஒரே பகுதிக்குப் போய்ச் சேர்ந்தன என்பதையும் உறுதிபடுத்துகின்றன. எனவே "எபேசியர்" நிருபம் ஆசியா முனையிலிருந்த சபைகளுக்கு அனுப்பப்பட்டது, அது கொலோசெக்கு அனுப்பப்படுவதற்கு முன் பெரியமையமான லவோதிக்கேயாவுக்கு போயிருக்கக் கூடும்.[13]

லவோதிக்கேயாவுக்கு எழுதப்பட்ட நிருபம் என்ன ஆனது என்று மிகவும் அதிகமாக நாம் அக்கறை காட்ட வேண்டுவதில்லை. தமது வார்த்தை ஒரு போதும் ஒழிந்து போவதில்லை என்று இயேசு சொன்னார் (மத்தேயு 24:35). நமக்குத் தேவையான தொகுக்கப்பட்ட ஆதாரங்கள் அனைத்தையும் தேவன் நமக்காக பத்திரப்படுத்தியிருக்கிறார். முக்கியமானது என்னவெனில் பவுலின் நிருபங்கள் சபைகளுக்குள் சுற்றோட்டம் விடப்பட்டன. அவர் அதிகாரத்துடன் எழுதினார், தனது எழுத்துக்களெல்லாம் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க கர்த்தருடைய கட்டளைகளை கொண்டுள்ளன என்ற எதிர்பார்ப்பில் எழுதினார் (1 கொரிந்தியர் 14:37). ஆதியிலிருந்த (உள்ளூர்) சபைகள் பவுலின் நிருபங்களைக் கொண்டிருந்தன என்பதற்கான ஆதாரமாகவும் அவைகள் (தேவ) வசனங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பதற்கான ஆதாரமாகவும் பேதுருவின் எழுத்துக்கள் பவுலின் எழுத்துக்களோடு சமன்படுத்தி மற்ற வசனங்களின் ஒத்த தன்மையும் மேலும் சாட்சியமளிக்கின்றன (2 பேதுரு 3:15, 16).

"அர்க்கிப்பைக் கண்டு ... சொல்லுங்கள்" (4:17)

*அடுத்ததாக, பவுல் **அர்க்கிப்புவைப் பற்றி** எழுதினார். இந்தப் பெயரின் பொருள் "குதிரையின் எஜமான்." அநேகமாக, அர்க்கிப்பு அப்பியாள் மற்றும் பிலேமோனுடன் சம்பந்தப்பட்டவனாக பவுலின் "உடன் போர்ச் சேவகனாக" பிலோமோன் 2ன்படி சொல்லப்படுகிறது. அவனைக் குறித்து வேறெதுவும் அறியப்படவில்லை. அவன் பிலேமோனின் மகனாகவோ அல்லது சகோதரனாவோ இருந்திருக்கலாம் என்று சிலர் நினைக்கின்றனர். பிலேமோன் ஒநேசிமுவின் எஜமானனும், கொலோசெ சபையில் ஒரு முன்னோடியாகவும் இருந்திருக்கிறான். அவன் லவோதிக்கேயா சபையில் அங்கத்தினராக இருந்திருக்கக்கூடும் ஆனால் ஒருவேளை கெலோசெயில் அங்கத்தினராக இருந்தான்.*

அர்க்கிப்புவைப் பற்றிய பவுலின் அன்புணர்வும் அவனது ஊழியத்தின் வெளிப்பாடும் "எங்கள் உடன் போர்ச் சேவகன்" என்ற சொற்றொடரில் வெளிப்படுத்தப்படுகிறது (பிலேமோன் 2). சிலர் அவனை அனலுமின்றி குளிருமின்றி இருந்த லவோதிக்கேயா சபைக்கு அவன் "தூதன்" அல்லது "செய்தியாளன்" என்று சொல்லி அடையாளப்படுத்துகின்றனர் (வெளிப்படுத்தின விசேஷம் 3:14). "தூதன்" என்ற வார்த்தை (angelos) என்ற மொழிபெயர்ப்புப்படி பூமிக்குரிய செய்தியாளன் என்பதையும் குறிப்பிடலாம் (மத்தேயு 11:10; மாற்கு 1:2; லூக்கா 7:21, 27; யாக்கோபு 2:25), அவன்

உண்மையில் லவோதிக்கேயா சபைக்கு தூதனாகத்தான் இருந்திருக்கக்கூடும். பாரம்பரிய கருத்துப்படி அவன் பிலேமோனோடும் அப்பியாவோடும், சோனே எனுமிடத்தில் கல்லெறிந்து கொல்லப்பட்டான்.[14]

அர்க்கிப்பைக் கண்டு: "நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருப்பாயாகவென்று சொல்லுங்கள்" (4:17)

கவனமாயிருப்பாயாக (blepe) என்பது ஒரு வேளை எச்சரிக்கும் வார்த்தையாக இருக்கலாம், இது கொலோசெயர் 2:8ல் காணப்படுகிறது (காண்க கலாத்தியர் 5:15; எபேசியர் 5:15; பிலிப்பியர் 3:2). அர்க்கிப்புவின் ஊழியத்தைக் குறித்து (diakonia), பவுல் எந்த விளக்கத்தையும் கொடுக்கவில்லை, அல்லது யார் அவனுக்கு இந்த அறிவுரையைக் கொடுப்பது என்றும் குறிப்பிடவில்லை, ஒருவேளை கர்த்தருக்குச் செய்கிற ஊழியத்தில் முழு உள்ளூர் சபையும் அவனை ஊக்கப்படுத்த வேண்டும் என்று அவன் எதிர்பார்த்தான். பவுல் அர்க்கிப்புவின் ஊழியத்தின் பெருக்கத்தை சபை அறிந்திருந்தது என்று யூகித்தார்.

அர்க்கிப்புவின் ஊழியத்தின் இயல்பு இன்னதென்று பவுல் வெளிப்படுத்தாவிட்டாலும் அவர் அதிலே அக்கறையுள்ளவராயிருந்தார். Eduard Lohse எழுதியதாவது, " 'ஊழியம்' என்ற கருத்து (diakonia) ஒப்புவிக்கப்பட்ட ஊழியத்தினைக் குறிப்பதேயன்றி, உதவிக்காரனுடைய பொறுப்பை குறிப்பதல்ல."[15] கவனிக்கப்படாமற் போன விதவைகளை விசாரிக்கும்படி தெரிவுசெய்யப்பட்ட ஏழுபேர் "ஊழியஞ்செய்ய" (diakoneō) நியமிக்கப்பட்டது குறித்து விவரிக்கிறது (நடபடிகள் 6:2, 3). அவர்கள் உதவிக்காரர்களாக இருக்கும்படி நியமிக்கப்படவில்லை, ஏனெனில் அவர்களின் ஒரே தகுதியாம்ஸம் "ஆவியினாலும் ஞானத்தாலும்" நிரப்பப்பட்டிருந்தனர் (நடபடிகள் 6:3; ஒப்பிடுக 1 தீமோத்தேயு 3:8-13).

அர்க்கிப்புவின் ஊழியம் அவிசுவாசிகளிடம் போய் சுவிசேஷக ஊழியம் செய்வது அல்லது அங்கத்தினர்கள் மத்தியில் போதிக்கும் ஊழியமாக இருந்திருக்கக்கூடும். சபையை வளர்ச்சியடையச் செய்வதும் ஆளுகை அமைப்பை கையாளவும் கூடிய பொறுப்பை பவுல் அவனுக்கு ஒப்புக் கொடுத்திருந்தார், இதே ஊழியத்தைத்தான் தீத்துவுக்கு அவர் கொடுத்திருந்தார் (தீத்து 1:5), அல்லது தரும ஊழியம், ஏழுபேரைத் தெரிவு செய்து அவர்களிடம் ஒப்புக் கொடுக்கப்பட்டது போல் அவனிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கக்கூடும். அர்க்கிப்பு எந்த ஊழியத்திலும், அல்லது இந்த எல்லா ஊழியங்களிலும் தன்னை மும்மரமாக ஈடுபடுத்தியிருந்திருக்கக்கூடும்.

அர்க்கிப்புவுக்கு ஒப்புக்கொடுத்தது போலவே, கிறிஸ்துவின் சரீரத்திலிருக்கிற ஒவ்வொரு அங்கத்தினரும் உண்மையுடன் ஊழியஞ் செய்யும் படி "எச்சரிக்கையாயிருக்கவும்" கர்த்தருக்குச் செய்யும் தன் சேவையின் பகுதியில் கவனமுடன் செயல்படவும் வேண்டும். பவுல் முன்னமே வேலைக்காரர்கள் "மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல் தேவனுக்கு ஊழியஞ் செய்கிறவர்களாய்" இருக்க வேண்டுமென்று அறிவுறுத்தியிருந்தார் (கொலோசெயர் 3:22). சபையின் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்தி கர்த்தருக்கு

தங்களால் செய்ய இயன்ற ஊழியத்தை நேர்மையுடன் செயல்படுத்த ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

நிறைவுறும் குறிப்பீடுகள் (4:18)

[18]பவுலாகிய நான் என் கையினால் எழுதி, உங்களை வாழ்த்துகிறேன். நான் கட்டப்பட்டிருக்கிறதை நினைத்துக்கொள்ளுங்கள். கிருபை உங்களோடிருப்பதாக.

"பவுலாகிய நான் என் கையினால் எழுதி, உங்களை வாழ்த்துகிறேன்" (4:18)

__பவுல்__ முழு நிருபத்தையும் கொலோசெயருக்கு எழுதினாரா, அல்லது எழுதுவதற்கு ஒப்ப கூறினாரா? எண்ணற்ற விளக்கவுரையாளர்கள் அவர் நிருபத்தை எழுதுவதற்கு ஒப்பக் கூறியதாகவும் அதன் பின் வாழ்த்துக்களை எழுதி தனது __சொந்தக் கையினால்__ கையெழுத்திட்டதாகவும் நினைக்கின்றனர். அது அவருடைய அப்போஸ்தலிக அதிகாரத்துக்கு முத்திரையாகவும் இருந்ததுபிறர் கையெழுத்தை கள்ளத்தனமாக மற்றொருவர் இடுவதிலிருந்து அது ஒரு பாதுகாப்பு, முடிவுரைக் குறிப்பைக் கொடுத்து ஒருவர் தனது கையெழுத்தை இடுவது ஒரு கடிதம் எழுதுவதற்கு ஒப்ப கூறி முடித்தபின் செயல்படுவது ஒரு பொதுவான பழக்கமாக கிரேக்க ரோம உலகில் இருந்தது. பவுலின் தனிப்பட்ட கையெழுத்தும் வாழ்த்துரையும் மற்ற நிருபங்களில் காணப்பட்டன (1 கொரிந்தியர் 16:21; கலாத்தியர் 6:11; 2 தெசலோனிக்கேயர் 3:17; பிலேமோன் 19). ஒரு நிருபத்தில் மட்டுமே எழுதிய நபர் அவன் பவுல் சொல்லியவைகளை நிருபமாக எழுதினான் என்று குறிப்பிடுகிறான். அவன் தான் ரோமர்களுக்கு எழுதிய தெர்தியு (ரோமர் 16:22).

"நான் கட்டப்பட்டிருப்பதை நினைத்துக்கொள்ளுங்கள்" (4:18)

பவுலின் சார்பாக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்ட காரியம் சுருக்கமானதும் குறிப்பானதுமாகும். தனது தனிப்பட்ட நிலைமையைக் குறித்து பவுல் விளக்கப்படுத்துவதற்கு நிறையவே இருந்தன, ஆகிலும் தனது தனிப்பட்டச் சூழ்நிலைகளைச் சொல்லி ஜனங்களைப் பாரப்படுத்த அவர் விரும்பவில்லை. __நினைத்துக்கொள்ளுங்கள்__ (mnēmoneuō) என்பது மூப்பர்களால் கொடுத்த அறிவுரையிலும் குறிப்பிடப்பட்டது: "தரித்திரரை நினைத்துக் கொள்ளும்படி" மாத்திரம் சொன்னார்கள் (கலாத்தியர் 2:10). கொலோசெயர் தங்கள் ஜெபங்களிலே இதைச் செய்ய வேண்டியவர்கள் மேலும் அவர்களால் கூடுமானால் உதவிகளையும் அனுப்பி உதவிசெய்யும்படி கேட்டார். பிலிப்பியிலிருந்த சகோதரர்கள் இந்தப் பிரகாரமாக பவுலை நினைத்துக் கொண்டார்கள் (பிலிப்பியர் 4:15, 16). சில விளக்கவுரையாளர்களின் முடிவான, பவுல் தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டார் என்கிறமுடிவை அகற்றிவிடலாம். அவருடைய வேண்டுகோள் காவலில் வைக்கப்பட்டிருந்ததை நினைத்துக் கொள்ளும்படி தானேயன்றி தன்னுடைய அப்போஸ்தலிகத்தையல்ல, அதை அவர் ஆரம்பத்திலேயே உறுதிப்படுத்தி விட்டார் (1:1).

"கிருபை உங்களோடிருப்பதாக" (4:18)

தனது நிருபங்களைத் துவக்கும்போதும் முடிக்கும்போதும் தேவனுடைய அல்லது இயேசுகிறிஸ்துவினுடைய **கிருபை** *வாசகர்கள் மேல் தங்கியிருக்கும்படி விரும்புவது பவுலின் பழக்கம்.*[16] *இந்த நிருபத்தை அவர் தன்னுடைய பெரியதான அன்பையும் தனது சகக்கிறிஸ்தவர்களுக்கான அக்கறையையும் தேவனுடைய நன்மையை தான் சார்ந்திருப்பதையும் குறிப்பிட்டு நிறைவு செய்தார். இப்படியாக, அவர் தன்னுடைய வாசகர்களிடம் தான் கொண்டுள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தினார், அவர் தனது வாசகர்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதங்களும் தயவுகளும் கொடுக்கப்பட தான் நம்பிக்கையுள்ளவராக இருப்பதைச் சொல்லி நிறைவு செய்துள்ளது இந்த நிருபத்தை முடிக்கிற சரியான முறையாகும்.*

பயன்பாடு

கிறிஸ்துவினிமித்தம் ஒன்றாக உழைப்பது (4:10-14)

பவுல் தங்கள் கடந்தகால தவறுகள் மூடப்பட்ட இரண்டுபேரை தன்னோடு வைத்திருந்தார், ஒநேசிமு எனும் வேலைக்காரன், தனது எஜமானனை விட்டு போய்விட்டவன். பவுல் அவனை சந்தித்து கிறிஸ்துவிடம் அவனைக் கொண்டு வந்தார். அவர் அந்த வேலைக்காரனின் எஜமானிடம், பிலோமோனிடம், அனுமதிபெற்று, சுவிசேஷத்தைப் பரப்ப உதவும்படி கேட்டிருக்கக் கூடும், மாற்கு, பவுலோடும் பர்னபாவோடும் முதல் சுவிசேஷப் பயணத்தில் சேர்ந்து கொண்டவன், பெர்கேயில் அவர்களைவிட்டு தன் வீட்டுக்குப் போய்விட்டான் (நடபடிகள் 13:13), பின்னர், பவுல் அவனைத் தனது இரண்டாவது சுவிசேஷப் பயணத்தின் போது அவனைத் தன்னோடு கூட்டி போக மறுத்தார் (நடபடிகள் 15:38), ஆகிலும் அவன் பவுலின் நம்பிக்கையைப் பெற்று அவருக்கு ஊக்கமளிப்பவனாக மாறினான்.

ஜனங்கள் தங்கள் முந்தின நிலையிலிருந்து மீண்டும்வரக் கூடும். கர்த்தரை மறுதலித்த பேதுரு, ஒரு முதன்மைத்துவமிகுந்த அப்போஸ்தலனாக மாறினார். மகதலேனா மரியாள் ஏழு பிசாசுகளைக் கொண்டிருந்து, பின்னர். ஒரு விசுவாசமுள்ள பின்பற்றுகிறவளானாள் (லூக்கா 8:2). கொரிந்தியர்களில் சிலர் ஒழுங்கீனமாயிருந்தவர்கள் என்று பவுல் நினைவுறுத்தினார் (1 கொரிந்தியர் 6:9-11).

இயேசு ஆயக்காரரோடும் பாவிகளோடும் தொடர்புடையவராயிருந்தார் (மத்தேயு 9:10, 11; 11:19). ஜனங்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தனர் என்பது, இயேசுவுக்காக அவர்கள் என்னவாக முடியும் என்பதைப் போல் அவருக்கு அது காரியமாயிருக்கவில்லை. காட்டவில்லை, விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீயை பார்த்து, அவளைக் குற்றப்படுத்தியவர்கள் போன பின்பு, "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை, நீ போ, இனி பாவஞ்செய்யாதே" என்றார் (யோவான் 8:11).

இயேசு ஜனங்களின் வாழ்க்கையை மாற்றி அவர்களை விசுவாசமுள்ள ஊழியர்களாக மாற்ற முடியும். கிறிஸ்தவர்களாகவே மாறினவர்களின் பாவங்களை நாம் தொடர்ந்து நினைத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. கர்த்தருடைய உதவியால், அவர்கள் மிகப் பெரிதாக அவருடைய ஊழியத்தில்

பயனடையக் கூடும். ஜனங்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தனர் என்பதை நாம் பார்க்காமல், அவர்கள் என்னவாக மாறுவார்கள் என்று பார்க்கலாமே.

பலதரப்பட்ட பின்னணியை உடைய மனுஷர்கள் ஒற்றுமையுடன் ஊழியஞ்செய்ய இயலும். இதுதான் இயேசுவைப் பின்பற்றும் படி அவர்கள் மாறியதன் விளைவு. கிறிஸ்துவைப் பின்பற்றுகிற அனைவரிடத்திலும் இது உண்மையே. நாம் எல்லாரும் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் (1 கொரிந்தியர் 12:13). நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும் போது, இனியும் யூதரென்றும் கிரேக்கரென்றும் பாகுபடுத்தாமல், "நாம் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறோம்" (கலாத்தியர் 3:27, 28).

இனம் மற்றும் பின்னணி எதுவாயிருப்பினும், இயேசுவுக்காக நாம் எல்லாரும் ஒற்றுமையுடன் ஊழியம் செய்ய வேண்டியவர்கள், நியாயப்பிரமாணத்தை ஒழித்ததன் மூலம், யூதர்களுக்கும் புறஜாதிகளுக்குமிடையே இருந்த நடுச்சுவரை அவர் தகர்த்தார். நாம் எல்லாரும் ஒரே சரீரத்திற்குள் தேவனிடத்தில் ஒப்புரவாகும்படி சிலுவையினாலே அப்படிச் செய்தார் (எபேசியர் 2:14-16).

நம்முடைய பார்வையெல்லாம் தேவனுடைய ராஜ்யத்தையே ஒருமுகப்படுத்தியதாயிருக்க வேண்டும். திருமறையின் பெரிதான மையக் கருத்துக்களில் ஒன்று தேவனுடைய ராஜ்யம். தானியேல் தீர்க்க தரிசனமாக ரோமர்களின் ஆட்சி காலத்தில் அது ஸ்தாபிக்கப்படும் என்று சொன்னார். யோவான், இயேசு, அப்போஸ்தலர்கள், மற்றும் எழுபதுபேர் தேவனுடைய ராஜ்யம் (பரலோகராஜ்யம்) சமீபித்திருப்பதைப் பிரசங்கித்தார்கள் (மத்தேயு 3:2; 4:17; 10:7; லூக்கா 10:9, 11).

இயேசு பரலோகத்துக்கு திரும்பிப் போவதற்கு முன் அவர் பேசிய கடைசி காரியம் தேவனுடைய ராஜ்யம் தான் (நடபடிகள் 1:4-8). பிலிப்பு சமாரியரிடத்தில் பிரசங்கித்ததும் தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றித் தான் (நடபடிகள் 8:12). பவுலைக் குறித்து நடபடிகள் புத்தகத்தில் கடைசியாக சொல்லப்படுவது, அவர் தேவனுடைய ராஜ்யத்தை பிரசங்கித்தார் என்பது தான் (நடபடிகள் 28:31), அவருடைய ஊழியத்தின் நோக்கமும் பாரமும் அதுவாகவே இருந்தது (நடபடிகள் 20:25).

தேவனுடைய இராஜ்யத்தின் மதிப்பு நிலத்திலே புதைத்து வைக்கப்பட்ட ஒரு பொக்கிஷத்தை ஒரு மனுஷன் கண்டு பிடித்து எடுக்கப்படுவதற்கு ஒப்பானது. அது விலையேறப்பட்ட முத்துக்கு ஒப்பானது; அதைக் கண்டு பிடித்த ஒருவன் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று அதை தனக்குச் சொந்தமாக்கிக் கொள்வது போன்றது (மத்தேயு 13:44-46). இராஜ்யத்தின் மகத்துவத்தினால், நமது வாழ்க்கை அதை பரப்புவதில் ஒப்புக் கொடுக்கப்பட வேண்டும், அதினால் இராஜ்யத்தின் ராஜாவாகிய, இயேசு மதிப்பளிக்கப்பட்டு கீழ்ப்படியப்படுவார்.

பவுலோடு இருந்தவர்களைப் போல, நாம் உடன் வேலையாட்களாக ராஜ்யத்திற்காகப் பணியாற்றக்கூடும். பவுல் கொரிந்தியர்களுக்கு அறிவுரை சொல்லி ஒன்றாயிருக்கவும், சுவிசேஷ ஊழியர்களுக்குப் பின்னால் பாடுபடுத்திப் போகக் கூடாது என்றும் சொன்னார் (1 கொரிந்தியர் 1:10-13). கிறிஸ்துவுக்கு உடன் வேலையாட்களாயிருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 3:9)

அவர்களெல்லாரும் ஒரே பக்கமாக நிற்க வேண்டும். இந்தக் காரணத்தால், அவர்கள் மற்றவர்களைத் தவிர்த்து கிறிஸ்துவையும் தவிர்த்து ஒரு ஊழியக்காரனை மட்டும் பற்றிக் கொண்டிருத்தல் கூடாது.

இராஜ்யத்திற்கென ஊழியஞ் செய்கிறவர்களுக்குள்ளே போட்டிகளும், பொறாமைகளும், சண்டைகளும் அடிக்கடி நிகழ்கிறது, நம்முடைய யுத்தம் நம்மில் ஒருவருக்கொருவர் எதிரானதல்ல, மாறாக நம்மில் ஒவ்வொருவருக்கும் எதிராளியாகிய, பிசாசுடனும் அவனுக்கு ஊழியம் செய்கிறவர்களோடும் இருக்க வேண்டும் (எபேசியர் 6:11, 12).

கிறிஸ்துவுக்கென்று ஒன்றாக ஊழியம் செய்யும் போது, நாம் நேர்மையாக ஊழியம் செய்ய வேண்டும். அவர் நம்மை நம்முடைய கடந்தகால பாவத்திலிருந்து இரட்சித்திருக்கிறாரென்று அறிந்து, நாம் ஒற்றுமையாக ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்து, நமது பார்வையை தேவனுடைய ராஜ்யத்தின் மேல் ஒருமுகப்படுத்தப்பட வேண்டும்.

விசுவாசமுள்ள உடன் வேலையாட்கள் (4:10-14)

பவுல் தன்னோடு ஊழியஞ் செய்து கொண்டிருந்தவர்களைக் குறித்து நேர்மறை கருத்துக்களைச் சொன்னார். நாம் நமது சக கிறிஸ்தவர்களைக் குறித்து நல்லதைப் பேச வேண்டும் மேலும் மற்றவர்கள் நம்மைக்குறித்து நல்ல முறையில் பேச ஏதுவாக நம்முடைய நடத்தைகளைக் காத்துக் கொள்ள வேண்டும், பவுலின் உடன் வேலையாட்கள் மற்றவர்கள் தங்களைப் பின்பற்ற போதிய முன்மாதிரிகளாக இருந்தனர்.

விசுவாசமுள்ள சிநேகிதன். அரிஸ்தர்க்கு ஒரு முன்னுதாரணமுள்ள கிறிஸ்தவன். எபேசுவில் ஒரு கோபத்தால் நிறைந்த கூட்டால் அரங்க சாலைக்குள் இழுத்துக் கொண்டு போகப்பட்ட போதும் அவர்களுக்கு முன்பாக விசுவாசத்தில் தரித்திருந்தான் (நடபடிகள் 19:29). அவன் பவுலோடு கூட பயணம் பண்ணி (நடபடிகள் 20:4) பவுல் காவலில் வைக்கப்பட்ட போதும் அவருக்கு தோள் கொடுத்தான் (நடபடிகள் 27:2). ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அரிஸ்தர்க்குவைப் போன்ற ஒரு விசுவாசமுள்ள சகோதரன் தேவை நாமும் மற்றவர்களுக்கு அவ்விதமான நண்பர்களாக இருக்க முயற்சிப்போம்.

தேர்ச்சியடைந்த சகோதரன். மாற்கு நம்பிச் சார்ந்திருக்கக் கூடாத ஒரு வாலிபனாயிருந்து பின்னர் கர்த்தருக்கு பிரயோஜனமுள்ள ஒரு ஊழியக்காரனாக மாறினான். வாலிபர்களின் தவறுகள் இயேசுவுக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு தடங்கலாயிராதபடிக்கு ஒருவர் அவர்களை தடைசெய்யாதிருக்க வேண்டும். இப்படிப்பட்ட முறையில் முன்னேற்றம் காட்டுபவர்களை ஏற்றுக்கொண்டு அவர்களுடைய வளர்ச்சியைப் பாராட்ட வேண்டும்.

மற்றொரு ஊக்கமளிப்பவன். யுஸ்து, மற்றவர்களோடு கூட, தன்னுடைய முந்தின மதத்தை விட்டு இயேசுவைப் பின்பற்றுவதில், ஒரு முன் மாதிரியாயிருந்தவன். தனது யூத பாரம்பரியத்தை விட்டு, அவன் மற்றவர்களும் இயேசுவை அறிந்து கொள்ள உதவி செய்வதில் தன்னை உட்படுத்திக் கொண்டவன். அவனும் மற்றவர்களும் தங்கள் மதத்தை மாற்றிக் கொண்டது மாத்திரமல்ல, கர்த்தருக்கு முன் ஒரு முதன்மைத்துவம் வாய்ந்த

ஊழியக்காரனாகிய பவுலை ஆறுதல்படுத்தினவன்.

உறுதியாய்த் தரித்திருந்த உடன் வேலையாள். எப்பாப்பிரா ஒரு “குழுவாக ஊழியஞ்செய்தவர்களில் ஒருவன்.” அவன் ஒரு நல்ல முன் மாதிரியாயிருந்த நபர், தனக்காக அல்லாமல் பிறருக்காக ஊழியஞ் செய்தவன். பவுல் அவனைக் குறித்து பின்வரும் காரியங்களை வெளிப்படுத்தினார்:

(1) அவன் இயேசுவுக்குக் கட்டப்பட்ட ஒரு உடன் வேலையாளாக, அல்லது அடிமையாக ஊழியஞ் செய்தான் (1:7; 4:12). நாம் நம்முடையவர்களல்ல, நாம் இயேசுவின் இரத்தத்தால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள் (நடபடிகள் 20:28; 1 கொரிந்தியர் 6:19, 20). இதினால், நாம் செய்கிற எல்லாவற்றிலும் அவருடைய சித்தத்தைத்தேட வேண்டும், விசுவாசமுள்ள ஊழியம் தேவை. சரியான காரியங்களைப் பேசுவது முக்கியமானதுதான், ஆனாலும் சரியான காரியத்தைச் செய்வது எதிர்பார்க்கப்படுவது (மத்தேயு 7:21; லூக்கா 6:46).

(2) அவன் மற்றவர்களுக்கு மனமுவந்து பிரயாசப்பட்டான். இயேசு முற்றிலும் சுய நலமற்ற ஊழியம் செய்ததற்கு ஒரு எடுத்துக் காட்டு. அவர் தம்மைத் தாமே பிரியப்படுத்திக் கொள்ள எதையும் செய்ய வில்லை, மாறாக, பிறருக்கு ஊழியஞ்செய்யவே வகை தேடினார் (ரோமர் 15:3). அவர் அண்ட சராசரங்களுக்கும் ஆண்டவராயிருந்தும், தம்மைத்தாமே தாழ்த்தி, அடிமையின் ரூபமெடுத்தார் (மத்தேயு 20:25-28; பிலிப்பியர் 2:7). கிறிஸ்தவர்கள் அதே போல ஊழியஞ் செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும்.

(3) அவன் மற்றவர்களைக் குறித்து அக்கறையுள்ளவனாயிருந்தான். எப்பாப்பிராவின் கொலோசெயருக்குச் செய்த ஊழியம் அவர்களுடைய நலனில் அவன் அக்கறையுள்ளவனாயிருந்ததிலிருந்து வந்தது, இருதயப்பூர்வமான ஊழியஞ் செய்யப்படுவதற்கு முன், ஊழியஞ்செய்கிறவர்களின் இருதயத்தில் ஒரு இயல்பான அக்கறை இருக்க வேண்டியது அவசியம். பவுலின் உடன் வேலைக்காரர்கள் வித்தியாசப்பட்ட உள்ளூர் சபைகளில் விசேஷித்த ஆர்வமுடையவர்களாய்க் காணப்பட்டனர். எப்பாப்பிராவின் பிரதானமான அக்கறையெல்லாம் கொலோசெயில் இருந்த சபையில்தான், ஒருவேளை அவன் அந்த உள்ளூர் சபையை நாட்டுவதற்கு உதவி செய்தவன் மற்றும் அங்கிருந்த சகோதரர்களோடுச் சேர்ந்து ஊழியம் செய்தான் என்பதால் அப்படி அக்கறையுள்ளவனாயிருந்திருக்கக் கூடும்.

(4) அவன் நேர்மையாக மற்றவர்களுக்காக ஜெபித்தான். எப்பாப்பிரா கொலோசெயருடன் இருக்கவில்லை, ஆகிலும் அவர்களுக்கு உதவிசெய்வதில் தன்னால் இயன்றதைச் செய்தான். குறிப்பாக அவர்களுக்காக அவன் ஜெபம் பண்ணினான். விசுவாசிகள் ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவேண்டும். சில விஷயங்களில், நாம் நேசிக்கிறவர்ளுக்கு உதவி செய்ய இதுவே சிறந்த வழி.

முரண்பட்ட சகோதரர்கள். லூக்காவின் ஜீவியம் தேமாவிடமிருந்து வித்தியாசப்பட்டது. லூக்கா பவுலுக்கும் இயேசுவுக்கும் உண்மையுள்ள வனாயிருந்தான், தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசைவைத்து பிரிந்து போனான் (2 தீமோத்தேயு 4:10, 11). மனிதவர்க்கம் சுதந்தரம் பெற்ற ஜீவிகள்; தெரிவு செய்யும் உரிமையை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். இயேசுவின் பெரிய ஊழியக்காரர்களில் ஒருவரான பவுலுடன் ஊழியம் செய்த பிறகும், தேமா அவிசுவாசமுள்ளவனாக மாறினான். அதே போல இயேசுவை யூதாஸ்

கைவிட்டான், ஒவ்வொரு கிறிஸ்தவனும் பவுலின் எச்சரிக்கையை பரிசீலிக்க வேண்டும்; "இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன்" (1 கொரிந்தியர் 10:12).

உலக ஆசை பண ஆசையையும், தற்பிரியத்தையும், உலக இன்பங்களில் நாட்டத்தையும் கொண்டு வரும் (1 தீமோத்தேயு 6:10; 2 தீமோத்தேயு 3:2, 4). இந்த ஆபத்துக்கள் சுருக்கமாக 1 யோவான் 2:15, 16ல் சொல்லப்பட்டிருக்கிறது:

> உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை, ஏனெனில், மாம்சத்தின் இச்சையும். கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள்.

"ஊழியத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (4:15-18)

பவுலின் தனிப்பட்ட வாழ்த்துரையில், அவர் இந்த நிருபம் லவோதிக் கேயாவிலுள்ள சபையிலும் வாசிக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அர்க்கிப்புவைத் தனிமைப்படுத்தி அவன் பெற்றுக்கொண்ட ஊழியத்தை நிறைவேற்ற உற்சாகமளித்தார்.

சபையைக் குறித்த அக்கறை. உலகளாவிய கிறிஸ்துவின் சபைகளில் பவுல் ஆர்வமுடையவராயிருந்தார், அவர் நேரில் போய் பார்த்திராத உள்ளூர் சபைகளில் கூட ஆர்வங்காட்டினார், இது கொலோசெயருக்கு எழுதின தனது நிறைவு வாழ்த்துரையிலும் அவரது நிருபத்தின் ஆரம்பத்தில் சொன்ன வாக்கியத்திலும் தெளிவாகக் காணுகிறது: "உங்களுக்காகவும் லவோதிக் கேயாவிலிருக்கிறவர்களுக்காகவும், சரீரத்தில் என் முகத்தைக் காணாதிருக்கிற மற்றெல்லாருக்காகவும் மிகுந்த போராட்டாம் எனக்கு உண்டென்று நீங்கள் அறிய விரும்புகிறேன்" (2:1). அவர் தன் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் தான் சந்தித்த சரீர கஷ்டங்களையும் குறிப்பிட்டபின், அவர் தொடர்ந்து, "இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளையும் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள் தோறும் நெருக்குகிறது" என்றார் (2 கொரிந்தியர் 11:28).

கிறிஸ்துவின் சரீரத்தில் நாமும் அதே அன்பும் அக்கறையும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். நாம் உள்ளூர் சபைக் குடும்பமாகிய கிறிஸ்தவர்களில் ஒரு அங்கம் மாத்திரமல்ல, ஆனால் ஒரு பெரிய ஐக்கியத் திலுள்ள அங்கத்தினர்களிலும் ஒருவராயிருக்கிறோம், அது தான் இயேசு தலையாயிருக்கிற அவருடைய ஒரே சரீரம். நாம் இந்த பூமியிலே எல்லாரும் தேவனுடைய குடும்பமாயிருக்கிறோம் மேலும் அவருடைய சேனைகளோடும் கூட தேவனுடைய பரலோகத்தில் அவருடைய பரம குடும்பத்திலும் ஒன்றாக அங்கம் வகிப்போம் (எபேசியர் 3:15; சொல்லப்படுகிற ஒரே வேறு இடம், லூக்கா 2:4; நடபடிகள் 3:25). ஆதலால், நாம் எங்குமுள்ள எல்லா கிறிஸ்தவர்களுக்காகவும் ஊழியம் செய்து ஜெபிக்கவும் வேண்டியவர்கள்.

நம்முடைய உள்ளூர் சபை நமது மிகப் பெரிதான சார்புத் தன்மையில் தன்னை ஈடுபடுத்தி தொழுகையில் தரித்திருக்கும், ஆகிலும் நம்மிலே ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் அனைத்து ஜனங்களையும்

குறித்து ஆர்வங்காட்டுவது அவசியம். எல்லா இடங்களிலுமிருக்கிற பவுலுக்குத் தெரிந்திருந்த சபைகள் உட்பட அனைவரும் ரோமாபுரியிலிருந்த சபைக்கு வாழ்த்துதலை அனுப்பினார்கள் (ரோமர் 16:16). கிறிஸ்துவின் முழு சரீரத்திலும் நமது அக்கறையைக் காட்டுவதில் ஆதிக்கிறிஸ்தவர்களைப் பின்பற்றுவோமானால் அது நமக்கு நன்மை பயக்கும்.

வசனத்துக்குரிய அதிகாரத்தை மதிக்க வேண்டும். முதல் நூற்றாண்டில் பவுலின் நிருபங்கள் கிறிஸ்துவின் சபைகளில் குறிப்பிடத்தக்கவைகளாயிருந்தன, அதே பாரமிக்க அதிகாரமாக நமக்கும் அது இன்றைக்கும் இடம் பெறவேண்டும். அவைகள் மற்ற சபைகளுடன் பகிரப்பட்டு வாசிக்கப்பட வேண்டும் என்று வேண்டிக் கொண்டது அவர் அவைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தார் என்று பொருள்படுகிறது.

அவர் தமது செய்தியை மனுஷரிடமிருந்து பெற்றிருக்கவில்லை, இயேசு கிறிஸ்துவிடமிருந்து பெற்றார் (கலாத்தியர் 1:11, 12). அவருடைய நிருபங்கள், பரிசுத்த ஆவியைக் கொண்டு, இயேசுவால் வெளிப்படுத்தப்பட்டவைகள் வாசிக்கக்கப்பட்டு புரிந்து கொள்ளப்பட வேண்டும் (2 கொரிந்தியர் 1:13; எபேசியர் 3:3-5). அவைகளை மனுஷர்களாலோ பவுலோலோ வந்தவைகளைக் காட்டிலும் மேலானவைகளாக எண்ண வேண்டும்; அவைகள் கிறிஸ்துவின் கட்டளைகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவைகள் (1 கொரிந்தியர் 14:37).

பேதுரு பவுலின் நிருபங்களை உணர்ந்து ஏற்றுக் கொண்டு தனக்கு அருளப்பட்ட ஞானத்தின் விளைவாக அதைக்குறித்து எழுதினார். அவர் தனது ஏற்புடைமையின் முத்திரையை அவை தேவனால் கொடுக்கப்பட்ட வசனம் என்றும், மற்ற எல்லா வசனங்களோடும் சமஅதிகாரம் பெற்றவை என்றும் பதிவு செய்தார் (2 பேதுரு 3:15, 16).

அதே அதிகார இடத்தை சபைகளில் பவுலின் நிருபங்களுக்கு நாம் கொடுக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் அவைகளை வாசித்து, படித்து, கீழ்ப்படிய வேண்டும், ஏனெனில் அவைகள் இயேசுவின் கட்டளைகளைக் கொண்டவை. இயேசு, மத்தேயு, மாற்கு, லூக்கா, மற்றும் யோவான் ஆகிய சுவிசேஷங்களில் பேசினவைகளை மதிப்பது போன்ற அதே மரியாதையை அவைகளுக்கும் கொடுக்க வேண்டும்:

அவருடைய காரியங்களினிமித்தம் நமது தாலந்துகளை நேர்மையாகப் பயன்படுத்த வேண்டும். பவுல் அர்க்கிப்பு தனது ஊழியத்தை நிறைவேற்றும் படி வேண்டினார்: அதே வேண்டுகோள் நம்மெல்லாருக்கும் கொடுக்கப்படலாம் - நாம் நமது இயேசுவின் ஊழியத்தில் முழுமையாக ஈடுபட வேண்டும். நாம் எல்லாருமே ஒரே மாதிரி ஊழியம் செய்யும்படி எதிர்பார்க்கப்படவோ அல்லது நாம் திராணியுள்ளவர்களோ அல்ல.

வேறு இடங்களில், ஆதிக்கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட திறமைகளைக் குறித்து பவுல் பேசினார். "அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்" (எபேசியர் 4:11). அப்படிப்பட்ட ஸ்தானங்களெல்லாம் கிறிஸ்தவர்களை தகுதியுடையவர்களாக்கும் பொருட்டும் கிறிஸ்துவின் சரீரத்தின் வேலைக்காகவும் பக்திவிருத்திக்காகவும் செயல்படுவோரைமாத்திரம்

உள்ளடக்கியது (எபேசியர் 4:12). இந்தப் பணிகள் அனைத்தும் கிறிஸ்துவின் சரீரம் முழுவதையும் உட்படுத்துவதில்லை.

எல்லாரும் அப்போஸ்தலர்களாக, தீர்க்க தரிசிகளாக, போதகர்களாக இருப்பதில்லை (1 கொரிந்தியர் 12:29). அப்போஸ்தலர்களெல்லாரும் சபையின் அஸ்திபாரத்தில் இருக்கிறார்கள் (எபேசியர் 2:20), அது ஏற்கனவே போடப்பட்ட அஸ்திபாரம். இன்றைக்கு நாம் அதன்மீது கட்ட வேண்டியவர்கள், ஆதிகிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தரித்திருந்தது போல (நடபடிகள் 2:42). அவர்கள் ஆவியின் மூலம் வசனங்கள் அருளப்பட்டவர்கள் (எபேசியர் 3:5). நம்மில் எல்லாருமே போதகராக இருப்பதற்கு எதிர் பார்க்கப் படுவதில்லை (யாக்கோபு 3:1). ஒரு நபர் போதிக்க துவங்கும் முன், அவன் போதிக்கத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் (எபிரெயர் 5:12).

ரோமர்கள் கிறிஸ்துவுக்கென்று எப்படிப்பட்ட ஊழியத்தை செய்தாலும் அதை நேர்மையாக செய்யும்படி பவுல் அவர்களை வேண்டிக்கொண்டார்.

> *நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக் கடவன். ஊழியஞ் செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிற திலும், புத்தி சொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக் கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்காசத்துடனே செய்யக் கடவன் (ரோமர் 12:6-8).*

நாம் நமது ஊழியம் இன்னதென்று அறிந்து கொள்ளும்படியும் நமது திறமைக்கேற்ப அவைகளை நிறைவேறப் பண்ணவும் எதிர்பார்க்கப்படுகிறோம். பவுல், "சகோதர சிநேகத்திலே ஒருவர் மேல் ஒருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதில் ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள், அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்" என்று எழுதினார் (ரோமர் 12:10, 11).

அர்க்கிப்புவின் அறைகூவல் தனிப்பட்ட முறையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது. "நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவன மாயிருப்பாயாக" (கொலோசெயர் 4:17). இது ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டிய சரியான புத்திமதி.

சுருக்கச் சொன்னால், நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கிற எல்லாரையும் குறித்து ஆர்வமும் அக்கறையும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். பவுலின் போதனைகளெல்லாம் கிறிஸ்துவின் அதிகாரத்தால் கட்டுமானம் பெற்றவை. அவைகளில் அவருடைய கட்டளைகள் அடங்கியிருப்பதால் அவைகளை நாம் கனப்படுத்த வேண்டும். ஒரேமாதிரியான ஊழியம் நம்மெல்லாருக்கும் இல்லை, ஆகிலும் நமக்களிக்கப்பட்ட ஊழியத்தில் நாம் இயேசுவுக்கென்று நேர்மையாக சிறப்பாக ஊழியம் செய்யக்கூடும்.

குறிப்புகள்

[1]David M. Hay, *Colossians*, Abingdon New Testament Commentaries (Nashville: Abingdon Press, 2000), 156. [2]*மத்தேயு 10:13, 14, 41; மாற்கு 6:10, 11; லூக்கா 9:4, 5; 10:8; எபிரெயர் 11:31.* [3]*1 கொரிந்தியர் 6:9, 10; 15:50; கலாத்தியர் 5:21; எபேசியர் 5:5; காண்க 1 தெசலோனிக்கேயர் 2:12.* [4]*காண்க ரோமர் 5:2; 11:20; 14:4; 1 கொரிந்தியர் 7:37; 10:12; 15:1; 2 கொரிந்தியர் 1:24; எபேசியர் 6:11, 13, 14.* [5]*காண்க லூக்கா 13:24; யோவான் 18:36; 1 கொரிந்தியர் 9:25; கொலோசெயர் 1:29; 1 தீமோத்தேயு 6:12; 2 தீமோத்தேயு 4:7.* [6]*ரோமர் 16:5, 8, 9, 12; எபேசியர் 6:21; கொலோசெயர் 1:7; 4:7, 9; 2 தீமோத்தேயு 1:2; பிலேமோன் 1, 2, 16.* [7]*நடபடிகள் 16:10-17; 20:5-15; 21:1-18; 27:1-8, 15-20, 27-29, 37; 28:1, 2, 10-16.* [8]Eusebius *Church History* 3.4; Jerome *On Illustrious Men* 3.7. [9]R. T. A. Murphy, "Luke, Evangelist, St.," in *New Catholic Encyclopedia*, 2d ed., ed. Thomas Carson and Joann Cerrito (New York: Thomas Gale, 2003), 8:856. [10]Jerome *On Illustrious Men* 5.

[11]A. F. Walls, "Apocryphal Epistles," in *The International Standard Bible Encyclopedia*, rev., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 1:180. [12]*மார்சியோன், கிறிஸ்தவப் பிரிவின் ஸ்தாபகர், குறைந்த பட்சம் கி.பி. நான்காம் நூற்றாண்டுவரை நீடித்தது, கிபி. 144ல் சபையால் விலக்கி வைக்கப்பட்டது அதன் பெயர் மற்றும் உபதேசம் மறையியல் ஞானிகள் மற்றும் மதங்களுக்கு எதிரானவை போன்றது. அவருடைய மூன்று சுவிசேஷங்களின் நிராகரிப்பு சபை புதிய ஏற்பாட்டில் எவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்த ஏதுவாக்கியது.* [13]Herbert M. Carson, *The Epistles of Paul to the Colossians and Philemon: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 101–2. [14]D. E. Hiebert, "Archippus," in *The Zondervan Pictorial Encyclopedia of the Bible*, ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan Publishing Co., 1975), 1:287. [15]Eduard Lohse, *Colossians and Philemon*, trans. William R. Poehlmann and Robert J. Karris, Hermeneia (Philadelphia: Fortress Press, 1971), 175, n. 50. [16]*ரோமர் 1:7; 16:20, 24; 1 கொரிந்தியர் 1:2; 16:23; 2 கொரிந்தியர் 1:2; 13:14; கலாத்தியர் 1:3; 6:18; எபேசியர் 1:2; 6:24; பிலிப்பியர் 1:2; 4:23; கொலோசெயர் 1:2; 4:18; 1 தெசலோனிக்கேயர் 1:1; 5:28; 2 தெலோனிக்கேயர் 1:2; 3:18; 1 தீமோத்தேயு 1:2; 6:21; 2 தீமோத்தேயு 1:2; 4:22; தீத்து 1:4; 3:15; பிலேமோன் 3, 25.*

பர்னபா, மாற்குவின் இனத்தான் (4:10)

சீப்புருத் தீவைச் சேர்ந்த ஒரு லேவியனாகிய யோசே என்பவன், அப்போஸ்தலர்களால் பர்னபா என்று பெயரிடப்பட்டிருந்தான் (நடபடிகள் 4:36). இந்தப் பெயரின் பொருள் "ஆறுதலின் மகன்" அல்லது "புத்திமதி யின் மகன்" (NEB) *பர்னபா தான், ஏழைகளுக்கு உதவும்படி தனக்குத் சொந்தமாயிருந்த நிலங்களையும் வீடுகளையும் விற்ற முதல் கிறிஸ்தவ தர்மவான் என்று குறிப்பிடப்பட்டான். அவன் பவுலின் சார்பாக அப்போஸ்தலர்களுடன் பேசி, அப்போஸ்தலனைக் குறித்து இருந்த சந்தேகத்தைப் போக்கும்படிக்கு கிறிஸ்தவ சமுதாயத்தை சீர்குலைக்க அவர் எதி ர்பார்த்த சம்பவங்களையும் இப்போது மாறியதையும் விவரித்தான் (நடபடிகள் 9:27). ஒரு புறஜாதி மாநிலத்தில் இருந்த சீரியாவின் அந்தியோகியாவில் துவங்கியிருந்த ஊழியத்தின் அப்போஸ்தலர்களின் அக்கறையால், பணியில் உதவும்படி பர்னபாவை அனுப்பினார்கள் (நடபடிகள் 11:19-23), "அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனும ாயிருந்தான்" (நடபடிகள் 11:24). ஊழியத்தைக் குறித்து ஆராய்ந்து பார்த்த பின், அவன் தரிசுப் பட்டணத்துக்கு பயணம் பண்ணி அந்தியோகியாவிலுள்ள சபையில் ஊழியம் செய்யும்படி பவுலை திரும்பக் கூட்டி வருவதில் உதவி செய்தான் அங்கே அவர்கள் ஒரு வருட காலம் தங்கியிருந்தனர் (11:25, 26).*

பரிசுத்த ஆவியானவர் பர்னபாவையும் அவனுடைய இனத்தானாகிய மாற்குவையும் முதலாவது சுவிசேஷப் பயணத்தில் பவுலுடன் அனுப்பி வைத்தார். அவர்கள் சீப்புருத் தீவுக்குப் போய்ச் (நடபடிகள் 13:1-4) சேர்ந்த பொழுது, பவுல் பாப்போ பட்டணத்தில் (சுவிசேஷப் பயணத்தில்) தலைமை தாங்கி நடத்தும் பொறுப்பை துவங்கினார் என்று தெரிகிறது (நடபடிகள் 13:13). அவர்கள் பம்பிலியாவிலிருந்த பெர்கே வழிய-ாக பயணம் பண்ணின போது, மாற்கும் அவர்களை விட்டுவிட்டுப் போய்விட்டான், பிறகு பிசிதியாவிலுள்ள அந்தியோகியாவுக்கும், இக்கோனியா, லீஸ்திரா, மற்றும் தெர்பைக்கும் வந்தார்கள் (நடபடிகள் 13:13-14:20). லீஸ்திராவில் ஜனங்கள் பர்னபாவை "யூப்பித்தர்" என்றழைத்தனர் (நடபடிகள் 14:12), அது கிரேக்க பிரதான கடவுள், அவன் தோற்றத்தில் கவர்ச்சிகரமாய் இருந்தான் என்று மறைமுகமாய் உணர்த்துகிறது. பயணத்திலிருந்து திரும்பி வருகையில், பவுலும் பர்னபாவும் (உள்ளூர்) சபைகள் தோறும் மூப்பர்களை நியமித்தனர் (நடபடிகள் 14:23).

அவர்கள் சீரியாவிலுள்ள அந்தியோகியாவுக்கு வந்தபோது, பவுலும் பர்னபாவும் எதிர்ப்புகளை சந்தித்தனர், ஏனெனில் அவர்கள் புறஜாதிகளை விருத்த சேதனம் செய்யும்படி கோரவில்லை அல்லது மோசேயின் பிரம ாணத்தை கைக் கொள்ளச் செய்யவில்லை (நடபடிகள் 15:1). எருசலேமில் காரியங்களை சரிசெய்த பின்பு, மீண்டும் அந்தியோகியாவுக்குப் போய் விட்டார்கள் (நடபடிகள் 15:30).

பவுல் தனது முதல் பயணத்தில் நாட்டிய சபைகளைப் பார்வையிடவும் இரண்டாவது சுவிசேஷப்பயணத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவும் தீர்மானித்தார். பவுல் யோவான் மாற்கு தங்களோடு செல்ல மறுப்புத் தெரிவித்தார் ஏனெனில் அவன் பெர்கேயில் அவனை விட்டு வந்து விட்டான் என்பதால் தான் (நடபடிகள் 15:36-39). மிகுந்த தர்க்கத்திற்குப் பின் இருவரும்

தனித்தனியாகப் போய் விட்டனர். பர்னபா தன் இனத்தானாகிய மாற்குவைக் கூட்டிக் கொண்டு, சீப்புருவுக்குப் போனான் (நடபடிகள் 15:38), பவுல் சீலாவைத் தெரிந்து கொண்டு தனது இரண்டாவது சுவிசேஷப் பயணத்தில் போய்விட்டார் (நடபடிகள் 15:40).

பவுலும் பர்னாவும் மீண்டும் எப்போதாவது ஒன்று சேர்ந்தார்களா என்பதை திருமறை குறிப்பிடவில்லை. பவுல் அவனைக் குறித்து கொலோசெயர் மற்றும் கொரிந்தியர் நிருபங்களில் எழுதுகிறார் (1 கொரிந்தியர் 9:6), இதிலிருந்து பவுல் இன்னமும் பர்னாபாவை நேசித்தார் என்பதையும் அவனுக்கு எதிரான எந்த பகையையும் கொண்டிருக்கவில்லை என்றும் தெரிகிறது. பர்னபா, அனுப்பப்பட்ட எழுபது பேரில் ஒருவன் என்பதாகவும் (லூக்கா 10:1), மேலும் சீப்புருத்தீவில் இரத்த சாட்சியாக மரித்தான் என்பதாகவும் பாரம்பரியம் கூறுகிறது. .

... நாம் எப்படி "கிறிஸ்துவுக்குள்ளாக" முடியும்?

கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் ஒரு நபர் அவருக்குள் இருக்கும் சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் அநுபவிக்க இயலும். இது உண்மையாதலால், இரண்டு முக்கியமான கேள்விகளுக்குப் பதில் தேவை. முதலாவதாக, "ஒருவர் எப்படி கிறிஸ்துவுக்குள்ளாகிறார்?" பவுல் அளிக்கும் பதில், "கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோமர் 6:3); "கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நீங்களெல்லாரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே" (கலாத்தியர் 3:27). ஞானஸ்நானம் பெற்றவர்கள் அதற்குமுன் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டிருக்க வேண்டும் (யோவான் 6:45), விசுவாசிக்க வேண்டும் (மாற்கு 16:15, 16), மனந்திரும்ப வேண்டும் (நடபடிகள் 2:38), மற்றும் இயேசுவை கர்த்தர் என்று அறிக்கையிட வேண்டும் (நடபடிகள் 8:37; ரோமர் 10:9, 10). இரண்டாவது கேள்வி "ஞானஸ்நானம் பெற்ற ஒரு நபர் இன்னமும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறார் என்பதை எப்படி அறிந்து கொள்ளக்கூடும்?" யோவானின் எழுத்துக்கள் இதற்கு பதிலளிக்கின்றன: "அவருடைய வசனத்தைக் கைக் கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகவே பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோம் என்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 2:5). "அவருடைய கட்டளைகளை கைக் கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்" (1 யோவான் 3:24).

இந்த உலகத்தில் ஒருவர் மிக முக்கியமான ஒரு நட்புறவு இந்த வாழ்க்கையில் கொண்டிருக்க அவர் கிறிஸ்துவுக்குள் இருப்பதும் கிறிஸ்துவுடன் இருப்பதும் தான், இந்த ஆவிக்குரிய உறவுமுறையோடு ஒப்பிடும்போது மற்ற எல்லா உறவுமுறைகளும் மங்கிப் போனவைகளே. கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பவர்கள் அதிகக் கனிகளைக் கொடுப்பார்கள் (யோவான் 15:5). கிறிஸ்துவுக்குள் கனி கொடாத கிறிஸ்தவன் அப்புறப்படுத்தப்படுகிறான், மேலும் கிறிஸ்துவுக்குள் தரித்திருக்காத ஒருவன் அக்கினியிலே எறியப்படுகிறான் (யோவான் 15:2, 6). இப்படி நடக்குமானால், அவன் கிறிஸ்துவுக்குள் இருக்கும் நித்திய ஜீவனை இழந்து போகிறான் என்று பொருள்படும் (1 யோவான் 5:11).